# செலக்சன்

10

தமிழ்

அன்பு நிலையம்
மதுரை – 625001

# செலக்சன்

(10)

## பத்தாம் வகுப்பு

## தமிழ்

94430 43338
94430 46662

வெளியிடுபவர்

**அன்பு நிலையம்**

15, புதுமண்டபம், மதுரை-625001.

இலவச இணைப்பை
கேட்டுப் பெறவும்

விலை ₹ 160

## பத்தாம் வகுப்பு –தமிழ்–வினாத்தாள் வடிவமைப்பு

உரைநடை, செய்யுள் (கவிதைப் பேழை), துணைப்பாடம் (விரிவானம்), இலக்கணம், மொழிப்பயிற்சி வினாத்தாள் , ஐந்து (I-V) பகுதிகளாக 1, 2, 3, 5, 8 என்னும் மதிப்பெண்கள் அடிப்படையிலும் மொத்த மதிப்பெண்கள் 100 என்றும் அமைந்துள்ளது.

இரண்டு கட்டாய வினாக்கள் உள்ளன

பகுதி – II பிரிவு – 1 ல் 21– வது வினா திருக்குறள்

பகுதி – III பிரிவு – 2 ல் 34–வது வினா மனப்பாடப்பகுதி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மொத்த வினாக்கள் | – | 45 | வினாப்பகுப்பு | | மதிப்பெண் |
| விடையளிக்கவேண்டிய வினாக்கள் | – | 38 | பகுதி – I | – | 15 (15x1= 15) |
| மொத்த மதிப்பெண்கள் | – | 159 | பகுதி – II | – | 9 ( 9x2= 18) |
| விடையளிக்கவேண்டிய மதிப்பெண்கள் | – | 100 | பகுதி – III | – | 6 (6x3 = 18) |
| வினாத்தாளின் மொத்த | | | பகுதி – IV | – | 5 (5x 5 = 25) |
| வினாக்களின் எண்ணிக்கை | – | 51 | பகுதி – V | – | 3 ( 3 x8 = 24) |
| | | | மொத்தம் | – | 38 (100) |

| வினா எண் | வினா பகுதி & பிரிவு | மொத்த வினாக்கள் | விடையளிக்க வேண்டிய வினாக்கள் | மொத்த மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1 – 15 | பகுதி – I பலவுள் தெளிக<br>உரைநடை – 5, செய்யுள் – 5, இலக்கணம் – 5<br>(குறிப்பு:12,13,14,15 செய்யுளைக் கொடுத்து 4 வினாக்கள் கேட்கப்படும்) | 15 | 15 | 15 x1 = 15 |
| 16 – 21 | பகுதி – II பிரிவு – 1 குறுவினா<br>செய்யுள் வினா – 3, உரைநடை வினா – 3<br>(குறிப்பு : உரைநடையில் விடைகளுக்குகேற்ற வினா ஒன்று கேட்கப்படும்) (21 – திருக்குறள் கட்டாய வினா) | 6 | 4 | 4 x2 = 8 |
| 22 – 28 | பிரிவு – 2 குறுவினா<br>மொழியை ஆள்வோம், கலைச்சொல் அறிவோம்<br>நிறுத்தக் குறி, இலக்கணக் குறுவினா,<br>பகுபத உறுப்பிலக்கணம் (குறிப்பு : கலைச்சொல் தருக வினாவிற்கு மாற்றாக செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினாதரப்படும்) | 7 | 5 | 5 x2 = 10 |
| 29 – 31 | பகுதி – III பிரிவு – 1 சிறுவினா<br>உரைநடை சிறு வினா – 2<br>குறிப்பு : உரைப்பத்தி வினா ஒன்று கேட்கப்படும். | 3 | 2 | 2 x 3 = 6 |
| 32 – 34 | பிரிவு – 2 சிறுவினா<br>32 – 33 செய்யுள் சிறு வினா – 2<br>34 – மனப்பாடப் பாடல் கட்டாய வினா | 3 | 2 | 2 x3 = 6 |
| 35 – 37 | பிரிவு – 3 இலக்கண சிறுவினா<br>35 – இலக்கண சிறு வினா – 1<br>36 – இயல் 3, 6 ல் உள்ள திருக்குறளை அலகிட்டு வாய்பாடு – 1<br>37 – அணி இலக்கண வினா – 1 | 3 | 2 | 2 x3 = 6 |
| 38 – 42 | பகுதி – IV | | | 5 x 5 = 25 |
| | 38 – செய்யுள் நெடுவினா | 2 | 1 | |
| | 39 – விண்ணப்பம் அல்லது கடிதம் | 2 | 1 | |
| | 40 – படம் உணர்த்தும் கருத்து | 1 | 1 | |
| | 41 – படிவம் நிரப்புதல் | 1 | 1 | |
| | 42 – நிற்க அதற்குத்தக (அல்லது) மொழிபெயர்ப்பு<br>(குறிப்பு : 42 வினாவிற்கு மாற்றாக செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்றுவினாதரப்படும்) | 2 | 1 | |
| 43 – 45 | பகுதி – V | | | 3 x 8 = 24 |
| | 43 – உரைநடை நெடுவினா அல்லது செய்யுள் நயம் பாராட்டல் வினா | 2 | 1 | |
| | 44 – துணைப்பாட கட்டுரை | 2 | 1 | |
| | 45 – பொதுக்கட்டுரை | 2 | 1 | |
| | வினாக்களின் எண்ணிக்கை விவரம் | 51 | 38 | 100 |

# பொருளடக்கம்


| வ.எண் | பொருண்மை /இயல் | | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| | | | மனப்பாடப் பகுதி | 5 |
| 1. | இயல் | 1. அ | அன்னை மொழியே * – செய்யுள் | 9 |
| | ஒன்று | 1. ஆ | தமிழ்ச்சொல் வளம் – உரைநடை | 16 |
| | மொழி | 1. இ | இரட்டுற மொழிதல் – செய்யுள் | 26 |
| அமுத | | 1. ஈ | உரைநடையின் அணிகலன்கள் – துணைப்பாடம் | 31 |
| ஊற்று | | 1. உ | எழுத்து, சொல் – இலக்கணம் | 34 |
| | | 1. ஊ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 40 |
| | | 1. எ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 45 |
| 2. | இயல் | 2. அ | கேட்கிறதா என்குரல் ! – உரைநடை | 48 |
| | இரண்டு | 2. ஆ | காற்றே வா ! – செய்யுள் | 58 |
| | இயற்கை | 2. இ | முல்லைப் பாட்டு * – செய்யுள் | 63 |
| | சுற்றுச்சூழல் | 2. ஈ | புயலிலே ஒரு தோணி – துணைப்பாடம் | 69 |
| உயிரின் | | 2. உ | தொகைநிலைத் தொடர்கள் – இலக்கணம் | 72 |
| ஓசை | | 2. ஊ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 75 |
| | | 2. எ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 80 |
| 3. | இயல் | 3. அ | விருந்து போற்றுதும் !– உரைநடை | 83 |
| | மூன்று | 3. ஆ | காசிக்காண்டம் *– செய்யுள் | 92 |
| கூட்டாஞ் | பண்பாடு | 3. இ | மலைபடுகடாம் – செய்யுள் | 96 |
| சோறு | | 3. ஈ | கோபல்லபுரத்து மக்கள் – துணைப்பாடம் | 101 |
| | | 3. உ | தொகாநிலைத் தொடர்கள் – இலக்கணம் | 105 |
| | | 3. ஊ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 109 |
| | | 3. எ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 113 |
| | | 3. ஏ | திருக்குறள் | 116 |
| 4. | இயல் | 4. அ | செயற்கை நுண்ணறிவு – உரைநடை | 121 |
| | நான்கு | 4. ஆ | பெருமாள் திருமொழி * – செய்யுள் | 129 |
| | அறிவியல் | 4. இ | பரிபாடல் – செய்யுள் | 132 |
| நான்காம் | தொழில் | 4. ஈ | விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை | |
| தமிழ் | நுட்பம் | | – துணைப்பாடம் | 137 |
| | | 4. உ | இலக்கணம் – பொது – இலக்கணம் | 141 |
| | | 4. ஊ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 145 |
| | | 4. எ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 151 |
| 5 . | இயல் | 5. அ | மொழிபெயர்ப்பு கல்வி – உரைநடை | 153 |
| | ஐந்து | 5. ஆ | நீதி வெண்பா * – செய்யுள் | 165 |
| | கல்வி | 5. இ | திருவிளையாடற் புராணம் * – செய்யுள் | 168 |
| மணற் | | 5. ஈ | புதிய நம்பிக்கை – துணைப்பாடம் | 174 |
| கேணி | | 5. உ | வினாவிடை வகை, பொருள் கோள் – இலக்கணம் | 178 |
| | | 5. ஊ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 183 |
| | | 2. எ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 188 |

| வ.எண் | பொருண்மை /இயல் | | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| 6. | இயல் | 6. அ | நிகழ் கலை – உரைநடை | 191 |
| | ஆறு | 6. ஆ | பூத்தொடுத்தல் – செய்யுள் | 205 |
| | கலை, | 6. இ | முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் * – செய்யுள் | 208 |
| நிலா | அழகியல், | 6. ஈ | கம்பராமாயணம் * – செய்யுள் | 212 |
| முற்றம் | புதுமைகள் | 6. உ | பாய்ச்சல் – துணைப்பாடம் | 219 |
| | | 6. ஊ | அகப்பொருள் இலக்கணம் – இலக்கணம் | 221 |
| | | 6. எ | திருக்குறள் | 227 |
| | | 6. ஏ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 233 |
| | | 6. ஐ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 235 |
| 7. | இயல் | 7. அ | சிற்றகல் ஒளி (தன் வரலாறு) – உரைநடை | 240 |
| | ஏழு | 7. ஆ | ஏர் புதிதா ? – செய்யுள் | 249 |
| விதை | நாகரிகம், | 7. இ | மெய்க்கீர்த்தி – செய்யுள் | 252 |
| நெல் | நாடு, | 7. ஈ | சிலப்பதிகாரம் * – செய்யுள் | 256 |
| | சமூகம் | 7. உ | மங்கையராய்ப் பிறப்பதற்கே – துணைப்பாடம் | 263 |
| | | 7. ஊ | புறப்பொருள் இலக்கணம் – இலக்கணம் | 267 |
| | | 7. எ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 270 |
| | | 7. ஏ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 275 |
| 8. | இயல் | 8. அ | சங்க இலக்கியத்தில் அறம் – உரைநடை | 277 |
| | எட்டு | 8. ஆ | ஞானம் – செய்யுள் | 288 |
| பெருவழி | அறம், | 8. இ | காலக்கணிதம் – செய்யுள் | 291 |
| | தத்துவம், | 8. ஈ | இராமானுஜர் (நாடகம்) – துணைப்பாடம் | 296 |
| | சிந்தனை | 8. உ | பா – வகை அலகிடுதல் – இலக்கணம் | 300 |
| | | 8. ஊ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 307 |
| | | 8. எ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 313 |
| 9. | இயல் | 9. அ | ஜெயகாந்தம் (நினைவு இதழ்) – உரைநடை | 319 |
| | ஒன்பது | 9. ஆ | சித்தாளு – செய்யுள் | 327 |
| | மனிதம், | 9. இ | தேம்பாவணி – செய்யுள் | 330 |
| அன்பின் | ஆளுமை | 9. ஈ | ஒருவன் இருக்கிறான் – துணைப்பாடம் | 337 |
| மொழி | | 9. உ | அணி – இலக்கணம் | 340 |
| | | 9. ஊ | மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 345 |
| | | 9. எ | மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 350 |


(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப் பகுதிகள்

## மனப்பாடப்பகுதி

### அன்னை மொழியே (பெ.ஆ.க–1, 4, 6)

1. *அன்னை மொழியே ! அழகார்ந்த செந்தமிழே !*
*முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே !*
*கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்*
*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே !*

2. *தென்னன் மகளே ! திருக்குறளின் மாண்புகழே !*
*இன்னறும் பாப்பத்தே ! எண்தொகையே ! நற்கணக்கே !*
*மன்னுஞ் சிலம்பே ! மணிமே கலைவடிவே !*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !*

*– பாவலரேறு பெருஞ்சித்திரனார்*

### *முல்லைப்பாட்டு* (பெ.ஆ.க–3)

*சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்*
*நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய*
*கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர*
*இன்னே வருகுவர், தாயர்" என்போள்*
*நன்னர் நன்மொழி கேட்டனம்.*

*– நப்பூதனார்*

### காசிக் காண்டம் (பெ.ஆ.க – 2, 5)

*விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்*
*வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்*
*திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்*
*எழுதல் முன் மகிழ்வன செப்பல்*
*பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல்*
*போமெனில் பின்செல்வதாதல்*
*பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்*
*ஒழுக்கமும் வழிபடும் பண்பே.*

*– அதிவீரராம பாண்டியர்*

### பெருமாள் திருமொழி (அ.மா.வி)

*வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்*
*மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்*
*மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா !நீ*
*ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.*

*– குலசேகராழ்வார்*

## மனப்பாடப்பகுதி

### அன்னை மொழியே (பெ.ஆ.க–1, 4, 6)

1. *அன்னை மொழியே ! அழகார்ந்த செந்தமிழே !*
*முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே !*
*கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்*
*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே !*

2. *தென்னன் மகளே ! திருக்குறளின் மாண்புகழே !*
*இன்னறும் பாப்பத்தே ! எண்தொகையே ! நற்கணக்கே !*
*மன்னுஞ் சிலம்பே ! மணிமே கலைவடிவே !*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !*

***– பாவலரேறு பெருஞ்சித்திரனார்***

### *முல்லைப்பாட்டு* (பெ.ஆ.க–3)

*சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்*
*நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய*
*கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர*
*இன்னே வருகுவர், தாயர்" என்போள்*
*நன்னர் நன்மொழி கேட்டனம்.*

***– நப்பூதனார்***

### காசிக் காண்டம் (பெ.ஆ.க – 2, 5)

*விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்*
*வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்*
*திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்*
*எழுதல் முன் மகிழ்வன செப்பல்*
*பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல்*
*போமெனில் பின்செல்வதாதல்*
*பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்*
*ஒழுக்கமும் வழிபடும் பண்பே.*

***– அதிவீரராம பாண்டியர்***

### பெருமாள் திருமொழி (அ.மா.வி)

*வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்*

## மனப்பாடப்பகுதி

### அன்னை மொழியே (பெ.ஆ.க–1, 4, 6)

1. அன்னை மொழியே ! *அழகார்ந்த செந்தமிழே !*
*முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே!*
*கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்*
*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!*

*2.* *தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!*
*இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!*
*மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!*

***– பாவலரேறு பெருஞ்சித்திரனார்***

### *முல்லைப்பாட்டு* (பெ.ஆ.க–3)

*சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்*
*நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய*
*கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர*
*இன்னே வருகுவர், தாயர்" என்போள்*
*நன்னர் நன்மொழி கேட்டனம்.*

***– நப்பூதனார்***

### காசிக் காண்டம் (பெ.ஆ.க – 2, 5)

*விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்*
*வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்*
*திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்*
*எழுதல் முன் மகிழ்வன செப்பல்*
*பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல்*
*போமெனில் பின்செல்வதாதல்*
*பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்*
*ஒழுக்கமும் வழிபடும் பண்பே.*

# மனப்பாடப்பகுதி

## அன்னை மொழியே (பெ.ஆ.க–1, 4, 6)

1. *அன்னை மொழியே ! அழகார்ந்த செந்தமிழே !*
*முன்னைக்கும் முன்னை முகிழ்ந்த நறுங்கனியே !*
*கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்*
*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே !*

2. *தென்னன் மகளே ! திருக்குறளின் மாண்புகழே !*
*இன்னறும் பாப்பத்தே ! எண்தொகையே ! நற்கணக்கே !*
*மன்னுஞ் சிலம்பே ! மணிமே கலைவடிவே !*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே !*

***– பாவலரேறு பெருஞ்சித்திரனார்***

## *முல்லைப்பாட்டு* (பெ.ஆ.க–3)

*சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்*
*உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்*
*நடுங்கு சுவல் அசைத்த கையள், "கைய*
*கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர*
*இன்னே வருகுவர், தாயர்" என்போள்*
*நன்னர் நன்மொழி கேட்டனம்.*

***–நப்பூதனார்***

## காசிக் காண்டம் (பெ.ஆ.க – 2, 5)

*விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்*
*வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்*
*திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்*
*எழுதல் முன் மகிழ்வன செப்பல்*
*பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல்*
*போமெனில் பின்செல்வதாதல்*
*பரிந்துநன் முகமன் வழங்கல் இவ்வொன்பான்*
*ஒழுக்கமும் வழிபடும் பண்பே.*

***– அதிவீரராம பாண்டியர்***

## பெருமாள் திருமொழி (அ.மா.வி)

*வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்*
*மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்*
*மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா !நீ*
*ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.*

# செலக்சன்
# 10 தமிழ்

இயல் ஒன்று
மொழி

## இயல் 1. அமுத ஊற்று

கவிதைப்பேழை

இயல் 1. அ

### அன்னை மொழியே
–பாவலரேறு பெருஞ்சித்திரனார் (செய்யுள்)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. எந்தமிழ்நா – என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**

அ) எந் + தமிழ் + நா ஆ) எந்த + தமிழ் + நா
இ) எம் + தமிழ் + நா ஈ) எந்தம் + தமிழ் + நா

**விடை:இ) எம் + தமிழ் + நா**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. "அன்னை மொழியே" என்று பெருஞ்சித்திரனார் உரைப்பது............**

அ) உரிச்சொல் தொடர் ஆ) வேற்றுமைத் தொடர்
இ) உவமைத் தொகை ஈ) விளித்தொடர்

**விடை: ஈ) விளித்தொடர்**

**3. தென்னன் மகளே! என்பதில் "தென்னன்" என யாரைப் பெருஞ்சித்திரனார் குறிப்பிடுகிறார் ?**

அ) சேரனை ஆ)சோழனை
இ) பாண்டியனை ஈ) பல்லவனை **விடை: இ) பாண்டியனை**

**4. "இன்னறும் பாப்பத்தே" எனப்பெருஞ்சித்திரனார் பாடுவது............**

அ) பதிற்றுப் பத்து ஆ) பத்துப்பாட்டு
இ) தமிழ் விடுதூது ஈ) பிள்ளைத் தமிழ்

**விடை: ஆ) பத்துப்பாட்டு**

**5. சாகும்போதும் தமிழ் படித்துச் சாகவேண்டும் என்று கூறிய தமிழறிஞர் யார் ?**

அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதிதாசன்
இ) இரா.இளங்குமரனார் ஈ) க. சச்சிதானந்தன்

**விடை: ஈ) க. சச்சிதானந்தன்**

**6. அன்னைமொழியே கவிதை இடம்பெற்ற நூல்**
அ) நூறாசிரியம் ஆ) கனிச்சாறு
இ) எண்சுவை ஈ) பாவியக்கொத்து **விடை: ஆ) கனிச்சாறு**

**7. தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்களின்வாயிலாக தமிழுணர்வை பரப்பியவர் யார் ?**
அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆ) க. சச்சிதானந்தன்
இ) தேவநேயப்பாவாணர் ஈ) பாரதியார்
**விடை: அ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**8. துரைமாணிக்கம் என்பது இவரின் இயற்பெயர்**
அ) தேவநேயப்பாவாணர் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) பெருஞ்சித்திரனார்
**விடை: ஈ)பெருஞ்சித்திரனார்**

**9. பின்வருவனவற்றுள் எது பெருஞ்சித்திரனாரின் படைப்பு அல்ல ?**
அ) உலகியல் நூறு ஆ) முல்லைப் பாட்டு
இ) பாவியக் கொத்து ஈ) மகபுகு வஞ்சி
**விடை: ஆ) முல்லைப்பாட்டு**

**10. தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த பெருஞ்சித்திரனாரின்படைப்பு..........**
அ) உலகியல் நூறு ஆ) பாவியக் கொத்து
இ) நூறாசிரியம் ஈ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
**விடை: ஈ) திருக்குறள் மெய்ப்பொருளுரை**

**11. தமிழ்த்தேசியத் தந்தை என்று போற்றப்படுபவர்..........**
அ) க. சச்சிதானந்தன் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஈ) இரா. இளங்குமரனார்
**விடை: இ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**பின்வரும் பாடலைப் படித்து (12, 13, 14, 15) வினாக்களுக்கு விடையளிக்க :**
**பாடல் :**

*தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!*
*இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!*
*மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!*
*முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!*

**12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்.........**
அ) எண்சுவை ஆ) கனிச்சாறு
இ) நூறாசிரியம் ஈ) முல்லைப் பாட்டு
**விடை: ஆ) கனிச்சாறு**

**13. இந்நூல் ஆசிரியர் யார் ?**
அ) இரா. இளங்குமரனார் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஈ) க. சச்சிதானந்தன்
**விடை: இ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**14. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்.........**
அ) அன்னை, முன்னை ஆ) பாப்பத்தே, எண்தொகையே
இ) சிலம்பே, நினைவால் ஈ) மணிமே, முடிதாழ
**விடை: அ) அன்னை, முன்னை**

**15. "இன்னறும்" இலக்கணக் குறிப்பு தருக.**
அ) பண்புத் தொகை ஆ) எண்ணும்மை
இ) உம்மைத் தொகை ஈ) அடுக்குத் தொடர்
**விடை: அ) பண்புத் தொகை**

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1.** ***"மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!***

***முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!"* – இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக. (அ.மா.வி)**

**விடை :**

★ இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெருங்காப்பியங்கள் :
1. சிலப்பதிகாரம், 2. மணிமேகலை

★ எஞ்சியுள்ளகாப்பியங்கள்
1. சீவகசிந்தாமணி, 2. குண்டலகேசி, 3. வளையாபதி

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. பெருஞ்சித்திரனார் தமிழின் தொன்மையை எவ்வாறு போற்றுகிறார் ?**

**விடை :**

★ அன்னை மொழியே! செழுந்தமிழே ! பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே ! எனத் தமிழின் தொன்மையைப் பெருஞ்சித்திரனார் புகழ்ந்து போற்றுகிறார்

---

**3. தமிழ் எப்பகுதியில் நிலைத்து நிற்கின்றது ?**

**விடை :**

★ கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் தமிழ் மண்ணுலகப் பேரரசாய் அரசாண்டு நிலைத்து நிற்கின்றது.

---

**4. பெருஞ்சித்திரனார் தமிழின் பெருமை எவ்வாறு முழங்குவதாகக் கூறுகின்றார் ?**

**விடை :**

★ வண்டானது செந்தாமைரைத் தேனைக்குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று, தமிழைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, தமிழின் பெருமையை முழங்கவேண்டுமென பாவலரேறு குறிப்பிடுகின்றார்.

---

**5. அன்னை மொழியே – நூற்குறிப்பு தருக.**

**விடை :**

★ பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி – I) தொகுப்பிலிருந்து இருவேறு தலைப்புகளில் உள்ள பாடல்கள் (தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்) எடுத்தாளப்பட்டுள்ளன.

---

**6. பெருஞ்சித்திரனார் தமிழுணர்வைப் பரப்ப நடத்திய இதழ்கள் யாவை ?**

**விடை :**

★ தென்மொழி, தமிழ்ச்சிட்டு என்பன பெருஞ்சித்திரனார் தமிழுணர்வைப் பரப்ப நடத்திய இதழ்களாகும்.

---

**7. பெருஞ்சித்திரனாரின் இலக்கிய நூல்கள் யாவை ?**

**விடை :**

★ **பெருஞ்சித்திரனாரின் இலக்கிய நூல்கள் :**
1. உலகியல் நூறு, 2. பாவியக் கொத்து, 3. நூறாசிரியம், 4. கனிச்சாறு, 5. எண்சுவை எண்பது
6. மகபுகுவஞ்சி, 7. பள்ளிப்பறவைகள்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை? (பெ.ஆ.க–2)**

**விடை :**

★ அழகாய் அமைந்த செந்தமிழே, அன்னை மொழியாகும்

★ பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியாகும்.

★ கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து, மண்ணுலகை அரசாண்டதாகும்.

★ பாண்டியமன்னரின் மகளாய் பிறந்ததாகும்.

★ திருக்குறளின் பெருமைக்கு உரியதாகும்.

★ பத்துப்பாட்டாய், எட்டுத்தொகையாய், பதினெண்கீழ்க்கணக்காய், சிலப்பதிகாரமாய், மணிமேகலையாய், இலக்கியங்களாய், இலக்கணமாய்ச் சிறப்புக் கொண்டு விளங்குகின்றதாகும்.

★ எனவே, தமிழன்னையை வாழ்த்துகின்றோம் எனப் பாவலரேறு சுட்டுகின்றார்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. தமிழின் பெருமைகளை எங்கும் முழங்குவதற்கான காரணங்களாகப் பாவலரேறு கூறுவன யாவை ?**

**விடை :**

★ பெருஞ்சித்திரனார், செழுமை மிக்க தமிழை உயிராய்ப் போற்றுகிறார்.

★ தமிழின் பெருமையைத் தம்முடைய நாக்கு விரித்துரைப்பதை எண்ணி வியக்கிறார்.

★ பழம்பெருமையும், தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் உடையது தமிழ் எனப் புகழ்கிறார்.

★ வேற்று மொழியார் எல்லாம் தமிழின் பெருமையைப் புகழ்வது கண்டே, தமக்குத் தமிழின் மீது பற்றுணர்வு தோன்றியது என்கிறார்.

★ தேனைக் குடித்த வண்டு சிறகடித்துப் பாடுவது போலத் தமிழைச் சுவைத்துப் பெருமையை எங்கும் முழங்குவதாகக் கூறுகின்றார்.

---

**3. பெருஞ்சித்திரனார் – ஆசிரியர் குறிப்பு எழுதுக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | பெருஞ்சித்திரனார் |
| **இயற்பெயர்** | : | துரைமாணிக்கம் |
| **பிறப்பு** | : | 10–03–1933 |
| **இறப்பு** | : | 11–06–1995 |
| **பிறந்த ஊர்** | : | சேலம் மாவட்டம் சமுத்திரம் |
| **வேறு பெயர்** | : | பாவலரேறு |
| **பெற்றோர்** | : | துரைச்சாமி, குஞ்சம்மாள் |
| **சிறப்பு** | : | தமிழ்த் தேசியவாதி, தமிழீழப் போராளி |
| **எழுதிய நூல்கள்** | : | திருக்குறள் மெய்ப்பொருளுரை, உலகியல் நூறு, கனிச்சாறு, கொய்யாக் கனி, இளமை விடியல், நூறாசிரியம், பாவியக்கொத்து, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப் பறவைகள் |
| **நடத்திய இதழ்கள்** | : | தேன்மொழி, தமிழ்ச்சிட்டு |

---

## பகுதி – IV ( ஐந்து மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (பெ.ஆ.க – 5)**

**விடை :**

★ அவையில் கூடியிருக்கின்ற பெருந்தகையோருக்கு எனது அன்பான வணக்கம்.

★ "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவனைப் போல் இளங்கோவனைப் போல் பூமிதனில் யாங்கனுமே" என்று உரைத்த பாரதியை வணங்கி, மனோன்மணீயம் சுந்தரனாரின் வாழ்த்தையும், பெருஞ்சித்திரனாரின் வாழ்த்தையும் ஒப்பிட்டு பேச வந்துள்ளேன்.

**மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :**

★ ஒலி எழுப்பும் நீர் நிறைந்த அலை கடலை ஆடையாக உடுத்திய நிலப்பெண்ணிற்குப் பாரத கண்டமே முகமாகத் திகழ்கிறது. அதன் நெற்றியில் திலகமெனத் திராவிடத் திருநாடு திகழ்கிறது.

★ அந்தத் திலகத்தின் வாசனையைப் போல உலகம் அனைத்தும் இன்ப காண எல்லாத் திசைகளிலும் புகழ் மணக்க இருக்கும் பெருமைமிக்க தமிழாகிய தெய்வப் பெண்ணே !

★ என்றும் இளமையாய்த் திகழ்கின்ற உன்னுடைய அழகைக் கண்டு வியந்து, செய்யும் செயலையும் மறந்து வாழ்த்துகின்றோம்! வாழ்த்துகின்றோம் ! என்று மனோன்மணீயம் வாழ்த்துகிறார்.

**பெருஞ்சித்திரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :**

★ அன்னை மொழியே! அழகான செந்தமிழே ! பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! கடல்கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் மாண்புகழே ! பத்துப்பாட்டே ! எட்டுத்தொகையே! பதினெண் கீழ்க்கணக்கே! நிலைத்த சிலப்பதிகாரமே ! அழகான மணிமேகலையே! பொங்கி எழும் நினைவுகளால் த லைபணிந்து வாழ்த்துகின்றோம்.

★ செந்தமிழே! எம் உயிரே! சொல்லுவதற்கரிய நின் பெருமைகளை என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறு விரித்துரைக்கும்! பழம்பெருமையும், தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! என்று வாழ்த்துகிறார் பெருஞ்சித்திரனார்

★ இருவரின் வாழ்த்துப் பாடல்களிலும் தமிழ் மொழியானது அதன் பழமை, வளமை, செழுமை பற்றி வாழ்த்தப்படுகின்றது.

---

**மொழிப்பயிற்சி:**

**அ . சொல்லும் பொருளும் :**

**விடை :**

| | | | |
|---|---|---|---|
| முகிழ்ந்த | – தோன்றிய | நற்கணக்கு | – பதினெண் கீழ்க்கணக்கு |
| தும்பி | – வண்டு | மன்னும் | – நிலைத்த |
| பாப்பத்தே | – பத்துப்பாட்டே | முடிதாழ | – தலை பணிந்து |
| எண் தொகை | – எட்டுத் தொகை | யாண்டும் | – எங்கும் |

---

**ஆ . இலக்கணக்குறிப்பு :**

**விடை :**

| | |
|---|---|
| செந்தமிழ், நறுங்கனி | – பண்புத்தொகைகள் |
| சிறகார்ந்த தும்பி, முகிழ்ந்த இலக்கியம் | – பெயரெச்சங்கள் |
| மண்ணுலகம் | – உருவகம் |
| முந்துற்றோம் | – தன்மை பன்மை வினைமுற்று |
| நின்பெருமை | – ஆறாம் வேற்றுமை தொகை |
| குடித்து | – வினையெச்சம் |
| யாண்டும் | – முற்றும்மை |

---

**இ. பகுபத உறுப்பிலக்கணம்:**

**விடை :**

| | |
|---|---|
| முகிழ்ந்த | – முகிழ் + த் + த் அ |
| முகிழ் | – பகுதி |
| த் | – சந்தி |
| த் | – இறந்தகால இடைநிலை |
| அ | – பெயரெச்ச விகுதி |

**ஈ. பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:**

*செந்தமிழே ! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை*
*எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரை விரிக்கும் ?*
*முந்தைத் தனிப்புகழும் முகிழ்ந்த இலக்கியமும்*
*விந்தை நெடுநிலையும் வேறார் புகழுரையும்*

**1. இப்பாடலில் இடம்பெறும் கவிதைத் தொகுப்பின் பெயர் யாது ?**
**விடை :** "கனிச்சாறு"
**2. இப்பாடலின் ஆசிரியர் யார் ?**
**விடை :** பாவலரேறு பெருஞ்சித்திரனார்
**3. "செந்தமிழ்" இலக்கணக் குறிப்பு தருக**
**விடை :** பண்புத் தொகை
**4. "முகிழ்ந்த " என்னும் சொல்லின் பொருள் யாது ?**
**விடை :** தோன்றிய
**5. இப்பாடலில் இடம்பெற்றுள்ள சீர் மோனைகளை எடுத்தெழுதுக.**
**விடை :** சீர்மோனை
செந்தமிழே – செப்பரிய
**6. இப்பாடலில்இடம்பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.**
**விடை :** எந்தமிழ்நா, முந்தைத், விந்தை

## கற்பவை கற்றபின்

**1.** *"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு*
*ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்*
*கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று*
*இத்திறத்த எட்டுத் தொகை"* **– இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

**விடை :**

**நற்றினை :**
நல் + திணை = நற்றிணை – நல் என்னும் அடைமொழி பெற்ற நூல். **9** அடிச்சிற்றெல்லை முதல் **12** அடிப் பேரெல்லை வரை அமைந்த அகம் பற்றிய **400** பாடல்களைக் கொண்டது. நல் என்னும் அடைமொழி பெற்றது.

**குறுந்தொகை :**
குறுமை + தொகை = குறுந்தொகை . நான்கடிச் சிற்றெல்லை முதல் எட்டடிப் பேரெல்லை வரை அமைந்த அகம் பற்றிய நானூறு பாடல்களைக்கொண்டது.

**ஐங்குறுநூறு :**
மூன்றடிச் சிற்றெல்லை முதல் ஆறடிப் பேரெல்லை வரையுள்ள அகம் பற்றிய பாடல்களைக் கொண்டது. திணைக்கு நூறு பாடல்களாக ஐந்நூறு பாடல்களைக் கொண்டது.

**பதிற்றுப் பத்து :**
சேர மன்னர்கள் பதின்மரைப் பற்றி பத்துப் புலவர்கள் பத்து பத்தாகப் பாடிய பாடல்களின் தொகுப்பு . இது புறம் சார்ந்த நூலாகும்.

**பரிபாடல் :**
தமிழின் முதல் இசைப்பாடல். வெண்பா,ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய நால்வகைப் பாக்களும் பல வகையான அடிகளாலும் பாடப்பட்டுள்ளன. இது அகம் சார்ந்த நூலாகும்.

**கலித்தொகை :**
கலிப்பாவால் ஆன அகம் சார்ந்த **150** பாடல்களைக் கொண்ட தொகை நூல். இந்நூல் நாடகப் பாங்கில் அமைந்துள்ளது. இசையோடு பாடுவதற்கேற்ற நூல். கலித்தொகை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐம்பெரும் பிரிவுகளை உடையது.

**அகநானூறு :**
**13** அடி சிற்றெல்லை, **31** அடிப் பேரெல்லைகளைக் கொண்ட நூல். அகம் சார்ந்த **400** பாடல்களைக் கொண்டது. நீண்ட பாடல்களைப் பெற்றுள்ளதால் "நெடுந்தொகை" எனவும் கூறுவர்.

**புறநானூறு :**

புறம் + நான்கு + நூறு = புறநானூறு. புறம் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. தமிழர்களின் வரலாற்றுக் களஞ்சியமாக, பழந்தமிழ் மன்னர்கள், குறுநில மன்னர்களின் வரலாற்றைக் கூறும் ஆவணமாக இந்நூல் அமைந்துள்ளது.

---

**2. *"எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்"* என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்துநிமிட உரை நிகழ்த்துக.**

**விடை:**

வணக்கத்திற்குரிய வகுப்பாசிரியர் அவர்களே !இனிய நண்பர்களே ! வணக்கம்.

*"எந்தமிழ்நா நின் பெருமை*
*எடுத்தே உரைவிரிக்கும்"* என்று தமிழின் பெருமையைப் பறைசாற்றினார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் பாரதியார்.

"தமிழுக்கு அமுதென்று பேர்" என்றார் பாரதிதாசன். மேலும். "கன்னல் பொருள் தரும் தமிழே ! நீ ஓர் பூக்காடு நானோர் தும்பி" என்றும் தமிழைப் புகழ்ந்த பாடினார் பாரதிதாசன்.

இன்று உலகில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றுள் இலக்கண, இலக்கிய வளமுடைய மொழிகள் மிகச்சிலவே !. அப்படி ஆராய்ந்து பார்க்கின்றபோது, பழமையான வளமுடைய செம்மொழி என்று இலத்தீன், ஈபுரு, கிரேக்கம், சமஸ்கிருதம், சீனம், தமிழ் ஆகியவற்றைக் குறிப்பிடுவர். இவற்றில் இன்றளவும் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் உள்ளவை சீனமும் தமிழுமே ஆகும்.

தமிழ் என்பது உலகில் முதல் மனிதன் பேசிய மொழி என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குமரிக் கண்டமும், லெமூரியாவும் தமிழ் வழங்கிய நிலங்களாக இருந்தன. அவை குமரி முனைக்குத் தெற்கே இருந்து கடலால் அழிந்தவை என்று கூறுவர். எனினும் இன்றளவும் இலக்கிய இலக்கண வளத்தோடு மக்களின் பேச்சு மொழியாகவும் இருபத்தொன்றாம் நூற்றாண்டின் அறிவுக்கண் திறக்கும் மொழியாகவும் உள்ளது தமிழே எனக் கூறுதல் மிகை இல்லை.

உலக மொழிகளில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களை நீக்கினால் அவை வழக்கு அழிந்து ஒழியும். ஆனால் என் அன்னை மொழி அப்படிப்பட்டதன்று. தன்னுள் கலந்துள்ள பிறமொழிச் சொற்களை நீக்கினால் இன்னும் புத்திறமை பெற்று மறுமலர்ச்சி பெறும் வல்லமை உடையதே தமிழ் மொழி !

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்"

"தீதும் நன்றும் பிறர்தர வாரா"

"சுழன்றும் ஏர்பின்னது உலகம்"

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் ! வானோர் விருந்தும் அமிழ்தம் என்றாலும் வேண்டேன்"
போன்ற இலக்கியத் தொடர்கள் இன்றும் வழிகாட்டும் கலங்கரை தீபமாய்த் திகழ்கின்றன.

தமிழே உன் பெருமைதான் என்னே ! என்றும் அழியாத இன்ப ஊற்று ! எழில் குறையாத அருவி மழையே ! உன் வளம் பெருகட்டும். உலகம் அழிந்தாலும் உன் புகழ் நிலைக்கட்டும் என வாழ்த்தி வணங்கி விடைபெறுகிறேன்.

---

## உரைநடை உலகம்

**இயல் 1. ஆ**

## தமிழ்ச் சொல் வளம்

**– தேவநேயப் பாவாணர் (உரைநடை)**

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u> நிலத்துக்கு நல்ல உரங்கள்" – இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது. (அ.மா.வி)**

அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**விடை: ஈ) சருகும் சண்டும்**

**2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை ? (பெ.ஆ.க – 4)**

அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொளுந்து வகை ஈ) இலை வகை

**விடை: ஆ) மணி வகை**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர். (பெ.ஆ.க – 2)**

அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப்பாவாணர் ஈ) இரா. இளங்குமரனார்

**விடை: ஈ) இரா. இளங்குமரனார்**

**4. நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி கீழ்க்கண்டவாறு குறிக்கப்படுகிறது.**

அ) தாள் ஆ) தண்டு
இ) கழி ஈ) கோல் **விடை: அ) தாள்**

**5. அடிமரத்திலிருந்து பிரியும் மாபெரும் கிளையைக் குறிக்கும் சொல்.........**

அ) கொம்பு ஆ) கிளை
இ) கவை ஈ) போத்து **விடை: இ) கவை**

**6. காய்ந்த இலையைக் குறிக்கும் சொல்............**

அ) சருகு ஆ) தாள்
இ) சண்டு ஈ) தோகை **விடை: அ) சருகு**

**7. கரும்பின் நுனிப்பகுதியைக் குறிக்கும் சொல் .........**

அ) சினை ஆ) அரும்பு
இ) கொழுந்தாடை ஈ) கவை **விடை: இ) கொழுந்தாடை**

**8. பூவின் தோற்ற நிலையைக் குறிக்கும் சொல்.........**

அ) போது ஆ) அரும்பு
இ) மலர் ஈ) வீ **விடை: ஆ) அரும்பு**

**9. தாவரத்தின் பிஞ்சு வகைகளின் சொற்களைப் பொருத்துக.**

அ. எள்பிஞ்சு – 1. குரும்பை
ஆ. பலாப்பிஞ்சு – 2. கச்சல்
இ. வாழைப்பிஞ்சு – 3. மூசு
ஈ. தென்னைப்பிஞ்சு – 4. கவ்வை

அ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1 ஆ) அ–3, ஆ–2, இ–4, ஈ–1
இ) அ–1, ஆ–3, இ–2, ஈ–4 ஈ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3

**விடை: அ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1**

**10. அவரைகொத்து, சோளக்கதிர், நெல் அலகு ஆகியவற்றைக்குறிக்கும் பயிர் வகை.**
அ) பிஞ்சு வகை ஆ) குலை வகை
இ) இலை வகை ஈ) கொழுந்து வகை
**விடை: இ) இலைவகை**

**11. புழு, பூச்சி அரித்த காய் அல்லது கனியை குறிக்கும் சொல்.**
அ) சொண்டு ஆ) சூம்பல்
இ) சொத்தை ஈ) அழுகல்
**விடை: இ) சொத்தை**

**12. தென்னையில் கெட்ட காயை குறிக்கும் சொல்.**
அ) கூகைக்காய் ஆ) தேரைக்காய்
இ) அல்லிக்காய் ஈ) ஒல்லிக்காய்
**விடை: ஈ) ஒல்லிக்காய்**

**13. வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமியை ............ என்பர்**
அ) கொம்மை ஆ) குடுக்கை
இ) தோல் ஈ) தொலி **விடை: அ) கொம்மை**

**14. மா, பலா முதலியவற்றின் வித்து ............ என குறிக்கப்படுகிறது.**
அ) கூலம் ஆ) காழ்
இ) கொட்டை ஈ) முதிரை **விடை: இ) கொட்டை**

**15. நெல், சோளம் முதலியவற்றின் பசும்பயிரைக் குறிக்கும் சொல்**
அ) வடலி ஆ) குட்டி
இ) மடலி ஈ) பைங்கூழ்
**விடை: ஈ) பைங்கூழ்**

**16."நாடும் மொழியும் நம்மிரு கண்கள்" என்றவர் .............**
அ) கம்பர் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) கவிமணி
**விடை: ஆ) பாரதியார்**

**17."திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற நூலை எழுதியவர்...........**
அ) ஜி.யு.போப் ஆ) கால்டுவெல்
இ) வீரமாமுனிவர் ஈ) பாவாணர்
**விடை: ஆ) கால்டுவெல்**

**18. நூலாக்கப்பணிகளை விரும்பிச் செய்பவர் என்று "தமிழ்ச் சொல்வளம்" பகுதியில் குறிப்பிடப்படும் தமிழறிஞர் யார்?**
அ) பொற்கே ஆ) தி.சு. நடராஜன்
இ) இரா. இளங்குமரனார் ஈ) உ.வே.சாமிநாதர்
**விடை: இ) இரா.இளங்குமரனார்**

**19. சொல்லாராய்ச்சியில் பாவாணரை வியக்க வைத்த பெருமகனார் யார்?**
அ) தமிழண்ணல் ஆ) இரா. இளங்குமரனார்
இ) ஔவை நடராசன் ஈ) திரு.வி.க
**விடை: ஆ) இரா. இளங்குமரனார்**

**20. "திருவள்ளுவர் தவச்சாலை" அமைந்துள்ள இடம்............**
அ) புல்லூர் ஆ) நெல்லூர்
இ) அல்லூர் ஈ) கரூர்
**விடை: இ) அல்லூர்**

**21. இரா. இளங்குமரனார் உருவாக்கிய நூலகத்தின் பெயர்.............**
அ) கன்னிமாரா நூலகம் ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகம்
இ) நடமாடும் நூலகம் ஈ) பாவாணர் நூலகம்
**விடை: ஈ) பாவாணர் நூலகம்**

**22. விழிகளை இழக்க நேரிட்டால்கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர்.............**

அ) பாவாணர் ஆ) பொற்கோ
இ) பாரதியார் ஈ) இளங்குமரனார்

**விடை: ஈ) இளங்குமரனார்**

**23. கீழ்க்கண்ட நூல்களுள் எது இரா.இளங்குமரனார் எழுதிய நூல் அல்ல ?**

அ) தமிழிசை இயக்கம் ஆ) தனித்தமிழ் இயக்கம்
இ) காக்கைப்பாடினிய உரை ஈ) பள்ளிப் பறவைகள்

**விடை: ஈ) பள்ளிப்பறவைகள்**

**24. உலகத்திலேயே தமிழ் மொழிக்காக உலகமாநாடு நடத்திய முதல் நாடு எது ?**

அ) ஜப்பான் ஆ) மலேசியா
இ) சிங்கப்பூர் ஈ) இலங்கை

**விடை: ஆ) மலேசியா**

**25."மொழி ஞாயிறு" என அழைக்கப்படும் தமிழறிஞர் யார் ?**

அ) திரு.வி.க. ஆ) தமிழண்ணல்
இ) பரிதிமாற் கலைஞர் ஈ) தேவநேயப் பாவாணர்

**விடை: ஈ) தேவநேயப் பாவாணர்**

**26. சொல்லாய்வுக்கட்டுரைகள் நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரை**

அ) தமிழ்ச்சொல் வளம் ஆ) நீதிவெண்பா
இ) பச்சை நிழல் ஈ) தேன் மழை **விடை: அ) தமிழ்ச்சொல் வளம்**

**27. தமிழ்ச் சொல் ஆராய்ச்சியில் உச்சம் தொட்டவர் யார் ?**

அ) கால்டுவெல் ஆ) தமிழண்ணல்
இ) திரு.வி.க ஈ) தேவநேயப் பாவாணர்

**விடை: ஈ) தேவநேயப் பாவாணர்**

**28. செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர்..........**

அ) வீரமாமுனிவர் ஆ) பாரதியார்
இ) ஜி.யு. போப் ஈ) தேவநேயப் பாவாணர்

**விடை: ஈ) தேவநேயப் பாவாணர்**

**29. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராக இருந்தவர்.............**

அ) தேவநேயப்பாவாணர் ஆ) க. அப்பாத்துரையார்
இ) அ.கா.பெருமாள் ஈ) இரா. இளங்குமரனார்

**விடை: அ) தேவநேயப்பாவாணர்**

**30. 1554 –இல் லிசுபனில் முதன்முதலாகத் தமிழ் மொழியில் வெளியானநூல்.........**

அ) காஸ்டினா ஆ) பைபிள்
இ) குரான் ஈ) கார்டிலா **விடை: ஈ) கார்டிலா**

**31. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது.........**

அ) கன்னடம் ஆ) உருது
இ) ஆங்கிலம் ஈ) தமிழ் **விடை: ஈ) தமிழ்**

**பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)**

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. ★ ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.**
**★ ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.**
**★ ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.**
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.**

**விடை :**

**சரியான தொடர்கள் :**

1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
2. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையான தொடர் :**

ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.

**காரணம் :**

★ தாறு என்பது வாழைக் குலையைக் குறிக்கும்

★ சீப்பு என்பது வாழைத்தாற்றின் பகுதியைக் குறிக்கும்.

★ பல சீப்பு வாழைப்பழங்கள் சேர்ந்ததுதான் ஒரு தாறு

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.(பெ.ஆ.க–1)**

**விடை :**

தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன என்று கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

---

**3. ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பிடுவதற்கான சொற்கள் நான்கினை எழுதுக.**

**விடை :**

1. தாள் : நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
2. தண்டு : கீரை, வாழை முதலியவற்றின் அடி
3. கோல் : நெட்டி, மிளகாய்ச் செடி முதலியவற்றின் அடி
4. தூறு : குத்துச் செடி, புதர் முதலியவற்றின் அடி

---

**4. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.**

**விடை :**

★ கவை, கொம்பு அல்லது கொப்பு, கிளை, சினை, போத்து, குச்சு, இணுக்கு என்பனவாகும்.

---

**5. காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்களை எழுதுக.**

**விடை :**

1. சுள்ளி – காய்ந்த குச்சி
2. விறகு – காய்ந்த சிறுகிளை
3. வெங்கழி – காய்ந்த கழி
4. கட்டை – காய்ந்த கொம்பும், கவையும், அடியும்.

---

**6. தாவரங்களின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை ?**
**விடை :**

★ இலை, தாள், தோகை, ஓலை, சண்டு, சருகு முதலியனவாகும்

**7. பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்கள் யாவை ?**
**விடை :**

★ அரும்பு, போது, மலர் (அலர்), வீ, செம்மல் ஆகியன பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களாகும்.

**8. தாவரத்தின் பிஞ்சு வகைகளை எச்சொற்களால் குறிப்பிடுகிறோம் ?**
**விடை :**

★ பூம்பிஞ்சு, பிஞ்சு, வடு, மூசு, கவ்வை, குரும்பை, முட்டுக்குரும்பை, இளநீர், நுழாய், கருக்கல், கச்சல் ஆகிய சொற்களால் குறிப்பிடுகிறோம்.

**9. தாவரங்களின் குலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக ?**
**விடை :**

★ கொத்து, குலை, தாறு, கதிர், அலகு அல்லது குரல், சீப்பு முதலியனவாகும்.

**10. கெட்டுப்போன காய்கனிகளுக்குரிய சொற்களைப் பட்டியலிடுக ?**
**விடை :**

★ சூம்பல், சிவியல், சொத்தை, வெம்பல், அளியல், அழுகல், சொண்டு, கோட்டான் காய் அல்லது கூகைக்காய், தேரைக்காய், அல்லிக்காய், ஒல்லிக்காய் முதலியனவாகும்.

**11. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்கும் சொற்கள் யாவை ?**
**விடை :**

★ தொலி, தோல், தோடு, ஓடு, குடுக்கை, மட்டை, உமி, கொம்மை முதலியனவாகும்.

**12. தானியங்களுக்கு வழங்கப்படும் சொற்களைக் குறிப்பிடுக ?**
**விடை :**

★ கூலம், பயறு, கடலை, விதை, காழ், முத்து, கொட்டை, தேங்காய், முதிரை முதலியனவாகும்.

**13. கோதுமையின் வகைகள் யாவை ?**
**விடை :**

★ சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலியன கோதுமையின் சில வகைகளாகும்.

**14. நெல்லின் வகைகள் குறித்து பட்டியலிடுக ?**
**விடை :**

★ செந்நெல், வெண்னெல், கார்நெல், சம்பா, மட்டை, கார் முதலியன நெல்லின் சில வகைகளாகும்.

**15. "சம்பா" நெல்லின் வகைகளைப் பட்டியலிடுக.**
**விடை :**

★ ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலான அறுபது உள் வகைகள் உள்ளன.

**16. தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள் யாவை ?**
**விடை :**

★ வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலியன தமிழ்நாட்டில் மட்டும் விளையும் சிறுகூலங்கள் ஆகும்.

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது"**
**இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.(பெ.ஆ.க–3)**

**விடை :**

1. பைங்கூழ் – நெல் பைங்கூழ் பசுமையாக உள்ளது.
2. பிள்ளை – தென்னப்பிள்ளையை தோப்பில் நட்டு வைத்தனர்.
3. வடலி – காட்டில் பனை வடலியைப் பார்த்தேன்
4. கன்று – எனது ஆசிரியர் மாங்கன்று ஒன்றைப் பரிசாக அளித்தார்.
5. நாற்று – தோட்டத்தில் கத்தரி நாற்று ஒன்றை நட்டு வைத்தேன்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. தானியங்களுக்குத் தமிழகத்தில் வழங்கும் சொற்கள் குறித்து விளக்குக.**

**விடை :**

கூலம் – நெல், புல் (கம்பு) முதலிய தானியங்கள்
பயறு – அவரை, உளுந்து
கடலை – வேர்க்கடலை, கொண்டைக் கடலை
விதை – கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து
காழ் – புளி, காஞ்சிரை (நச்சுமரம்) முதலியவற்றின் வித்து
முத்து – வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின்வித்து
கொட்டை – மா, பனை முதலியவற்றின் வித்து
தேங்காய் – தென்னையின் வித்து
முதிரை – அவரை, துவரை முதலிய பயறுகள்.

---

**3. இரா.இளங்குமரனார் – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ தமிழாசிரியர், நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர், சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார். திருச்சிராப்பள்ளி அருகில் அமைந்துள்ள அல்லூரில் திருவள்ளுவர் தவச்சாலை ஒன்றை அமைத்திருப்பவர். பாவாணர் நூலகம் ஒன்றை உருவாக்கியவர்.

★ தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளை வழங்கிவருபவர். தமிழ்வழித் திருமணங்களை நடத்திவருபவர். திரு.வி.க.போல விழிகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக்கொண்டவர்.

---

**4. இரா.இளங்குமரனாரின் தமிழ்ப்பணியைத் தரமுயர்த்திய நல்முத்துகள் எவை ?**

**விடை :**

★ பற்பல நூல்களை இரா.இளங்குமரனார் எழுதியிருந்தாலும், இலக்கண வரலாறு, தமிழிசை இயக்கம், தனித் தமிழ் இயக்கம், பாவாணர் வரலாறு, குண்டலகேசி உரை, யாப்பருங்கலம் உரை, புறத்திரட்டு உரை, திருக்குறள் தமிழ் மரபுரை, காக்கைப் பாடினிய உரை, தேவநேயம் முதலியன இவர்தம் தமிழ்ப்பணியைத் தரமுயர்த்திய நல்முத்துக்களாகும்.

---

### பகுதி – IV ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய செயலாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. (பெ.ஆ. க – 3)**

**விடை :**

**தமிழில் உள்ள சொல் வளம் :**

1. சொல் வளம் என்பது இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவேனும், தமிழ் மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.
2. தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது தமிழிலுள்ள ஒரு பொருட் பல சொல் வரிசைகள் அவற்றில் இல்லாத குறை எந்தத் தமிழறிஞர்க்கும் மிகத் தெளிவாகத் தோன்றும்.
3. தமிழில் மட்டும் பயன்படுத்தப்பட்டுத் தமிழுக்கே சிறப்பாக உரியனவாகக் கருதப்படும் சொற்கள் மட்டுமின்றித் தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்குரியனவாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளது என்கிறார் கால்டுவெல்.
4. தமிழ் சொல்வளத்தைப் பல துறைகளிலும் காணலாமேனும், இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
5. ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைத் தாள், தண்டு, கோல், தூறு, தட்டு, கழி, கழை, அடி எனப் பல சொற்களில் தமிழர்கள்வழங்குகின்றனர்.
6. தாவரங்களின் அடியிலிருந்து பிரிந்து செல்லும் பிரிவுகளுக்குக்கவை, கொம்பு, கிளை, சினை, போத்து, குச்சு, இணுக்கு எனப் பல சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. தமிழின் வயது மூத்தது என்பதையே இச்சொல்வளம் காட்டுகிறது.
7. காய்ந்த தாவரங்களைச் சுள்ளி, விறகு, வெங்கழி, கட்டை எனப் பல சொற்களைப் பயன்படுத்தி வழங்கியவர்கள் தமிழர்களே.
8. தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.
9. பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில வகைப்பட்டனவாகவும் இருக்க, தமிழ் நாட்டிலுள்ளவையோ பலவாகவும்கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக்கொண்டால் அதில் சம்பாக்கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால் தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும், சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும், ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச்சம்பா, சீரகச் சம்பா என அறுபது உள் வகைகள் உள்ளன.
10. பிற மொழிகளில் உள்ள அறிவியல் பயன்பாட்டுச் சொற்களுக்கும் பல்துறைகளில் உள்ள சொற்களுக்கும் தமிழில் பல புதிய கலைச் சொற்களை உருவாக்கிட வேண்டும்.
11. புதியன படைப்போம் வாரீர்! இளையோரே மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் போல பல்லோர் தமிழ் மொழிக்குத் தொண்டு செய்வோம்! புதிய புதிய சொற்களை படைத்து தமிழ் அன்னைக்கு புதிய அழகிய அணிகலன்கள் பூட்டி மகிழ்வோம்.

நன்றி ! வணக்கம்.

---

**மொழிப்பயிற்சி**

**அ) விடைக்கேற்ற வினா அமைக்க :**

**1. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும். (அ.மா.வி) (பெ.ஆ.க – 3)**

**விடை :**

ஒரு நாட்டு மக்களின் அறிவொழுக்கம் எவ்வாறு அமைந்திருக்கும் ?

**2. சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் தமிழ்த்திரு இரா. இளங்குமரனார். (பெ.ஆ.க – 3)**

**விடை :**

சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார் யார் ?

**3. நெல், கம்பு முதலியவற்றின் மூடியை உமி என்று அழைப்பர்.**
**விடை :**
நெல், கம்பு முதலியவற்றின் மூடியை எவ்வாறு அழைப்பர் ?

**4. ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா**
**விடை :**
ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது ?

---

**ஆ) நிறுத்தற்குறியிட்டு எழுதுக :**
**1. நாடும் மொழியும் நமதிரு கண்கள் என்கிறார் மகாகவி பாரதியார்.**
**விடை :**
"நாடும் மொழியும் நமதிரு கண்கள்" என்கிறார் மகாகவி பாரதியார்.

**2. தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.**
**விடை :**
தமிழ்நாடு எத்துணைப் பொருள்வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

---

**இ) சந்திப்பிழை நீக்கி எழுதுக :**
**1. தமிழ் சொல் வளத்தை பல துறைகளிலும் காணலாமேனும், இங்கு பயிர்வகை சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துகாட்ட பெறும்.**
**விடை :**
தமிழ்ச் சொல் வளத்தைப் பல துறைகளிலும் காணலாமேனும், இங்குப் பயிர்வகைச் சொற்கள் மட்டும் சிறப்பாக எடுத்துகாட்டப் பெறும்.

**2. நாட்டின் தனிபெரும் வளத்தினாலேயே, பண்டை தமிழ் மக்கள் தனி பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர்.**
**விடை :**
நாட்டின் தனிப்பெரும் வளத்தினாலேயே, பண்டைத் தமிழ் மக்கள் தனிப் பெரும் நாகரிகத்தை உடையவராக இருந்திருக்கின்றனர்.

---

**ஈ) ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.**
**1. அரும்பு, போது, மலர், வீ, செம்மல் ஆகியவை பூவின் நிலையைக் குறிக்கும் சொல் ஆகும்.**
**விடை :**
அரும்பு, போது, மலர், வீ, செம்மல் ஆகியவை பூவின் நிலையைக் குறிக்கும் **சொற்கள்** ஆகும்.

**2. போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554 இல் கார்டிலா என்னும் நூல் முதன்முதலாகத் தமிழ்மொழியில்தான் மொழிபெயர்க்கப்பட்டன.**
**விடை :**
போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில், 1554 இல் கார்டிலா என்னும் நூல் முதன்முதலாகத் தமிழ்மொழியில் தான் மொழிபெயர்க்கப்பட்டது.

---

**உ) உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**ஒரு மொழி பொது மக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொது மக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது**

**என்பதை அறிகிறோம்.**

**தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும், சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபலவகைப் பட்டனவாகவும் இருக்கின்றன. (அ.மா.வி)**

**வினா விடைகள்:**

**1. ஒரு மொழியின் இலக்கியம் யாரால் அமையப்பெறும் ?**

**விடை :**

ஒரு மொழியின் இலக்கியம் புல மக்களால் அமையப்பெறும்.

**2. தமிழில் இலையைக் குறிக்கும் பல சொற்கள் யாவை ?**

**விடை :**

தமிழில் இலையைக் குறிக்கும் பல சொற்கள் இலை, தோகை, ஓலை

**3. தமிழ்நாட்டின் பொருள்வளத்தினை எவ்வாறு அறிவீர்கள் ?**

**விடை :**

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

**4. தமிழ்நாட்டில் கூலங்கள் எத்தனை வகைப்பட்டனவாக விளங்குகின்றன ?**

**விடை :**

தமிழ்நாட்டில் கூலங்கள் பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன.

**5. ஆங்கில மொழியில் இலையைக் குறிக்கும் சொல் எது ?**

**விடை :**

ஆங்கில மொழியில் இலையைக் குறிக்கும் சொல் Leaf (லீஃப்).

---

**ஊ) (குறிப்பு) : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

**உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**ஒரு மொழி பொது மக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொது மக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது என்பதை அறிகிறோம்.**

**தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். (பெ.ஆ.க – 5)**

**வினா விடைகள்:**

**1. ஒரு மொழியும் அதன் இலக்கியமும் எவ்வறு அமையும் ?**

**விடை :**

ஒரு மொழி பொது மக்களாலும், அதன் இலக்கியம் புல மக்களாலும் அமையப்பெறும்.

**2. தமிழ் மக்கள் இலைகளை எவ்வாறு பாகுபாடு செய்தனர் ?**

**விடை :**

தமிழ் மக்கள் இலைகளை வன்மை, மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தனர்.

**3. தமிழ்நாட்டின் பொருள்வளத்தினை எவ்விதம் விளங்கிக்கொள்ளலாம் ?**

**விடை :**

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

**4. மொழி ஆராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.**
**விடை :**

ஆங்கில மொழியில் இலையைக் குறிக்க சொல் Leaf (லீஃப்) என்னும் ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறுபல வகைகளில் இலைகளைப் பாகுபடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொது மக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை.

**5. இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**
**விடை :** தமிழ் மொழி வளம்

---

## கற்பவை கற்றபின்

**1. பின்வரும் நில வகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.**
**(தரிசு, சிவல், கரிசல், முரம்பு, புறம்போக்கு, சுவல், அவல்)**
**விடை :**

**1. தரிசு:**
போதிய மழையின்றி பராமரிப்பின்றி விளைச்சல் இல்லா நிலம்.

**2. சிவல்:**
செந்நிலம், விவசாயத்திற்கு ஏற்ற நிலம்

**3. கரிசல்:**
கருப்பு நிறம் கொண்ட மண் உள்ள நிலம்

**4. முரம்பு:**
பருக்கை கற்கள் கொண்ட மேட்டு நிலம்.

**5. புறம்போக்கு:**
எதற்கும் உதவாத அரசுக்குச் சொந்தமான இடம்

**6. சுவல்:**
மேடான பகுதி

**7. அவல்:**
பள்ளமான நிலப்பகுதி

---

**2. ஒரு பொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.**
**(எ.கா) சொல்லுதல் – பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல்**
**விடை:**

| | | |
|---|---|---|
| 1. அன்பு | – | நேசம், ஈரம், நேயம், பரிவு, பற்று, கருணை |
| 2. அணிதல் | – | அலங்கரித்தல், சூடுதல், தரித்தல், புனைதல், பூணுதல், மிலைதல் |
| 3. ஆசிரியர் | – | உபாத்தியாயர், ஆசான், குரு, தேசிகன், குரவன் |
| 4.கிளி | – | தத்தை, சுகம், கிள்ளை |
| 5. சூரியன் | – | ஞாயிறு, கதிரவன், பகலோன், பரிதி, வெய்யோன், ஆதவன் |
| 6. நெருப்பு | – | தீ, அனல், கனல், சுடர் |
| 7. சொல் | – | பதம், கிளவி, மொழி |
| 8. வயல் | – | கழனி, தரிசு, பழனம், செய், காணி |
| 9. குழந்தை | – | மகவு, குழவி, சேய், பிள்ளை |
| 10. மலர் | – | பூ, அரும்பு, போது, அலர், வீ |
| 11. நிலவு | – | மதி, சந்திரன், நிலா |
| 12. செய்யுள் | – | பா, கவிதை, பாடல், யாப்பு |
| 13. தவறு | – | மாசு, குற்றம், பிழை மொழிதல். |

## கவிதைப் பேழை

இயல் 1. இ

## இரட்டுற மொழிதல்

– சந்தக் கவிமணி தமிழழகனார் (செய்யுள்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. 'மெத்த வணிகலன்' – என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது..............**

அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங் காப்பியங்களும்

ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்

இ) ஐம்பெருங் காப்பியங்களும் அணிகலன்களும்

ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

**விடை: அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெருங் காப்பியங்களும்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. "மெத்தவணிகலன்" என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.**

அ) மெத்த + அணிகலன் ஆ) மெத் + வணிகலன்

இ) மெத்தை + அணி + கலன் ஈ) மெத்தை + அணிகலன்

**விடை: அ) மெத்த + அணிகலன்**

**3. மெத்த அணிகலன்களாக தமிழழகனார் குறிப்பிடும் நூல்...........**

அ) ஐம்பெருங்காப்பியங்கள் ஆ) ஐஞ்சிறுங்காப்பியங்கள்

இ) புறநானூறு ஈ) அகநானூறு

**விடை: அ) ஐம்பெருங்காப்பியங்கள்**

**4. "துய்ப்பது" என்பதன் பொருள்...........**

அ) கற்பது, தருதல் ஆ) கொடுப்பது, எடுப்பது

இ) உண்பது, உறங்குவது ஈ) சொல்வது, வருதல்

**விடை: அ) கற்பது, தருதல்**

**5. துய்ப்பதால் என்பதன் இலக்கணக் குறிப்பு...........**

அ) தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்

இ) முதனிலை தொழிற்பெயர் ஈ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

**விடை: அ) தொழிற்பெயர்**

**6. "கடல்" என்பதன் வேறு பெயர்............**

அ) ஏரி ஆ) ஆழி

இ) நீர்த்தேக்கம் ஈ) குளம்

**விடை: ஆ) ஆழி**

**7. இயல், இசை, நாடகம் என்பது............**

அ) முத்தமிழ் ஆ) முச்சங்கம்

இ) மெத்தவணிகலன் ஈ) ஐம்பெரும் காப்பியம்

**விடை: அ) முத்தமிழ்**

**8. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள் பட வருவது.............. அணி ஆகும்.**

அ) வஞ்சப்புகழ்ச்சி ஆ) தற்குறிப்பேற்ற

இ) இரட்டுற மொழிதல் ஈ) உவமை

**விடை: இ) இரட்டுற மொழிதல்**

**9. இரட்டுற மொழிதல் அணியை ............... என்றும் அழைப்பர்**
அ) பிறிது மொழிதல் அணி ஆ) வேற்றுமை அணி
இ) சிலேடை அணி ஈ) சொற்பொருள்பின்வருநிலையணி
**விடை: இ) சிலேடை அணி**

**10.சந்தக்கவிமணி என அழைக்கப்படுபவர் யார் ?**
அ) பொற்கோ ஆ) தமிழண்ணல்
இ) பெருஞ்சித்திரனார் ஈ) தமிழழகனார் **விடை: ஈ) தமிழழகனார்**

**11. தமிழழகனாரின் இயற்பெயர் யாது ?**
அ) சூரிய மூர்த்தி ஆ) கலிய மூர்த்தி
இ) சந்தக்கவிமணி ஈ) சண்முகசுந்தரம் **விடை: ஈ) சண்முகசுந்தரம்**

**பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக. (பெ.ஆ.க–5)**

*"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்*
*மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்*
*அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு*
*இணைகிடந்த தேதமிழ் ஈண்டு."*

**12. இப்பாடல் இடம்பெற்ற நூல்........**
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு
இ) குறுந்தொகை ஈ) தனிப்பாடல் திரட்டு
**விடை: ஈ) தனிப்பாடல் திரட்டு**

**13. பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி...........**
அ) இரட்டுற மொழிதல் அணி ஆ) தீவக அணி
இ) வஞ்சப் புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி
**விடை: அ) இரட்டுறமொழிதல் அணி**

**14. தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது........**
அ) சங்கப் பலகை ஆ) கடல்
இ) அணிகலன் ஈ) புலவர்கள் **விடை: ஆ) கடல்**

**15. தொழிற்பெயர் அல்லாத சொல்...........**
அ) துய்ப்பதால் ஆ) மேவலால்
இ) அணிகலன் ஈ) கண்டதால் **விடை: இ) அணிகலன்**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.**
**விடை :**

★ சென்னை வரவேற்கிறது என்பதை ஆம். சென்னை வர வேர்க்கிறது ( வியர்க்கிறது என்பதன் பேச்சு வழக்கு) என்று சிலேடை மூலம் சொல்லலாம்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. விண்ணோடும், முகிலோடும் தமிழ்மொழி இணைத்துப்பேசக் காரணம் என்ன ?**
**விடை :**

★ விண், முகில், விண்மீன், கதிரவன், கடல் ஆகியவற்றுக்குள்ள ஆற்றலும், விரிவும், ஆழமும், பயனும் தமிழுக்கு உண்டு என்பதால் இணைத்துப் பேசப்படுகிறது.

---

**3. ஐம்பெரும் காப்பியங்கள் யாவை ?**
**விடை :**

1. சிலப்பதிகாரம்
2. மணிமேகலை
3. சீவகசிந்தாமணி
4. வளையாபதி
5. குண்டலகேசி என்பனவாகும்

**4. இரட்டுற மொழிதல் – விளக்கம் தருக.**

**விடை :**

★ ஒரு சொல்லோ, சொற்றொடரோ இரு பொருள்பட வருவது இரட்டுற மொழிதல் எனப்படும்.

★ இதனைச் சிலேடை என்றும் கூறுவர்.

★ செய்யுளிலும், உரைநடையிலும், மேடைப்பேச்சிலும் சிலேடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக. (பெ.ஆ.க–6)**

**விடை :**

| வ.எண் | தமிழ் | கடல் |
|---|---|---|
| 1 | இயல், இசை, நாடகம் என முத்தமிழால் வளர்ந்தது | அமிழ்ந்து எடுக்க, முத்தினைத் தருகிறது. |
| 2 | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் எனும் மூன்று வகை சங்குகளைத் தருகிறது. |
| 3 | ஐம்பெருங்காப்பியங்களால் அணிசெய்யப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்களால் சூழப்பெற்றது. |
| 4 | சங்கப் பலகையில் புலவர்களால் காக்கப்பட்டது. | கடலலைகளால் சங்குகள் காக்கப்பட்டன. |

**2. தமிழழகனார் – ஆசிரியர் குறிப்பு தருக**

**விடை :**

| | |
|---|---|
| **பெயர் :** | சந்தக்கவிமணி தமிழழகனார் |
| **இயற்பெயர்:** | சண்முகசுந்தரம். |
| **பிறந்த ஊர் :** | தூத்துக்குடி |
| **பிறப்பு :** | 21–4–1929 |
| **பெற்றோர் :** | வேலு – வள்ளியம்மை |
| **இறப்பு :** | 02 – 10 – 2015 |
| **படைப்புகள் :** | தமிழழகன் கவிதைகள், மழலை அமுதல், பூ மத்தாப்பு, ஒளியைத் தேடி, இராம கவிதை |
| **பாராட்டு :** | பாரதி பரம்பரை, பாரதிதாசன் பரம்பரை போன்ற பாராட்டுகளைப் பத்திரிக்கைகளால் பெற்றுள்ளார். |
| **பட்டங்கள் :** | சந்தக்கவிமணி, கவிமாமணி, தமிழ் இலக்கியக் காவலர். |
| **பரிசு :** | இந்தியஅரசின் ஒலிபரப்புத்துறை நடத்திய கவிதைப் போட்டியில் நாட்டிலேயே முதல் பரிசைப் பெற்றுள்ளார். |

**மொழிப்பயிற்சி :**

**1. சொல்லும் பொருளும்**

**விடை :**

அ) துய்ப்பது – கற்பது, தருதல்

ஆ) மேவலால் – பொருந்துதல், பெறுதல்

**2. காக்க – பகுபத உறுப்பிலக்கணம் தருக**

**விடை :**

| | | |
|---|---|---|
| காக்க | – | கா + க் + க |
| கா | – | பகுதி |
| க் | – | சந்தி |
| க | – | வியங்கோள் வினைமுற்று விகுதி |

**தொகைச் சொற்கள் :**

| | | |
|---|---|---|
| 1. இருவினை | – | நல்வினை, தீவினை |
| 2. இருமை | – | இம்மை, மறுமை |
| 3. இருதிணை | – | உயர்திணை, அஃறிணை |
| 4. ஈரெச்சம் | – | பெயரெச்சம், வினையெச்சம் |
| 5. முச்சங்கம் | – | முதல், இடை, கடை |
| 6. முச்சங்கு | – | வெண்சங்கு, பாஞ்சசன்யம், சலஞ்சலம் |
| 7. முத்தமிழ் | – | இயல், இசை, நாடகம் |
| 8. முந்நூல் | – | முதல்நூல், வழிநூல், சார்பு நூல் |
| 9. முந்நீர் | – | ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் |
| 10. முக்காலம் | – | கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் |
| 11. முப்படை | – | தரைப்படை, கப்பற்படை, விமானப்படை |
| 12. முக்கொடி | – | விற்கொடி, புலிக்கொடி, மீன்கொடி |
| 13. முக்கனி | – | மா, பலா, வாழை |
| 14. முக்குணம் | – | சத்துவம், இராசசம், தாமசம் |
| 15. முப்பிணி | – | வாதம், பித்தம், சீதம் |
| 16. மூவேந்தர் | – | சேரர், சோழர், பாண்டியர் |
| 17. மூவிடம் | – | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| 18. மூவுலகம் | – | மண்ணுலகு, விண்ணுலகு, பாதாள உலகு |
| 19. மூவாசை | – | மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை |
| 20.நான்மறை | – | ரிக், யசூர், சாமம், அதர்வணம் |
| 21. நாற்படை | – | தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை |
| 22.நாற்கவி | – | ஆசுகவி, மதுரகவி, சித்ரகவி, வித்தாரக்கவி |
| 23. நாற்குணம் | – | அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு |
| 24. நாற்பா | – | வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா |
| 25.நாற்றிசை | – | கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு |
| 26.நாற்பொருள் | – | அறம், பொருள், இன்பம், வீடு |
| 27.ஐம்பால் | – | ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் |
| 28. ஐம்புலன் | – | சுவை, ஒளி, உணர், ஓசை, நாற்றம் |
| 29.ஐம்பொறி | – | மெய், வாய், கண், மூக்கு, செவி |
| 30.ஐந்திலக்கணம் | – | எழுத்து, சொல்,பொருள், யாப்பு, அணி |
| 31. ஐம்பூதங்கள் | – | நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு |
| 32.ஐம்பொன் | – | பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் |
| 33.ஐந்நிலம் | – | குறிஞ்சி, முல்லை,மருதம்,நெய்தல், பாலை |
| 34. ஐயடி | – | குறளடி, சிந்தடி, அளவடி (அ) நேரடி, நெடிலடி, கழிநெடிலடி |
| 35.அறுசுவை | – | இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு, கரிப்பு, துவர்ப்பு |
| 36.அறுபொழுது | – | வைகறை, காலை, நண்பகல், மாலை, எற்பாடு, யாமம் |
| 37.ஆறுகாலம் | – | கார்காலம், குளிர்காலம், முன்பனிக்காலம், பின்பனிக்காலம், இளவேனிற்காலம், முதுவேனிற்காலம். |
| 38.ஆறறிவு | – | ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை, உள்ளம். |
| 39.ஏழிசை | – | குரல், துத்தம், கைக்கிளை உழை, இளி, விளரி, தாரம் |
| 40. எண்வனப்பு | – | அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு |
| 41. நவமணி | – | கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், வைரம், முத்து, வைடூரியம். |

**கற்பவை கற்றபின்**

**1. அ) காலை நேரம் ஒரு நிகழ்ச்சிக்காகத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் தமிழறிஞர் கி.வா.ஜகந்நாதன். அவரை மாலையிட்டு வரவேற்றனர். அப்போது கி.வா.ஜ., "அடடே ! காலையிலேயே மாலையும் வந்துவிட்டதே!" என்றார். எல்லோரும் அந்தச் சொல்லின் சிலேடைச் சிறப்பை மிகவும் சுவைத்தனர்.**

**ஆ) இசை விமரிசகர் சுப்புடுவின் விமர்சனங்களில் நயமான சிலேடைகள் காணப்படும். ஒருமுறை ஒரு பெரிய வித்துவானுடைய இசை நிகழ்ச்சியை விமர்சனம் செய்யும்போது அவர் குறிப்பிட்டது : "அன்று கச்சேரியில் அவருடைய காதிலும் கம்மல், குரலிலும் கம்மல்."**

**இ) தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதன் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது "இவர் பல்துறை வித்தகர்" என்று குறிப்பிட்டார் !**

**இவை போன்ற பல சிலேடைப் பேச்சுகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். அவற்றைத் தொகுத்துச் சொல் நயங்களைப் பதிவு செய்து கலந்துரையாடுக.**

**விடை :**

**பாரதி** : வணக்கம் வாணி. என்ன செய்கிறாய் ?

**வாணி** : வணக்கம் பாரதி. நான் தமிழண்ணல் எழுதிய தமிழ் இலக்கிய வரலாறு படிக்கிறேன்.

**பாரதி** : அப்படியா ! இந்நூலில் ஏதாவது சிறப்புச் செய்தி உள்ளதா !

**வாணி** : ஆமாம் !

**பாரதி** : என்ன ?

**வாணி** : நம்முடைய தமிழ் அறிஞர்களின் சொல் நயங்கள் வியப்பாக உள்ளன.

**பாரதி** : அப்படியா !

**வாணி** : ஆமாம் பாரதி. ஒருமுறை அய்யா கி.வா.ஜ. அவர்களை விருந்துக்கு அழைத்துள்ளார் அவர் நண்பர். நன்றாக உணவருந்திவிட்டு கிளம்பிய கி.வா.ஜ "நல்ல உணவு நன்றாக சாப்பிட்டேன். ஆனால் ஒரு குறை..." என்று இழுத்திருக்கிறார். நண்பர் அதிர்ச்சி அடைந்திருக்கிறார். உடனே தொடர்ந்த அய்யா கி.வா.ஜ. அவர்கள், "பதட்டமடையாதீர்கள், நல்ல உணவு, நன்றாகச் சாப்பிட்டேன். இன்னும் சாப்பிடலாம் என்றால் எனக்கு இன்னொரு வயிறு இல்லையே .... என்பதுதான் குறை" என்றாராம்.

**பாரதி** : ஓ அருமையாக சொல் நயம் கையாளப்பட்டிருக்கிறதே!. நானும் அவர் பற்றி கேட்டு இருக்கிறேன். அவரிடம் ஒருமுறை" அய்யா பழம் கிழம் சாப்பிடுகிறீர்களா ? " என்று நண்பர் கேட்டாராம். உடனே அய்யா, "பழம் கிழம் நான் இருக்கிறேன். சாப்பிடக் கொடுத்துவிடாதே என்னை" என்று கூறினாராம்.

**வாணி** : ஆகா. அருமை ! அருமை !

---

**2. மொழியின் சிறப்புகளைப் பாடும் கவிதைகளுள் உங்களுக்குப் பிடித்தவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக.**

**விடை :**

*கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்*
*கழையிடை ஏறிய சாறும்*
*பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சும்*
*பாகிடை ஏறிய சுவையும்*
*நனிபசு பொழியும் பாலு – தென்னை*
*நல்கிய குளிரிள நீரும்*
*இனியன என்பேன் எனினும் – தமிழை*
*என்னுயிர் என்பேன் கண்டீர்.*

*– பாரதிதாசன்*

*யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்.*
*பாமர ராய், விலங்குகளாய், உலகனைத்தும்*
*இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு,*
*நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு*
*வாழ்ந்திடுதல் நன்றோ! சொல்லீர்*
*தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்*
*பரவும் வகை செய்தல் வேண்டும்*

*– பாரதியார்*

விரிவானம்

**இயல் 1. ஈ**

## உரைநடையின் அணிநலன்கள்

**– எழில் முதல்வன்(துணைப்பாடம்)**

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. முதல் தமிழ்க் கணினியின் பெயர்...........**

அ) இளங்கோ ஆ) திருவள்ளுவர்
இ) பாரதியார் ஈ) பாரதிதாசன் **விடை: ஆ) திருவள்ளுவர்**

**2. முதல் தமிழ்க்கணினி விற்பனைக்கு வந்த ஆண்டு ............**

அ) 1983 ஆ) 1973
இ) 1993 ஈ) 1963 **விடை: அ) 1983**

**3. எழில்முதல்வன் அவர்களின் இயற்பெயர்............**

அ) சி. சுப்பிரமணியம் ஆ) பொற்கோ
இ) இளங்குமரனார் ஈ) மா.இராமலிங்கம் **விடை: ஈ) மா. இராமலிங்கம்**

**4. இனிக்கும் நினைவுகள், எங்கெங்கு காணினும், யாதுமாகி நின்றாய் முதலிய நூல்களை இயற்றியவர் ..........**

அ) சா. கந்தசாமி ஆ) எழில் முதல்வன்
இ) கமலாலயன் ஈ) ப. சிங்காரம் **விடை: ஆ) எழில் முதல்வன்**

**5. எழில் முதல்வனின் சாகித்ய அகாதெமி விருது பெற்ற நூல் ............**

அ) புதிய உரைநடை ஆ) இனிக்கும் நினைவுகள்
இ) எங்கெங்கு காணினும் ஈ) யாதுமாகி நின்றாய் **விடை: அ) புதிய உரைநடை**

**6. "தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்" – என்ற வரியில் "சிறுமலை" அமைந்துள்ள மாவட்டம் எது ?**

அ) விழுப்புரம் ஆ) மதுரை
இ) திண்டுக்கல் ஈ) சேலம் **விடை: இ) திண்டுக்கல்**

**7. எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்துகையில் அது எவ்வாறு அழைக்கப்படுகிறது ?**

அ) இணை ஒப்பு ஆ) முரண்பாடு மெய்ம்மை
இ) சொல்முரண் ஈ) உச்சநிலை **விடை: அ) இணை ஒப்பு**

---

### பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. ஒருபக்க அளவில் உரையாடல் எழுதுக.**

**சூழல் – வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல். (பெ.ஆ.க – 2)**

**விடை :**

**உறவினர் மகள் :** வணக்கம் ! தாங்கள் நலமா !
**நான் :** வணக்கம். நான் நலமாக உள்ளேன். வீட்டில் உள்ள அனைவரும் நலமா !
**உறவினர் மகள் :** அப்பா, அம்மா மற்றும் வீட்டில் உள்ள அனைவரும் நலம்
**நான் :** மிக அருமையாகத் தமிழ் பேசுகிறீர்களே ! தமிழ் மீது அவ்வளவு ஆர்வமா !

**உறவினர் மகள் :** தோழிகளோடு பேசிப் பேசித் தமிழ் ஓரளவு பேசத் தெரியும்.

**நான் :** ஓரளவா ? இல்லை. நன்றாகவே பேசுகிறீர்கள். இன்னும் தமிழின் அருமை பெருமைகளைப் பற்றித் தெரிந்துகொண்டீர்களென்றால் சிறந்த பேச்சாளர் ஆகிவிடுவீர்கள்.

**உறவினர் மகள் :** அப்படியா ! சரி சொல்லுங்கள் ! நானும் தெரிந்து கொள்கிறேன்.

**நான் :** தமிழ் மொழி மிகவும் பழமை வாய்ந்தது. சொல் வளம் மிக்க மொழி. தமிழில் ஒரே பொருளைத் தரக்கூடிய பல சொற்கள் உள்ளன. நீங்கள் மலரை 'Flower'என்று குறிப்பிடுகிறீர்கள். நாங்கள், பூ, அரும்பு, போது, அலர், வீ என பல சொற்களால் கூறுவோம்.

**உறவினர் மகள் :** ஆச்சரியமாக உள்ளதே ! மேலும் சிறப்புகள் ஏதாவது உள்ளனவா ?

**நான் :** ஒரு சொல்லுக்கு அதே பொருள் தரும் பல சொற்கள் தமிழில் உண்டு. சொல்லுதல் என்பதற்கு பேசுதல், விளம்புதல், செப்புதல், நவிலுதல், கூறல், இயம்புதல், மொழிதல் என்ற சொற்களும் தமிழில் உண்டு.

**உறவினர் மகள் :** ஆகா வியப்பாக உள்ளதே !

**நான் :** இன்னும் நிறைய சிறப்புகள் உண்டு. தமிழில் எண்ணற்ற அற இலக்கியங்கள், காப்பிய இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள், சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள் உள்ளன.

**உறவினர் மகள் :** தமிழ் மொழியானது செழுமையான மொழி என்று எனக்குத் தெரியும். ஆனால் நீங்கள் கூறுவதைப் பார்த்தால் உலகிலேயே செம்மையான சிறந்த மொழி தமிழ் மொழிதான் என்பதை அறியமுடிகிறது.

**நான் :** உண்மைதான். தமிழைப் பேசிப்பாருங்கள், தமிழ் நூல்களைப் படித்துப் பாருங்கள், அதன் இனிமையைச் சுவைத்துப் பாருங்கள், அப்போதுதான் தமிழின் சிறப்பை மேலும் உணர்ந்து கொள்வீர்கள்.

**உறவினர் மகள் :** நன்றி. வாய்ப்புக் கிடைக்கும் போது தமிழ்மொழி பற்றி இன்னும் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.

---

**நெடுவினா : ( கூடுதல் வினா)**

**1. உரைநடையின் அணிநலன்கள் என்ற தலைப்பிலுள்ள துணைப்பாடத்தைச் சுருக்கி எழுதுக.**

**விடை : உரைநடையின் அணிநலன்கள்**

**முன்னுரை :**

எழில் முதல்வன் எழுதிய புதிய உரைநடை நூலின் உரைநடையின் அணிநலன்கள் என்ற கட்டுரையின் சுருக்கம் இது. சங்கத் தமிழனும் இணையத் தமிழனும் இங்கு சந்திக்கிறார்கள்.

**சங்கத் தமிழரின் எதிர்பார்ப்பு :**

அகம், புறம் பாடவேண்டும். அகத்துள் உள்ளுரை இறைச்சி இருக்கிறதா ? தொல்காப்பியம் கூறும் உரைநடை இருக்கிறதா ? உணர்ச்சிகளைக் காட்ட உவமை இருக்கிறதா ? அஃறினைப் பொருள்கள் சொல்லுந போலவும் கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும் – உத்திகள் உள்ளதா ? மோனையும் எதுகையும் கொண்டு உரைநடை அமைகிறதா ? உச்சநிலை பற்றித் தெரியுமா ? என்று கேட்கிறார் சங்கப் புலவர்.

**இணையத் தமிழனின் மறுமொழி :**

தமிழ் இன்று கணிதத் தமிழ் ஆகிவிட்டது. தமிழ் இலக்கியம் அற இலக்கியங்களாகி, காப்பியங்களாகி, சிற்றிலக்கியங்களாகி, சந்தக் கவிதைகளாகி, புதுக்கவிதைகளாகி.... இப்போது நவீனக் கவிதைகளில் வந்து நிற்கிறது. உரைநடையோ சிறுகதை, கட்டுரை, புதினம் எனப் பல வடிவில் உள்ளது.

★ திருப்பரங்குன்ற அழகைப் பார்க்க இயற்கை பதித்த கண்ணாடிகள் இரு கண்மாய்கள் – நா.பார்த்தசாரதி கூறும் உவமை

★ முகத்தில் வியர்வை முத்துக்கள் – உருவகம்

★ களம்புகத் துடித்து நின்ற உனக்கு வெற்றிச் சாறு கிடைத்துவிட்டது – அறிஞர் அண்ணா

★ புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை – இணை ஒப்பு – வ. ராமசாமி

★ மரங்கள் கூப்பிடும். விருந்து வைக்கும்– இலக்கணை – திரு.வி.க

★ பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்குப் பயப்பட வேண்டும் ? – முரண்படு மெய்ம்மை

★ கலப்பில்லாத பொய் – சொல் முரண்

★ குடிசைகள் ஒருபக்கம், கோபுரங்கள் மறுபக்கம் – எதிரிணை இசைவு – ப.ஜீவானந்தம்

**முடிவுரை :**

எதுகையும் மோனையும் நிறைந்த படைப்புகள் எங்கள் மடிக்கணினிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. சங்க இலக்கியம் நம் பாட்டனார் தோப்பு. இடைக்கால இலக்கியம் நம் தந்தையார் தோட்டம். இக்கால இலக்கியம் நம் பூங்கா. கன்னித் தமிழ் கணினித் தமிழாய் வளரட்டும்.

## கற்பவை கற்றபின்

**1. நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம் பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.**

**விடை :**

| | இலக்கியத் தொடர் | இடம்பெற்றுள்ள நயம் |
|---|---|---|
| **எ.கா** | **உள்ளங்கை நெல்லிக்கனி போல** | **உவமை** |
| 1. | கண்ணை இமை காப்பது போல | உவமை |
| 2. | முதலைக் கண்ணீர் வடித்தான் | உருவகம் |
| 3. | பசுமரத்தாணி போல | உவமை |
| 4. | மலரும் மனமும் போல | உவமை |
| 5. | மனம் போன போக்கு | மரபு |
| 6. | வாழையடி வாழையாக | சீர்மோனை |
| 7. | விளையும் பயிர் முளையிலேயே தெரியும் | சீர் எதுகை |

**2. கொடுத்த தலைப்பில் பேசுவோம்.**

**தலைப்பு : நேரம்** **தவிர்க்கவேண்டிய சொல் : கடிகாரம்**

**(குறிப்பு )– ஒரு நிமிடம் பேசவேண்டும். தமிழ்ச்சொற்களை மட்டும் பயன்படுத்தவேண்டும். ஐந்து விநாடிகளுக்கு மேல் இடைவெளி இருத்தல்கூடாது. இதுபோன்று வேறு வேறு தலைப்புகளில் வகுப்பறையில் பேசிப்பழகுக.**

**விடை :**

★ கடலின் அலையும், நகரும் நேரமும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. யாரிடமும் வாங்க முடியாத, யாருக்கும் கொடுக்க முடியாத ஓர் உன்னத பொருள் நேரம்.

★ நேரம் தவறாமை ஒரு சின்ன விசயம் போலத் தோற்றமளித்தாலும் பாறையைப் பிளக்கும் உளி போன்ற வலிமை அதற்கு உண்டு.

★ நேரம் தவறாமல் இருக்கும் நபரை மற்றவர்கள்அதிகமாக மதிப்பார்கள். தனது வாழ்க்கையை சரியாய் வாழத்தெரிந்தவரே நேரம் தவறாமையைக் கடைப்பிடிப்பார். அவர் எப்பொழுதும் திறமைசாலியாகவும். தன்னம்பிகை உள்ளவராகவும் இருப்பார்.

★ உங்களுக்காக யாரும் காத்திருப்பதும் நல்லதல்ல. யாருடைய நேரத்தையும் நீங்கள் வீணடிப்பதும் நல்லதல்ல.

★ நேரம் தவறாமையை பின்பற்றாத மனிதர்கள் தங்கள் வாழ்க்கையின் எல்லா விசயங்களிலும் தாமதத்தையே தொடர்கிறார்கள். நல்லதோ கெட்டதோ எங்குமே எங்குமே அவர்களால் சரியான நேரத்தில் இருக்கவே முடிவதில்லை.

★ ஒரு பொருளை நீங்கள் பணம் கொடுத்து வாங்குவதில்லை. உண்மையில் நேரத்தைக் கொடுத்துத்தான் வாங்குகிறீர்கள்.

★ எனவே நேரத்தை வீணாக்காதீர்கள்.

கற்கண்டு

**இயல் 1. உ**

## எழுத்து, சொல்

**(இலக்கணம்)**

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" – இத்தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும், வினையாலணையும் பெயரும் முறையே........... (பெ.ஆ.க–3)**

அ) பாடிய ; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய
இ) கேட்டவர் ; பாடிய ஈ) பாடல் ; கேட்டவர்

**விடை: ஈ) பாடல் ; கேட்டவர்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது (பெ.ஆ.க – 1)**

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**விடை: ஈ) வினையாலணையும் பெயர்**

**3. வெஃகுவார்க்கில்லை, உரனசைஇ – இச்சொற்களில் உள்ள அளபெடைகள்........ (பெ.ஆ.க – 6)**

அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை
ஆ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை
இ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

**விடை: அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை**

**4. மொழியைத் தெளிவுறப் பேசவும் எழுதவும் உதவுவது ..............**

அ) கவிதை ஆ) இலக்கியம்
இ) சிறுகதை ஈ) இலக்கணம் **விடை: ஈ) இலக்கணம்**

**5. மொழியின் சிறப்புகளை அறிய துணைபுரிவது ............**

அ) நாடகம் ஆ) இலக்கியம்
இ) கதை ஈ) இலக்கணம் **விடை: ஈ) இலக்கணம்**

**6. சார்பெழுத்துகள்........... வகைப்படும்**

அ) ஒன்பது ஆ) பத்து
இ) பன்னிரண்டு ஈ) முப்பது **விடை: ஆ) பத்து**

**7. "அளபெடுத்தல்" என்பது ..............ஆகும்.**

அ) குறுகி ஒலித்தல் ஆ) நீண்டு ஒலித்தல்
இ) தவறி ஒலித்தல் ஈ) விடுபட்டு ஒலித்தல்

**விடை: ஆ) நீண்டு ஒலித்தல்**

**8. உயிரளபெடையின் வகை............**

அ) மூன்று ஆ) நான்கு
இ) இரண்டு ஈ) ஐந்து **விடை: அ) மூன்று**

**9. இசைநிறை அளபெடை என்பது .............**

அ) இன்னிசை அளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை
இ) ஒற்றளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

**விடை: ஆ) செய்யுளிசை அளபெடை**

**10. மெய்யெழுத்துகள் பத்தும் ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது............... ஆகும்.**
அ) உயிரளபெடை ஆ) செய்யுளிசை அளபெடை
இ) இன்னிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை
**விடை: ஈ) ஒற்றளபெடை**

**11. இரு திணைகளையும் ஐந்து பால்களையும் குறிப்பது ............**
அ) தனிமொழி ஆ) ஒற்றளபெடை
இ) சொல் ஈ) பொது மொழி
**விடை: இ) சொல்**

**12. மொழி ........... வகைப்படும்**
அ) ஐந்து ஆ) எட்டு
இ) ஏழு ஈ) மூன்று **விடை: ஈ) மூன்று**

**13."ஒரு மொழி ஒரு பொருளனவாம்" என நன்னூல் குறிப்பிடுவது............**
அ) பொதுமொழி ஆ) தொடர்மொழி
இ) தனிமொழி ஈ) வினையாலணையும் பெயர்
**விடை: இ) தனிமொழி**

**14."மலர் வீட்டுக்குச் சென்றாள்" என்பது............**
அ) தனிமொழி ஆ) பொது மொழி
இ) தொடர்மொழி ஈ) தொழிற்பெயர்
**விடை: இ) தொடர்மொழி**

**15.எட்டு என்பது ..............**
அ) தனிமொழி ஆ) தொடர்மொழி
இ) அளபெடை ஈ) பொது மொழி
**விடை: ஈ) பொது மொழி**

**16. "விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல்" என்பதற்குச் சான்று..........**
அ) நடத்தல் ஆ) கொல்லாமை
இ) ஆளல் ஈ) உரை **விடை: ஈ) உரை**

**17. தல், அல், அம், ஐ, கை விகுதியைப் பெற்று வருவது..........**
அ) தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்
இ) ஒற்றளபெடை ஈ) எதிர்மறை தொழிற்பெயர்
**விடை: அ) தொழிற்பெயர்**

**18. "நடத்தல்" என்ற சொல்லின் வினையடி எது ?**
அ) நடத்து ஆ) நட
இ) போ ஈ) நடந்து **விடை: ஆ) நட**

**19. எதிர்மறை தொழிற்பெயருக்கான சான்று ..........**
அ) நடத்தல் ஆ) நடை
இ) நடத்தை ஈ) நடவாமை **விடை: ஈ) நடவாமை**

**20. முதனிலை திரிந்த தொழிற்பெயருக்கு எடுத்துக்காட்டு............**
அ) பாடு ஆ) மடு
இ) சூடு ஈ) வடு **விடை: இ) சூடு**

**21. வினையாலணையும் பெயருக்கு எடுத்துக்காட்டு............**
அ) மலர் வீட்டுக்குச் சென்றாள் ஆ) கண்ணன் வந்தான்
இ) கொல்லாமை ஈ) பொறுத்தார் பூமியாள்வார்
**விடை: ஈ) பொறுத்தார் பூமியாள்வார்**

**22. "நடித்தல்" என்ற தொழிற்பெயரை வினையாலணையும் பெயராக மாற்றினால்.........**
அ) நடிக்காமை ஆ) நடிப்பு
இ) நடிப்பது ஈ) நடித்தவர் **விடை: ஈ) நடித்தவர்**

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "வேங்கை" என்பதைத் தொடர்மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக. (பெ.ஆ.க – 2)**

**விடை :**

★ "வேங்கை" என்பது தனிமொழியாகி பு**லியையும்**, ஒரு வகை **மரத்தையும்** குறிக்கும்.

★ வேம்பு + கை எனத் தொடர்மொழியாகப் பிரிந்து **வேகின்ற கை** எனப் பொருள் தரும்.

★ இது தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவதால் பொதுமொழியாகவும் இருக்கின்றது.

---

**2. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின்பிறர்மேல்**
**வடுக்காண் வற்றாகும் கீழ்" – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக. (பெ.ஆ.க–6)**

**விடை :**

**அளபெடையின் வகை :** உடுப்பதூஉம், உண்பதூஉம் – இன்னிசை அளபெடையாகும்.

**இலக்கணம் :** செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**3. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகள் இரண்டினை எழுதுக. (அ.மா.வி)**

**விடை :**

| வ.எண் | தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|---|
| 1. | வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும் | தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும் |
| 2. | காலம் காட்டாது | காலம் காட்டும் |
| 3. | படர்க்கைக்கே உரியது | மூவிடத்திற்கும் உரியது |
| 4. | எ.கா : பாடுதல், படித்தல் | எ.கா : பாடியவள், படித்தவர் |

---

**4. உயிரளபெடையை விளக்குக.**

**விடை :**

★ செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, மொழிக்கு முதலிலும், இடையிலும், இறுதியிலும் நிற்கின்ற உயிர் நெட்டெழுத்துக்கள் ஏழும் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும்.

★ அதைக்குறிக்க நெட்டெழுத்துக்களின் இனமான குற்றெழுத்துக்கள் அவற்றின் பின்னால் வரும்.

★ இவ்வாறு வருவது உயிரளபெடை எனப்படும்.

---

**5. உயிரளபெடையின் வகைகள் யாவை ?**

**விடை :**

1. செய்யுளிசை அளபெடை
2. இன்னிசை அளபெடை
3. சொல்லிசை அளபெடை

**6. செய்யுளிசை அளபெடை என்றால் என்ன ?**

**விடை :**

★ செய்யுளில் ஓசை குறையும்போது அதை நிறைவு செய்ய, நெட்டெழுத்துக்கள் அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்பர்.

★ இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.

**எ.கா :** **ஓஒ**தல் வேண்டும் – மொழி முதல் அளபெடை
உ**றாஅ**ர்க்கு உறுநோய் – மொழியிடை அளபெடை
நல்ல ப**டாஅ** பறை – மொழியிறுதி அளபெடை

**7. இன்னிசை அளபெடை என்றால் என்ன ?**

**விடை :**

★ செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது இன்னிசை அளபெடை எனப்படும்.

**சான்று :** கெடுப்ப**தூஉம்** கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே
எடுப்ப**தூஉம்** எல்லாம் மழை

**8. சொல்லிசை அளபெடை – விளக்குக.**

**விடை :**

★ செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் வினை எச்சச்சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை எனப்படும்

**சான்று :** உரனசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்
வரனசைஇ இன்னும் உளேன்.

நசை – விருப்பம் ; விரும்பி என்னும் பொருள் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. பெயர்ச்சொல் வினை அடையாக மாறியது.

**9. ஒற்றளபெடை என்றால் என்ன ?**

**விடை :**

★ செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, மெய்யெழுத்துக்களான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும் ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை எனப்படும்.

**சான்று :** எஃஃகிலங்கிய கையாய் இன்னுயிர்
எங்ங்இறைவன்

**10. மொழிகளின் வகைகள் யாவை ?**

**விடை :**

★ தனிமொழி

★ தொடர்மொழி

★ பொதுமொழி – என மொழி மூன்று வகையாக அமையும்.

**11. தொழிற்பெயரை விளக்குக.**

**விடை :**

★ ஒரு வினை அல்லது செயலைக்குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.

**எ.கா :** ஈதல், நடத்தல், வருதல், படித்தல்.

**12. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன ?**

**விடை :**

★ விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற்பெயர் எனப்படும்.

**சான்று :** தட்டு, உரை, அடி – இச்சொற்கள் தட்டுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும் போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.

**13. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன ?**

**விடை :**

★ விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர் முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் எனப்படும்.

**சான்று :**

| தொழிற்பெயர் | முதனிலைத் தொழிற்பெயர் | முதனிலைத்திரிந்த தொழிற்பெயர் |
|---|---|---|
| கெடுதல் | கெடு | கேடு |
| சுடுதல் | சுடு | சூடு |

எ.கா : பேறு

**14. எதிர்மறைத் தொழிற்பெயர் – விளக்குக.**

**விடை :**

★ எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் எனப்படும்.
**சான்று :** நடவாமை, கொல்லாமை

**15. வினையாலணையும் பெயரை விளக்குக.**

**விடை :**

★ ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும்.

★ அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.
**சான்று :** வந்தவர் அவர்தான், பொறுத்தவர் பூமியாள்வார்.

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது–** இவைஅனைத்தையும் யாம் அறிவோம். அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்கும் தெரியும்.

இக்கூற்றில் வண்ண எழுத்துக்களில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.

**விடை :**

**தொழிற்பெயர் :**

**அறிந்தது** – அறிதல் ; **தெரிந்தது** – தெரிதல்
**புரிந்தது** – புரிதல் ; **பிறந்தது** – பிறத்தல்

**எதிர்மறை தொழிற்பெயர் :**

**அறியாதது** – அறியாமை ; **தெரியாதது** – தெரியாமை;
**புரியாதது** – புரியாமை **பிறவாதது** – பிறவாமை

## கற்பவை கற்றபின்

**1. தேன், நூல், பை, மலர், வா – இத்தனி மொழிகளுடன் சொற்களைச் சேர்த்து தொடர் மொழிகளாக்குக.**

**விடை :**

**1. தேன் :** தேன் சிறந்த மருந்தாகும்
**2. நூல்:** நூல் வாங்கிப் படித்தேன்
**3. பை:** பை எடுத்து வா
**4. மலர்:** மலர்விழி மலர் பறித்தாள்
**5. வா:** வா போகலாம்

**2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.**
**காண், சிரி, படி, தடு**

**எ.கா :** காண் : காட்சி, காணுதல், காணல், காணாமை

**விடை:**

சிரி : சிரிப்பு, சிரித்தல், சிரியாமை, சிரிப்பான்
படி : படிப்பு, படித்தல், படியாமை, படிப்பான்
தடு : தடுப்பு, தடுத்தல், தடாமை, தடுப்பான்

**3. தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

**விடை :**

**அண்ணன்** : எங்கே செல்கிறாய் ? (தொடர் மொழி)
**தம்பி** : கடைக்கு (தனிமொழி)
**அண்ணன்** : கடையில் என்ன வாங்குகிறாய் ? (தொடர் மொழி)
**தம்பி** : தேங்காய் வாங்குகிறேன் (தொடர் மொழி)
**அண்ணன்** : எதற்கு ? (தனிமொழி)
**தம்பி** : கோயிலுக்குச் செல்வதற்கு வாங்குகிறேன் (தொடர் மொழி)
**அண்ணன்** : எந்தக் கோயிலுக்குச் செல்கிறாய் ? (தொடர் மொழி)
**தம்பி** : திருச்செந்தூர் (தனி மொழி)

**4. மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்.**

**– இத் தொடர்களில் உள்ள வினை முற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற் பெயர்களாக மாற்றுக.**

**விடை :**

| **வினைமுற்று** | **தொழிற்பெயர்** |
|---|---|
| அழைக்கும் | அழைத்தல் |
| ஏறுவேன் | ஏறுதல் |
| அமர்வேன் | அமர்தல் |
| பார்ப்பேன் | பார்த்தல் |
| எய்தும் | எய்துதல் |

**5. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் – இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.**

**விடை :**

1. கட்டு – முதனிலைத் தொழிற்பெயர்
2. சொட்டு – முதனிலைத் தொழிற்பெயர்
3. வழிபாடு – முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
4. கேடு – முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
5. கோறல் – விகுதி பெற்ற தொழிற்பெயர்

**இயல் 1. ஊ**

## மொழியை ஆள்வோம்

**அ) படித்துச்சுவைக்க :**

**பாடலில், மரம் என்னும் சொல், இடத்திற்கேற்பப் பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்துச் சுவைக்க.**



*"மரமது[1] மரத்தில்[2] ஏறி*
*மரமதைத்[3] தோளில் வைத்து*
*மரமது[4] மரத்தைக்[5] கண்டு*
*மரத்தினால்[6] மரத்தைக்[7] குத்தி*
*மரமது [8]வழியே சென்று*
*வளமனைக் கேகும் போது*
*மரமது[9] கண்ட மாதர்*
*மரமுடன்[10] மரம்[11] எடுத்தார்.*

**தனிப்பாடல் திரட்டு**
**–சுந்தரக் கவிராசர்**

| 1 | 2 | 3 | 4, 9 | 5, 7 | 6 | 8 | 10 | 11 |
|---|---|---|---|---|---|---|---|---|
| அரசன் (அரச மரம்) | மா குதிரை (மாமரம்) | வேல் (கரு வேலம்) | அரசன் | புலி (வேங்கை) | வேல் | காட்டு வழி | ஆல் (ஆல மரம்) | அத்தி (அத்திமரம்) ஆல் + அத்தி = ஆரத்தி |

**விடை: பாடலின் பொருள் :**

" அரசன் குதிரையின் மீது ஏறி
வேலைத் தோளில் வைத்து
அரசன் புலியைக் கண்டு
வேலினால் புலியைக் குத்தி
காட்டு வழியே சென்று
வளமனைக் கேட்கும் போது
அரசனைக் கண்ட மாதர்
ஆரத்தி எடுத்தார்"

---

**ஆ) மொழிபெயர்ப்பு:**

**1.** If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - **Nelson Mandela (பெ.ஆ.க– 2)**

**விடை:** நீங்கள் ஒரு மொழியில் மனிதரிடம் பேசினால், அது அவரின் அறிவைச் சென்றடைவதால் அவர் புரிந்து கொள்கிறார். நீங்கள் அவருடைய சொந்த மொழியில்பேசினால், அது அவருடைய இதயத்தைத் தொடும். **– நெல்சன் மண்டேலா**

---

**2.** Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going - **Rita Mae Brown (பெ.ஆ.க– 2)**

**விடை:** மொழி என்பது பண்பாட்டின்வழிகாட்டி. அது மக்கள் எங்கே இருந்து வந்தார்கள், எங்கே சென்றார்கள் என்பதைக் கூறும். **– ரீட்டா மே.பிரவுன்**

---

**இ) சந்தக்கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக. (பெ.ஆ.க – 5)**

***"தேணிலே ஊரிய செந்தமிழின் – சுவை***
***தேரும் சிலப்பதி காறமதை***
***ஊனிலே எம்முயிர் உல்லலவும் – நிதம்***
***ஓதி யுனர்ந்திண் புருவோமே"*** – கவிமணி தேசிக விநாயகனார்

**விடை:**

*"தே<u>னி</u>லே ஊ<u>றி</u>ய செந்தமிழின் – சுவை*
*தே<u>று</u>ம் சிலப்பதி கா<u>ர</u>மதை*
*ஊனிலே எம்முயிர் உ<u>ள்ளள</u>வும் – நிதம்*
*ஓதி யு<u>ண</u>ர்ந்தி<u>ன்</u> பு<u>று</u>வோமே"*

---

**ஈ) 1) கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக. (குவியல், குலை, மந்தை, கட்டு)**

**விடை :**

| | |
|---|---|
| குவியல் : கற்குவியல் | கட்டு : புற்கட்டு |
| குலை : பழக்குலை | ஆடு : ஆட்டு மந்தை |

---

**கூடுதல் வினா :**

**1. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கின்றவரை அழைத்து வாருங்கள் – இத்தொடர் (அ.மா.வி)**

அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
இ) செய்தித் தொடர் ஈ) கலவைத் தொடர் **விடை : ஈ) கலவைத்தொடர்**

**2. கல், பழம் – இச்சொற்களுக்கான கூட்டப்பெயர்களை எழுதுக. (அ.மா.வி)**

**விடை :** கல் – கற்குவியல், பழம் – பழக்குலை

**3. கல், ஆடு, கீரை, மக்கள் – இச்சொற்களின் கூட்டப்பெயர்களை எழுதுக. (பெ.ஆ.க – 4)**

**விடை :** கல் : கற்குவியல், ஆடு : ஆட்டு மந்தை, கீரை : கீரைக் கட்டு, மக்கள் : மக்கள் கூட்டம்

---

**உ) வினைமுற்றை வினையாலணையும் பெயர்களாக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.**

**எ.கா : 1. கலையரங்கத்தில் எனக்காக காத்திருக்கிறார் அவரை அழைத்து வாருங்கள்.**

**விடை :** கலையரங்கத்தில எனக்காகக் **<u>காத்திருக்கிறவரை</u>** அழைத்து வாருங்கள்

**2. ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.**

**விடை :** ஊட்டமிகு உணவு **<u>உண்டவர் நீண்ட</u>** வாழ்நாள் பெற்றார்

**3. நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.**

**விடை :** நேற்று என்னைச் **<u>சந்தித்தவர்</u>** என் நண்பர்

**4. பொது அறிவு நூல்களைத் தேடிப்படித்தார். போட்டித் தேர்வில் வென்றார்.**

**விடை :** பொது அறிவு நூல்களைத் **<u>தேடிப்படித்தவர்</u>** போட்டித் தேர்வில் வென்றார்.

---

**ஊ) தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.**

**1. உலகில்** வாழும் **மக்களில்** சிலர் **கனி**யிருக்கக் காய் புசித்தலைப் போல, இன்சொல் இருக்க, வன்சொல் பேசி **இன்னற்** படுகின்றனர்.

**விடை : <u>புவியில்</u>** வாழும் **<u>மனிதர்களுள்</u>** சிலர் **<u>பழம்</u>** இருக்கக் காய் **<u>உண்ணு</u>** தலைப் போல, இன்சொல் இருக்க, வன்சொல் பேசி **<u>துன்பப்</u>** படுகின்றனர்.

---

**2.** வள்ளல் குமணன் **வறுமை**யால் வாடிவந்த **புலவனுக்குத்** தனது தலையைக் **கொடுத்து,** மங்காப் **புகழ்** பெற்றான்.

**விடை :** வள்ளல் குமணன் **<u>ஏழ்மை</u>**யால் வாடிவந்த **<u>கவிஞனுக்குத்</u>** தனது தலையைக் **<u>அளித்து,</u>** மங்காப் **<u>பெருமை</u>** பெற்றான்.

---

**3.** நளனும் அவனுடைய **துணைவியும்** நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள், மழை **முகில்** கண்ட **மஞ்ஞை** போலக் **களி** கொண்டனர்.
**விடை :** நளனும் அவனுடைய **மனைவி**யும் நிடத நாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள், மழை **மேகம்** கண்ட **மயில்** போல **மகிழ்ச்சி** கொண்டனர்.

---

**4. சோலையிற்** பூத்த மணமலர்களில் **சுரும்புகள்** மொய்த்துப் பண்பாடி **மது**வுண்டன.
**விடை : பூஞ்சோலையில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** மொய்த்துப் பண்பாடித் **தேன்** உண்டன.

---

**5.** பசுப்போலச் **சாந்தமும் புலி**போல **தீரமும் யானை** போல் உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.
**விடை:**
**ஆவினை**ப்போல **அமைதியும் வேங்கை** போலச் **சீற்றமும் வேழம்** போல் உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.

---

**கூடுதல் வினா :**
**6. சோலையில் பூத்த மலர்களில் சுரும்புகள் மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன. இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான வேறு சொற்களை எழுதுக. (பெ.ஆ.க–1)**
அ) பூஞ்சோலை – அரும்புகள் ஆ) மலை–எறும்புகள் – தேன்
இ) பூஞ்சோலையில் – வண்டுகள்–தேன் இ) கானகம் – வண்டுகள் – நீர்
**விடை : இ) பூஞ்சோலையில் – வண்டுகள்–தேன்**

---

**7. இலையுதிர் காலம் – சருகாயின !**
**மழைக்காலம்– தழைத்தன !**
**சருகுகளோ செழுமையான உரங்களாயின !**
**புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை மோனைச் சொற்களை இட்டு நிரப்புக. (பெ.ஆ.க–4)**
அ) மரங்களெல்லாம், கிளைபரப்பின ஆ) காடெல்லாம், முளைத்தன
இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம் இ) மலையெல்லாம், மரங்களெல்லாம்
**விடை : இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்**

---

## எ. கட்டுரை எழுதுக

**1.** குமரிக் கடல் முனையையும், வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில் சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பாணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள்.
**இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 1)**
**விடை :** **சான்றோர் வளர்த்த தமிழ்**
**முன்னுரை :**
*"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்*
*தமிழ் கூறு நல்லுலகம்"* என்று தொல்காப்பியர் தமிழகத்தின் நில எல்லையைக் குறிப்பிடுகிறார். முதல் மாந்தன் பேசிய மொழியான தமிழின் தொன்மை ஆய்வுக்குட்பட்டது. உலகின் பல மொழிகளுக்குத் தாய்மொழியாக இருப்பதும் தமிழே. அத்தமிழை வளர்க்க முயன்ற சான்றோர்கள் பலரை வளர்த்தது தமிழ். தமிழால் சான்றோரும் சான்றோரால் தமிழும் வளர்ந்ததை இலக்கிய உலகு நன்கு அறியும்.
**வள்ளுவரும் ஔவையும் :**
உலகப் பொதுமறை தந்த வள்ளுவர் தமிழை உலகறியச் செய்தார். மூன்றடியில் உலகளந்த இறைவன் போல ஈரடியில் உலகளந்த புலவன் வள்ளுவரே. பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட குறள் தமிழின் புகழைப் பறைசாற்றும். ஓரடியில் ஆத்திச்சூடி தந்த ஔவையும் தமிழின் சிறப்பை

வரிசைப்படுத்தினார். தமிழ் வளர்க்க ஔவை வேண்டி நெல்லிக்கனி தந்த அதியமானும் தமிழ் வளர்த்தவரே.

**இலக்கியத் தமிழ் :**

ஐம்பெருங்காப்பியங்களும், ஐஞ்சிறு காப்பியங்களும், இதிகாசங்களும் கண்டவர்கள் தமிழின் இலக்கிய வாழ்வை மேம்படுத்தினர். கம்பன்தந்த உவமையும் சொல்லாடலும் தமிழின் பெருமைக்குச் சான்றுகள். அறநூல்களை அள்ளித் தந்த சான்றோர் அகமும் புறமும் படைத்து தமிழின், தமிழரின், தமிழ்நாட்டின் உயர்வை உலகிற்கு உணர்த்தினர்.

**சிற்றிலக்கியத்தில் தமிழ் :**

பரணிபாடிய செயங்கொண்டார் போன்றோரும், உலா பாடிய ஒட்டக்கூத்தர் போன்றோரும், குறவஞ்சி பாடிய திரிகூடராசப்பர் போன்றோரும், தூது தந்த புலவர்களும், கலம்பகம் தந்த புலவர்களும், பிள்ளைத் தமிழ் தந்த புலவர்களும், பள்ளு பாடிய 96 வகைச் சிற்றிலக்கியங்களை வழங்கிய பலரும் தமிழை வளர்த்தனர்.

**பிறநாட்டார் :**

வீரமாமுனிவர் சதுரகராதி தந்து தமிழால் பெருமை பெற்றார். போப் தமிழின் சிறப்புகளை மொழிபெயர்ப்பின் மூலம் உலகறியச் செய்தார். பிறநாட்டார் பலர் தமிழைப் போற்றி தமிழால் அறியப்பெற்றனர். பிற மொழி பேசுபவர்களும் தமிழை அறிய ஆர்வம் கொண்டனர்.

**மொழிப்பற்றாளர்கள் :**

அகரமுதலி வெளியிட்ட தேவநேயப் பாவாணரும் பல நூல்களைப் பதிப்பித்த தமிழ்த் தாத்தா உ.வே.சாமிநாதரும், மொழித் தியாகிகளும், பாரதியார், பாரதிதாசன், சுரதா வழிவந்த பரம்பரைக் கவிஞர்களும் மொழிப்பற்றோடு தமிழை வளர்த்து அழியாப்புகழ் அடைந்தனர்.

**முடிவுரை :**

அன்று முதல் இன்றுவரை தமிழை வளர்க்கச் சான்றோர் பலர் தோன்றியுள்ளனர். தமிழை வளர்க்க எண்ணிய அனைத்துச் சான்றோர்களையும் தமிழ் வளர்த்தது என்பதே மறுக்க முடியாத உண்மையாகும்.

தமிழ் வளர்ப்போம் ! புகழ் பெறுவோம் !!

---

**கூடுதல் வினா**

**2. தட்டச்சர் பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப்பட்டியல் ஒன்றை நிரப்புக. (அ.மா.வி)**

| தன்விவரப்பட்டியல் | | |
|---|---|---|
| 1. பெயர் | : | **த. பொற்செல்வி** |
| 2. பாலினம் | : | **பெண்** |
| 3. பிறந்த தேதி மற்றும் வயது | : | **11.03.2006** |
| 4. தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | **தமிழரசன்** |
| 6. வீட்டு முகவரி | : | **5, மகால் 5 வது தெரு, மதுரை.** |
| (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | | **625009** |
| 7. தொலைபேசி / அலைபேசி எண் | : | **94430 46662** |
| 8. பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மதிப்பெண் | : | **450 / 500** |
| 9. தாய்மொழி | : | **தமிழ்** |
| 10. பயின்ற மொழிகள் | : | **தமிழ் / ஆங்கிலம்** |
| 11. தட்டச்சு | : | **தமிழ், ஆங்கிலம்** |
| 12. கணினி தகுதி | : | **டி.சி.எ** |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறேன். தங்கள் நிறுவனத்தில் <u>**தட்டச்சர்**</u> பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதி அளிக்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
**த.பொற்செல்வி**

## ஏ. நயம் பாராட்டுக

*தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே*
*தென்னாடு விளங்குறத் திகழுந் தென் மொழியே*
*ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே*
*உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே*
*வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே*
*மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே*
*தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே*
*தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே*

**– கா. நமச்சிவாயர்**

**விடை :**

**முன்னுரை :**

கா. நமச்சிவாயர் எழுதிய இப்பாடலில் எதுகை, மோனை,அணி, இயைபு நயங்கள் உள்ளன, அவற்றைப் பின்வரும் பகுதி விளக்குகிறது.

**திரண்ட கருத்து :**

தேனினும் இனிய செந்தமிழ் மொழியாகிய நீ, தென்நாடு ஒளிபெற, ஊனினும் ஒளிர்வுற்று வளரும் ஒண்டமிழ் மொழியாய், உணர்வினுக்கு உணரும் மொழியாய், வானினும் ஓங்கிய தனித்தமிழ் மொழியாய் நிற்கிறாய். இனியும் தழைத்து ஓங்கி வளர்ந்து தண்டமிழ் மொழியாய் நிற்பாய்.

**மையக்கருத்து :**

செந்தமிழ் மொழி தண்டமிழ் மொழியாய் தழைத்து வளரும்.

**மோனை நயம் :**

*காட்டுக்கு அழகு யானை*

*கவிதைக்கு அழகு மோனை* – ஒவ்வொரு அடியிலோ, சீரிலோ முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை எனப்படும். இப்பாடலில் மோனை பயின்றுள்ளது. **தே**னினும்–**தெ**ன்னாடு, **ஊனி**னும்–**உண**ர்விலும், **தா**னனி – **த**ழைத்தினி

**எதுகை நயம் :**

*எதுகை கொடுக்காவிட்டாலும்*

*எதுகை கை கொடுக்கும்* – ஒவ்வொரு அடியிலோ, சீரிலோ, சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை எனப்படும். **தேனி**னும் – **ஊனி**னும் – **வானி**னும்.

**இயைபு நயம் :**

"மொழியே" என்று ஒவ்வொரு அடியும் முடியுமாறு கா. நமச்சிவாயப் புலவர் பாடி இருப்பது பாராட்டத்தக்கது.

**அணி நயம் :**

*கோவிலுக்கு அழகு மணி*

*பாடலுக்கு அழகு அணி* – இப்பாடல் உயர்வு நவிற்சி அணியில் அழகுற எழுதப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது.

**முடிவுரை:**

இந்நயமிகு பாடல்போல் நாமும் நயமிகு பாடல்களைப் படைத்துத் தமிழன்னைக்கு மணிமகுடம் சூட்டுவோம் !

## இயல் 1. எ

## மொழியோடு விளையாடு

**அ) 1. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக. (பெ.ஆ.க – 1)**
**தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ**
**எ.கா : பூமணி**

**விடை:**

| | | | |
|---|---|---|---|
| 1. மணிமேகலை | 2. செய்வான் | 3. பொன்செய் | 4. வான்மழை |
| 5. மணிவிளக்கு | 6. பொன்விலங்கு | 7. பூவிலங்கு | 8. தேன்மழை |
| 9. பூமழை | 10. பொன் மழை | 11. பொன்மணி | 12. செய்தேன் |

**கூடுதல் வினா :**

**2. சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக. (பெ.ஆ.க – 1)**
**(தேன், மணி, மழை, மேகலை)**

**விடை:**

1. தேன் மழை ; 2. மணிமேகலை

**ஆ) குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத் தொடர்கள் அமைக்க.**
**குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறை நாள்**
**எ.கா : குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா ?**

**விடை:**

1. சுவைக்காத இளநீரும் இளநீராகுமா ?
2. காப்பியச் சுவையில்லாக் கதையும் உண்டா ?
3. மனிதகுல மேன்மையை அறியாத மனிதருண்டோ ?
4. விடுமுறைநாள் இல்லாத வாரம்தான் உள்ளதா ?

**இ) 1. எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக**

**விடை :**

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை | நான்கு | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | எட்டு | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் | ஐந்து | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | நான்கு, இரண்டு | ச , உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது பரணி | ஆயிரம் | கூ |

**கூடுதல் வினா :**

**2.** *ஆலும் வேலும் பல்லுக்குறுதி,*
*நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி* – **இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக. (பெ.ஆ.க –2)**

அ) ஆலமரம், வேப்பமரம் – ௫, ௧ ஆ) ஆலமரம், வேலமரம் – ௪, ௨
இ) அரசமரம், வேங்கை மரம் – ௧, ௨ ஈ) வேப்பமரம், ஆலமரம் – ௪, ௬

**விடை : ஆ) ஆலமரம், வேலமரம் – ௪, ௨**

**ஈ) அகராதியில் காண்க :**

**அடவி, அவல், சுவல், செறு, பழனம், புறவு**

**விடை :**

**அடவி** – காடு, திரள், சோலை, மலைசேர்ந்த நாடு, மிகுதி
**அவல்** – பள்ளம், விளைநிலம், குளம்.
**சுவல்** – மேட்டுநிலம், தோள், எழுத்து, பிடர், மேலிடம், குதிரை.
**செறு** – வயல், பாத்தி, செய், கோபி, குளம்
**பழனம்** – மருதநிலம், வயல், பொய்கை, பொதுநிலம்.
**புறவு** – புறா, விலங்கின் கூட்டம், முல்லைக் கொடி, காடு.

**உ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக: (பெ.ஆ.க – 1)**

**விடை :**



செவியைத் திறந்து நல்லதைக் கேட்போம்
கண்ணைத் திறந்து அழகை ரசிப்போம்
வாயைத் திறந்து நல்லவற்றைப் பேசுவோம்
மூன்றையும் பயன்படுத்தி முழுமையான வாழ்வு வாழ்வோம்.

## ஊ. செயல்திட்டம்

**நீங்கள் வாழும் பகுதியிலுள்ள எவையேனும் ஐந்து பயிர்வகைச்சொற்களுக்கான படத் தொகுப்பு உருவாக்குக.**

**விடை :**



**1. நெல்**



**2. திணை**



**3. கரும்பு**



**4. கேழ்வரகு**



**5. கம்பு**

## எ. நிற்க அதற்குத் தக

| இன்சொல் | தீயசொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வாழும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது ? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது ?**
**விடை :**

1. இன்சொல் பேசுவதே எனது வழியாகும்.
2. இன்சொல் பேச முடியாதபோதும், வன்சொல் பேசிடாதே என நண்பருக்கு வழிகாட்டுவேன்.

## ஏ. கலைச்சொல் அறிவோம்

Vowel – உயிரெழுத்து
Consonant – மெய்யெழுத்து
Homograph – ஒப்பெழுத்து
Monolingual – ஒருமொழி
Conversation – உரையாடல்
Discussion – கலந்துரையாடல்

**கூடுதல் வினா :**
**கலைச்சொல் தருக : (பெ.ஆ.க – 1)**
1. அ) Homograph – ஒப்பெழுத்து
ஆ) Vowel – உயிரெழுத்து

## ஐ. அறிவை விரிவு செய்

1. நாம் ஏன் தமிழ் காக்கவேண்டும் – **முனைவர் சேது மணியன்**
2. தவறின்றித் தமிழ் எழுதுவோம் – **மா. நன்னன்**
3. பச்சை நிழல் – **உதயசங்கர்**

**இயல் இரண்டு**
**இயற்கை,**
**சுற்றுச்சூழல்**

## இயல் 2. உயிரின் ஓசை

**உரைநடை உலகம்**

**இயல் 2. அ**

## கேட்கிறதா என் குரல்

**(உரைநடை)**

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. செய்தி 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**

**செய்தி 2 : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.**

**செய்தி 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள் ! (பெ.ஆ.க–5)**

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

**விடை: ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி**

**2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க. (பெ.ஆ.க – 3)**

**அ) கொண்டல் – 1. மேற்கு**
**ஆ) கோடை – 2. தெற்கு**
**இ) வாடை – 3. கிழக்கு**
**ஈ) தென்றல் – 4. வடக்கு**

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2
இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2 **விடை: ஆ) 3, 1, 4, 2**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" –இப்பழமொழி உணர்த்தும் சரியான பொருள். (பெ.ஆ.க – 6)**

அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்
ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்
இ) உரிய காலத்தில் காற்றைவிட வேகமாகச் செயல்பட வேண்டும்
ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேடவேண்டும்.

**விடை: ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்**

**4. கிழக்கு என்பதற்கு ........ என்னும் பெயருமுண்டு.**

அ) குணக்கு ஆ) குடக்கு
இ) வாடை ஈ) தென்றல் **விடை: அ) குணக்கு**

**5. மேற்கிலிருந்து வீசும் வெப்பக்காற்று ........**

அ) வாடை ஆ) குடக்கு
இ) குணக்கு ஈ) கொண்டல் **விடை: ஆ) குடக்கு**

**6. பனிப்பகுதியில் இருந்து வீசுவதால் வாடை ........ எனவும் அழைக்கப்படுகிறது.**

அ) மழைக்காற்று ஆ) வெப்பக்காற்று
இ) ஊதைக்காற்று ஈ) தென்றல்காற்று **விடை: இ) ஊதைக்காற்று**

**7. தெற்கிலிருந்து வீசும் காற்று ............. எனப்படும்.**
அ) கொண்டல் ஆ) கோடை
இ) வாடை ஈ) தென்றல்
**விடை: ஈ) தென்றல்**

**8. ஹிப்பாலஸ் பருவக்காற்றின் வழியில் ................கடல் வணிகம் பெருகிற்று**
அ) அரேபிய ஆ) உரோம
இ) யவன ஈ) சிங்கள
**விடை: இ) யவன**

**9. பருவக்காற்றின் பயனை உலகிற்கு உணர்த்திய கிரேக்க மாலுமி............**
அ) யுவான் ஆ) மெர்சிஸ்
இ) ஹிப்பாலஸ் ஈ) ஈனிட்
**விடை: இ) ஹிப்பாலஸ்**

**10. உலகக் காற்று நாளாகக் கொண்டாடப்படும் நாள் எது ?**
அ) மே 15 ஆ) ஜுன் 15
இ) ஜுலை 15 ஈ) செப்டம்பர் 15 **விடை: ஆ) ஜுன் 15**

**11. உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ......... இடம் பெற்றுள்ளது.**
அ) நான்காம் ஆ) ஐந்தாம்
இ) ஆறாம் ஈ) ஏழாம்
**விடை: ஆ) ஐந்தாம்**

**12. இந்தியக் காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் ......... இடம் வகிக்கிறது.**
அ) முதலாவது ஆ) இரண்டாவது
இ) மூன்றாவது ஈ) நான்காவது
**விடை: அ) முதலாவது**

**13. குளோரோ புளோரோ கார்பனின் ஒரு மூலக்கூறு ............. ஓசோன் மூலக்கூறுகளைச் சிதைத்துவிடும்.**
அ) ஒரு ஆயிரம் ஆ) பத்து ஆயிரம்
இ) ஒரு இலட்சம் ஈ) முப்பது ஆயிரம்
**விடை: இ) ஒரு இலட்சம்**

**14.உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்று கூறியவர் .........**
அ) கம்பர் ஆ) ஔவையார்
இ) தொல்காப்பியர் ஈ) திருவள்ளுவர் **விடை: இ) தொல்காப்பியர்**

**15.மூச்சுப்பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று திருமந்திரத்தில் கூறியவர்...........**
அ) கம்பர் ஆ) திருமூலர்
இ) ஔவையார் ஈ) ஐயூர் முடவனார் **விடை: ஆ) திருமூலர்**

**16.வாயுதாரணை எனும் அதிகாரத்தைப் படைத்தவர்.............**
அ) வெண்ணிக்குயத்தியார் ஆ) சொக்கநாதப்புலவர்
இ) திருமூலர் ஈ) பிற்கால ஔவையார் **விடை: ஈ) பிற்கால ஔவையார்**

**17."பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது"என்னும் நூலை எழுதியவர்.............**
அ) கம்பர் ஆ) ஔவையார்
இ) வில்லிப்புத்தூரார் ஈ) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்
**விடை: ஈ) பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்**

**18."நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி நடந்த இளந்தென்றலே" எனப் பாடியவர்.......**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) வாணிதாசன் **விடை: இ) கண்ணதாசன்**

**19."நளிஇரு முந்நீர் நாவாய் ஓட்டி"– எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்ற நூல்...........**
அ) அகநானூறு ஆ) புறநானூறு

இ) குறுந்தொகை ஈ) பரிபாடல் **விடை: ஆ) புறநானூறு**

**20. "வளிமிகின் வலி இல்லை" எனப்பாடியவர்...........**

அ) ஐயூர் முடவனார் ஆ) வெண்ணிக்குயத்தியார்

இ) ஔவையார் ஈ) திருமூலர் **விடை: ஆ) ஐயூர் முடவனார்**

**21. "வளி மிகின் வலி இல்லை" என்னும் புறநானூற்றுப் பாடல் எத்தனையாவது பாடல் ?**

அ) 41 ஆ) 51

இ) 61 ஈ) 71 **விடை: ஆ) 51**

**22. கடுங்காற்று மணலைக் கொண்டுவந்து சேர்க்கிறது எனக்குறிப்பிட்டவர் .............**

அ)ஔவையார் ஆ) கம்பர்

இ) மதுரை இளநாகனார் ஈ) கூலவாணிகனார்

**விடை: இ) மதுரை இளநாகனார்**

---

**பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)**

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. ★ நமக்கு உயிர் காற்று**

**★ காற்றுக்கு வரம் மரம் – மரங்களை வெட்டி எறியாமல் நட்டுவளர்ப்போம்**

**இது போன்று உலகக் காற்றுநாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 1)**

**விடை :**

1. காற்றை பூமிக்குள்புதைக்காதே
2. காற்றுத் தோழரான மரத்தை வெட்டாதே

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. காற்றின் ஆற்றல், வேகம் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன ? (பெ.ஆ.க–2)**

**விடை :**

★ "வளி மிகின் வலி இல்லை" (புறம் –51) என்று ஐயூர் முடவனார் காற்றின் ஆற்றலைச் சிறப்பித்துள்ளார்.

★ மதுரை இளநாகனார் (புறம் – 55) கடுங்காற்று, மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது என்று காற்றின் வேகத்தைச் சிறப்பித்துள்ளார்.

---

**3. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறித்து எழுதுக. (பெ.ஆ.க–5)**

**விடை :**

★ கி.பி (பொ.ஆ) முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸ் என்னும் பெயர்கொண்ட கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார்.

★ அதுமுதல் யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன.

★ அந்தப் பருவக்காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பாலஸ் என்பதையே சூட்டினார்கள்.

★ ஹிப்பாலஸ் பருவக்காற்றின் வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று.

---

**4. காற்றின் ஆற்றலைப் புலவர்கள் எவ்வாறு வருணித்துள்ளனர் ?**

**விடை :**

★ தொல்காப்பியர் உலகம் என்பது ஐம்பெரும் பூதங்களால் ஆனது என்கிறார். அவற்றுள் காற்றையும் ஒன்றாய்ச்சேர்த்து வருணித்துள்ளார்.

★ ஔவையார்– வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்
ஆயுள் பெருக்கம் உண்டாம் – ஔவை குறள் –49

என்று வருணித்துள்ளார்.

**5. காற்றைக் குறித்து இளங்கோவடிகளின் கருத்து யாது ?**
**விடை :**

★ தென்றலாகிய காற்று, பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளிவரும் பொழுது கூடவே வண்டுகளையும் அழைத்து வருவதால்,

"வண்டொடு புக்க மணவாயத் தென்றல்" – என்று இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் நயம்படக் கூறியுள்ளார்.

---

**6. வீசும் தன்மைக்கேற்ப காற்றுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை ?**
**விடை :**

★ பருவநிலை, சூழல், வீசும் வேகம் ஆகியவற்றிற்கேற்பத் தென்றல் காற்று, பூங்காற்று, கடல் காற்று, பனிக் காற்று, வாடைக் காற்று, மேல் காற்று, கீழ்க் காற்று, மென் காற்று, இளந்தென்றல், புழுதிக் காற்று, ஆடிக் காற்று, கடுங் காற்று, புயல் காற்று, மேய்க் காற்று, சுழல் காற்று, சூறாவளிக் காற்று எனப் பல்வேறு பெயர்களில் காற்று அழைக்கப்படுகிறது.

---

**7. வீசும் திசைகளைப் பொறுத்து காற்று எவ்வாறு அழைக்கப்படுகிறது ?**
**விடை :**

★ கிழக்கிலிருந்து வீசும் காற்று "கொண்டல்" எனவும்,
★ மேற்கிலிருந்து வீசும் காற்று "கோடை" எனவும்,
★ வடக்கிலிருந்து வீசும் காற்று "வாடை" எனவும்,
★ தெற்கிலிருந்து வீசும் காற்று "தென்றல்" எனவும் அழைக்கப்படுகிறது.

---

**8. காற்றின் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுக.**
**விடை :**

★ மனிதன் உணவின்றி ஐந்து வாரம் உயிர்வாழ முடியும்.
★ நீரின்றி ஐந்து நாள் உயிர்வாழ முடியும்.
★ காற்றின்றி ஐந்து நிமிடம்கூட உயிர் வாழ முடியாது.

---

**9. காற்று மாசினால் வரும் நோய்கள் எவை ?**
**விடை :**

★ காற்று மாசுபடுவதால் கண் எரிச்சல், தலைவலி, தொண்டைக்கட்டு, காய்ச்சல், நுரையீரல் புற்றுநோய், இளைப்பு நோய் எனப் பல நோய்கள் வருகின்றன.

---

**10. சிறுவர் நிதியம் தெரிவித்துள்ள செய்தி யாது ?**
**விடை :**

★ காற்று மாசுபடுவதால் குழந்தைகளின் மூளை வளர்ச்சி குறைவதாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (UNICEF) தெரிவித்துள்ளது.

---

**11. அமில மழை எவ்வாறு பெய்கிறது ?**
**விடை :**

★ மனிதர்களின் நடவடிக்கைகளால் காற்றினுள் கலந்துவிடும் கந்தக டை ஆக்சைடு, நைட்ரஜன் டை ஆக்சைடு ஆகியவை மழை பெய்யும் போது அம்மழை நீரில் கரைந்துவிடுவதால் அமில மழை பெய்கிறது.

---

### பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்......... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப்பற்றிப் பேசுகிறது. இவ்வாறு "நீர்" தன்னைப்பற்றிப் பேசினால்... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக. (பெ.ஆ.க–6) (செப் –20)**

**விடை :**

1. நீரையும் சீராடு
2. மழைநீர் தூய குடிநீர்
3. மெய்யான அமிழ்தம்
4. நிறமில்லா அமிழ்தம்
5. நீரில்லா நாடு நிலவில்லா முற்றம்
6. நீர் ஆழம் கண்டாலும் நெஞ்சு ஆழம் காணப்படாது
7. நீர் உயர நெல் உயரும்.
8. நீர்மேல் குமிழி போல நிலையில்லாக் காலம்.

---

### பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (கூடுதல் வினா)**

**1. தூய்மையான காற்றை பெறுவதற்கான மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றை ஐந்து தொடர்களில் பட்டியலிடுக. (பெ.ஆ.க –3)**

**விடை :**

**1. உள்ளடக்குதல்:**

உற்பத்தியில் இருந்து வெளிவரும் மாசுகள் காற்றில் கலப்பதைத் தடுத்தல்.

**2. மாற்றுதல்:**

மாசுகளின் அளவைக் குறைப்பதற்கு புதிய நுட்பங்களைக் கையாளுதல்.

**5. நீர்க்கச் செய்தல்:**

காற்றிலுள்ள மாசுகளின் அடர்த்தியை நீர்க்கச் செய்து அவைகளை இயற்கையில் இலைகளின்மூலம் நீக்குதல்.

**4. சட்டம் இயற்றுதல்:**

காற்று மாசுறுதலை தடுப்பதற்கு சட்டங்களை விதித்து செயலாற்றுதல்.

**5. தொழில்நுட்பங்களை மாற்றியமைத்தல்:**

தொழில்நுட்பங்களை மாற்றியமைப்பதால் தீமை விளைவிக்கக் கூடிய வேதியல் பொருட்களிலிருந்து காற்று மாசுறுதலை குறைக்கலாம்.

---

**2. முன்னுரை – விசும்பின் துளியும் பசும்புல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காப்போம் – மரம் நமக்கு வரம் – மழைநீர் உயிர்நீர் – முடிவுரை – இக்குறிப்புகளைப் பயன்படுத்தி "இயற்கையைக் காப்போம்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. (பெ.ஆ.க –3, 6)**

**விடை :**

### இயற்கையைக் காப்போம்

**முன்னுரை :**

அகன்று விரிந்த "பூமி" அண்ணாந்து பார்க்கத் தெவிட்டாத "ஆகாயம்" தினம் நாம் ஏற்றும் தீபத்தின் ஒளியாய் "தீ" மழைத்துளியாய் மண்ணில் விழுந்து கடலாய் விரிந்த "நீர்" ஒவ்வொரு மூச்சுக்காற்றுக்கும் அஸ்திவார ஆக்சிஜனாய் "காற்று" என ஐம்பூதங்களின் ஒருங்கிணைப்பு தான்இயற்கை. அவ்வியற்கையைக் காப்பது நமது கடமையாகும் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**விசும்பும் பசும்புல்லும் :**

"விசும்பின் துளிவீழின் அல்லாமல் மற்றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது" என்றார் திருவள்ளுவர்.

மழைத்துளி மண்ணில் விழாமல் போனால் சிறுபுல்கூட தலைகாட்டாது. பின்பு எப்படி மனித இனம் தழைக்கும் என்ற வள்ளுவரின் வாக்கு இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையேயான இணைப்பைத் துல்லியமாகக் காட்டுகிறது.

**காற்று மாசு :**

சுற்றுப்புறத்தை அழிப்பவன் வாழும்போதே வாழிடம் நரகமாய் மாறும். நம் முன்னோர்கள் மரம் வளர்த்தனர். வாழிடம் வளமானது. தூய்மையான காற்று ஊரெங்கும் பரவியிருந்தது. நாமோ மரம் அழித்து வளம் அழித்து வாழிடம் கண்டோம். இன்று தூய்மையான காற்று சுற்றத்திலும் இல்லை, வீட்டு முற்றத்திலும் இல்லை. தூய காற்றைப் பெற வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்.

**பசுமையைக் காப்போம் :**

பசுமையையும் இயற்கை வளமும் இறைவன் இவ்வுலகில் நமக்கு வழங்கிய அருட்கொடை. மனிதராய் பிறந்த நமக்கும் மற்றபிற அனைத்து உயிரினங்களுக்கும் இவ்வுலகில் உயிர் வாழவும், மற்றபிற தேவைகளுக்கும் பசுமையும் இயற்கை வளமும் பல வகையில் உதவியாக இருக்கின்றது. மரங்களை வளர்த்து பசுமையை ஏற்படுத்துவோம். இயற்கையைக் காப்போம்.

**மரம் நமக்கு வரம் :**

மரங்களால் சுற்றுச் சூழல் வளமாகும். மனித வாழ்வு நலமாகும். மரம் வளர்க்க மழை பொழியும். மழை பொழிய வறுமை ஒழியும். ஆளுக்கொரு மரம் நடுவோம் மண்ணில் வாழ. நாளை மண்ணை மகிழ்வாய் ஆள. மரம் மனிதனின் மூன்றாவது கரம். இருகைகளையும் கடந்து இயற்கையைக் காக்கும் மூன்றாவது கரமாக உள்ளது. மரங்கள் பூக்கும் போதெல்லாம் மனித மனங்களும் பூக்கின்றன. எனவே மரம், இறைவன் நமக்குத் தந்த வரமாகும்.

**மழைநீர் உயிர் நீர் :**

விண்ணின் மழைத்துளி !மண்ணின் உயிர்த்துளி ! என்ற வரிகளும், "நீரின்றிஅமையாது உலகு", "மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்" என்ற வரிகளும் நீரின் இன்றியமையாமையையும், நீர் தருகின்ற மழையின் சிறப்பையும் தமிழ்ப்புலவர்கள் காலந்தோறும் போற்றி வந்துள்ளனர் என்பதை உணர்த்துகிறது. இன்றைய தாகத்திற்கும், நாளைய தண்ணீர் தேவைக்கும் மழைநீரை சேமித்தாலே போதும்.

**முடிவுரை :**

சுற்றுச் சூழலை பாதுகாக்க காற்றையும், மண்ணையும், நீரையும் நச்சு சேராமல் காக்க, இயற்கையை முதலில் பாதுகாக்க வேண்டும். இயற்கையை இயற்கையாகவே வைத்திருக்க வேண்டும்.

இயற்கையைப் பேணுவோம் !
இனிய வாழ்வு வாழ்வோம் !!

---

**3. காற்று பேசியதைப் போல நிலம், நீர், வானம் பேசுவதாகவும், அவை இன்றைய சுற்றுச் சூழல் பாதுகாப்பினை வலியுறுத்துவதாகவும் ஓர் உரையாடலை அமைக்க. (பெ.ஆ.க – 5)**

**விடை :**

**நிலம் :** நான் நிரந்தரமாக நீரில் மூழ்கியிராத புவியின் திண்ம மேற்பரப்பு ஆவேன்.

**நீர் :** கடலில் இருந்து நான் கதிரவனின் வெப்பத்தால் நீராவியாகி மேலெழுந்து சென்று வளி மண்டலம் கடந்து வேகமாக மாறி அதிலிருந்து துளிகளாக மாறி மழையாக பூமியை வந்தடைகிறேன்.

**வானம்:** புவியைச் சுற்றி குறிப்பிட்ட தொலைவுக்கு மேலே உள்ள வளிமண்டலம், விண்வெளி ஆகிய அனைத்துமே உள்ளடங்கியதுதான் வானம் என்று என்னை அழைக்கிறார்கள்.

**நிலம் :** நான் உயிரினங்களுக்கு விவசாயம் மூலம் வாழ்வாதாரமாக இருக்கிறேன்.

**நீர் :** நான் உயிரினங்கள் அருந்த உதவுகிறேன். விவசாயத்திற்கு பெரும் சேவையாற்றுகிறேன்.

**வானம்:** நான்மழை உருவாக உதவுகிறேன்.

**நிலம் :** ஆனால் தற்போது நான் பல்வேறு சீரழிவைச் சந்தித்து வருகிறேன். வீடுகள், சாலைகள், தொழிற்சாலைகள், சுரங்கவேலையால் நான் அழிக்கப்படுகிறேன். செயற்கை உரங்களால் மாசுபடுகிறேன்.

**நீர் :** உன்னைப் போலவே நானும் தொழிற்சாலைக் கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகள், நெகிழிக் கழிவுகளால் அதிகம் பாதிக்கப்படுகிறேன்.

**வானம்:** உங்களைப் போல் நானும் தொழிற்சாலைப் புகை மற்றும் வாகனத்திலிருந்து வெளிப்படும் புகையால் மாசுபட்டு வருகிறேன். இதனால் அமில மழை உருவாகக் காரணமாகிறேன்.

**நிலம் :** நான் அழிக்கப்படுவதால் மண் அரிப்பு, வெள்ளம், வறட்சி மற்றும் மாசுபாடு ஏற்படுகிறது.

**நீர் :** நான் மாசுபடுவதால் என் மூலம் டைபாய்டு, காலரா போன்ற நோய்கள் உருவாகின்றன. மேலும் பல தீமை தரும் உயிரினங்கள் என்னில் வாழ்ந்து அதை பருகும் உயிரினங்களுக்குப் பல வித நோய்களை உண்டாக்குகின்றன.

**நிலம் :** மனிதர்கள் இயற்கை உரங்களைப் பயன்படுத்தினால் நான் மாசுபடமாட்டேன்.

**நீர் :** மனிதர்கள் வெண்மை நிற ஆடைகளை விரும்பாமல் வண்ண ஆடைகளை விரும்புவதால் அதற்குச் சாயமிட்டு அதன் கழிவு நீரை என்னில் கலக்குகிறார்கள். அவர்கள் இயற்கை வண்ண சாயங்களை விரும்பினால் நான் மாசுபட மாட்டேன்

**வானம்:** புகையைத் தவிர்த்தாலே நான் மாசுபட மாட்டேன்

---

**4. காற்று மாசடைதலும், அதனைத் தடுக்கும் முறைகளையும் தொகுத்து எழுதுக.**

**விடை :**

**காற்று மாசடையும் முறைகள்**

குப்பைகள், நெகிழிப் பைகள், மெது உருளைகள் (Tyres) போன்றவற்றை எரிப்பது. குளிர்சாதனப்பெட்டி, குளிரூட்டப்பட்ட அறை ஆகியவற்றை மிகுதியாகப் பயன்படுத்துவது. மிகுதியாகப் பட்டாசுகளை வெடிப்பது. புகைவடிகட்டி இல்லாமல் தொழிற்சாலைகளை இயக்குவது. பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்தாத தனிமனிதரின் மிகுதியான ஊர்திப் பயன்பாடு. வானூர்திகள்வெளிவிடும்என மனிதர்களின் அத்தனை செயல்பாடுகளாலும் காற்று மாசடைகிறது.

**தடுக்கும் வழிமுறைகள் :**

ஒரு மணித்துளிக்கு 12 முதல் 18 முறை மூச்சுக்காற்றாய் நாம் வெளிவிடும் கார்பன் டை ஆக்சைடை எடுத்துக்கொண்டு நமது நுரையீரலுக்குத் தேவையான உயிரிவளியைத் (ஆக்சிஜன்) தரும் காற்றின் தோழர்களான மரங்களை வளர்க்க வேண்டும்.

மேம்பட்ட குப்பை மேலாண்மையை மேற்கொள்ளவேண்டும்.

பொதுப்போக்குவரத்துக்கு முன்னுரிமை தரவேண்டும். மின்னாற்றலால் இயங்கும் ஊர்திகளை மிகுதியாகப் பயன்படுத்த வேண்டும். கச்சா எண்ணெய், நிலக்கரி முதலிய புதை வடிவ எரிபொருள்களைத் தவிர்க்க வேண்டும்.

வீட்டுச்சமையலுக்கு விறகுகளைப் பயன்படுத்துவதைக் கைவிடவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15 ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம். காற்றைஒரு நாள் மட்டும் கொண்டாடினால் போதாது, நாம் ஒவ்வொரு நாளும் கொண்டாட வேண்டும். காற்றைத் தூய்மையாக வைத்திருக்கவேண்டும். இதுவே எதிர்காலத்திற்கு நாம் செய்யும் நலனும் ஆகும்.

---

**அ) விடைக்கேற்ற வினா அமைக்க :**

**1. வாழும் உயிர்களின் உயிர்மூச்சு காற்று.**

**விடை :**

★ வாழும் உயிர்களின் உயிர்மூச்சு எது ?

**2. இந்தியாவின்முதுகெலும்பு வேளாண்மை ஆகும்.**

**விடை :**

★ இந்தியாவின் முதுகெலும்பு யாது ?

**3. உலகக்காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.**

**விடை :**

★ உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் எந்த இடம் வகிக்கிறது ?

**4. ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 15 ஆம் நாள் காற்று நாளாகக் கொண்டாடப்படுகிறது.**

**விடை :**

★ ஒவ்வொரு ஆண்டும் எந்நாள் காற்று நாளாகக் கொண்டாடப்படுகிறது ?

**ஆ) நிறுத்தற்குறியிட்டு எழுதுக :**
**1. மனிதா மனிதா அழைப்பது கேட்கிறதா எங்குப் பார்க்கிறாய் யாரைத் தேடுகிறாய்**
**விடை :**
★ மனிதா ! மனிதா ! அழைப்பது கேட்கிறதா ? எங்குப் பார்க்கிறாய் ? யாரைத் தேடுகிறாய் ?

**2. மரம் செடி கொடி ஆறு மலை பள்ளத்தாக்கு எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான இயல்பு கொள்கிறேன்**
**விடை :**
★ மரம், செடி, கொடி, ஆறு, மலை, பள்ளத்தாக்கு, எனப் பல தடைகளைத் தாண்டி வருவதால் வேகம் குறைந்து இதமான இயல்பு கொள்கிறேன்.

**இ) சந்திப்பிழை நீக்கி எழுதுக :**
**1. நான் பருவகாலங்களில் மேகத்தை கொண்டுவந்து மழையை தருகிறேன்.**
**விடை :**
★ நான் பருவகாலங்களில் மேகத்தைக் கொண்டுவந்து மழையைத் தருகிறேன்.

**2. வடகிழக்கு பருவ காலங்களில் தாழ்வு மண்டலமாய் தவழ்ந்து புயலாய் மாறி புறப்படுவேன்.**
**விடை :**
★ வடகிழக்குப் பருவ காலங்களில் தாழ்வு மண்டலமாய்த் தவழ்ந்து புயலாய் மாறி புறப்படுவேன்.

**ஈ) ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.**
**1. பழங்காலத்தில் கடல் கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றாகிய என்னால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தது.**
**விடை :**
★ பழங்காலத்தில் கடல் கடந்த பயணங்கள் அனைத்தும் காற்றாகிய என்னால் இயக்கப்பட்ட பாய்மரக் கப்பல்களால்தான் நிகழ்ந்தன.

**2. யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றது.**
**விடை :**
★ யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன.

**உ) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.**
**I. நான் பருவ காலங்களில் மேகத்தைக் கொண்டுவந்து மழையைத் தருகிறேன். தென்மேற்குப் பருவக்காற்றாக, வடகிழக்குப் பருவக்காற்றாக உலா வந்து மேகத்தைக் குளிர்வித்து மழையாகப் பொழிகின்றேன். கதிரவனின் வெப்பத்தால் சூடாகி, அடர்த்தி குறைந்து மேலே செல்லும் நான், அங்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பியும் பருவக்காற்றாக மாறுகின்றேன். ஜூன் முதல் செப்டம்பர் வரை தென்மேற்குப் பருவக்காற்றாகவும், அக்டோபர் முதல் டிசம்பர் வரை வடகிழக்குப் பருவக்காற்றாகவும் வீசுகின்றேன். இவ்வாறாக மழைப் பொழிவைத் தருகின்றேன்.**
**வினா விடைகள் :**
**1. காற்று எவ்வாறு பருவக்காற்றாக மாறுகிறது ?**
**விடை :** கதிரவனின் வெப்பத்தால் சூடாகி அடர்த்தி குறைந்து மேலே செல்லும் காற்று அங்கு ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பி பருவக்காற்றாக மாறுகிறது.
**2. ஜூன் முதல் செப்டம்பர் வரை வீசும் காற்று எது ?**
**விடை :** ஜூன் முதல் செப்டம்பர் வரை வீசும் காற்று தென்மேற்குப் பருவக்காற்று ஆகும்.
**3. அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசும் காற்று எது ?**
**விடை :**
அக்டோபர் முதல் டிசம்பர் வரை வீசும் காற்று வடகிழக்குப் பருவக்காற்று ஆகும்.

**ஊ) பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

**நான் உயிர்வளி தந்து உங்களைக் காக்கின்றேன். தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகின்றேன். விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூவுகின்றேன். பூவின், தேனின், கனியின், தாவரத்தின், உயிரினத்தின் மணத்தை என்னில் சுமந்து, புவியின் உயிர் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகின்றேன். இவை மட்டுமல்ல, உங்கள் நவீன தொலைத் தொடர்பின் மையமாகவும் நானே உள்ளேன்.**

**வினா விடைகள்:**

**1. காற்று உயிர்களை எவ்வாறு காக்கிறது ?**

**விடை :**

காற்று உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது.

**2. காற்று உணவு உற்பத்திக்கு எவ்வாறு உதவுகிறது ?**

**விடை :**

தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகிறது.

**3. உயிர் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க காற்று எவ்வாறு உதவுகிறது ?**

**விடை :**

பூவின், தேனின், கனியின், தாவரத்தின், உயிரினத்தின் மணத்தை காற்று சுமந்து சென்று புவியின் உயிர்ச் சங்கிலித் தொடர் அறுபடாதிருக்க உதவுகிறது.

**4. காற்று எதன் மையமாகவும் திகழ்கிறது ?**

**விடை :**

நவீன தொலைத் தொடர்பின் மையமாகவும் காற்று திகழ்கிறது.

**5. இப்பத்திக்கேற்ப தலைப்பினைத் தருக.**

**விடை :**

"காற்றின் ஆற்றல்"

---

**எ. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.**

**விடை :**



1. உயிரின வாழ்வின் அடிப்படை இயற்கை
2. நாம் நம்பியிருப்பதும் நம்மில் இருப்பதும் இயற்கையே
3. இயற்கையே தாலாட்டும் அன்னை
4. இயற்கையே மெல்லத் தொட்டுச்செல்லும் தென்றல்
5. இயற்கையே மனதை வருடும் இசை.

## கற்பவை கற்றபின்

**1. காற்று பேசியதைப் போல், நிலம் பேசுவதாக எண்ணிக்கொண்டு பேசுக.**

**விடை :**

★ நில் மனிதா நில் உன்னோடு ஒருசில நிமிடங்கள் பேசுகிறேன்.

★ அயர்ந்து நீ படுக்க, நடந்து பயில தளம் தருபவன்.

★ பயிர்பச்சை மேனியெங்கும் தரித்து உன்பசி ஆற்றி வளம் சேர்ப்பவன்.

★ உயிர்களின் தாகம் தணிவிக்க நீர் சுரந்து வளம் பூரிப்பவன்.

★ நீ இடும் கழிவுகள் தின்று நஞ்சு நீக்கி உரமாய் மாற்றி பயிராய் பரிணமித்து உனக்கே உணவாய் உருமாறுபவன்.

★ உமிழ்ந்தாய், போற்றினாய், தூற்றினாய், குடைந்தாய், தோண்டினாய் பின் நீயே அதில் விழவுஞ் செய்தாய்.

★ அமுதம் ஊட்டிய என் மேல் அமிலம் ஊற்றினாய்.

★ உறங்கியது போதும், உறங்குவது போல நடித்தது போதும், இழப்பு இருவருக்குமே புத்தியில் ஏற்றுக்கொள்.

★ வேளை வந்துவிட்டது, என்னுடன் இணைந்து வேலை செய்.

★ களை களைய காலம் கனிந்தது, களமிறங்கு.

★ நிலம் பேசுகிறேன் உன் நலம் காக்கவே நிலம் பேசுகிறேன்.

---

**2. 17 ஆம் நூற்றாண்டில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்டு இன்றும் உலக விந்தையாகத் திகழும் தாஜ்மகால், இன்றளவில் மஞ்சள், பழுப்பு என நிறம் மாறிக் காட்சியளிப்பதன் காரணங்களையும் தீர்வுகளையும் கலந்துரையாடுக.**

**விடை:**

**கபிலன்** : நண்பா உலக அதியசங்களில் உனக்குப் பிடித்தது எது ?

**முகிலன்** : தாஜ்மகால்

**கபிலன்** : தாஜ்மகாலைப்பற்றி உனக்குத் தெரிந்ததைச் சொல்.

**முகிலன்** : தாஜ்மகாலுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்து பற்றித் தெரியுமா ?

**கபிலன்** : என்ன ? தாஜ்மகாலுக்கு ஆபத்தா ?

**முகிலன்** : ஆமாம் நண்பா. வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட தாஜ்மகால் ஆங்காங்கே நிறமும் மாறிவருகிறது.

**கபிலன்** : அப்படியா ? ஏன் அவ்வாறு நிறம் மாறுகிறது நண்பா ?

**முகிலன்** : ஆக்ரா மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகை, தூசு மற்றும் கழிவு வெளியேற்றங்களால் வெள்ளை நிறம், மஞ்சள், பழுப்பு நிறமாக மாறிக்கொண்டிருக்கிறது.

**கபிலன்** : ஆமாம், அதைத் தடுக்க அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையா ? இதனைத் தடுக்க என்னவழி ?

**முகிலன்** : தாஜ்மகாலைச் சுற்றியுள்ள புகைவிடும் தொழிற்சாலைகளையும், பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையிலிருந்து வெளியேறும் புகையையும் உடனே தடுக்க உரிய நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டும்.

## கவிதைப் பேழை

இயல் 2. ஆ

## காற்றே வா!

– பாரதியார் (செய்யுள்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம்**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை ? (செப் –20)**

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை
இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

**விடை: ஆ)மோனை, எதுகை**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. பாரதியார் காற்றை "மயலுறுத்து" அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர். (பெ.ஆ.க – 4)**

அ) மணம் வீசும் காற்றாய் நீ வா ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா
இ) மயிலாடும் காற்றாய் நீ வா ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

**விடை: ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா**

**3. "மயலுறுத்து" என்ற சொல்லைப் பிரித்தால் கிடைப்பது ..............**

அ) மயல் + உறுத்து ஆ) மய + லுறுத்து
இ) மயலு + உறுத்து ஈ) மயலு + றுத்து

**விடை: அ) மயல் + உறுத்து**

**4. பாரதியார் "காற்றே வா! .............. எங்களுக்குக் கொடு" என்கிறார்.**

அ) மழையை ஆ) உணர்வினை
இ) காடுகளை ஈ) பிராண ரஸத்தை

**விடை: ஈ) பிராண ரஸத்தை**

**5. "பிராண – ரஸம்" என்பதன் பொருள் ............**

அ) தண்ணீர் ஆ) மழை
இ) நெருப்பு ஈ) உயிர்வளி **விடை: ஈ) உயிர்வளி**

**6. "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா","சிந்துக்குத் தந்தை"எனப் பாராட்டப்பெற்றவர் ........**

அ) பொற்கோ ஆ) பாரதிதாசன்
இ) பாரதியார் ஈ) பாலபாரதி **விடை: இ) பாரதியார்**

**7. பாரதியார்.............. இதழின் ஆசிரியராகப் பணியாற்றினார்.**

அ) மணிக்கொடி ஆ) கணையாழி
இ) நவசக்தி ஈ) இந்தியா **விடை: ஈ) இந்தியா**

**8. பாட்டுக்கொரு புலவன் என பாராட்டுப்பெற்றவர் ..............**

அ) கண்ணதாசன் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) பாலபாரதி

**விடை: ஆ) பாரதியார்**

**9. வசன கவிதையை அறிமுகம் செய்தவர் .................**

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) தமிழன்பன் **விடை: ஆ) பாரதியார்**

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. வசன கவிதை – குறிப்பு வரைக.**

**விடை :**

★ உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்பு கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை எனப்படுகிறது.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. பாரதியாரின் பன்முகங்கள் யாவை ?**

**விடை :**

★ எட்டயபுரத்தில் பாட்டுக்கொரு புலவனாக அறியப்பட்டவர்.

★ கவிஞர், கட்டுரையாளர், சிறுகதை ஆசிரியர், இதழாசிரியர், சமுதாய ஏற்றத்தாழ்வுகளையும், பெண்ணடிமைத்தனத்தையும் எதிர்த்துக் குரல் கொடுத்தவர்.

---

**3. காற்றிடம் எவற்றைக் கொண்டுவருமாறு பாரதியார் வேண்டுகிறார் ?**

**விடை :**

★ மகரந்தத் தூளை சுமந்துகொண்டு வருக.

★ மனதை மயங்கச் செய்கின்ற இனிய நறுமணத்துடன் வருக

★ இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்த மிகுந்த உயிர்வளியை (உயிர்க்காற்று) எங்களுக்குக் கொண்டு வந்து கொடுக்குமாறு காற்றிடம் பாரதியார் வேண்டுகிறார்.

---

**4. காற்றை எப்படி வீசுமாறு பாரதியார் பணிக்கிறார் ?**

**விடை :**

★ காற்றே உன் சக்தி குறைந்து உயிரை மாய்த்து விடாதே.

★ பேய் போல வேகமாக வீசி உயிரை மடியச் செய்யாதே

★ மென்மையாக, நல்ல சீராக நெடுங்காலம் வீசிக்கொண்டிருப்பாயாக என பாரதியார் காற்றைப் பணிக்கிறார்.

---

**5. பாரதியாரின் படைப்புகள் யாவை ?**

**விடை :**

குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம் முதலிய காவியங்களையும், கண்ணன்பாட்டையும், பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி என குழந்தைகளுக்கான நீதிகளையும் பாடல்களில் தந்தவர் பாரதியார்.

---

**6. காற்றே வா – நூற்குறிப்பு தருக.**

**விடை :**

★ பாரதியாரின் கவிதைத் தொகுப்பிலுள்ள காற்று என்னும் தலைப்பிலான வசனக் கவிதையின் ஒரு பகுதியே பாடப்பகுதியாகும்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க. (பெ.ஆ.க–2)**

**விடை :**

**மின்விசிறிக் காற்று :** நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்து வந்த நண்பனே வா !

**சோலைக்காற்று :** என்ன நண்பனே !உன் வரவேற்பு புதுமையாக உள்ளதே

**மின்விசிறிக் காற்று :** என்ன செய்வது உன்னைப்போல் சுதந்திரமாக என்னால் சுற்ற முடியாது. ஒரே அறைக்குள்ளேயே மட்டும்தான் சுற்ற முடியும்.

**சோலைக் காற்று :** உனக்கு ஒரு சிறப்பு உண்டு. மக்கள் நினைத்த நேரத்தில் உன்னால் வரமுடியும் !. என்னால் அவ்வாறு முடியாது.

| | |
|---|---|
| **மின்விசிறிக் காற்று :** | உன் சிறப்பை நான் கூறுகிறேன். மழை உருவாவதற்கு நீ பெரும் உதவி புரிகிறாய்!. காற்றாலையை இயங்க வைப்பதே நீதான்! காற்றுள்ளபோதே மின்சாரம் எடுத்துக்கொள் என்னும் புதுமொழிக்கு வித்திடுகிறாய்! |
| **சோலைக் காற்று :** | சரி நண்பனே மகிழ்ச்சி! நான் வேறு பல பல இடங்களுக்குச் செல்ல வேண்டும். வருகிறேன் நண்பனே. |
| **மின்விசிறிக் காற்று :** | போய்வா நண்பனே! |

**சிறுவினா. (கூடுதல் வினா)**

**2. பாரதியார் – ஆசிரியர் குறிப்பு தருக.**

**விடை :**

**ஆசிரியர் :** பாரதியார்
**இயற்பெயர் :** சுப்பிரமணியன்
**பெற்றோர் :** சின்னச்சாமி – இலட்சுமி அம்மாள்
**பிறந்த ஊர் :** எட்டையபுரம்
**பிறப்பு :** 11.12.1882
**இறப்பு :** 11.09.1921
**பாடல்கள் :** கண்ணன்பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திச்சூடி
**இயற்றிய காவியங்கள் :** குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம்
**பணியாற்றிய இதழ்கள் :** இந்தியா, சுதேசமித்திரன்
**சிறப்புப் பெயர் :** தேசியக் கவிஞர், பாட்டுக்கொரு புலவன், சிந்துக்குத் தந்தை

**பகுதி – IV ( ஐந்து மதிப்பெண்கள்)**

**நெடுவினா : (பாடநூல் வினா)**

*மலர்ந்தும் மலராத பாதிமலர் போல*
*வளரும் விழி வண்ணமே – வந்து*
*விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக*
*விளைந்த கலை அன்னமே*
*நதியில் விளையாடி கொடியில் தலைசீவி*
*நடந்த இளந்தென்றலே – வளர்*
*பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு*
*பொலிந்த தமிழ் மன்றமே*

**– கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க. (அ.மா.வி)**

**விடை :**

★ மலர்ந்தும் மலராத பாதி மலர் என்று தங்கையாகிய குழந்தைக்கு உதாரணம் சொன்னதோடு, விடிந்தும் விடியாத காலைப் பொழுதையும் உதாரணப்படுத்திச் சொன்னது மிகச் சிறப்பாகும்.

★ இனிய தென்றல் காற்றானது வாசனை மிக்க மலர்களில் உள்ள மணத்தை உட்கொண்டு உலாவருவதோடு அல்லாமல் அதை அண்ணன் தங்கைக்கு இடையே உள்ள அன்பை, பாசத்தை வெளிப்படுத்துவது போன்று பாடியிருப்பது மிகப் பொருத்தமாகும்.

★ மேலும் அண்ணன் தனது தங்கையை மலர்ந்தும் மலராத பாதி மலராகக் காண்கிறான். குளிர்ச்சி பொருந்திய விடிந்தும் விடியாத காலைப் பொழுதாகக் காண்கிறான். அழகிய அன்னமாகக் காண்கிறான். தென்றலாகக் காணும்போது அது நதியில் விளையாடிவிட்டு கொடியில் தலைசீவி வருவதாகக் காண்கிறான்.

★ அதுமட்டுமின்றி தமிழாக அதுவும் சிறப்புப் பொருந்திய பொதிகை மலையில் தோன்றி, மதுரையில் வளர்ந்த தமிழாகக் காண்கிறான்.

★ பாச உணர்வை தூண்டக்கூடிய பாடலைப் பாடுவதில் கண்ணதாசனுக்கு நிகர் அவரே! என்பதை இப்பாடலில் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்.

**மொழிப்பயிற்சி :**

**அ) சொல்லும் பொருளும் :**
**விடை :**

மயலுறுத்து – மயங்கச்செய்
ப்ராண – ரஸம் – உயிர்வளி
லயத்துடன் – சீராக
மடித்து – அழித்து

**ஆ) இலக்கணக்குறிப்பு :**
**விடை :**

நல்லொளி, நெடுங்காலம் – பண்புத் தொகைகள்
பாடுகிறோம், கூறுகிறோம், வழிபடுகின்றோம் – தன்மைப் பன்மை வினைமுற்றுகள்

**இ) பகுபத உறுப்பிலக்கணம்:**
**விடை :**

உராய்ந்து – உராய் + த் (ந்) + த் + உ
உராய் – பகுதி
த் (ந்) – த் – ந் ஆனது விகாரம்
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**ஈ) பின்வரும் பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளிக்க :**

**மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை**
**மயலுறுத்து கின்ற இனிய வாசனையுடன் வா ;**
**இலைகளின் மீதும் நீரலைகளின் மீதும் உராய்ந்து மிகுந்த**
**ப்ராண – ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.**

**வினாக்கள் :**

**1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன ?**
**விடை :** காற்றே வா
**2. இப்பாடலை இயற்றிய ஆசிரியரின் பெயர் என்ன ?**
**விடை :** பாரதியார்
**3. பொருள்தருக : அ) மயலுறுத்துஆ) ப்ராண – ரஸம்**
**விடை :** அ) மயங்கச்செய் ஆ) உயிர் வளி
**4. பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுது.**
**விடை :** மகரந்த, மனத்தை – சீர்மோனை,
மகரந்த, மயலுறுத்து – அடிமோனை
**5. 'சுமந்து' என்ற சொல்லிற்கான இலக்கணக் குறிப்பை எழுது.**
**விடை :** வினையெச்சம்

**கற்பவை கற்றபின்**

**1. இவ்வசனக் கவிதையில் இடம்பெற்றுள்ள வேண்டுகோள் சொற்களும் கட்டளைச் சொற்களும் (வாசனையுடன் வா, அவித்து விடாதே..........) கவிதையின் உட்பொருளை வெளிப்படுத்தத் துணைநிற்பது குறித்துப் பேசுக.**

**விடை :**

**வாசனையுடன் வா :**

மகரந்தத்தூளைச் சுமந்துகொண்டு மனதை மயங்கச் செய்கின்ற இனிய வாசனையுடன் வா என்பதன் பொருளாவது, இயற்கையின் தூய மணமிக்க காற்றைச் சுவாசிக்கவேண்டும் என்பதேயாகும்.

**அவித்து விடாதே :**

அதிவேகக் காற்று நெருப்பைப் பரவச் செய்து மிகுந்த கேட்டினை உருவாக்கும். மிகவும் குறைவான வேகத்தில் வீசும் காற்றானது நெருப்பு பற்றி எரிய முடியாமல் நெருப்பு அணைவதற்குக் காரணமாகிறது.

பாரதி தமது உயிரை நெருப்புக்கு ஒப்பிட்டுள்ளார். காற்றானது சக்தி குறைந்து போய் தன் உயிரை அவித்துவிடக்கூடாது எனவும் பேய் போல வீசி தமது உயிரைக் குடித்துவிடக்கூடாது எனவும் உட்பொருள் கொண்டு இவ்வேண்டுகோள் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

---

2. ***"திக்குகள் எட்டும் சிதறி – தக்கத்***
***தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட***
***பக்க மலைகள் உடைந்து வெள்ளம்***
***பாயுது பாயுது பாயுது – தாம்தரிகிட***
***தக்கத் ததிங்கிட தித்தோம் – அண்டம்***
***சாயுது சாயுது சாயுது – பேய்கொண்டு***
***தக்கை யடிக்குது காற்று – தக்கத்***
***தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட "*** – பாரதியார்

**இதுபோன்ற இயற்கையொலிகளை உணர்வுடன் வெளிப்படுத்தும் கவிதைகளைத் திரட்டி வந்து வகுப்பறையில் படித்துக்காட்டுக.**

**விடை :**

**அ)**

*சட்டச்சட சட்டச்சடடட்டா – என்று*
*தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்*
*எட்டுத்திசையும் இமய – மழை*
*எங்ஙனம் வந்ததடா தம்பி! – வீரா*
*அண்டம் குலுங்குது தம்பி ! தலை*
*ஆயிரந் தூக்கியே சேடனும் பேய்போல்*
*மிண்டிக் குதித்திடுகின்றான்.*

– பாரதியார்

**ஆ)**

*மழையே மழையே வா வா – நல்ல*
*வானப்புனலே வா வா – இவ்*
*வையத் தமுதே வா வா*
*தகரப் பந்தல் தணதண என்ன*
*தாழும் கூரை சளசள என்ன*
*நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்*
*நன்றெங் கும்கண கணகண என்ன (மழையே மழையே)*

– பாரதிதாசன்

**இயல் 2. இ**

## கவிதைப் பேழை

## முல்லைப் பாட்டு

**– நப்பூதனார் (செய்யுள்)**

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "பாடுஇமிழ் பனிக்கடல் பகுதி" – என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது ? (பெ.ஆ.க–6)**

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

**விடை: அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. திருமால் பேருருவம் கொண்டதற்குக் காரணமாக விளங்கிய மன்னன் .............**

அ) பாண்டியன் ஆ) சேரன்
இ) பல்லவன் ஈ) மாவலி

**விடை: ஈ) மாவலி**

**3. சுவல் என்ற சொல்லின் பொருள் .............**

அ) உலகம் ஆ) தோள்
இ) நற்சொல் ஈ) மலர்

**விடை: ஆ) தோள்**

**4. விரிச்சி என்னும் சொல்லின் பொருள்.............**

அ) கடுஞ்சொல் ஆ) தீஞ்சொல்
இ) வன்சொல் ஈ) நற்சொல் **விடை: ஈ) நற்சொல்**

**5. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **அ. நேமி** | – | **1) மலை** |
| **ஆ. கோடு** | – | **2) வலம்புரிச்சங்கு** |
| **இ. விரிச்சி** | – | **3) நற்சொல்** |
| **ஈ. தூஉய்** | – | **4) தூவி** |

அ) 1 2 3 4 ஆ) 2 1 3 4
இ) 4 2 3 1 ஈ) 3 1 2 4

**விடை: ஆ) 2 1 3 4**

**6. "உறுதுயர்" – இலக்கணக் குறிப்பு............**

அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை
இ) வினைத் தொகை ஈ) உம்மைத் தொகை

**விடை: இ) வினைத்தொகை**

**7. காடும் காடு சார்ந்த இடம் ........ திணையாகும்**

அ) குறிஞ்சி ஆ) முல்லை
இ) மருதம் ஈ) நெய்தல்

**விடை: ஆ) முல்லை**

**8. முல்லைப்பாட்டு ................ நூல்களுள் ஒன்றாகும்.**

அ) ஐந்திணை ஆ) பதினெண் கீழ்க்கணக்கு
இ) பத்துப்பாட்டு ஈ) எட்டுத்தொகை

**விடை: இ) பத்துப்பாட்டு**

**9. முல்லைப்பாட்டின் அடிகளின் எண்ணிக்கை .............**

அ) 104 ஆ) 105

இ) 103 ஈ) 108

**விடை: இ) 103**

**10. முல்லைப்பாட்டைப் படைத்தவர் .................**

அ) திருமூலர் ஆ) நப்பூதனார்

இ) ஐயூர் முடவனார் ஈ) ஔவையார்

**விடை: ஆ) நப்பூதனார்**

**11. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் .................**

அ) பெரும்பானாற்றுப்படை ஆ) மதுரைக் காஞ்சி

இ) பட்டினப்பாலை ஈ) முல்லைப்பாட்டு

**விடை: ஈ) முல்லைப்பாட்டு**

**பாடலைப்படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடைதருக: (அ.மா.வி)**

**(பெ.ஆ.க – 1)**

*"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு*
*வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை*
*நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,*
*பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன்ஏர்பு,*
*கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி*
*பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"*

**12. இப்பாடல் இடம்பெற்ற நூல்.................**

அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம்

இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

**விடை: அ) முல்லைப்பாட்டு**

**13. "நனந்தலை உலகம்" – இத்தொடரின் பொருள்..................**

அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம்

இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

**விடை: ஈ) அகன்ற உலகம்**

**14. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்.............**

அ) பெரும்பெயல், பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்

இ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த

**விடை: இ) பாடுஇமிழ், கோடுகொண்டு**

**15. பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை ............**

அ) தடக்கை ஆ) வளைஇ

இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

**விடை: ஆ) வளைஇ**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக. (பெ.ஆ.க – 4)**

**விடை :**

★ அழாதே தம்பி.

★ அப்பா அம்மா விரைவாக வந்துவிடுவார்கள்.

★ அதுவரை நாம் ஏதாவது விளையாட்டு விளையாடுவோமா ?

★ அல்லது உனக்கு ஒரு குட்டிக்கதை கூறவா ?

★ அல்லது ஒரு விடுகதை கூறுவேன், அதற்குச் சரியான பதிலைக் கூறுவாயா ?

**2. மா அல் – பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.**
**விடை :**
**1. பொருள்** : திருமால் – உலகத்தை ஓரடியால் அளப்பதற்கு பெருவடிவு கொண்டவன்.
**2. இலக்கணக்குறிப்பு :** செய்யுளிசை அளபெடை அல்லது இசைநிறை அளபெடை

**குறுவினா : (கூடுதல் வினா)**
**3. மேகம் மழையை எவ்வாறு பொழிந்தது ?**
**விடை :**

★ மேகமானது, ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிப் பெருந்தோற்றம் கொண்டு, வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து விரைவானவேகத்துடன் பெருமழையைப் பொழிந்தது.

**4. முதுபெண்டிர் தெய்வத்தை எவ்வாறு வழிபட்டனர் ?**
**விடை :**

★ மலர்ந்த முல்லைப் பூக்களோடு நாழியில் கொண்டுவந்த நெல்லையும் சேர்த்துத் தெய்வத்தின் முன் தூவி தெய்வத்தை வழிபட்டனர்.

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**
**1. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக. (பெ.ஆ.க–4)**
**குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர்– உடலில் ஓடும் மெல்லிய குளிர் – தேங்கிய குட்டையில் "சளப் தளப்" என்று குதிக்கும் குழந்தைகள்–ஓடும் நீரில் காகிதக் கப்பல்.**
**விடை :**

★ மழை நின்றவுடன், தேனடையிலிருந்து விழும் தேன் துளியைப் போல் வீட்டின் மேற்கூரையில் தேங்கியிருந்த குளிர்ந்த மழைநீர் கீழே இருந்த தாவர இலைகளில் தெறித்து "சொட்டு சொட்டு" என சிறு துளியாக விழுந்து கொண்டிருந்தது.

★ மெல்லிய குளிர்ந்த காற்று என் உடலைத் தழுவிச் சென்றது இதமாக இருந்தது.

★ மழை நின்றவுடன் சாலையில் மழைநீர் தேங்கிய பள்ளங்களில் உள்ள நீரைத் தங்கள் கால்களால், "சளப் தளப்" என்று சிறுவர்கள் ஒருவர் மீது ஒருவர் உதைத்து விளையாடுவர்.

★ மேலும் நீரோடும் சிறு பள்ளங்களில் காகிதக் கப்பல் விட்டு மகிழ்வர்.

**சிறுவினா : (கூடுதல் வினா)**
**1. "விரிச்சி கேட்டல்" என்றால் என்ன ? விளக்குக.**
**விடை : விரிச்சி – நற்சொல்**

★ ஏதேனும் ஒரு செயல் நன்றாக முடியுமோ ? முடியாதோ ? என ஐயம் கொண்ட பெண்கள், நடமாட்டம் குறைவான ஊர்ப்பக்கத்தில் போய், தெய்வத்தைத் தொழுது நின்று அயலார் பேசும் சொல்லைக் கூர்ந்து கேட்பர்.

★ அவர்கள் நல்ல சொல்லைக் கூறின் தம் செயல் நன்மையில் முடியும் என்றும் தீய சொல்லைக் கூறின் தீதாய் முடியும் என்றும் கொள்வர்.

★ இதனை விரிச்சி கேட்டல் என்று கூறுவர்.

**2. முல்லைப்பாட்டு – நூல் குறிப்பு தருக.**
**விடை :**

★ முல்லைப்பாட்டு, பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று

★ இது 103 அடிகளைக் கொண்டது

★ இப்பாடலின் 1 – 17 அடிகள் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளன.

★ முல்லைப்பாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது ; முல்லை நிலத்தைப்பற்றிப் பாடப்பட்டது; பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல் இது.

★ இதைப்படைத்தவர் காவிரிப் பூம்பட்டினத்துப் பெருவணிகனார் மகனார் நப்பூதனார்.

## பகுதி – IV ( ஐந்து மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளைவிவரித்து எழுதுக. (பெ.ஆ.க–2, 4)**

**விடை :**

**கார்காலம் :**

★ கார் என்ற சொல்லுக்கு கருமை, மேகம், மழைக்காலம் என்று பொருள் உண்டு. முல்லைப் பாட்டில் நப்பூதனார் கார்காலத்தை ஆவணி, புரட்டாசி என்கிறார்.

★ வேனில் காலத் தொடக்கத்தில் தலைவன் பிரியும் பொழுது தலைவியிடம் கார்காலம் துவங்கும் பொழுது உன்னுடன் இருப்பேன். அதுவரை வருந்தாமல் இருக்கவேண்டும் என்று கூறிச் செல்கிறான்.

★ கார்காலம் என்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும். ஆனால் தலைவிக்கு தலைவன் பிரிவால் கார்காலம் துன்பமாக உள்ளது.

**தலைவியின் வருத்தம் :**

★ மாவலி சக்கரவர்த்தி முன் திருமால் விண்ணுக்கும் மண்ணுக்குமாகப் பேருருவம் கொண்டது போல, மழை மேகமானது கடல் நீரை முகந்து கொண்டு வலமாய் எழுந்து மலையைச் சூழ்ந்து பெருமழையைப் பொழிந்தது.

★ மலைமுகடுகளில் பெய்த பெருமழை தலைவி வசிக்கும் ஏழுநில மாடமுள்ள காவலுடைய தலைவன் இருப்பிடமான மூதூர் பக்கமும் பெய்து, பெருகியதால் கார்காலத் தொடக்கத்தில் வருவதாகக் கூறிய தலைவனை நினைத்துத் தலைவி வருந்தினாள்.

**மாலைப்பொழுது :**

★ தலைவியின் இப்பிரிவுத் துயரைக் கண்டபொழுது, முதிய பெண்டிர்கள் எப்படியாவது தலைவிக்கு ஆறுதல் அளிக்கவேண்டுமென்று விரும்பியவராய் அம்மாலைப் பொழுதில் தலைவி வாழும் ஊரில் உள்ள திருமாலுக்கு நெல்லையும் முல்லை மலரையும் தூவி வழிபட்டு,

***"இன்னே வருகுவர் தாயர் என்போள் "***
***நன்னர் நன்மொழி கேட்டனம் "***

என்ற வரிகள், ஆய்மகள் ஒருத்தி பசியால் வருந்தும் கன்றினை அணைத்துக் கொண்டு உன் தாயார் இப்பொழுது வந்துவிடுவர் என்று ஆறுதல் கூறுவதை, முதுபெண்டிர் நன்மொழியாகக் கருதி தலைவியைத் தேற்றுகின்றனர்.

★ முல்லைப்பாட்டில், முல்லை நிலத் தெய்வமானதிருமாலும், திணைக்குரிய பெரும்பொழுதாகிய கார்காலமும், சிறுபொழுதான மாலைநேரத்தில் விரிச்சி கேட்டதால் மாலைப்பொழுதும், இடையர், இடைச்சியர் செயல்பாடும் சிறப்பாக இடம்பெற்றுள்ளன.

---

**நெடுவினா : (கூடுதல் வினா)**

**2. முல்லை நிலத்தின் முதற்பொருளையும், கருப்பொருளையும், உரிப்பொருளையும் குறிப்பிடுக.**

**விடை :**



**மொழிப்பயிற்சி :**

**அ) சொல்லும் பொருளும் :**

| | | |
|---|---|---|
| நனந்தலை உலகம் | – | அகன்ற உலகம் |
| நேமி | – | சக்கரம் |
| கோடு | – | மலை |
| கொடுஞ்செலவு | – | விரைவாகச் செல்லுதல் |
| நறுவீ | – | நறுமணமுடைய மலர்கள் |
| தூஉய் | – | தூவி |
| விரிச்சி | – | நற்சொல் |
| சுவல் | – | தோள் |

**ஆ) இலக்கணக் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| மூதூர் | – | பண்புத் தொகை |
| உறுதுயர் | – | வினைத் தொகை |
| கைதொழுது | – | மூன்றாம்வேற்றுமைத் தொகை |
| தடக்கை | – | உரிச்சொல் தொடர் |

**இ) பகுபத உறுப்பிலக்கணம் தருக :**

**1. பொறித்த (பெ.ஆ.க – 3)**

**விடை :**

| | | |
|---|---|---|
| பொறித்த | – | பொறி+த் +த்+ அ |
| பொறி | – | பகுதி |
| த் | – | சந்தி |
| த் | – | இறந்தகால இடைநிலை |
| அ | – | பெயரெச்ச விகுதி |

**2. நிமிர்ந்த**

**விடை :**

நிமிர்ந்த – நிமிர்+ த்(ந்) +த் + அ

நிமிர் – பகுதி

த் –சந்தி (ந்) ஆனது விகாரம்

த்–இறந்தகால இடைநிலை

அ–பெயரெச்ச விகுதி

**ஈ) பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி :**

***"சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்***
***உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்***
***நடுங்கு சுவல் அசைத்த கையள், " கைய***
***கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர***
***இன்னே வருகுவர், தாயர்" என்போள்***
***நன்னர் நன்மொழி கேட்டனம்***

**வினாக்கள் :**

**1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?**

**விடை :**

முல்லைப் பாட்டு

**2. இப்பாடலின் ஆசிரியர் யார் ?**

**விடை :**

நப்பூதனார்

**3. உறுதுயர் – இலக்கணக் குறிப்பு தருக.**

**விடை :**

வினைத் தொகை

**4. கோவலர், சுவல் – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே யாது ?**

**விடை :**

இடையர், தோள்

**5. நன்மொழி – பிரித்து எழுதுக.**

**விடை :**

நன்மை + மொழி

**6. இப்பாடலில் வந்துள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| சிறுதாம்பு | நடுங்கு | இன்னே |
| உறுதுயர் | கொடுங்கோற் | நன்னர் |

**7. இப்பாடலில் வந்துள்ள மோனைச்சொற்களை எடுத்தெழுதுக.**

**விடை :**

நடுங்கு – நன்னர்

---

**கற்பவை கற்றபின்**

**1. முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலை உணர முடிகிறதா ? உங்களின் கருத்துகளைப் பதிவு செய்க. (பெ.ஆ.க – 4)**

**விடை :**

★ பண்டைக்காலத்துப் புலவர்கள் பாட்டு என்பதன் இயல்பை நன்கறிந்து நலமுடைய செய்யுட்கள் பலப்பல இயற்றினார்கள்.

★ மற்றொருவருக்கு துன்பம் நேரிடும்போது அவரின் துன்பம் நீங்கும் வரை அவருடன் பிரியாமல் இருந்துள்ளனர்.

★ விலங்குகளுக்கும் ஆறுதல் கூறியுள்ளனர்.

★ ஆற்றுப்படுத்துதல் மூலம் அடுத்தவர் துயரத்தில் பங்கு கொண்டுள்ளனர்.

---

**2. குறிப்புகளைக் கொண்டு ஆர்வமூட்டும் வகையில் கதை / நிகழ்வை எழுதுக.**

**அமைதி – வனம் – மனத்தைத் தொட்டது – கொஞ்சம் அச்சம் – ஆனால் பிடித்திருந்தது – இரவில் வீட்டின் அமைதியை விட – வனத்தின் அமைதி – புதுமை – கால்கள் தரையில் – இலைகளின் சலசலப்பு – பறவைகள் மரங்களின் மேல் – சிறகடிப்பு – அருகில் திரும்பியவுடன் – திடீரென ஆரவார ஓசை – தண்ணீரின் ஓட்டம் – அழகான ஆறு – உருண்ட சிறு கூழாங்கற்கள் – இயற்கையின் கண்காட்சி.**

**விடை :**

**இயற்கையின் கண்காட்சி :**

உயரமான மரங்களைக் கொண்ட பசுமை மிகுந்த அமைதி நிறைந்த வனத்திற்குச் சென்றேன். மலர்களின் நறுமணம் என் மனதைத் தொட்டது. ஆனால் அங்கு மனிதர்கள் யாரும் இல்லை கொஞ்சம் அச்சமாக இருந்தது. ஆனால் பிடித்திருந்தது. இரவில் வீட்டில் இருக்கும் அமைதியை விட வனத்தின் அமைதி என்னை மிகவும் ஈர்த்தது.

புதுமையான ஓர் அனுபவத்தைப் பெற்றேன். என் கால்கள் தரையில் ஊன்றியிருப்பதாய்த் தெரியவில்லை. இலைகளின் சலசலப்பு கேட்டு ஓசை வந்த திசை நோக்கி திரும்பினேன். மரங்களின் மேலிருந்த பறவைகள் தங்கள் சிறகுகளை அடித்து சோம்பலைப் போக்கிக் கொண்டிருந்தன.

திடீரென ஆரவார ஓசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். குரங்குகள் தண்ணீரின் ஓட்டத்தில் தங்கள் முகங்களின் அழகைக் கண்டு ஆரவாரம் செய்து கொண்டிருந்தன.

தெளிவான நீரோடையின் உள்ளே, உருண்டை வடிவில் சிறு கூழாங்கற்கள் பார்ப்பதற்கு விலையுயர்ந்த கற்களைப் போலவும், கண்ணாடியால் செய்யப்பட்ட உருண்டைகள் போலவும் தோற்றமளித்தன. இத்தகைய இயற்கையின் கண்காட்சி என் மனதை விட்டு அகலவில்லை.

## விரிவானம்

**இயல் 2. ஈ**

**புயலிலே ஒரு தோணி**
**– ப.சிங்காரம் (துணைப்பாடம்)**

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம்.............**

அ) நீலக்கடல் ஆ) மண்ணின் மலர்கள்
இ) புயலிலே ஒரு தோணி ஈ) கள்ளத் தோணி **விடை: இ) புயலிலே ஒரு தோணி**

**2. புயலிலே ஒரு தோணி – என்ற புதினத்தின் நூலாசிரியர்.............**

அ) ப. சிங்காரம் ஆ) எழில் முதல்வன்
இ) கி. ராஜநாராயணன் ஈ) கமலாலயன் **விடை: அ) ப. சிங்காரம்**

**3. வட இந்தியப்பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும்முறை நடைமுறைக்கு வந்த ஆண்டு.........**

அ)2017 ஆ) 2015
இ) 2000 ஈ) 2001 **விடை: இ) 2000**

**4. உலக வானிலை அமைப்பின் மண்டலச்சிறப்பு வானிலை ஆய்வு மையம் அமைந்துள்ள இடம்.............**

அ) புதுதில்லி ஆ) கல்கத்தா
இ) சென்னை ஈ) மும்பை **விடை: அ) புதுதில்லி**

**5. "பல் பழப் பலவின் பயங்கெழு கொல்லி" எனக்குறிப்பிடும் நூல் .............**

அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) சிலப்பதிகாரம் ஈ) நாலடியார் **விடை: அ) அகநானூறு**

**6. கொல்லிமலை அமைந்துள்ள மாவட்டத்தின் பெயர்.............**

அ) மதுரை ஆ) தேனி
இ) திண்டுக்கல் ஈ) நாமக்கல் **விடை: ஈ) நாமக்கல்**

---

### பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. "புயலிலே ஒரு தோணி" கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன. (பெ.ஆ.க–1) (செப் –20)**

**விடை : தோணி பாட்டைக் கூறும் வருணனைகள் :**

★ மாலை வெயில் இமைப்பொழுதில் மறைந்துவிட்டது. கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தது. மேகப் பொதிகள் பரந்து நீர் திவலைகளால் கும்மிருட்டாய் இறுகி நின்றன. வானம் பிளந்து வெள்ளம் கொட்டிக் கொண்டிருந்தது.

★ அதே சமயம் மதிப்பிட முடியாத வேகமும், பளுவும் கொண்ட மோதலால் தொங்கானையும் அதிலிருந்த நடப்பன, கிடப்பனவற்றையும் உலுக்கிக்கொண்டிருந்தது.

★ சூறாவளிக் காற்றும் மழையும் சேர்ந்துகொண்டு ஆடிக்குதித்துக் கெக்கலித்தன.

★ அலையோட்டம் புலப்படவில்லை. மேகமும் கடலும் ஒன்றாக இணைந்து விட்டன. வளியும் சேர்ந்துகொண்டது.

★ தொங்கான் அப்படியும் இப்படியுமாய்த் தாவிக்குதித்து விழுந்து திணறி இரைச்சலோடு தத்தளித்தது. எலும்புகள் நொறுங்குவது நொறு நொறுவென்று நொறுங்கின.

★ மேகமும் மழையும் வளியும் கடலும் மீண்டும் ஒன்றுகூடி கொந்தளிக்கின்றன.

★ மேகமும் பிளந்து மழையைக் கக்கியது. மழை வெள்ளம் கொட்டுகிறது. பெருங்காற்று புரட்டுகிறது. கடல் கொந்தளித்து கூத்தாடுகிறது.

★ தொங்கான் பயமுற்று தாவித் தாவிக் குதித்து குதித்து விழுந்து நொறு நொறுவென்று நொறுங்கியது.

**அடுக்குத் தொடர்கள் :**

★ நொறு நொறு நொறுங்கியது

★ தாவித் தாவி

★ குதித்து குதித்து

★ கரை ! கரை ! கரை !

★ இருட்டு இருட்டு

**ஒலிக்குறிப்புச் சொற்கள் :**

★ கிடு கிடு, சிலு சிலு, மரமரப்பு நொய்ங் புய்ங் , நொய்ங் புய்ங், நொய்ங் புய்ங் என கடலில் காற்றின் ஒலி காற்று சுழன்று கிறுகிறுத்துக் கூத்தாடுகிறது.

**துன்பத்திற்குப் பின்வரும் மகிழ்ச்சி :**

★ கடற்கூத்தின் போது ஏற்பட்ட தொங்கானின் ஓட்டைகளை மாலுமிகள் அடைக்கின்றனர். தொங்கான் கடலின் இழுவைக்கு ஏற்றவாறு மிதந்து சென்றது.

★ மறுநாள் காலையில் சூரியன் தன் கதிர்களை வெளிப்படுத்தினான். பகல் இரவாகிப் பகலாகி இரவாகியது.

★ நிலா வெளிச்சம் தெரிந்தது.

கடற்கூத்துக்குப்பின் ஐந்தாம் நாள் மாலையில் வானோடு வானாய்க் கடலோடு கடலாய் மரப்பச்சை தெரிகிறது.

★ ஆம் கரை! கரை! கரை! கரைகண்ட மகிழ்ச்சியில் மாலுமிகளின் துன்பங்கள் தொலைந்துவிட்டன.

---

## கற்பவை கற்றபின்

**1. கடலில் புயலின் தாக்கத்தினால் ஏற்பட்ட பதற்றத்தை வெளிப்படுத்த அடுக்குத் தொடர்களும் வருணனைகளும் எவ்வாறெல்லாம் பயன்பட்டுள்ளன என்பது குறித்து வகுப்பில் பேசுக.**

**விடை :**

**கலைச்செல்வன் :**

★ கடலில் புயலின் தாக்கத்தினால் சிக்கித் தவித்தவர்கள் இருள்நீங்கி சூரிய வெளிச்சத்தைக் கண்டதும், "சூரியன் சூரியன் சூரியன்" எனக் கூறினர்.

★ கடற்கூத்துக்குபின் ஐந்தாம் நாள் மீன்பிடி படகு விளக்குகள் தென்பட்டபோது, கரை கரை எனச் சத்தமிட்டனர்.

★ மேற்கண்ட அடுக்குத் தொடர்கள் புயலின் தாக்கத்திலிருந்து உயிர்பிழைத்தோம் என நம்பிக்கையில் தெரிவித்ததாகும்.

**கலைச்செல்வன் :**

★ மேகப் பொதிகள் பரந்து திரண்டொன்றிக் கும்மிருட்டாய் இறுகி நின்றன என்ற வருணனை மேகத்தின் தன்மையை விளக்குகிறது.

★ கிடுகிடுக்கும் இடி முழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன என்ற வருணனை மின்னலின் தன்மையை விளக்குகிறது.

**2. நீங்கள் எதிர்கொண்ட இயற்கை இடர் குறித்து விவரித்து எழுதுக.**
**(மழை, வெள்ளம், புயல், வறட்சி)**

**விடை :**

**மழை :**

★ வங்கக்கடலில் ஏற்பட்ட பலத்த காற்றுடன் கூடிய கனமழை, கடல் சீற்றத்தால் மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

★ போக்குவரத்து பாதிப்புகளால் மக்கள் பல இன்னல்களுக்கு ஆளாயினர்.

★ மழைப்பொழிவின் காரணமாக மக்கள் பலர் வெளியே செல்ல முடியாததாலும், மின்சாரம் தடை பட்டதாலும் பல தொழில்கள் முடங்கின.

**புயல் :**

★ கஜா புயல் 2018 வடகிழக்குப் பருவமழைக்காலத்தில் ஏற்பட்ட முதலாவது புயலாகும்.

★ தமிழகக் கடற்கரையை கடக்கும்போது கடும் புயலாக இருந்ததால் அதிக வேகத்துடன் காற்று வீசியதோடு கன மழை பெய்தது.

★ இதன் காரணமாக ஏற்பட்ட விபத்துக்களில் சிக்கி 63 பேர் உயிரிழந்தனர்.

**வெள்ளம்:**

★ 2018 ஆம் ஆண்டு கேரளாவில் ஏற்பட்ட வெள்ளமானது அம்மாநிலத்தைச் சீர் குலைத்தது.

★ தென்மேற்கு பருவக்காற்றினால் ஏற்பட்ட மழைப்பொழிவே இதற்குக் காரணம். வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலர் உயிரிழந்தனர்.

**வறட்சி :**

★ தமிழகத்தில் பருவ மழை பொய்த்ததாலும், காவிரியில் போதிய அளவு நீர் திறக்கப்படாத காரணத்தினாலும் தஞ்சையில் பெரும் வறட்சி நிலவுகிறது.

கற்கண்டு

**இயல் 2. உ**

# தொகை நிலைத் தொடர் (இலக்கணம்)

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1."பெரிய மீசை சிரித்தார்" – வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது ? (செப் –20)**

அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை **விடை: இ)அன்மொழித் தொகை**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. காலம் கரந்த பெயரெச்சம் என்பது ........... ஆகும். (பெ.ஆ.க–1)**

அ) பண்புத் தொகை ஆ) வேற்றுமைத் தொகை

இ) வினைத் தொகை ஈ) பொருட்பெயர் **விடை: இ) வினைத் தொகை**

**3. <u>சிவப்புச் சட்டை பேசினார்</u> – அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது ? (பெ.ஆ.க–2)**

அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை **விடை: இ) அன்மொழித் தொகை**

**4. தமிழ்த்தொண்டு என்னும் தொடர் ................ (பெ.ஆ.க – 5)**

அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை

இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை

**விடை: இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை**

**5. தொகைநிலைத் தொடர் .................வகைப்படும்.**

அ) ஆறு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) எட்டு **விடை: அ) ஆறு**

**6. தொகைநிலைத்தொடருக்கு எடுத்துக்காட்டு ................**

அ) நீர் பருகினான் ஆ) கரும்பு தின்றான்

இ) மதுரை சென்றார் ஈ) தேர்ப்பாகன் **விடை: ஆ) கரும்பு தின்றார்**

**7. "மதுரை சென்றார்" என்பது .................தொகையாகும்.**

அ) பண்பு ஆ) வேற்றுமை

இ) வினை ஈ) உம்மை **விடை: ஆ) வேற்றுமை**

**8. "மை" என்னும் பண்பு விகுதியைப் பெற்றுவருவது .................**

அ) வினைத்தொகை ஆ) பண்புத் தொகை

இ) வேற்றுமைத் தொகை ஈ) உம்மைத் தொகை **விடை: ஆ) பண்புத் தொகை**

**9. அண்ணன் தம்பி என்பதில் .................வந்துள்ளது.**

அ) உம்மைத் தொகை ஆ) உவமைத் தொகை

இ) வேற்றுமைத் தொகை ஈ) பண்புத் தொகை **விடை: அ) உம்மைத் தொகை**

**10. மலர்க்கை என்பது................தொகையாகும்.**

அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை

இ) உம்மைத் தொகை ஈ) அன்மொழித் தொகை **விடை: ஆ) உவமைத் தொகை**

**11. தொகைகளின் எடுத்துக்காட்டுகளைப் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **அ. உவமைத்தொகை** | – | **1) மார்கழித்திங்கள்** |
| **ஆ. உம்மைத்தொகை** | – | **2) மலர்க்கை** |
| **இ. இருபெயரொட்டுப்பண்புத்தொகை** | – | **3) செங்காந்தள்** |
| **ஈ. பண்புத்தொகை** | – | **4) தாய்சேய்** |

அ) அ– 2, ஆ –4, இ–1, ஈ–3 ஆ) அ– 4, ஆ –3, இ–2, ஈ–1

இ) அ– 2, ஆ –4, இ–3, ஈ–1 ஈ) அ– 4, ஆ –1, இ–3, ஈ–2 **விடை: அ) அ– 2, ஆ –4, இ–1, ஈ–3**

### பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக: தொடரில் அமைக்க. (பெ.ஆ.க – 4) (செப் –20)**

**விடை :**

1. தண்ணீர்குடி – தண்ணீரைக் குடி.
   மாலதி தண்ணீரைக் குடித்தாள்.
2. தயிர்க்குடம் – தயிரை உடைய குடம்
   மாலதி தயிர்க்குடத்தை எடுத்து வந்தாள்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. சொற்றொடரின் இலக்கணம் யாது ?**

**விடை :**

★ சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது சொற்றொடர் அல்லது தொடர் எனப்படும்.
எ.கா : வெண்சங்கு ஊதினான்.

---

**3. தொகை நிலைத் தொடர் என்றால் என்ன ? சான்று தருக.**

**விடை :**

★ சொற்கள் தொடர்ந்து நின்று பொருள் தரும்போது, இடையில் வேற்றுமை முதலிய உருபுகள் மறைந்து வரும் தொடர் தொகைநிலைத் தொடர் எனப்படும்.
எ.கா : தலை வணங்கினான்.

---

**4. தொகை நிலைத் தொடர் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**

**விடை :**

★ தொகை நிலைத் தொடர் ஆறு வகைப்படும். அவை,

★ வேற்றுமைத் தொகை, வினைத் தொகை, பண்புத் தொகை, உவமைத் தொகை, உம்மைத் தொகை, அன்மொழித் தொகை என்பனவாகும்.

---

**5. வேற்றுமைத் தொகையைச் சான்றுடன் விவரி.**

**விடை :**

★ வேற்றுமை உருபுகள் மறைந்து வரும் தொடர் வேற்றுமைத் தொகையாகும்.
எ.கா : மதுரை சென்றார் – மதுரைக்குச் சென்றார்.

---

**6. வினைத் தொகையைச் சான்றுடன் விவரி.**

**விடை :**

★ காலம் கரந்த பெயரேச்சமே வினைத் தொகையாகும்
எ.கா : வீசு தென்றல் (வீசிய, வீசுகின்ற, வீசும் தென்றல்)

---

**7. பண்புத் தொகையைச் சான்றுடன் விளக்குக.**

**விடை :**

★ நிறம், வடிவம், சுவை, அளவு போன்றவற்றை உணர்த்தும் பண்புப் பெயருக்கும் அது தழுவி நிற்கும் பெயர்ச்சொல்லுக்கும் இடையில் "மை" என்னும் பண்பு விகுதியும்ஆகிய, ஆன என்னும் பண்பு உருபுகளும் மறைந்துநின்று பொருள் தருவது பண்புத் தொகை ஆகும்.
எ.கா : செந்தாமரை – செம்மையாகிய தாமரை.

---

**8. உவமைத் தொகை என்றால் என்ன ? சான்றுடன் விளக்குக.**

**விடை :**

★ உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது உவமைத் தொகை எனப்படும்
எ.கா : கயல்விழி – கயல் போன்ற விழி

---

**9. உம்மைத் தொகையைச் சான்றுடன் விளக்குக.**
**விடை :**

★ சொற்றொடரில் இரு சொற்களுக்கு இடையில் "உம்" என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகையாகும்.

எ.கா : அண்ணன் தம்பி (அண்ணனும் தம்பியும்)

---

**10. அன்மொழித் தொகையைச் சான்றுடன் விளக்குக.**
**விடை :**

★ தொகைநிலைத் தொடர்களில் அவை அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருவது அன்மொழித் தொகையாகும்.

எ.கா : சிவப்புச் சட்டை பேசினார்.

(சிவப்பு சட்டை **அணிந்தவர்** பேசினார் எனத் தொகைநிலைத் தொடர் அல்லாத சொல் மறைந்து நின்று பொருள் தருகிறது.)

---

பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். – இப்பத்தியில் தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக. (பெ.ஆ.க–1)**
**விடை :**

★ மல்லிகைப்பூ – இருபெயரொட்டுப் பண்புத் தொகை
மல்லிகை – சிறப்புப் பெயர்
பூ – பொதுப்பெயர்

★ பூப்பறித்த – இரண்டாம் வேற்றுமைத் தொகை
பூவைப் பறித்த

★ பூப்பறித்த பூங்கொடி – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையோடு "பறித்த பூங்கொடி" என முடிவதால் – அன்மொழித் தொகை.

★ தண்ணீர்த் தொட்டி – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை (தண்ணீரை உடைய தொட்டி)

★ குடிநீர் – வினைத் தொகை

★ சுவர்க்கடிகாரம் – ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை (சுவரின் கண் உள்ள கடிகாரம்)

★ ஆடுமாடுகள் – உம்மைத் தொகை

★ மணி பார்த்தாள் – இரண்டாம் வேற்றுமைத் தொகை (மணியைப் பார்த்தாள்)

---

**கற்பவை கற்றபின்**

**வண்ணமிட்ட தொகைச் சொற்களை வகைப்படுத்துக**

1. **அன்புச் செல்வன்** திறன்பேசியின் **தொடுதிரை**யில் படித்துக்கொண்டிருந்தார்.
2. அனைவருக்கும் **மோர்ப்பானை**யைத் திறந்து **மோர் கொடுக்கவும்.**
3. **வெண்டைக்காய்ப்** பொரியல் **மோர்க்குழம்பு**க்குப் பொருத்தமாக இருக்கும்.
4. **தங்கமீன்கள் தண்ணீர்த்தொட்டி**யில் விளையாடுகின்றன.

**விடை :**

1. **அன்புச்செல்வன்** – இருபெயரொட்டுப் பண்புத் தொகை
**தொடுதிரை** – வினைத் தொகை

2. **மோர்ப்பானை** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை
**மோர் கொடுக்கவும்** – இரண்டாம் வேற்றுமைத் தொகை

3. **வெண்டைக்காய், மோர்க்குழம்பு** – இருபெயரொட்டுப் பண்புத் தொகைகள்

4. **தங்கமீன்கள்** – உவமைத் தொகை
**தண்ணீர்த் தொட்டி** – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை

இயல் 2. ஊ

## மொழியை ஆள்வோம் (மொழிப்பயிற்சி)

அ) படித்துச்சுவைக்க :

*அந்த இடம்*
*காற்றே ! வா*
*உன்னைப் பாடாமல்*
*இருக்க முடியாது*
*ஏனெனில்*
*பாட்டின் மூல ஊற்றே*
*நீதான்*
.......................
......................

*பொய்கையிடம் போனால்*
*குளிர்ந்து போகிறாய்*
*பூக்களைத் தொட்டால்*
*நறுமணத்தோடு வருகிறாய்*

*புல்லாங்குழலில் புகுந்தால்*
*இசையாகிவிடுகிறாய்*
*எங்களிடம்*
*வந்தால் மட்டுமே*
*அழுக்காகி விடுகிறாய்*

*மரங்களின்*
*ஊமை நாவுகள்*
*உன்னிடம் மட்டுமே*
*பேசுகின்றன*

*கடல் அலைகள்*
*உன்னோடு மட்டுமே*
*குதித்துக் கும்மாளமிடுகின்றன*
*வயலின் பச்சைப் பயிர்கள்*
*நீ வந்தால் மட்டுமே*
*ஆனந்த நடனம்*
*ஆடுகின்றன*

*நீ என்ன குதூகலமா ?*
*கொண்டாட்டமா ?*
*கோலாகலமா ?*

*நெடுநாட்களாகவே*
*எனக்கொரு சந்தேகம்*

*விளக்குகளிலிருந்து*
*பறிக்கும் சுடர்களை*

*பூக்களிலிருந்து*
*திருடும் நறுமணத்தை*

*வீணையிலிருந்து*
*கவர்ந்த இசையை*

*எங்கே கொண்டு போய்*
*ஒளித்து வைக்கிறாய் ?*

– அப்துல் ரகுமான்

**ஆ) தமிழில் மொழிபெயர்த்து தலைப்பிடுக.**

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant. **(அ.மா.வி) (பெ.ஆ.க – 1)**

**விடை:**

**புலரும் காலைப்பொழுது**

பொன்னிறம் போன்ற சூரியன், அதிகாலையில் தோன்றிப் பிரகாசமான ஒளிக்கதிர்களைக் கொண்டு உலக இருளைப் போக்குகிறது. பால் போன்ற வெண்ணிற மேகங்கள் உலாவ தொடங்குகின்றன. வண்ணமயமான பறவைகள் தங்கள் காலை ஓசையால் மகிழ்ச்சி அடைகின்றன. அழகிய பட்டாம்பூச்சிகள், மலர்களைச் சுற்றி நடனமாடுகின்றன. பூக்களின் வாசனை, தென்றல் காற்றை நிரப்புகின்றது. காற்று எல்லா இடங்களிலும் வீசி மகிழ்வூட்டுகிறது.

**இ) சொற்களில் மறைந்துள்ள தொகைகளை அடையாளம் கண்டு தொடரில் அமைக்க.**
**இன்சொல், எழுகதிர், கீரிபாம்பு, பூங்குழல் வந்தாள், மலை வாழ்வார், முத்துப்பல்**
**எ.கா : இன்சொல் – பண்புத்தொகை – இனிமையான சொல் கூறுதல் சான்றோர்க்கு அழகு.**
**விடை :**

1. **எழுகதிர்** – வினைத்தொகை – அதிகாலையில் எழுகதிர் ஒலியால் தோட்டத்தில் பூக்கள் பூத்துக்குலுங்கின.
2. **கீரிபாம்பு** – உம்மைத்தொகை – கீரியும் பாம்பும் எப்பொழுதும் பகையோடு வாழும்.
3. **பூங்குழல் வந்தாள்** – அன்மொழித் தொகை – தாய் அழைத்தபோது பூ போன்ற கூந்தலாள் வந்தாள்.
4. **மலை வாழ்வர்** – ஏழாம் வேற்றுமைத் தொகை – மலை வாழ்வார் மிகுந்த ஆரோக்கியத்துடன் இருப்பர்
5. **முத்துப்பல்** – உவமைத்தொகை – மாலதி முத்துப்பல் வரிசை தெரியும்படி சிரித்தாள்.

---

**கூடுதல் வினா :**
**6. எழுகதிர், முத்துப்பல் – இச்சொற்களில் மறைந்துள்ள தொகைகள் முறையே .......... (பெ.ஆ.க – 2)**
**விடை :**

அ) வினைத்தொகை, பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை, வினைத்தொகை
இ) உவமைத் தொகை ஈ) வினைத்தொகை, உவமைத்தொகை

**விடை : ஈ) வினைத்தொகை, உவமைத்தொகை**

---

**ஈ) செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

**பூக்களைப் பற்றிய அரியஇலக்கியச் செய்திகள்**

பூ உண்டு, ஆனால் கண்ணிற்குக் காட்சி தராமல் காண்பதற்கு அரியனவாய் இருக்கும் மலர்கள் ஆல மலர், பலா மலர்.

மலர் உண்டு : பெயரும் உண்டு: ஆனால் இதுதான் அது என்று உறுதியாக அறிய இயலாதுள்ள நிலையில் இருக்கும் மலர்கள் : கள்ளி மலர், பாங்கர் மலர்.

அகவிதழ் முதலிய உறுப்புகள் இருந்து அவை புறத்தே காட்சிப்படாமல் உள்ளேயே பொதிந்திருக்கும் மலர்கள் : அத்தி, ஆலம், கொழிஞ்சி, பலா.

பயன்பாடு, நாற்றம், மக்களது விருப்பில் இடம்பெறாமை, பொதுவில் ஒதுக்கப்பட்டமை கொண்டு மலரில் சில எளியவை ஆகின்றன. அவையாவன : நெருஞ்சி, எருக்கு, பூளை, குரீஇப் பூளை, வேளை, ஊமத்தம், கள்ளி, முருங்கை.

இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பறித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மணத்தை ஏற்றும். மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும். – கோவை. இளஞ்சேரன்

**வினாக்கள் :**

**1. மலர் உண்டு : பெயரும் உண்டு – இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக. (பெ.ஆ.க–2)**
**விடை :**

மலரும் பெயரும் உண்டு.

**2. அரும்பாகி மொட்டாகிப் பூவாகி.... என்பதை ஒத்து அமைந்துள்ள தொடரைக் கண்டறிக.**
**விடை :**

மூங்கில் பூவில் காய் தோன்றிக் கனியாகி அதிலிருந்து ஒருவகை அரிசி தோன்றும். இது மூங்கில் அரிசி எனப்படும்.

**3. நீங்கள் அறிந்த சில பூக்களின் பெயர்களையும் பயன்களையும் எழுதுக.**
**விடை :**

1) வாழைப்பூ – இதனை உணவில் சேர்த்து வந்தால் செரிமான செயல்பாடு சீராகும்.
2) வேப்பம்பூ – இது பூச்சிகள் மற்றும் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் கொண்டது.

**4. அரிய மலர் – இலக்கணக் குறிப்பு தருக.**
**விடை :**

அரிய மலர் – பண்புத் தொகை

**5. தொடரில் பொருந்தாப் பொருள்தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்துக. இலுப்பைப் பூக்கள் இனிப்பானவை. கரடிகள் மறத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்குத் தன் மனத்தை ஏற்றும். (பெ.ஆ.க – 2)**
**விடை :**

மறத்தின் – மரத்தின்
பரித்து – பறித்து
மனத்தை – மணத்தை

---

## உ) வாழ்த்து மடல் எழுதுக

**1) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 4)**
**விடை :**

நாகமலை
தேதி:...................

அன்புள்ள நண்பன் புகழேந்திக்கு,

இங்கு நான், பெற்றோர், தங்கை அனைவரும் நலமாக உள்ளோம். அங்கு நீயும், உன் பெற்றோரும், இளைய சகோதரனும் நலமுடன் வாழ இறைவனை வேண்டுகிறேன். மரம் இயற்கையின் வரம் என்ற தலைப்பில் நீ எழுதிய கட்டுரை முதல் பரிசைப் பெற்றதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

இன்றைய காலச் சூழலில் நீ முதல் பரிசு பெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்ற கட்டுரை மிகவும் பயனுள்ள கட்டுரையாகும். அதில் என்னைக் கவர்ந்த வரிகள், "மரம் வளர்ப்போம் இயற்கையைக் காப்போம்". சாலை விரிவாக்கம், புதிதாக வீடுகள், தொழிற்சாலைகள் போன்ற காரணங்களினால் மரங்கள் அதிக அளவில் வெட்டப்படுவதால் புவி வெப்பம் அடைந்து மனித அழிவை நோக்கி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனை தவிர்க்கவே மனிதர்களுக்கு மரம் வளர்ப்பின் முக்கியத்துவத்தை அற்புதமாக உணர்த்தியுள்ளாய்.

நீ குறிப்பிட்டுள்ள "வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம்" என்ற நிலை மாறி, "ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்" என்பதே சரி. எனவே, இயற்கை அழிவை காக்க, வெப்பம் தவிர்க்க முதற்காரணியாக மரங்களை நட்டு வளர்க்க வேண்டும் என்ற கூற்று மிகவும் அற்புதம் ஆகும்.

மேலும் இன்றிருக்கும் நிலையே தொடர்ந்தால் இன்னும் 10 ஆண்டுகளில் தமிழகம் பாலைவனமாகும் என்று நீ கூறியது என்னைச் சிந்திக்க வைத்துள்ளது. இதன் விளைவாக நானும் என்னைச் சுற்றியுள்ளவர்களும் மரம் வளர்ப்பதில் ஆர்வம் கொண்டு மரம் வளர்க்க ஆவலாக உள்ளோம்.

வாழ்த்துக்கள்
வாழ்க !வளர்க !

உன் அன்பு நண்பன்
ந.கம்பன்

உறைமேல் முகவரி
பெறுநர்:
மு.புகழேந்தி
எண்: 5, முல்லை தெரு,
திருச்சி.

---

**2. எழுத்தர் பணியினை வேண்டி, வேலைவாய்ப்பிற்காகக் கொடுக்கப்பட்டத் தன்விவரப்பட்டியலைப் பூர்த்தி செய்க. (பெ.ஆ.க – 5)**

**பணி வாய்ப்பு வேண்டித் தன்விவரப்பட்டியல்**

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | **ர. விஜயலெட்சுமி** |
| 2. பாலினம் | : | **பெண்** |
| 3. பிறந்த தேதி மற்றும் வயது | : | **––––––––––** |
| 4. தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் | : | **க.ரவிக்குமார்** |
| 6. வீட்டு முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | **21, நெல்லையப்பர் வீதி, மதுரை. 625006** |
| 7. தொலைபேசி / அலைபேசி எண் | : | **98421xxxxx** |
| 8. பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற மதிப்பெண் | : | **482 / 500** |
| 9. தாய்மொழி | : | **தமிழ்** |
| 10. பயின்ற மொழிகள் | : | **தமிழ் மற்றும் ஆங்கிலம்** |
| 11. தட்டச்சு | : | **தமிழ் மற்றும் ஆங்கிலம் மேல்நிலை** |
| 12. கணினி தகுதி | : | **டேலி** |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதியளிக்கிறேன். தங்கள் நிறுவனத்தில் **எழுத்தர்** பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதி அளிக்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
**ர. விஜயலெட்சுமி**

---

**3) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்தும், பழுதடைந்த மின்கம்பங்களைச் சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக. (பெ.ஆ.க – 5)**

**விடை :**

அனுப்புநர்:
க. மதியரசன். (தெருவாழ் மக்கள் சார்பாக)
140, பாரதிதாசன் சாலை,
கடலூர்.

பெறுநர் :
மாநகராட்சிஆணையர் அவர்கள்
கடலூர் மாநகராட்சி
கடலூர்

ஐயா,

பொருள் : சாலை சீரமைப்பு மற்றும் மின்கம்பங்களைச் சரிசெய்துதர வேண்டுதல்.

நாங்கள் வாழும் பகுதியில் சமீபத்தில் உருவான "தானே" புயலின் தாக்கத்தால் சாலைகளில் மரங்களும் மின்கம்பங்களும் சாய்ந்து கிடக்கின்றன. மேலும் புயலால் பெய்த பெருமழையின் காரணமாக சாலைகளும் சிதைந்துவிட்டன. வாகனப்போக்குவரத்து இல்லாமலும், பகுதி முழுவதும் பல நாட்களாக மின்சாரம் இல்லாமலும் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. இதனால் பல சமூக விரோதமான நிகழ்வுகள் நடக்கின்றன. மக்கள் மிகவும் அச்சத்தில் உள்ளனர். எங்கள் வட்டத்திலுள்ள மாநகராட்சி அலுவலகத்திலும் பலமுறை கூறிவிட்டோம். யாரும் மரங்களை அகற்றிச் சாலையையும், மின்கம்பங்களையும் செப்பம் செய்ய நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளோம்.

இந்தச்சாலையில் விழுந்துள்ள மரங்களை அகற்றி, சாலையையும், மின் கம்பங்களையும் செப்பனிட்டு உதவுமாறு தங்களைப்பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி.

தங்கள் பணிவுள்ள
க. மதியரசன்

கோவை
6.7.2019

உறைமேல் முகவரி
பெறுநர் :
மாநகராட்சி ஆணையர்,
கடலூர் மாநகராட்சி,
கடலூர்.

---

**4. எண் – 6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னைப் பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியலை நிரப்புக. (செப்–20)**

**விடை :** **தன் விவரப் பட்டியல்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூங்கொடி |
| பிறந்த நாள்/வயது | : | ................ |
| பாலினம் | : | பெண் |
| தந்தையின் பெயர் | : | தமிழரசு |
| முகவரி | : | எண்6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டம். |
| 10 ஆம் வகுப்பில் | | |
| பெற்ற மதிப்பெண்கள் | : | 480 |
| பட்டப்படிப்பு | : | பி.சி.ஏ. |
| தாய்மொழி | : | தமிழ் |
| பயின்ற மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம் |
| கணினி | : | வேர்டு, பவர் பாயிண்ட், வேர்டு எக்ஸெல், டாலி |

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் கணினிப் பயிற்றுநர் பணி தந்தால் என் பணியைச் சிறப்பாகச் செய்வேன் என உறுதி கூறுகிறேன்.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
பூங்கொடி

---

**ஊ) பாரதியின் வசன நடை – சிட்டுக்குருவி**

சிறிய தானியம் போன்ற மூக்கு: சின்னக் கண்கள் : சின்னத்தலை: வெள்ளைக் கழுத்து : அழகிய மங்கல் வெண்மை நிறமுடைய பட்டுப்போர்த்த வயிறு: கருமையும் வெண்மையும் கலந்த சாம்பல் நிறத்தாலாகிய பட்டுப் போர்த்த முதுகு : சிறிய தோகை : துளித்துளிக் கால்கள்: இத்தனையும் சேர்த்து ஒரு பச்சைக் குழந்தையின் கைப்பிடியிலே பிடித்து விடலாம். இவ்விதமான உடலைச் சுமந்துகொண்டு என் வீட்டிலே இரண்டு உயிர்கள் வாழ்கின்றன. அவற்றில் ஒன்று ஆண் மற்றொன்று பெண்.

**– இதுபோன்று உங்களுக்குப் பிடித்த ஏதேனும் ஒன்றைப் பற்றி வசனநடையில் எழுதுக.**

**விடை :**

**வசனநடை – மயில்**

நீண்ட கழுத்து: பார்க்கத் துடிக்கும் தோற்றம்: அனைவரையும் மயங்கச் செய்யும் அழகு: நீண்ட ஒலி எழுப்பும். வண்ணமயமான தோகையில் வரிசையாகக் கண் வடிவங்கள் நிறைந்திருக்கும். நீலம் கலந்த பச்சை வடிவமுடையவை. காண்போரை கொள்ளை கொள்ளும் மயிலின் அழகே அழகு.

---

# இயல் 2. எ — மொழியோடு விளையாடு

**அ) சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**

**1. முதல் இரண்டை நீக்கினாலும் வாசனை தரும் : நீக்காவிட்டாலும் வாசனை தரும். (பெ.ஆ.க – 6)**

**விடை:** நறுமணம்

**2. பழமைக்கு எதிரானது – எழுதுகோலில் பயன்படும்.**

**விடை:** புதுமை

**3. இருக்கும்போது உருவமில்லை – இல்லாமல் உயிரினம் இல்லை.**

**விடை:** காற்று

**4. நாலெழுத்தில் கண் சிமிட்டும் – கடையிரண்டில் நீந்திச்செல்லும்**

**விடை:** விண்மீன்

**5. ஒரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம். (பெ.ஆ.க – 6)**

**(காடு, புதுமை, விண்மீன், காற்று, நறுமணம்)**

**விடை:** காடு

---

**ஆ) நயமிகு தொடர்களைப் படித்து ஏற்ற தலைப்புகளை எடுத்தெழுதுக.**

**1. கொளுத்தும் வெயில் சட்டெனத் தணிந்தது, வானம் இருண்டது, வாடைக்காற்று வீசியது.**

**விடை:** காற்றின் பாடல்

**2. புவி சிலிர்த்தது, மண்ணிலிருந்து சின்னஞ்சிறு மொட்டு முகிழ்ந்தது: அச்செடியை வரவேற்கும் விதமாக பக்கத்துச் செடிகள் தலையாட்டி மகிழ்கின்றன.**

**விடை:** மொட்டின் வருகை

**3. சோலைக்குள் சத்தமில்லாமல் வீசியது தென்றல் : பூக்கள் அதன் வருகையை உணர்ந்து நறுமணத்துடன் வரவேற்கின்றன. பூவாசம் கலந்த தென்றலில் வண்டுகள் மிதந்து சென்று மலர்களில் அமர்கின்றன.**

**விடை:** மிதக்கும் வாசம்

**4. இரவின் இருளமைதியில் இரைச்சலாய்ச் சில சுவர்க்கோழிகள். வறண்ட வானத்தின் இருண்ட புழுக்கம் : மழைக்கு ஏங்கும் புவி வெப்பப் பெருமூச்சு விடும் : கசகசத்த உயிரினங்கள்.**

**விடை:** உயிர்ப்பின் ஏக்கம்

**5. நின்றுவிட்ட மழைதரும் குளிர் : சொட்டுச் சொட்டாக விளிம்புகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் விழும் மழைநீர் பட்டுச் சிலிர்க்கும் உயிரினம்.**

**விடை:** நீரின் சிலிர்ப்பு

**6. குயில்களின் கூவலிசை. புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும். இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம்.**

**(வனத்தின் நடனம், மிதக்கும் வாசம், காற்றின் பாடல், மொட்டின் வருகை, உயிர்ப்பின் ஏக்கம், நீரின் சிலிர்ப்பு) (செப் – 20)**

**விடை:** வனத்தின் நடனம்

---

**இ) அகராதியில் காண்க :**

**அகன்சுடர், ஆர்கலி, கட்புள், கொடுவாய், திருவில்**

**விடை :**

| | | |
|---|---|---|
| **அகன்சுடர்** | – | அகன்ற சுடர், பரந்து விரிந்த சுடர் (கதிரவன்) |
| **ஆர்கலி** | – | நிறைந்த ஒலி, கடல், மழை, வெள்ளம் |
| **கட்புள்** | – | பறவை |
| **கொடுவாய்** | – | வாள் முதலியனவற்றின் வளைந்த வாய், பழிச்சொல், மிருகம். |
| **திருவில்** | – | சிறப்புடைய வில், வானவில் |

**ஈ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக: (பெ.ஆ.க – 5)**

**விடை :**



சுவாசிக்கும் காற்று
அசுத்தம் ஆனது
இருக்கும் நிலம்
இயல்பு மாறியது
ஓசோன் மண்டலம்
ஓட்டையானது
மனிதா ! விழித்துக்கொள்
மாசுபட்டு அழிந்துவரும்
இயற்கை வளங்களை
காப்பாற்று.

**படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.**

**விடை :**

1) காற்றுக்கும் வேலி அமைத்தாய்
2) மூச்சுக்காற்றுக்கும் விலை கொடுத்தாய்
3) உயிர்வாழ தாவரத்தைச் சுமக்கிறாய்
4) யார் செய்த பிழை
5) நமக்கு நாமே நாம் செய்த பிழையே ஆகும்.

**உ) செயல்திட்டம்**

தூய்மையான காற்றைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்துப் படத்தொகுப்பு உருவாக்குக.

**நிற்க அதற்குத் தக**

**வானொலி அறிவிப்பு**

**ஜல் புயல் சென்னைக்கு தென்கிழக்கே 150 கி.மீ தொலைவில் மையம் கொண்டுள்ளது. இன்று இரவு சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

**புயலின்போது**

| | |
|---|---|
| புயலின்போது வெளியே செல்லவேண்டாம் | வெளியேற நேர்ந்தால் ஆரம்பகட்ட எச்சரிக்கையின்போதே வெளியேறவும். |
| தொலைபேசி, மின்சாதனங்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் | மாடியில் இருப்பதைத் தவிர்த்துத் தளப்பகுதியிலேயே தங்கவும். |
| வானொலி அறிவிப்பைக் கேட்டுப் பின்பற்றவும் | காற்று அடிப்பது நின்றாலும், எதிர்த்திசையிலிருந்து மறுபடி வேகமாக வீச ஆரம்பிக்கும். எனவே, காற்றடிப்பது முடிந்து விட்டதாக நினைக்கவேண்டாம். |
| மீனவர்கள் கடலுக்குச் செல்வ தைத் தவிர்க்கவும். | வாகனத்தை ஓட்ட நேர்ந்தால் கடற்கரைப் பகுதிகளுக்குத் தொலைவிலும், மரங்கள் மின்கம்பிப் பாதைகள், நீர் வழிகள் ஆகியவற்றிலிருந்து விலகியும் வாகனத்தின் உள்ளேயே தங்கியிருக்கவும். |

**மேற்கண்ட அறிவிப்பைக் கேட்ட நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.**

**விடை :**

1. வானொலி அறிவிப்பைக் கவனமுடன் கேட்பேன்
2. புயலின்போது வெளியே செல்வதைத் தவிர்த்து விடுவேன்.
3. தொலைபேசி, மின்சாதனப் பொருட்கள் பயன்படுத்துவதைத் தவிர்க்கச் செய்வேன்
4. மீனவ நண்பர்களைக் கடலுக்குச் செல்வதைத் தவிர்க்கச் செய்வேன்.
5. வீடு, அலுவலகங்களில் உள்ள தரைத்தளப் பகுதியிலேயே தங்கச் செய்வேன்.
6. வாகனங்களை கவனமாக இயக்கச் சொல்லுவேன்.
7. காற்றின் வேகம் அதிகமாக இருக்கும் போது வெளியே செல்வதைத் தவிர்க்கச் செய்வேன்.
8. சாலைகளில் நடக்கும்போது கவனித்துச் செல்ல அறிவுறுத்துவேன்.

---

## ஊ. கலைச்சொல் அறிவோம்

Storm – புயல்
Tornado – சூறாவளி
Tempest – பெருங்காற்று
Land Breeze – நிலக்காற்று
Sea Breeze – கடற்காற்று
Whirlwind – சுழல்காற்று

---

**கூடுதல் வினா :**
**கலைச்சொல் தருக (பெ.ஆ.க – 6)**

1. அ) Tornado – சூறாவளி
 ஆ) Tempest – பெருங்காற்று

---

## எ. அறிவை விரிவு செய்

1. குயில்பாட்டு – **பாரதியார்**
2. அதோ அந்தப் பறவை போல – **ச. முகமது அலி**
3. உலகின் மிகச் சிறிய தவளை – **எஸ். ராமகிருஷ்ணன்**

| இயல் மூன்று | இயல் 3. கூட்டாஞ்சோறு |
|---|---|

உரைநடை உலகம்

| இயல் 3. அ | விருந்து போற்றுதும்! (உரைநடை) |
|---|---|

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. பின்வருவனவற்றுள் முறையான தொடர் .......... (பெ.ஆ.க–4)**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்குஇடமுண்டு.

**விடை: இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**

**2. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை.........**

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

**விடை: ஆ) இன்மையிலும் விருந்து**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. "மருந்தே ஆயினும் விருந்தோடு உண்" என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்......... (அ.மா.வி) (பெ.ஆ.க –1)**

அ) குறுந்தொகை ஆ) கொன்றை வேந்தன்
இ) திருக்குறள் ஈ) நற்றினை

**விடை: ஆ) கொன்றை வேந்தன்**

**4. "சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன"– இத்தொடரில் அமைந்துள்ள தொகைச்சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 5)**

அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை – நல்வினை, தீவினை
ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை
இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் – அறம், பொருள், இன்பம்
ஈ) குறிஞ்சி, மலை, முல்லை, காடு, மருதம், வயல், நெய்தல், கடல் – பனை திணை

**விடை: ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை**

**5. "காலின் ஏழடிப் பின்சென்று" – என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி ........ (பெ.ஆ.க – 6)**

அ) விருந்தினரின் காலைத் தொட்டு வணங்கினர்
ஆ) விருந்தினரை ஏழு அடிவரை நடந்து சென்று வழியனுப்பினர்.
இ) எழுவர் விருந்தினரின் பின்சென்று வழியனுப்பினர்.
ஈ) ஏழு நாட்கள் விருந்தளித்துப் பின் விருந்தினரை வழியனுப்பினர்.

**விடை: ஆ) விருந்தினரை ஏழு அடிவரை நடந்து சென்று வழியனுப்பினர்.**

**6. "விருந்தே புதுமை" என்று கூறும் நூல்..........**

அ) கம்பராமாயணம் ஆ) தொல்காப்பியம்
இ) மகாபாரதம் ஈ) பிங்கல நிகண்டு **விடை: ஆ) தொல்காப்பியம்**

**7. விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே அமைத்தவர்.............**

அ) கம்பர் ஆ) ஔவையார்
இ) திருவள்ளுவர் ஈ) இளங்கோவடிகள் **விடை: இ) திருவள்ளுவர்**

**8. விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்கவேண்டும் என்பதை "மோப்பக்குழையும் அனிச்சம்" என்ற குறளில் எடுத்துரைத்தவர்.............**

அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள்
இ) திருவள்ளுவர் ஈ) ஜெயங்கொண்டார் **விடை: இ) திருவள்ளுவர்**

**9. "தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்கோடலும் இழந்த என்னை" – என்ற பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் ...........**

அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) கம்பராமாயணம் ஈ) மகாபாரதம் **விடை: அ) சிலப்பதிகாரம்**

**10. "தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர்கோடலும் இழந்த என்னை" – என வருந்தியது.........**

அ) மாதவி ஆ) கண்ணகி
இ) சீதை ஈ) குந்தி **விடை: ஆ) கண்ணகி**

**11. விருந்தினரைப் போற்றிப்பேணல் பழந்தமிழர் மரபு என்பதை உணர்த்தியவர்.............**

அ) ஔவையார் ஆ) கம்பர்
இ) ஜெயங்கொண்டார் ஈ) இளங்கோவடிகள் **விடை: ஈ) இளங்கோவடிகள்**

**12. கலிங்கத்துப்பரணியில் விருந்தினருக்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாக்கிக் கூறியவர்.............**

அ) இளங்கோவடிகள் ஆ) செயங்கொண்டார்
இ) கம்பர் ஈ) திருவள்ளுவர் **விடை: ஆ) செயங்கொண்டார்**

**13. "அல்லின் ஆயினும் விருந்துவரின் உவக்கும்" – எனக்குறிப்பிடும் நூல் ............**

அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) நற்றிணை ஈ) குறுந்தொகை **விடை: இ) நற்றிணை**

**14. கூற்று 1: விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்.**

**கூற்று 2: அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாமல் பிறருக்கும் கொடுப்பார் நல்லோர்.**

அ) கூற்று 1 மட்டும் சரி ஆ) கூற்று 1, 2 இரண்டும் சரி
இ) கூற்று 1 தவறு ஈ) கூற்று 1, 2 இரண்டும் தவறு

**விடை: ஆ) கூற்று 1, 2 இரண்டும் சரி**

**15. இளையான்குடி மாறநாயனார் சிவனடியார்க்கு விருந்தளித்த வரலாற்றைக் கூறும் நூல் ................**

அ) கம்பராமாயணம் ஆ) விஷ்ணு புராணம்
இ) பெரிய புராணம் ஈ) கந்த புராணம் **விடை: இ) பெரிய புராணம்**

**16. சிறுபானாற்றுப்படை ............ நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது**

அ) குறிஞ்சி ஆ) பாலை
இ) மருதம் ஈ) நெய்தல் **விடை: ஈ) நெய்தல்**

**17. "பலர்புகு வாயில் அடைப்பக்கடவுளர்**
**வருவீர் உளீரோ" – இவ்வடிகள் இடம்பெற்ற நூல்**

அ) கம்பராமாயணம் ஆ) கலிங்கத்துப்பரணி
இ) புறநானூறு ஈ) குறுந்தொகை **விடை : ஈ) குறுந்தொகை**

**18. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்று பாடியவர் ..............**

அ) ஔவையார் ஆ) கம்பர்
இ) திருவள்ளுவர் ஈ) அதிவீரராம பாண்டியர் **விடை: அ) ஔவையார்**

**19. தமிழர் பண்பாட்டில்............ இலைக்கு தனித்த இடமுண்டு**

அ) தாமரை ஆ) தேக்கு
இ) வாழை ஈ) பப்பாளி **விடை: இ) வாழை**

**20. அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் ............ விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது.**

அ) வெற்றிலை ஆ) வாழையிலை
இ) மாவிலை ஈ) தாமரை இலை **விடை: ஆ) வாழையிலை**

---

பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி" என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.**

**விடை :**

★ இளையான்குடி மாறநாயனாரின் வீட்டுக்கு வந்த சிவனடியார்க்கு விருந்தளிக்க அவரிடம் தானியம் இல்லை. ஆகையால் அன்று வயலில் விதைத்துவிட்டு வந்த விதை நெல்லை அரித்து வந்து சமைத்து விருந்து படைத்ததாகப் பெரிய புராணம் கூறுகிறது.

★ எனவே, விருந்து அளிக்கச் செல்வம் தேவையில்லை. அன்புடன் கூடிய மனம் இருந்தால் போதும் என்பதை இந்நிகழ்வு உணர்த்துகிறது.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. "விருந்தோம்பல்" – விளக்குக**

**விடை :**

★ தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல் ஆகும்.

---

**3 . விருந்தோம்பல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக ?**

**விடை :**

★ விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் வள்ளுவர், "இல்லறம் செய்வது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே" என்றும், முகம் வேறுபடாமல் முகமலர்ச்சியோடு விருந்தினர்களை வரவேற்க வேண்டும் என்பதை,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து" – என்றும் குறளில் எடுத்துரைக்கிறார்.

---

**4. பழந்தமிழர் மரபு என இளங்கோவடிகள் கூறுவன யாவை ?**

**விடை :**

★ சிலப்பதிகாரத்தில் கோவலனைப் பிரிந்து வாழ்ந்த கண்ணகி, அவனைப் பிரிந்ததைவிட விருந்தினர்களைப் போற்ற முடியவில்லையே என எண்ணியே வருந்தியதாகக் குறிப்பிடுகிறார்.

★ எனவே, விருந்தினர்களைப் போற்றிப்பேணுவது பழந்தமிழர் மரபு என்பதை இளங்கோவடிகள் உணர்த்துகிறார்.

---

**5. விருந்தோம்பலைப் பற்றிக் கம்பரும்,செயங்கொண்டாரும் குறிப்பிடுவன யாவை ?**

**விடை :**

★ கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்ததாகக் கம்பர் குறிப்பிடுகிறார்.

★ கலிங்கத்துப் பரணியில் செயங்கொண்டார், விருந்தினர்க்கு உணவிடுவோரின் முகமலர்ச்சியை உவமையாகக் குறிப்பிடுகிறார்.

---

**6. விருந்தோம்பல் குறித்துப் புறநானூறு கூறுவன யாவை ?**

**விடை :**

★ தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை என்றும், அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர் என்றும் புறநானூறு குறிப்பிடுகிறது.

**7. விருந்தோம்பல் குறித்து நற்றிணை குறிப்பிடுவதை எழுதுக.**

**விடை :**

★ விருந்தோம்பல் என்பது, பெண்களின் தலையாய பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. தங்கள் வீட்டிற்கு நடுஇரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நற்பண்பு குடும்பத் தலைவிக்கு உண்டு என்று நற்றிணை குறிப்பிடுகிறது.

---

**8. நெய்தல் நில மக்களின்விருந்தோம்பல் முறையை விளக்குக.**

**விடை :**

★ நெய்தல் நிலத்தவர்கள், பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்து விருந்தோம்பினர் என சிறுபாணாற்றுப் படை குறிப்பிடுகிறது.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. முல்லை நிலத்திலிருந்தும் மருத நிலத்திலிருந்தும் கிடைக்கும் உணவுப்பொருள்கள் யாவை ?. (பெ.ஆ.க–3)**

**விடை : முல்லை நில உணவுப் பொருள்கள் :**

★ இயற்கையாய்க் கிடைக்கும் உணவுகளான வரகு, தினை, சாமை, முதிரை மற்றும் நெய், பால் போன்ற உணவுகளையே பயன்படுத்தினர்.

**மருதநில உணவுப் பொருள்கள் :**

★ வயலும் வயல் சார்ந்த இடங்களில் விளைகின்ற செந்நெல், வெண்ணெல் போன்ற உணவுகளையே பயன்படுத்தினர்.

---

**2. புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.**

**திருவிழாக்காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.**

**இப்படியாகக் கால மாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்களை குறித்த கருத்துகளை எழுதுக. (பெ.ஆ.க–3)**

**விடை :**

★ இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை, முன்பின் அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்றுக் கொள்வதுமில்லை.

★ காலப்போக்கில், வீட்டில் நடைபெற்ற விழாக்கள் திருமணக் கூடங்களுக்கு இடம் பெயர்ந்துவிட்டன.

★ பண்பாட்டு மாற்றமாக, இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும் வரை திருமண ஏற்பாட்டாளர்களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுவதைக் காணமுடிகிறது.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**3. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக. (பெ.ஆ.க–5)**

**விடை :**

★ தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.

★ நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

★ தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர்.

★ உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் விரிந்த பகுதியும் வரவேண்டும்.

★ ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம்.

★ இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு

வகைககளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள்.

★ உண்பவர் மனமறிந்து அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

---

**4. விருந்தை எதிர்கொள்ளும் தன்மைகளாகச் சங்க இலக்கியச்சங்கம் கூறிய செய்திகள் யாவை ?**

**விடை :**

★ இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா ? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை,

"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ"

என்று குறுந்தொகை (118) அடிகள் புலப்படுத்துகின்றன.

★ "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்று கொன்றை வேந்தனில் ஔவையார் பாடியுள்ளார். அவர் பாடிய தனிப்பாடலில்,

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும் – திறமுடனே
புள்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந்து இட்டானீ (து)
எல்லா உலகும் பெறும்"

என்று அவர் கூறுவதிலிருந்து வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதை அறியமுடிகிறது.

---

## பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. (செப் – 20)**

**விடை :**

★ தமிழர் மரபில் உணவோடு உணர்வையும் குழைத்துச் செய்த சமையலே விருந்தாகிறது. இதன் அவசியத்தை வலியுறுத்தவே வள்ளுவர், "இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே" என்கிறார்.

★ விருந்தினர் விரும்புவது முகமலர்ச்சியுடன் கூடிய அன்பைத்தான். செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்நோக்கி இருக்கும் தமிழினம் நம் இனம்

★ அத்தமிழினத்தில் உதித்த தமிழர் நாங்கள். எங்கள் இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை எங்கள் குடும்பத்தின் உறுப்பினர்களாக இணைந்து இனிமையான தருணங்களை மலரும் நினைவுகளாக்க நானும் எங்கள் குடும்பத்தினரும் எவ்வாறு விருந்து உபசரித்தோம் என்பதைக் கூறுகிறேன்.

★ திருச்சியைச் சேர்ந்த எங்கள் உறவினரும் அவருடைய குடும்பத்தாரும் மதுரையில் உள்ள எங்கள் வீட்டிற்கு பொங்கல் விடுமுறைக்கு வந்திருந்தனர்.

★ அவர்கள் பேருந்தில் வந்து இறங்கிய அந்நொடியிலிருந்து அவர்களின் விருப்பமே எங்கள் விருப்பமாக மாறியது.

★ ஒவ்வொரு நிமிடமும் புதிதாய்க் கடந்து மகிழ்ச்சியூட்டியது. அவர்களுக்கு விருப்பமான உணவை எங்கள் அம்மா தயார் செய்து உள்ளன்போடு பரிமாறினார்கள்.

★ ஒவ்வொரு நாளும் மதுரையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஒவ்வொரு இடமாக அழைத்துச் சென்று சுற்றிப்பார்த்து அவர்களை மகிழ்வித்தோம்.

★ சில நேரங்களில் வீட்டில் தயார் செய்த உணவுகளையும் சில நேரங்களில் உணவு விடுதிகளிலும் உண்டு மகிழ்ந்தோம்.

★ எங்களுடன் தங்களது குடும்ப நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டது புதுமையாய் இருந்தது.

★ இவையனைத்தும் எங்கள் குடும்பத்தினருக்கும் அவர்கள் மீதுள்ள அன்பின் புரிதலை நிலை நாட்டியது.

★ எங்களோடு தங்கியிருந்த அந்த நான்கு நாட்கள் இனி எப்போது கிடைக்கப்பெறுமோ ? என்ற நினைவுகளோடு திருச்சி சென்று சேர்ந்ததாகக் கூறினர்.

★ தமிழரின் பாரம்பரிய பண்பாடு பாதுகாக்கப்பட்டதை எண்ணி என் மனம் மகிழ்ச்சியில் துள்ளிக் குதித்தது.

"விருந்து போற்றிடுவோம் !"
தமிழர் பாரம்பரியம் காத்திடுவோம் !"

**2. வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினரைப் பேணுதல் தமிழர் பண்பாட்டில் ஈகை–பசித்தவருக்கு உணவிடல் – இவை போன்ற செயல்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதை அழகுற விவரித்து எழுதுக . (பெ.ஆ.க –1)**

**விடை :**

★ தம் வீட்டுக்கு வரும் விருந்தினர்களை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல்.

★ திருவள்ளுவர் இல்லறவியலில் விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரத்தையே அமைத்திருக்கிறார்.

★ தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை என்றும், அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர்.

★ விருந்தோம்பல் என்பது, பெண்களின் தலையாய பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. தங்கள் வீட்டிற்கு நடுஇரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நற்பண்பு குடும்பத் தலைவிக்கு உண்டு.

★ வீட்டிற்கு வந்தவருக்கு வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர்.

★ நெய்தல் நிலத்தவர், பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப் படை (அடி : 163)

★ இல்லத்தில் பலரும் நுழையும் அளவிற்கு உள்ள பெரிய வாயிலை இரவில் மூடுவதற்கு முன்னர், உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா ? என்று கேட்கும் வழக்கம் இருந்ததை,

"பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ"

என்று குறுந்தொகை (118) அடிகள் புலப்படுத்துகின்றன. அவர் கூறிவதிலிருந்து வள்ளல்களால் விருந்தினர் போற்றப்பட்டதை அறியமுடிகிறது.

★ சங்க காலத்திலிருந்தே அரசராயினும் வறியோராயினும் விருந்தினர்களைப் போற்றினர்.

★ புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர் முன்னோர்.

★ இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை. அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை.

★ இருப்பினும், திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காண முடிகிறது.

★ பண்டைத் தமிழர் இல்லங்களிலும் உள்ளங்களிலும் விருந்தோம்பல் பண்பாடு செழித்திருந்தது.

★ அந்த உயரிய தமிழ்ப் பண்பாடு இன்றைய தமிழர்களிடம் மேற்கூறிய முறைகளில் பின்பற்றப்படுகின்றது.

**மொழிப்பயிற்சி**

**அ) விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க :**

**1. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன. (பெ.ஆ.க – 2)**

**விடை :** நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் சத்திரங்கள் யாருக்காகக் கட்டப்பட்டன ?

**2. அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் வாழை இலை விருந்து விழாவை ஆண்டுதோறும் கொண்டாடிவருகிறது. (பெ.ஆ.க – 2)**

**விடை :** அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் எந்த விழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது ?

**3. நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர். (செப் – 20)**
**விடை :** நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்று என்ன கொடுத்தனர் ?

---

**4. தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை.**
**விடை :** தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை யாது ?

---

**ஆ) நிறுத்தற் குறியிடுக :**
**1. மருந்தே ஆயினும் விருந்தொடு உண் என்று ஔவையார் பாடியுள்ளார்.**
**விடை :** "மருந்தே ஆயினும் விருந்தொடு உண் "என்று ஔவையார் பாடியுள்ளார்.

**2. இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை.**
**விடை :** இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்துக் கட்டுவதுமில்லை ; அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பதுவும் இல்லை.

---

**இ) சந்திப்பிழை நீக்கி எழுதுக.**
**1. விருந்தினரை போற்றுதல் இல்லற கடமையாக இருந்தது.**
**விடை :** விருந்தினரைப் போற்றுதல் இல்லறக் கடமையாக இருந்தது.

**2. விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டு சீறியாழை பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு**
**விடை :** விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு.

---

**ஈ) ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக.**
**1. நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டது.**
**விடை :** நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச் செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

**2. அமெரிக்க தமிழ்ச்சங்கத்தினர் பல பண்பாட்டு நிகழ்வுகளை நடத்தி வருகின்றார்.**
**விடை :** அமெரிக்க தமிழ்ச்சங்கத்தினர் பல பண்பாட்டு நிகழ்வுகளை நடத்தி வருகின்றனர்.

---

**உ) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக. (அ.மா.வி)**
**விடை :**

**தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தவர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் "விருந்தே புதுமை" என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.**

**வினா விடைகள் :**
**1. விருந்தினர் என்போர் யாவர் ?**
**விடை :**
முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர்.
**2. விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது ?**
**விடை :**
விருந்தே புதுமை என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.
**3. இவ்வுரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**
**விடை :**
விருந்தோம்பல்

**ஊ) உரையைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் எனப் பெயர் "விருந்தே புதுமை" என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர். அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது. விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. வீட்டிற்கு வந்தவருக்கு, வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை. விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்துவந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது. (பெ.ஆ.க – 6)**

**வினா விடைகள்:**

**(i) விருந்து குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது ?**

**விடை :** "விருந்தே புதுமை" என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**(ii) விருந்தோம்பல் குறித்து சிறுபாணாற்றுப்படை கூறுவது யாது ?**

**விடை :** நெய்தல் நிலத்தவர்கள் பாணர்களை வரவேற்றுக் குழல்மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது.

**(iii) நம் முன்னோர்களின் மகிழ்ச்சி எதில் இருக்கிறது ?**

**விடை :** நம் முன்னோர்களின் மகிழ்ச்சி, அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பதில்தான் இருக்கிறது.

**(iv) பெரியபுராணத்தில் குறிப்பிடப்படும் விருந்தோம்பல் குறித்த செய்தியை எழுதுக.**

**விடை :** விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்துவந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் குறிப்பிடப்படுகிறது.

**(v) பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்று யாது ?**

**விடை :**

பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்று "விருந்தோம்பல்"

---

**எ) படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.**

**விடை :**

1) உண்ண உணவும், இருக்க இடமும் கொடுப்பதே விருந்தோம்பல்.
2) இல்லறம் புரிவது விருந்தோம்பல் செய்யும் பொருட்டே.
3) தனித்து உண்ணாமை தமிழரின் பண்பு.
4) விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்பு.
5) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.



**கற்பவை கற்றபின்**

**1. வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் – இதுபோன்ற செயல்கள் குறித்து உங்கள் வீட்டிலுள்ளவர்களிடம் கேட்டுத் தெரிந்து வந்து கலந்துரையாடல் செய்க.**

**விடை:**

**மாணவர்கள் :** வணக்கம் ஐயா.

**தமிழாசிரியர் :** வணக்கம். அனைவரும் அமருங்கள்

**மாணவர்கள் :** ஐயா. நம் வகுப்பில் "விருந்து போற்றுதும்" என்ற தலைப்பில் கலந்துரையாட அனுமதி வேண்டுகிறோம்.

**தமிழாசிரியர் :** நன்று. மாணவர்களே ! யார் யாரெல்லாம் கலந்து கொள்ளப் போகிறீர்கள். கையை உயர்த்துங்கள்.

**தமிழரசி :** வீட்டில் திண்ணை வைத்து முன்பு கட்டியதன் காரணம் தெரியுமா ?

**அன்பரசு :** ஒ.... தெரியுமே !

**தமிழரசி :** சொல்லுங்கள் பார்ப்போம். நம் வீட்டிற்கு உறவினர்கள் அல்லது வெளியாட்கள் வந்தால் அமர்வதற்கும், இரவில் படுத்து ஓய்வு எடுப்பதற்கும் திண்ணை வைத்துக் கட்டினார்கள்.

**அகிலன் :** நன்று. விருந்து உபசரித்தல் பற்றிக் கூறுங்கள்.

**மாறன் :** வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு அறுசுவை உணவு படைத்து முக மலர்ச்சியோடு உபசரிப்பது தமிழர் பண்பாடுகளில் தலைசிறந்ததாகும்.

**தமிழரசி :** அவ்வாறே! அன்புள்ளத்தோடு பிறருக்கு உதவி செய்தலும் நம் பண்பாட்டின் முக்கிய அம்சமாகும்.

**மாறன் :** நம் வீட்டிற்குப் பசியோடு வரும் யாவருக்கும் இல்லையென்று சொல்லாமல் வறுமையிலும்விருந்து போற்றியதைப் பற்றி இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

**தமிழரசி :** வருந்தி வந்தோர்க்கு உதவுதல், பசித்தவருக்கு உணவளித்தல், விருந்தினர்களை உபசரித்தல் போன்றவை தமிழர் பண்பாட்டின் உயரிய பண்பாகும்.

**தமிழாசிரியர் :** நன்று. நன்றி மாணவர்களே ! மீண்டும் அடுத்த பாடவேளைகளில் தொடர்வோம்.

---

**2. "இட்டதோர் தாமரைப்பூ**
**இதழ்விரித் திருத்தல் போலே**
**வட்டமாய்ப் புறாக்கள் கூடி**
**இரையுண்ணும்................." பாரதிதாசனார்**

**இவ்வாறாகக் கவிதைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள பகிர்ந்துண்ணல் குறித்துப் பேசுக.**

**விடை :**

★ "உயிர்களிடத்து அன்பு வேண்டும் – நல்ல உணர்விது செழித்திடல் வேண்டும்
பயிர்களிடத்தும் பாசம் வேண்டும் – என்றும் பகிர்ந்து உண்ணுதல் வேண்டும் " – பாமணி

★ "காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள" – குறள் :527

★ "கா கா கா
கா கா கா
ஆகாரம் உண்ண எல்லோரும் ஒன்றாக அன்போடு ஓடி வாங்க" – உடுமலை நாராயணகவி

★ "செஞ்சோற்ற பல மாற்றிய
கருங்காக்கை கலவு முனையின்
விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே" – குறுந்தொகை

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" – குறள் : 322

# கவிதைப் பேழை

**இயல் 3. ஆ**

## காசிக்காண்டம்
## – அதிவீரராம பாண்டியர் (செய்யுள்)

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. காசிக்காண்டம் என்பது ..........**

அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

**விடை: இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. சொல்லின் இலக்கணக்குறிப்பைப் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **அ)நன்மொழி** | – | **1) பெயரெச்சம்** |
| **ஆ) வியத்தல்** | – | **2) வியங்கோள் வினைமுற்று** |
| **இ) வருக** | – | **3) தொழிற்பெயர்** |
| **ஈ) உரைத்த** | – | **4) பண்புத்தொகை** |

அ) அ–3, ஆ–2, இ–4, ஈ–1 ஆ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3
இ) அ–1, ஆ–3, இ–2, ஈ–4 ஈ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1 **விடை: ஈ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1**

**3. நன்மொழி என்பதன் இலக்கணக்குறிப்பு..........**

அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை **விடை: அ) பண்புத்தொகை**

**4. காசிக்காண்டத்தில் கூறப்பட்டுள்ள விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கங்களின் எண்ணிக்கை**

அ)ஏழு ஆ) எட்டு
இ) ஒன்பது ஈ) மூன்று **விடை: இ) ஒன்பது**

**5. "இல்லொழுக்கங் கூறிய" பகுதியிலுள்ள பதினேழாவது பாடல் ..........**

அ) காற்றே வா ! ஆ) முல்லைப்பாட்டு
இ) காசிக்காண்டம் ஈ) சுந்தரகாண்டம் **விடை: இ) காசிக்காண்டம்**

**6. முத்துக்குளிக்கும் கொற்கையின் அரசர்...........**

அ) கம்பர் ஆ) அதிவீரராமபாண்டியர்
இ) செங்குட்டுவன் ஈ) இரண்டாம் புலிகேசி

**விடை: ஆ) அதிவீரராமபாண்டியர்**

**7. காசிக்காண்டத்தை இயற்றியவர் ...........**

அ) செயங்கொண்டார் ஆ) குலசேகராழ்வார்
இ) கீரந்தையார் ஈ) அதிவீரராமபாண்டியர் **விடை: ஈ) அதிவீரராமபாண்டியர்**

**8. கீழ்க்கண்டவற்றுள் அதிவீரராம பாண்டியர் இயற்றிய நூல்.........**

அ) சிந்தாமணி ஆ) நளவெண்பா
இ) ஆத்திச்சூடி ஈ) வெற்றி வேற்கை **விடை: ஈ) வெற்றி வேற்கை**

**9. "வெற்றி வேற்கை" நூல் .............. என்றும் அழைக்கப்படும்.**

அ) நெடுந்தொகை ஆ) கலித்தொகை
இ) நறுந்தொகை ஈ) நீதிவெண்பா **விடை: இ) நறுந்தொகை**

**10. நறுந்தொகை என்னும் நூலின் ஆசிரியர்**

அ) அதிவீரராமபாண்டியர் ஆ) புகழேந்தி

இ) கம்பர் ஈ) சாத்தனார் **விடை: அ) அதிவீரராமபாண்டியர்**

**11. அதிவீரராமபாண்டியரின்பட்டப்பெயர்**

அ) புகழேந்தி ஆ) சாத்தனார்

இ) சீவலமாறன் ஈ) மாறவர்மன் **விடை: இ) சீவலமாறன்**

**12.ஒப்புடன் முகம் மலர்ந்தே**
**உபசரித்து உண்மைபேசி**
**உப்பில்லாக் கூழ் இட்டாலும்**
**உண்பதே அமிர்தம் ஆகும் – இப்பாடல் வரி இடம்பெற்றுள்ள நூல் .............**

அ) வெற்றி வேற்கை ஆ) விவேக சிந்தாமணி

இ) சிலப்பதிகாரம் ஈ) சீவகசிந்தாமணி **விடை: ஆ) விவேகசிந்தாமணி**

---

பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன்சொற்களை எழுதுக.**

**விடை :**

★ வீட்டிற்குள் வாருங்கள் !வாருங்கள் !என முகமலர்ச்சியோடு வரவேற்றல்.

★ மனம் மகிழும்படி பேசுதல்.

★ நீர், மோர் அருந்தக் கொடுத்தல்.

★ விருந்தினரை வியந்து உரைத்தல்.

★ நீங்கள் எங்கள் இல்லத்திற்கு வந்தது மனமகிழ்ச்சியளிக்கிறது எனக் கூறல்.

★ உணவு உண்ண வருமாறு அன்புடன் அழைத்தல்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. "உண்பதே அமிர்தம் ஆகும்" எப்போது ?**

**விடை :**

★ விருந்தினரை முகமலர்ச்சியோடு உபசரித்து, உண்மையான இனிய சொற்களைப் பேசி, உப்பில்லாத கூழைக் கொடுத்தாலும் அது உண்பவர்க்கு அமிர்தம் ஆகும் என விவேக சிந்தாமணி கூறுகிறது.

---

**3. அதிவீரராமபாண்டியர் இயற்றிய நூல்களைக் குறிப்பிடுக.**

**விடை :**

★ நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்ம புராணம் ஆகியனவாகும்.

---

**4. காசிக்காண்டம் – நூல்குறிப்பு தருக.**

**விடை :**

★ காசி நகரத்தின் பெருமைகளைக் கூறுகிற நூல் காசிக்காண்டம்.

★ இந்நூல் துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றைப் பாடுவதாக அமைந்துள்ளது.

★ "இல்லொழுக்கங் கூறிய" பகுதியிலுள்ள பதினேழாவது பாடல் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

### பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**1. காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லலற ஒழுக்கங்களில் எவையேனும் ஐந்தினை எழுதி, உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினரை எதிர்கொண்டு, நீங்கள் விருந்தளித்த நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதுக. (செப் – 20)**

**விடை : காசிக்காண்டம் கூறும் இல்லற ஒழுக்கம் :**

(1) விருந்தினரை வியந்து உரைத்தல்
(2) இனிமையாகப் பேசுதல்
(3) வீட்டிற்குள் வருக என வரவேற்றல்
(4) உபசரித்தல்
(5) வாயில் வரை சென்று வழியனுப்புதல்

என் வீட்டிற்கு வந்த விருந்தினரை வாங்க வாங்க என்று அழைத்தேன். பயணம் சிறப்பாக இருந்ததா என்று விசாரித்தேன். வீட்டில் அனைவரும் நலமாக உள்ளார்களா என்று நலம் விசாரித்துவிட்டு சிற்றுண்டி தயார் செய்து வழங்கினேன். அவர்கள் கிளம்புவதாக சொன்னபோது வாயில் வரை சென்று வழியனுப்பினேன்.

---

**2. அதிவீரராம பாண்டியர் ஆசிரியர் குறிப்பு தருக.**

**விடை :**

★ முத்துக்குளிக்கும் கொற்கையின் அரசர் அதிவீரராமபாண்டியர்.

★ தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்த இவர் இயற்றிய நூலே காசிக்காண்டம்.

★ இவரின் மற்றொரு நூலான வெற்றி வேற்கை என்றழைக்கப்படும் நறுந்தொகை சிறந்த அறக்கருத்துகளை எடுத்துரைக்கிறது.

★ சீவலமாறன் என்ற பட்டப்பெயரும் இவருக்கு உண்டு.

★ நைடதம், லிங்கபுராணம், வாயு சம்கிதை, திருக்கருவை அந்தாதி, கூர்மபுராணம் ஆகியனவும் இவர் இயற்றிய நூல்கள்.

---

**மொழிப்பயிற்சி**

**அ) சொல்லும் பொருளும்**

| | |
|---|---|
| **அருகுற** – அருகில் | **முகமன்** – ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள் |

---

**ஆ) இலக்கணக்குறிப்பு**

**நன்மொழி** – பண்புத்தொகை

**வியத்தல், நோக்கல், எழுதுதல், உரைத்தல், செப்பல், இருத்தல், வழங்கல்** – தொழிற்பெயர்கள்

---

**இ) பகுபத உறுப்பிலக்கணம்**

**1. உரைத்த** = உரை + த் + த் + அ **(பெ.ஆ.க – 4)**
உரை = பகுதி
த் = சந்தி
த் = இறந்தகால இடைநிலை
அ = பெயரெச்ச விகுதி

---

**2. வருக** = வா(வரு) + க **(பெ.ஆ.க – 2)**
வா = பகுதி
வரு எனக்குறுகியது விகாரம்
க = வியங்கோள் வினைமுற்று விகுதி

---

**3. எழுதல்** = எழு + தல்
எழு = பகுதி
தல் = தொழிற்பெயர் விகுதி

---

4. பரிந்து = பரி + த்(ந்) + த் + உ
பரி = பகுதி
த் = சந்தி "ந்" ஆனது விகாரம்
த் = இறந்தகால இடைநிலை
உ = வினையெச்ச விகுதி

---

**ஈ) பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

*விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்*
*வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல்*
திருந்துற நோக்கல் வருக என உரைத்தல்
எழுதல் முன் மகிழ்வன செப்பல்
பொருந்து மற்றுஅவன் தன் அருகுற இருத்தல்
போமெனில் பின்செல்வதாதல்
பரிந்துநன் முகமவழங்கல் இவ்வொன்பான்
ஒழுக்கமும் வழிபடும் பண்பே

**1. இப்பாடல் இடம் பெற்ற நூல் பெயர்...........**
**விடை:** காசிக்காண்டம்

**2. இந் நூலின் ஆசிரியர் பெயர்...........**
**விடை:** அதிவீரராமபாண்டியர்

**3. நன்மொழி – இலக்கணக்குறிப்பு தருக.**
**விடை:** பண்புத்தொகை

**4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக**
**விடை:** விருந்தினனாக – ஒருவன்

**5. அருகுற என்னும் சொல்லின் பொருள்........**
**விடை:** அருகில்

**6. இப்பாடலில் வந்துள்ள மோனைச் சொற்கள்........**
**விடை:** விருந்தினனாக – வியத்தல்

---

## கற்பவை கற்றபின்

**1. நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்து அளித்த நிகழ்வினை விரிவாக எழுதிப் படித்துக் காட்டுக.**

**விடை:**

★ நெடுநாட்களாகப் பார்க்க எண்ணியிருந்த நண்பர் ஒருவர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்.
★ அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றேன்.
★ அவருக்கு காலைக்கடன்களை முடிக்க அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தேன்.
★ நண்பரும் பல்துலக்கி, குளித்து வந்தார்.
★ அவருக்கு காலைச் சிற்றுண்டியாக கேசரி, இட்லி, வடை, பொங்கல், பூரி, சட்னி, சாம்பார் ஆகியவற்றை உண்ணக் கொடுத்தேன்.
★ பிறகு இருவரும் கிராமத்து உறவுகள், தாய் தந்தை உறவுகளின் நலத்தைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தோம்.
★ பிறகு தேநீர் அருந்தக்கொடுத்தேன்.
★ என் வீட்டிற்கு வந்ததற்கு நினைவாக வாழ்வியல் இலக்கியமான திருவள்ளுவர் எழுதிய, "திருக்குறள்" நூலைக் கொடுத்தேன்.
★ பின் புகைவண்டி நிலையம் வரை சென்று ஊருக்கு வழியனுப்பிவைத்தேன்.

**இயல் 3. இ**

## கவிதைப் பேழை

### மலைபடுகடாம் – பெருங்கௌசிகனார் (செய்யுள்)

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். (பெ.ஆ.க – 3)**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி என்னும் அடியில் பாக்கம் என்பது ..........**

அ) புத்தூர் ஆ) மூதூர்
இ) பேரூர் ஈ) சிற்றூர் **விடை: ஈ) சிற்றூர்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. கடும்பு என்னும் சொல்லின் பொருள்**

அ) அருமை ஆ) பள்ளம்
இ) தங்கி ஈ) சுற்றம் **விடை: ஈ) சுற்றம்**

**3. சொல்லின் பொருளைப் பொருத்துக.**

**அ) ஆரி 1) தங்கி**
**ஆ) அல்கி 2) வெந்தது**
**இ) படுகர் 3) அருமை**
**ஈ) வேவை 4) பள்ளம்**

அ) 4, 1, 2, 3 ஆ) 3, 1, 4, 2
இ) 1, 2, 4, 3 ஈ) 2, 3, 4, 1 **விடை: ஆ) 3, 1, 4, 2**

**4. கெழீஇ என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு..............**

அ) இன்னிசை அளபெடை ஆ) ஒற்றளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை
**விடை: இ) சொல்லிசை அளபெடை**

**5. நன்னன் கூத்தர்க்கு அளித்தது........... விருந்து ஆகும்.**

அ) நெல்சோறு ஆ) தினைச்சோறு
இ) பால் சோறு ஈ) கம்புச்சோறு **விடை: ஆ) தினைச்சோறு**

**6. மலைபடுகடாம்......... நூல்களுள் ஒன்றாகும்**

அ) பத்துப்பாட்டு ஆ) எட்டுத்தொகை
இ) நீதி ஈ) பதினெண்கீழ்க்கணக்கு **விடை: அ) பத்துப்பாட்டு**

**7. மலைபடுகடாம் எத்தனை அடிகளைக் கொண்டது ?**

அ) 683 ஆ) 483
இ) 583 ஈ) 383 **விடை: இ) 583**

**8. மலைபடுகடாம் ............... எனவும் அழைக்கப்படுகிறது.**

அ) சிறுபாணாற்றுப்படை ஆ) பெரும்பாணாற்றுப்படை
இ) முல்லைப்பாட்டு ஈ) கூத்தராற்றுப்படை **விடை: ஈ) கூத்தராற்றுப்படை**

**9. மலைபடுகடாம் நூலில் மலைக்கு உவமையாகக் கூறப்படுவது........**

அ) வேங்கை ஆ) யானை
இ) மயில் ஈ) குயில் **விடை: ஆ) யானை**

**10. நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடியது......**

அ) முல்லைப்பாட்டு ஆ) காசிக்காண்டம்
இ) மலைபடுகடாம் ஈ) தேன்மழை **விடை: இ) மலைபடுகடாம்**

**11. மலைபடுகடாமின் தலைவன் பெயர்.............**

அ) பாரி ஆ) குமணன்
இ) நன்னன் ஈ) அதியன் **விடை: இ) நன்னன்**

**பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக. (பெ.ஆ.க – 3)**

*அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,*
*கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து*
*சேந்த செயலைச் செப்பம் போகி,*
*அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்*
*சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி*
*நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்*
*மான விறல்வேள் வயிரியம் எனினே,*

**12. "அசைஇ" – இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு ...........**
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) சொல்லிசை அளபெடை ஈ)செய்யுளிசை அளபெடை

**விடை: இ) சொல்லிசை அளபெடை**

**13. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" – இவ்வடியில் "பாக்கம்" என்னும் சொல்லின் பொருள் ...........**
அ) சிற்றூர் ஆ) பேரூர்
இ) கடற்கரை ஈ) மூதூர் **விடை: அ) சிற்றூர்**

**14. பாடல் இடம்பெற்ற நூல் ...........**
அ) சிலப்பதிகாரம் ஆ) மலைபடுகடாம்
இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம் **விடை: ஆ) மலைபடுகடாம்**

**15. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்........**
அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு
ஆ) அன்று, அவண், அசைஇ, அல்கி
இ) சேர்த், செயலை, செப்பம், சிலம்பு
ஈ) அல்கி, எய்தி, போகி, எனினே **விடை: அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "இறடிப் பொம்மல் பெறுகுவிர்" – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| இறடி | – | தினை |
| பொம்மல் | – | சோறு |
| பெறுகுவீர் | – | பெறுவீர்கள் |

தினைச் சோற்றைப் பெறுவீர்கள் என பொருள்படும்.

**குறுவினா : (கூடுதல் வினா)**

---

**2. மலைபடுகடாம் – பெயர்க்காரணம் கூறுக.**

**விடை :**

★ மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை யானையின் மதம் போன்றவை என்று விளக்கப்படுவதால் மலைபடுகடாம் எனக் கற்பனை நயத்தோடு பெயர் சூட்டப்பட்டுள்ளது.

---

**3 . ஆற்றுப்படை – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ ஆற்றுப்படுத்தன் கூத்தன், வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை ஆகும்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது ? (பெ.ஆ.க 1)**

**விடை :**

★ நன்னனிடம் பரிசில் பெற்ற கூத்தன், பரிசில் பெறப்போகும் கூத்தனை அழைத்து, நெருப்பைப் போன்ற சிவந்த நிறமுடைய செங்காந்தள் மலர்க்கொத்தினை அணிந்து கொண்டு, அசோக மரங்கள் நிறைந்த வழியாகச் சென்று மூங்கில்கள் அசைவதால் எழும் ஓசையுடைய மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

★ போர் செய்யும் முயற்சியுடன் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தன் என்று சொல்லுங்கள். உம் இல்லம் போல் அவர்களுடையஇல்லத்திற்குள் நுழைந்து இன்சொல் கூறி மகிழுங்கள்.

★ அவர்கள் உங்களை அன்புடன் வரவேற்று, உறவினர் போல் பழகுவர். உமது வருத்தம் நீங்கும் படியாக இனிய சொற்களைக் கூறுவர். அங்கே நெய்யில் வெந்த பருத்த தசையுடைய மாமிசப்பொரியலுடன் தினைச் சோற்றையும் விருந்தாகப் பெறுவீர்கள் எனக் கூறி ஆற்றுப்படுத்தியதை கூத்தராற்றுப்படை கூறுகிறது.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. மலைபடுகடாம் – நூற்குறிப்பு தருக.**

**விடை :**

★ பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும் மலைபடுகடாம் 583 பாடலடிகளைக் கொண்ட நூல். இதற்கு கூத்தராற்றுப்படை என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

★ மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இதற்கு மலைபடுகடாம் என்று கற்பனை நயத்துடன் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

★ நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது. இந்நூலை இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கொசிகனார் பாடியுள்ளார்.

---

## பகுதி – V ( ஐந்து மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 3)**

**விடை : ஆற்றுப்படுத்துதல் :**

★ பிற ஆற்றுப்படை நூல்களில் இல்லாத தனிச்சிறப்புகள் சிலவற்றை மலைபடுகடாம் கொண்டுள்ளது.

★ காடு அடர்ந்த மலைத்தொடர்களைத் தாண்டி நன்னன் இருக்கும் இடத்தை அடைய வேண்டும்.

★ இதனால் காட்டு வழிகளைப் பற்றிப் பரிசு பெற்ற கூத்தன் கூறுகிறான்.

★ அவ்வழிகளில் செல்பவர்க்கு ஆங்காங்கே வாழும் மக்கள் உணவு தந்து விருந்தோம்பும் பண்பாடு பற்றிச் சிறப்பாக எடுத்துரைக்கின்றான்.

★ அந்த வழிகளில் உள்ள இடர்பாடுகளையும் எடுத்துரைத்து அவற்றைத் தவிர்த்துச் செல்லும் வழிமுறைகளையும் கூறுவதில், மற்ற நூல்களில் இல்லாத புதுமையாக இந்நூலில் காணலாம்.

**இன்றைய நிலை :**

★ இன்று தம்மை நாடி வருபவர்களுக்கும், இல்ல நிகழ்வுகள் மற்றும் திருவிழாக்காலங்களில் வருகின்ற புதியவர்களுக்கும் பசியைப் போக்க உணவு அளித்து போற்றுகின்றனர்.

★ இன்றைய சூழலில் வணிகம் கருதியோ, பல்வேறு பணிகள் நிமித்தமாக வெளியிடங்களுக்கோ, வெளிநாட்டிற்கோ செல்பவர்களுக்கு உணவகங்கள், தங்கும் இடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்றவை நிறைந்திருப்பதால் உணவுக்காகவோ அல்லது தங்குவதற்கு இருப்பிடம் தேடியோ பிறரைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

★ போக்குவரத்துச் சாதனங்கள் பெருகிவிட்ட காரணத்தினாலும், எல்லா ஊர்களிலும் தங்கும் விடுதிகள் தாராளமாகக் கிடைப்பதாலும், விருந்தினராகச் சென்று தங்குவதும், விருந்தினரை வரவேற்பதும் குறைந்துவிட்டது.

★ புதியவர்கள் மட்டுமல்லாது உறவினர்களும் வந்து செல்வது இன்று அரிதாகிவிட்டது என்றே சொல்லலாம்.

**மொழிப்பயிற்சி**

**அ) சொல்லும் பொருளும்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அசைஇ** | – | இளைப்பாறி | **அல்கி** | – | தங்கி |
| **கடும்பு** | – | சுற்றம் | **நரலும்** | – | ஒலிக்கும் |
| **ஆரி** | – | அருமை | **படுகர்** | – | பள்ளம் |
| **வயிரியம்** | – | கூத்தர் | **வேவை** | – | வெந்தது |
| **இறடி** | – | தினை | **பொம்மல்** | – | சோறு |

**ஆ) இலக்கணக்குறிப்பு**

**அசைஇ, கெழீஇ** – சொல்லிசை அளபெடைகள்

**பரூஉக், குரூஉக்கண்** – செய்யுளிசை அளபெடைகள்

**இ) பகுபத உறுப்பிலக்கணம்**

**1. மலைந்து** = மலை + த்(ந்) + த் + உ **(செப் – 20)**

மலை = பகுதி

த் = சந்தி "ந்" ஆனது விகாரம்

த் = இறந்தகால இடைநிலை

உ = வினையெச்ச விகுதி

**2. மொழிந்த** = மொழி + த்(ந்) + த் + அ

மொழி = பகுதி

த் = சந்தி "ந்" ஆனது விகாரம்

த் = இறந்தகால இடைநிலை

அ = பெயரெச்ச விகுதி

**ஈ) படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.**

**(பெ.ஆ.க – 2)**

**விடை :**



1. பண்டைத் தமிழர்கள் பண்பில் சிறந்து விளங்கினர்.
2. பண்டைத் தமிழர்கள் கலைகளில் சிறந்துவிளங்கினர்.
3. கலைஞர்கள் கலைத்திறன்களை நிகழ்த்தி மக்களை மகிழ்வித்தனர்.
4. பலர் அதற்குப் பரிசளித்தனர்.
5 இது விருந்தோம்பிய தன்மையைக் காட்சிப்படுத்துகிறது.

## கற்பவை கற்றபின்

**1. உணவு, விருந்து குறித்த பழமொழிகளைத் திரட்டி, அவை சார்ந்த நிகழ்வுகளை எடுத்துரைக்க.**

**எ.கா : "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" (பெ.ஆ.க – 3)**

**விடை:**

★ உணவுக்கு உப்பு உதவுவது போல, நம் வாழ்க்கையில் முக்கியமானவராக இருந்து நமக்குப் பேருதவி செய்தவரை நாம் இவ்வுலகில் வாழும்வரை நன்றியோடு நினைக்க வேண்டும். நமக்கு உண்ண உணவு கொடுத்தவரை உயிர் உள்ளளவும் உயர்வாய் எண்ணவேண்டும் என்று இப்பழமொழிக்குப் பொருள் கொள்ளலாம்.

**"விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்குத்தான் "**

**பொருள் : விருந்தும் மருந்தும் மூன்று நாள் :**

★ விருந்துக்கு சென்றால் மூன்று நாட்களுக்கு மேல் இருக்கக்கூடாது. மருந்து உட்கொண்டாலும் மூன்றுநாட்களுக்கு மேல் உண்ணக்கூடாது. அது எந்த ஒரு தனிமனிதனையும் பாதிக்கும்.

**உண்மையான பொருள் :**

ஒரு வாரத்தில் ஞாயிறு, திங்கள், புதன் ஆகிய குளிர் நாட்களில் நன்றாக உணவு உட்கொள்ள வேண்டும். செவ்வாய், வெள்ளி, வியாழன் ஆகிய தினங்களில் உணவைக் குறைவாய் உட்கொண்டு மருந்து உண்ண வேண்டும்.

---

**2. பத்தியைப் படித்து, வார இதழ் ஒன்றிற்கு அனுப்பும் வகையில் சமையல் குறிப்பாக மாற்றுக.**

**கம்மங்கூழ்**

**பொசுக்குகிறது வெயில், ஒரு துளி மழை பட்டால் வறுத்த உளுந்தின் வாசம் பரப்பும் வறண்ட மண். வெடித்த நிலம், செழித்து விளைகிறது கம்மம் பயிர். உரலில் குத்தி, சுளகில் புடைக்க அதன் உமி நீங்கும். நீர் தெளித்துத் தெளித்து மீண்டும் உரலில் இடிக்க அது ஒன்றுடன் ஒன்று ஒட்டி மாவாகும். உப்புக் கலந்து, உலையில் ஏற்றி, கொதிக்கும் நீரில் கரையவிட்டுக் கிண்ட, கட்டியாகி அது சோறாகும். கம்மஞ் சோற்றை உருட்டிவைத்து, பின் மோர் விட்டுக் கரைத்தால் அது கம்மங் கஞ்சி அல்லது கம்மங் கூழ். மோர் மிளகாய் வற்றல், உப்பில் தோய்த்த பச்சை மிளகாய் அல்லது சின்ன வெங்காயம் கடித்துக் கஞ்சியைக் குடித்தால் உச்சி தொட்டு உள்ளங்கால் வரை தேகம் குளிர்ந்து போகும். அனல் அடங்கும். உயிர்வரும். கம்பு – கறுப்பு நிறக் கரிசல் மண்ணின் இயற்கைத் தங்கம்.**

**விடை :**

**தேவையானவை :**

| | | |
|---|---|---|
| கம்பு | – | கால் கிலோ |
| மோர் | – | அரை லிட்டர் |
| உப்பு | – | தேவையான அளவு |
| சின்ன வெங்காயம் | – | 2 எண்ணம் |
| தண்ணீர் | – | தேவையான அளவு |

**செய்முறை :**

முதலில் கம்பைக் கழுவிச் சுத்தம் செய்து தண்ணீரை வடித்து அரைமணிநேரம் வெயிலில் காயவிடவும்.

பிறகு தேவையான அளவு தண்ணீர் விட்டு கெட்டியாக மையாக அரைத்துக் கொள்ளவும்.

சின்ன வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

கம்பு மாவில் தண்ணீர்–உப்பு கலந்து கொதிக்கவிட வேண்டும்.

வெந்ததும் அதனுடன் சின்ன வெங்காயம், மோர், மிளகாய் வற்றல் சேர்த்து உண்ண சுவையாக இருக்கும். உடலுக்கும் நல்லது.

---

## விரிவானம்

**இயல் 3. ஈ**

## கோபல்லபுரத்து மக்கள்

(துணைப்பாடம்)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1........... சுற்றிய வட்டாரப்பகுதிகளில் தோன்றிய இலக்கியவடிவம் கரிசல் இலக்கியம்**
அ) அம்பாசமுத்திரம் ஆ) சாத்தான்குளம்
இ) கோவில்பட்டி ஈ) மணிமுத்தாறு **விடை: இ) கோவில்பட்டி**

**2 கி. ராஜநாராயணனுக்கு முன் எழுதத்தொடங்கிய கரிசல் மண்ணின் படைப்பாளி...........**
அ) கு. அழகிரிசாமி ஆ) பா. ஜெயப்பிரகாசம்
இ) பூமணி ஈ) சோ. தர்மன் **விடை: அ) கு. அழகிரிசாமி**

**3. " சோற்றுக்கஞ்சி" –என்னும் சொல் வட்டாரத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது ?**
அ) பாச்சல் ஆ) பதனம்
இ) மகுளி ஈ) அலுக்கம் **விடை: இ) மகுளி**

**4. இந்திய விடுதலைப் போராட்டத்தினைப் பின்னணியாகக் கொண்ட நூல்............**
அ) கோபல்லபுரத்து மக்கள் ஆ) சிற்றகல் ஒளி
இ) வேருக்கு நீர் ஈ) சித்தாளு **விடை:அ)கோபல்லபுரத்து மக்கள்**

**5. கோபல்லபுரத்து மக்கள் நூல் 1991 ஆம் ஆண்டிற்கான.......... பரிசினைப் பெற்றது.**
அ) பாரத ரத்னா ஆ) தாமரை விருது
இ) சாகித்திய அகாதெமி ஈ) ஞானபீட விருது **விடை: இ) சாகித்திய அகாதெமி**

**6. கோபல்லபுரத்து மக்கள் என்னும் கதையின் ஆசிரியர்..........**
அ) ஜெயகாந்தன் ஆ) கி. ராஜநாராயணன்
இ) கு.ப.ராஜகோபாலன் ஈ) நாகூர்ரூமி **விடை: அ) கி.ராஜநாராயணன்**

**7. கரிசல் வட்டார சொல் அகராதியை உருவாக்கியவர்..........**
அ) சா. கந்தசாமி ஆ) எழில்முதல்வன்
இ) முகம்மது ரஃபி ஈ) கி.ராஜநாராயணன் **விடை: ஈ) கி.ராஜநாராயணன்**

**8. கி.ராஜநாராயணன் தொடங்கிய வட்டார மரபு வாய்மொழிப் புனைக்கதைகள்......... என்று அழைக்கப்படுகின்றன.**
அ) கரிசல் இலக்கியம் ஆ) கங்கைப்படலம்
இ) வில்லி பாரதம் ஈ) கொடிமுல்லை **விடை: அ) கரிசல் இலக்கியம்**

**9. எழுத்துலகில் கி.ரா எனக்குறிப்பிடப்படுபவர் ..........**
அ) கி. ரங்கராஜன் ஆ) கி. ராஜேந்திரன்
இ) கி. ராஜநாராயணன் ஈ) கி. ராஜவேல் **விடை: இ) கி.ராஜநாராயணன்**

**10."கறங்கு இசை விழவின் உறந்தை" – இவ்வடிகள் இடம்பெற்ற நூல்**
அ) புறநானூறு ஆ) மணிமேகலை
இ) சிலப்பதிகாரம் ஈ) அகநானூறு **விடை: ஈ) அகநானூறு**

**11. உறையூர் அமைந்துள்ள மாவட்டம்.........**
அ) கரூர் ஆ) திருச்சி
இ) திண்டுக்கல் ஈ) புதுக்கோட்டை **விடை: ஆ) திருச்சி**

**குறுவினா : (கூடுதல் வினா)**

**1. வட்டாரப்பகுதியிலுள்ள வழக்குச் சொற்களைப் பட்டியலிடுக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| பாச்சல் | – | பாத்தி |
| பதனம் | – | கவனமாக |
| நீத்துப்பாக்கம் | – | மேல்கஞ்சி |
| கடிச்சு குடித்தல் | – | வாய்வைத்துக்குடித்தல் |
| மகுளி | – | சோற்றுக் கஞ்சி |
| வரத்துக்காரன் | – | புதியவன் |
| சடைத்து புளித்து | – | சலிப்பு |
| அலுக்கம் | – | அழுத்தம் (அணுக்கம்) |
| தொலவட்டையில் | – | தொலைவில் |

## பகுதி – V ( ஏழு மதிப்பெண்கள்)

**1. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க (பெ.ஆ.க –4)**

**(அல்லது)**

**பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயல் "அன்னமய்யர் புதிதாக வந்தவருக்கு உணவிட்ட செயலோடு ஒத்திருத்தலை" கோபல்லபுரத்து மக்கள் கதை வழி விளக்கி எழுதுக. (பெ.ஆ.க –5)**

**விடை :**

**முன்னுரை :**

★ கோபல்லபுரத்து மக்கள் – கதையானது காய்ந்தும் கெடுக்கிற, பெய்தும் கெடுக்கிற மழையைச் சார்ந்து வாழ்கின்ற மானாவாரி மக்களின் வாழ்க்கையைச் சொல்கிறது.

★ இவ்வூரில் வாழும் மக்கள்முன்பின் அறியாத புதியவர்களுக்கு அன்புடன் செய்யும் விருந்தோம்பல் போற்றுதற்குரியது.

★ அந்நிகழ்வு பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**அன்னமய்யா :**

★ கோபல்லபுரத்து மக்களின் ஒருவன்தான் அன்னமய்யா. பெயருக்கு ஏற்றார்போல் பசித்தவருக்கு அன்னம் அளிக்கும் அய்யாவாகத்தான் அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்தான்.

**வறுமையின் பிடியில் வாலிபன் :**

★ அழுக்கு நிறைந்த ஆடையும், தாடியுமாக, தள்ளாட்டத்துடன் பார்ப்பதற்கு வயோதிகனைப் போல தோற்றமளித்தவன் ஒருவன், கை கால்களை நீட்டிப் புளிய மரத்தில் சாய்ந்து உட்கார்ந்து இருந்தான்.

★ அன்னமய்யா அருகில் போய்ப் பார்த்தபிறகுதான் தெரிந்தது அவன் ஒரு வாலிபன் என்று.

★ பசியால் வாடிப்போய்விட்ட அந்த முகத்தில் கண்களில் தெரிந்த பசித்தாகம் கவனிக்கக்கூடியதாய் இருந்தது.

**அன்னமய்யாவின் இரக்கம் :**

★ தன்னைப் பார்த்து ஒரு பாசப் புன்னகையைக் காட்டிய அந்த வாலிபனை மிக அருகில் நின்று பார்த்துக்கொண்டே இருந்தான் அன்னமய்யா.

★ அவன் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டான்.

★ அவன் பேசியதில் மகிழ்ச்சியடைந்த அன்னமய்யா, "அருகிலிருந்து நீச்சத் தண்ணீர் வாங்கி வரவா" என்று கேட்டான்.

★ அந்த வாலிபன் நாமே அங்கு போகலாம் என்றான்.

★ அன்னமய்யாவின் கேள்விகளுக்கு ஒரே மாதிரியான இதழ் விரியாத புன்சிரிப்பைப் பதிலாக்கினான்.

**கரிசல் உணவு உண்ணல் :**

★ அன்னமய்யாவுடன் வந்த புது ஆளை சுப்பையாவும் அவரது நண்பர்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

★ ஒரு வேப்பமரத்தின் நிழலில் ஏகப்பட்ட மண்கலயங்கள். கரிசல் மண்ணில் பாதி புதைக்கப்பட்டிருந்தன.

★ காகங்கள் அந்தக் கலயங்களை உருட்டிவிடாமல் இருக்க கல்லால் அதன் வாய் மூடப்பட்டிருந்தது.

★ அன்னமய்யா ஒரு சிரட்டையைச் சுத்தப்படுத்தி கலயத்தில் இருந்த மேல் கஞ்சியை வடித்துவிட்டு அவனிடம் சும்மா வாய் வைத்துக் குடிங்க என்று கொடுத்தான்.

★ தொண்டை வழியாக கஞ்சி இறங்கும் சுகத்தை முகம் வெளிப்படுத்தியது. உட்கார்ந்து குடிங்க என்று அன்னமய்யா மேலும் உபசரித்தான்.

**இளைஞனின் புன்னகை :**

★ பசியால் சொருகிய கண்கள் இப்போது சிரட்டை வழியே இறங்கிய ஜீவ ஊற்றினால் அவனுக்கு மனது நிறைந்தது.

★ அன்னமய்யாவுக்கு அதைவிட மேலான நிறைவு ஏற்பட்டது.

★ வேப்ப மரத்தில் வீசிய தென்றல் காற்று இதமாக வருடி அவனை தூங்கச் செய்தது.

★ இளைஞன் விழித்தவுடன் அன்னமய்யாவைப் பார்த்து நன்றி கலந்த புன்னகையை படுத்துக் கொண்டே வெளிப்படுத்தினான்.

**பெயர் பொருத்தம் :**

★ அன்னமய்யாவைப் பார்த்து "தம்பி உன் பெயரென்ன" என்றான் வாலிபன்.

★ அன்னமய்யா என்று கூறினான். வாலிபன் அந்தப் பெயரை மனசுக்குள் மறுபடிச் சொல்லிப் பார்த்துக்கொண்டான்.

★ பின்பு எனக்கு இன்று நீ இடும் அன்னம்தான் உன் பெயர், அருமை என்றான்.

★ அந்த வாலிபனைப் பார்த்து "உங்கள்பெயர் என்ன" என்றான் அன்னமய்யா.

★ அதற்கு அவ்வாலிபன் பரமேஸ்வரன், அதை மறந்துவிடு, நீ என்னை மணி என்று கூப்பிடு என்றான்.

**சுப்பையா புஞ்சை நோக்கி பயணம் :**

★ முன்பின் தெரியாத பரமேஸ்வரன் என்ற மணியை உறவினராக ஏற்று சுப்பையாவின் புஞ்சையில் இருந்தவர்கள் முகமலர்ச்சியுடன் வரவேற்று தங்களுடன் உணவு உண்ணுமாறு அழைத்தார்கள்.

★ அனைவரும் வட்டமாக உட்கார்ந்து கம்மங்கஞ்சியை இடது கையில் வாங்கி அதன் நடுவே குழிபறித்து அதில் துவையலை வைத்து யாரோடும் யாரும் பேசாமல் சாப்பிடுவதில் கவனமாக இருந்தார்கள்.

**மணியின் மன அமைதி :**

★ சுப்பையாவும், அன்னமய்யாவும் சாப்பிட்டு முடித்து, கையை மண்ணினால் சுத்தப்படுத்திக் கொண்டனர்.

★ அதைப் பார்த்த மணியும் அவ்வாறே சுத்தப்படுத்திக் கொண்டார்.

★ அன்னமய்யாவும், அவரது நண்பர்களும் உட்கார்ந்து ஊர்க்கதைகள் பேசிக்கொண்டிருக்கும் போது மணி மட்டும் அமைதியாக கண்களை மூடிக் கிடந்தார்.

**முடிவுரை :**

★ அதிகாலை வேளையில் களைத்து வந்தவருக்குக் கரிசல் இதயங்கள் காட்டிய அன்பு கண் முன் படமாகிறது.

★ கருணையுடன்மணி பார்த்த பார்வையில் நன்றி தெரிகிறது.

★ கஞ்சிக் கலயம், சோற்றின் மருளி, துவையல், கம்மஞ்சோறு இவற்றில் கரிசல் மண்ணை மணக்கச் செய்கிறார் கி.ராஜநாராயணன்.

## கற்பவை கற்றபின்

**1. பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயலையும் விருந்தினருக்கு உணவிடுதல் என்ற பண்பாட்டுச் செயலையும் ஒப்பிட்டுப் பேசுக.**

**விடை:**

★ "பசி என்று வந்தவருக்கு புசி என்று ஒரு பிடி உணவை கொடுத்துப் பாரப்பா" என்றார்

இராமலிங்க அடிகளார்.

★ பசி நெருப்புக்கு ஒப்பானது. அந்த நெருப்பை அணைக்கவேண்டும் என்பதற்காகத்தான் வடலூரில் வள்ளலார் மூட்டிய அடுப்பு இன்னமும் எரிந்து கொண்டிருக்கிறது.

★ பசித்தவர்களுக்கு எவ்விதமான மொழி, சாதி, சமயம், இனவேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும்.

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" – குறள் (87)

★ விருந்தினரை வரவேற்று உணவிடுதலே இல்லறத்தான் கடமை என்று வள்ளுவப் பெருந்தகை தெளிவுறுத்துகிறார்.

★ விருந்தோம்பல் என்பது தமிழரின்பண்பாடாகும்.

★ இல்லம் நாடி எவர் வந்தாலும் பசி இல்லாமல் போகவேண்டும் என்ற உயரிய கொள்கை உடையவர்கள் தமிழர்

★ உற்றார் உறவினர் என்ற சுற்றத்தார் எவராயினும் இல்லம் நாடி வந்தவர்க்கு இல்லை என்று சொல்லாமல், இருப்பதைக் கொடுப்பதே விருந்தாகும்.

★ பசி என்று கேட்டவர்க்கு இல்லை என்று கூறாது ஈவது அறச்செயல்.

★ பசியுடன் வந்தவர்க்கு இருப்பதைப் பகிர்ந்து உபசரித்தல் விருந்து என்னும் பண்பாடாகும்.

---

**2. உங்கள் கற்பனையை இணைத்து நிகழ்வைக் கதையாக்குக.**

**அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே சின்னஞ்சிறு சச்சரவுகள் ஏற்பட்டு, இரண்டு பேருமே முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்திருக்கும் போது, விருந்தினர் வருகை அவர்களை அன்பான கணவன் மனைவியராக மாற்றிவிடும். அம்மாவின் கெடுபிடியும் அப்பாவின் கீழ்படிதலும் ஆச்சரியமாக இருக்கும். விருந்தாளிகள் அடிக்கடி வரமாட்டார்களா என்று இருக்கும்.**

**விருந்தினர் தினம் என்பது எப்படி விடியும் தெரியுமா ?**

**காலையிலிருந்தே வீட்டுக்குள்ளிருந்து வாசலுக்கு வந்து எட்டிப்பார்த்துச் செல்வாள் அம்மா. திண்ணையில் பேப்பர் படித்துக் கொண்டிருக்கும் அப்பா கேட்பார், "என்ன விஷயம், இன்னிக்கு யாராவது விருந்தாளி வரப்போறாங்களா என்ன ?" "ஏங்க... காலையிலேருந்து வேப்ப மரத்துல காக்கா விடாம கத்திக்கிட்டே இருக்கே பார்க்கலியா ? நிச்சயம் யாரோ விருந்தாளி வரப்போறாங்க பாருங்க". "அடடே, ஆமாம் காக்கா கத்துது, யாரு வரப்போறா ? இது பலாப்பழ சீசன் ஆச்சே.... உன் தம்பிதான் வருவான். பலாப்பழத்தைத் தூக்கிக்கிட்டு" நாங்கள் ஓடிப்போய்த் தெருவில் பார்ப்போம்.. அப்பா சொன்னதும் சரி, காக்கா கத்தியதும் சரி. தூரத்தில் தெரு முனையில் அறந்தாங்கி மாமா தலையில் பலாப்பழத்துடன் வந்து கொண்டிருப்பார். அம்மாவுக்குக் காக்கை மொழி தெரியும் !**

**– தஞ்சாவூர்க் கவிராயர்**

**விடை :**

★ வீட்டில் அப்பாவுக்கும் அம்மாவுக்கு இடையே சின்னஞ்சிறு சண்டைச் சச்சரவுகள் உண்டாகும். அப்போதெல்லாம் இருவரும் ஒருவரையொருவர் முறைத்துக்கொண்டு பேசாமலிருப்பார்கள்.

★ ஒருநாள் அந்தச் சமயம் பார்த்து எதார்த்தமாக என் தாத்தாவும் பாட்டியும் எங்கள் வீட்டிற்கு வந்து விட்டார்கள்.

★ உடனே அம்மாவும் அப்பாவும் சண்டை சச்சரவுகளை மறந்து அன்பான கணவன் மனைவி போல தாத்தா பாட்டிக்கு அறுசுவை உணவளித்து, மகிழ்ச்சியாக ஒருவருடன் ஒருவர் முகம் பார்த்து பேசிக்கொண்டார்கள்.

★ இச்சூழலைக் காண்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

★ இதைப்பார்க்கும் என் மனதிற்கு என் தாத்தாவும் பாட்டியும் நம் வீட்டிலேயே தங்க மாட்டார்களா என்று ஏக்கம் உருவாகியது.

கற்கண்டு

இயல் 3. உ

## தொகாநிலைத் தொடர்கள்
(இலக்கணம்)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைகிறது.**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

**விடை: அ) வேற்றுமை உருபு**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. தொகா நிலைத் தொடர் ......... வகைப்படும்**

அ) ஆறு ஆ) ஏழு
இ) எட்டு ஈ) ஒன்பது **விடை: ஈ) ஒன்பது**

**3. பேருந்து வருமா ? என்பது .........தொடராகும்**

அ) விளி ஆ) வினைமுற்று
இ) வேற்றுமை ஈ) எழுவாய் **விடை: ஈ) எழுவாய்**

**4. நண்பா எழுது ! ? எத் தொடராகும் ?**

அ) விளித்தொடர் ஆ) வினைமுற்றுத்தொடர்
இ) பெயரெச்சத்தொடர் ஈ) அடுக்குத்தொடர் **விடை: அ) விளித்தொடர்**

**5. வினைமுற்றுடன் ஒரு பெயர் தொடர்வது.........**

அ) வேற்றுமைத்தொடர் ஆ) விளித்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்

**விடை: ஈ) வினைமுற்றுத்தொடர்**

**6. கூவிய குயில் ......... எவ்வகைத் தொடர் ?**

அ) எழுவாய்த் தொடர் ஆ) பெயரெச்சத் தொடர்
இ) வேற்றுமைத் தொடர் ஈ) விளித் தொடர்

**விடை: ஆ) பெயரெச்சத் தொடர்**

**7. <u>கேட்ட கதையே</u> <u>மீண்டும் மீண்டும்</u> கூறினார் – அடிக்கோடிட்டவை எவ்வகைத் தொடர் ?**

அ) வினையெச்சத் தொடர், அடுக்குத் தொடர்
ஆ) பெயரெச்சத் தொடர், வினைமுற்றுத் தொடர்
இ) பெயரெச்சத் தொடர், அடுக்குத் தொடர்
ஈ) வேற்றுமைத் தொடர், வினைமுற்றுத் தொடர்

**விடை: இ) பெயரெச்சத் தொடர், அடுக்குத் தொடர்**

**8. "படிக்கவேண்டிய காலத்தில் மாணவனே படி" – என்னும் தொடரில் இடம்பெற்றுள்ள தொகாநிலைத் தொடர்கள்.......**

அ) பெயரெச்சத் தொடர் – விளித்தொடர்
ஆ) வினையெச்சத் தொடர் – எழுவாய்த்தொடர்
இ) வினைமுற்றுத் தொடர் – எழுவாய்த்தொடர்
ஈ) விளித் தொடர் – வினைமுற்றுத்தொடர்

**விடை: அ) பெயரெச்சத் தொடர் – விளித்தொடர்**

**9. அன்பால் கட்டினார், அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது.**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவம உருபு ஈ) உரிச்சொல் **விடை: அ) வேற்றுமை உருபு**

**10. "அறிஞருக்குப் பொன்னாடை" என்பது ..........**

அ) இரண்டாம் வேற்றுமைத் தொடர் ஆ) மூன்றாம் வேற்றுமைத் தொடர்
இ) நான்காம் வேற்றுமைத் தொடர் ஈ) ஐந்தாம் வேற்றுமைத் தொடர்
**விடை: இ) நான்காம் வேற்றுமைத் தொடர்**

**11. இடைச்சொல் தொடருக்கு எடுதுக்காட்டு தருக.**

அ) அன்பால் கட்டினார் ஆ) சாலச்சிறந்தது
இ) பாடி மகிழ்ந்தனர் ஈ) மற்றொன்று **விடை: ஈ) மற்றொன்று**

**12. சாலச்சிறத்து எத்தொடராகும் ?**

அ) விளித் தொடர் ஆ) உரிச்சொல் தொடர்
இ) பெயரெச்சத் தொடர் ஈ) வேற்றுமைத் தொடர் **விடை: ஆ) உரிச்சொல் தொடர்**

**13. வருக ! வருக ! வருக ! .......... தொடராகும்.**

அ) எழுவாய்த் தொடர் ஆ) பெயரெச்சத் தொடர்
இ) அடுக்குத் தொடர் ஈ) உரிச்சொல் தொடர் **விடை: இ) அடுக்குத் தொடர்**

**14. பெயரெச்சங்களை "செய" என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் உருவாவது..........**

அ) வினையெச்சங்கள் ஆ) கூட்டுநிலைப்பெயரெச்சங்கள்
இ) பெயரெச்சங்கள் ஈ) கூட்டுநிலை வினையெச்சங்கள்
**விடை: ஆ) கூட்டுநிலைப்பெயரெச்சங்கள்**

**15. கூட்டுநிலைப் பெயரெச்சத்திற்கு எடுத்துக்காட்டு ..........**

அ) கேட்ட பாடல் ஆ) பாடி மகிழ்ந்தனர்
இ) பாடினாள் கண்ணகி ஈ) கேட்கவேண்டிய பாடல்
**விடை: ஈ) கேட்கவேண்டிய பாடல்**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "எழுது என்றாள்" என்பது விரைவு காரணமாக "எழுது எழுது என்றாள்" என அடுக்குத் தொடரானது. "சிரித்துப் பேசினார்" என்பது எவ்வாறு அடுக்குத் தொடராகும் ?**

**விடை :**

★ "சிரித்துச் சிரித்துப் பேசினார்" என்பது அடுக்குத் தொடராகும்.

---

**2. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார் ? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை ?**

**விடை :**

★ "பாரதியார் கவிஞர்" – என்ற தொடரில் பாரதியார் என்ற எழுவாயுடன் **கவிஞர்** என்ற பெயர்ப்பயனிலை சேர்த்து எழுவாய்த் தொடராக வந்துள்ளது.

★ "நூலகம் சென்றார்" – என்ற தொடரில் நூலகம் என்ற எழுவாயுடன் **சென்றார்** என்ற வினை தொடர்ந்து எழுவாய்த் தொடர் ஆனது.

★ "அவர் யார் " – என்ற தொடரில் அவர் என்னும் எழுவாயுடன் **யார்** என்ற வினா தொடர்ந்து எழுவாய்த் தொடர் ஆனது.

---

**குறுவினா : ( கூடுதல் வினா)**

**3. தொகா நிலைத் தொடர் என்றால் என்ன ?**

**விடை :**

★ ஒரு தொடர் மொழியில் இரு சொற்கள் இருந்து, அவற்றின் இடையில் சொல்லோ, உருபோ இல்லாமல் அப்படியே, பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

★ எ.கா : காற்று வீசியது.

**4. எழுவாய்த் தொடர் எவ்வாறு அமையும் ?**
**விடை :**

★ எழுவாயுடன் பெயர், வினை, வினா ஆகிய பயனிலைகளில் ஒன்று தொடர்ந்து வருவது எழுவாய்த் தொடராகும்.

★ எ.கா : பேருந்து வருமா ?

---

**5. விளித் தொடர் எவ்வாறு அமையும் ?**
**விடை :**

★ விளியுடன் வினை தொடர்ந்து வருவது விளித் தொடராகும்.

★ எ.கா : மாணவனே படி

---

**6. அடுக்குத் தொடர் என்றால் என்ன ? சான்று தருக.**
**விடை :**

★ அசைநிலைக்கும், விரைவு, சினம், மகிழ்ச்சி, அச்சம், துன்பம் முதலிய பொருள்நிலைக்கும் செய்யுளில் இசையை நிறைவு செய்வதற்கும் இரண்டு, மூன்று, நான்கு முறை அடுக்கி வருவது அடுக்குத் தொடர் எனப்படும்.

எ.கா :

| | | |
|---|---|---|
| போ போ | – | விரைவு |
| தீ தீ தீ | – | அச்சம் |
| ஐயோ ! ஐயோ ! | – | துன்பம் |
| கோடி கோடி கோடி கோடியே | – | இசை நிறை |

---

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. " கண்ணே கண்ணுறங்கு !**
**காலையில் நீயெழும்பு !**
**மாமழை பெய்கையிலே !**
**மாம்பூவே கண்ணுறங்கு !**
**பாடினேன் தாலாட்டு !**
**ஆடி ஆடி ஓய்ந்துறங்கு !" – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 2)**

**விடை :**

| | | |
|---|---|---|
| " கண்ணே கண்ணுறங்கு ! | – | விளித் தொடர் |
| காலையில் நீயெழும்பு ! | – | வேற்றுமை தொகாநிலைத் தொடர் |
| மாமழை பெய்கையிலே ! | – | உரிச்சொல் தொடர் |
| மாம்பூவே கண்ணுறங்கு ! | – | விளித் தொடர் |
| பாடினேன் தாலாட்டு ! | – | வினைமுற்றுத் தொடர் |
| ஆடி ஆடி | – | அடுக்குத் தொடர் |
| ஓய்ந்துறங்கு !" | – | வினையெச்சத் தொடர் |

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. தொகாநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**
**விடை :**

**தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது வகைப்படும்**

| | | |
|---|---|---|
| 1. எழுவாய்த் தொடர் | – | காவிரி பாய்ந்தது |
| 2. விளித் தொடர் | – | நண்பா எழுது ! |
| 3. வினைமுற்றுத் தொடர் | – | பாடினாள் கண்ணகி |
| 4. பெயரெச்சத் தொடர் | – | கேட்ட பாடல் |
| 5. வினையெச்சத் தொடர் | – | பாடி மகிழ்ந்தனர் |
| 6. வேற்றுமைத் தொடர் | – | கட்டுரையைப் படித்தாள் |

7. இடைச்சொல் தொடர் – மற்றொன்று
8. உரிச்சொல் தொடர் – சாலச்சிறந்தது
9. அடுக்குத் தொடர் – வருக ! வருக ! வருக !

**3. கூட்டுநிலைப் பெயரெச்சங்கள் எவ்வாறு உருவாகின்றன ?**

**விடை :**

★ ஒன்றிற்கு மேற்பட்ட வினையெச்சங்கள் சேர்த்து பெயரைக்கொண்டு முடியும் கூட்டுநிலைப் பெயரெச்சங்களை இக்காலத்தில் பெருமளவில் பயன்படுத்துகிறோம்.

★ வேண்டிய, கூடிய, தக்க, வல்ல முதலான பெயரெச்சங்களை, செய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்துடன் சேர்ப்பதன் மூலம் கூட்டு நிலைப்பெயரெச்சங்கள் உருவாகின்றன.

எ.கா : கேட்கவேண்டிய பாடல், சொல்லத்தக்க செய்தி

## கற்பவை கற்றபின்

**1. இன்று நீங்கள் படித்த செய்தித்தாள்களில் உள்ள தொகாநிலைத் தொடர்களைத் தொகுத்து எழுதுக.**

**விடை:**

1. மாற்றுத்திறன் மகளிரு**க்கு** பயிற்சி – நான்காம் வேற்றுமை தொகாநிலைத் தொடர்
2. மதுரை மாநகரில் **மாநாடு** நடைபெறுகிறது – உரிச்சொல் தொடர்
3. அமைச்சர் அவர்களே **வருக ! வருக !** – அடுக்குத் தொடர்
4. கோவிட் – 19 குறித்து அமைச்சர் ஆய்வு செய்தார் – இடைச்சொல் தொடர்

**2. கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.**

மாடியிலிருந்து **இறங்கினார் முகமது. அவர் பாடகர்.** பாடல்களைப் **பாடுவதும் கேட்பதும்** அவருக்குப் பொழுது போக்கு. அவரது அறையில் **கேட்ட பாடல்களையும் கேட்காத பாடல்களையும்** கொண்ட குறுந்தகடுகளை **அடுக்கு அடுக்காக** வைத்திருப்பார்.

**விடை :**

1. இறங்கினார் முகமது – வினைமுற்றுத் தொடர்
2. அவர் பாடகர் – எழுவாய்த் தொடர்
3. பாடுவதும் கேட்பதும் – எண்ணும்மை
4. கேட்ட பாடல் – பெயரெச்சத் தொடர்
5. கேட்காத பாடல் – எதிர்மறை பெயரெச்சத் தொடர்
6. அடுக்கு அடுக்காக – அடுக்குத் தொடர்

**3. வண்ணச் சொற்களின் தொடர்வகைகளை எழுதுக.**

**பழகப் பழகப்** பாலும் புளிக்கும்
**வடித்த கஞ்சியில்** சீலையை அலசினேன்
மேடையில் **நன்றாகப் பேசினான்**
**வந்தார் அண்ணன்**
அரிய **கவிதைகளின் தொகுப்பு** இது

**விடை :**

1. பழகப் பழகப் – அடுக்குத் தொடர்
2. வடித்த கஞ்சி – பெயரெச்சத் தொடர்
3. நன்றாகப் பேசினான் – வினையெச்சத் தொடர்
4. வந்தார் அண்ணன் – வினைமுற்றுத் தொடர்
5. கவிதைகளின் – வேற்றுமைத் தொடர்

| இயல் 3. ஊ | மொழியை ஆள்வோம் (மொழிப்பயிற்சி) |
|---|---|

அ) படித்துச் சுவைக்க : **சர்க்கரைப் பொங்கல்**

**இளஞ்சிவப்பாக வறுத்த, பாதி உடைத்த பருப்பும் பச்சை அரிசியும் பானையில் கொப்புளமிட்டுக் கொதிக்க, மென் துணியில் வடிகட்டிய வெல்லக் கரைசல் நாரப்பாகு பதத்தில் வெந்த பொங்கலுடன் கலக்கின்றது. உலர்ந்த திராட்சைகள் பசு நெய்யில் தங்கமென ஊதி உருண்டு வர, பிறை போன்ற முந்திரிப்பருப்புகள் அதனுள் சேர்ந்து மின்னுகின்றன. காற்றெங்கும் பால் கலந்த இனிப்பின் வாசம். இனி, இடித்த ஏலக்காய் தூவ , எல்லாமும் பொங்கலுடன் இணைந்து குழைய, இந்தச் சர்க்கரைப் பொங்கலின் தித்திப்பு திகட்டாது. நறுக்கிய ஈர வாழையிலையில் ஒரு அகப்பை சுடும் பொங்கலிட, அது விழித்தெழுப்பும் மணம், அறுவடையின் மகிழ்ச்சி அது! சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை (திருக்குறள் 1031)**

---

ஆ) மொழிபெயர்க்க :

**Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all. (பெ.ஆ.க – 5)**

**விடை :**

மதிப்பிற்குரிய சகோதர சகோதரிகளே! என்பெயர் இளங்கோவன். பத்தாம் வகுப்பு படித்து வருகின்றேன். நான் நமது தமிழ்ப்பண்பாடு குறித்துச் சில வார்த்தைகள் உங்களிடம் பகிர வந்துள்ளேன். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர் என்று சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. தமிழர்கள் மொழிக்கு மட்டுமல்லாது வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துள்ளனர். தமிழ்ப்பண்பாடு, இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து என உலகளாவிய நிலையில் வேரூன்றி உள்ளது. நமது பண்பாடு பழைமையானது எனினும் ஒவ்வொரு நாளும் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. நமது பண்பாடு குறித்துப் பெருமைப்படுவோமாக ! அனைவருக்கும் நன்றி!

---

**இ) i) பழமொழிகளை நிறைவு செய்க:**

**1. உப்பில்லாப்..................**

**விடை :** உப்பில்லாப் பண்டம் குப்பையிலே.

**2. ஒரு பானை..................**

**விடை :** ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

**3. உப்பிட்டவரை ..................**

**விடை :** உப்பிட்டவரை உள்ளளவும் நினை.

**4. விருந்தும்..................**

**விடை :** விருந்தும் மருந்தும் மூன்று நாள்களுக்கு மட்டுமே.

**5. அளவுக்கு..................**

**விடை :** அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சு.

---

**ii) பழமொழிகளைப் பொருத்துக. (கூடுதல் வினா) (பெ.ஆ.க – 5)**

| | |
|---|---|
| **அ) ஆறில்லா ஊருக்கு** | **1) சோற்றுக்கு ஒரு சோறு பதம்** |
| **ஆ) உப்பில்லாப் பண்டம்** | **2) நூறு வயது** |
| **இ) நொறுங்கத் தின்றால்** | **3) குப்பையிலே** |
| **ஈ) ஒரு பானை** | **4) அழகு பாழ்** |

அ) அ – 4, ஆ – 1, இ – 3, ஈ – 2 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

இ) அ) அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3 ஈ) அ) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2

**விடை : ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1**

---

**ஈ) பத்தியைப் படித்துக் கருத்தைச் சுருக்கி எழுதுக :**

**பழையசோறு**

**பச்சை நெல் வயலைக் கண்கள் முழுதும் சுமந்து, இளநெல்லை நுகர்ந்து, அதன் பாலை ருசித்து, நீராவியில் அந்த நெல் அவியும் கதகதப்பான புழுங்கல் மணம்வரை சுவைத்தவள் நான். அவித்து, காய்ந்து, குத்திய அந்தப் புழுங்கல் அரிசியை, அதன் வழவழப்பை, கடுப்பு மணத்தை, சோறாகுமுன் கை நிறையஅள்ளி வாயில் போட்டு நெரித்து மென்றவள் சொல்கிறேன். பகலெல்லாம் உச்சி வெயிலுக்கு அது சுடச்சுடப் புழுங்கலரிசிச் சோறு. இரவு முழுவதும் அந்தச் சோறு நீரில் ஊறும். விடிந்த இந்தக் காலையில் அதன் பெயர் பழைய சோறு அல்லது பழையது. காத்திருந்து, சின்ன வெங்காயம், பச்சை மிளகாய் கடித்து நீராகாரம் போல் குடிப்பது ஒருவகை. வாழை இலையில் அந்தப் பழைய சோற்றைப் பிழிந்து போட்டால், வடுமாங்காய் அல்லது உப்பு நாரத்தங்காய் அதனுடன் சேர்த்துக் கொள்ளத் துடிப்பது இன்னொரு வகை. சுண்ட வைத்த முதல்நாள் குழம்பு இன்னும் உச்சம்!. நல்ல பழையது மாம்பழ வாசம் வீசுமாம். பழைய சோறு – அது கிராமத்து உன்னதம்.**

**"மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து" ............முக்கூடற்பள்ளு**

**கண்ணன், பிசாந்தி சேகரம் – அடிசில் 2017**

**விடை :**

பழையசோறு

இயற்கை எழில் நிறைந்த கிராமத்துச் சூழலில் வயலில் விளையும் நெல்லின் வாசம் கண்டு புழுங்கல் அரிசியை உலையில் போடும் முன் மென்று தின்றவள் பழைய சோறு பற்றிக் கூறுகிறாள். பகல் பொழுது சுடச்சுட புழுங்கலரிசிச் சோறு. இரவில் சோற்றை நீரில் ஊற வைத்து மறுநாள் காலை மிளகாய் சேர்த்து நீராகாரமாய்க் குடிப்பது ஒருவகை அல்லது, பழைய சோற்றுடன் முதல் வைத்த குழம்பைச் சேர்த்து அதனுடன் வடுமாங்காய், ஊறுகாய் சேர்த்து உண்பது மற்றொரு வகை.

---

**உ) கதையாக்குக :**

**மனித வாழ்வில் ஒவ்வொருவரும் நாளும் நாளும் புதுப்புது மனிதர்களைப் பார்க்கிறோம். புதுப்புதுச் செய்திகள் கிட்டும் கிட்டுகிற கருப்பொருள்களைத் திரட்டி, கற்பனை நயம் கூட்டிக் கதையாக்குவது ஒரு கலை. அது சிறுகதையாக இருக்கலாம். புதினமாக இருக்கலாம். அன்பை எதிர்ப்பார்த்திருப்பவராக, யாருமற்றவராக..... இருக்கும் ஒருவர் உங்களின் உதவியால் மனம் மகிழ்ந்த நிகழ்வினைக் கதையாக்குக.**

**விடை :**

அது ஒரு விவசாயக் குடும்பம். அக்குடும்பத்தில் மகன்கள் மூவரும் மகள் ஒருவரும் இருந்தனர். மூத்த இரு மகன்களும் தந்தைக்கு உதவியாக விவசாயத்தைக் கவனித்து வந்தனர். மகளுக்கு திருமணம் செய்துவைத்துவிட்டனர். ஓட்டுவீடு ஒன்றைத் தவிர வேறு சொத்து எதுவும் இல்லை. சொந்தமான சிறுவயலில் விவசாயம் செய்வதில் வருமானம் குடும்பம் நடத்தப் போதுமானதாக இல்லை. எனவே மூன்றாவது மகனையாவது படிக்க வைத்து, ஆசிரியராகவோ, மருத்துவராகவோ ஆக்கிவிட வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தார்.

அருகில் உள்ள ஊரில் நடைபெற்ற திருவிழாவுக்கு விவசாயி சென்றிருந்தார். அங்குச் சொற்பொழிவு நிகழ்த்திய ஒருவர் தான்தொண்டு நிறுவனம் நடத்தி வருவதாகவும், ஏழை மாணவருக்குப் படிக்க உதவி செய்வதாகவும் பேசிக்கொண்டிருந்தார். மேலும் எனது உதவி தேவைப்படுவோர் என் நண்பரான சதாசிவத்தை அணுகுமாறு கூறிச் சென்றார். அந்த விவசாயி, நண்பரான சதாசிவத்தைச் சந்தித்துத் தனது குடும்ப சூழலையும், தன் மகனின் படிப்பு

ஆர்வத்தையும் எடுத்துக் கூறி உதவிட வேண்டினார். அவரும் உதவி செய்வதாகக் கூறினார். மூன்றாவது மகனும் நன்கு படித்து பட்டதாரி ஆகி அருகில் உள்ள ஊரிலேயே ஆசிரியராக பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அந்த விவசாயியின் குடும்பம் வறுமை நீங்கி செழிப்படைந்தது.

---

**ஊ) கடிதம் எழுதுக :**

**உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. (பெ.ஆ.க – 1)**

அனுப்புநர் :
ந. வல்லவன்,
1/25, தெற்குத் தெரு,
நாகமலை,
மதுரை.

பெறுநர்
ஆணையர் அவர்கள்,
உணவு பாதுகாப்புத்துறை அலுவலகம்,
திருச்சி.

பொருள் : திருச்சி அருகே – விடுதியில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து புகார் தெரிவித்தல் சம்பந்தமாக......

ஐயா,

நான் கடந்த வாரம் என் குடும்பத்தினருடன் அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்தில் திருச்சி சென்றபோது, இடையில் மதிய உணவுக்காக சாலையோரத்தில் உள்ள உணவு விடுதியில் பேருந்தை நிறுத்தினார்கள். பயணம் செய்த அனைவரும் சாப்பிடுவதற்காக உணவு விடுதிக்குள் ஆர்வமாகச் சென்றோம். நாங்கள் உணவுக்கு பணம் கொடுத்து இரசீதும் பெற்றுக் கொண்டோம். மதிய உணவின் விலை மிகவும் கூடுதலாக இருந்தது. அவர்கள் எங்களுக்குக்கொடுத்த உணவு தரமற்றதாகவும், சுவை குறைந்ததாகவும் உண்பதற்கு தகுதி இல்லாமலும் இருந்தது. ஒரு கைப்பிடி உணவு கூட உண்ணாமல் அதை அப்படியே வைத்துவிட்டு எழுந்து வந்துவிட்டோம்.

நாங்கள்,உணவக மேலாளரின் கவனத்திற்குக் கொண்டு சென்றபோது அவர் அதை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளவில்லை. எங்களை தரக்குறைவாகப் பேசினார். மேலும் இவை அனைத்தும் அந்த உணவு விடுதியில் வைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமிராவில் பதிவாகி இருக்கும் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம்.

இது போன்றசம்பவங்கள் இனியும் நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இப்படிக்கு உண்மையுள்ள
ந. வல்லவன்

இணைப்பு:
1. உணவுக்காக பெற்ற ரசீது
2. உணவு விடுதியில் நடைபெற்ற சம்பவத்தை எங்களுடைய செல்போனில் பதிவு செய்த காட்சியை உங்களது அலைபேசிக்கு அனுப்பிய விபரம்.

உறை மேல் முகவரி,
பெறுநர்: ஆணையாளர் அவர்கள்,
உணவுப் பாதுகாப்புத் துறை அலுவலகம்,
திருச்சி.

**எ) நயம் பாராட்டுக :**

*"கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்*
*அத்தமிக்கும் போது அரிசிவரும் – குத்தி*
*உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்*
*இலையிலிட வெள்ளி எழும்"*

**– காளமேகப் புலவர்**

**திரண்ட கருத்து :**

கவி காளமேகம் ஒருசமயம் தன் நண்பர்களுடன் நாகப்பட்டினம் செல்கிறார். வழியில் காளமேகத்திற்குப் பசி ஏற்படுகிறது. உணவிற்குச் சத்திரம் எங்காவது உள்ளதா எனத் தேடினார். இறுதியில் ஒருவழியாக காத்தான் என்பவரின் சத்திரம் காண்கிறார். அங்கு வேலையெல்லாம் முடித்துப் பணியாளர்கள் அனைவரும் உறங்கிக் கொண்டிருக்கின்றனர். காளமேகத்துடன் வந்தவர்கள் அவர்களை எழுப்பி, நாங்கள் வெகுதொலையில் இருந்து வருகிறோம், பசியாக உள்ளோம் என்று கூறியதும் பணியாளர்கள் உறக்கத்திலிருந்து எழுந்து உலையேற்றி சமைக்கிறார்கள். காளமேகத்துக்கோ பசி அதிகமாகிவிட்டது. சமையலோ நேரமாகியது. அப்போது கவி பாடிய வசைப்பாடலே இப்பாடல் ஆகும்.

**மையக்கருத்து :**

நாகப்பட்டினத்தில் உள்ள வள்ளல் வருணகுலத்தான் காத்தான் ஆசிரமத்தில் உணவு சமைப்பவர்களுக்கு பொழுது மறையும் போது அரிசி வந்து சேரும். அதைக்குத்தி உலையிலிடும்போது, ஊர் அமைதியாக உறங்கிவிடும். சமைத்த சோற்றை அகப்பையால் எடுத்து இலையில் பரிமாறும் போது பொழுது விடியத் தொடங்கி கிழக்கே வெள்ளி முளைக்கும்.

**மோனைத் தொடர் :**

ஓர் அடியில் சீர்தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடை ஆகும்.

**கத்து, காத்தான்**
**அத்த, அரிசி**
**உலையிலிட, ஊரடங்கும்**
**அகப்பை, அன்னம்**

**எதுகைத் தொடை :**

அடிதோறும் முதல் சீரில் முதலெழுத்து தம்முன் அளவு ஒத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகைத் தொடை ஆகும்.

**கத்து, அத்த**
**உலையிலிட, இலையிலிட**

**சிறப்பு :**

இப்பாடல் வெண்பாவினால் பாடப்பட்டுள்ளது. இது இரட்டுறமொழிதல் என்னும் சிலேடையணி வகையைச்சேர்ந்ததாகும்.

## இயல் 3. எ

## மொழியோடு விளையாடு
(மொழிப்பயிற்சி)

**அ) விடுபட்ட எழுத்துகளை நிரப்பி அந்த எழுத்துக்களை மட்டும் இணைத்து ஒளிந்துள்ள ஒரு நூலின் பெயரைக் கண்டுபிடிக்க.**

| | | | விடை : |
|---|---|---|---|
| இ – கு | (பறவையிடம் இருப்பது) | – | இறகு |
| கு – தி | (சிவப்பு நிறத்தில் இருக்கும்) | – | குருதி |
| வா – | (மன்னரிடம் இருப்பது) | – | வாள் |
| அ – கா | (தங்கைக்கு மூத்தவள்) | – | அக்கா |
| ம – | ( அறிவின் மறுபெயர்) | – | மதி |
| பட – | (நீரில் செல்வது) | – | படகு |

---

**கூடுதல் வினா :**
**விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுதுக.**

**பச்சரிசியைக் கொண்டு ................. செய்து பாசிப்பருப்பினை வறுத்து ............. பிடித்து கேரட்டைத் துருவி நெய்யிட்டு .................... செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக் கிழங்கைச் சீவி ............ செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.**

அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா ஆ) சீவல், உருண்டை, அல்வா, சீவல்
இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல் ஈ) உருண்டை, சீவல், அல்வா, பொங்கல்
**(பெ.ஆ.க – 4)** **விடை : இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்**

---

**ஆ) இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:**
**சிலை – சீலை, தொடு – தோடு, மடு – மாடு, மலை – மாலை, வளி – வாளி, விடு – வீடு.**
**எ.கா : சிலையைத் திரைச்சீலையால் மறைத்திருந்தார்கள். (பெ.ஆ.க – 5)**
**விடை :**
1. **தொடு** சிகிச்சை செய்யக் காதிலிருந்த **தோடு** நீக்கப்பட்டது. **(பெ.ஆ.க – 1)**
2. குளக்கரை **மடு**வில் **மாடு** தண்ணீர் குடித்தது.
3. **மலை**யில் குடிகொண்டிருக்கும் முருகப் பெருமானைத் தரிசிக்க **மாலை** வாங்கினேன். **(பெ.ஆ.க – 1)**
4. **வளி**யால் மழை பெய்த போது **வாளி**யில் மழை நீரை நிரப்பினேன்.
5. குப்பைகளை நீக்கி **விடு, வீடு** சுத்தமாகும். **(பெ.ஆ.க – 5)**

---

**இ) அகராதியில் கண்டு பொருள் எழுதுக:**
**அ) ஊண், ஊன். ஆ) திணை, தினை. இ) அண்ணம், அன்னம். ஈ) வெல்லம், வெள்ளம்.**
**விடை :**

| | | | |
|---|---|---|---|
| அ) | ஊண் | – | உணவு |
| | ஊன் | – | இறைச்சி, உடல் |
| ஆ) | திணை | – | ஒழுக்கம், பிரிவு |
| | தினை | – | சிறுதானியம் |
| இ) | அண்ணம் | – | மேல்வாயின் உட்புறம் |
| | அன்னம் | – | சோறு, பறவை |
| ஈ) | வெல்லம் | – | இனிப்புப் பொருள் |
| | வெள்ளம் | – | நீர்ப்பெருக்கு |

**ஈ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :**



..................................................

..................................................

..................................................

..................................................

..................................................

**விடை :**

**கவிதை**

1. *பணம் உலகத்தைக் கவரும்*
*அழகு உள்ளத்தைக் கவரும்*
*வார்த்தைகள் மனிதரை கவரும்*
*உனது இரக்கம் நிறைந்த ஒரு செயலானது*
*இறைவனையே கவரும்.......*

2. *உண்மையான இரக்க*
*உணர்வு என்பது*
*எதையாவது கொடுப்பதோ,*
*வாங்குவதோ அல்ல*
*எது தேவையானதோ அதை*
*அந்த நேரத்தில் செய்வதுதான்.*

---

**உ) செயல்திட்டம் :**

**உணவு, விருந்து சார்ந்த பழமொழிகளையும், விழிப்புணர்வுத் தொடர்களையும் திரட்டி, அகர வரிசைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

**விடை :**

1. அன்பிலான் இட்டது அமுதாகாது.
2. அழையாத வீட்டில் நுழையாத சம்பந்தி.
3. ஆக்கப்பொறுத்தவன் ஆறப்பொறுக்க வேண்டும்.
4. சோறு கண்ட இடம் சொர்க்கம்.
5. மருந்தும் விருந்தும் மூன்று வேளை.
6. மீதூண் விரும்பேல்.

---

**ஊ) கலைச்சொல் அறிவோம் :**

செவ்விலக்கியம் - classical literature
வட்டார இலக்கியம் - - Regional literature
காப்பிய இலக்கியம் - Epic literature
நாட்டுப்புற இலக்கியம் - - Folk literature
பக்தி இலக்கியம்- Devotional literature
நவீன இலக்கியம் - - Modern literature
பண்டைய இலக்கியம் – Ancient literature

---

**எ) கலைச்சொல் தருக (கூடுதல் வினா)**

1. அ) Modern Literature – நவீன இலக்கியம் (அ.மா.வி)
   ஆ) Epic Literature – காப்பிய இலக்கியம் (அ.மா.வி)
2. அ) Epic Literature – காப்பிய இலக்கியம் (பெ.ஆ.க – 5)
   ஆ) Folk Literature – நாட்டுப்புற இலக்கியம் (பெ.ஆ.க – 5)

ஏ) நிற்க அதற்குத் தக....

| | | |
|---|---|---|
| " தம்பி உனக்குப் பிடிச்ச காய் சொல்லு ?" | – | "கேரட்" |
| " பிடிச்ச பழம் ?" | – | " ஆப்பிள்" |
| " பிடிச்ச காலை உணவு ?" | – | "நூடுல்ஸ்" |
| " மத்தியானத்துக்கு" | – | "ஃப்ரைடு ரைஸ்" |
| " ராத்திரி ?" | – | "பீட்ஸா அல்லது பாஸ்தா" |

இது ஏதோ ஆங்கிலப் படத்தின் வசனம் அல்ல. "சரியா சாப்பிட மாட்டேங்கிறான் டாக்டர்" என்று என்னிடம் அழைத்து வரப்பட்ட ஒரு சிறுவனுடனான என் உரையாடல். ஒட்டு மொத்த இளைய தலைமுறையும் பாரம்பரிய உணவை விட்டு வேகமாக விலகிச் சென்றது எப்படி ? இட்லியும், சாம்பார் சாதமும், கத்தரிக்காய்ப் பொரியலும் இனி காணாமல் போய்விடுமா ? அதிர்ச்சியான பதில், "ஆம். காணாமல் போய்விடும்!" உங்கள் குழந்தைகள், "ஆடு, மாடுகளைத் தவிர மனுஷங்ககூட கீரையைச் சாப்பிடுவாங்களா மம்மி ?" என எதிர்காலத்தில் கேட்கக்கூடும் !

**மருத்துவர் கு. சிவராமனின் இக்கருத்திற்குச் சமூக அக்கறையுடனான உங்களின் பதில் என்னவாக இருக்கும் ?**

**விடை :**

நோய்கள் வராமல் இருக்க இயற்கையான பாரம்பரியஉணவுகளை உண்ணவேண்டும். துரித உணவுகளைத் தவிர்க்க வேண்டும். காய்கறிகள், கீரை வகைகள், பழங்கள் ஆகியவற்றைத் தினமும் உணவுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். காலை உணவைத் தவிர்க்கக் கூடாது. காலை, இரவு இருவேளை சிற்றுண்டியும், மதியம் ஒருவேளை மட்டும் முழுமையான உணவு போதுமானது. எண்ணெயில் பொரித்த உணவுகளைத் தவிர்த்து இயற்கைஉணவோடு இன்பமாக வாழுங்கள்.

---

**கூடுதல் வினா :**

**புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க.**

**தவழும்போது ஒரு பெயர்**

**விழும்போது ஒரு பெயர்**

**உருளும்போது ஒரு பெயர்**

**திரண்டோடும்போது ஒரு பெயர் – அவை என்ன ? (பெ.ஆ.க – 3)**

அ) நீர், மழை, ஆறு, ஓடை ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்

இ) மாரி, கார், நீர், புனல் ஆ) மழை, புனல், மேகம், நீர்

**விடை : ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்**

---

ஐ. அறிவை விரிவு செய் :

| | | |
|---|---|---|
| திருக்குறள் தெளிவுரை | – | வ.உ.சிதம்பரனார் |
| சிறுவர் நாடோடிக் கதைகள் | – | கி.ராஜநாராயணன் |
| ஆறாம் திணை | – | மருத்துவர்.கு.சிவராமன் |

# இயல் 3. ஏ

## வாழ்வியல் இலக்கியம்

## திருக்குறள்

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். (பெ.ஆ. க – 1)**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. எய்துவர் எய்தாப் பழி – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது ?**

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

**விடை: அ) கூவிளம் தேமா மலர்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக்குறியிட்ட தொடரைத் தேர்க.**

அ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று 'அறுதியிட்டுக்' கூறுகிறார்.

ஆ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இ) திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்"என்று, அறுதியிட்டுக் கூறுகிறார்.

ஈ) 'திருவள்ளுவர்', 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

**(பெ.ஆ.க – 3) (செப் – 20)**

**விடை: ஆ) திருவள்ளுவர், 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.**

**3. உயிரினும் சிறந்தது எது ?**

அ) கல்வி ஆ) ஒழுக்கம்

இ) செல்வம் ஈ) பொருள் **விடை: ஆ) ஒழுக்கம்**

**4. "நச்சம் படாதவன் செல்வம் நடஊருள்" – என்பதில் அமைந்துள்ள நயம் ................**

அ) மோனை ஆ) எதுகை

இ) இயைபு ஈ) முரண் **விடை: அ) மோனை**

**5. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று ................**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு

இ) கலித்தொகை ஈ) திருக்குறள் **விடை: ஈ) திருக்குறள்**

**6. திருக்குறளில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை ................**

அ) 123 ஆ) 143

இ) 133 ஈ) 163 **விடை: இ) 133**

**7. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள்................**

அ) 9 ஆ) 10

இ) 8 ஈ) 11 **விடை: அ) 9**

**8. தைத்திங்கள் இரண்டாம் நாள்................**

அ) ஔவையார் நாள் ஆ) திருவள்ளுவர் நாள்

இ) கம்பர் நாள் ஈ) கபிலர் நாள் **விடை: ஆ) திருவள்ளுவர் நாள்**

**9. திருக்குறள் என்பது ................**

அ) கலிப்பா ஆ) வஞ்சிப்பா

இ) நேரிசை ஆசிரியப்பா ஈ) இரண்டடி வெண்பா **விடை: ஈ) இரண்டடி வெண்பா**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "நச்சப்படாதவன்" செல்வம் – இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.**

**விடை :**

நச்சப்படாதவன் – பிறருக்கு உதவாதவன் – பிறருக்கு உதவாதவனை யாரும் விரும்ப மாட்டார்கள்.

---

**2. "கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய**
**கோடிஉண் டாயினும் இல்" – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக. (பெ.ஆ.க–5)**

**விடை :**

கொடுப்பதூஉம்
துய்ப்பதூஉம் } இன்னிசை அளபெடைகள்

---

**3.பொருளுக்கேற்ற அடியைப் பொருத்துக.**

| | |
|---|---|
| **உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக்காக்கப்படும்** | **ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை** |
| **ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்று** | **உயிரினும் ஓம்பப்படும்** |
| **ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர்** | **நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று** |

**விடை :**

| | |
|---|---|
| உயிரைவிடச் சிறப்பாகப் பேணிக்காக்கப்படும் | உயிரினும் ஓம்பப்படும் |
| ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்று | நடு ஊருள் நச்சுமரம் பழுத்தற்று |
| ஒழுக்கத்தின் வழி உயர்வு அடைவர் | ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை |

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**4. பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை என்னும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக. (பெ.ஆ.க – 2)**

**விடை :**

பண்என்னாம் பாடற்கியைபின்றேல் : கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்.

---

**5. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது ? (அ.மா.வி)**

**விடை :**

நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.

---

**6. பல கற்றும் கல்லாதவர் யார் ?**

**விடை :**

உலகத்தோடு ஒத்து வாழக் கல்லாதவர், பல நூல்களைக் கற்வராயினும் அறிவு இல்லாதவரே ஆவர்.

---

**7. எவை அழிந்தால் துன்பம் அழியும் என வள்ளுவர் கூறுவது யாது ?**

**விடை :**

ஆசை, சினம், அறியாமை என்ற மூன்றும் அழிந்தால் அவற்றால் வரும் துன்பமும் அழியும்.

---

**8. எத்தகைய மன்னன் தானே கெட்டழிவான் ?**

**விடை :**

குற்றங்கண்டபொழுது இடித்துத் திருத்தும் பெரியாரைத் துணையாகக் கொள்ளாத பாதுகாப்பற்ற மன்னர், பகைவர் இன்றியும் தானே கெட்டழிவான்.

**9. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் எவர் என வள்ளுவர் வாய்மொழி கூறும் செய்தி யாது ? (செப் – 20)**

**விடை :**

எல்லோராலும் விரும்பத்தக்க நாகரிகத்தை விரும்புபவர் நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் ஆவார்.

---

**10. முயற்சியின் பயனைக் கூறுக.**

**விடை :**

முயற்சி செய்தால் ஒருவர்க்குச் செல்வம் பெருகும். முயற்சி இல்லாவிட்டால் அவருக்கு வறுமையே வந்து சேரும்.

---

**11. முன்வினையையும் தோற்கடித்து வெற்றி அடைபவர் யார் ? (அல்லது)**
**ஊழையும் உய்பக்கம் காண்பவர் யார் ?**

**விடை :**

சோர்வில்லாது முயற்சி செய்வோர் செய்கின்ற செயலுக்கு இடையூறாக வரும் முன்வினையையும் தோற்கடித்து வெற்றி அடைவார்.

---

**12. நச்சப்படாதவன் செல்வம் எத்தகையது ?**

**விடை :**

ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்றுள்ள செல்வமானது, ஊருக்கு நடுவில் நச்சுமரம் பழுத்ததற்குச் சமமாகும்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. "வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்**
**கோலொடு நின்றான் இரவு" – குறளில் பயின்றுவரும் அணியை விளக்குக.**

**விடை :**

இத்திருக்குறளில் உவமையணி பயின்று வந்துள்ளது.

உவமை – வேலோடு நின்றான் இடு என்றது
உவமேயம் – கோலொடு நின்றான்
உவமஉருபு – போலும்

**அணி விளக்கம் :**

ஒரு செய்யுளில் உவமை, உவமேயம், உவமஉருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக அமைந்து வருவது உவமையணி ஆகும்.

**விளக்கம் :**

வேலோடு வழியே நின்று திருடன் வழிப்போக்கர்களிடம் உன்னிடம் உள்ளபொருள்களைக் கொடு என கேட்பது, செங்கோல் ஏந்திய மன்னன் குடிமக்களிடம் அளவுக்கு மீறி வரிவிதித்து பொருளைத்தா எனக் கேட்பது போலாகும்.

---

**2. கவிதையைத் தொடர்க :**

***தண்ணீர் நிறைந்த குளம்***
***தவித்தபடி வெளிநீட்டும் கை***
***கரையில் கைபேசி படமெடுத்தபடி***
.............................................
.............................................
.............................................



**விடை :**

*காப்பாற்ற மனமின்றி*
*பார்த்ததைப் பகிர்ந்து*
*அதிலொரு சுகம் காணும்*
*அற்பப் பதர்களே !*

**திருக்குறள் பற்றிய கவிதை :**

*உரை(றை) ஊற்றி ஊற்றிப்*
*பார்த்தாலும்*
*புளிக்காத பால் !*
*தந்தை தந்த*
*தாய்ப்பால்*
*முப்பால் !*
– அறிவுமதி

**கற்பவை கற்றபின்**

**1. படங்கள் உணர்த்தும் குறளின் கருத்தினை மையமிட்டு வகுப்பில் கலந்துரையாடுக.**

| | |
|---|---|
|  |  |
| முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும். | பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் : கண்என்னாம் கண்ணோட்டம்இல்லாத கண். |

**விடை :**

**படம் : 1**

**அ) முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.**

**ஹரி** : நண்பா ! மேற்கண்ட படத்தைக் காணும்போது உனக்கு என்ன தோன்றுகிறது.

**பரத்** : "உழைப்பின் வேரோ கசப்பு : கனியோ இனிப்பு " என்ற பழமொழி நினைவுக்கு வருகிறது நண்பா !

**ஹரி** : எப்படி ! விளக்கமாகச் சொல் ?

**பரத்** : "தன் கையே தனக்கு உதவி " என்ற உயரிய சிந்தனையோடு தன் உழைப்பையே மூலதனமாகக் கொண்டு வாழும் அந்த மாட்டுவண்டிக்காரரின் உழைப்பு சோம்பலின்மையை வெளிக்காட்டுகிறது.

**ஹரி** : நண்பா ! இப்படத்தின் மூலம் நீ சொல்ல விரும்பும் கருத்து என்ன ?

**பரத்** : தன்னம்பிக்கையோடு உழைப்பவனிடத்தில் ஒரு போதும் வறுமை தங்காது என்பதே இப்படத்தின் மூலம் நான் கூ விரும்பும் கருத்தாகும்.

**படம் : 1**

**ஆ)**

**பரத்** : இப்படம் "உழைப்பின்றி ஊதியமில்லை" என்ற பொன்மொழியை உணர்த்துவதாக உள்ளது. காரணம் குடும்பத்தலைவன் சோம்பலுடன் உழைப்பின்றி இருப்பதால் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடுகிறது.

**படம் : 2**

**ஆ) பண்என்னாம் பாடற்கு இயைபின்றேல் : கண்என்னாம்
கண்ணோட்டம்இல்லாத கண்.**

**ஹரி** : மேற்கண்ட படத்தின் மூலம் நீ அறியும் கருத்தைக் கூறு நண்பா

**பரத்** : பிறரிடம் யாசகம் கேட்பது இழிவான செயலாகும். ஆனால் தன்னிடம் ஒருவர் இரந்து கேட்டும் கொடுக்காமல் இருப்பது அதனினும் இழிவான செயலாகும்.

**ஹரி** : மேற்கண்ட குறளோடு படத்தில் காணும் காட்சியை ஒப்பிட்டுக் கூறு நண்பா!
**பரத்** : திருவள்ளுவர் "கண்ணோட்டம்" என்ற குறளில் அற்புதமாக கூறியுள்ளார். இரக்கம் இல்லாத கண்களால் பயன் இல்லை என்கிறார்.

**படம் : 2**

**ஆ)**

**பரத்** : இசையோடு பாடல் பொருந்தவில்லை என்றால் யாரும் விரும்பமாட்டார்கள். பாடலும் இசையும் வேறுபட்டால் பயன் இல்லை. அதுபோல இரக்கமில்லாதவனிடத்தில் கண் இருந்தும் பயனில்லை.

---

**2.** கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.

"சின்னச்சாமி.... யாரோ மரத்தோரமா நிற்கிறாங்க........ யாராய் இருக்கும்.........." மாட்டு வண்டிய ஓட்டிக்கிட்டே அப்பா கேட்டார்.

"தெரியலப்பா......."

"இறங்கியாருன்னு பாரு......."

வாட்டசாட்டமாய், கண்ணாடியும் அலைபேசியும் கையுமாய் சாலையோரத்தில் வண்டியுடன் ஒருவர் நின்றிருந்தார்.

"ஐயா.. நீங்க......."

"வெளியூருப்பா..... வண்டி நின்னு போச்சு......."

"அப்படியா... வண்டியத் தூக்கி மாட்டு வண்டியில வச்சுட்டு வாங்க, மழை வர்ற மாதிரியிருக்கு...... ஊரு ரொம்ப தூரம்... வேற வண்டியும் வராது......."

அவர் உடையையும் உழைத்துக் களைத்த வியர்வை பொங்கிய உடலையும் பார்த்து வரலைன்னுட்டார். மூன்று நான்கு பேர்தான் வண்டியில் இருந்தோம்... சிறிது தூரம் போறதுக்குள்ள மழை கொட்டு கொட்டுன்னு கொட்டிருச்சு....... நாங்க வீட்டுக்குப் போயிட்டோம்.

இரவுல தூங்கப்போறப்ப....... அப்பா சொன்னார், தம்பி.... அந்த சூட்டுக்காரர் மழை தாங்காம நடந்திருக்காரு...... தேங்கா விழுந்து மண்ட உடைஞ்சு......... வேற யாரோ தூக்கிட்டு வந்திருக்காங்க. நம்ம ஊரு ஆசுபத்திரியில ....... கட்டுப் போட்டுக்கிட்டு இருந்தாங்க........ பாவம் படிச்சவரா இருக்காரு....... சூழ்நிலை புரியாம........ வரமாட்டேன்னு சொன்னாரு, இப்ப வேதனைப் பட்டாரே......

**அ)** **உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

**ஆ)** **பெயக்கண்டும் நஞ்சு உண்டு அமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்.**

**இ)** **ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவுஇன்றித்**
**தாழாது உஞற்று பவர்.**

**விடை :**

அ) உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

**காரணம் :**

உருவம் கண்டு எள்ளாமை வேண்டும் என்பதையும், பிறர் உதவி செய்ய முன்வரும்போது அதைத் தவிர்த்தல் தீராத துன்பத்தை தரும் என்ற கருத்தையும் கூறுகிறது.

| இயல் நான்கு | இயல் 4. நான்காம் தமிழ் |
|---|---|

உரைநடை உலகம்

| இயல் 4. அ | செயற்கை நுண்ணறிவு (உரைநடை) |
|---|---|

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. தலைப்புக்கும் குறிப்புக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

**தலைப்பு : செயற்கை நுண்ணறிவு**

**குறிப்பு : கண்காணிப்பு கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன் பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது. (பெ.ஆ.க–3)**

அ) தலைப்புக்குப் பொறுத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.
இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**விடை : அ) தலைப்புக்குப் பொறுத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.**

**2. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது ? (பெ.ஆ.க–1)**

அ) துலா ஆ) சீலா
இ) குலா ஈ) இலா **விடை: ஈ ) இலா**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. செயற்கை நுண்ணறிவு குறிப்பிடத்தகுந்த மாறுதல்களைச் செய்துவருவது...........**

அ) அறிவியலில் ஆ) இதழியலில்
இ) பொருளியலில் ஈ) புவியியலில் **விடை: ஆ) இதழியலில்**

**4. இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருளுக்கு பெயர்..............**

அ) பெப்பர் ஆ) இலா
இ) வாட்சன் ஈ) வேர்டுஸ்மித் **விடை: ஈ) வேர்டுஸ்மித்**

**5. அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்குவது..............**

அ) இலா ஆ) பெப்பர்
இ) வாட்சன் ஈ) வேர்டுஸ்மித் **விடை: ஈ) வேர்டுஸ்மித்**

**6. ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு .............. எனலாம்.**

அ) வன்பொருள் ஆ) செயற்கை நுண்ணறிவு
இ) இயந்திர மனிதன் ஈ) கணினி **விடை: ஆ) செயற்கை நுண்ணறிவு**

**7. ஐ.பி.எம்.நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கணினியின் பெயர் ............**

அ) வேர்டுஸ்மித் ஆ) இலா
இ) பெப்பர் ஈ) வாட்சன் **விடை: ஈ) வாட்சன்**

**8. செயற்கை நுண்ணறிவுக்கருவியான வாட்சன் புற்றுநோயைக்கண்டறிந்த ஆண்டு .............**

அ) 2000 ஆ) 2018
இ) 2016 ஈ) 2014 **விடை: இ) 2016**

**9. நோயாளிகளின் கேள்விக்குப் பதில் சொல்லும் கனிணி ...............**
அ) வாட்சன் ஆ) பெப்பர்
இ) இணையம் ஈ) திறன்பேசி **விடை: அ) வாட்சன்**

**10. பெப்பர் என்ற இயந்திர மனிதனை உருவாக்கிய நாடு ...............**
அ) சீனா ஆ) ஜப்பான்
இ) அமெரிக்கா ஈ) ஹாங்காங் **விடை: ஆ) ஜப்பான்**

**11. உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரேபோ ...............**
அ) இலா ஆ) வேர்டுஸ்மித்
இ) பெப்பர் ஈ) வாட்சன் **விடை: இ) பெப்பர்**

**12. ஜப்பானில் வரவேற்பாளராகவும், பணியாளராகவும் பயன்படுத்தப்படுவது ...............**
அ) இலா ஆ) கனிணி
இ) பெப்பர் ஈ) திறன்பேசி **விடை: இ) பெப்பர்**

**13. பழங்காலத் தமிழர்கள் அடிக்கடி சென்றுவந்த சீன துறைமுகங்கள்.................**
அ) ஹாங்காங் ஆ) சூவன்சௌ
இ) சியாமென் ஈ) சாங்காய் **விடை: ஆ) சூவன்சௌ**

**14. தமிழ் வணிகர்கள் சூவன்சௌ சென்றதால் அங்கு............... கோயில் கட்டப்பட்டுள்ளது.**
அ) முருகன் ஆ) சிவன்
இ) விநாயகர் ஈ) திருமால் **விடை: ஆ) சிவன்**

**15. சீனாவில் சிவன் கோயில் கட்ட ஆணையிட்ட பேரரசர் .............**
அ) ஹவாங்டி ஆ) ஹோஙட
இ) குப்லாய்கான் ஈ) குயின்ஷி **விடை: இ) குப்லாய்கான்**

**16. சீனாவிலுள்ள சிவன் கோயிலில் ............... காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.**
அ) பாண்டியர் ஆ) சோழர்
இ) சேரர் ஈ) பல்லவர் **விடை: ஆ) சோழர்**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**

**எ.கா : செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள் (பெ.ஆ.க– 6) (செப் – 20)**

**விடை :**

1. செயற்கை நுண்ணறிவால் இயங்கும் விமான நிலையங்கள்.
2. செயற்கை நுண்ணறிவால் இயங்கும் பெட்ரோல் நிலையங்கள்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெப்பர் குறித்து எழுதுக. (பெ.ஆ.க– 6)**

**விடை :**

★ ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்

★ இது உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ

★ வீட்டுக்கு, வணிகத்துக்கு,படிப்புக்கு என மூன்று வகைரோபோக்கள் கிடைக்கின்றன.

★ இவை மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்பச் செயல்படுகின்றன.

★ பெப்பரை வரவேற்பாளராகவும், பணியாளராகவும் வீடுகளிலும், வணிக நிறுவனங்களிலும், உணவு நிறுவனங்களிலும் பயன்படுத்துகிறார்கள்.

---

**3. வேர்டுஸ்மித் – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ இயல்பான மொழிநடையை உருவாக்குதல் என்னும் மென்பொருளுக்கு "வேர்டுஸ்மித்" (எழுத்தாளி) என்று பெயர்.

★ தகவல்களைக் கொடுத்தால் போதும் வேர்டுஸ்மித் அழகான கட்டுரையைச் சில நொடிகளில் உருவாக்கிவிடும்.

**4. யாருக்கு வணிக வானம் வசப்படும் ?**
**விடை :**

★ போட்டி நிறைந்த இவ்வுலகில் செயற்கை நுண்ணறிவை யார் முதலாவதாகவும், சரியாகவும் பயன்படுத்துகிறார்களோ அவர்களுக்கு வணிகவானம் வசப்படும்.

**5. எதிர்காலத்தில் நம்மை வளப்படுத்த உதவுவது எது ?**
**விடை :**

★ எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு பற்றிய அறிவும், நான்காவது தொழிற்புரட்சியின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவுமே நம்மை வளப்படுத்தும்.

**6. மனிதர்கள் எதற்கேற்பத் தங்களை மாற்றிக் கொள்வார்கள் ?**
**விடை :**

★ மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் இருந்தே வந்திருக்கின்றன.

★ அதற்கேற்ப மனிதர்கள் தங்களை மாற்றிக்கொள்வார்கள்.

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக. (பெ.ஆ.க–3)**
**விடை :**

★ இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளின் பயன்பாடு, மனிதனை அனைத்துத் திசைகளிலும் நீக்கமற நிறைந்து மேம்படுத்துகின்றன.

★ செயற்கை நுண்ணறிவு நமது வாழ்க்கையையும், வணிகத்தையும் நம்மை அறியாமலேயே வளப்படுத்திக்கொண்டிருக்கிறது.

★ இந்தத் தொழில்நுட்பத்தைக் கண்டு அச்சப்பட்டவர்களின் அலறல்களை நாம் எதிர்கொள்வதே நாம் விடுக்கும் முதல் அறைகூவல்.

★ ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பு அறிமுகமாகும் போதும் பழைய வேலைவாய்ப்புகள் புதிய வடிவில் மாற்றம் பெறுகின்றன.

**2. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு எதிர்காலத் தொழில்நுட்பம் என்ற தலைப்பில் எழுதுக.**
**விடை :**

★ வேலைவாய்ப்புகளில் கணிசமான மாற்றங்களை செயற்கை நுண்ணறிவு கொண்டவரப் போகிறது.

★ எதிர்காலத்தில் குழந்தையை ரோபோவிடம் ஒப்படைத்துவிட்டு நிம்மதியாக அலுவலகம் செல்லும் பெற்றோர்களை நாம் பார்க்கப்போகிறோம்.

★ வயதானவர்களுக்கு உதவிகள் செய்தும் அவர்களுக்கு உற்ற தோழனாய் பேச்சுக் கொடுத்தும், மனிதர் செய்ய இயலாத அலுப்புத் தட்டக்கூடிய கடினமான செயல்களை ரோபோவால் செய்ய முடியும்.

★ எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இயக்க வேண்டிய காலகட்டம் உருவாகும்.

★ இத்தகைய ஊர்திகள் ஏற்படுத்தும் விபத்துகள் குறையும். போக்குவரத்து நெரிசல்கள் இருக்காது. இதனால் பயண நேரம் குறையும். எரிபொருள் மிச்சப்படும்.

★ இத்தகைய மென்பொருள்கள் கவிதைகள், கதைகள், விதவிதமான எழுத்து நடைகள் போன்றவற்றைக் கற்றுக்கொண்டு மனிதர்களுடன் நேரிடையாக போட்டியில் இறங்கினாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

---

**சிறுவினா (கூடுதல் வினா):**

**3. நீவீர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக. (அ.மா.வி)**

**விடை :**

1. திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

2. காணொலிகளைத் தொகுக்கும் மென்பொருள்களில் (Video Editing) இன்றைக்குச் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் நேரம் வீணாவது தவிர்க்கப்படுகிறது.

3. செயற்கை நுண்ணறிவின் மிகுதியான வளர்ச்சியால் தரவு அறிவியலாளர்களின் (Data Scientists) தேவை கூடியுள்ளது.

---

**4. "மெய்நிகர் உதவியாளர்" என்பதன் பணி குறித்து எழுதுக.**

**விடை :**

★ நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும். நாம் திறக்கக் கட்டளையிடுகிற செயலியைத் திறக்கும்.

★ நாம் கேட்பதை உலாவியில் தேடும். நாம் விரும்பும் கவிதையை இணையத்தில் தேடித்தரும்.

★ எந்தக் கடையில் எது விற்கும் என்று சொல்லும். படிப்பதற்கு உரிய நூல்களைப் பட்டியலிடும். நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றிக் கருத்துரைக்கும்.

★ எதிர்காலத்தில் உங்கள் நெருங்கிய நண்பர்கள், குடும்பத்தினர் ஆகியோரை விடவும் மெய்நிகர் உதவியாளர் உங்களை நன்கு அறிந்தவர்களாக இருக்கும்.

---

**பகுதி – V (எட்டு மதிப்பெண்கள்)**

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறைகொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக. (பெ.ஆ.க – 2)**

**விடை :**

**முன்னுரை :**

மனிதர்கள் செய்யும் வேலைகளான மொழிப்பெயர்ப்பு, இசையமைப்பு, மகிழுந்து ஓட்டுதல் முதலியவற்றைச் செய்யக் கணினிக் கரங்கள் நீளுகின்றன! கட்டுரை எழுதும் மென்பொருள்கள், கவிதை பாடும் ரோபோக்கள், மனிதனால் இயலாத செயல்களைச் செய்யும் ரோபோக்கள், ஆள்கள் இல்லாமலேயே நடத்தப்படும் வணிகக் கடைகள் எனப் புதிதான வழிகளில் பணித்திறனைக் கூட்டுகின்ற இந்தத் தொழில் நுட்பமே செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஆகும்.

**எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவு :**

★ செயற்கை நுண்ணறிவுள்ள ரோபோக்கள் மனிதர் செய்ய இயலாத, அலுப்புத் தட்டக்கூடிய கடினமான செயல்களைச் செய்ய முடியும்.

★ புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு நல்குகிறது. பெரு நிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும், சந்தைப்படுத்தவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றன.

★ விடுதிகளில், வங்கிகளில், அலுவலகங்களில் தற்போது மனிதர் அளிக்கும் சேவைகளை ரோபோக்கள் அளிக்கும்! மேலும் நம்முடன் உரையாடுவது ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்துதருவது, தண்ணீர் கொண்டுவந்து தருவது, உடன் வந்திருக்கும் குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவது எனப் பலவற்றைச் செய்யும்.

★ எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இயக்க வேண்டியிருக்கும். இத்தகைய ஊர்திகள் ஏற்படுத்தும் விபத்துகள் குறையும், போக்குவரத்து நெரிசல் இருக்காது. அதன் மூலம் பயண நேரம் குறையும். எரிபொருள் மிச்சப்படும்.

**புதிய வாய்ப்புகள் :**

★ புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு நல்குகிறது. பெரு நிறுவனங்கள் தங்கள் பொருள்களை உற்பத்தி செய்யவும், சந்தைப்படுத்தவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றன.

**மின்னணு மாற்றம் :**

★ ஒருகாலத்தில் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு எழுதப்படிக்கத் தெரிந்த கல்வியறிவே போதுமானதாக இருந்தது. இப்போது கல்வியறிவுடன் மின்னணுக் கல்வியறிவையும் (Digital Literacy) மின்னணுச் சந்தைப்படுத்துதலையும் (Digital Marketing) அறிந்திருப்பது வாழ்க்கையை எளிதாக்கவும், வணிகத்தில் வெற்றியடையவும் உதவும்.

**ஆராய்ச்சிகள் :**

★ மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காப்பாற்றவும், உடல்நலத்தைப் பேணவும், கொடிய நோய்களைத் தொடக்கத்திலேயே கண்டறியவும் மருத்துவம் செய்யும் முறைகளைப் பட்டறிவு மிக்க மருத்துவரைப் போல் பரிந்துரை செய்யவும் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் ஆராய்ச்சிகள் மும்முரமாக நடந்துவருகின்றன.

**முடிவுரை :**

எதிர்காலத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் இயந்திரங்கள் குழந்தையைத் தூக்கவும், தேனீர்க்கோப்பையை எடுக்கவும் செய்யும். ஆனால் மனித முயற்சியால் உயிராபத்தை விளைவிக்கக்கூடிய செயல்களையும் செய்ய முடியும்.

---

**மொழிப்பயிற்சி**

**அ) விடைகளுக்கேற்ற வினாக்களை அமைக்க. (பெ.ஆ.க – 4)**

**1. செயற்கை நுண்ணறிவுக் கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்று நோயைக் கண்டுபிடித்தது.**

**விடை :** எந்த செயற்கை நுண்ணறிவுக் கருவி சில நிமிடங்களில் புற்றுநோயைக் கண்டுபிடித்தது ?

**2. வேர்டுஸ்மித் என்ற எழுத்தாளி, தகவல்களைக் கொண்டு சில நொடிகளில் அழகான கட்டுரையை உருவாக்கிவிடும். (பெ.ஆ.க – 4)**

**விடை :** சில நொடிகளில் தகவல்களைக் கொண்டு அழகான கட்டுரையை உருவாக்குவது எது ?

**3. அ) செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள்அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம்.**

**விடை :** செயற்கை நுண்ணறிவு என்பது யாது ?

**4. செயற்கை நுண்ணறிவின் மிகுதியான வளர்ச்சியால் தரவு அறிவியலாளரின் தேவை கூடியுள்ளது.**

**விடை :** செயற்கை நுண்ணறிவின் மிகுதியான வளர்ச்சியால் எவர்களின் தேவை கூடியுள்ளது ?

---

**ஆ) சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

**1. தற்போது வெளிவருகிற சில உயர்வகை திறன்பேசியின் ஒளிப்பட கருவி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை கொண்டிருக்கிறது.**

**விடை :** தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது.

**2. எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளை செயற்கை நுண்ணறிவை கொண்டு இயக்க வேண்டியிருக்கும்.**

**விடை :** எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இயக்க வேண்டியிருக்கும்.

**இ) நிறுத்தற்குறியிடுக:**

**1. அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம் இதுவே சுருக்கமான வழி என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறதல்லவா**

**விடை :** "அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம் ; இதுவே சுருக்கமான வழி" என்று நமது திறன்பேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறதல்லவா ?

**2. டாக்டர் திரும்பவும் ஐயாவுக்கு மூச்சுத்திணறல் டெரிஃப்லின் ஊசி போட்டுவிடட்டுமா என்று கேட்கும்**

**விடை :** "டாக்டர் ! திரும்பவும் ஐயாவுக்கு மூச்சுத்திணறல் ! டெரிஃப்லின் ஊசி போட்டுவிடட்டுமா ?" என்று கேட்கும்.

---

**ஈ) ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக.**

**1. செயற்கை நுண்ணறிவு நமது வாழ்க்கையையும் வணிகத்தையும் நம்மை அறியாமலேயே வளப்படுத்திக்கொண்டிருக்கின்றன.**

**விடை :** செயற்கை நுண்ணறிவு நமது வாழ்க்கையையும் வணிகத்தையும் நம்மை அறியாமலேயே வளப்படுத்திக்கொண்டிருக்கின்றது.

**2. மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் இருந்தே வந்திருக்கின்றது.**

**விடை :** மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் இருந்தே வந்திருக்கின்றன.

---

**உ) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

**தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச் சொல்லும் கைரேகையும் திறன் பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது. (பெ.ஆ.க – 1)**

**வினா விடைகள் :**

**அ. திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் யாவை ?**

**விடை :**

திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் கடவுச் சொல்லும், கைரேகையும் ஆகும்.

**ஆ. திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது ?**

**விடை :**

திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு, அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக்கொள்கிறது.

**இ. உயர்வகைத் திறன்பேசியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது ?**

**விடை :**

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம்.

---

**ஊ) பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

**எந்த ஒரு புதிய தொழில்நுட்பமும் ஒரே நாளில் வந்து விடுவதில்லை. 1980 களில் ஒவ்வொருவருக்குமான தனிநபர் கணினிகளின் வளர்ச்சியும், இணையப் பயன்பாட்டின் பிறப்பும் இன்றைய மின்னணுப் புரட்சிக்குக் காரணமாயின. அவற்றுள் இவ்வுலகை மிகுதியாக ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு. அறையின் மூலையில் நிறுவப்பட்டிருக்கும் கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறதே அதனுள் பொதிந்திருப்பது செயற்கை நுண்ணறிவு. அந்த வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகம், "இதுவே சுருக்கமான வழி" என்று நமது திறன் தொலைபேசியில் உள்ள வழிகாட்டி வரைபடம் காட்டுகிறதல்லவா ? அதற்குக் காரணமாக இருப்பதும் செயற்கை நுண்ணறிவே.**

**வினா விடைகள்:**

**1) தனிநபர் கணினி உருவாக்கப்பட்ட ஆண்டு எது ?**

**விடை :** 1980 ஆம் ஆண்டு தனிநபர் கணினி உருவாக்கப்பட்டது.

**2) இணையப் பயன்பாடு எப்புரட்சி உருவாகக் காரணமாயின ?**

**விடை :** மின்னணுப் புரட்சி உருவாகக் காரணமாயின

**3) இவ்வுலகை ஆளக்கூடிய ஒரு தொழில்நுட்பம் எது ?**

**விடை :** செயற்கை நுண்ணறிவு

**4) கண்காணிப்புக் கருவி அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்பக் காரணமானது எது ?**

**விடை :** செயற்கை நுண்ணறிவு

**5) இப்பத்திக்கு ஏற்ற பொருத்தமான தலைப்பு தருக.**

**விடை :** புதிய தொழில்நுட்பம்

---

**எ) படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.**



விடை :

1. எந்த ஒரு புதிய தொழில்நுட்பமும் ஒரே நாளில் வந்ததில்லை
2. இவ்வுலகம் மென்பொருள்களால் சூழப்பட்டுள்ளது.
3. வணிக வாய்ப்புகளைத் தருகிறது.
4. மின்னணுக் கல்வியறிவு வாழ்க்கையை எளிதாக்குகிறது.
5. எதிர்காலத்தில் ஒவ்வொரு துறையும் முன்னேற்றமடையும்.

---

**கூடுதல் வினா:**

**1. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக. (செப்–20)**

**விடை :**



★ பெற்றோர்களுக்கு குழந்தைககளுடன் விளையாட நேரமில்லை.
★ குழந்தைகளுக்கோ சேர்ந்து விளையாட மற்ற குழந்தைகள் இல்லை.
★ குழந்தை மாற்றுவழியாக ரோபோவுடன் சதுரங்கம் விளையாடுகிறது. வருங்காலத்தில் இதுபோன்ற காட்சிகளையே காண முடியும்.
★ பெற்றோர்கள் இதனை மாற்றவேண்டும்.

---

**கற்பவை கற்றபின்**

**1. இன்றைய செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடுகளைச் செய்தித்தாளிலோ இணையத்திலோ கண்டு அட்டவணையாகத் தருக.**

**விடை:**

| | |
|---|---|
| **1. ஸ்மார்ட் கார்கள்** | கூகுளின் சுய–ஓட்டுநர் கார் திட்டத்தையும்,டெஸ்லாவின் தன்னியக்கத் திட்டத்தையும் கொண்டுள்ளது. |
| **2. டீப்ப்ளூ கணினி (Deep Blue)** | செஸ் விளையாடும் கணினி |
| **3. Computer Aided Language instruction (CALI)** | கணினி வழி– மொழிப்பாடம் கற்றல். மாணவர்கள் தங்களுக்கு முடிந்த அளவில் சுயமாக கற்கும் பயிற்சி அளிக்கிறது. |

| | |
|---|---|
| 4. நெட்ஃபிளிக்ஸ் (NETFLIX) | வீடியோ பயன்பாடுகளுக்கு உதவுகிறது. |
| 5.ரோபோக்கள் (ROBOTS) | மருத்துவத்துறை மற்றும் கடினமான வேலைகள் செய்யவும், கடைகளில் அழகுபொம்மையாகவும் பயன்படுகிறது, |
| 6.தானியங்கி படிக்கட்டு (எஸ்கலேட்டர்) | மனிதன் படியில் ஏறாமல் படியில் நின்றால் போதும் அதுவே நகர்ந்து செல்லும் |
| 7. மென்பொருள் (Photoshop) | ஓவியத்துறையில் பயன்படுகிறது. |

**2. கொடுக்கப்படுகின்ற எல்லாவற்றையும் உள்ளீடு செய்து, தேவைப்படும் வேளையில் வெளிப்படுத்துவதில், இன்று மூளைக்கு இணையாகத் தொழில்நுட்பம் முன்னேறியுள்ளது. இக்கருத்தையும் படத்தையும் ஒப்புநோக்கிக் கலந்துரையாடுக.**

**விடை :**



**மாணவர்கள் :** வணக்கம் ஐயா.

**தமிழாசிரியர் :** வணக்கம். அமருங்கள். இன்று உணவு, உடை, இருப்பிடம் இவற்றுடன் தொழில்நுட்பம் தற்போது அடிப்படைத் தேவையாகிவிட்டது. எனவே இக்கருத்தைப் பற்றிய ஒரு கலந்துரையாடல் செய்வோமா ?

**மாணவர்கள் :** சரிங்க ஐயா

**கபிலன் :** மனித மூளையின் செயல்பாடுகள் பற்றிக் கூறுங்கள் ஐயா.

**ஆசிரியர் :** இச்சை ஒன்றியச் செயல்பாடுகளான மூச்சு விடுதல், செரிமானம், இதயத்துடிப்பு, கொட்டாவி, விழிப்புணர்வு, சிந்தனை புரிதல், திட்டமிடல், தற்கட்டுப்பாடு, பகுத்தறிதல், கற்றறிதல் போன்ற செயல்பாடுகளைச் சிறப்பாகச் செய்கின்றன.

**குணா :** தொழில்நுட்பம் என்றால் என்னங்க ஐயா ?

**ஆசிரியர் :** பொருட்கள் அல்லது சேவைகள் உற்பத்தி செய்யப்பயன்படும் அறிவியல் நுட்பங்களின் தொகுப்புதான் தொழில்நுட்பம்.

**ஹேமா :** தொழில்நுட்பத்தின் பயன்பாடு பற்றிக் கூறுங்கள் ஐயா !

**தமிழரசி :** பறவையைக் கண்டான் விமானம் படைத்தான். எதிரொலி கேட்டான் வானொலி படைத்தான். இவை மட்டுமல்லாமல் அச்சு இயந்திரம், தொலைபேசி, மின்சார அடுப்பு, கணினி, ரோபோ போன்ற பொருள்களையும், மனிதன் தன் மூளையைப் பயன்படுத்தித் தன் வளத்தைப் பெருக்கிக்கொள்ள உருவான தொழில்நுட்பங்களே !

**கபிலன் :** நன்றிங்க ஐயா... தொழில்நுட்ப வளர்ச்சியால் மனிதனுக்கு வேலைவாய்ப்பு குறைந்துவிட்டதே !

**குணா :** உண்மையா ஐயா ?

**ஆசிரியர் :** இல்லை. நம்முடைய தேவைகளுக்கு ஏற்ப தொழில்நுட்பம் பெருகுகிறது. வேலைவாய்ப்புகளும் அதிகரித்துக்கொண்டுதான் இருக்கின்றன.

**ஹேமா :** பலர் செய்கின்ற வேலையை ஒரு ரோபோ செய்துவிடும் என்கிறார்களே ! அதனால் நமக்கு நன்மைதானே ஐயா !

**ஆசிரியர் :** நன்மைதான். இன்று தொழில்நுட்பத்தால் உருவான பொருள்கள் இன்றி மனிதனால் வாழ முடியாது என்ற நிலை உள்ளது. ஏனென்றால் அந்த அளவுக்கு தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது. மாணவர்களே ! மிக்க மகிழ்ச்சி !

**மாணவர்கள் :** நன்றிங்க ஐயா

கவிதைப் பேழை

இயல் 4. ஆ

## பெருமாள் திருமொழி
### –குலசேகராழ்வார் (செய்யுள்)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

பலவுள் தெரிக : (பாடநூல் வினா)

**1. "உனதருளே பார்ப்பன் அடியேனே !" – யாரிடம் யார் கூறியது ? (பெ.ஆ.க–5) (செப்–20)**
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்
**விடை: ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்**

---

பலவுள் தெரிக : (கூடுதல் வினா)

**2. பின்வருவனவற்றுள் முறையான தொடரைத் தேர்வு செய்க.**
அ) சங்க இலக்கியத்தில் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன.
ஆ) அறிவியல் கருத்துகள் சங்க இலக்கியத்தில் நிறைந்துள்ளன.
இ) இலக்கியத்தில் அறிவியல் சங்க கருத்துகள் நிறைந்துள்ளன.
ஈ) சங்க அறிவியல் இலக்கியத்தில் கருத்துகள் நிறைந்துள்ளன.
**விடை: அ) சங்க இலக்கியத்தில் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன.**

**3. மீளாத்துயர் – இலக்கணக்குறிப்பு தருக.**
அ) பண்புத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம்
இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஈ) வேற்றுமைத் தொகை
**விடை: இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்**

**4. வித்துவக்கோடு என்னும் ஊர் ................. மாநிலத்தில் உள்ளது.**
அ) ஆந்திரா ஆ) மகாராஷ்டிரா
இ) தமிழ்நாடு ஈ) கேரளா **விடை: ஈ) கேரளா**

**5. குலசேகர ஆழ்வார் உய்யவந்த பெருமாளை.................. உருவகித்துப் பாடுகிறார்.**
அ) தந்தையாக ஆ) இறைவனாக
இ) அருவமாக ஈ) அன்னையாக **விடை: ஈ) அன்னையாக**

**6. பெருமாள் திருமொழி .............. பாடப்பகுதியில் உள்ளது.**
அ) திருவியற்பா ஆ) திருவிசைப்பா
இ) முதலாயிரம் ஈ) தேவாரம் **விடை: இ) முதலாயிரம்**

**7. "வாளால் அறுத்து" எனத் தொடங்கும் பெருமாள் திருமொழியின் பாடப்பகுதியாக உள்ள முதலாயிரத்தின் பாசுரம் ..............**
அ) 584 ஆ) 682
இ) 691 ஈ) 591 **விடை: இ) 691**

**8. பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ............. திருமொழியாக உள்ளது.**
அ) ஐந்தாம் ஆ) மூன்றாம்
இ) நான்காம் ஈ) இரண்டாம் **விடை: அ) ஐந்தாம்**

**9. பெருமாள் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை ........**
அ) 205 ஆ) 305
இ) 105 ஈ) 405 **விடை: இ) 105**

**10. பெருமாள் திருமொழியைப் பாடியவர் .............**

அ) நம்மாழ்வார் ஆ) குலசேகராழ்வார்
இ) பெரியாழ்வார் ஈ) பொய்கையாழ்வார் **விடை: ஆ) குலசேகராழ்வார்**

**11. குலசேகரத்தாழ்வாரின் காலம் ............... நூற்றாண்டாகும்.**

அ) ஆறாம் ஆ) ஏழாம்
இ) எட்டாம் ஈ) ஒன்பதாம் **விடை: இ) எட்டாம்**

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக. (பெ.ஆ.க– 4)**

**விடை :**

★ "மருந்து பாதி மருத்துவம் பாதி" என்ற சொல்வழக்குக்கேற்ப மருந்தால் மட்டும் நோய் நீங்கிவிடுவதில்லை. மருத்துவம் செய்பவருக்கும் அதில் பங்குள்ளது,

★ எனவே, நோயின் இயல் அறிந்து நோயாளியிடம் அன்பும் பரிவும் காட்டி மருந்து கொடுத்து குணப்படுத்துபவரை "கைராசிக்காரர்" என்று அழைப்பர்.

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. பெருமாள் திருமொழி – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது.

★ இதில் 105 பாடல்கள் உள்ளன.

★ இதனைப் பாடியவர் குலசேகராழ்வார் ஆவார்.

**3. "ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே !" – இப்பாடலடி உணர்த்தும் செய்தி யாது ?**

**விடை :**

★ வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே! நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும், உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும் எதிர்பார்த்து வாழ்கின்றேன் என்கிறார் குலசேகராழ்வார்.

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக. (பெ.ஆ.க–6) (செப்–20)**

**விடை :**

★ மாளாத காதல் நோயாளன் போல என்பது நோயாளி ஒருவன், மருத்துவர் தன்னைக் கத்தி கொண்டு அறுத்தாலும், சுட்டாலும் அவற்றின் துன்பத்தின் காரணமாக மருத்துவர் மேல் கோபம் கொள்ளாமல் தீராத அன்பு கொள்வான்.

★ அதற்குக் காரணம் மருத்துவர் தன்னை நோயிலிருந்து விடுவிப்பார் என்ற நம்பிக்கையே என்று உவமையைக் கூறி அதே போல்

★ வித்துவக்கோட்டு அன்னையே! நீ எனக்கு மீளமுடியாத துன்பத்தைத் தந்தாலும், உன் அருளையே வேண்டி நிற்கிறேன். ஒருபோதும் என்னைக் கைவிடமாட்டாய் என்று நம்பியிருக்கிறேன் என்கிறார்.

**சிறுவினா : ( கூடுதல் வினா)**

**1. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் – நூற்குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ தமிழகத்தின் பழம்பெரும் சமயங்களில் ஒன்று வைணவம்.

★ திருமாலை முழுமுதற் கடவுளாய்க் கொண்டு போற்றும்சமயமாகும்.

★ பன்னிரு ஆழ்வார்கள் பாடியருளியதேனினும் இனிய தீந்தமிழ்ப் பனுவல் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகும்.

★ வைணவர்களுக்குத் தமிழ்வேதமாய் விளங்கும் இந்நூல் முதலாயிரம், பெரிய திருமொழி, இயற்பா, திருவாய்மொழி என நான்கு பிரிவினை உடையது.

★ பன்னிரு ஆழ்வார்களால் பாடப்பட்டுள்ளது.

**மொழிப்பயிற்சி**

**அ) சொல்லும் பொருளும்.**

| | |
|---|---|
| சுடினும் – சுட்டாலும் | மாயம் – விளையாட்டு |
| மாளாத – தீராத | துயர் – துன்பம் |

**ஆ) இலக்கணக் குறிப்பு:**

**விடை:**

**மாளாத காதல்** – எதிர்மறைப் பெயரெச்சம்

**மீளாத்துயர்** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**இ) பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடைதருக.**

***வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்***
***மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்***
***மீளாத் துயர் தரினும் வித்துவ கோட்டம்மா! நீ***
***ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே***

**1. இப்பாடல் அடிகள் இடம்பெற்ற நூல் எது?**
**விடை:** பெருமாள் திருமொழி

**2. இப்பாடலின் ஆசிரியர் யார்?**
**விடை:** குலசேகராழ்வார்

**3. இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.**
**விடை:** வாளால் – மாளாத – மீளா – ஆளா

**4. உனதருளே – இச்சொல்லைப் பிரித்தால் ..........**
**விடை:** உனது + அருளே

**5. மாளாத – இச்சொல்லின் பொருள் தருக.**
**விடை:** தீராத

**6. மீளா – இலக்கணக்குறிப்பு**
**விடை:** ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**7. இப்பாடலில் வந்துள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.**
**விடை:** மருத்துவன் – மாளாத

**கற்பவை கற்றபின்**

**1. தமிழர் மருத்துவ முறைக்கும் நவீன மருத்துவ முறைக்கும் உள்ள தொடர்பு குறித்து ஒப்படைவு உருவாக்குக.**

**விடை:**

★ பண்டைத் தமிழர் வாளால் அறுத்துச் சுடினும்! மருத்துவர் உடலை கத்தியைக் கொண்டு அறுத்தாலும்நோயின் காரணமாகச் சுட்டாலும் அது தன் நன்மைக்கே என அவரிடம் நோயாளி அன்புடன் பழகுவார் என குலசேகராழ்வார் கூறுவதன் மூலம் பண்டைத் தமிழ் மருத்துவ முறையைச் சிறப்பாக எடுத்துரைக்கிறார்.

★ இன்றைய நவீன மருத்துவ முறையில் மருத்துவர் நோயாளியினை நவீன உபகரணங்களைக் கொண்டு அறுவை சிகிச்சை செய்தாலும், அவற்றின் துன்பத்தின் காரணமாகமருத்துவர் மேல் கோபம் கொள்ளாமல், தீராத அன்பு கொள்வான். அதற்குக் காரணம், மருத்துவர் தன்னை நோயிலிருந்து விடுவிப்பார் என்ற நம்பிக்கையே காரணமாகும்.

**இயல் 4. இ**

## கவிதைப் பேழை

**பரிபாடல்**
**– கீரந்தையார் (செய்யுள்)**

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. பரிபாடல் அடியில் "விசும்பும் இசையும்"– என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ? (அ.மா.வி) (பெ.ஆ.க–2)**

அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

**விடை: ஈ) வானத்தையும் பேரொலியையும்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. புவியின் உருவாக்கம் குறித்து கூறும் நூல் .................**

அ) அகநானூறு ஆ) பதிற்றுப்பத்து
இ) பரிபாடல் ஈ) குறுந்தொகை **விடை: இ) பரிபாடல்**

**3. "தண்பெயல் தலைஇய ஊழியும்"– என்ற வரி குறிப்பிடுவது...................**

அ) நீரின் தோற்றத்தை ஆ) நிலத்தின் தோற்றத்தை
இ) காற்றின் தோற்றத்தை ஈ) நெருப்பின் தோற்றத்தை **விடை: அ) நீரின் தோற்றத்தை**

**4. முதல் பூதம் என்பது ...............**

அ) நிலம் ஆ) காற்று
இ) வானம் ஈ) நீர் **விடை: இ) வானம்**

**5. அமெரிக்க வானியல் வல்லுநர் எட்வின் ஹப்பின் ............... ல் நம் பால் வீதி போன்றுபல பால்வீதிகள் உள்ளன என்று நிரூபித்தார்.**

அ) 1724 ஆ) 1824
இ) 1924 ஈ) 1624 **விடை: இ) 1924**

**6. 1300 ஆண்டுகளுக்கு முன் அண்டப்பகுதியைப் பற்றி எழுதியவர் ...............**

அ) அப்பர் ஆ) மாணிக்கவாசகர்
இ) சுந்தர் ஈ) கம்பர் **விடை: ஆ) மாணிக்கவாசகர்**

**7. அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம் சிறிய ஆகப் பெரியோன் தெரியின்–இப்பாடல் குறிப்பிடும் நூல் ...............**

அ) திருவாசகம் ஆ) தேவாரம்
இ) கலித்தொகை ஈ) சீவக சிந்தாமணி **விடை: அ) திருவாசகம்**

**8. பரிபாடல் ............. நூல்களுள் ஒன்றாகும்.**

அ) பத்துப்பாட்டு ஆ) நீதிநூல்கள்
இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு **விடை: இ) எட்டுத்தொகை**

**9. பரிபாடல் நூலின் ஆசிரியர் .................**

அ) நப்பூதனார் ஆ) கீரந்தையார்
இ) அதிவீரராமபாண்டியர் ஈ) நக்கீரர் **விடை: ஆ) கீரந்தையார்**

**10. பரிபாடல் ............. என்னும் புகழுடையது.**

அ) ஓங்குபரிபாடல் ஆ) புகழ்பரிபாடல்
இ) உயர்பரிபாடல் ஈ) நற்பரிபாடல் **விடை: அ) ஓங்குபரிபாடல்**

**11. இன்றுவரை கிடைத்துள்ள பரிபாடல் நூலில் உள்ள பாடல்கள் ...............**

அ) 70 ஆ) 48
இ) 24 ஈ) 90 **விடை: இ) 24**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக. (பெ.ஆ.க–6)**

***"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்***
***கரு வளர் வானத்து இசையில் தோன்றி,***
***உரு அறிவாரா ஒன்றன் ஊழியும் ;***
***உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"***

**12. ஊழ்ஊழ் – இலக்கணக்குறிப்பு............**

அ) இரட்டைக்கிளவி ஆ) பண்புத்தொகை
இ) அடுக்குத்தொடர் ஈ) வினைத்தொகை **விடை: இ) அடுக்குத்தொடர்**

**13.பாடலின் ஆசிரியர்..........**

அ) கீரந்தையார் ஆ) பூதஞ்சேந்தனார்
இ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார் **விடை: அ) கீரந்தையார்**

**14. பாடலில் உணர்த்தப்படும் கருத்து.........**

அ) தத்துவக் கருத்து ஆ) அறிவியல் செய்தி
இ) நிலையாமை ஈ) அரசியல் அறம் **விடை: ஆ) அறிவியல் செய்தி**

**15. விசும்பு, இசை, ஊழி – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே**

அ) காற்று, ஓசை, கடல் ஆ) மேகம், இடி, ஆழம்
இ) வானம், பேரொலி, யுகம் ஈ) வானம், காற்று, காலம்
**விடை: இ) வானம், பேரொலி, யுகம்**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக. (பெ.ஆ.க– 1)**

**விடை :**

★ பெருவெளியில் பேரொலியுடன் தோன்றிய அணுக்கள் காற்று முதலிய பருப்பொருளால் வான வெளியில் பல ஊழிக்காலங்கள் கடந்து, நெருப்புப் பந்து போலத் தோன்றிப் பெருமழைப் பொழிவின் வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்த உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது எனப் பரிபாடல் கூறுகிறது.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. அண்டக்கரு எவ்வாறு தோன்றியது ?**

**விடை :**

★ எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு (பரமாணு) பேரொலியுடன் தோன்றியது.

---

**3 . பரிபாடல் காட்டும் ஊழிக்காலத்தை வரிசைப்படுத்துக.**

**விடை :**

★ முதலில் வானம் தோன்றியது. வானத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து நிலம் தோன்றியது என்கிறது பரிபாடல்

---

**4. பரிபாடல் – நூற்குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.
★ பாடப்பகுதியிலுள்ள பாடலை எழுதியவர் கீரந்தையார் ஆவார்.
★ இந்நூல் "ஓங்கு பரிபாடல்" என்ற சிறப்புடையது.
★ சங்க நூல்களுள் இசையோடு பாடப்பட்ட நூல் ஆகும்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**1. உலகத் தோற்றம் குறித்து கீரந்தையார் கூறும் கருத்துகளை எழுதுக.**

**விடை :**

★ எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு (பரமாணு) பேரொலியுடன் தோன்றியது.

★ உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்றும் முதல் பூதத்தின் ஊழி அது.

★ அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன

★ தொடர்ந்து மழை பெய்த ஊழியும், வெள்ளத்தில் மூழ்கிய ஊழியும் கழிந்தன.

★ அதனைத் தொடர்ந்து உயிர்கள் தோன்றும்படியான ஊழி வந்தது எனப் பரிபாடலில் கீரந்தையார் கூறியுள்ளார்.

---

## பகுதி – V ( ஐந்து மதிப்பெண்கள்)

**நெடுவினா :**

**1. நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.**

பேரன்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் வணக்கம்! இன்று இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றார். ஆதிகாலந்தொட்டு இயங்கிவரும் தமிழ்மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்தும் கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன. சங்க இலக்கியமான பரிபாடலில்..........

சங்க இலக்கியமான பரிபாடலில் கீரந்தையார்

*"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கரு வளர் வானத்து இசையில் தோன்றி,*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும் ;*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்*

*செந்தீச் சுடரிய ஊழியும் ; பணியொடு*
*தண்பெயல் தலைஇய ஊழியும் ; அவையிற்று*
*உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு*
*மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்*
*உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்..............।*

**விடை :**

★ எதுவுமே இல்லாத பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு (பரமாணு) பேரொலியுடன் தோன்றியது.

★ உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது.

★ அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன.

★ பிறகு நெருப்புப் பந்து போல புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது.

★ பின்னர் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலமும் கடந்தது.

★ அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி மழைவெள்ளத்தில் மூழ்கியது.

★ நெடுங்காலம் கடந்த பின்னர், நிலமாகிய பூதம் அவ்வெள்ளத்தின் ஊடே பீடு பெற்று எண்ணற்ற காலம் கழிந்த பின்னர் இந்நிலத்தில் உயிர்கள் தோன்றின

என்று பரிபாடலில் பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உலகமும், உயிரினங்களும் உருவானதாகச் சுட்டிக்காட்டப்படுள்ளது.

**மொழிப்பயிற்சி**

**அ) சொல்லும் பொருளும்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விசும்பு | – | வானம் | ஆர்தருபு | – | வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்த |
| ஊழி | – | யுகம் | பீடு | – | சிறப்பு |
| ஊழ் | – | முறை | ஈண்டி | – | செறிந்து திரண்டு |
| தண்பெயல் | – | குளிர்ந்த மழை | | | |

**ஆ) இலக்கணக் குறிப்பு :**

**விடை :**

| | | |
|---|---|---|
| **ஊழ் ஊழ்** | – | அடுக்குத் தொடர் |
| **வளர்வானம்** | – | வினைத்தொகை |
| **செந்தீ** | – | பண்புத்தொகை |
| **வாரா (ஒன்றன்)** | – | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் |
| **தண்பெயல்** | – | பண்புத்தொகை |
| **உந்துவெளி** | – | வினைத்தொகை |
| **தலைஇய** | – | சொல்லிசை அளபெடை |

**இ) பகுபத உறுப்பிலக்கணம்.**

| | | |
|---|---|---|
| **கிளர்ந்த** | – | **கிளர் + த் (ந்) + த் + அ** |
| கிளர் | – | பகுதி |
| த் | – | சந்தி |
| த் (ந்) | – | ந் ஆனது விகாரம் |
| த் | – | இறந்தகால இடைநிலை |
| அ | – | பெயரெச்ச விகுதி |

**ஈ) பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி.**

***செந்தீச் சுடரிய ஊழியும் ; பனியொடு***
***தண்பெயல் தலைஇய ஊழியும் ; அவையிற்று***
***உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு,***
***மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்***
***உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்.....***

**1. இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ?**
**விடை :** பரிபாடல்

**2. பாடலின் ஆசிரியர் யார் ?**
**விடை :** கீரந்தையார்

**3. தண்பெயல், பீடு, ஈண்டி – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே......**
**விடை :** குளிர்ந்த மழை, சிறப்பு, செறிந்து திரண்டு

**4. தலைஇய, செந்தீ – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் இலக்கணக்குறிப்புகள் முறையே....**
**விடை :** சொல்லிசைஅளபெடை, பண்புத்தொகை

**5. செந்தீ – இச்சொல்லைப் பிரித்தால் கிடைப்பது ?**
**விடை :** செம்மை + தீ

## கற்பவை கற்றபின்

1. பரிபாடல் இசைப்பாடல் ஆகும். பாடப்பகுதியின் பாடலை இசையுடன் பாடி மகிழ்க.

2. பரிபாடல் காட்டும் பெருவெடிப்புக் காட்சியைப் படங்களாக வரைந்து பொருத்தமான செய்திகளுடன் வழங்குக.



அண்டப் பெருவெடிப்பு நிகழ்தல்



பூமி தனியாக நெருப்புக் கோளமாக



பெருமழை பெய்து பூமிப்பந்து குளிர்தல்



பூமி தனது வட்டப்பாதையில் பிற கோள்களுடன்

## விரிவானம்

இயல் 4. ஈ

## விண்ணைத்தாண்டிய தன்னம்பிக்கை – (துணைப்பாடம்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. பெரியார் அறிவியல் தொழில்நுட்பக்கழகம் சென்னையில் அமைந்துள்ள இடம்...........**
அ) அரும்பாக்கம் ஆ) கோட்டூர்புரம்
இ) மடிப்பாக்கம் ஈ) மட்டூர் **விடை: ஆ) கோட்டூர்புரம்**

**2. பெரியார் அறிவியல் தொழில்நுட்பக்கழகம் நிறுவப்பட்ட ஆண்டு...........**
அ) 1968 ஆ) 1978
இ) 1988 ஈ) 1998 **விடை: இ) 1998**

**3. இந்தியாவிலேயே முதன்முதலில் 360 பாகை அரைவட்ட வானத்திரை அமைக்கப்பட்ட ஆண்டு............**
அ) 2006 ஆ) 2007
இ) 2008 ஈ) 2009 **விடை: ஈ) 2009**

**4. 360 பாகைஅரைவட்ட வானத்திரை உள்ள இடம்...........**
அ) பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம் ஆ) இந்தியத் தொழில்நுட்பக் கழகம்
இ) அழகப்பா பல்கலைக்கழகம் ஈ) இந்திய அறிவியல் கழகம்
**விடை: அ) பெரியார் அறிவியல் தொழில்நுட்பக் கழகம்**

**5. தற்காலத்தின் ஐன்ஸ்டைன் என்று புகழப்படுபவர்...........**
அ) ஸ்டீபன் ஹாக்கிங் ஆ) ஜான்வீலர்
இ) வேர்டுஸ்மித் ஈ) சார்லஸ் டார்வின் **விடை: அ) ஸ்டீபன் ஹாக்கிங்**

**6. பேரண்டப் பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிவியலாளர்....**
அ) ஜான் வீலர் ஆ) ஜேம்ஸ் சாட்விக்
இ) ஜேம்ஸ் ஹாரிசன் ஈ) ஸ்டீபன் ஹாக்கிங் **விடை: ஈ) ஸ்டீபன் ஹாக்கிங்**

**7. ஸ்டீபன் ஹாக்கிங் இப்பேரண்டம் பெருவெடிப்பினால் உருவானதே என்பதற்கான சான்றுகளை........... அடிப்படையில் விளக்கினார்.**
அ) அறிவியல் ஆ) புவியியல்
இ) கணிதவியல் ஈ) வானியல் **விடை: இ) கணிதவியல்**

**8. கருந்துளை என்ற சொல்லையும், கோட்பாட்டையும் முதலில் குறிப்பிட்டவர் ...........**
அ) ஸ்டீபன் ஹாக்கிங் ஆ) ஜான்வீலர்
இ) நியூட்டன் ஈ) கலிலியோ **விடை: ஆ) ஜான்வீலர்**

**9. ஸ்டீபன் ஹாக்கிங் பெற்ற அமெரிக்காவின் உயரிய விருது............**
அ) அதிபர் விருது ஆ) ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது
இ) உல்ஃப் விருது ஈ) காப்ளி பதக்கம் **விடை: அ) அதிபர் விருது**

**10. கலிலியோவின் நினைவு நாளில் பிறந்து, ஐன்ஸ்டைனின் பிறந்த நாளில் இறந்தவர்...........**
அ) ஜான்வீலர் ஆ) ராண்ட்ஜன்
இ) லூயி பாய்ஸ்டியர் ஈ) ஸ்டீபன் ஹாக்கிங் **விடை: ஈ) ஸ்டீபன் ஹாக்கிங்**

**11. நாற்பது மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட ஸ்டீபன் ஹாக்கிங் எழுதிய நூல் எது ?**
அ) காலத்தின் சுருக்கமான வரலாறு ஆ) கடவுள் இருக்கிறாரா ?
இ) கடவுள் என்று யாரும் இல்லை ஈ) காலத்தின் வரலாற்றுச் சுருக்கம்
**விடை: அ) காலத்தின் சுருக்கமான வரலாறு**

**12. காலத்தின் சுருக்கமான வரலாறு வெளிவந்த ஆண்டு...........**
அ) 1968 ஆ) 1978
இ) 1988 ஈ) 1998 **விடை: இ) 1998**

**13. காலத்தின் சுருக்கமான வரலாறு எந்த உண்மைகளைப் பரப்பி ஒருகோடிப் படிகளுக்கு மேல் விற்பனையானது ?**
அ) பேரண்டம், கருந்துளை ஆ) பெருவெடிப்பு, கருந்துளை
இ) பூகம்பம், பெருவெடிப்பு ஈ) நிலச்சரிவு, பூகம்பம்
**விடை: ஆ) பெருவெடிப்பு, கருந்துளை**

**14. "கடும் பகட்டு யானை நெடுந்தேர்க்கோதை**
**திருமா வியல் நகர்க் கருவூர் முன்துறை" – என்று குறிப்பிடும் நூல்...........**
அ) புறநானூறு ஆ) அகநானூறு
இ) கலித்தொகை ஈ) சிலப்பதிகாரம் **விடை: ஆ) அகநானூறு**

**15. கருவூர் அமைந்துள்ள மாவட்டம்...........**
அ) திருச்சி ஆ) திண்டுக்கல்
இ) கரூர் ஈ) சென்னை **விடை: இ) கரூர்**

---

## பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றை எழுதுக. (பெ.ஆ.க–3)**

**விடை :**

"வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அவற்றிற்கானவழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன் மூலம் மனித இனம் தொடர வழிவகுப்பேன்" என்று கூறிய ஸ்டீபன் ஹாக்கிங்குடன் இளம்அறிவியல் மாணவர்களாகிய நாங்கள் பயணம் செய்தது புதிய அனுபவத்தையும் உற்சாகத்தையும் புதிய அறிவியல் சிந்தனையையும் எங்களுக்கு விதைத்தது. அவர் எங்களுடன் உரையாடியபோது,

★ கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வர முடியாது

★ கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து (Event Horizon) கதிர்வீச்சுக்கள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

★கருந்துளைகள் உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை. கருந்துளையிலிருந்து ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத்தொடங்கி இறுதியில் கருந்துளைகள் வெடித்து மறைந்துவிடும். இதனை ஹாக்கிங் கதிர்வீச்சு என்று அழைப்பதாக அவர் கூறினார்.

மேலும் நாங்கள் ஸ்டீபன் ஹாக்கிங்கிடம், உங்கள் அரசியல் முன்னோடிகள் யார் என்று கேட்டபோது, ஐன்ஸ்டைன், நியூட்டன் முதலானோர் அவரின் முன்னோடிகள் எனக்கூறினார். ஐன்ஸ்டைன் ஈர்ப்பலைகள் குறித்த முடிவுகளைக் கணிதச் சமன்பாடுகள் மூலம் கோட்பாடுகளாகச் சொன்னார். $E = MC^2$ எனும் கோட்பாட்டை யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. 100 ஆண்டுகளுக்குப் பின் ஈர்ப்பலைகள் இருப்பதை உலகம் கண்டுகொண்டது. கருத்துகளைக் குறித்த தன்னுடைய ஆய்வை ஐன்ஸ்டைன் போல கோட்பாடுகளாக வெளியிடாமல், விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டுத் தான் விளக்கியதால் உலகம் கருந்துளைக் கோட்பாட்டை எளிதில் புரிந்துகொண்டதாகக் கூறினார்.

மேலும் அவரிடம், அறிவியல் கோட்பாடுகளை எளிய மக்களுக்கும் புரியும் வண்ணம் சொன்ன அவரின் முயற்சிக்கு அங்கீகாரமாக நீங்கள் பெற்ற விருதுகள் எவை என்று கேட்டபோது,

அமெரிக்காவின் உயரிய விருதான அதிபர் விருது, ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் விருது, உல்ஃப் விருது, காப்ளி பதக்கம், அடிப்படை இயற்பியல் பரிசு என விருதுகள் வழங்கி என்னை கௌரவித்தார்கள் என்று கூறினார்.

அவரிடம் விடைபெறும்போது அவர் எங்களிடம் கூறிய வார்த்தை ,

தலைவிதிதான் வாழ்க்கையைத் தீர்மானிக்கிறது என நம்புபவர்களைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. விதிதான் தீர்மானிக்கிறது என்றால் சாலையைக் கடக்கும்போது ஏன் இருபுறமும் பார்த்துக் கடக்கிறார்கள் எனக் கூறியது எங்களைச் சிந்திக்க வைத்தது.

அறிவுத் தேடலில் உடல், உள்ளத் தடைகளைத் தகர்த்த மாமேதை ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளியில் நாங்கள் பயணம் செய்யும் போது உரையாடிய அனுபவம் எங்கள் வாழ்க்கை பொன்னான நாளாக அமைந்தது.

---

**நெடுவினா : (கூடுதல் வினா)**

**1. உங்களைக் கவர்ந்த அறிவியல் அறிஞர்களின் கூற்றுகளை ஒப்பிட்டு, அவை ஸ்டீபன் ஹாக்கின் கருத்துகளோடு ஒத்திருப்பதைச் சுவைபட விளக்குக. (பெ.ஆ.க–6)**

**விடை :**

**ஸ்டீபன் ஹாக்கின் கோட்பாடு :**

★ உலகம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாவதற்குஅடிப்படையாக அமைந்த "பெரும் வெடிப்பு" (Big Bang) கோட்பாடு பற்றி ஆதாரப்பூர்வமான அறிவியல் கருத்துகளைக் கூறி, உலகம், உயிரினங்கள் பற்றி நிலவிவந்தமதம் சார்ந்த நம்பிக்கைகளைத் தகர்த்த அறிவியல் அறிஞர் ஸ்டீபன் ஹாக்கிங் ஆவார்.

**பிற அறிஞர்களின் கூற்று :**

★ மத்திய கல்வித்துறை இணை அமைச்சர் அண்மையில் மணிப்பூர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அறிவியல் மாநாட்டில், அறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் நிறுவிய சார்பியல் கோட்பாடு, வேதங்களிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது என எந்தவித மேற்கோள் காட்டாமல் கூறியுள்ளார். மேலும் இந்தக் கூற்றினை மறைந்த இயற்பியல் அறிஞர் ஸ்டீபன் ஹாக்கிங் கூறியதாகவும் எடுத்துச் சொல்லியுள்ளார்.

★ உலகம் இயங்குவதற்கு ஆதாரமாக இருப்பவற்றில் ஒன்றான புவிஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்த நவீன இயற்பியலின் தந்தை சர் ஐசக் நியூட்டனுக்கும், குரங்குகள்தான் மனிதர்களின் மூதாதையர்கள் என மனிதர்கள் உருவான உண்மையைச் சொன்ன சார்லஸ் டார்வினுக்கும் இடையில்தான் ஹாக்கிங்கின் சாம்பல் கிடத்தப்படவிருக்கிறது.

★ ஹாக்கிங், உரோசர் பென்ரோசுடன் இணைந்து பொதுச் சார்பு கோட்பாட்டில் புவிஈர்ப்பு அருநிலைத் தேற்றங்களை நிறுவியமை, ஹாக்கிங் கதிரியக்கம் என அழைக்கப்படும்.

★ கருந்துளைகளின் கதிர்வீச்சு உமிழ்தலை எதிர்வு கூறியமை போன்ற அறிவியல் ஆய்வுகளுக்காகப் பெரிதும் அறியப்படுகிறார். இவரே முதன்முதலில் அண்டவியலுக்கான கோட்பாட்டை உருவாக்கி பொதுச்சார்புக் கோட்பாடு , குவாண்டம் இயங்கியல் ஆகியவற்றின் மூலம் விளங்கப்படுத்தினார்.

★ குவாண்டம் இயங்கியலின் பல உலகங்களுக்கான விளக்கத்திற்குத் தீவிர ஆதரவாளராக விளங்கினார். ஹாக்கிங் எழுதிய "காலத்தின் ஒரு வரலாற்றுச் சுருக்கம்" என்ற புகழ்பெற்ற கட்டுரைத் தொடர், இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் "சண்டே டைம்சு" என்ற இதழில் 237 வாரங்களாக வெளிவந்து சாதனை புரிந்தது. சாதாரண மக்களும் வாசித்துப் பயணடையும் வகையில் இலகுவான மொழியில் படைக்கப்பட்டுள்ளது மிகவும் சிறப்பாகும்.

---

கற்பவை கற்றபின்

**1. "அறிவைவிட மிகவும் முக்கியமானது கற்பனைத் திறன். ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும் புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தையும் அளப்பது. இன்று நாம் அறிந்திருப்பதை மட்டுமன்று : இனி நாம் அறிந்துகொள்ளப்போவதையும் உள்ளடக்கியது"** – ஐன்ஸ்டைன்

**"வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அவற்றிற்கானவழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன் மூலம் மனித இனம் தொடர வழிவகுப்பேன்"** – ஸ்டீபன் ஹாக்கிங்.

**இவ்விருவரின் கூற்றுகளைப் பாடப்பகுதி உணர்த்தும் கருத்துகளோடு ஒப்பிட்டு உரையாடுக.**

**விடை :**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா.

**ஆசிரியர்** : வணக்கம். அமருங்கள். அறிவியல் உலகம் போற்றும் மாபெரும் அறிஞர்களான இருவரைப் பற்றி இன்றைய வகுப்பில் கலந்துரையாடல் செய்வோம்.

| | | |
|---|---|---|
| **மதன்** | : | அவர்கள் பெயர்களைத் தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளோம் ஐயா |
| **ஆசிரியர்** | : | ஒருவர் ஐன்ஸ்டைன் மற்றொருவர் ஸ்டீபன் ஹாக்கிங் |
| **விமலா** | : | ஐன்ஸ்டைன் பற்றிக் கூறுங்கள் ஐயா |
| **ஆசிரியர்** | : | ஐன்ஸ்டைன் என்பவர், அறிவைவிட முக்கியமானது கற்பனைத்திறன், ஏனெனில் அறிவு என்பது நாம் தற்போது அறிந்தும், புரிந்தும் வைத்திருப்பவற்றோடு முடிந்துவிடுகிறது. கற்பனைத் திறனோ இந்த ஒட்டுமொத்தப் பேரண்டத்தையும் அளப்பது. இன்று நாம் அறிந்திருப்பதை மட்டுமன்று, இனி நாம் அறிந்து கொள்ளப்போவதையும் உள்ளடக்கியது என்றார். |
| **சுந்தர்** | : | கற்றல் தருவது கற்பனைத் திறன்........ கற்பனைத்திறன் தூண்டுவது சிந்தனையை. சிந்தனை அளிப்பது அறிவு (அறிவியல் வளர்ச்சி). அறிவு மனிதர்களை மிகச் சிறந்தவராக்கும் என்ற கருத்தை வலியுறுத்துவதாக ஐன்ஸ்டைன் கூற்று அமைந்துள்ளது. |
| **சரண்யா** | : | வாழ்க்கை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் வெற்றிக்கானவழி அதில் இருக்கவே செய்கிறது. நிச்சயம் என் ஆராய்ச்சியில் நான் வெல்வேன். அதன் மூலம் மனித இனம் தொடர வழிவகுப்பேன் என்றார் ஸ்டீபன் ஹாக்கிங். |
| **முகேஷ்** | : | அறிவியல் உலகில் மட்டுமின்றி சமூக உளவியல் அடிப்படையிலும் தன்னம்பிக்கையின் சிகரமாக விளங்கியவர் ஸ்டீபன் ஹாக்கிங். அறிவுத் தேடலில் உடல், உள்ளத் தடைகளை தகர்த்த மேதை ஸ்டீபன் ஹாக்கிங். |
| **ஆசிரியர்** | : | நன்று மாணவர்களே! இவ்விருவரைப் போலவே நீங்களும் அறிவியல் துறையில் பல்வேறு சாதனைகளைப் புரிய வாழ்த்துகள். நன்றி. |

**2. "கருந்துளை" சார்ந்த செய்தியை அறிவியல் இதழ் ஒன்றிற்குக் குறுங்கட்டுரையாக எழுதுக.**

**விடை :**

**கருந்துளைக் கோட்பாட்டில் ஜான்வீலர் :**

அமெரிக்க அறிவியலாளர் ஜான்வீலர் என்பவரே, "கருந்துளை" என்ற சொல்லையும் கருந்துளைக் கோட்பாட்டையும் முதன்முதலில் வெளியிட்டவராவார். சுருங்கிய விண்மீனின் ஈர்ப்பு எல்லைக்குள் செல்கிற எதுவும், ஏன் ஒளியும்கூடத் தப்பமுடியாது. அதன் உள்ளே ஈர்க்கப்படும். இவ்வாறு ஈர்க்கப்பட்ட யாவையும் வெளிவர முடியாததால், எனவே இதனைக் கருந்துளை எனலாம் என்று ஜான்வீலர் கருதினார்.

**பேரண்டம் வெடிப்பு :**

பேரண்டப் பெருவெடிப்பு, கருந்துளைகள் பற்றியதான முடிவுகளேயாகும். பெருவெடிப்பினால் உருவானதே இப்பேரண்டம் என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் ஸ்டீபன் விளக்கினார். அத்துடன் இப்புவியின் படைப்பின் பின்னணியில் கடவுள் போன்ற ஒருவர் இருந்தார் என்பதை மறுத்தார். நமது பால்வீதியில் கோடிக்கணக்கான விண்மீன்கள் ஒளிர்கின்றன. அவற்றுள் நம் ஞாயிறும் ஒன்று. ஒரு விண்மீனின் ஆயுள்கால முடிவில் அதனை ஈர்ப்புவிசை உள்நோக்கிக் கூடுகிறது. அதனால், சுருங்கத் தொடங்குகிறது. விண்மீன் சுருங்கிச் சுருங்கி அதன் ஈர்ப்பாற்றல் உயர்ந்து, அளவற்றதாகிப் பெருவெடிப்பு ஏற்படுகிறது.

**ஸ்டீபன் ஹாக்கிங்கின் ஆராய்ச்சி முடிவுகள் :**

ஸ்டீபன் ஹாக்கிங், இன்றைய ஐன்ஸ்டைன் என்று புகழப்பட்டவர். ஸ்டீபனின் ஆராய்ச்சி முடிவுகளைக் குறித்துச் சென்னை பெரியார் கோளரங்க இயக்குநர் கூறுவன கருத்தில் கொள்ளத்தக்கனவாகும். அவை, கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது ; கருந்துளை உண்மையிலேயே கறுப்பாக இருப்பதில்லை, கருந்துளையிலிருந்து ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி, இறுதியில் வெடித்து மறைந்துவிடும். இவை ஸ்டீபன் ஹாக்கிங்கின் முடிவுகளாகும்.

**ஹாக்கிங்கின் கதிர்வீச்சு :**

ஸ்டீபன் ஹாக்கிங்கின் இந்த ஆராய்ச்சி முடிவு ,"ஹாக்கிங் கதிர்வீச்சு" என்று அழைக்கப்படுகிறது. ஸ்டீபனின் கருந்துளை பற்றிய கொள்கை முடிவு, முந்தையோரின் கருந்துளைக் கோட்பாட்டைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிட்டது. அண்டவெளியில் காணப்பட்ட கருந்துளை முன்னர் "அழிவு ஆற்றல்" என்று கருதப்பட்டது. ஆனால் ஹாக்கிங்

**கற்கண்டு**

**இயல் 4. உ**

## இலக்கணம் – பொது

**(இலக்கணம்)**

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. குலசேகர ஆழ்வார் "வித்துவக்கோட்டம்மா" என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.**

**பூனையார் பால் சோற்றைக் கண்டதும் விரைந்து வருகிறார் – ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே (பெ.ஆ.க – 4)**

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி
ஆ) இடவழுவமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி
ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

**விடை : இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. திணை வழுவமைதி (பெ.ஆ.க– 5)**

அ) "இந்தப் பாப்பா தூங்கமாட்டாள்" என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது.
ஆ) இரவெல்லாம் நாய் கத்திக்கொண்டே இருந்தது.
இ) "வாடாச் செல்லம்" என்று தாய் மகனை அழைப்பது.
ஈ) "என் தங்கை வந்தாள்" என்று பசுவைக் குறிப்பிடுவது.

**விடை : ஈ) "என் தங்கை வந்தாள்" என்று பசுவைக் குறிப்பிடுவது.**

**3. தென்னை மரங்கள் நிறைந்த பகுதியைக் குறிப்பிடும் வழாநிலை**

அ) தென்னந்தோட்டம் ஆ) தென்னஞ்சோலை
இ) தென்னந்தோப்பு ஈ) தென்னங்காடு **(பெ.ஆ.க – 3)**

**விடை : இ) தென்னந்தோப்பு**

**4. மரபுத்தொடருக்கான பொருளைத் தேர்க – "ஆறப்போடுதல்". (பெ.ஆ.க – 5)**

அ) தாமதப்படுத்துதல் ஆ) ஆற்றில்போடுதல்
இ) ஆறவைத்தல் ஈ) ஆற்றில் இறங்குதல்

**விடை : அ) தாமதப்படுத்துதல்**

**5. திணை ................. வகைப்படும்**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை : அ) இரண்டு**

**6. உயர்திணைக்குரிய பால்பிரிவுகள் ............. வகைப்படும்**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை : ஆ) மூன்று**

**7. இலக்கண முறையின்றிப் பேசுவதும், எழுதுவதும் ................ எனப்படும்.**

அ) வழு ஆ) வழாநிலை
இ) வழுவமைதி ஈ) மரபு வழுவமைதி **விடை : அ) வழு**

**8. "செழியன் வந்தது" என்பது............**

அ) திணை வழு ஆ) கால வழு
இ) இட வழு ஈ) மரபு வழு **விடை : அ) திணைவழு**

**9. "வாடா இராசா ; வாடா கண்ணா" – என்பது............**

அ) மரபுவழுவமைதி ஆ) திணைவழுவமைதி

இ) பால்வழுவமைதி ஈ) காலவழுவமைதி **விடை : இ) பால்வழுவமைதி**

**10. "நேற்று வருவான்", "நாளை வருவான்" என்பன ............. வழுவாகும்.**

அ) திணை ஆ) பால்

இ) இட ஈ) கால **விடை : ஈ) கால**

**11. "இந்த மாறன் ஒருநாளும் பொய்கூற மாட்டான்" – இதில் எவ்வகை வழுவமைதி அமைந்துள்ளது ?**

அ) திணை வழுவமைதி ஆ) கால வழுவமைதி

இ) இட வழுவமைதி ஈ) பால் வழுவமைதி **விடை : இ) இடவழுவமைதி**

**12."கத்துங் குயிலோசை" இத்தொடரில் அமைந்துள்ள வழுவமைதி யாது ?**

அ) பால் வழுவமைதி ஆ) கால வழுவமைதி

இ) திணை வழுவமைதி ஈ) மரபு வழுவமைதி **விடை : ஈ) மரபு வழுவமைதி**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் – இத்தொடர் காலவழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு ? (பெ.ஆ.க– 6)**

**விடை :**

இத்தொடரானது, "கோடை விடுமுறையில் செல்வேன்" என அமைதல் வேண்டும். செல்வேன் என்பதை செல்கிறேன் எனக் கூறியதை நாம் காலவழுவமைதியாகக் கொள்ளவேண்டும்.

செல்வேன் – எதிர்காலம்

செல்கிறேன் – நிகழ்காலம்

எனவே இலக்கண வழுவாயினும் கால வழுவமைதியாகக் கொள்ளப்பட்டது.

---

**2. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்கமாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப்பற்றிப் பெருமையாகக் கூறினார் – இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.**

**விடை :**

சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் **கேட்கும்**. புதியவர்களைப் பார்த்துக் **கத்துமே** தவிர **கடிக்காது**" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப்பற்றிப் பெருமையாகக் கூறினார்

★ **கேட்கும், கத்தும், கடிக்காது** – அஃறிணை வினைகள்

★ **கேட்பான், கத்துவான், கடிக்கமாட்டான்** – உயர்திணை வினைகளாக வழுவிக் கூறப்பட்டுள்ளது.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**3. இருதிணை – விளக்குக.**

**விடை :**

ஆறறிவுடைய மக்களை உயர்திணை என்றும், மற்ற உயிரினங்களையும் உயிரற்ற பொருள்களையும் அஃறிணை என்றும் வழங்குவர்

---

**4. பால் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**

**விடை :** பால் ஐந்து வகைப்படும்.

★ அவை உயர்திணைக்கு – ஆண்பால், பெண்பால், பலர்பால்

★ அஃறிணைக்கு – ஒன்றன் பால், பலவின்பால் எனப்பகுக்கப்பட்டுள்ளது.

**5. இடப்பெயர்கள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**
**விடை :**
இடப்பெயர்கள் மூன்று வகைப்படும். அவை,
★ தன்மை
★ முன்னிலை
★ படர்க்கை

**6. வழு என்றால் என்ன ?**
**விடை :**
★ இலக்கண முறையின்றி பேசுவதும், எழுதுவதும் வழு எனப்படும்
★ எ.கா : செழியன் வந்தது.

**7. வழா நிலை என்றால் என்ன ?**
**விடை :**
★ இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும், எழுதுவதும் வழாநிலை எனப்படும்
★ எ.கா : முருகன் வந்தான்

**8. வழுவமைதி – விளக்குக.**
**விடை :**
★ இலக்கண முறைப்படி பிழையுடையது எனினும் இலக்கண ஆசிரியர்களால் ஏதேனும் ஒரு காரணம் கருதி, பிழையன்று என ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதியாகும்.

**9. வழுவமைதி எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**
**விடை :**
வழுவமைதி ஐந்து வகைப்படும். அவை,
1. திணை வழுவமைதி
2. பால் வழுவமைதி
3. இட வழுவமைதி
4. கால வழுவமைதி
5. மரபு வழுவமைதி

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**
**1. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது. தந்தை என்னிடம்,"இலட்சுமி கூப்பிடுகிறாள், போய் பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறு அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா ?" என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம் "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலட்சுமி தொட்டியிலிருந்து நீரைக் குடித்தாள்**
**இப்பகுதியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக. (பெ.ஆ.க – 5)**

| விடை : வழுவமைதித் தொடர்கள் | வழுவமைதி வகை |
|---|---|
| ★ நேற்று பெய்த மழை தொட்டியை நிறைத்திருந்தது (நிறைத்தது) | கால வழுவமைதி |
| ★ இலட்சுமி கூப்பிடுகிறாள் (பசு மாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| ★ இதோ சென்றுவிட்டேன் (சென்று விடுகிறேன்) | கால வழுவமைதி |
| ★ என்னடா விளையாட வேண்டுமா ? (கன்றுக்குட்டியைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| ★ அவனை அவிழ்த்துவிட்டேன் (பசுமாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |
| ★ இலட்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள் (பசுமாட்டைக் குறிக்கிறது) | திணை வழுவமைதி |

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. திணைவழுவமைதி, பால்வழுவமைதி – சான்றுடன் விளக்குக.**

**விடை :**

**திணைவழுவமைதி :** "என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது திணைவழுவமைதி ஆகும். இங்கு உவப்பின் காரணமாக அஃறிணை உயர்திணையாகக் கொள்ளப்பட்டது.

**பால்வழுவமைதி:** "வாடா இராசா,வாடா கண்ணா" என்று தன் மகளைப் பார்த்துத் தாய் அழைப்பது பால் வழுவமைதியாகும். இங்கு உவப்பின் காரணமாக. பெண்பால் ஆண்பாலாகக் கொள்ளப்பட்டது.

---

**3. இடவழுவமைதி, காலவழுவமைதி – சான்றுடன் விளக்குக.**

**விடை :**

**இடவழுவமைதி :** மாறன் என்பவன் தன்னைப்பற்றிப் பிறரிடம் கூறும்போது, "இந்த மாறன் ஒருநாளும் பொய்கூற மாட்டான் " என்று தன்மையினைப் படர்க்கை இடத்தில் கூறுவது இடவழுவமைதியாகும்.

**காலவழுவமைதி:** "குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார்" இத்தொடர் குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல் வேண்டும். அவ்வாறு அமையவில்லை என்றாலும் நாம் பிழையாகக் கருதுவதில்லை. ஏனெனில் அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கிக் காலவழுவமையாக ஏற்றுக்கொள்கிறோம்.

---

## கற்பவை கற்றபின்

**1. கீழ்க்காணும் தொடர்களில் வழுவமைதி வகைகளை இனங்கண்டு எழுதுக.**

**அ) அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார்.**

**விடை :** காலவழுவமைதி

**ஆ) "இந்தக் கண்ணன் ஒன்றைச் செய்தான் என்றால் அதை அனைவரும் ஏற்பர்" என்று கூறினான்**

**விடை :** இடவழுவமைதி

**இ) சிறிய வயதில் இந்த மரத்தில்தான் ஊஞ்சல் கட்டி விளையாடுவோம்.**

**விடை :** காலவழுவமைதி

**ஈ) செல்வன் இளவேலன் இந்தச் சிறுவயதிலேயே விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்திருக்கிறார்.**

**விடை :** பால்வழுவமைதி

---

**2. அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக,**

**அ) தந்தை, "மகனே! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்துவா ?" என்று சொன்னார். (ஆண்பாற்பெயர்களைப் பெண்பாற்பெயர்களாக மாற்றித் தொடரை எழுதுக)**

**விடை :** தாய், "மகளே நாளை என் தோழி அழகியை அழைத்துவா ?" என்று சொன்னாள்.

**ஆ) அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக) (அ.மா.வி)**

**விடை :** அக்கா நேற்று வீட்டுக்கு வந்தாள். அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பினார்.

**இ) "இதோ முடித்துவிடுவேன்" என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார். (வழாநிலையை வழுவமைதியாக மாற்றுக)**

**விடை :** "இதோ, முடித்துவிட்டேன்" என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார்.

**ஈ) அவன் உன்னிடமும் என்னிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை. ( படர்க்கையை முன்னிலையாக, முன்னிலையைத் தன்மையாக, தன்மையைப் படர்க்கையாக மாற்றுக)**

**விடை :** நீ என்னிடமும் அவனிடமும் செய்தியை இன்னும் கூறவில்லை.

**உ) குழந்தை அழுகிறான், பார். (வழுவை வழாநிலையாக மாற்றுக)**

**விடை :** குழந்தை அழுகிறது, பார்.

இயல் 4. ஊ

## மொழியை ஆள்வோம்
(மொழிப்பயிற்சி)

அ) படித்துச் சுவைக்க: முகப்புத்தக வலையினிலே

முகந்தெரியா நபரிடையே
இனம்புரியா உறவுமுறை
நட்பெனும் சங்கிலிக்குள்
நாடெல்லாம் சங்கமிக்கும்
வாடிக்கை செய்பவரின்
கேளிக்கை கூத்துகளை
வேடிக்கை பார்ப்பதனை
வாழ்க்கையெனக் கொண்ட பலர்
தேடியுமே கிடைக்காத
தேசம் கடந்த உறவுகளை
இணையத்தின் தேடலினால்
நிமிடத்தில் அறியும் சிலர்
பகடிகளின் பகிர்ந்தளிப்பும்
விருப்பத்தின் தெரிவிப்பும்
கருத்துகளின் பரிமாற்றம்
தினமும் இங்கு இடம்பெறுமே
பலர் அறிந்த பாடல் வரியும்
பகலுணவின் சுவையினையும்
பாட்டி தந்த பரிசினையும்
பறைசாற்றும் வாய்ப்பிதுவே
புகைப்படத்தில் தெரிந்த முகம்
பார்த்ததுமோர் புன்சிரிப்பு
உரையாடல் செய்கையிலே
அர்த்தமற்ற கலகலப்பு
பரீட்சைக்கு முன்தினமும்
புத்தகத்தைத் திறவாதோர்
பரீட்சையின் நொடி வரைக்கும்
திறந்து வைப்பதிதுவன்றோ
புத்தகத்தின் மத்தியிலே
மயிலிறகை வைத்தவர்கள் – முகப்
புத்தகத்தைத் திறந்தவுடன்
உணர்வுகளை வைப்பதேனோ........

– டெபோரா பர்னாந்து
(இலங்கைத் தமிழ்க் கவிஞர்)

---

ஆ) மொழிபெயர்க்க: (பெ.ஆ.க – 6)

**Malar** : Devi, switch off the lights when you leave the room.
**Devi** : Yeah. We have to save electricity.
**Malar** : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
**Devi** : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!
**Malar** : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
**Devi** : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

**விடை :**

**மலர்** : தேவி, நீ அறையை விட்டுச் செல்லும்போது விளக்குகளை அணைத்துவிட்டுச் செல்.
**தேவி** : ஆமாம். நாம் மின்சாரத்தைச் சேமிக்க வேண்டும்.
**மலர்** : இரவில் நம் வீதிகளை ஒளிரச் செய்வதற்காக நம் நாடு நிறைய மின்சாரத்தைச் செலவு செய்கிறது.
**தேவி** : யாருக்குத் தெரியும் ? எதிர்காலத்தில் நம் நாடு இரவு நேர வானத்தை ஒளிரச் செய்ய செயற்கைக்கோளைக்கூட அறிமுகப்படுத்தலாம்.
**மலர்** : வேறு சில நாடுகளும் எதிர்காலத்தில் இந்த ஒளியூட்டும் செயற்கைக் கோள்களை விரைவில் அறிமுகப்படுத்த உள்ளதாகநான் படித்திருக்கிறேன்.
**தேவி** : அற்புதமான செய்தி ! செயற்கை நிலாவை நாம்அறிமுகப்படுத்தினால், இயற்கைப் பேரழிவால் பாதிக்கப்படும் சில பகுதிகள்மீது ஒளிவீசச் செய்து, மின்தடையால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்கலாம்.

**இ) வல்லின ஒற்றை இட்டும் நீக்கியும் எழுதுக.**

**காகத்திற்கு காது உண்டா ? அதற்கு காது கேட்குமா ?**

**எல்லா பறவைகளுக்கும் காது உண்டு. செவி துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறசெவி மடல் இருக்காது. காகத்திற்கு காது உண்டு.காது கேட்கும். பறவைகளுக்கு பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும், நுகர்தல் இல்லையென்றேக் கூறலாம். யுரேகா! யுரேகா! – அறிவியல் வெளியீடு**

**விடை :**

காகத்திற்குக் காது உண்டா ? அதற்குக் காது கேட்குமா ?

எல்லாப் பறவைகளுக்கும் காது உண்டு. செவித் துளைகள் இறகுகளால் மூடி இருக்கும். மற்றப்படி பாலூட்டிகளில் உள்ளதுபோல் புறச்செவி மடல் இருக்காது. காகத்திற்குக் காது உண்டு. காது கேட்கும். பறவைகளுக்குப் பார்த்தல், கேட்டல் உணர்வு நன்றாக வளர்ச்சிப் பெற்று இருக்கும். சுவைத்தல் உணர்வுக் குறைவாகவும், நுகர்தல் இல்லையென்றேக் கூறலாம்.

---

**ஈ) கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

**அ) இயற்கை – செயற்கை ஆ) கொடு – கோடு**

**இ) கொள் – கோள் ஈ) சிறு – சீறு**

**உ) தான் –தாம் ஊ) விதி – வீதி**

**எ.கா : அ) இயற்கை – செயற்கை (பெ.ஆ.க – 3)**

**விடை :** பாதை தெரியாத **இயற்கை**க் காடுகளில் பயணிக்கச் **செயற்கை**க் கருவிகள் பயன்படுகின்றன.

**ஆ) கொடு – கோடு**

**விடை :** நண்பனுக்கு விட்டுக்**கொடு**க்க வேண்டிய நீ **கோடு** போட்டுத் தடுக்கலாமா ?

**இ) கொள் – கோள்**

**விடை :** தன்னம்பிக்கைக் **கொள்**கிறவன் வாழ்வில் உயர்ந்த குறிக்**கோள்**களை அடைந்தே தீருவான்.

**ஈ) சிறு – சீறு (அ.மா.வி)**

**விடை :** **சிறு**கச் சிறுகச் சேமித்தால் எதிர்காலத்தில் **சீறு**நடை போடலாம்.

**ஈ) தான் – தாம் (பெ.ஆ.க – 3)**

**விடை :** **தான்** பெற்ற அறிவை எல்லாருக்கும் **தாம்** பயன்படுத்த வேண்டும்.

**ஊ) விதி – வீதி**

**விடை :** **விதி**முறைகளைப் பின்பற்றி **வீதி**களை அமைக்க வேண்டும்.

---

**உ) பத்தியைப் படித்துப் பதில் தருக.**

**பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழைப்பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது. (பெ.ஆ.க– 4)**

**1. பத்தியில் உள்ள அடுக்குத் தொடர்களை எடுத்து எழுதுக.**

**விடை :**

மீண்டும் மீண்டும்

**2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ?**

**விடை :**

தொடர்ந்து பெய்த மழையால், புவி வெள்ளத்தில் மூழ்கியது

**3. பெய்த மழை – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.**

**விடை :**

பெய்மழை

**4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது ?**

**விடை :**

பருப்பொருள்கள் சிதறுதல்

**5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை ?**

**விடை :**

நிலம், நீர், காற்று

---

**ஊ) கட்டுரை எழுதுக.**

**தலைப்பு – "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்"**

**குறிப்புகள்: முன்னுரை–தமிழின் அறிவியலின் முன்னோடி– விண்வெளியும் கல்பனாச் சாவ்லாவும் – விண்ணியல் அறிவில் நமது கடமை – முடிவுரை.(அ.மா.வி)(பெ.ஆ.க–4)(செப்–20)**

**விடை :**

**விண்வெளியும் கல்பனா சால்வாவும்**

| குறிப்புச் சட்டகம் |
|---|
| முன்னுரை |
| மேற்கோள் |
| தமிழன் அறிவியலின் முன்னோடி |
| விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் |
| விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ளவேண்டியவை |
| முடிவுரை |

**முன்னுரை :**

விண்வெளிக்கு பயணம் செய்த இந்தியாவின் முதல் பெண்மணி என்ற பெருமைக்குரியவர் கல்பன சாவ்லா. பல பெண்களுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறார் என்றால் அது மிகையாகாது. ஒரு சாதாரணப் பள்ளியில் படித்து, பலர் வியக்கும்படி தன் கனவுகளை மெய்ப்பித்து ஒரு விண்வெளி பொறியாளராக வாழ்ந்துக் காட்டினார். கல்பனா சாவ்லா, 41 வது வயதில் உலக மக்களின் நட்சத்திரமாகிப் போன ஒரு இந்தியப்பெண் வீராங்கனையின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளைப் பற்றி இங்கு காண்போம்.

**மேற்கோள் :**

வானை அளப்போம் – கடல்
மீனை அளப்போம்
சந்திர மண்டலத்தியல்
கண்டு தெளிவோம்
– பாரதியார்

**தமிழன் அறிவியலின் முன்னோடி :**

சங்கத் தமிழர்கள் வான் கோள்களில் தாமே ஒளிவிடக்கூடியவற்றையும் சூரியனிடம் இருந்து கடன் பெற்று ஒளிவிடுவனவற்றையும் கண்டறிந்து நாள் மீன்கள் கோள் மீன்கள் என்று பெயர் சூட்டி அழைத்தனர்.

**விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் :**

1995 –ஆம் ஆண்டு நாசா விண்வெளி வீரர் பயிற்சிக் குழுவில் சேர்ந்த கல்பனா சாவ்லா, கொலம்பியா விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் – 87 இல் பயணம் செய்வதற்குத் தேர்வுச் செய்யப்பட்டார். முதல் இந்திய கொலம்பிய விண்வெளி ஊர்தியான எஸ்.டி.எஸ் – 87 இல் விண்வெளிப் பயணம் மேற்கொண்டார். இந்த விண்வெளி பயணத்தில் சுமார் 372 மணிநேரம் விண்வெளியில் இருந்து சாதனைப் புரிந்து வெற்றிகரமாகப் பூமி திரும்பினார்.

16–01–2003 ல் அமெரிக்காவின் கென்னடி நிலையத்திலிருந்து கொலம்பியா விண்கலம் எஸ்.டி.எஸ் – 107 (STS -107) விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது. இந்த விண்கலத்தில் சாவ்லா உட்பட ஏழு பேர் பயணித்தனர். பதினாறு நாட்கள் ஆய்வைமுடித்துவிட்டு திரும்பியபோது, அமெரிக்காவின் டெக்ஸாஸ் வான் பரப்பில் அவ்விண்கலம் வெடித்துச் சிதறியது. சாவ்லா உட்பட ஏழு பேரும் பலியாகினர்.

**விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை :**

நாம் எப்படி உருவானோம் ? நம்மை வழிநடத்துவது எவை ? சுற்றும் பூமிக்கும் சுட்டெரிக்கும் சூரியனுக்கும் அடிப்படை எது ? நம்முடைய பூமியும் இந்தப் பிரபஞ்சமும் எப்போது செயலிழந்து போகும் ? நமக்குள் இருக்கும்உயிருக்கும் இயற்கை சக்திகளுக்கும் ஆதாரம் எங்கே ஒளிந்திருக்கிறது ? கம்ப்யூட்டர் அறிவு மனித அறிவை மிஞ்சிவிடுமா ? இப்படிச் சிந்தனைக்குரிய கேள்விகளுக்கு விடை தருவதாய் இருக்கவேண்டும்.

**முடிவுரை :**

ஒரு சாதாரணப் பள்ளியில் படித்து, பலர் வியக்கும்படி தன் கனவுகளை நனவாக்கி வாழ்ந்து காட்டியவர் கல்பனா சாவ்லா. பெண்ணினத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கிய அவர், இந்தியாவிற்கு உலகப்புகழ் சேர்த்தவர் என்றால் அது மிகையாகாது. கனவுகளைக் கண்டு அந்தக் கனவுகளை நனவாக்குவதற்கு விடா முயற்சியோடும் முழுமனதோடும் செயல்பட்டால் வெற்றி நிச்சயம் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்திச் சென்ற வீரப்பெண்மணியை நாளும் போற்றுவோம்.

---

**எ) நயம் பாராட்டுக :**

***நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்***
***நேர்ப்பட வைத்தாங்கே***
***குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு***
***கோல வெறிபடைத்தோம் ;***
***உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்***
***ஓட்டி மகிழ்ந்திடுவோம்;***
***பலாவின் கனிச்சுவை வண்டியில் ஓர் வண்டு***
***பாடுவதும் வியப்போ ?*** ***– பாரதியார்***

**நயம் பாராட்டல் :**

**ஆசிரியர் குறிப்பு :**

மகாகவி பாரதியார் எட்டயபுரத்தில் சின்னசாமி இலக்குமி ஆகிய தம்பதியருக்கு மகனாகத் தோன்றினார். இவர் 1892 ஆம் ஆண்டு டிசம்பர் 11 ஆம் நாள் தோன்றி , 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் நாள் மறைந்தார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். பெண்ணடிமையை நீக்கப் பாடியவர். தேசிய விடுதலை உணர்வைப் பாடல்கள் மூலம் ஊட்டியவர். ஆத்திச்சூடி, குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம் என்னும் நூல்களுடன் தேசியம், மொழி, இனம், இறைவன் எனப் பலபாடல்களைப் பாடியவர்.

**பாடல் கருத்து :**

சந்திரன், விண்மீன்கள், காற்று ஆகிய இவற்றையெல்லாம் செம்மையாக உருவாக்கி வைத்து, அங்கெல்லாம் விளங்குகின்ற உனது அருளொளியாகிய அமுதரசத்தைப் பருகி, அழகிய உன்மத்த நிலையை நாம் அடைந்தோம். திரிந்து அலையும் நெஞ்சமாகிய சிறு பறவையை எல்லா இடங்களிலும் பறக்க விட்டு இன்பமடைவோம். பலாப்பழச் சுளைகள் ஏற்றப்பட்ட வண்டியில் ஒரு வண்டு ரீங்காரமிட்டு மகிழ்வதில் என்ன ஆச்சரியம் இருக்கமுடியும் ?

**மையக்கருத்து :**

வண்டுபோல் மனமும் உலகில் உலவி மகிழும்.

**எதுகை நயம் :**

அடிதோறும் முதல் சீரில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை

நி**லா**வையும் – கு**லா**வும்

உ**லா**வும் – ப**லா**வின்

**மோனை நயம் :**

பாடலில் அடிதோறும், சீர்தோறும் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனை

**கு**லாவும் – **கு**டித்தொரு

**அணிநயம் :**

இப்பாடலில் கவிஞர் இயற்கையை மிகவும் உயர்படுத்திக் கூறியுள்ளமையால் உயர்வு நவிற்சி அணி பயின்றுள்ளது.

ஏ) கடிதம்

**1. புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு திறன்பேசிப்பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறி கடிதம் ஒன்று எழுதுக. (பெ.ஆ.க – 2)**

**விடை :**

தேதி............
நாகமலை

அன்புள்ள தங்கைக்கு,

உன் பாசமிகு அண்ணன் எழுதுவது. நான் இங்கு நலம். உன் நலமும், அப்பா, அம்மா நலமும் அறிய ஆவல். உன்னுடைய பிறந்த நாளுக்கு புதிய திறன்பேசி ஒன்றை அப்பா வாங்கி பரிசளித்துள்ளார் என்பதைக் கேட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

பாசமிகு தங்கையே! திறன்பேசியை உன்னுடைய படிப்புத் தேவைகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். தேவையில்லாது பயன்படுத்தி உன் உடல் நலத்தையும் மனநலத்தையும் கெடுத்துக்கொள்ளாதே! அதிக நேரம் திறன்பேசியை பார்த்துத் தூக்கத்தையும், மிக அருகில் வைத்து வெகுநேரம் பார்த்து கண்கள் பாதிப்படையச் செய்வதையும் தவிர்த்துவிடு. அறிவுசார்ந்த நிகழ்வுகளையும், செய்திகளையும் புதிய திறன்பேசியில் கண்டுகளித்து மகிழ்ச்சியாக வாழ வாழ்த்தும் உன் அன்பு உள்ளம்.

இப்படிக்கு
பாசமிகு அண்ணன்
த. குமரன்

உறைமேல் முகவரி
த. அன்புச்செல்வி,
த/பெ. ப.தமிழரசன்,
1/15, பாரதியார் தெரு,
பழங்காநத்தம், மதுரை–5

---

**2. ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு, முக்கியச் சாலை விதிகளை விளக்கி, அவற்றைக் கடைபிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுக. (பெ.ஆ.க – 6)**

**விடை :**

தேதி............
நாகமலை

அன்புள்ள மாமாவிற்கு,

உங்கள் அன்பு மருமகன் எழுதிக்கொள்வது. நானும் என் பெற்றோரும் நலம். அதுபோல் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் நலமாக இருக்க வேண்டுகிறேன். தாங்கள் புதியதாக இரண்டு சக்கர வாகனம் ஓட்டுவதற்காக ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளதைத் தாங்கள் கூறக்கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்.

புதியதாக ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள் சில முக்கியச் சாலை விதிகளை அறிந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் விபத்தில்லாப் பயணம் அமையும். ஆதலால் எனக்குத் தெரிந்த சில சாலை விதிகளை கூறலாம் என ஆசைப்படுகிறேன்.

1. "மிதவேகம் மிக நன்று" என்ற அறிவுரைக்கேற்ப வாகனங்களை குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் ஓட்டிச் செல்லக்கூடாது.
2. "தலைக்கவசம் உயிர்க்கவசம்" என்பதை உணர்ந்து இருசக்கர வாகன ஓட்டிகள் தலைக் கவசத்தை கட்டாயம் அணிந்துச் செல்ல வேண்டும்.
3. வாகனம் ஓட்டிச் செல்லும் போது கைப்பேசியைப் பயன்படுத்தக்கூடாது
4. மது அருந்திவிட்டு வாகனங்களை ஓட்டக்கூடாது.
5. போக்குவரத்துக் காவலர்கள் கூறும் அறிவுரைகளைக் கேட்டு அதன்படி நடத்தல் வேண்டும்.

இத்தகைய விதிகளை நீங்கள் கட்டாயம் கடைப்பிடித்து நடந்தால் விபத்தில்லாத மகிழ்ச்சியான பயணமாகத் தங்கள் பயணம் அமையும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாங்கள் சாலைவிதிகளைக் கடைப்பிடித்து இனிய பயணம் மேற்கொள்ள வாழ்த்துகள்

இப்படிக்கு
பாசமுள்ள மருமகன்
க. சந்துரு

உறைமேல் முகவரி
பா. சக்திவேல்,
2/25, மலைக்கோட்டை,
திருச்சி.

**3. குறிப்புகளைக்கொண்டு கட்டுரை ஒன்று எழுதித் தலைப்பிடுக.**

**குறிப்புகள் : முன்னுரை – சாலைப்பாதுகாப்பு உயிர்ப்பாதுகாப்பு – சாலைவிதிகள் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளைத் தவிர்ப்போம் – விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை.**

**முன்னுரை :**

சாலைகளில் மிதிவண்டிகளும், மகிழ்வுந்துகளும் சரக்குந்துகளும் சாரிசாரியாகச் சென்றுகொண்டிருக்கின்றன. அதே சாலையில் மக்களும் நடந்து செல்கின்றனர். அப்படிச் செல்லும்போது சில நேரங்களில் விபத்துகள் நேர்ந்துவிடுகின்றன. அவ்வாறு நேராமல் தடுக்க அரசாங்கம் சாலைவிதிகளை ஏற்படுத்தியுள்ளது. சாலை விதிகளை பின்பற்றி நடப்பது நம் கடமையாகும்.

**சாலைப்பாதுகாப்பு உயிர்ப்பாதுகாப்பு :**

சாலையில் நடந்து செல்வோர் வெள்ளைக் கோடு போட்ட இடத்தில் சாலையைக் கடக்க வேண்டும். சாலையைக் கடக்கும்போது முதலில் வலப்பக்கம் பார்த்துக் கடக்கவேண்டும். சாலையின் நடுவே சென்றதும் இடப்பக்கம் பார்த்துச் சாலையைக் கடக்கவேண்டும்.

மக்கள் நெருக்கமான இடங்களில் சாலையைக் கடக்கச் சுரங்கப் பாதைகள் அமைத்திருப்பார்கள். அதன் வழியாய்ச் சென்றே நாம் சாலையைக் கடக்க வேண்டும். சில இடங்களில் நடை மேம்பாலங்களும் அமைக்கப்பட்டிருக்கும். இவை மக்கள் அச்சமின்றிச் சாலையைக் கடக்க உதவுகின்றன.

**சாலைவிதிகள் :**

சாலையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய சில அடிப்படை விதிகள்,

1. சிவப்பு விளக்கு எரியும்போது சாலையைக்கடக்கக்கூடாது.
2. மஞ்சள் விளக்கு எரியும்போது கவனிக்க வேண்டும்.
3. பச்சை விளக்கு எரியும் போது சாலையைக் கடக்க வேண்டும்.
4. சாலையில் வண்டியில் செல்லும்போது இடது பக்கம் செல்லவேண்டும்.
5. சாலையில் நடந்து செல்லும்போது வலது பக்கம் நடந்து செல்லவேண்டும். இதுபோன்ற பல்வேறு சாலைக்குறியீடுகளை அறிந்து அவற்றைப் பின்பற்ற வேண்டும்.

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள்:**

சாலையில் வாகனம் ஓட்டுபவர் பின்பற்றும் விதத்தில் சில அறிவிப்பு எச்சரிக்கை குறியீடுகளை நட்டு இருப்பார்கள். பள்ளிக்கூடம், பாலம், சாலை வளைவு, "இரயில் கேட்" போன்றவற்றை அவற்றின் சின்னத்தைக் கண்டு தெரிந்து கொள்ளலாம். அவ்வடையாளங்களைப்பார்த்து ஓட்டுநர்கள் நடந்துகொண்டால் சாலைவிபத்து நடவாமல் தடுக்கலாம்.

**விபத்துகளைத் தவிர்ப்போம்:**

சில சாலைகளில் வேகக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டிருக்கும். அகலமான சாலைகள் விரைவான போக்குவரத்திற்காய்ச் சில பிரிவுகளாய்ப் பிரிக்கப்பட்டிருக்கும். வேகப் பிரிவில் மெது வாகனங்கள் செல்லக்கூடாது. மெதுவாகனப் பிரிவில் வேக வாகனங்கள் செல்லக் கூடாது. வாகனங்கள் ஒன்றை ஒன்று முந்தும்போது சாலையின் நடுவில் உள்ள மஞ்சள் கோட்டைக் கடந்து செல்லக்கூடாது.

**விழிப்புணர்வு தருவோம்:**

பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய அனைவரும் சாலைச் சட்டத்தை மதிக்க வேண்டும்.

1. "மிதவேகம் மிக நன்று" என்ற அறிவுரைக்கேற்ப வாகனங்களை குறிப்பிட்ட வேகத்திற்கு மேல் ஓட்டிச் செல்லக்கூடாது.
2. "தலைக்கவசம் உயிர்க்கவசம்" என்பதை உணர்ந்து இருசக்கர வாகன ஓட்டிகள் தலைக் கவசத்தை கட்டாயம் அணிந்துச் செல்ல வேண்டும். அதுமட்டுமின்றி பின் இருக்கையில் அமர்ந்துசெல்பவரும் தலைக்கவசம் அணிந்து செல்வது பாதுகாப்பானது.
3. நான்கு சக்கரவாகனத்தில் செல்பவர்கள் இருக்கை பட்டையை (seat belt)கட்டாயம் அணியவேண்டும்.
4. ஓட்டுனர் உரிமம் பெற்றவர்கள் மட்டுமே வாகனத்தை இயக்க வேண்டும். 18 வயதுக்குக் குறைவான மாணவர்கள்கண்டிப்பாக வாகனங்களை இயக்கக்கூடாது.

**முடிவுரை :**

சாலை விதிகள் மிகவும் தேவை. நாம் அனைவரும் அவ்விதிகளைப் பின்பற்றினால் விபத்தே ஏற்படாது. இளமையிலேயே சாலை விதிகளைச் சிறுவர்கள் தெரிந்து அவற்றைப் பின்பற்றினால் விபத்தைப் பெரும்பாலும் குறைக்கலாம்.

இயல் 4. எ

## மொழியோடு விளையாடு
( மொழிப்பயிற்சி)

**அ) தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.**
**(சோறு, கற்றல், கரு, பூவில், எழுத்து)**

**1. நூலின் பயன் படித்தல் எனில், கல்வியின் பயன் ............**
**விடை :** கற்றல்

**2. விதைக்குத் தேவை எரு எனில், கதைக்குத் தேவை ............**
**விடை :** கரு

**3. கல் சிலை ஆகுமெனில், நெல் .............. ஆகும்.**
**விடை :** சோறு

**4. குரலில் இருந்து பேச்சு எனில், விரலில் இருந்து ...............**
**விடை :** எழுத்து

**5. மீன் இருப்பது நீரில் ; தேன் இருப்பது ............**
**விடை :**
பூவில்

---

**ஆ) குறிப்பைப் பயன்படுத்தி விடைதருக.**

| குறிப்பு – | எதிர்மறையான சொற்கள் |
|---|---|
| மீளாத் துயர் | மீண்ட இன்பம் (பெ.ஆ.க – 1, 2) |
| கொடுத்துச் சிவந்த | பெற்றதும் சிவக்காத |
| மறைத்துக் காட்டு | வெளிப்படையாக மூடு |
| அருகில் அமர்க | தூரத்தில் நிற்க (பெ.ஆ.க – 1) |
| பெரியவரின் அமைதி | சிறியவரின் ஆரவாரம் |
| புயலுக்குப் பின் | அமைதிக்கு முன் (பெ.ஆ.க – 2) |

---

**இ) அகராதியில் காண்க.**
**அவிர்தல், அழல், உவா, கங்குல், கனலி**

**விடை :**

| | | |
|---|---|---|
| அவிர்தல் | – | ஒளிர்தல், பீறுதல் |
| அழல் | – | நெருப்பு, வெப்பம், கோபம், நரகம் |
| உவா | – | முழுநிலவு, கடல் |
| கங்குல் | – | இரவு, இருள், பரணிநாள் |
| கனலி | – | சூரியன், நெருப்பு, பன்றி, கள்ளி |

**ஈ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (பெ.ஆ.க – 3)**

**விடை :**

**கைப்பேசி**

*யாருக்கும்அடிமையாக*
*இருந்து*
*வாழ விரும்பவில்லை*
*என்றேன்*
*ஒரு சிறு*
*கைப்பேசி*
*என்னை*
*அடிமைப்படுத்தியது*
*தெரியாமல்............*

1. ஆறாம் விரலென நினைத்தாய்
2. எனது அடிமை என உரைத்தாய்
3. உலகை உள்ளங்கையில் கொண்டு வந்தாய்
4. காண முடியாததைக் கண்டாய்
5. ஆனால் அதற்கு அடிமையானாய் முடிவாய்.



**உ) கலைச்சொல் அறிவோம்.**

Nanotechnology – மீநுண் தொழில்நுட்பம்
Biotechnology – உயிரித் தொழில்நுட்பம்
Ultravioletrays – புறஊதாக் கதிர்கள்
Space technology – விண்வெளித்தொழில்நுட்பம்
Cosmic rays – விண்வெளிக் கதிர்கள்
Infra red rays – அகச்சிவப்புக் கதிர்கள்

**ஊ) கலைச்சொல் தருக. (கூடுதல் வினா) (பெ.ஆ.க–2)**

1. அ) Ultravioletrays – புறஊதாக் கதிர்கள்
ஆ) Space technology – விண்வெளித் தொழில்நுட்பம்

**எ) அறிவை விரிவு செய்.**

பஞ்சபூதங்களின் அறிவியல் கதைகள் – நீலமணி
அன்றாட வாழ்வில் அறிவியல் – ச.தமிழ்ச்செல்வன்
காலம் – ஸ்டீபன் ஹாக்கிங்

**ஏ) நிற்க அதற்குத் தக**



தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி:
திறன்பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை:
காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன்:
எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி:
**இவர்கள் எந்நேரமும் நடப்புலகில் இருக்காமல் கற்பனை உலகில் மிதப்பவர்களாக இருக்கிறார்கள்! இவர்களை நெறிப்படுத்தி நடைமுறை உலகில் செயல்பட வைக்க நீங்கள் செய்யும் முயற்சிகளைப் பட்டியல் இடுக.(பெ.ஆ.க – 4)**

**விடை :**

| | |
|---|---|
| 1. | தொலைக்காட்சி பார்ப்பதை நிறுத்தி, புத்தகம் படிப்பதைத் தொடர்ந்திடு எனக்கூறுவேன். |
| 2. | திறன் பேசியைத் தவிர்த்துவிட்டு, தோழிகளோடு சேர்ந்து விளையாடத் தூண்டுவேன் |
| 3. | காணொலியைத் தவிர்த்து, நண்பர்களோடு ஆடுகளத்தில் விளையாடத் தூண்டுவேன் |
| 4. | ஊடகங்களில் இயங்காதே, இயற்கையோடு இணைந்து இயங்கினால் இன்பம் அடைவாய் எனக்கூறுவேன் |
| 5. | நாள்தோறும் நீ புத்தகத்தைத் தொடர்ந்து படித்தால், பின்னாளில் உன்னைப் புத்தகங்களில் பார்ப்பார்கள் எனச் சொல்வேன். |

| இயல் ஐந்து | இயல் 5. மணற்கேணி |
|---|---|

உரைநடை உலகம்

| இயல் 5. அ | மொழிபெயர்ப்புக் கல்வி (உரைநடை) |
|---|---|

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி யாது ? (பெ.ஆ.க–2)**

அ) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஆ) காப்பியக்காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கியக்காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

**விடை : அ) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" – பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து – (பெ.ஆ.க–5)**

அ) பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்படவேண்டும்.
ஆ) பலகலைகள் தமிழில் புதிதாகத் தோன்றவேண்டும்.
இ) உலகெங்கும் காணப்படும் செல்வங்கள் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்.
ஈ) கலைச்செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து கண்டுகளிக்க வேண்டும்.

**விடை: அ) பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்படவேண்டும்.**

**3. மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை நீடிக்கவிடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவது ...............**

அ) இலக்கியம் ஆ) கலாச்சாரம்
இ) மொழி ஈ) மொழிபெயர்ப்பு

**விடை: ஈ) மொழிபெயர்ப்பு**

**4. "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்று கூறியர் ..............**

அ) கவிமணி ஆ) பாரதியார்
இ) மணவை முஸ்தபா ஈ) வீரமாமுனிவர்

**விடை: இ) மணவை முஸ்தபா**

**5. மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் .............. மரபியலில் குறிப்பிட்டுள்ளார்.**

அ) அகத்தியர் ஆ) திருவள்ளுவர்
இ) தொல்காப்பியர் ஈ) பவனந்தி முனிவர்

**விடை: இ) தொல்காப்பியர்**

**6. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று குறிப்பிடுவது............. செப்பேடு ஆகும்.**

அ) சின்னமனூர் ஆ) அரிக்காமேடு
இ) திருவாலங்காடு ஈ) ஆனைமங்கலம் **விடை: அ) சின்னமனூர்**

7. வடமொழிக் கதைகளைத் தழுவி எழுதப்பட்ட காப்பியங்களுள் ஒன்று................
அ) சிலப்பதிகாரம் ஆ) சீவகசிந்தாமணி
இ) வளையாபதி ஈ) மணிமேகலை
விடை: ஆ) சீவகசிந்தாமணி

8. மொகு சாஸ்ட்டு – என்ற ஜப்பானிய மொழித்தொடரின் பொருள் .............
அ) விடைதர அவகாசம் வேண்டும் ஆ) மறுக்கிறோம்
இ) எதிர்கொள்ளத் தயார் ஈ) தவிர்க்கிறோம்
விடை: அ) விடைதர அவகாசம் வேண்டும்

9. தேசியப் புத்தக நிறுவனம் என்பதன் சுருக்கம் ...............
அ) MBT ஆ) NCRT
இ) NBT ஈ) NABT
விடை: இ) NBT

10................ நூற்றாண்டு வரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன.
அ) பதினாறாம் ஆ) பதினேழாம்
இ) பதினெட்டாம் ஈ) பதினைந்தாம்
விடை: இ) பதினெட்டாம்

11. ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் புகழ்பெற்றவர் ................
அ) சேக்ஸி நல்லி ஆ) ஷில்லர்
இ) ஜோஹான் ஈ) ஷேக்ஸ்பியர்
விடை: ஈ) ஷேக்ஸ்பியர்

12. மொழிபெயர்ப்பால் உலக மொழியாக புகழ்பெற்ற நூல்..............
அ) கம்பராமாயணம் ஆ) திருக்குறள்
இ) அகநானூறு ஈ) வளையாபதி
விடை: ஆ) திருக்குறள்

13. இரவீந்திரநாத் தாகூர் வங்கமொழியில் எழுதிய கவிதை நூல்.................
அ) மகாபாரதம் ஆ) சாகுந்தலம்
இ) கீதாஞ்சலி ஈ) கம்பராமாயணம்
விடை: இ) கீதாஞ்சலி

14. கீதாஞ்சலியை............... மொழியில் மொழிபெயர்த்த பின்னரே தாகூருக்கு நோபல் பரிசு கிடைத்தது.
அ) மலையாள ஆ) கன்னட
இ) தெலுங்கு ஈ) ஆங்கில
விடை: ஈ) ஆங்கில

15. "வால்காவிலிருந்து கங்கை வரை" என்னும் நூலை இந்தி மொழியில் எழுதியவர் ...............
அ) பாரதியார் ஆ) ராகுல் சாங்கிருத்யாயன்
இ) கணமுத்தையா ஈ) மணவை முஸ்தபா
விடை: ஆ) ராகுல் சாங்கிருத்யாயன்

16. "வால்காவிலிருந்து கங்கை வரை" என்னும் நூலை தமிழில் மொழிபெயர்த்தவர்..............
அ) மணவை முஸ்தபா ஆ) திரு.வி.க
இ) கணமுத்தையா ஈ) ராகுல் சாங்கிருத்யாயன்
விடை: இ) கணமுத்தையா

17. "வால்காவிலிருந்து கங்கை வரை" என்னும் நூலை ராகுல் சாங்கிருத்யாயன் எழுதிய ஆண்டு ..............
அ) 1932 ஆ) 1942
இ) 1952 ஈ) 1943
விடை: ஆ) 1942

18. Underground drainage என்ற தொடரின் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு ..............
அ) புதைச்சாக்கடை ஆ) பாதாளச்சாக்கடை
இ) தரைகீழ்ச்சாக்கடை ஈ) சாக்கடை வடிகால்
விடை: அ) புதைச்சாக்கடை

**19. பாரதியின் மொழிபெயர்ப்புகளைப் பொருத்திக் காட்டுக.**

| | | |
|---|---|---|
| அ) பொருட்காட்சி | – | 1) Strike |
| ஆ) இருப்புப்பாதை | – | 2) Revolution |
| இ) புரட்சி | – | 3) East Indian Railways |
| ஈ) வேலை நிறுத்தம் | – | 4) Exhibition |

அ) 3, 4, 1, 2 ஆ) 4, 3, 2, 1
இ) 1, 2, 3, 4 ஈ) 2, 4, 3, 1

**விடை: ஆ) 4, 3, 2, 1**

**20. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்–கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று கூறியவர் ...............**

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) வாணிதாசன் ஈ) திரு.வி.க **விடை: ஆ) பாரதியார்**

**21. ஏறக்குறைய ஆயிரம் பழைய தமிழ் ஏடுகளும் கையெழுத்துப் பிரதிகளும் உள்ள தேசிய நூற்கூடம் உள்ள நாடு ...............**

அ) ஜப்பான் ஆ) இங்கிலாந்து
இ) பிரான்சு ஈ) சீனா **விடை: இ) பிரான்சு**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுதுக.**

**விடை :**

★ தாய்மொழி தமிழையும், ஆங்கிலத்தையும் தவிர நான் கற்க விரும்பும் மொழி சமஸ்கிருதம் ஆகும்.

★ ஏனெனில் நம் முன்னோர்களை சரியாகப் புரிந்துகொள்ள சமஸ்கிருத அறிவு நிச்சயம் வேண்டும்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. மொழிபெயர்ப்பு குறித்து மணவை முஸ்தபா குறிப்பிடுவது யாது ? (அ.மா.வி)**

**விடை :**

★ "ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா

---

**3 . மொழிபெயர்ப்பின் இன்றியமையாததாக மு.கு.ஜகந்நாத ராஜா கூறுவது யாது ?**

**விடை :**

★ "ஒரு மொழி வளம்பெறவும் உலகத்துடன் உறவு கொள்ளவும் மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகும். மேலும் உலக நாகரிக வளர்ச்சிக்கும் பொருளியல் மேம்பாட்டிற்கும் மொழிபெயர்ப்பும் ஒரு காரணமாகும்" என்கிறார் மு.கு. ஜகந்நாத ராஜா.

---

**4. சங்ககாலத்திலேயே தமிழ் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டது என்பதற்குச் சான்று தருக.**

**விடை :**

★ தொல்காப்பிய மரபியலில் "மொழி பெயர்த்தல்" என்னும் தொடர் காணப்படுகிறது.

★ மேலும் "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்று சின்னமனூர்ச் செப்பேடு குறிப்பிடுகிறது.

★ இவற்றால் சங்ககாலத்திலேயே மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டது புலனாகிறது.

---

**5. வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டத் தமிழ்க் காப்பியங்களைக் குறிப்பிடுக.**
**விடை :**

★ பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய காப்பியங்கள் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையாகும்.

---

**6. இந்திய அரசு மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது ஏன் ? காரணம் கூறுக.**
**விடை :**

★ விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

★ தேசிய உணர்வு ஊட்டுவதற்கும், ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது.

---

**7. இந்திய அரசின் மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் யாவை ?**
**விடை :**

★ இந்திய அரசின் மொழிபெயர்ப்புப் பணிகளை சாகித்ய அகாதெமி, தேசியப் புத்தக நிறுவனம் (NBT), தெனிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவை மேற்கொண்டன.

---

**8. எந்தெந்த நாடுகளின் நூல்கள் தமிழுக்கு நேரடி மொழிபெயர்ப்புகளாகக் கிடைக்கின்றன ?**
**விடை :**

★ பிரெஞ்சு, ஜெர்மன், ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா முதலான நாடுகளின் நூல்கள், தமிழுக்கு நேரடி மொழிபெயர்ப்புகளாகக் கிடைக்கின்றன.

---

**9. "வால்காவிலிருந்து கங்கை வரை" நூல்குறித்து எழுதுக.**
**விடை :**

★ ராகுல் சாங்கிருத்யாயன் 1942 ஆம் ஆண்டு ஹஜிராபாக் மத்திய சிறையிலிருந்தபோது, "வால்காவிலிருந்து கங்கை வரை" என்ற நூலை இந்தி மொழியில் எழுதினார்.

★ இந்நூலை 1949 ஆம் ஆண்டு கணமுத்தையா என்பவர் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

---

**10. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு உதவுகிறது ?**
**விடை :**

★ மொழிபெயர்க்கப்பட்ட நூல்களைத் தமிழ் இலக்கியங்களோடு ஒப்பிட்டு இலக்கிய சிந்தனை, வடிவம், உத்தி, மையக்கரு, பண்பாடு போன்ற பலவகைக் கூறுகளை எடைபோடவும் வளர்க்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

---

**11. தமிழுக்கு எத்தகைய செல்வங்கள் கிடைக்க வேண்டுமென குலோத்துங்கன் குறிப்பிடுகிறார் ?**
**விடை :**

★ தமிழுக்கு அத்தனை அறிவுச் செல்வங்களும் கிடைக்கவேண்டும்.

★ இதனை குலோத்துங்கன் "காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி பேசி மகிழ் நிலை வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

---

**12. பிரான்சு தேசிய நூலகத்தில் அச்சிடப்பெறாத தமிழ் நூல்களைக் குறிப்பிடுக ?**
**விடை :**

★ மாணிக்கவாசகர் பிள்ளைத் தமிழ், சரளிப்புத்தகம், புதுச்சேரி அம்மன் பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்கள் இன்னும் அச்சிடப்பெறாத நூல்களாகவே உள்ளன.

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு:**

**ஐ.நா. அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழியில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது ; ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது, விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா.அவையில் ஒருவர் பேசுவதை மொழி பெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணி கேட்பியில் (Head phone) கேட்டபடி, சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக்கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வார்.**

**இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

**1. ஐ.நா. அவையில் செய்யப்பட்டுள்ள வசதி யாது ?**

**விடை :**

ஐ.நா. அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

**2. மொழிபெயர்ப்பு என்றால் என்ன ?**

**விடை :**

மொழிபெயர்ப்பு என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது ஆகும்.

**3. விளக்குவது என்றால் என்ன ?**

**விடை :**

ஒருவர் பேசும்போது மொழிபெயர்ப்பது விளக்குவது எனப்படும்.

**4. மொழிபெயர்ப்பாளர் எங்கு அமர்ந்திருப்பார் ?**

**விடை :**

மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் அமர்ந்திருப்பார்.

**5. "காதணிக் கேட்பி" எதற்குப் பயன்படுகிறது ?**

**விடை :**

அவையில் உள்ள பார்வையாளர், தம்முன் உள்ள காதணி கேட்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்ளப் பயன்படுகிறது.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. மொழிபெயர்ப்புப் பற்றிச் சின்னமனூர் செப்பேடு குறிப்பிடும் செய்தி யாது ?**

**விடை :**

★ "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர் செப்பேட்டுக் குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது.

★ வடமொழியில் வழங்கி வந்த இராமாயண, மகாபாரதத் தொன்மைச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன.

★ இதுவும் பிறமொழிக் கருத்துகளை, கதைகளைத் தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது.

★ பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக்கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே ஆகும்.

---

**3. மொழிபெயர்ப்பு சரியாக அமையாததால் ஜப்பானுக்கு ஏற்பட்ட துயரச் சம்பவம் யாது ?**

**விடை :**

★ உலகப்போரின் போது அமெரிக்கா, "சரண் அடையாவிட்டால் குண்டு வீசப்படும்" என்ற செய்தியை ஜப்பானுக்கு அனுப்பியதாகவும் அதற்கு ஜப்பான், "மொகு சாஸ்ட்டு" என்று விடை அனுப்பியதாகவும் கூறுவர்.

★ அந்தத் தொடரின் பொருள் தெரியாமல் அமெரிக்கா ஹீரோஷிமாவில் குண்டு வீசியது என்று சொல்கிறார்கள்.

★ அந்தத் தொடருக்குப் பொருள், "விடைதர அவகாசம் வேண்டும்" என்பதாம். ஆனால் அதற்கு அமெரிக்கர்கள் "மறுக்கிறோம்" என்று பொருள் கொண்டதாகவும் கூறுவர்.

★ இது உண்மை எனில், மொழிபெயர்ப்பு சரியாக அமையாததால் காலத்திற்கும் அழிவு தரும் களங்கம் நேர்ந்தது என்று கூறலாம்.

---

**4. எத்திசையும் தமிழ் மணக்க நாம் செய்யவேண்டுவன யாவை ?**

**விடை :**

★ தமிழின் தொன்மையான இலக்கியங்கள் முன்னரே மொழிபெயர்க்கப்பட்டு அறிமுகமாகியிருந்தால் தமிழின் பெருமை உலகெங்கும் முறையாகப் பரவியிருக்கும்.

★ ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தின் தமிழ் இருக்கை அத்தகைய பணியில் ஈடுபடவேண்டும்.

★ தமிழுக்கு அத்தனை அறிவுச் செல்வங்களும் கிடைக்கவேண்டும். இதனை குலோத்துங்கன்,

"காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர் கண்டுள்ள கலைகளெல்லாம் தமிழில் எண்ணி பேசி மகிழ் நிலை வேண்டும்" என்று குறிப்பிடுகிறார்.

★ இதனை பாரதியார்,

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" என்று கூறுவதைத் தமிழுலகம் செயல்படுத்த வேண்டும். அங்கிருந்து கொணர்ந்து சேர்ப்பதோடு அவர் கூறுவதுபோல,

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்."

செப்பும் மொழிகள் பலவாக இருப்பினும் சிந்தனை ஒன்றுடையதாக உலகம் ஆக்கப்பட வேண்டும்.

---

**பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)**

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. தமிழின் இலக்கிய வளம் –கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை –**

**மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு "செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை" என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக. (பெ.ஆ.க –4)**

**விடை :**

**முன்னுரை :**

ஒவ்வொரு மொழிச் சமூகத்திலும் ஒருதுறையில் இல்லாத செழுமையை ஈடுசெய்ய வேறு துறைகளில் உச்சங்கள் இருக்கும். மொழிகளுக்கு இடையேயான வேற்றுமைகளை வேற்றுமைகளாகவே நீடிக்கவிடாமல் ஒற்றுமைப்படுத்த உதவுவது மொழிபெயர்ப்பு. கொடுக்கல் வாங்கலாக அறிவனைத்தும், உணர்வனைத்தும், அனைத்து மொழிகளிலும் பரவவேண்டும். நம்மிடம் எல்லாம் உள்ளது என்று பட்டை கட்டிய பார்வையை ஒழித்து, அகன்ற பார்வையைத் தருவது மொழிபெயர்ப்புக் கலை.

**தமிழின் இலக்கிய வளம்:**

★ உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள் ஆகும்.

★ இவற்றின் மொத்த அடிகள், 26, 350

★ அக்காலத்தே இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் உலகில் வேறு எந்த மொழியிலும் இல்லை என்கிறார் கமீல் சுவலபீல் என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞர்.

★ மாக்சுமுல்லர் என்னும் மொழி நூலறிஞரே தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும் அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றிருக்கும் மொழி என்றும் பாராட்டியிருக்கிறார்.

**பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் :**

★ "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதை புலப்படுத்துகிறது.

★ வடமொழியில் வழங்கிவந்த இராமாயண, மகாபாரதத் தொன்மைச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம்பெற்றுள்ளன. இதுவும் பிறமொழிக்கருத்துகளை, கதைகளைத் தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது.

★ பெருங்கதை, சீவகசிந்தாமணி, வில்லிபாரதம், கம்பராமாயணம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக்கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே ஆகும்.

**அறிவியல் கருத்துகள் :**

★ இவ்வுலகம் பேரண்டத்தின் ஒரு கோள் என்பதனையும், இவ்வண்டப்பரப்பையும் அதன் மீது அமைந்துள்ள கோள்களையும் தமிழ் இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன.

"அண்டப் பகுதியின் உண்ணப் பிறக்கம்" – திருவாசகம்

★ பண்டைத் தமிழகத்தில் கரும்பைப் பிழிவதற்கான இயந்திரங்கள் இருந்ததைப் பதிற்றுப்பத்து மூலம் அறியமுடிகிறது.

(எ.கா) "தீம்பிழி எந்திரம் பந்தல் வருத்த" – பதிற்றுப் பத்து

★ ஆழ்துளைக் கிணறுகள் இருந்ததைப் பெருங்கதை மூலமாக அறியமுடிகிறது.

(எ.கா) "அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்" – பெருங்கதை.

★ இன்றைய அறிவியல் அணுவைப் பிளக்கவும், சேர்க்கவும் முடியும் என ஆய்ந்திருக்கிறது. ஔவை, "அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி" என்று சொல்கிறார்.

★ "ஓர் அணுவை சதகூறிட்ட கோணினும் உளன்" எனக் கம்பரும் கூறுகிறார்.

★ உடம்பார்அழியின் உயிரார் அழிவர் என்பர் திருமூலர். தமிழ் இலக்கியங்களை நுட்பமாக ஆய்கின்றபோது எத்தனையோ அறிவியல் கருத்துகள் ஆழிப்புதைந்து கிடப்பதைக் காணலாம்.

**பிறதுறைக் கருத்துகள் :**

★ தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால் தான் வளர்ச்சி பெறுகின்றன. விளம்பர மொழிக்கு மொழிபெயர்ப்புத் தேவைப்படுகிறது.

★ திரைப்படங்கள்,தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியவை வேற்று மொழிமாற்றம் செய்யப்பட்டு அனைத்து மொழிபேசும் மக்களையும் சென்றடைகின்றன. இதனால் புதுவகையான சிந்தனைகள் மொழிக்கூறுகள் பரவுகின்றன.

**தமிழுக்கு செழுமை :**

★ மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளையும் பெற்றிருக்கிறோம்.

★ இன்றுள்ள புதிய திறனாய்வு முறைகளை எல்லாம் நாம் ஆங்கிலத்தின் வழியாகப் பெற்றிருக்கிறோம்.

★ பிறமொழி இலக்கியங்கள், இலக்கிய வடிவங்கள் பலவும் தமிழுக்கு அறிமுகமாகி அதுபோன்ற முயற்சிகள் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

★ இலக்கியங்களோடு ஒப்பு நோக்கி, சிந்தனை, வடிவம், உத்தி, மையக்கரு, பண்பாடு, போன்ற பலவகைக்கூறுகளை எடைபோடவும் வளர்க்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.

**முடிவுரை :**

★ செம்மொழி தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலையை, கல்வியாக்குவதும், சொற்களஞ்சியங்களை உருவாக்குவதும் பட்டறைகள் நடத்துவதும் நூல் வெளியிடுவதும் செய்யப்பட வேண்டும்.

★ வெவ்வேறு படைப்புகள் மட்டுமின்றி, துறைசார்ந்த நூல் மொழிபெயர்ப்புகளையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வகையில் தமிழில் பல நூல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச் செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று பாரதி கூறுவதைத் தமிழகம் செயல்படுத்த வேண்டும். அங்கிருந்து கொணர்ந்து சேர்ப்பதோடு அவர் கூறுவதுபோல,

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

★ செப்பு மொழிகள் பலவாக இருப்பினும் சிந்தனை ஒன்றுடையதாக உலகம் ஆக்கப்பட வேண்டும்.

---

**2. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு தருக.**

**குறிப்புகள் : முன்னுரை – மொழிபெயர்ப்பு நூல்கள் – எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் – மொழிபெயர்ப்பும் கல்வியே – முடிவுரை. (பெ.ஆ.க – 5)**

**விடை :** **மொழிபெயர்ப்புக் கலை**

**முன்னுரை :**

மொழிபெயர்ப்பு மனிதர்களையும், நாடுகளையும், காலங்களையும் இணைக்கின்ற நெடுஞ்சாலையாக இருக்கிறது. காலத்தால், இடத்தால், மொழியால் பிரிக்கப்பட்ட மானுடத்தை இணைக்கிறது. கடந்த காலத்தை எதிர்காலத்துடன் இணைக்கும் மொழிபெயர்ப்பு, மனித

குலத்தின் ஒரு பகுதியாகவே இருக்கிறது என்பதை இக்கட்டுரையின் மூலம் காண்போம்.

**மொழிபெயர்ப்பு நூல்கள் :**

★ இந்திய மொழிகளுள் தமிழ்மொழி, மொழிபெயர்ப்பு துறையில் இமயத்தின் உச்சிக்கே சென்றுள்ளதென்றால் அதில் ஐயமில்லை.

★ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழில் தோன்றிய திருக்குறள், துன்பக்கேணி, பகற்கனவு, முத்துமாலை என்ற பெயர்களில் தமிழில் வந்துள்ளன.

★ நம்நாட்டு மொழிகளில் வடமொழி இராமாயணம், மகாபாரதம் ஆகியவை தமிழ் வடிவேற்றன.

★ வங்கமொழி, மராத்தி, கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளிலிருந்தும் பல இலக்கியங்கள் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன.

**எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் :**

★ பாரதியின் வாக்கிற்கிணங்க சீனமொழிப் படைப்புகள் போலவே ஜப்பானியப் படைப்புகளும் தமிழ்த் தோற்றம் கொண்டன.

★ "மணியோசை" என்றபெயரில் புதுமைப்பித்தனால் ஜப்பானியச் சிறுகதைகள் தமிழ் வடிவேற்றன.

★ ஜப்பானிய நாவலாசிரியரின் உலகப் புகழ் வாய்ந்த கதைகள், நாடகங்கள் பல தமிழ் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

**மொழிபெயர்ப்பும் கல்வியே :**

★ மொழிபெயர்ப்பை ஒரு கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும்.

★ பல அறிவுத்துறைகளுக்கும் தொழில்துறைகளுக்கும் வெளிநாட்டவரை எதிர்ப்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் தமிழ் மொழியின் சொல்வளத்தைக் கொண்டு உருவாக்கிக் கொள்ளமுடியும்.

★ மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும். வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்.

★ நாடு, இன, மொழி எல்லைகள் கடந்து ஒருலகத் தன்மையைப் பெற "மொழிபெயர்ப்புக் கல்வியே" என்ற கூற்று பொருத்தமாக உள்ளது.

★ விவிலியத்திற்கு அடுத்தபடியாக பல நூறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பெற்றுள்ள நிலையே சான்றாகும்.

★ திருவாசகத்தையும், புறநானூற்றில் சில பாடல்களையும் ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தது ஒரு தனிச் சிறப்புதான்.

★ திரு.விஸ்வநாத பிள்ளை என்பவர் ஷேக்ஸ்பியரின் "மெர்ச்செண்ட் ஆப் வெனிஸ்" என்ற நூலை "வெனிஸ் வர்த்தகன்" என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

★ மராத்தி மொழியிலிருந்து "பஞ்சதந்திரக் கதைகள்" வீரமார்த்தாண்ட தேவரால் அருமையான கவிதை வடிவில் மொழிபெயர்க்கப்பெற்றது.

**முடிவுரை :**

மொழிபெயர்ப்பால் பிறமொழி இலக்கிய அறிவு மட்டுமின்றிப் பல்துறை வளர்ச்சி குறித்த செய்திகளும் கிடைக்கின்றன. மொழிபெயர்ப்பை ஒரு கலையாகப் போற்றி உயர நாம் முயல்வோமாக !

---

**மொழிப்பயிற்சி**

**அ) விடைகளுக்கேற்ற வினாக்களை அமைக்க.**

**1. மொழிபெயர்ப்பு, மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழி வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. (பெ.ஆ.க – 6)**

**விடை :**

மொழிபெயர்ப்பு எவ்வாறு மொழிவளர்ச்சிக்கு வழி வகுக்கிறது ?

**2. தமிழ் நூல்கள் ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்யமொழி, வங்கமொழி, மராத்திமொழி போன்ற பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. (பெ.ஆ.க – 6)**

**விடை :** தமிழ் நூல்கள் எந்தெந்த மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன ?

**3. மொழி வேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது.**
**விடை :** மொழிவேலியை எவை அகற்றுகிறது ?

**4. பாரதியின் கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால், உலக அளவில் உயரிய விருதுகளும், ஏற்பும் கிடைத்திருக்கும்.**
**விடை :** பாரதியின் கவிதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் உலக அளவில் என்ன கிடைத்திருக்கும் ?

---

**ஆ) நிறுத்தற்குறியிட்டு எழுதுக:**
**1. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு என்கிறார் மணவை முஸ்தபா**
**விடை :**
"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவது மொழிபெயர்ப்பு" என்கிறார் மணவை முஸ்தபா.

**2. பெருங்கதை சீவக சிந்தாமணி கம்பராமாயணம் வில்லிபாரதம் முதலிய சிறு காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப்படைக்கப்பப்படவையே**
**விடை :**
பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சிறு காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப்படைக்கப்பப்படவையே.

---

**இ) சந்திப்பிழை நீக்கி எழுதுக.**
**1. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைகழகங்களிலும் பிறமொழிகளை கற்கும்வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.**
**விடை :**
பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**2. மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கிய திறனாய்வு கொள்கைகளையும் பெற்றிருக்கிறோம்.**
**விடை :**
மொழிபெயர்ப்பின் மூலம் இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளையும் பெற்றிருக்கிறோம்.

---

**ஈ) ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக.**
**1. தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றது.**
**விடை :**
தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால்தான் வளர்ச்சி பெறுகின்றன.

**2. மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகின்றன.**
**விடை :**
மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.

---

**உ) உரையைப்படித்து வினாக்களுக்கு விடைதருக.**
**1) 18 ஆம் நூற்றாண்டுவரை வடமொழி நூல்கள் பல தமிழில் ஆக்கப்பட்டன. ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கில நூல்களும் ஆங்கில வழியாகப் பிற ஐரோப்பிய மொழி நூல்களும் அறிமுகமாயின. இவற்றில் தரமான நூல்கள் என்று பார்த்தால் சிலதான் எஞ்சும். இதே போலத் தமிழ் நூல்களும் பிறமொழிகளுக்கு அறிமுகமாயின. தமிழுக்குரிய நூலாக இருந்த திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்.**

**வினா விடைகள் :**

**அ) 18 ஆம் நூற்றாண்டுவரை எம்மொழி நூல்கள் தமிழில் ஆக்கப்பட்டன ?**

**விடை :** வடமொழி நூல்கள்

**ஆ) ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஆங்கிலம் வழியாக எந்நூல்கள் அறிமுகமாயின ?**

**விடை :**

ஐரோப்பிய நூல்கள்

**இ) திருக்குறள் உலக மொழிகளுக்குரியதாக மாறியது எவ்வாறு ?**

**விடை :**

திருக்குறள் உலகமொழிகளுக்குரியதாக மாறியது மொழிபெயர்ப்பால்தான்

---

**2. உரையைப்படித்து வினாக்களுக்கு விடைதருக.**

**மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது. பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன்மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிப்பெயர்ப்பைப் பண்கலை என்று குறிப்பிடுவார்கள். மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும். (பெ.ஆ.க – 1)**

**வினா விடைகள் :**

**(i) மொழிபெயர்ப்பினால் மொழிவளம் எவ்வாறு பயன்பெறுகிறது ?**

**விடை :** மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.

**(ii) மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவதன் காரணம் யாது ?**

**விடை :** கருத்துப்பகிர்வைத் தருவதால் மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுகிறார்கள்.

**(iii) மொழிபெயர்ப்பு ஏற்படுத்தும் முக்கியத் தாக்கம் எவை ?**

**விடை :** மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும், இலக்கியத்திலும், பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

**(iv) பிறமொழி இலக்கிய அறிவு மூலம் எவற்றை வளப்படுத்தலாம் ?**

**விடை :** பிறமொழி இலக்கிய அறிவு மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்தலாம்.

**v) பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை எதன் மூலம் அறியலாம் ?**

**விடை :** பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை மொழிபெயர்ப்பின் மூலம் அறியலாம்.

---

**3. உரையைப்படித்து வினாக்களுக்கு விடைதருக.**

**மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும் ; பல அறிவுத் துறைகளுக்கும் தொழில்துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும் ; மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும் ; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும் ; நாடு விடுதலை பெற்ற பிறகு, பலநாட்டுத் தூதரகங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. (பெ.ஆ.க – 2)**

**வினா விடைகள் :**

**(i) அனைத்துலக அறிவை நாம் எவ்வாறு பெறலாம் ?**

**விடை :** மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவை நாம் எளிதாகப் பெறலாம்.

**(ii) பலநாட்டுத் தூதரங்கள் மொழிபெயர்ப்பு மூலம் எவ்வெவற்றைக் கற்றுத் தருகின்றன ?**
**விடை :**

பல நாட்டுத் தூதரகங்கள் மொழிபெயர்ப்பு மூலம் தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில் வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுத் தருகின்றன.

**(iii) மொழிபெயர்ப்பைக் கல்வியாகக் கற்பதன் பயன்கள் இரண்டினை எழுதுக ?**
**விடை :**

1) மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும்
2) வேலைவாய்ப்புத் தளத்தை உருவாக்க முடியும்.

**(iv) பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் குறித்து எழுதுக ?**
**விடை :**

பிறமொழிகளைத் தனியார் நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மூலம் கற்கும் வாய்ப்புகள் உள்ளன.

**v) மொழிபெயர்ப்புக் கல்வி இன்றைய காலகட்டத்திற்குத் தேவையா ?**
**விடை :**

ஆம். மொழிபெயர்ப்புக் கல்வி இன்றைய காலகட்டத்திற்குத் தேவை.

---

## கற்பவை கற்றபின்

**1. தாகூரின் கீதாஞ்சலி தமிழ்மொழிபெயர்ப்புப் பாடல் ஒன்றையும் கலீல் கிப்ரானின் கவிதை ஒன்றின் மொழிபெயர்ப்பையும் நூலகத்தில் படித்து எழுதி வருக.**
**விடை:**

**தாகூரின் கீதாஞ்சலித் தமிழாக்கம்**

*காற்றினிலே வருமென்கீதம், குழந்தாய் !*
*உனைத்தழுவி*
*ஆசைக்கரங்கள்போல்*
*அணைத்துக் கொள்ளும் !*
*உனது நெற்றி மீது முத்தமிட்டு*
*இதழால் ஆசி அளிக்கும் !*
*தனித்துள்ள போது உன்னருகில் அமர்ந்து*
*உனது செவியில்*
*முணுமுணுக்கும் என் கீதம் !*
*சந்தடி இரைச்சலில் நீ தவிக்கும் போது*
*அரண் அமைத்துண்டு*
*ஏகாந்தம் அளிக்கும் என் கீதம் !*
*இரட்டைச் சிறகுகள் போல்*
*என்கீதம்*
*உன் கனவுகள் உயிர்த்தெழ*
*உந்து சக்தி தரும் !*
*கங்கு கரையற்ற காணாத காட்சிக்கு*
*உன் இதயத்தை*
*ஏந்திச் செல்லும் என் கீதம் !*

**கலீல் இப்ரானின் கவிதைத் தமிழாக்கம்**

*அன்பின் மகிமை*
*அழகின் ஒளிச்சுடர்*
*கடவுளின் பிரதி பலிப்பு !*
*அவற்றில் வாழப் பிறந்தேன் !*
*அவ்விடத்தில்*
*நானிங்கு வாசிக்கிறேன் !*
*துரத்த முடியா தென்னை*
*அந்த வாழ்வு*
*அரங்கத்தை விட்டு !*
*ஏனெனில்*
*மரணத்திலும் நான் வாழ்பவன்*
*உயிரோடு வாழும்*
*என் வார்த்தைகள் மூலம் !*

---

**2. மொழிபெயர்ப்புச் சிறுகதை ஒன்றைப் படித்து அதன் கதைச்சுருக்கத்தையும், உங்கள் கருத்துகளையும் வகுப்பறையில் கூறுக.**

**விடை :**

சிப்பிப் புழு உலகில் தானே அதி முக்கியமான ஜீவனாக எண்ணியது. பட்டுப் புழுவும் பயன் அளிப்பவையே. ஆனால் பட்டு முத்துக்களைப் போல் அதிக விலை பெற்றுத்தருவது இல்லை. எனவே தன்னை உயர்வாக எண்ணியது சிப்பிப் புழு.

ஒரு நாள் கடலில் பெரும் புயல் வீசியது. சிப்பிப் புழு தன் கூட்டை மூடிக்கொண்டு, பாதுகாப்புக்காகத் தரைக்குப் போகக்கூடாது என்று எண்ணி கடலுக்குள் இருந்தது. ஆனால் இந்த அலை சிப்பிப் புழுவை விட்டுவைக்கவில்லை. அதனைத் தூக்கிக் கடலில் வாரிப்போட்டது. புழு மெதுவாகச் சிப்பியைத் திறந்து வெளியில் மெதுவாக எட்டிப் பார்த்தது. அதற்குள் வேகமாக மற்றொரு அலை வந்து வேகமாக அதனை மணலில் தூக்கிப்போட்டது. கடலுக்குள் திரும்பிப் போக வழியில்லாமல் அங்கேயே கிடந்தது. அது மிகவும் கோபமடைந்தது.

காகம் ஒன்று சிப்பியிடம் வெளியே வா என்றது ; ஆனால் புழு, அருவருப்பான முட்டாளான உன்னிடம் பேசமுடியாது என்றது. காகம் எவ்வளவு சொல்லியும் புழு வெளிவரவில்லை. மாறாக காகத்தைக் கேலி செய்து கொண்டே இருந்தது. நான் முத்துக்களை உண்டாக்குவதால்தான் கடலுக்குப் பெருமை என்று கர்வமாகப் புழு கூறியது. "முத்து செய்யும் பெரிய நபரைப் பார்க்கின்றேன்" வெளியே வா என்றது காகம். ஆனால் முடிந்தால் நீ பெரிய புத்திசாலி என்றால் என் சிப்பியை நீயே திறந்து கொள் என்றது புழு.

நல்லது நீயே சொல்லிவிட்டாய் என்றுச் சொல்லிக் காகம் சிப்பியைத் தன் அலகில் தூக்கி மேலே பறந்து போய் பாறைகள் நடுவே போட்டது. சிப்பி தூள் தூளானது. காகம் சிப்பியைத் தன் அலகால் கொத்தி விழுங்கியது. பிறகு காகம் முகத்தைப் பார்த்தது. முத்து அதனிடம் இருந்து விலகி, சாணக் குவியலில் விழுந்தது. காகம் உயரப் பறந்து மகிழ்வுடன் கத்திச் சென்றது.

# இயல் 5. ஆ

## கவிதைப் பேழை

## நீதிவெண்பா
– கா.ப.செங்குத்தம்பிப் பாவலர்
(செய்யுள்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. அருந்துணை என்பதைப் பிரித்தால் ..................**
அ) அருமை + துணை ஆ) அரு + துணை
இ) அருமை + இணை ஈ) அரு + இணை
**விடை : அ) அருமை + துணை**

**2. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகள் குறிப்பிடுவது எது ? (பெ.ஆ.க–3)**
அ) தமிழ் ஆ) அறிவியல்
இ) கல்வி ஈ) இலக்கியம்
**விடை: இ) கல்வி**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. நீதிவெண்பாவை இயற்றியவர் ..............**
அ) கா.ப. செய்குதம்பி பாவலர் ஆ) பாரதிதாசன்
இ) தேவநேயப்பாவாணர் ஈ) ப.சிங்காரம்
**விடை: அ) கா.ப.செய்குதம்பிப் பாவலர்**

**4. தோண்டும் அளவு ஊறும் நீர் போலக் கற்கும் அளவு அறிவு சுரக்கும் எனக் கூறியது ..............**
அ) திரிகடுகம் ஆ) திருக்குறள்
இ) நாலடியார் ஈ) நீதிவெண்பா **விடை: ஆ) திருக்குறள்**

**5. கற்றவர் வழி அரசு செல்லும் எனக்கூறுவது ...............**
அ) சங்க இலக்கியம் ஆ) பக்தி இலக்கியம்
இ) காப்பிய இலக்கியம் ஈ) நீதி இலக்கியம் **விடை: அ) சங்க இலக்கியம்**

**6. சதம் என்றால்............ என்று பொருள்**
அ) ஐம்பது ஆ) நூறு
இ) இருநூறு ஈ) ஆயிரம் **விடை: ஆ) நூறு**

**7. சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் ..............**
அ) உமறுப்புலவர் ஆ) வீரமாமுனிவர்
இ) ஆறுமுக நாவலர் ஈ) செய்குதம்பிப் பாவலர் **விடை: ஈ) செய்குதம்பிப் பாவலர்**

**8. செய்குதம்பிப் பாவலர் பிறந்த ஊர் ...............**
அ) மதுரை மாவட்டத்தில் உள்ள திருமங்கலம்
ஆ) சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மானாமதுரை
இ) தேனி மாவட்டத்தில் உள்ள கம்பம்
ஈ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இடலாக்குடி
**விடை: ஈ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இடலாக்குடி**

**9. செய்குத்தம்பி பாவலர் ............... வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்றார்.**
அ) பன்னிரண்டு ஆ) பதினான்கு
இ) பதினைந்து ஈ) பதினாறு **விடை: இ) பதினைந்து**

**10. கா.ப. செங்குத்தம்பிப்பாவலர் சதாவதானம் நிகழ்த்திய ஆண்டு..............**

அ) 1905 ஆ) 1916
இ) 1936 ஈ) 1907 **விடை: ஈ) 1907**

**11. சதாவதானி என்று பாராட்டுப் பெற்றவர்..............**

அ) மணவை முஸ்தபா ஆ) செய்குத்தம்பி பாவலர்
இ) பாரதியார் ஈ) உமறுப்புலவர்

**விடை: ஆ) செய்குத்தம்பி பாவலர்**

**பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு(12, 13, 14, 15) விடைதருக.**

***"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி***
***மருளை அகற்றி மதிக்கும் தெருளை***
***அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்***
***பொருத்துவதும் கல்வியென்றே போற்று"*** **(பெ.ஆ.க – 4)**

**12. பாடல் இடம்பெற்ற நூல்.............**

அ) நீதிவெண்பா ஆ) புறநானூறு
இ) வெற்றி வேற்கை ஈ) கொன்றை வேந்தன்

**விடை: அ) நீதி வெண்பா**

**13. பாடலின் சீர் மோனைச் சொற்கள் .............**

அ) அருளை, அருத்துவதும் ஆ) அருளை, அறிவை
இ) அகற்றி, அருந்துணையாய் ஈ) அறிவை, அகற்றி

**விடை: ஆ) அருளை, அறிவை**

**14. அருந்துணையாய் – இச்சொல்லைப் பிரித்தால் .................**

அ) அருந்துணை + யாய் ஆ) அருந்து + துணையாய்
இ) அருமை + துணையாய் ஈ) அரு + துணையாய்

**விடை : இ) அருமை + துணையாய்**

**15. உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது.............**

அ) அன்பு ஆ) கல்வி
இ) மயக்கம் ஈ) செல்வம்

**விடை: ஆ) கல்வி**

---

**பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)**

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.**

**விடை :**

★ "மயக்கம் அகற்றி அறிவைத் தெளிவாக்கு"
★ "கல்வியைக் கற்று அறிவைச் சீராக்கு"
★ " அறிவைத் திருத்தி வளமோடு வாழு"
★ "இறையருளைப் பெருக்கி உயிருக்கு இன்பம் சேர்ப்பது
கல்வி ! கல்வி ! கல்வியே !"

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. சதாவதானம் – பொருள் தருக.**

**விடை :**

★ சதம் என்றால் நூறு என்று பொருள்.
★ ஒருவர் பலர் முன்னிலையில் நூறு செயல்களை ஒரே நேரத்தில் செய்துகாட்டுவது சதாவதானம் ஆகும்.

**3. செய்குதம்பிப் பாவலர் – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ கன்னியாகுமரி மாவட்ட இடலாக்குடியில் 31.7.1874 இல் பக்கீர் மீரான் சாகிபுக்கும் அமீனா அம்மையாருக்கும் மகனாய்ப் பிறந்தவர்.

★ பதினைந்தாம் வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றல் பெற்றவர்.

★ அந்தாதி, சிலேடை, யமகம் பாடும் வல்லமை பெற்றவர்.

★ "சதாவதானி" என்னும் பாராட்டுப் பெற்றவர்.

★ சீறாப்புராணத்திற்கு சீரிய உரை எழுதியுள்ளார்.

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள் ? (பெ.ஆ.க – 1)**

**விடை :**

★ அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி, அறியாமையை அகற்றி, அறிவுக்கு தெளிவு தந்து, உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே ஆகும். எனவே அதைப் போற்றிக் கற்க வேண்டும்.

★ ஒருவன் செல்வம் இல்லாதவனாக மிகவும் ஏழ்மை நிலையை அடைந்து பிச்சை எடுக்கும் நிலை ஏற்பட்டாலும் அந்த நிலையிலும் கல்வி கற்க வேண்டும்.

★ இவ்வளவு சிறப்பு வாய்ந்த கல்வி வழியே நீ செல்லவேண்டும் என் பள்ளித் தோழனே !

"ஒருமைக்கண் தான் கற்றகல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து" என்கிறார் திருவள்ளுவர்

## கற்பவை கற்றபின்

**1. எதிர்காலத்தில் நீங்கள் கற்கவிரும்பும் கல்வி குறித்து வகுப்பறையில் கலந்துரையாடிக் குறிப்புரை உருவாக்குக.**

**விடை:**

**மாணவர்கள்:** வணக்கம் ஐயா !

**ஆசிரியர் :** வணக்கம். அமருங்கள். மாணவர்களே ! இன்றைய வகுப்பில் எதிர்காலத்தில் நீங்கள் பயில விரும்பும் கல்வி குறித்து கலந்துரையாடுவோமா ?

**மாணவர்கள்:** சரிங்க ஐயா.

**காசி விஷால்:** ஐயா. நான் எதிர்காலத்தில் எம்.பி.பி.எஸ் படிக்கப் போகிறேன் ! கல்வி மட்டுமே ஒரு மனிதனை முழுமையாக்குகிறது. ஆகையால் மருத்துவராகி, கிராம மக்களுக்கு இலவசமாக மருத்துவ உதவி செய்வதற்காகவே எம்.பி.பி.எஸ் படிப்பைத் தேர்வு செய்தேன்.

**ஆசிரியர் :** நன்று !மிக்க மகிழ்ச்சி

**கபிலன் :** ஐயா நான் படித்து இராணுவ வீரராகப் போகிறேன் ! நம் தாய்நாட்டைக் காப்பது நமது கடமைதானே ஐயா !

**ஆசிரியர் :** பாராட்டுக்கள் !நன்றி. நாட்டின் மீது நீ கொண்டுள்ள பற்று போற்றுதற்குரியது.

**பாலா :** நான் எங்கப்பாவைப் போல ஆசிரியராகி அறிவிற் சிறந்த மாணவர்களை உருவாக்க வேண்டும் என்பதே எனது ஆசை ஐயா !

**ஆசிரியர் :** உங்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் !

**குறிப்புரை :**

நீங்கள் விரும்பிய கல்வியைச் சிறப்பாக கற்று மக்கள் வாழ்விலும், உங்கள் வாழ்விலும் அறிவொளி ஏற்றுங்கள். அப்பொழுதுதான் நாட்டால் நீங்களும் உங்களால் நாடும் வளம் பெறும். உங்களின் உயர்வான எண்ணங்களால் மேன்மையடைந்து வாழ்க்கையில் வெற்றி பெறுங்கள்.

**இயல் 5. இ**

## கவிதைப் பேழை

## திருவிளையாடற் புராணம் – பரஞ்சோதி முனிவர்

**(செய்யுள்)**

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் .................. இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ..............**

அ) அமைச்சர், மன்னர் ஆ) அமைச்சர், இறைவன்
இ) இறைவன், மன்னன் ஈ) மன்னன், இறைவன்

**விடை : ஈ) மன்னன், இறைவன்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. கேள்வியினான் – என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு............(அ.மா.வி)**

அ) வினையாலணையும் பெயர் ஆ) தொழிற்பெயர்
இ) வினைத்தொகை ஈ) பண்புத் தொகை

**விடை: அ) வினையாலணையும் பெயர்**

**3. சொல்லோடு பொருளைப் பொருத்துக.**

**அ) தார் – 1) உறவினர்**
**ஆ) முனிவு – 2) கடம்பவனம்**
**இ) தமர் – 3) சினம்**
**ஈ) நீபவனம் – 4) மாலை**

அ) 1, 4, 3, 2 ஆ) 3, 1, 2, 4
இ) 1, 2, 3, 4 ஈ) 4., 3, 1, 2 **விடை: ஈ) 4., 3, 1, 2**

**4. "வீழ்ந்து"– என்பதன் இலக்கணக் குறிப்பு யாது ?**

அ) பெயரெச்சம் ஆ) பண்புத்தொகை
இ) வினையெச்சம் ஈ) வினைமுற்று **விடை: இ) வினையெச்சம்**

**5. "அகத்துவகை"– பிரித்தெழுதக் கிடைப்பது................**

அ) அக + துவகை ஆ) அகத் + துவகை
இ) அகத்து + உவகை ஈ) அகத்து + வகை **விடை: இ) அகத்து + உவகை**

**6. திருவிளையாடற் புராணத்தில் வரும் பாண்டிய மன்னர் யார் ?**

அ) குலசேகரப் பாண்டியன் ஆ) பாண்டியன் நெடுஞ்செழியன்
இ) குசேலப் பாண்டியன் ஈ) குணசீலப் பாண்டியன் **விடை: இ) குசேலப் பாண்டியன்**

**7. "மூரித்தீம் தேன் வழிந்து ஒழுகு தாரானைக் கண்டு"– இதில் "தாரானை" என்னும் சொல் குறிப்பது ..............**

அ) இறைவன் ஆ) பாண்டியன்
இ) புலவர் ஈ) கபிலர் **விடை: ஆ) பாண்டியன்**

**8. கலைகளை முழுவதும் உணர்ந்த கபிலரின் நண்பன் ...............**

அ) குசேலப் பாண்டியன் ஆ) அதிவீரராம பாண்டியன்
இ) பரஞ்சோதி முனிவர் ஈ) இடைக்காடனார் **விடை: ஈ) இடைக்காடனார்**

**9. "நகுதார் வேம்பன்"– எனக்குறிப்பிடப்படுபவர் ..........**

அ) இறைவன் ஆ) இடைக்காடனார்
இ) குசேலப் பாண்டியன் ஈ) கபிலர் **விடை: இ) குசேலப் பாண்டியன்**

**10. இடைக்காடனாரை அவமதித்த மன்னன் ................**
அ) நெடுஞ்செழியன் ஆ) குசேலப் பாண்டியன்
இ) சுந்தரப்பாண்டியன் ஈ) குணசீலப்பாண்டியன் **விடை: ஆ) குசேலப் பாண்டியன்**

**11. "தமிழ் அறியும் பெருமானே"– எனப் புலவர் யாரை அழைத்தார் ?**
அ) மன்னரை ஆ) கபிலரை
இ) இடைக்காடரை ஈ) இறைவனை **விடை: ஈ) இறைவனை**

**12. "சொல் பொருளான உன்னையும் இகழ்ந்தனன்"– எனக் கூறியது.........**
அ) இறைவனிடம் கபிலர் ஆ) இறைவனிடம் இடைக்காடனார்
இ) இறைவனிடம் குசேலப் பாண்டியன் ஈ) இறைவனிடம் பரஞ்சோதி முனிவர்
**விடை: ஆ) இறைவனிடம் இடைக்காடனார்**

**13. திரு– ஆலவாயைச் சிவபெருமான் என்னவென்று குறிப்பிடுகிறார் ?**
அ) காட்டு வனம் ஆ) கடம்பவனம்
இ) பாலைவனம் ஈ) சோலைவனம் **விடை: ஆ) கடம்பவனம்**

**14. மன்னரின் பிழையை உணர்ந்த இறைவன் சென்று தங்கியக் கோயில் ...............**
அ) வடதிரு ஆலவாயில் ஆ) கடம்பவனம்
இ) மதுரை ஈ) சிதம்பரம் **விடை: அ) வடதிரு ஆலவாயில்**

**15. "இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ யான் அறியேன்"– இதில் "யான்" என்பது யாரைக் குறிக்கும் ?**
அ) கபிலன் ஆ) இடைக்காடனார்
இ) பாண்டியன் ஈ) இறைவன் **விடை: இ) பாண்டியன்**

**16. "நீப வனத்தை நீத்து ஒரு போதேனும் நீங்குவம் அல்லேம்" – என்று கூறியவர்..................**
அ) குலசேகரபாண்டியன் ஆ) இறைவன்
இ) இடைக்காடனார் ஈ) கபிலர் **விடை : ஆ) இறைவன்**

**17. "விண்ணிடை மொழிந்த மாற்றம் மீனவன் கேட்டு" – இதில் "மீனவன்" என்பது யாரைக் குறிக்கிறது ?**
அ) கபிலர் ஆ) சேரன்
இ) பாண்டிய மன்னன் ஈ) இடைக்காடர் **விடை: இ) பாண்டிய மன்னன்**

**18. "சிறியோர் குற்றம் பொறுப்பது பெருமை"– என்று .............., .............. கூறினார்.**
அ) கபிலரிடம் இடைக்காடனார் ஆ) கபிலரிடம் குசேலப்பாண்டியன்
இ) இடைக்காடனாரிடம் இறைவன் ஈ) இறைவனிடம் குசேலப்பாண்டியன்
**விடை: ஈ) இறைவனிடம் குசேலப் பாண்டியன்**

**19. முரசுக் கட்டிலில் அறியாது கண்ணுறங்கியவர்............. கவரி வீசியவர்..............**
அ) கபிலர், கரிகாலன்
ஆ) குசேல பாண்டியன், இடைக்காடனார்
இ) மோசிக்கீரனார், பெருஞ்சேரல் இரும்பொறை
ஈ) மோசிக்கீரானார், குசேலபாண்டியன்
**விடை: இ) மோசிக்கீரனார், பெருஞ்சேரல் இரும்பொறை**

**20. "மாசற விசித்த வார்புறு வள்பின்"– என பாமழை பொழிந்தவர் ...........**
அ) மோசிகீரனார் ஆ) பரஞ்சோதி முனிவர்
இ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார் **விடை: அ) மோசிகீரனார்**

**21. திருவிளையாடற் புராணத்தை இயற்றியவர் ..............**
அ) சேக்கிழார் ஆ) திருமூலர்
இ) திருநாவுக்கரசர் ஈ) பரஞ்சோதி முனிவர் **விடை: ஈ) பரஞ்சோதி முனிவர்**

**22. திருவிளையாடற் புராணம் ............... காண்டங்களை உடையது.**
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: ஆ) மூன்று**

**23. திருவிளையாடற் புராணம் ............... படலங்களைக் கொண்டது.**
அ) 54 ஆ) 74
இ) 64 ஈ) 86 **விடை: இ) 64**

**24. பரஞ்சோதி முனிவர் பிறந்த ஊர் ..........**
அ) நாமக்கல் ஆ) மயிலாடுதுறை
இ) திருமறைக்காடு ஈ) மதுரை **விடை: இ) திருமறைக்காடு**

**25. பரஞ்சோதி முனிவர் .................. நூற்றாண்டைச் சேர்ந்தவராவார்.**
அ) பன்னிரண்டாம் ஆ) பதினான்காம்
இ) பதினேழாம் ஈ) பதினெட்டாம் **விடை: இ) பதினேழாம்**

**26. "மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி" – என்னும் நூலைஇயற்றியவர் ..........**
அ) இடைக்காடனார் ஆ) கபிலர்
இ) மோசிக்கீரனார் ஈ) பரஞ்சோதி முனிவர் **விடை: ஈ) பரஞ்சோதி முனிவர்**

---

பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்"**
**– இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார் ? காதல்மிகு கேண்மையினான் யார் ? (பெ.ஆ.க –2)**

**விடை :**

★ கழிந்த பெரும் கேள்வியினான் – மன்னன் குசேல பாண்டியன்
★ காதல்மிகு கேண்மையினான் – புலவர் இடைக்காடனார்

---

**2. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| அமர்ந்தான் | – | அமர் + த் (ந்) + த் + ஆன் |
| அமர் | – | பகுதி |
| த் | – | சந்தி |
| த் | – | த் (ந்) ஆனது விகாரம் |
| த் | – | இறந்தகால இடைநிலை |
| ஆன் | – | ஆண்பால் வினைமுற்று விகுதி |

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**3. இடைக்காடனாரை மன்னன் எவ்வாறு அவமதித்தான் ?**

**விடை :**

★ இடைக்காடனார் பாடிய பாடலைப் பொருட்படுத்தாமல், சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் மன்னன் அவமதித்தான்.

---

**4. இடைக்காடனார் இறைவனிடம் சினந்து கூறியது யாது ?**

**விடை :**

★ இடைக்காடனார் இறைவனிடம் "பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினந்து கூறினார்.

---

**5. இறைவன் இடைக்காடனாரின் சொல்கேட்டு எங்கே தங்கினார் ?**

**விடை :**

★ இறைவன் ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலை விட்டு வெளியேறி வடக்கே வையை ஆற்றின் தென்பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்குச் சென்றுத் தங்கினார்.

---

**6. மன்னனிடம், இடம்பெயர்ந்ததற்குக் காரணமாக இறைவன் கூறியது என்ன ?**
**விடை :**

★ " இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. புலவர் மீது கொண்ட மிகுந்த அன்பினால் இங்கு வந்தோம்" என்று இடம்பெயர்ந்ததற்கான காரணத்தை இறைவன் மன்னனிடம் கூறினார்.

---

**7. மன்னன் இறைவனிடம் தன் குற்றத்தைப் பொறுக்க எவ்வாறு வேண்டினான் ?**
**விடை :**

★ இறைவன் இடம்பெயர்ந்ததை அறிந்த மன்னன், தன் குற்றத்தைப் பொறுக்க, "உமையம்மையை தன் ஒரு பாகத்திற்கொண்ட பரம்பொருளே ! புண்ணியனே ! சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவர்க்குப் பெருமையல்லவா !" என்று வேண்டினான்

---

**8. குசேலப்பாண்டியன் புலவர்களிடம் வேண்டியது யாது ?**
**விடை :**

★ பாண்டியன் புலவர்களைப் பணிந்து வணங்கி, "புண்ணிய வடிவான புலவர்களே ! நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று வேண்டினான்.

---

**9. பரஞ்சோதி முனிவர் இயற்றிய நூல்கள் யாவை ?**
**விடை :**

★ திருவிளையாடற்புராணம், வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி முதலியன பரஞ்சோதி முனிவர் இயற்றிய நூல்களாகும்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன் ? விளக்கம் தருக. (பெ.ஆ.க – 3)**
**விடை :**

★ பாண்டிய மன்னன், இடைக்காடனார் பாடிய பாடலைத் தலை அசைத்துச் சுவைக்காமல் இகழ்ந்த குற்றம் புரிந்தான்.

★ இதனை இறைவனிடம் இடைக்காடனார் முறையிட அதற்காகக் கடம்பவனக் கோயிலை விட்டு வெளியேறி, வையை ஆற்றின் தென்பக்கத்தில் கோவிலை உருவாக்கி அங்கு தங்கினார்.

★ இதனை அறிந்த பாண்டிய மன்னன் தன் குற்றம் உணர்ந்து இறைவனிடம் பொறுக்க வேண்டினான்.

★ அரண்மனை திரும்பி, இடைக்காடனார் புலவருக்கு மங்கல ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் அமர்த்திச் சிறப்புச் செய்தான். மேலும் புலவர்களிடமும் மன்னிக்குமாறு வேண்டினான் .

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. மன்னன் இடைக்காடனாருக்கு எவ்வாறு மரியாதை செய்தான் ?**
**விடை :**

★ குற்றம் உணர்ந்த பாண்டிய மன்னன் தனது மாளிகையை அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை, பூரணகும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்தான்.

★ போற்றத்தக்க ஒளிகளையுடைய மணிகள் மற்றும் விளக்குகளால் ஒளிரச் செய்தான்.

★ அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

★ மேலும் புலவர்களைப் பார்த்து, "புண்ணியவடிவான புலவர்களே ! நான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கினான்.

★ புலவர்கள் "மன்னா, நீ கூறிய அமுதம் போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது" என்று கூறி வாழ்த்தினர்.

---

## பகுதி – IV (ஐந்து மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. இறைவன், புலவன் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.**

**(பெ.ஆ.க – 1)**

**விடை :**

**இடைக்காடனார் இறைவனிடம் முறையிடுதல் :**

★ இடைக்காடனார் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி எழுந்து, "தமிழறியும் பெருமானே! அடியார்க்கு நல்நிதி போன்றவனே! திருஆலவாயிலில் உறையும் இறைவனே! அழகிய வேப்ப மலர் மாலையை அணிந்த பாண்டியன், பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்" என்றார்.

★ "பாண்டிய மன்னன் என்னை இகழவில்லை. சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறிச்சென்றார். இடைக்காடனாரின் சொல் வேற்படை போல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.

**இறைவன் திருக்கோவிலை விட்டு வெளியேறுதல் :**

★ இறைவன் ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் திருக்கோவிலை விட்டு வெளியேறி வடக்கே வையை ஆற்றின் தென்பக்கத்தே ஒரு திருக்கோவிலை ஆக்கி அங்குச் சென்று இருந்தார்.

**பாண்டிய மன்னன் இறைவனிடம் வேண்டுதல் :**

★ "இறைவனே என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால்,காட்டில் உள்ள விலங்குகளால் இத்தமிழ் நாட்டில் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா ? மறையவர் நல் ஒழுக்கத்தில் குறைந்தனரோ ? தவமும் தருமமும் சுருங்கியதோ ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ ? எமது தந்தையே யான் அறியேன்" என்று பாண்டிய மன்னன் இறைவனிடம் வேண்டினான்.

**வானிலிருந்து ஒலித்த இறைவனின் குரல் :**

★ " சிறந்த குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த கடம்பவனத்தை விட்டு ஒருபோதும் நீங்க மாட்டோம். இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பினால் இவ்வாறு இங்கு வந்தோம்".

வானிலிருந்து ஒலித்த இறைவன் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன்:

★ "உமையை ஒரு பாகத்திற்கொண்ட மேலான பரம்பொருளே !, புண்ணியனே !, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவர்களுக்குப் பெருமையல்லவா ?" என்று தன் குற்றத்தைப் பொறுக்க வேண்டி போற்றினான்.

**மன்னன், இடைக்காடனார்க்கு மரியாதை செய்தல் :**

★ மன்னனது மாளிகை அன்றலர்ந்த மலர்களால் தொடுத்த மாலை, பூரணகும்பம், கொடி ஆகியவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது; போற்றத்தக்க ஒளிகளையுடைய மணிகள் பதிக்கப்பெற்றது. அங்குள்ள புலவர்கள் சூழ அறிவை அணிகலனாகப் பூண்ட இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தினான்.

**மன்னன் புலவரிடம் வேண்டுதல் :**

★ பாண்டியன், "புண்ணியவடிவான புலவர்களே! நான் இடைக்காட்டனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்று பணிந்து வணங்கினான். நுண்ணிய கேள்வியறிவுடைய புலவர்களும், "மன்னா, நீ கூறிய அமுதம் போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது" என்றனர்.

**மொழிப்பயிற்சி :**

**அ) சொல்லும் பொருளும்**

| | | | |
|---|---|---|---|
| **கேள்வியினான்** | – நூல் வல்லான் | **தமர்** | – உறவினர் |
| **கேண்மையினான்** | – நட்பினன் | **நீபவனம்** | – கடம்பவனம் |
| **தார்** | – மாலை | **மீனவன்** | – பாண்டிய மன்னன் |
| **முடி** | – தலை | **கவரி** | – சாமரை |
| **முனிவு** | – சினம் | **நுவன்ற** | – சொல்லிய |
| **அகத்து உவகை** | – மன மகிழ்ச்சி | **என்னா** | – அசைச்சொல் |

**ஆ) இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| **கேள்வியினான்** | – வினையாலணையும் பெயர் |
| **காடனுக்கும் கபிலனுக்கும்** | – எண்ணும்மை |
| **வீழ்ந்து, எழுந்து, தொடுத்து** | – வினையெச்சங்கள் |
| **இகழ்தல்** | – தொழிற்பெயர் |
| **ஊறுபாடு** | – வினைத்தொகை |
| **பண்ணிய, உணர்த்த, கழிந்த, மொழிந்த, புனைந்த** | – பெயரெச்சங்கள் |
| **பெருந்தகை** | – பண்புத்தொகை |

**இ) பகுபத உறுப்பிலக்கணம் :**

**1. தணிந்தது** – **தணி + த் (ந்) + த் + அ + து**
**(பெ.ஆ.க – 1)**

| | |
|---|---|
| தணி | – பகுதி |
| த் | – சந்தி |
| த் (ந்) | – ந் ஆனது விகாரம் |
| த் | – இறந்தகால இடைநிலை |
| அ | – சாரியை |
| து | – படர்க்கை வினைமுற்று விகுதி |

**2. பொழிந்த** – பொழி + த் (ந்) + த் + அ

| | |
|---|---|
| பொழி | – பகுதி |
| த் | – சந்தி |
| த் (ந்) | – ந் ஆனது விகாரம் |
| த் | – இறந்தகால இடைநிலை |
| அ | – பெயரெச்ச விகுதி |

**ஈ) பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

***ஓங்கு தண் பணைசூழ் நீப வனத்தை நீத்து ஒரு போதேனும்***
***நீங்குவம் அல்லேம் கண்டாய் ஆயினும் நீயும் வேறு***
***தீங்கு உளை அல்லை காடன் செய்யுளை இகழ்தலாலே***
***ஆங்கு அவன் இடத்தில் யாம் வைத்த அருளினால் வந்தேம் என்னா.***

**1) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?**
**விடை :** திருவிளையாடற் புராணம்

**2) இப்பாடலின் ஆசிரியர் யார் ?**
**விடை :** பரஞ்சோதி முனிவர்

**3) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி, எதுகைகளை எடுத்தெழுதுக.**
**விடை :** ஒங்கு – நீங்கு – தீங்கு – ஆங்கு

**4) நீ பவனம், என்னா – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே**
**விடை :** கடம்பவனம், அசைச்சொல்

**5) வைத்த – இலக்கணக்குறிப்பு தருக.**
**விடை :** பெயரெச்சம்.

**6) இப்பாடலில் வந்துள்ள மோனைச் சொற்களை எழுதுக.**
**விடை :** இகழ்தலாலே, இடத்தில்

**கற்பவை கற்றபின்**

**இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தை நாடகமாக்கி வகுப்பில் நடித்துக்காட்டுக.**

விரிவானம்

இயல் 5. ஈ

## புதிய நம்பிக்கை

– கமலாயன்

(துணைப்பாடம்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களின் குரலாக இருந்த........... நாட்டு கறுப்பினப் பெண்மணி மேரி மெக்லியோட்பெத்யூன்**

அ) ஆப்பிரிக்க ஆ) அமெரிக்க
இ) கென்ய ஈ) ரஷ்ய **விடை: ஆ) அமெரிக்க**

**2. மேரி மெக்லியோட்பெத்யூன் என்ற கல்வியாளரின் வாழ்க்கையை "உனக்குப் படிக்கத் தெரியாது"என்ற தலைப்பில் நூலாகப் படைத்தவர்...........**

அ) சா. கந்தசாமி ஆ) எழில் முதல்வன்
இ) ச. முகம்மது ரஃபி ஈ) கமலாலயன் **விடை: ஈ) கமலாலயன்**

**3. கமலாலயனின் இயற்பெயர்...........**

அ) வே.குணசேகரன் ஆ) பூமணி
இ) சோ.தர்மன் ஈ) கு.அழகிரிசாமி **விடை: அ) வே.குணசேகரன்**

**4. வயதுவந்தோர் கல்வித்திட்டத்தில் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றியவர்...........**

அ) எழில் முதல்வன் ஆ) கி. ராஜநாராயணன்
இ) கமலாலயன் ஈ) வேல ராமமூர்த்தி **விடை: இ) கமலாலயன்**

**5. "கொற்கைக் கோமான் கொற்கையும் பெருந்துறை" எனக் குறிப்பிடும் நூல்...........**

அ) ஐங்குறுநூறு ஆ) நற்றிணை
இ) பத்துப்பாட்டு ஈ) மணிமேகலை **விடை: அ) ஐங்குறுநூறு**

**6. கொற்கை அமைந்துள்ள மாவட்டம்...........**

அ) சென்னை ஆ) மதுரை
இ) வேலூர் ஈ) தூத்துக்குடி **விடை: ஈ) தூத்துக்குடி**

---

### பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. "கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே " என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க. (அ.மா.வி) (பெ.ஆ.க–2)**

**விடை :**

**முன்னுரை :**

வரலாற்றில் மனிதர்கள் வருகிறார்கள் ; சிலர் வரலாறாகவே இருக்கிறார்கள். இவர்கள் பாதையே இல்லாத இடத்தில் தங்கள் காலடிகளால் ஒற்றையடிப் பாதையிட்டு அதையே பெருஞ்சாலையாக ஆக்குகிறார்கள். பலரின் பயணங்களுக்கு வழிவகுக்கிறார்கள் ; கல்வி அறிவற்ற இருட்டு சமூகத்தில் ஒற்றைச் சுடராக வந்து ஓராயிரம் சுடர்களை ஏற்றுகிறார்கள். இவர்கள் வாழ்க்கையை அறிவது கல்வி வரலாற்றை அறிவதாகும்.

உலகெங்கும் மூலை முடுக்குகளில் உள்ள ஒடுக்கப்பட்ட கல்வி மறுக்கப்பட்ட சமூகங்களின் ஒரு குரலாக இருந்தவர் அமெரிக்கக் கறுப்பினப் பெண்மணி, மேரி மெக்லியோட் பெத்யூன்.

இம் மாபெரும் கல்வியாளர்களின் வாழ்க்கையை "உனக்குப் படிக்கத் தெரியாது" என்ற தலைப்பில் நூலாகப் படைத்துள்ளார் கமலாலயன்.

**மேரி மெக்லியோட் பெத்யூன் குழந்தைப் பருவம் :**

ஒவ்வொரு நாளும் காலை ஐந்து மணி அவர்கள் விழித்து எழும் நேரம். அவர்களுக்குப் பகல் முழுவதும் பருத்திக் காட்டில் வேலைகள் இருக்கும். ஒரு நாளில் ஒரே ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்க விடக்கூடாது என்று நினைக்கும் குடும்பம் அது. சாம், பாட்ஸி தம்பதியரின் இளைய மகள் மேரி.

மேரிக்கு அளவற்ற மகிழ்ச்சி தரும் தருணம் மாலை நேரத்தில் குடும்பத்தில் உள்ள அனைவருடன் ஒன்றாகச் சேர்ந்து பாடுவதும், பிரார்த்தனை செய்யும் மாலை நேரந்தான்.

**மேரியின் குடும்பமும் இளமைக்கால வாழ்க்கையும் :**

மேரி தனது அம்மா பாட்ஸியுடன் புழுதி படிந்த சாலையில் வெள்ளை முதலாளிகளின் வீடுகளை நோக்கி இருவரும் நடந்தனர். அந்த மாளிகை வீடு பென்வில்ஸனுடையது. பாட்ஸியும் மேரியும் பின் கதவுப்பக்கமாகச் சென்றனர். கருப்பின மனிதர்களுக்கு முன்புற வாசலில் அனுமதி கிடையாது. கதவு திறக்கப்பட்டது. பாட்ஸ் வீட்டினுள் சென்றுவிட்டார். மேரி வெளியிலேயே இருந்தார்.

**மேரி அவமானப்படுத்தப்படுதல் :**

மேரியின் அம்மா பாட்ஸி வீட்டினுள் சென்றவுடன் சற்று தூரத்தில் மற்றொரு சிறிய வீடு இருந்ததை மேரி கண்டாள். அது வெள்ளைக்காரக் குழந்தைகள் சும்மா ஓடி விளையாடுவதற்கென்றே கட்டப்பட்ட ஒன்று. "ஹலோ மேரி உள்ளே வர விரும்புகிறாயா ?" ஒரு வெள்ளைக்கார சிறுமி கேட்டாள். மேரி தயங்கினாள். வீட்டின் அழகைப் பார்த்தவுடன் வீட்டிற்குள் செல்லவேண்டுமென ஆவல் ஏற்பட்டது.

வீட்டிற்குள் சென்று அங்கிருந்த அழகுமிக்க விளையாட்டுப் பொருட்களையெல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்தாள். வெள்ளைக்காரச் சிறுமி "எங்களோடு சேர்ந்து விளையாட விரும்புகிறாயா ?"

"ஆமாம்" என மேரி பதில் சொன்னாள். வீட்டினுள் விளையாடியபடி சுற்றிவந்தபோது, ஓர் ஓரத்தில் கிடந்த சிறிய மேசையும், அதன் மீதிருந்த ஒரு பொருளும் மேரியின் கவனத்தை ஈர்த்தன.

அந்தப் பொருள் பைண்டிங் செய்யப்பட்ட மேலட்டை ஓவியத்தையும் அச்சிடப்பட்ட புத்தக தலைப்பையும் பார்த்து ஆர்வமுற்ற மேரி அதைத் தன் கையில் வைத்துக்கொண்டாள்.

அதைப் புரட்டத் துவங்கியபோது வில்ஸனின் இரு பெண் குழந்தைகளில் சிறுமியாக இருந்தவள், "புத்தகத்தை என்னிடம் கொடு நீ இதை எடுக்கக் கூடாது.......! உன்னால் படிக்க முடியாது.....!" என்று மேரியிடமிருந்து புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டாள்.

முதலில் மேரிக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு "சும்மா, அதைப் பார்த்துவிட்டு தருகிறேன். நான் ஒன்றும் அதைச் சேதப்படுத்திவிடமாட்டேன். பத்திரமாக வைத்திருப்பேன்"

"எனக்கு அது எப்படித் தெரியும் ? புத்தகங்கள் படிக்க முடியாதவர்களுக்காக இல்லை...! தெரிந்து கொள்.....!"

"அப்படியானால் உன்னால் அதைப் படிக்க முடியுமா.... ?" மேரி கேட்டாள்.

"நிச்சயமாக நான் படிக்க முடியும்..." மேலும் அந்தச் சிறுமி விளையாட்டுச் சாமான்களையும் மேரியிடமிருந்து பிடுங்கினாள். மேரி மனம் துவண்டு நட்புணர்வு அற்ற அந்த இடத்திலிருந்து உடனே வெளியேறினாள்.

**திருமதி வில்ஸன் என்னும் சுடரொளி :**

எப்படி, எப்போது, நான் வாசிக்கக் கற்றுக்கொள்ளப்போகிறேன் ? நான் படிக்க விரும்புகிறேன். நான் படிக்க விரும்புகிறேன் என்ற வார்த்தைகள் பதினொரு வயதான மேரி கடவுளிடம் கேட்ட கேள்விகளுக்குத் திருமதி வில்ஸன் என்ற பெண்மணியின் வார்த்தைகள் வழியாகப் பதில் கிடைத்தது.

மேரி உன்னைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும். பருத்தி எடுப்பு வேலைகள் முடிந்த உடனேயேமேயேஸ்வில்லிக்கு வரவேண்டும். சரியா....... மேரிக்குட்டி....... வருவாய்தானே என்று திருமதி வில்ஸனுடைய உதடுகள் உச்சரித்த வார்த்தைகள் மேரியை புதிய மனுசியாக உணர வைத்தது.

**புதிய நம்பிக்கை / பட்டமளிப்பு :**

அதிகாலையில் ஐந்து மணிக்கெல்லாம் மேயேஸ்வில்லிக்குத் தன் அப்பாவுடன் புறப்படத் தயாராகிவிடுகிறாள். ஐந்து மைல் தொலைவில் அவளது பள்ளிக்கூடம் இருந்தது. தினமும் புழுதிபடிந்த சாலையில் நடந்தாள் கல்வி கற்பதற்கு. மேரி தான் பெற்ற புதிய கல்வியினால் முக்கியமான ஒரு நபராக மாறிக்கொண்டிருந்தாள். நிறம் பாகுபாடின்றி இருவேறு மக்களும்,

சம்பளக் கணக்குகளையும், கொடுக்கல் வாங்கல் குளறுபடி எது என்றாலும் மேரியிடம் கொண்டுவந்தார்கள்.

மேரி புதிது புதிதாய்க் கற்றுக்கொண்டிருந்தாள். சில ஆண்டுகளுக்குப் பிறகு மேரிக்குப் பட்டமளித்தல் விழா நடைபெற்றது. மேயேஸ்வில்லியின் மக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருந்தது. மதிப்புமிக்க வெள்ளைத்தாள் சுருள்களில், "இந்தப் பட்டம் பெறும் மாணவர்கள் எழுதவும் படிக்கவும் கூடியவர்கள்" என்று எழுதப்பட்டிருந்தது. மேரியின் பெயரைச் சொல்லி அழைத்தபோது, தன்னுடைய டிப்ளொமாவை வாஞ்சையுடன் பெற்றுக்கொண்டு அதைப் பூப்போல ஏந்தித் தன் நெஞ்சோடு கண்ணீர் மல்க அணைத்துக்கொண்டாள்.

**கல்லூரிக்குச் செல்லுதல் :**

மேரிஜேன் இப்போது நீ என்ன செய்யப் போகிறாய் என்றார் திருமதி வில்சன் மேரியைத் தோளோடு அணைத்தபடி. ஞானம் பெற்ற அந்தக் குழந்தை தனக்குத் தெரியவில்லை என்றது.

கல்லூரிக்குச் செல்லவேண்டிய மேரி சில நாட்கள் பருத்தி வயல்களுக்குச் சென்றுகொண்டிருந்தாள். ஒரு நாள் திருமதி.வில்ஸன் மேரியிடம், "மேற்பகுதியில் வாழ்கின்ற வெள்ளைக்கார பெண்மணி ஒரு கறுப்பினக் குழந்தையின் படிப்பிற்காகப் பணம் அனுப்பியிருக்கிறார். அதைப்பெறுவதற்கு நீதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாய்" என்றார்.

மேரி படிப்பிற்காக நகரத்திற்குப் போகவேண்டும் தயாராயிரு என்றார் திருமதி. வில்ஸன்

**காலமறிந்து உதவி செய்த அண்டை வீட்டுக்காரர் :**

நான் மேல்படிப்பிற்காக நகரத்திற்குப் போகப்போகிறேன், பக்கத்து வீடுகளில் எல்லாம் ஓடிச் ஓடிச் சொன்னாள் மேரி. புறப்படவேண்டிய நாளும் நேரமும் வந்தது. கூடவே அண்டை வீட்டுக்காரரின் வாகனமும் வந்தது.

இரயிலுக்கு நேரமாகிவிட்டது வண்டியில் ஏறுங்கள் என்றார் அண்டைவீட்டுக்காரர். சாம்,பாட்ஸி பாட்டி மற்றும் திருமதி வில்ஸன் என்ற உறவு மட்டும் இருந்த மேரிக்கு ரயில் பெட்டி போல் சொந்தங்கள் நீண்டு கொண்டே இருந்தனகல்லூரிக்கு வழியனுப்புவதற்கு.

இந்த உன்னதநிலை மேரி தான் பெற்ற கல்வியால் சாத்தியமானது.

**முடிவுரை :**

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றி வேற்கை. இந்த வரிகளுக்கு இலக்கணமாக மேரி திகழ்ந்தார்.

---

## கற்பவை கற்றபின்

**1. கல்வி வாய்ப்பற்ற சூழலில் ஒற்றைச் சுடராக வந்து ஒளியேற்றினார் மேரி மெக்லியோட் பெத்யூன், அதுபோலத் தமிழகத்தில் கல்வி வாய்ப்பற்றவர்களின் வாழ்வில் முதற்சுடர் ஏற்றியவர்களுள் யாரேனும் ஒருவர் குறித்த செய்திகளைத் தொகுத்துச் சில படங்களுடன் குறும்புத்தகம் ஒன்றை உருவாக்குக.**

**விடை :**



**பெயர்** : அயோத்திதாசர்
**இயற்பெயர் :** காத்தவராயன்
**பிறப்பு** : 20–05–1845
**பிறந்த ஊர் :** கோவையில் உள்ள அரசம்பாளையம்
**தந்தை** : கந்தசாமி

தன் ஆசிரியர் மீதுள்ள பற்றின் காரணமாக அவர் பெயராகிய அயோத்திதாசர் என்பதைத் தன் பெயராக மாற்றிக்கொண்டார்.

**கல்விப்பணி :** தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் அயோத்திதாசர் பிரம்மஞான சபை ஆல்காட் தொடர்பால், சென்னையில் முக்கியமான ஐந்து இடங்களில் பஞ்சமர் பள்ளிகள் எனத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசப் பள்ளிகளை நிறுவி சிறந்த கல்வியினை வழங்கினார்.

**சமூகப்பணி :** தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரும்பாடுபட்டவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி வசதியோடு கல்வி உதவித் தொகை கிடைக்கவும் ஏற்பாடு செய்தார். கல்வியில்

தேர்ச்சிபெற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு வேலையும் உள்ளாட்சி அமைப்புகளில் வாய்ப்பும் வழங்கச் செய்தார்.

**படைப்புகள் :** புத்தரது ஆதிவேதம், திருவாசக உரை, ஒருபைசாத் தமிழன் இதழ்.

---

**2. கல்விக்கண் திறந்தவர்களுக்கிடையில் கைவிடப்பட்ட பெண்களுக்காக உழைத்த தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி பற்றிய ஒரு தொகுப்பேட்டினை உருவாக்கி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

**விடை :**

**பெயர்** : முத்துலெட்சுமி

**பிறப்பு** : 30–07–1886

**பிறந்த ஊர் :** புதுக்கோட்டையில் உள்ள திருக்கோகர்ணம்

**பெற்றோர் :** நாராயணசாமி – சந்திராம்பாள்

**இறப்பு** : 22–07–1968

★ அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்கிற ஆணாதிக்கச் சமுதாயத்தை எதிர்த்துப் படித்த முதல் பெண் மருத்துவராவார்.

★ இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.

★ சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர்.

★ சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

★ தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், இருதாரத் தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச் சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர்.

★ அடையாற்றில் 1930 இல் அவ்வை இல்லம், 1952 இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

★ இவைகள் அனைத்தும் மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகள் ஆகும்.

---

கற்கண்டு

**இயல் 5. உ**

# வினா, விடை வகைகள், பொருள்கோள்
(இலக்கணம்)

## பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "இங்கு நகரப்பேருந்து நிற்குமா ?" என்று வழிப்போக்கர் கேட்பது ............ வினா. "அதோ, அங்கு நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ............ விடை. (அ.மா.வி)**

அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**விடை : இ) அறியா வினா, சுட்டுவிடை**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. வினாவின் வகைகள் ............**

அ) ஐந்து ஆ) ஆறு
இ) ஏழு ஈ) எட்டு **விடை : ஆ) ஆறு**

**3. அறியாமையால் வினவும் வினா.............**

அ) அறிவினா ஆ) ஐயவினா
இ) அறியாவினா ஈ) ஏவல்வினா **விடை : இ) அறியாவினா**

**4. இச்செயலைச் செய்தது மங்கையா ? மணிமேகலையா ? என வினவுதல் .............**

அ) ஐயவினா ஆ) அறிவினா
இ) அறியாவினா ஈ) ஏவல்வினா **விடை : அ) ஐயவினா**

**5. "மகள் தாயிடம் திண்பண்டம் வாங்க காசு தாருங்கள்" என வினவுவது ................**

அ) அறிவினா ஆ) ஏவல்வினா
இ) கொடைவினா ஈ) கொளல்வினா **விடை : ஈ) கொளல்வினா**

**6. விடை வகைகள் ................**

அ) ஆறு ஆ) எட்டு
இ) பத்து ஈ) ஏழு **விடை : ஆ) எட்டு**

**7. வெளிப்படை விடைகள் என்பன .............**

அ) ஏவல்விடை, உறுவது கூறல்விடை
ஆ) சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை
இ) உற்றது உரைத்தல்விடை, உறுவது கூறல்விடை
ஈ) இனமொழிவிடை, ஏவல்விடை **விடை : ஆ) சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை**

**8. மறுத்துக்கூறும் விடை ...............**

அ) வினா எதிர்வினாதல்விடை ஆ) சுட்டுவிடை
இ) மறைவிடை ஈ) இனமொழிவிடை **விடை : இ) மறைவிடை**

**9. கடைக்குப் போவாயா ? என்ற வினாவிற்கு "போவேன்" என்று கூறுவது............**

அ) மறைவிடை ஆ) நேர்விடை
இ) சுட்டுவிடை ஈ) உற்றது உரைத்தல்விடை **விடை : ஆ) நேர்விடை**

**10.நீ இதைச் செய்வாயா ? என்னும் வினாவுக்கு நீயே செய் என்று விடை கூறுவது................**

அ) இனமொழிவிடை ஆ) ஏவல்விடை
இ) மறைவிடை ஈ) நேர்விடை **விடை : ஆ) ஏவல்விடை**

**11.** பாடம் புரிந்ததா ? என்னும் வினாவிற்கு உனக்குப் புரிந்ததா ? என்று கேட்பது........... விடை

அ) ஏவல்விடை ஆ) நேர்விடை
இ) வினா எதிர்வினாதல்விடை ஈ) இனமொழிவிடை

**விடை : இ) வினா எதிர்வினாதல் விடை**

**12.** நீ விளையாடவில்லையா ? என்ற வினாவிற்கு "கால் வலிக்கும்" என்று விடை கூறுவது ............

அ) இனமொழி ஆ) எதிர்மறை விடை
இ) உறுவது கூறல் ஈ) உற்றது உரைத்தல் **விடை : இ) உறுவது கூறல்**

**13.** பாடத்தெரியுமா ? என்ற வினாவிற்கு "ஆடத்தெரியும்" எனக் கூறுவது............

அ) நேர்விடை ஆ) சுட்டுவிடை
இ) மறைவிடை ஈ) இனமொழிவிடை **விடை : ஈ) இனமொழிவிடை**

**14.** பொருள்கோளின் வகைகள்............

அ) எட்டு ஆ) ஆறு
இ) பத்து ஈ) ஐந்து **விடை : அ) எட்டு**

**15.** "மற்றைய நோக்காது அடிதொறும் வான்பொருள்
அற்று அற்று ஒழுகும்"............ பொருள்கோள் ஆகும்.

அ) தாப்பிசை ஆ) அடிமறி மாற்று
இ) ஆற்று நீர் ஈ) கொண்டு கூட்டு **விடை : இ) ஆற்று நீர்**

**16.** எழுவாய்,பயனிலைகளை வரிசைப்படுத்திப் பொருள் கொள்வது............

அ) ஆற்றுநீர் பொருள்கோள் ஆ) முறை நிரல் நிறைப்பொருள்கோள்
இ) எதிர் நிரல் நிறைப்பொருள்கோள் ஈ) கொண்டு கூட்டுப்பொருள்கோள்

**விடை : ஆ) முறை நிரல் நிறைப்பொருள்கோள்**

**17.** "கோப்புடை மொழிகளை ஏற்புழி இசைப்பது" ............

அ) கொண்டுகூட்டுப்பொருள்கோள் ஆ) தாப்பிசைப் பொருள்கோள்
இ) ஆற்றுநீர் பொருள்கோள் ஈ) நிரல்நிறைப் பொருள்கோள்

**விடை : அ) கொண்டு கூட்டுப்பொருள்கோள்**

**18.** இலக்கிய அடிகளை பொருள்கோளில் பொருத்துக.

அ) சொல்லரும் சூல்பசும் பாம்பின் – 1) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் – 2) எதிர்நிரல் நிறைப் பொருள்கோள்
இ) விலங்கொடு மக்கள் அனையர் – 3) முறை நிரல்நிறைப் பொருள்கோள்
ஈ) ஆலத்து மேல குவளை – 4) ஆற்றுநீர்ப் பொருள்கோள்

அ) 4, 3, 2, 1 ஆ) 2, 1, 3, 4
இ) 3, 1, 2, 4 ஈ) 1, 2, 3, 4 **விடை: அ) 4, 3, 2, 1**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1.** இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது ? இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா ?
மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.
(பெ.ஆ.க – 3)

**விடை :**

அ) மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது ? – அறியாவினா
ஆ) மின்சாரம் இருக்கிறதா, இல்லையா ? – ஐயவினா

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2.** வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

**விடை :**

வினா ஆறு வகைப்படும். அவை, அறிவினா, அறியாவினா, ஐயவினா, கொளல்வினா, கொடை வினா, ஏவல்வினா என்பனவாகும்.

**3. அறிவினா, அறியாவினா – விளக்குக.**
**விடை :**
**அறிவினா :**

★ தான் விடை அறிந்திருந்தும் அவ்விடை பிறருக்குத் தெரியுமா என்பதைஅறியும் பொருட்டு வினவுவது அறிவினா ஆகும்.

★ (எ.கா) மாணவரிடம் இந்தக் கவிதையின் பொருள் யாது ? என்று ஆசிரியர் கேட்டல்

**அறியாவினா :**

★ தான் அறியாத ஒன்றை அறிந்துகொள்வதற்காக வினவுவது அறியாவினா ஆகும்.

★ (எ.கா) ஆசிரியரிடம், "இந்தக் கவிதையின் பொருள்யாது ?" என்று மாணவர் கேட்டல்.

---

**4. உதவும் பொருட்டு வரும் வினாவகைகள் யாவை ?**
**விடை :**
**கொளல்வினா :**

★ தான் ஒரு பொருளை வாங்கிக் கொள்ளும் பொருட்டு வினவுதல்.

★ (எ.கா) ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா ? புத்தகக் கடைக்காரரிடம் வினவுதல்.

**கொடைவினா :**

★ பிறருக்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவும் பொருட்டு வினவுதல்

★ (எ.கா) உன்னிடம் பாரதியார் கவிதைகள் இல்லையோ ? எனக் கேட்பது : இதோ நான் தருகிறேன் என்று கூறுவது.

---

**5. வெளிப்படை விடைகள் யாவை ?**
**விடை :**

★ சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை

---

**6. குறிப்பு விடைகள் யாவை ?**
**விடை :**

★ ஏவல்விடை, வினா எதிர்வினாதல் விடை, உற்றது உரைத்தல்விடை, உறுவது கூறல்விடை, இனமொழி விடை.

---

**7. பொருள்கோள் எத்தனை வகைப்படும் அவை யாவை ?**
**விடை :**

★ பொருள்கோள் எட்டு வகைப்படும். அவை, ஆற்றுநீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், நிரல்நிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளைமறிபாப்புப் பொருள்கோள், அடிமறிமாற்றுப் பொருள்கோள், கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பனவாகும்.

---

**8. நிரல்நிறைப் பொருள்கோள் என்றால் என்ன ?**
**விடை :**

★செய்யுளில் அமைந்த சொற்களை முறை மாற்றாமல் நிரல் நிறையாக, அதாவது வரிசையாகப் பொருத்திப் பொருள்கொள்வது, நிரல்நிறைப் பொருள்கோளாகும். இது முறை நிரல் நிறை, எதிர் நிரல் நிறை என இருவகைப்படும்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்"**
**இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.**

**விடை : விளக்கம் :**

★ முயற்சி ஒருவனுக்கு செல்வத்தை பெருகச் செய்யும். முயற்சி இல்லாது இருப்பது அவனுக்கு வறுமையை உண்டாக்கும்.

**பொருள்கோள் விளக்கம் :**

★ பாடலின் தொடக்கம் முதல் முடியும் வரை ஆற்றுநீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்தால் ஆற்றுநீர்ப் பொருள்கோள் எனப்படும்.

★ மேற்கூறிய திருக்குறளும் அவ்வாறே பொருள் கொண்டுள்ளதால் ஆற்றுநீர்ப் பொருள்கோளில் வருகிறது.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. கொண்டுகூட்டுப் பொருள்கோள் வினாவினை விளக்கி, எடுத்துக்காட்டு ஒன்று தருக. (பெ.ஆ.க – 4)**

**விடை :**

★ ஒரு செய்யுளில் பல அடிகளில்ல சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள்கொள்வது கொண்டு கூட்டுப்பொருள்கோள் ஆகும்.

★ (எ.கா) *ஆலத்து மேல குவளை குளத்துள*
*வாலின் நெடிய குரங்கு.* –மயிலைநாதர் உரை

★ மேற்கண்ட பாடலில் ஆலத்து மேல் குவளை என்றும் குளத்தில் வாலின் நெடிய குரங்கு என்றும் பொருள்கொண்டால் பொருத்தமற்றதாகிவிடும். இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை – என்று கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் கொண்டு பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டுகூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

★ *யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை*
*ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே* – நன்னூல் : 417

---

**3. முறை நிரல்நிறைப் பொருள்கோள் வினாவினை விளக்கி எடுத்துக்காட்டு தருக.**

**விடை :**

★ செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச்சொற்களை வரிசையாக நிறுத்தி, அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் "முறை நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

★ (எ.கா) *அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை*
*பண்பும் பயனும் அது* – *குறள் – 45*

★ இக்குறளில் பண்பு, பயன் என்ற இருசொற்களை வரிசைப்படுத்தி, அவற்றிற்குரிய விளைவுகளாக அன்பு, அறன் என்று வரிசைப்படுத்தியுள்ளார். அவற்றை இல்வாழ்க்கையின் பண்பு, அன்பு என்றும் அதன் பயன், அறன் என்றும் பொருள் கொள்ளவேண்டும். எனவே, அன்புக்குப் பண்பும் அறத்துக்குப் பயனும் பயனிலைகளாக – நிரல்நிறையாக– நிறுத்திப் பொருள்கொள்வதால், இப்பாடல், "முறை நிரல்நிறைப் பொருள்கோள்" எனப்படும்.

---

**4. எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் வினாவினை விளக்கி எடுத்துக்காட்டு தருக.**

**விடை :**

★ செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் "எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

★ (எ.கா) *விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்* – *குறள் – 410*

★ இக்குறளில் முதல் அடியில் விலங்கு, மக்கள் என்று எழுவாய்களை வரிசைப்படுத்திவிட்டு, அடுத்த அடியில் பயனிலைகளைக் கற்றார், கல்லாதார்(ஏனையவர்) என வரிசைப்படுத்தியுள்ளார். அவற்றை கற்றால் மக்கள் என்றும், கல்லாத ஏனையவர் விலங்குகள் என்றும் எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ள வேண்டும். எனவே இக்குறள் , "எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்" ஆகும்.

---

கற்பவை கற்றபின்

**1. வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.**

**1) "காமராசர் நகர் எங்கே இருக்கிறது ? " "இந்த வழியாகச் செல்லுங்கள்" – என்று விடையளிப்பது**

**2) "எனக்கு எழுதித் தருகிறாயா ?" என்ற வினாவுக்கு, "எனக்கு யார் எழுதித் தருவார்கள் ?" என்று விடையளிப்பது.**

**விடை :**

1) அ) "காமராசர் நகர் " எங்கே இருக்கிறது ? – அறியா வினா

ஆ) "இந்த வழியாகச் செல்லுங்கள்" – சுட்டுவிடை

2) அ) "எனக்கு எழுதித் தருகிறாயா ?" – ஏவல் விடை

ஆ) " எனக்கு யார் எழுதித் தருவார்கள் ?" – வினா எதிர்வினாதல் விடை

---

**2. உரையாடலில் இடம்பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.**

**பாமகள் :** வணக்கம் ஆதிரை ! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதோ ? (அறியாவினா)

**ஆதிரை :** ஆமாம் ! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக்கொண்டிருக்கிறேன். (.................)

**விடை :** **நேர் விடை**

**பாமகள் :** அப்படியா ! என்ன தலைப்பு ? (.................)

**விடை :** **அறியா வினா**

**ஆதிரை :** கல்வியில் சிறந்த தமிழர் !(.................)

**விடை :** **நேர் விடை**

**ஆதிரை :** நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களோ ? மாட்டீர்களோ ?(.................)

**விடை :** **ஐயவினா**

**பாமகள் :** ஏன்வராமல் ?(.................)

**விடை :** **வினா எதிர் வினாதல் விடை**

இயல் 5. ஊ

## மொழியை ஆள்வோம்
( மொழிப்பயிற்சி)

அ) படித்துச் சுவைக்க :

*வள்ளுவன்தன்னை உலகினுக்கே – தந்து*
*வான்புகழ் கொண்டதமிழ்நாடு – நெஞ்சை*
*அள்ளும் சிலப்பதி காரமென்றோர் – மணி*
*யாரம் படைத்த தமிழ்நாடு (செந்தமிழ்)*
– பாரதியார்

*It gave Valluva the Great*
*For all the world to have ;*
*And the fame rose sky high*
*Of our Tamil - Land*
*It made a necklace of gems,*
*Named "The Lay of the Anklet"*
*Which grips enraptured hearts*
*In out Tamil - Land.*
**- The voice of Bharati**

ஆ) மொழிபெயர்ப்பு:
**ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக. (பெ.ஆ.க – 3)**

| *யாழிசை* | *It's like new lute music* |
|---|---|
| *அறைக்குள்யாழிசை*<br>*ஏதென்று சென்று*<br>*எட்டிப்பார்த்தேன்;*<br>*பேத்தி,*<br>*நெட்டுருப் பண்ணினாள்*<br>*நீதிநூல் திரட்டையே,*<br>**பாரதிதாசன்** | *Wondering at the lute music*<br>*Coming from the chamber*<br>*Entered I to took up to instill*<br>*My grand-daughter*<br>*Learning by rote the verses*<br>*Of a didactic compilation.*<br>*Translated by* **Kavignar Desini** |

இ) கலைச்சொல் தருக :

lute music – யாழிசை
Chamber – அறை
to look up – எட்டிப்பார்த்தேன்
grand-daughter – பேத்தி
rote – நெட்டுரு
didactic compilation – நீதிநூல் திரட்டு

**ஈ) . அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.**

| **வேர்ச் சொல்** | **எழுவாய்த் தொடர்** | **பெயரெச்சத் தொடர்** | **வினையெச்சத் தொடர்** | **விளித் தொடர்** | **வேற்றுமைத் தொடர்** |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடிவந்தாள் | அருணா ஓடாதே ! | அருணாவிற்–காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | (1)................ | சொல்லிச் சென்றார் | (2)............. | கதையைச் சொன்னார் |
| தா | (3)............... | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசரே தருக ! | (4) ............. |
| பார் | துளிர் பார்த்தாள் | (5)................ | பார்த்துச்சிரித்தாள் | (6) ............ | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | (7)..................... | குழந்தையே வா ! | (8) ................ |

**விடைகள் :**

**1) சொன்ன அம்மா**
**2) அம்மா சொல்லுக**
**3) அரசர் தந்தார்**
**4) பரிசைத் தந்தார்**
**5) பார்த்த துளிர்**
**6) துளிரே பார்**
**7) வந்து அழுதது**
**8) தாயுடன் வந்தது**

---

**உ) தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**
**கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்**

**(எ.கா) அழகிய குளிர்ந்த** கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்

**1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும். (பெ.ஆ.க – 6)**
**விடை : நிழல் தரும்** மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

**2. வாழ்க்கைபயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது. (பெ.ஆ.க – 6)**
**விடை : வேறுபாடின்றி கலந்து பழகும் வாழ்க்கைபயணமே** வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

**3. கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்**
**விடை : தொழில்நுட்பக்** கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்.

**4. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.**
**விடை : வீட்டுப்பாடத்தைக்** குழந்தைகள் தனித்தனியே எழுதித்தரவேண்டும்.

**ஊ) மதிப்புரை எழுதுக.**

**பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.**

**குறிப்பு – நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர் (பெ.ஆ.க – 5)**

**விடை :**

**நூலின் தலைப்பு:**

மெல்ல மெல்ல மற (சிறுகதை)

**நூலின் மையப்பொருள் :**

புகைப்பிடிப்பதனால் உண்டாகும் தீங்கினை உணர்ந்து திருத்துதல்

**மொழிநடை :**

மிக எளிய நடையில் வாசகர்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எழுத்து நடை கையாளப்பட்டுள்ளது.

**வெளிப்படுத்தும் கருத்து:**

புகை பிடிக்கும் பழக்கத்தினால் புற்று நோய் ஏற்பட்டு குடும்பத் தலைவன் மரணமடைவதால் குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை வெளிப்படுத்துகிறது.

**நூலின் நயம்:**

சிறுகதைக்குரிய இலக்கணத்தை முழுமையாகப் பெற்று கதைக் கருவைச் சிறப்பாக விளக்குகிறது.

**நூல் கட்டமைப்பு:**

உயர்தரமான அட்டையில் 80 ஜி.எஸ்.எம் மேப்லித்தோ தாளில் 12 புள்ளிகளில் அச்சிடப்பட்டுள்ளது.

**சிறப்புக் கூறு :**

கோகிலாவின் கணவன் கமலநாதன் எப்பொழுதும் புகைப்பிடித்துக் கொண்டே இருப்பான். புகை பிடிப்பதனால் சுவாசப் புற்றுநோய், மாரடைப்பு, சளி, இருமல், பசியின்மை, போன்ற பல நோய்கள் வருமென்று கோகிலா எச்சரிக்கை செய்தும் அவன் திருந்தவில்லை. இச்சூழலில் தன் நண்பன் ராமலிங்கம் அதிகமாகப் புகைத்ததனால் சுவாசப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டதை நேரில் கண்டான். அவன் மனைவி சியாமளா குழந்தைகளுடன் சோகமாக நின்ற சூழல் அவனுக்கு அதிர்ச்சியளித்தது. தம் குடும்பத்திற்கும் இத்துன்பநிலை வரக்கூடாதென்று, புகைப் பிடிப்பதை மெல்ல மெல்ல மறப்பதாக மனைவியிடம் சபதம் செய்கிறான். இனி புகைபிடிக்கத் தோன்றினால் தண்ணீர் குடிக்கிறேன், கைகளுக்குவேறு வேலை கொடுக்கிறேன், புத்தகம் படிக்கிறேன், குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறேன் என்று பட்டியலிட்டான்.

இதைக் கேட்ட கோகிலா அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கோகிலாவின் இந்தச் சொல்லும் நண்பனின் மரணமும் கமலநாதன் மனம் திருந்தக் காரணமாயின. புகைப்பிடிப்பதனால் ஏற்படும் தீங்கினை மிகச் சரியான கதைச்சூழல் கொண்டு விளக்கிய கதை ஆசிரியர் இலட்சுமியின் கதைப்பாங்கு பாராட்டும்படி உள்ளது.

**ஆசிரியர் குறிப்பு :**

இக்கதையை எழுதியவர் இலட்சுமி ஆவார். இவரது இயற்பெயர் திரிபுரசுந்தரி என்பதாகும். இவர் ஒரு மருத்துவர் ஆவார். பெண்ணுரிமை, பெண் விடுதலை, இல்லறம் போன்றவற்றை மையக் கருத்துகளாகக் கொண்டு இவர் எழுதிய சிறுகதைகள், புதினங்கள் புகழ் பெற்றவையாகும்.

**படிவத்தை நிரப்புக. (பெ.ஆ.க – 3, 4)**

**நூலக உறுப்பினர் படிவம்**

**மதுரை மாவட்ட நூலக ஆணைக்குழு**

மைய நூலகம் **மதுரை**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் : **21** உறுப்பினர் எண் : **1989**

1. பெயர் **ந. வல்லவன்**
2. தந்தை பெயர் **ம. நல்லியப்பன்**
3. பிறந்த தேதி ..........
4. வயது **16**
5. படிப்பு **பத்தாம் வகுப்பு**
6. தொலைபேசி எண் **94430 46662**
7. முகவரி **129, வடக்கு ஆவணிமூல வீதி,**
   (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) **மதுரை – 625001**

நான் **மதுரை** நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத் தொகை ரூ. **150** சந்தா தொகை ரூ, **100** ஆக மொத்தம் ரூ. **250** ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : **மதுரை**

நாள் : ----------

தங்கள் உண்மையுள்ள

**ந. வல்லவன்**

திரு / திருமதி / செல்வி / செல்வன் ........... அவர்களை எனக்கு நன்குதெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்

அலுவல முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

**கூடுதல் வினா : கடிதம்**

**நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறு பரிந்துரைத்து நண்பருக்குக் கடிதம் எழுதுக. (பெ.ஆ.க – 3)**

**விடை :**

தேதி............
மதுரை

அன்புள்ள நண்பன் எழிலனுக்கு,

பாலன் எழுதிக்கொள்வது. இங்கு நான் என் குடும்பத்தினர் அனைவரும் நலம், அதுபோல் நீயும் உன் குடும்பத்தினர் அனைவரும் இறையருளால் நலமுடன் இருக்க வேண்டுகிறேன்.

நண்பா நான் எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் எழுதிய, "கால் முளைத்த கதைகள்" என்னும் நூலினைப் படித்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். இந்நூலில் நான் கற்று அறிந்துகொண்ட கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

உலகம் எப்படித் தோன்றியது என்றகேள்விக்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன. இந்தக் கதைகளைச் சொன்ன மனிதர்கள் குகைகளில் வசித்தார்கள். இருட்டைக் கண்டு பயந்துபோய் அதையொரு கதையாக்கினார்கள். கதைகள் பாறைகள் உருவத்தினுள் ஒளிந்திருப்பதாக நம்பினார்கள். பலநூறு வருடங்கள் கடந்துவிட்ட போதும் இந்தக் கதைகள் கூழாங்கற்களைப் போல் வசீகரமாயிருக்கின்றன.

சிறுவர்களுக்கான கதைகள், உலகெங்கும் உள்ள முப்பது பழங்குடியினர்கள் சொன்ன கதைகளிலிருந்து தேர்வு செய்து இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதையும் ஒரு நீதியை எடுத்துக் கூறுவதாய் அமைந்துள்ளது. படித்துப் பேணிப் பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷமாய்த் திகழ்கிறது இந்நூல். இந்நூலை நீயும் படித்து மகிழவேண்டுமாய் அன்புடன்கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி நண்பா. நன்றாகப் படித்து தேர்வுகள் எழுத வாழ்த்துகள்.

இப்படிக்கு,
அன்பு நண்பன்
க. பாலன்

உறைமேல் முகவரி

ம. எழிலன்,
த/பெ. த. மதியழகன்
1/10, மலைக்கோட்டை,
திருச்சி.

## இயல் 5. எ

## மொழியோடு விளையாடு
( மொழிப்பயிற்சி)

**அ) புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.**

*தார்போன்ற நிறமுண்டு கரியுமில்லை*
*பார் முழுதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை*
*சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை*
*சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை*
*வீடுக்கு வருமுன்னே, வருவதைக் கூறுவேன்* நான் யார் ?

**விடை :**

காகம்

---

**ஆ) தொழிற்பெயர்களின் பெயர்களைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க**

**1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் ............. யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் .............. நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும். (புதையல், புதைத்தல்)**

**விடை :**

நிலத்துக்கு அடியில் கிடைக்கும் **புதையல்** யாவும் அரசுக்கே சொந்தம். நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் **புதைப்பது** நிலத்தடி நீர்வளத்தைக் குன்றச் செய்யும்.

**2. காட்டு விலங்குகளைச் ................ தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் ................ திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்) (பெ.ஆ.க – 2)**

**விடை :**

காட்டு விலங்குகளைச் **சுடுதல்** தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் **சுட்டல்** திருந்த உதவுகிறது.

**3. காற்றின் மெல்லிய ............. பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான ............ பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல், தொடுதல்) (அ.மா.வி)**

**விடை :**

காற்றின் மெல்லிய **தொடுதல்** பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான **தொடுத்தல்** பூக்களை மாலையாக்குகிறது.

**4. பசுமையான ................. ஐக் .................... கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி) (பெ.ஆ.க –2)**

**விடை :**

பசுமையான**காட்சி** ஐக் காணுதல் **கண்ணுக்கு** நல்லது.

**5. பொதுவாழ்வில் ................. கூடாது. ............... இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பு)**

**விடை :**

பொது வாழ்வில் **நடித்தல்** கூடாது. **நடிப்பில்** அவரை மிஞ்ச ஆள் கிடையாது.

---

**இ) அகராதியில் காண்க.**

**மன்றல், அடிச்சுவடு, அகராதி, தூவல்,மருள்**

**விடை :**

| | | |
|---|---|---|
| **மன்றல்** | : | திருமணம், மணம், புணர்ச்சி |
| **அடிச்சுவடு** | : | காலடியின் அடையாளம், அடித்தடம் |
| **அகராதி** | : | அகரமுதலி,சொற்கோவை |
| **தூவல்** | : | மழை, இறகு, பேனா, ஓவியந்தீட்டுங்கோல் |
| **மருள்** | : | மயக்கம், வியப்பு, ஆவேசம், புல்லுரு |

**ஈ) செயல்திட்டம் :**

**"பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" – குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப் படுத்துக. (பெ.ஆ.க – 4,5)**

**விடை :**

அனுப்புநர்
மாணவர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
மதுரை – 18.

பெறுநர்
தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
மதுரை – 18

ஐயா,

பொருள் : பள்ளித் தூய்மை குறித்த செயல்திட்ட வரைவு ஒப்புதல் வழங்கி செயல்படுத்த வேண்டுதல் – சார்பாக.

ஐயா ! நாங்கள் அரசு உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகின்றோம். கடந்த 3 ஆண்டுகளாக நம் பள்ளியின் மாணவர்களை நன்கு கவனித்து வருகிறோம். அதன் மூலம் நம் பள்ளி மாணவர்களின் கற்றல் அடைவுகளுக்குத் தடையாக இருக்கும் காரணிகளைப் பற்றி ஆய்வு செய்து வந்தோம். அவற்றை ஒரு செயல்திட்டமாகத் தயாரித்து தங்கள் பார்வைக்கு அனுப்பி உள்ளோம். அதன் பரிந்துரைகளை ஆராய்ந்து அதற்கு ஒப்புதல் வழங்கி நம் பள்ளியில் செயல்படுத்தி மாணவர்களாகிய எங்கள் கல்வி நலனையும் வருங்காலத் தலைமுறையினரின் கல்வி நலனையும் காக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

நன்றி

இடம் : மதுரை
நாள் :

இப்படிக்கு,
அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்

**செயல்திட்ட வரைவு**

1. "சுத்தம் சோறுபோடும்", "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை மெய்ப்பிக்கும் வகையில் எங்கள் பள்ளியைத் தூய்மையாக வைத்துக்கொள்ள மாணவர்களாகிய நாங்கள் ஆசிரியப் பெருமக்களுடன் சேர்ந்து செயலாற்றிக் கொண்டே இருப்போம்.
2. பள்ளியின் வகுப்பறை மற்றும் வளாகத்தினை தூய்மையாகப் பராமரிப்போம்.
3. தேவையற்றப் பொருட்களையும், குப்பைகளையும் குப்பைத் தொட்டியில் மட்டுமே போடுவோம்.
4. மரம், செடிகளில் இருந்து உதிரும் இலைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்துவோம்.
5. சிறுநீர் கழிப்பதற்கு கழிப்பறையை மட்டுமே பயன்படுத்துவோம்
6. கண்ட இடங்களில் மீதமுள்ள உணவுப்பொருள்களை கொட்டமாட்டோம். குப்பைத் தொட்டிகளில் மட்டுமே போடுவோம்.
7. பள்ளியில் தூய்மை இயக்கம் தொடங்கி மாணவர்களைப் பலக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவினரும் குறிப்பிட்ட மரக்கன்றுகளை நட்டு வளர்க்கச் சொல்லுவேன்.
8. பள்ளியைப் பசுமை போற்றும் பள்ளியாக மாற்ற முயலுவோம்.
9. விளையாட்டு மைதானம் முறையாகப் பராமரிக்கப்பட்டு, மாணவர்கள் மாநில அளவில் போட்டிகளில் வெற்றி பெற உதவுவேன்.

**உ) காட்சியைக் கவிதையாக்குக:**

**விடை :**

**1)** *நிழல் பெறுவோம்*
*கனி பெறுவோம்*
*காய் பெறுவோம்*
*மழை பெறுவோம்*
*உயிர் பெறுவோம்*
*அதற்கு நாம்*
*ஆளுக்கொரு*
*மரம் வளர்ப்போம்*
*இயற்கை*
*இயற்கையாக இருக்க*
*நாம் துணைபுரிவோம்*
*பூமியும் பசுமையாகும்*
*உயிர் இனமும் மகிழ்ச்சியாகும்.*

**படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் விளக்கி எழுதுக.**

**விடை :**



**1)** அடுக்குமாடி வீடு கட்ட மரத்தை வெட்டினோம்.
2) விரைவாய்ச் செல்ல காடுகளை அழித்தோம்.
3) தொழிலகம் வளரத் தோப்புகளை ஒழித்தோம்.
4) பொழுதுபோக்கிற்காக பொக்கிசத்தை மறைத்தோம்
5) இறுதியாக மரத்தை ஓவியத்தில் காண்கிறோம்.

**ஊ) நிற்க அதற்குத் தக.... (பெ.ஆ.க – 4)**

| வ. எண் | பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|---|
| 1. | நேரத்தைச் சரியாகக் கடைபிடிப்பேன். | வீட்டுப்பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| 2. | உடன் பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | <u>அம்மாவிற்கு வேண்டிய பொருள்களை வாங்கித் தருவேன்</u> |
| 3. | <u>நண்பர்களுக்கு உதவி செய்வேன்</u> | <u>மரக்கன்றுகளுக்கு தண்ணீர் ஊற்றுவேன்</u> |
| 4. | <u>வகுப்பறையில் அமைதி காப்பேன்</u> | <u>வீட்டின் தூய்மை பேணுவேன்</u> |
| 5. | <u>மரத்தைப் பாதுகாப்பேன்</u> | <u>செடிகளைப் பாதுகாப்பேன்</u> |

**எ) கலைச்சொல் அறிவோம்.**

Emblem – சின்னம்
Thesis – ஆய்வேடு
Intellectual – அறிவாளர்
Symbolism – குறியீட்டியல்

**ஏ) அறிவை விரிவு செய்.**

சிறந்த சிறுகதைகள் பதின்மூன்று – தமிழில் வல்லிக்கண்ணன்
குட்டி இளவரசன் – தமிழில் வெ. ஸ்ரீராம்
காலம் – தமிழில் எம்.பி.அகிலா

# இயல் ஆறு — இயல் 6. நிலா முற்றம்

## உரைநடை உலகம்

## இயல் 6. அ — நிகழ்கலை (உரைநடை)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடுகின்றனர்" இத் தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது ?**

அ) ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடுவர்.
ஆ) ஒயிலாட்டத்தில் இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது.
இ) ஒயிலாட்டம் இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது.
ஈ) ஒயிலாட்டம் இரு வரிசையில் நின்று ஆடப்படுகின்றனர். **(பெ.ஆ.க–6)**

**விடை : இ) ஒயிலாட்டம் இரு வரிசையில் நின்று ஆடப்படுகிறது.**

**2. "கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர்" – இத் தொடருக்கான வினா எது ?**

அ) கரகாட்டம் என்றால் என்ன ?
ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?
இ) கரகாட்டத்தின் வேறு வேறு வடிவங்கள் யாவை ?
ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ? **(பெ.ஆ.க–5)**

**விடை: ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி (அ.மா.வி)**

அ) ஜால்ரா ஆ) பறை
இ) உறுமி ஈ) நாகசுரம் **விடை: ஆ) பறை**

**4. சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாதக் கூறுகளாய்த் திகழ்பவை யாவை ?**

அ) சிற்பக்கலைகள் ஆ) நிகழ்கலைகள்
இ) இசைக்கலைகள் ஈ) எழுத்துக்கலைகள் **விடை: ஆ) நிகழ்கலைகள்**

**5. கரகாட்டத்தை வேறு எவ்வாறு அழைக்கலாம் ?**

அ) கொம்பாட்டம் ஆ) குட ஆட்டம்
இ) கும்பாட்டம் ஈ) புலி ஆட்டம் **விடை: இ) கும்பாட்டம்**

**6. "நீரற வறியாக் கரகத்து" என்ற புறநானூற்றுப் பாடலடியில் இடம்பெற்றுள்ள சொல்..........**

அ) காவடி ஆ) தப்பு
இ) கரகம் ஈ) பொய்க்கால் **விடை: இ) கரகம்**

**7. மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் ஆடல்.....**

அ) வள்ளிக்கூத்து ஆ) குரவைக்கூத்து
இ) வெறிக்கூத்து ஈ) குடக்கூத்து **விடை: ஈ) குடக்கூத்து**

8. கரகாட்டத்திற்கு அடிப்படை என்று கருதப்படும் ஆடல்............

அ) ஆரியக்கூத்து ஆ) குரவைக்கூத்து

இ) குடக்கூத்து ஈ) தெருக்கூத்து **விடை: இ) குடக்கூத்து**

9. கரகாட்டத்தின் துணையாட்டமாக ஆடப்படுவது ...............

அ) ஒயிலாட்டம் ஆ) மயிலாட்டம்

இ) காவடியாட்டம் ஈ) புலியாட்டம் **விடை: ஆ) மயிலாட்டம்**

10. "காவடியாட்டம்" இச் சொல்லில் "கா" என்பதன் பொருள் யாது ?

அ) காவல் ஆ) இரக்கம்

இ) முக்கால் ஈ) பாரந்தாங்கும் கோல் **விடை: ஈ) பாரந்தாங்கும் கோல்**

11. இலங்கை, மலேசியா உள்ளிட்ட புலம்பெயர் தமிழர் வாழும் பிற நாடுகளிலும் ஆடப்படுவது ...............

அ) ஒயிலாட்டம் ஆ) புலியாட்டம்

இ) காவடியாட்டம் ஈ) பொம்மலாட்டம் **விடை: இ) காவடியாட்டம்**

12. கம்பீரத்துடன் ஆடுதல் என்னும் சிறப்புப் பெற்ற ஆட்டம் ................

அ) கரகாட்டம் ஆ) மயிலாட்டம்

இ) காவடியாட்டம் ஈ) ஒயிலாட்டம் **விடை: ஈ) ஒயிலாட்டம்**

13. தேவராட்டம்................. ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

அ) அரசர்கள் ஆ) பாணர்கள்

இ) விறலியர்கள் ஈ) வானத்துத் தேவர்கள் **விடை: ஈ) வானத்துத் தேவர்கள்**

14. ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம் ..............

அ) தப்பு ஆட்டம் ஆ) காவடியாட்டம்

இ) தேவராட்டம் ஈ) ஒயிலாட்டம் **விடை: இ) தேவராட்டம்**

15. தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி ..............

அ) சிங்கி ஆ) டோலக்

இ) தேவதுந்துபி ஈ) தப்பு **விடை: இ) தேவதுந்துபி**

16. தேவராட்டம் போன்றே ஆடப்பட்டுவருகின்ற கலை ...............

அ) சேவையாட்டம் ஆ) பொய்க்கால் குதிரையாட்டம்

இ) மயிலாட்டம் ஈ) கரகாட்டம் **விடை: அ) சேவையாட்டம்**

17. புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களில் அழைக்கப்படும் ஆட்டம் எது ?

அ) புலியாட்டம் ஆ) பொம்மலாட்டம்

இ) காவடியாட்டம் ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்

**விடை: ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்**

18. "போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் ஒன்று.......

அ) கரகாட்டம் ஆ) ஒயிலாட்டம்

இ) சேவையாட்டம் ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்

**விடை: ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்**

19. பொய்க்கால் குதிரையாட்டம் யார் காலத்தில் தஞ்சைக்கு வந்தது ?

அ) பல்லவர் ஆ) மராட்டியர்

இ) சோழர் ஈ) சேரர் **விடை: ஆ) மராட்டியர்**

20. பாடல்கள் பயன்படுத்தாத ஆட்டவகை...............

அ) தோற்பாவைக் கூத்து ஆ) தெருக் கூத்து

இ) ஒயிலாட்டம் ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்

**விடை: ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்**

21. பொய்க்கால் குதிரையாட்டத்திற்கு இசைக்கப்படும் இசைக்கருவிகளைக் கண்டறிக.

(i)நையாண்டி மேளம் (ii) நாகசுரம் (iii)தவில் (iv)டோலக்

அ) i, ii - சரி ஆ) iii, iv - சரி

இ) iii - மட்டும் தவறு ஈ) நான்கும் சரி **விடை: அ) i, ii - சரி**

**22. இராஜஸ்தானில் "கச்சிகொடி" என்றும் கேரளத்தில் "குதிரைக்களி" என்றும் அழைக்கப்படும் ஆட்டம் ...............**

அ) புலியாட்டம் ஆ) பொம்மலாட்டம்
இ) காவடியாட்டம் ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்

**விடை: ஈ) பொய்க்கால் குதிரையாட்டம்**

**23. "தப்பு" என்பது ............... வகைக் கருவியாகும்.**

அ) தோல் ஆ) காற்று
இ) நரம்பு ஈ) கஞ்ச **விடை: அ) தோல்**

**24. "பறை" என்று அழைக்கப்படும் ஆட்டம் ...............**

அ) மயிலாட்டம் ஆ) ஒயிலாட்டம்
இ) தப்பாட்டம் ஈ) புலியாட்டம் **விடை: இ) தப்பாட்டம்**

**25. "தகக தகதகக தந்தத்த தந்தகக" என்று திருப்புகழில் பதிவு செய்தவர்.........**

அ) அருணகிரிநாதர் ஆ) கீரந்தையார்
இ) பரஞ்சோதி முனிவர் ஈ) பெருங்கௌசிகனார் **விடை: அ) அருணகிரிநாதர்**

**26. கருப்பொருள்களில் ஒன்றாகப் பறை இடம் பெற்றுள்ளது என குறிப்பிடும் நூல்.........**

அ) நன்னூல் ஆ) அகத்தியம்
இ) புறப்பொருள் வெண்பாமாலை ஈ) தொல்காப்பியம் **விடை: ஈ) தொல்காப்பியம்**

**27. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழும் ஆட்டம்.........**

அ) தெருக்கூத்து ஆ) மயிலாட்டம்
இ) தப்பாட்டம் ஈ) புலி ஆட்டம் **விடை: ஈ) புலி ஆட்டம்**

**28. நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலை.........**

அ) புலியாட்டம் ஆ) தெருக்கூத்து
இ) சேவையாட்டம் ஈ) ஒயிலாட்டம் **விடை: ஆ) தெருக்கூத்து**

**29. களத்து மேடுகளில் நிகழ்த்தப்பட்ட கலை ...............**

அ) புரவியாட்டம் ஆ) மயிலாட்டம்
இ) தெருக்கூத்து ஈ) குடக்கூத்து **விடை: இ) தெருக்கூத்து**

**30. திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் நிகழ்கலை ...............**

அ) தோற்பாவைக் கூத்து ஆ) குடக்கூத்து
இ) தெருக்கூத்து ஈ) கையுறைப்பாவைக் கூத்து **விடை: இ) தெருக்கூத்து**

**31. அர்ச்சுனன் தபசு எனப்படுவது ...............**

அ) மழை வேண்டி நிகழ்த்தப்படுவது ஆ) பொருள் வேண்டி நிகழ்த்தப்படுவது
இ) அருள் வேண்டி நிகழ்த்தப்படுவது ஈ) வீரம் வேண்டி நிகழ்த்தப்படுவது

**விடை: அ) மழை வேண்டி நிகழ்த்தப்படுவது**

**32. மரப்பாவைப் பற்றிக் குறிப்பிடும் நூல் எது ?**

அ) புறநானூறு ஆ) நாலடியார்
இ) திருக்குறள் ஈ) மதுரைக் காஞ்சி **விடை: இ) திருக்குறள்**

**33. தோற்பாவைக் கூத்து பற்றிய செய்திகளைக் குறிப்பிடுவன ...............**

அ) திருவாசகமும், திருக்குறளும் ஆ) திருவாசகமும், பட்டினத்தார் பாடல்களும்
இ) பட்டினத்தார் பாடல்களும், நாலடியாரும் ஈ) திருவாசகமும், நாலடியாரும்

**விடை: ஆ) திருவாசகமும், பட்டினத்தார் பாடல்களும்**

**34. அ) கையுறைப் பாவைக்கூத்து, பொம்மலாட்டம் என மாற்றம் பெற்ற நிகழ்கலை ...............**

அ) தோற்பாவைக் கூத்து ஆ) தெருக்கூத்து
இ) குடக்கூத்து ஈ) ஆரியக் கூத்து **விடை: அ) தோற்பாவைக் கூத்து**

**35. தெருக்கூத்தைத் தமிழ்க்கலையில் முக்கிய அடையாளமாக்கியவர் யார் ?**

அ) சங்கரதாஸ் சுவாமிகள் ஆ) பம்மல் சம்பந்தனார்
இ) ந. முத்துச்சாமி ஈ) பரிதிமாற் கலைஞர் **விடை: இ) ந.முத்துச்சாமி**

**36. கலைஞாயிறு என்று அழைக்கப்படுபவர்.................**

அ) சந்தக் கவிமணி தமிழழகனார் ஆ) கூத்துப்பட்டறை ந. முத்துச்சாமி
இ) பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஈ) முனைவர் சேது மணியன்

**விடை: ஆ) கூத்துப்பட்டறை ந. முத்துச்சாமி**

**37. ந. முத்துச்சாமிக்கு தமிழக அரசு வழங்கிய விருது ...............**

அ) பத்மஸ்ரீ விருது ஆ) கலைமாமணி விருது
இ) கம்பன் விருது ஈ) பாவாணர் விருது **விடை: ஆ) கலைமாமணி விருது**

**38. இந்திய அரசின் தாமரைத் திருவிருதையும் தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றவர்...............**

அ) கி. ராஜநாராயணன் ஆ) கா.ப.செய்குத்தம்பி பாவலர்
இ) ந.முத்துச்சாமி ஈ) தேவநேயப் பாவாணர் **விடை: இ) ந. முத்துச்சாமி**

**39. மலேசியத் தலைநகர் கோலாம்பூரில் புகழ்மிக்க மையப்பகுதியில் காணப்படும் தெருவின் பெயர் யாது ?**

அ) வள்ளி தெரு ஆ) முருகன் தெரு
இ) கம்பன் தெரு ஈ) இராசசோழன் தெரு **விடை: ஈ) இராசசோழன் தெரு**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக.**

**விடை :**

முன்னாள் தான் பார்த்த அர்ச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும், சிறந்த நடிப்பையும், இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்ததாக சேகர் தம்மிடம் கூறினான்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. நிகழ்கலையின் நோக்கங்கள் எவை ?**

**விடை :**

★ கண்ணுக்குக் காட்சியையும், சிந்தைக்குக் கருத்தினையும் தருவன.

★ கருத்துடன் கலைத்திறனை நோக்கமாகக் கொண்டு காலவெள்ளத்தைக் கடந்து நிற்பன.

---

**3. கரகாட்டம் குறித்து இலக்கியங்களில் காணப்படும் சான்றுகளை எழுதுக.**

**விடை :**

★ "நீரற வறியாக் கரகத்து" (புறம் –1) என்ற புறநானூற்றுப் பாடலடியில் கரகம் என்ற சொல் இடம்பெற்றிருக்கிறது.

★ சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் "குடக்கூத்து" என்ற ஆடலும் குறிப்பிடப்பிடப்படுகிறது.

★ இதுவே கரகாட்டத்திற்கு அடிப்படை என்றும் கருதப்படுகிறது.

---

**4. கரகாட்டம் தற்போது நிகழ்த்தப்படும் இடங்கள் சிலவற்றைக் குறிப்பிடுக.**

**விடை :**

★ தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் கரகாட்டம் நிகழ்த்தப்படுகிறது.

---

**5. மயிலாட்டம் குறித்து எழுதுக.**

**விடை :**

★ மயில் வடிவமுள்ள கூட்டுக்குள் ஒருவர் தம் உருவத்தை மறைத்துக்கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டம் ஆகும்.

★ நையாண்டி மேளம் இசைக்க, காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க, மயிலின் அசைவுகளை ஆடிக்காட்டுவர்.

---

**6. மயிலாட்டக் கலைஞர்கள் ஆடும் அடவுகளைக் குறிப்பிடுக.**

**விடை :**

★ ஊர்ந்து ஆடுதல், மிதந்து ஆடுதல், சுற்றி ஆடுதல், இறகை விரித்து ஆடுதல், தலையைச் சாய்த்து ஆடுதல், தாவி ஆடுதல், இருபுறமும் சுற்றி ஆடுதல், அகவுதல், தண்ணீர்குடித்துக் கொண்டே ஆடுதல் ஆகிய அடவுகளை மயிலாட்டத்தில் கலைஞர்கள் ஆடிக்காட்டுவர்.

---

**7. காவடியாட்டம் – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ கா – என்பதற்குப் பாரம் தாங்கும் கோல் என்று பொருள்.

★ இருமுனைகளிலும் சம எடைகளைக் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம் ஆகும்.

---

**8. காவடியின் வகைகள் யாவை ?**

**விடை :**

★ காவடியின் அமைப்புக்கு ஏற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி, தேர்க்காவடி, பறவைக் காவடி எனக் காவடி பலவகைப்படும்.

---

**9. "ஒயிலாட்டம்" குறித்து நீர் அறிந்தவற்றை எழுதுக.**

**விடை :**

★ ஒரே நிறத்துணியை முண்டாசு போலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறுதுணியை இசைக்கேற்ப வீசியும், ஒயிலாக ஆடும் குழு ஆட்டமே ஒயிலாட்டம் ஆகும்.

★ உணர்ச்சிக்கு ஏற்ப பாட்டின் சந்தமும், சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறி மாறி, மனதை ஈர்க்கும்.

★ இதில் கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது.

---

**10. ஒயிலாட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் யாவை ?**

**விடை :**

★ ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

---

**11. தேவராட்டம் – சிறுகுறிப்பு தருக.**

**விடை :**

★ தேவராட்டம் வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப்பொருள்கொள்ளப்படுகிறது.

★ இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்.

---

**12. சேவையாட்டம் – சிறு குறிப்பு தருக.**

**விடை :**

★ சேவையாட்டக் கலைஞர்கள் சேவைப்பலகை, சேமக்கலம், ஜால்ரா ஆகிய இசைக்கருவிகளை இசைத்துக்கொண்டே ஆடுகின்றனர்.

★ இதனை இசைச்சார்புக் கலையாகவும், வழிபாட்டுக் கலையாகவும் நிகழ்த்துகின்றனர்.

---

**13. "தப்பாட்டம்" என்னும் கலைகுறித்து எழுதுக.**

**விடை :**

★ "தப்பு" என்ற தோற்கருவியை இசைத்துக்கொண்டே அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ் கலையே தப்பாட்டம் ஆகும்.

★ தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி.

★ கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகிறது.

★ இதனைப் "பறை" என்றும் அழைப்பர்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. படங்கள்வெளிப்படுத்தும் நிகழ்த்துக்கலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.**

**அ) கரகாட்டம் என்றால் என்ன ?**

**விடை :**



★ "கரகம்" என்னும் பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்து தாளத்திற்கு ஏற்ப ஆடுவது கரகாட்டம் ஆகும்.

**ஆ)கரகச் செம்பு எவ்வாறு செய்யப்படுகிறது ?**

**விடை :**

★ கரகச் செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாக தட்டி, ஆடுபவரின் தலையில் நன்கு படியும்படி செய்கின்றனர்.

★ தலையில் செம்பு நிற்கும் அளவு எடையை ஏற்றுவதற்குச் செம்பில் மணலையோ பச்சரிசியையோ நிரப்புகின்றனர்.

★ கண்ணாடியாலும், பூக்களாலும் அழகூட்டிய கரகக்கூட்டின் நடுவில், கிளி பொம்மை பொருத்திய மூங்கில்குச்சியைச் செருகி வைத்து கரகாட்டச் செம்பைச் செய்கின்றனர்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. "பொய்க்கால் குதிரையாட்டம்" என்னும் நிகழ்கலை குறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக. (பெ.ஆ.க – 4)**

**விடை :**

★ "போலச் செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று.

★ மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டும், குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரை ஆட்டம்.

★ அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

★ இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

★ கலைஞர்கள் தங்கள் கால்களை மறைக்கும் உயரத்திற்குத் துணிகளை கட்டிக்கொள்கின்றனர்.

★ காலில் சலங்கை அணிந்தும், அரசன் அரசி உடையணிந்தும் ஆடுகின்றனர்.

★ குதிரை மேல் ஏறிப்பயணம் செய்வதுபோன்று கடிவாளத்தை ஆட்டியும் காலை உயர்த்தியும் நான்கு புறமும் ஓடியும் ஆடுகின்றனர்.

★ பொய்க்கால் குதிரையாட்டத்திற்குப் பாடல்கள் பயன்படுத்தப்படுவதில்லை.

★ நையாண்டி மேளமும் நாகசுரமும் இசைக்கப்படுகின்றன.

★ இது இராஜஸ்தானில் கச்சிகொடி என்றும் கேரளத்தில் குதிரைக்கனி என்றும் அழைக்கப்படுகின்றது.

---

**3. இன்றைய காலக்கட்டத்திற்கு நிகழ்கலை தேவை என்பதற்கான காரணங்களை எழுதுக.**

**விடை :**

★ சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப்பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள்.

★ இக்கலைகள் மக்களுக்கு மகிழ்ச்சி என்னும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன.

★ சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும், செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன.

★ பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

---

**4. கூத்துப்பட்டறை ந. முத்துச்சாமி குறித்து எழுதுக.**

**விடை :**

★ தெருக்கூத்தைத் தமிழ்க்கலையின் முக்கிய அடையாளமாக்கியவர்.

★ "நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள்" என்றவர்.

★ இவர் தமிழ்நாட்டின் வழிவழி நாடக முறையான கூத்துக்கலையின் ஒப்பனை முறை, கதை சொல்லும் முறைகளையும் எடுத்துக்கொண்டு புதுவிதமான நாடகங்களை உருவாக்கியவர்.

★ அதே வேளையில் நாடகத்தில் பயன்படுத்தும் நேரடி இசைமுறையை அறிமுகம் செய்து இசையிலும் மாற்றங்களை நிகழ்த்தியவர்.

★ இவரின் நாடகங்கள் பெரும்பாலும் சமூக அரசியல் மாற்றங்களைப் பேசின.

★ இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல்வேறு நகரங்களிலும் இவரது நாடகங்கள் நடத்தப்பட்டன.

★ இந்திய அரசின் தாமரைத் திருவிருதையும், தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதையும் பெற்றவர்.

---

## பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.**

**விடை :**

**பாராட்டுக்கடிதம்**

பெருமதிப்பிற்குரிய தலைமை ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம் !

நமது பள்ளி ஆண்டுவிழாவில் நெகிழிப் பைகளின் தீமையை பொம்மலாட்டக் கலை மூலம் எடுத்தியம்பிய விதம் மிகவும் அருமை. நடத்திய பொம்மலாட்டக் கலைஞர்களுக்கும், தலைமை ஆசிரியராகிய உங்களுக்கும் ஏனைய ஆசிரியர் பெருமக்களுக்கும் மாணவர்கள் சார்பாக எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாகரீகம் விஞ்ஞான வளர்ச்சி என்ற பெயரில் மனித இனம் பல்வேறு துறைகளில் புதுப்புது வளர்ச்சியை அடைந்து வந்துள்ளது. ஏன், இன்னும் பல அபரிமிதமான வளர்ச்சியையும் சமூகம் காணப்போகிறது. இதில் ஒரு பாதகமான செயல்பாடு எதுவென்றால், ஒவ்வொரு பொருட்களின் கண்டுபிடிப்புகளுக்குப் பின்பும், அப்பொருளின் பயன்பாட்டுக்குப் பின்பும் ஒரு தீய விளைவை மனித இனம் இந்தப் பூமிக்குக் கொடுத்துக்கொண்டே வந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இன்று நாம் நெகிழி என தமிழில் அழைக்கப்படும் பிளாஸ்டிக் இல்லாத தினசரி வாழ்க்கையில் மக்கள் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு இதனைப் பயன்படுத்தி வருகிறோம் என பொம்மலாட்டக் கலைஞர்கள் நாடகம் மூலம் விளக்கிய விதம் அருமை.

இன்று நாம் நெகிழிப் பைகளை ஒரு முறை மட்டுமே பயன்படுத்தித் தூக்கி எறியும் செயலானது படு பாதகச் செயலாகும். ஏனென்றால் பொதுமக்கள் பொருட்களை வாங்கி எடுத்துச் செல்லப் பயன்படுத்தும் நெகிழிப் பைகளின் சராசரி ஆயுட்காலம் வெறும் 12 நிமிடங்கள் மட்டுமே என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதாவது அதனைக் கையில் வாங்குவதற்கும், குப்பையில் எறிவதற்கும் இடையே வெறும் 12 நிமிடங்கள் மட்டுமே பயன்படுகிறது. ஆனால் இந்த நெகிழிப் பை அழிவதற்கு 1000 ஆண்டுகள் ஆகும். இதை பொம்மலாட்டக் கலைஞர்கள் ஓவியம் மூலம் விளக்கிய விதம் அருமை.

இன்று ஒருவர் தூக்கி எறியும் நெகிழிப் பை அவரது பிள்ளைகள், பேரன் பேத்திகள் இவர்களின் பிள்ளைகள் எனப் பல தலைமுறையினருக்கும் சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என்று பொம்மலாட்டக் கலைஞர்கள் இசைத்துப் பாடிய விதம் அருமை.

ஆங்காங்கே தேங்கிக் கிடக்கும் நெகிழிப் பைகள் அசுத்தத்தை ஏற்படுத்துவதுடன், டெங்கு, மலேரியா எனப் பற்பல நோய்கள் தோன்றக் காரணமாகிறது. நெகிழிக் குப்பையை எரிப்பதால்

இதிலிருந்து டையாக்சின் வாயு வெளியேறுகிறது. இது புற்று நோயை ஏற்படுத்தும் ஆபத்து கொண்டதாகும் என்பதைப் பொம்மலாட்டக் கலைஞர்கள் விளக்கிய விதம் சிறப்பாக இருந்தது.

நன்றி !

இப்படிக்கு,
கீழ்படிந்துள்ள மாணவன்
ர. பாலா

---

**2. நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழைமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள்– அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக. (பெ.ஆ.க –3)**

**விடை :**

**<u>நிகழ்கலை வடிவங்கள் :</u>**

கரகாட்டம், மயிலாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தப்பு ஆட்டம், புலி ஆட்டம், தெருக்கூத்து, தோற்பாவைக் கூத்து.

**<u>அவற்றின் ஒப்பனைகள்:</u>**

**கரகாட்டம் :**

"கரகம்" என்னும்பித்தளைச் செம்பையோ, சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கேற்ப ஆடுவது கரகாட்டமாகும்.

**மயிலாட்டம் :**

★ மயில் வடிவமுள்ள கூட்டுக்குள் ஒருவர் தம் உருவத்தை மறைத்துக்கொண்டு, நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடும் ஆட்டமே மயிலாட்டம் ஆகும்.

★ நையாண்டி மேளம் இசைக்க, காலில் கட்டப்பட்டுள்ள சலங்கை ஒலிக்க, மயிலின் அசைவுகளை ஆடிக்காட்டுவர்.

**காவடியாட்டம் :**

★ மரத்தண்டின் இரு முனைகளிலும் சிற்ப வேலைப்பாடுள்ள பலகையைப் பொருத்தி, மூங்கில் குச்சிகளால் அரைவட்டமாக இணைக்கின்றனர்.

★ அந்த அரைவட்டப்பகுதியைப் பட்டுத் துணியால் மூடி அழகுப்படுத்துகின்றனர்.

★ மேலும் மயிலிறகுக் கற்றைகளைஇருபுறமும் பொருத்தி, மணிகளால் கட்டப்பட்டுள்ள காவடியை உருவாக்குகின்றனர்.

★ காவடிஅமைப்புக்கேற்ப மச்சக்காவடி, சர்ப்பக்காவடி, பூக்காவடி,தேர்க்காவடி, பறவைக்காவடி என்றுஅவற்றைஅழைக்கின்றனர்.

**ஒயிலாட்டம் :**

★ ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டியும் காலில் சலங்கை அணிந்தும் கையில் வைத்துள்ள சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஒயிலாக ஆடும் ஆட்டமே ஒயிலாட்டம் ஆகும்.

★ உணர்ச்சிக்கேற்ப பாட்டின் சந்தமும், சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும் மாறி மாறி மனதை ஈர்க்கும்.

★ இதில் கம்பீரத்துடன் ஆடுதல் ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது.

**தேவராட்டம்:**

★ தேவராட்டம், வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப்பொருள் கொள்ளப்படுகிறது.

★ இது ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம்.

★ உறுமி எனப்பொதுவாக அழைக்கப்படும்.

★ "தேவதுந்துபி" தேவராட்டத்திற்குரிய இசைக்கருவி.

★ இந்தக் கலை, வேட்டிக் கட்டியும் தலையிலும்இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது.

**பொய்க்கால் குதிரையாட்டம் :**

★ மரத்தாலான பொய்க்காலில் நின்று கொண்டும், குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரை ஆட்டம்.

★ அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது.

**தப்பு ஆட்டம் :**

★ "தப்பு" என்ற தோற்கருவியை இசைத்துக்கொண்டே அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ் கலையே தப்பாட்டம் ஆகும்.

★ தப்பு என்பது வட்ட வடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி.

★ கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகிறது.

★ இதனைப் "பறை" என்றும் அழைப்பர்.

**புலி ஆட்டம் :**

★ தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.

★ பாட்டும் வசனமும் இல்லாத ஆட்டங்களில் புலி ஆட்டமும் ஒன்று

★ விழாக்களில் புலிவேடமிடுவோர் உடம்பெங்கும் புலியைப் போன்று கறுப்பும் மஞ்சளுமான வண்ணக்கோடுகளையிட்டுத் துணியாலான வாலை இடுப்பில் கட்டிக்கொள்வர்.

★ தப்பு மேளத்திற்கேற்ப ஒருவரோ, இருவரோ ஆடுவர்.

★ புலியைப் போன்று நடந்தும், பதுங்கியும், பாய்ந்தும், எம்பிக் குதித்தும், நாக்கால் வருடியும், பற்கள் தெரிய வாயைப் பிளந்தும், உறுமியும் பல்வேறு அடவுகளை வெளிப்படுத்துகின்றனர்.

**தெருக்கூத்து :**

★ நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து.

★ இப்பெயர் அது நிகழ்த்தப்பட்ட இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது.

★ கூத்து, இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது.

★ திறந்த வெளியை ஆடுகளமாக்கி ஆடை அணி ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது.

**தோற்பாவைக் கூத்து :**

★ தோலில் செய்த வெட்டு வரைபடங்களை, விளக்கின் ஒளி ஊடுருவும் திரைச்சீலையில் பொருத்தி, கதைக்கேற்ப மேலும், கீழும் பக்கவாட்டிலும் அசைத்துக் காட்டி, உரையாடியும், பாடியும் காட்டுவது தோற்பாவைக் கூத்து.

★ தோலால் ஆன பாவையைக் கொண்டு நிகழ்த்தும் கலையாதலால் தோற்பாவை என்னும் பெயர் பெற்றது.

★ இதில் இசை, ஓவியம், நடனம், நாடகம், பலகுரலில் பேசுதல் ஆகியவை இணைந்துள்ளன.

**<u>சிறப்பும் பழைமையும் :</u>**

★ "நீரற வறியாக் கரகத்து" (புறம்–1) என்ற புறநானூற்றுப் பாடலடியில் கரகம் சொல் இடம்பெறுகிறது.

★ சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் "குடக்கூத்து" என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது. இதுவே கரகாட்டத்திற்கு அடிப்படை என்றும் கருதப்படுகிறது.

★ "தகக தகதகக தந்தத்த தந்தகக" என்னும் தாளம்
பதலை திமிலைதுடி தம்பட்டமும் பெருக – திருப்புகழ் 143

என்று அருணகிரிநாதர், தப்பாட்ட இசை குறித்துப் பக்தி இலக்கியத்தில் பதிவு செய்துள்ளார்.

★ திருவாசகத்திலும், பட்டினத்தார் பாடலிலும் தோற்பாவைக்கூத்து பற்றிய செய்திகளைக் காணமுடிகிறது.

★ ஒன்றைச் சொல்லுவதற்கென்றே (பறைதல்) இசைக்கப்படும் இசைக்கவல்ல தாளக்கருவி பறை.

★ தொல்காப்பியம் குறிப்பிடும் கருப்பொருள்களில் ஒன்றாக பறை இடம்பெறுகிறது.

**<u>இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் :</u>**

★ நவீன காலச் சூழல் வெவ்வேறான கலைநுட்பங்களை கையிலெடுத்துக் கொண்டு மாற்றுக் கலை வடிவங்களை கட்டமைத்துவிட்டது ஒரு காரணம்.

★ மக்கள் ரசனையும் போக்கும் மாறியுள்ளது.

★எந்தக்காட்சிஊடகமும்தெருக்கூத்துக்கலைகளையும்,கலைஞர்களையும் காட்சிப்படுத்துவதில்லை.

★ கலைஞர்களுக்கு நிரந்தர வருமானம் இல்லை.

★ ராமாயணம், மகாபாரதம் தொடங்கி சத்தியவான் சாவித்திரி, நல்லதங்காள், மதுரை வீரன் உள்ளிட்ட கதைப்பாடல்களை வைத்து நடத்தப்படும் கலைஞர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது.

**அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன :**

★ அருகிவரும் நிகழ்கலைக்கு, பொதுமக்களாகிய நாம் ஊர்த் திருவிழாக்களிலும், பொது விழாக்களிலும், இல்ல விழாக்களிலும் ஆதரவு கொடுத்தும் உரிய அங்கீகாரம் கொடுத்தும் நிகழ்கலையை மீட்டெடுப்போம்.

★ அவ்வப்போது கலை இரவுகள் நடத்தித் தெருக்கூத்து, கிராமப்புறக் கலைஞர்களை அரசு ஊக்கப்படுத்த வேண்டும்.

★ இவற்றை எல்லாம் செய்தால் மட்டுமே பெருமை வாய்ந்த நமது நிகழ்கலையைப் பாதுகாக்க இயலும்.

---

**நெடுவினா : (கூடுதல் வினா)**

**3. மூன்று நிகழ்கலை கலைஞர்களை நேர்முகம் கண்டு, அவர்களது கருத்துகளையும், அவர்களது மறுவாழ்விற்கான வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றையும் குறிப்பிட்டு எழுதுக. (பெ.ஆ.க – 6)**

**விடை :**

**(நேர்முகத்தில் பங்கு பெறுவோர் : மாணவர் குருமூர்த்தி, தப்பாட்டக்கலைஞர் – மயில்சாமி, கரகாட்டக்கலைஞர் – குப்புச்சாமி, ஒயிலாட்டக் கலைஞர் – பாரிவேந்தன்)**

**குருமூர்த்தி :** உயிரோட்டமுள்ள தனித்தன்மையுள்ள நிகழ்கலைகளுக்குச் சொந்தக்காரர்களே! வருக ! வருக ! வணக்கம்.

**மயில்சாமி :** நிகழ்கலை கலைஞர்களின் சார்பாக வணக்கம்.

**குருமூர்த்தி :** ஐயா ! இன்றைய நிலையில் நிகழ்கலையின் பயன்பாடு எப்படி இருக்கிறது ?

**மயில்சாமி :** மற்ற நிகழ்கலைகளைவிட அதிகமாக இன்றும் பயன்படுத்தப்படும் கலைகளில் ஒன்றாக தப்பாட்டம் உள்ளது. ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டமானது, தற்போது பெண்களாலும் ஆடப்பட்டு வருவது சிறப்பாகும். கோயில் திருவிழா, திருமணம், விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி மற்றும் சிறப்பு நிகழ்வுகளிலும் இக்கலை பயன்படுத்தப்படுகிறது.

**குருமூர்த்தி :** நன்றி ஐயா! குப்புச்சாமி ஐயா அவர்களே, தங்களது கரகாட்டக்கலை குறித்து கூறுங்களேன்

**குப்புச்சாமி :** வணக்கம் தம்பி ! கரகாட்டம் தமிழகத்தில் மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர், கோயமுத்தூர், திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் மட்டுமே நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இக்கலை தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் நிகழ்த்தப்பட்டா லொழிய வளர்ச்சி ஏற்படாது.

**குருமூர்த்தி :** நன்றி ஐயா ! பாரிவேந்தன் ஐயா அவர்களே, தங்களது ஒயிலாட்டக் கலை குறித்துக் கூறுங்களேன்.

**பாரிவேந்தன் :** வணக்கம் தம்பி! ஒயிலாட்டம் என்பது, உணர்ச்சிக்கேற்ப பாட்டின் சந்தமும், சந்தத்திற்கேற்ப ஆட்டத்தின் இசையும், மாறி மாறி மனத்தை ஈர்க்கும். இதில், கம்பீரத்துடன் ஆடுதல் என்பது தனிச்சிறப்பானது. இன்றைய கால கட்டத்தில் இக்கலை மிகவும் நலிவுடன் காணப்படுவதே உண்மை. காரணம் மீடியாக்களின் வருகை மற்றும் டி.வி. நாடகங்கள் என்பவை மக்களுக்கு இருந்த நிகழ்கலையின் மீதுள்ள ஆர்வத்தைக் குறைத்துவிட்டன என்றே கூறலாம்.

**குருமூர்த்தி :** நன்றி ஐயா! நிகழ்கலைகளும், கலைஞர்களும் முன்னேற்றமடைய எனக்குத் தெரிந்த சில கருத்துகளைக் கூறலாமா ஐயா !

**கலைஞர்கள்:** கூறுங்கள் தம்பி !

**குருமூர்த்தி :** சமீப காலங்களில் இளைஞர்கள் குறும்படங்களை இயக்குவது அதிகமாகி வருகிறது. அத்தகைய இளைஞர்கள் நாட்டுப்புறக் கலைஞர்களுடன் இணைந்து குறும்படங்களையும், ஆவணப்படங்களையும் எடுக்க முன்வரவேண்டும். சமூக விழாக்களிலும் நிகழ்காலக் கலைஞர்களை வரவழைத்து ஆடச் செய்து அவர்களை

கௌரவப்படுத்த வேண்டும். அவற்றைக் காணும் இந்த தலைமுறைக் குழந்தைகளுக்கும் புதிய வகை பொழுது போக்காக அமையும். அதுமட்டுமில்லாமல் கலைஞர்களின் மீது ஆர்வமும் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. கலைகளும் வளர்ச்சியடையும். என்னுடைய கருத்து பற்றி கூறுங்கள் ஐயா.

**கலைஞர்கள் :** மிகவும் அருமையான கருத்து தம்பி. இந்நிகழ்வுகளை அரசே முன்வந்து இளைஞர்களை குறும்படம், ஆவணப்படம் தயாரிக்க உதவி செய்தால் எங்களைப் போல கலைஞர்களின் வாழ்வாதாரம் சிறப்படைவதோடு கலைகளின் அழிவும் காப்பாற்றப்படும் என்பதில் ஐயமில்லை தம்பி.

**குருமூர்த்தி :** என்னுடைய அழைப்பிற்கிணங்க என்னுடன் தங்களின் கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட உங்கள் மூவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி ஐயா !

**கலைஞர்கள் :** நன்றி தம்பி ! விடை பெறுகிறோம்.

**நிகழ்கலைகளின் சங்கமம்**

கண்ணுக்கு காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவன நிகழ்கலைகள். கருத்துடன் கலைத்திறனை நோக்கமாகக் கொண்டு கால வெள்ளத்தைக் கடந்து நிற்பன நிகழ்கலைகள். ஆடல், பாடல், இசை, நடிப்பு, ஒப்பனை, உரையாடல் வழியாக மக்களை மகிழ்வடையச் செய்வன நிகழ்கலைகள். சமூகப் பண்பாட்டுத் தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவன நிகழ்கலைகள். நுட்பமான உணர்வுகளின் உறைவிடமாக இருப்பன நிகழ்கலைகள். இப்படம் கரகாட்டம், மயிலாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், தப்பாட்டம், புலியாட்டம், தெருக்கூத்து போன்ற நிகழ்கலைகளின் சங்கமமாக காட்சியளிக்கின்றது.

---

## மொழிப்பயிற்சி

**அ) விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:**

**1. தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்பப் பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது. (பெ.ஆ.க–1)**

**விடை :**

தப்பாட்டம் எத்தகைய ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது ?

---

**2. ஒயிலாட்டத்தில் தோலாட்டம் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. (பெ.ஆ.க – 1)**

**விடை :**

ஒயிலாட்டத்தில் எந்தெந்த இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன ?

---

**3. "நீரற வறியாக் கரகத்து" (புறம் –1) என்ற புறநானூற்றுப் பாடலில் கரகம் என்ற சொல் இடம்பெறுகிறது.**

**விடை :**

எப்பாடலில் கரகம் என்ற சொல் இடம்பெறுகிறது ?

---

**4. தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.**

**விடை :**

புலி ஆட்டமாவது யாது ?

---

**ஆ) நிறுத்தற்குறியிட்டு எழுதுக:**

**1. போலச்செய்தல் பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று.**

**விடை :**

"போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக்காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று.

**2. மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் புகழ்மிக்க பகுதியில் இராச சோழன் தெரு என்பது இன்றும் உள்ளது.**
**விடை :**
மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் புகழ்மிக்க பகுதியில், "இராச சோழன் தெரு" என்பது இன்றும் உள்ளது.

---

**இ) சந்திப்பிழை நீக்கி எழுதுக.**
**1. இருமுனைகளிலும் சம எடைகளை கட்டிய தண்டினை தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம்**
**விடை :**
இருமுனைகளிலும் சம எடைகளைத் கட்டிய தண்டினைத் தோளில் சுமந்து ஆடுவது காவடியாட்டம்.

---

**2. தேவராட்டம் வானத்து தேவர்கள் ஆடிய ஆட்டம் என பொருள் கொள்ளப்படுகிறது.**
**விடை :**
தேவராட்டம் வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

---

**ஈ) ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக.**
**1. தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றன.**
**விடை :**
தேவராட்டம் குறிப்பாகச் சடங்கு சார்பாக ஆடப்படுகின்றது.

---

**2. பறையாடல் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும் காணப்படுகின்றது.**
**விடை :**
பறையாடல் பற்றிய செய்திகள் இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

---

**உ) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
**சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்நிலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன. (பெ.ஆ.க–5)**
**வினா விடைகள் :**
**1. பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன ?**
**விடை :**
பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணைபுரிகின்றன.

**2) நிகழ்கலையின் பயன்கள் இரண்டினை எழுதுக,**
**விடை : நிகழ்கலையின் பயன்கள் :**
1. நிகழ்கலைகள் மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன.
2. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும், செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன.

**3) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன ?**
விடை :
நிகழ்கலைகள் சிற்றூர் மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன.

---

**ஊ) உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டுவரும் கலையே தெருக்கூத்து. இப்பெயர், அது நிகழ்த்தப்பட்ட இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது. திறந்த வெளியை ஆடுகளமாக்கி, ஆடை அணி ஒப்பனைகளுடன் இது வெளிப்படுத்தப்படுகிறது. களத்துமேடுகளில் நிகழ்த்தப்பட்ட தெருக்கூத்து, தெருச் சந்திப்புகளிலும் நிகழ்த்தப்படுகிறது. பின்னர் கோவில் சார்ந்த கலையாகவும் ஆக்கப்பட்டது. இதில் ஒரு கதையை இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவர். திரௌபதி அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாகவும் இது இருக்கிறது.**

**வினா விடைகள் :**

**1) தெருக்கூத்து என்பது யாது ?**

**விடை :**

நாட்டுப்புற மக்களால் நிகழ்த்தப்பட்டு வரும் கலையே தெருக்கூத்து.

**2) தெருக்கூத்து எதனுடன் தொடர்புடையது ?**

**விடை :**

தெருக்கூத்து இசையுடன் கூடிய உடல் அசைவியக்கத்துடன் தொடர்புடையது.

**3) தெருக்கூத்து எங்கு வெளிப்படுத்தப்படுகிறது ?**

**விடை :**

திறந்தவெளி

**4) தெருக்கூத்தில் எவை வழங்குவர் ?**

**விடை :**

தெருக்கூத்தில் ஒரு கதையை இசை, வசனம், ஆடல், பாடல், மெய்ப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைத்து வழங்குவர்

**5) எந்த அம்மன் வழிபாட்டின் ஒரு பகுதியாக இது இருக்கிறது ?**

**விடை :**

திரௌபதி அம்மன்

---

**எ) படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் வெளிப்படுத்துக. (பெ.ஆ.க–6)**

**விடை :**

1) சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப்பார்க்க இயலாதது நிகழ்கலைகள்
2) கண்ணுக்குக் காட்சியையும், சிந்தைக்குக் கருத்தினையும் தருவன.
3) கருத்துடன்கலைத்திறனை நோக்காகக் கொண்டு காலவெள்ளத்தைக் கடந்து நிற்பன.
4) ஆடல், பாடல், இசை, நடிப்பு, ஒப்பனை, உரையாடல் வழியாக மக்களை மகிழ்வடையச் செய்வன.
5) சமூகப் பண்பாட்டுத் தளத்தின் கருத்துக் கருவூலமாக விளங்குவன.



## கற்பவை கற்றபின்

**1. நீங்கள் அறிந்த நிகழ்கலைகளைத் தனியாகவோ, குழுவாகவோ வகுப்பறையில் நிகழ்த்துக.**

**2. நீங்கள் வாழும் பகுதியிலுள்ள நிகழ்கலைக் கலைஞர்களை நேர்முகம் கண்டு, அவற்றைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.**

**விடை:**

**வல்லவன் :** வணக்கம் ஐயா! நான் பத்தாம் வகுப்பு படிக்கிறேன். எனது பெயர் வல்லவன். தங்களிடம் நிகழ்கலை சார்ந்த சில செய்திகளைத் தெரிந்துகொள்ள வந்திருக்கிறேன்.

**தப்பாட்டக் கலைஞர் :** சொல்லு தம்பி ! என்ன தகவல் வேணும் !

**வல்லவன் :** தப்பாட்டம் பற்றிக் கூறுங்களேன். ஏன் இதற்குத் தப்பாட்டம் என்று பெயர் வந்தது ?

**தப்பாட்டக் கலைஞர் :** "தப்பு" என்ற வட்ட வடிவமாக அமைந்த தோல் கருவியை இசைத்துக் கொண்டே அதன்இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும்.

**வல்லவன் :** இதற்கு வேறு பெயர் உண்டா ?

**தப்பாட்டக் கலைஞர் :** உண்டு "பறையாட்டம்" என்றும் அழைக்கப்படுகிறது.

**வல்லவன் :** தப்பாட்டம் ஆடுவோர் குறித்து கூறுங்கள் ஐயா.

**தப்பாட்டக் கலைஞர் :** ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்தத் தப்பாட்டம், தற்போது பெண்களாலும் ஆடப்பட்டு வருகிறது.

**வல்லவன் :** தப்பாட்டம் எந்நிகழ்ச்சிகளில் எல்லாம் ஆடப்படுகிறது ஐயா ?

**தப்பாட்டக் கலைஞர் :** கோயில் திருவிழா, திருமணம், சிறப்பு விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி முதலான நிகழ்ச்சிகளில் தப்பாட்டம் ஆடப்படுகிறது.

**வல்லவன் :** என்னோடு நேரம் செலவழித்ததற்கு மிக்க நன்றிங்க ஐயா.

# கவிதைப் பேழை

இயல் 6. ஆ

## பூத்தொடுத்தல்
(செய்யுள்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. மலர்கள் தரையில் தவழும், எப்போது ? (பெ.ஆ.க –1)**

அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

**விடை : ஆ) தளரப் பிணைத்தால்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. வாசலில் மரணம் நிற்பதறிந்தும் வருந்தாமல் சிரிப்பது ...............**

அ) தோரணம் ஆ) பந்தல்
இ) பூக்கள் ஈ) விளக்கு

**விடை: இ) பூக்கள்**

**3. "பூத்தொடுத்தல்" கவிதை எழுதியவர் ..............**

அ) உமா மகேஸ்வரி ஆ) கா. மீனாட்சி
இ) இந்திரா பார்த்தசாரதி ஈ) லெட்சுமி

**விடை: அ) உமா மகேஸ்வரி**

**4. கவிஞர் உமா மகேஸ்வரி பிறந்த இடம் எது ?**

அ) மதுரை ஆ) சேலம்
இ) கம்பம் ஈ) கரூர்

**விடை: அ) மதுரை**

---

### பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்
சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்" – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக. (பெ.ஆ.க – 5)**

**விடை :**

★ ஒல்லியான தண்டில் மிக மென்மையான மலர் இருப்பது இயற்கையின் விந்தையாகும்.
★ அதாவது, தாங்குகின்ற தண்டைவிட மலர் பெரியது.
★ அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவை போல் தோன்றினாலும், உலகியல் இயற்கையது.
★ மென்மையான அன்புதான் இந்த உலகத்தைக் காக்கிறது.
★ இதனையே கவிஞர் இவ்வரிகளில் குறிப்பிட்டுள்ளார்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. மலர்களை எவ்வாறு தொடுக்கவேண்டும் ?**

**விடை :**

★ மாலை தொடுப்பவர் மலர்களை இறுக்கிப் பிடித்தால், காம்பின் கழுத்து முறியும்.
★ தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் விழும்
★ ஆதலால், தொடுப்பவர் மலர்களை மென்மையாகத் தொடுக்க வேண்டும்.

**3. பூத்தொடுத்தல் கவிதையின் மையக்கருத்தை எழுதுக.**

**விடை :**

★ வாசலில் மரணம் நிற்பதை அறிந்தும் வருந்தாமல் சிரிக்கும் இந்தச் சிறிய பூவைப் போல் என் மிகச் சிறிய மனமும் பக்குவப்பட வேண்டும் என்பதாகும்.

---

**4. கவிஞர் உமா மகேஸ்வரி – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ கவிஞர் உமா மகேஸ்வரி மதுரை மாவட்டத்தில் பிறந்தவர்.

★ தற்போது தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியில் வாழ்ந்து வருகிறார்.

★ இவர், "நட்சத்திரங்களின் நடுவே", "வெறும் பொழுது", "கற்பாவை" உள்ளிட்ட கவிதைத் தொகுதிகளைப் படைத்துள்ளார்.

★ கவிதை, சிறுகதை, புதினம் என்று பல தளங்களில் படைத்து வருகிறார்.

---

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக. (பெ.ஆ.க – 5)**

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்,<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்<br>– நவீன கவிதை | கையாலே பூவெடுத்தா – மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே பூவெடுத்தா – மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார்<br>– நாட்டுப்புறப் பாடல் |

**விடை :**

**<u>நவீன கவிதை :</u>**

★ நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில் பூக்களை இறுக்கமாக முடிச்சிட்டால், காம்புகளின் கழுத்து முறிந்துவிடும். தளர்வாகப் பூக்களைக் கட்டினால் தரையில் வீழ்ந்துவிடும். மரணம் நிற்பதறிந்தும் வருந்தாமல் சிரித்திடும்.

**<u>நாட்டுப்புறப்பாடல் :</u>**

★ பூவைக் கையால் எடுத்து அம்மனுக்குச் சூட்டினால் காம்பு அழுகிப் போகும். விரலால் பூவை எடுத்தால் வெதும்பி விடும் என்பதால் தங்கத் துரட்டியால் மலரை எடுத்து அம்மனுக்கு மலர் சூட்டுவார்கள் என்று கூறப்படுகிறது.

★ இரு பாடல்களிலும் பூக்களின் மென்மை, அவற்றைக் கையாளவேண்டிய மரபு போன்றவற்றை நாம் காண்கிறோம்.

---

## கற்பவை கற்றபின்

**1. ஒவ்வொரு நாளும் நீங்கள் பார்க்கும் காட்சிகளில் / எதிர்கொள்ளும் நிகழ்வுகளில் கண்டுணரும் அழகை மூன்று நிமிடங்கள் சொற்களில் விவரிக்க.**

**விடை:**



தமிழா !
இரக்கம் கொள் !
தர்மம் செய்
மண்ணறைக்குச் செல்லும்போது
உன்னைத் தனியாகத்தான்
அனுப்புவார்கள் .....
உன் செல்வங்களோடு அல்ல...

ஏழைகளுக்கு இரங்குவது கடவுளுக்கு கடன் கொடுப்பது போன்றது. கடவுள் மனிதனுக்கு செல்வத்தைக் கொடுப்பதன் நோக்கமே, பிறருக்கு கொடுத்து மகிழ்வடைவதோடு தானும் மகிழ்வு அடையவேண்டும் என்பதற்காகவே. மனிதா! ஏழையின் மீது இரக்கம் கொள். நீ இன்பமான சொர்க்க வாழ்வை பூமியிலேயே வாழ்ந்திடலாம்!

கவிதைப் பேழை

இயல் 6. இ

## முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்

– குமரகுருபரர் (செய்யுள்)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. "பண்டி" என்ற சொல்லின் பொருள்...........**

அ) கை ஆ) கால்

இ) வயிறு ஈ) நெற்றி **விடை: இ) வயிறு**

**2. ஆதி வைத்தியநாதன் என அழைக்கப்படுபவர்...........**

அ) விநாயகர் ஆ) சிவன்

இ) திருமால் ஈ) முருகன் **விடை: ஈ) முருகன்**

**3. அணிகலன்களை அணியும் இடத்தில் பொருத்துக.**

**அ) சிலம்பு – 1) காது**

**ஆ) சுட்டி – 2) கால்**

**இ) குழை – 3) தலை**

**ஈ) சூழி – 4) நெற்றி**

**அ) 4, 3, 2, 1 ஆ) 3, 2, 1, 4**

**இ) 2, 4, 1, 3 ஈ) 1, 4, 3, 2** **விடை: இ) 2, 4, 1, 3**

**4. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழை இயற்றியவர்.............**

அ) தாயுமானவர் ஆ) இராமலிங்கர்

இ) குமரகுருபரர் ஈ) அருணகிரிநாதர் **விடை: இ) குமரகுருபரர்**

**5. சிற்றிலக்கியங்களின் வகைகள் ........... ஆகும்.**

அ) 26 ஆ) 76

இ) 96 ஈ) 108 **விடை: இ) 96**

**6. பாட்டுடைத் தலைவனின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது.............**

அ) முல்லைப்பாட்டு ஆ) பிள்ளைத் தமிழ்

இ) பரிபாடல் ஈ) மலைபடுகடாம் **விடை: ஆ) பிள்ளைத் தமிழ்**

**7. பிள்ளைத் தமிழில் இடம் பெறும் பருவங்கள்..............**

அ) எட்டு ஆ) பத்து

இ) நூறு ஈ) இருபது **விடை: ஆ) பத்து**

**8. குமரகுருபரரின் காலம் .......... நூற்றாண்டு**

அ) 17 ஆம் ஆ) 8 ஆம்

இ) 11 ஆம் ஈ) 6 ஆம் **விடை: அ) 17 ஆம்**

**9. கீழ்க்கண்டவற்றுள் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் எனப்படுவது................**

அ) சிற்றில் ஆ) கழங்கு

இ) அம்மானை ஈ) அம்புலி **விடை: அ) சிற்றில்**

**10.கீழ்க்கண்டவற்றுள் பெண்பாற் பிள்ளைத் தமிழ் யாது ?**

அ) சிற்றில் ஆ) கழங்கு

இ) சிறுபறை ஈ) சிறுதேர் **விடை: ஆ) கழங்கு**

**11. செங்கீரைப்பருவம் பிள்ளைத்தமிழில் எந்தப்பருவமாக விளங்குகிறது ?**

அ) இரண்டாம் பருவம் ஆ) ஐந்தாம் பருவம்

இ) முதற்பருவம் ஈ) மூன்றாம் பருவம் **விடை: அ) இரண்டாம் பருவம்**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

**" செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்**
**திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழரை வடமாடப்**
**பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்**
**பட்ட நுதற்பொலி பொட்டோடு வட்டச் சுட்டி பதிந்தாடக்**
**கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்" (பெ.ஆ.க –2)**

**12. இப்பாடலின் ஆசிரியர்.........**

அ) கீரந்தையார் ஆ) குமரகுருபரர்
இ) நம்பூதனார் ஈ) செய்குத்தம்பி பாவலர் **விடை: ஆ) குமரகுருபரர்**

**13. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பிள்ளைத் தமிழ் பருவம்...........**

அ) அம்மானை ஆ) சப்பாணி
இ) சிறுதேர் ஈ) செங்கீரை **விடை: ஈ) செங்கீரை**

**14. "குண்டலமும் குழைகாதும்" –இலக்கணக்குறிப்பு தருக.**

அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை
இ) பண்புத்தொகை ஈ) அடுக்குத் தொடர் **விடை: அ) எண்ணும்மை**

**15. கிண்கிணி, அரைநாண், சுட்டி என்பன முறையே............**

அ) காலில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
ஆ) நெற்றியில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது
ஈ) இடையில் அணிவது, காதில் அணிவது, தலையில் அணிவது

**விடை: இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (கூடுதல் வினா)**

**1. செங்கீரைப்பருவம் – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ செங்கீரைச் செடி காற்றில் ஆடுவது போன்று குழந்தை 5, 6 ஆம் மாதங்களில் மென்மையாக அசையும்.

★ இப்பருவத்தைச் செங்கீரைப் பருவம் என்பர்.

★ இது இரண்டாவது பருவமாகும்.

★ இப்பருவத்தில் குழந்தை தன் இருகை ஊன்றி, ஒரு காலினை மடக்கி, மற்றொரு காலை நீட்டி தலை நிமிர்ந்தும், முகமசைந்தும் ஆடும்.

---

**2. ஆடுக செங்கீரை பாடலில் குறிப்பிடப்படும் அணிகலன்களைப் பட்டியலிடுக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| சிலம்பு, கிண்கிணி | – | காலில் அணிவது |
| அரைநாண் | – | இடையில் அணிவது |
| சுட்டி | – | நெற்றியில் அணிவது |
| குண்டலம், குழை | – | காதில் அணிவது |
| சூழி | – | தலையில் அணிவது |

---

**3. பிள்ளைத் தமிழ் – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ 96 வகையான சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத் தமிழ்.

★ இதில் இறைவனையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவது பிள்ளைத் தமிழ் ஆகும்.

★ பாட்டுடைத் தலைவரின் செயற்கரிய செயல்களை எடுத்தியம்புவது பிள்ளைத் தமிழ்.

**4. பிள்ளைத் தமிழின் வகைகள் யாவை ?**
**விடை :**
★ பிள்ளைத் தமிழ், ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என இரண்டு வகைப்படும்.

---

**5. பிள்ளைத் தமிழின் பருவங்கள் எத்தனை ? அவை யாவை ?**
**விடை :**
★ பிள்ளைத் தமிழின் பருவங்கள் பத்து ஆகும்.
★ சிற்றில், சிறுபறை, சிறுதேர் – ஆண்பாற் பிள்ளைத் தமிழின் இறுதிப் பருவங்களாகும்.
★ கழங்கு, அம்மானை, ஊசல் – பெண்பாற் பிள்ளைத் தமிழின் இறுதிப் பருவங்களாகும்.
★ காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி ஆகிய ஏழு பருவங்களும் இருபாலர்க்கும் பொதுவானவையாகும்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**
**1. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக. (அ.மா.வி) (பெ.ஆ.க–1)**
**விடை :**
★ வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாகச் செங்கீரை ஆடியபோது அவன் திருவடியில் அணிந்த சிறு செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.
★ இடையில் அரைஞாண் மணியோடு ஒளிவீசுகின்ற அரைவடங்கள் ஆடின.
★ பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடியது.
★ பட்டம் கட்டிய நெற்றியில் விளங்குகின்ற பொட்டுடன் வட்டவடிவமான சுட்டி பதிந்தாடின.
★ கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்து ஆடின.
★ உச்சிக் கொண்டையும் அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துகளோடு ஆடின.
★ இவற்றுடன் அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட தொன்மையான வைத்தியநாதபுரியில் எழுந்தருளிய முருகனே ! செங்கீரை ஆடி அருள்க ! எனக் குமரகுருபரர் வேண்டுகிறார்.

---

**சிறுவினா : ( கூடுதல் வினா)**
**2. குமரகுருபரர் – ஆசிரியர் குறிப்பு தருக.**
**விடை :**

| | |
|---|---|
| **ஆசிரியர் பெயர் :** | குமரகுருபரர் |
| **பெற்றோர் :** | சண்முகசிகாமணி கவிராயர், சிவகாம **சுந்தரி** |
| **பிறந்த இடம் :** | திருவைகுண்டம் |
| **காலம் :** | 17 ஆம் நூற்றாண்டு |
| **புலமை :** | தமிழ், வடமொழி, இந்துஸ்தானி |
| **சித்தாந்தம் பயின்றது :** | தருமபுரம் ஆதினத்தில் மாசிலாமணி தேசிகரிடம் |
| **சிறப்பு :** | மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரின் வேண்டுகோளுக்கிணங்க மீனாட்சி அம்மனைப் போற்றி மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழ் என்னும் நூலை இயற்றினார். |
| **எழுதிய நூல்கள் :** | முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், கந்தர் கலிவெண்பா, மீனாட்சிஅம்மை பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், சகலகலாவல்லிமாலை, நீதிநெறி விளக்கம், திருவாரூர் மும்மணிக் கோவை. |

---

## மொழிப்பயிற்சி :

### அ. சொல்லும் பொருளும் :

**விடை :**

| | | | |
|---|---|---|---|
| அரை | இடை | அசும்பிய | ஒளிவீசுகின்ற |
| பண்டி | வயிறு | ஆதி | தொன்மை |
| நுதல் | நெற்றி | முச்சி | தலையுச்சிக் கொண்டை |

### ஆ. இலக்கணக் குறிப்பு :

**விடை :**

| | |
|---|---|
| குண்டலமும் குழைகாதும் | எண்ணும்மை |
| ஆடுக | வியங்கோள் வினைமுற்று |
| செம்பொன், பைம்பொன், சிறுபண்டி, செங்கீரை | பண்புத் தொகைகள் |

### இ. பகுபத உறுப்பிலக்கணம் :

**விடை :**

| | |
|---|---|
| பதிந்து | பதி + த் (ந்) + த் + உ |
| பதி | பகுதி |
| த் | சந்தி (ந் ஆனது விகாரம்) |
| த் | இறந்தகால இடைநிலை |
| உ | வினையெச்ச விகுதி |

## கற்பவை கற்றபின்

**1. சந்தநயமிக்க குழந்தைப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து, வகுப்பறையில் பாடி மகிழ்க.**

**விடை :**

**<u>நிலா</u>**

வட்டநிலா சுற்றி சுற்றி
வானில் ஓடுது
வா வென்றே நானழைத்தால்
வர மறுக்குது
எட்டி எட்டிப் பார்த்தாலுமே
எட்டப் போகுது
ஏனென்று கேட்டால் அது
சிரித்து மழுப்புது !

**<u>அம்மா</u>**

அம்மா அம்மா வருவாளே
அன்பாய் முத்தம் தருவாளே
தும்மும் போது நூறென்பாள்
துணைக்கு என்றும் நானென்பாள்
கட்டி பிடித்து அணைத்தாலும்
காலால் எட்டி உதைத்தாலும்
சுட்டித் தனங்கள் செய்தாலும்
சொந்தம் நமக்கு அம்மாவே !

இயல் 6. ஈ

## கவிதைப் பேழை

## கம்பராமாயணம்

(செய்யுள்)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

பலவுள் தெரிக : (பாடநூல் வினா)

**1. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன ?**
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால்

**விடை: ஈ) அங்கு வறுமை இல்லாததால்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. "கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்" என்று பெருமைப்படுபவர்........... ஆவார்.**
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார்
இ) திரு.வி.க. ஈ) மு. வரதராசனார் **விடை: ஆ) பாரதியார்**

**2.அ) உறங்குவாய்! உறங்குவாய்! – இலக்கணக்குறிப்புத் தருக.**
அ) பண்புத் தொகை ஆ) அடுக்குத் தொடர்
இ) வினைத் தொகை ஈ) உம்மைத் தொகை **விடை: ஆ) அடுக்குத் தொடர்**

**3. பாலகாண்டம் ஆற்றுப்படலத்தில் குறிப்பிட்டுள்ள ஆறு எது ?**
அ) கங்கை ஆ) பிரமபுத்திரா
இ) சரயு ஈ) யமுனா **விடை: இ) சரயு**

**4. மருதநிலம் கொலு வீற்றிருந்த போது கண்விழித்து நோக்கியவை எவை ?**
அ) மல்லிகை மலர்கள் ஆ) அல்லி மலர்கள்
இ) குவளை மலர்கள் ஈ) தாமரை மலர்கள் **விடை: இ) குவளை மலர்கள்**

**5. ஒப்பற்ற அழியாத அழகினை வடிவமாகக் கொண்டவன் ...........**
அ) இலக்குவன் ஆ) குகன்
இ) இராமன் ஈ) பரதன் **விடை: இ) இராமன்**

**6. "ஏழைமை வேடன் இறந்திலன் என்று எனை ஏசாரோ" என்று கூறியவன் யார் ?**
அ) பரதன் ஆ) இலக்குவன்
இ) குகன் ஈ) சுக்ரீவன் **விடை: இ) குகன்**

**7. கும்பகர்ணன் வதைப்படலம் இடம்பெற்றுள்ள காண்டம் ..............**
அ) யுத்த காண்டம் ஆ) பால காண்டம்
இ) சுந்தர காண்டம் ஈ) ஆரணிய காண்டம் **விடை: அ) யுத்த காண்டம்**

**8. "கறங்குபோல் வில்பிடித்த காலதூதர் கையிலே" – இதில் காலதூதர் எனக் குறிப்பிடப்பட்டவர்கள் யார் ?**
அ) பரதன், இராமன் ஆ) இராமன், குகன்
இ) குகன், பரதன் ஈ) இராமன், இலக்குவன் **விடை: ஈ) இராமன், இலக்குவன்**

**9. "எழுந்திராய்! எழுந்திராய்!" என எழுப்பப்பட்டவன்..........**
அ) துரியோதனன் ஆ) குகன்
இ) கும்பகர்ணன் ஈ) பரதன் **விடை: இ) கும்பகர்ணன்**

**10. பாடல் வரிகளுக்கேற்ற படலத்தைப் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ) தாதுகு சோலை | – | 1) நாட்டுப்படலம் |
| ஆ) தண்டலை மயில்களாட | – | 2) கங்கைப் படலம் |
| இ) வெய்யோன் ஒளி | – | 3) கங்கைகாண் படலம் |
| ஈ) ஆழ நெடுந்துரை | – | 4) ஆற்றுப்படலம் |

அ) அ–3, ஆ–2, இ–4, ஈ–1 ஆ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1
இ) அ–1, ஆ–3, இ–2, ஈ–4 ஈ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3

**விடை: ஈ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3**

**11. இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி "இராமாவதாரம்" எனப்பெயரிட்டவர்.**
அ) இளங்கோவடிகள் ஆ) வீரமாமுனிவர்
இ) கம்பர் ஈ) குமரகுருபரர் **விடை: இ) கம்பர்**

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

**"உறங்குகின்ற கும்பகன்னே! உங்கள் மாய வாழ்வெல்லாம்**
**இறங்குகின்றது! இன்று காண் ; எழுந்திராய் எழுந்திராய் !**
**கரங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே,**
**உறங்குவாய், உறங்குவாய்! இனிக் கிடந்து உறங்குவாய் !"**

**12. இப்பாடலின் ஆசிரியர்.........**
அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள்
இ) கண்ணதாசன் ஈ) பாரதியார் **விடை: அ) கம்பர்**

**13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?**
அ) காசிக்காண்டம் ஆ) கொய்யாக்கனி
இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம் **விடை: ஈ) கம்பராமாயணம்**

**14. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடியெதுகை சொற்களை எழுதுக.**
அ) உறங்குகின்ற – உங்கள் ஆ) உறங்குகின்ற – கும்பகன்ன
இ) உறங்குகின்ற – உறங்குவாய் ஈ) உறங்குவாய் – கிடந்து

**விடை: இ) உறங்குகின்ற – உறங்குவாய்**

**15. "மாய" என்பதன் பொருள் தருக.**
அ) திறமையான ஆ) பொய்யான
இ) உண்மையான ஈ) நிறைவான **விடை: ஆ) பொய்யான**

**16. கம்பராமாயணத்திலுள்ள காண்டங்கள் எத்தனை ?**
அ) ஐந்து ஆ) ஆறு
இ) ஏழு ஈ) எட்டு **விடை: ஆ) ஆறு**

**17. "கல்வியில் பெரியவர்" என்று அழைக்கப்படுபவர்............**
அ) திருமூலர் ஆ) திருவள்ளுவர்
இ) கம்பர் ஈ) கபிலர் **விடை: இ) கம்பர்**

**18. கம்பர் பிறந்த ஊர் .............. ஆகும்.**
அ) சேரநாட்டு திருவழுந்தூரைச்சேர்ந்தவர்
ஆ) பாண்டியநாட்டு திருவழுந்தூரைச்சேர்ந்தவர்
இ) சோழநாட்டு திருவழுந்தூரைச் சேர்ந்தவர்
ஈ) பல்லவநாட்டு திருவழுந்தூரைச் சேர்ந்தவர்

**விடை: இ) சோழநாட்டு திருவழுந்தூரைச் சேர்ந்தவர்**

**19. திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர் ...............**
அ) கபிலர் ஆ) நன்னன்
இ) கம்பர் ஈ) இடைக்காடனார் **விடை: இ) கம்பர்**

**20. விருத்தம் என்னும் ஒண்பாவிற்குப் புகழ் பெற்றவர் ..............**
அ) குமரகுருபரர் ஆ) புகழேந்தி
இ) கம்பர் ஈ) கபிலர்

**விடை: இ) கம்பர்**

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. உறங்குகின்ற கும்பகன்ன "எழுந்திராய் எழுந்திராய் "**
**கால தூதர் கையிலே "உறங்குவாய் உறங்குவாய்"**
**கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள் ? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள் ? (பெ.ஆ.க – 6) (செப் – 20)**

**விடை :**

★ "உறங்குகின்ற கும்பகருணனே ! உம்முடைய பொய்யான மாய வாழ்க்கை எல்லாம் வீழ்ச்சி அடையத் தொடங்குகின்ற இன்றே அதனைக் காண எழுந்திருப்பாயாக" என்று எழுப்புகின்றனர்.

★ "காற்றாடி போல வில்லைப் பிடித்து, எமதூதர்களின் கையில் கிடந்து நிரந்தரமாக உறங்குவாயாக" எனச் சொல்கிறார்கள்

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. சரயு நதி எங்கெல்லாம் பரவிப் பாய்கிறது ?**

**விடை :**

★ சரயுநதி, சோலைகள், காடுகள், பொய்கைகள், தடாகங்கள், குருக்கத்தி, கமுகந்தோட்டங்கள், வயல்கள் ஆகிய அனைத்து இடங்களில் பரவிப் பாய்கிறது.

---

**3. இராமனின் அழகைக் கம்பர் எவ்வாறு வருணிக்கிறார் ?**

**விடை :**

★ கம்பர், இராமனின் மேனி அழகை வருணிக்கும்போது, மை, மரகதம், மறிகடல், மழைமுகில் என்றெல்லாம் உவமை கூறியும்,

★ இராமன் நிறைவு அடையாத நிலையில் "ஐயோ!" என்று சொன்னதன் மூலம் அதனை நிறைவுடையதாக்குகிறான் எனக் கம்பர் வருணிக்கிறார்.

---

**4. கம்பராமாயணம் – குறிப்பு தருக.**

**விடை :**

★ கம்பர் இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.

★ இது கம்பராமாயணம் என வழங்கப்பெறுகிறது.

★ இது ஆறு காண்டங்களை உடையது.

★ கம்பராமாயணப் பாடல்கள் சந்தநயமிக்கவை.

---

**5. கம்பராமாயணத்தில் உள்ள காண்டங்கள் யாவை ?**

**விடை :**

★ கம்பராமாயணம், பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்னும் ஆறு காண்டங்களை உடையது.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : ( கூடுதல் வினா)**

**1. சரயுநதி பரவிப் பாய்ந்ததைக் கம்பர் எவ்வாறெல்லாம் சித்தரிக்கின்றார் ?**

**விடை :**

★ மகரந்தப் பொடிகளைச் சிந்தும் சோலைகள், சண்பக மரம் செறிந்த காடுகள், அரும்புகள் இதழ் விரிந்து மலரும் பொய்கைகள், புதுமணல் மிக்க தடாகங்கள், குருக்கத்தி, கமுகந் தோட்டங்கள், நெல் வயல்கள் என இவை அனைத்திலும் புரவிப் பாய்ந்து செழிக்கச் செய்யும் சரயு நதி, பல உடல்களில் ஓர் உயிர் புகுந்து பரவுவதுபோல் இருந்தது எனக் கம்பர் சித்தரிக்கின்றார்.

---

**2. கோசல நாட்டின் வளத்தை வெளிப்படுத்த கம்பர் கையாண்டுள்ள உத்தியை விளக்குக.**
**விடை :**

★ கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு வாய்ப்பில்லை.

★ நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால், உடல் வலிமையை வெளிப்படுத்த இடமில்லை.

★ பொய்மொழி இல்லாமையால், மெய்ம்மை தனித்து விளங்கவில்லை.

★ பலவகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால், அறியாமை இல்லை எனக் கோசலநாட்டின் வளத்தைக் கம்பர் கூறுகிறார்.

★ மேலும் கோசல நாட்டின்பெருமையைப் புலப்படுத்தும்போது, "ஒன்றின் இருப்பால் இன்னொன்று அடையாளப்படுத்துதல்" என்னும் மெய்ப்பியலைக் கம்பர் கையாண்டுள்ளார்.

---

**3."இளையானொடும்போன அழியா அழகுடையானைக்" கம்பர் எவ்வாறு வருணித்துள்ளார் ?**
**விடை :**

★ "இல்லையோ" என்று எண்ணும்படியான நுண்ணிய இடையை உடைய சீதையோடும், இளையவனான இலக்குவனோடும் கானகத்தில் நடந்த இராமனின் நீல நிற மேனியில் சூரியனின் ஒளிபட்டு ஒளிர்ந்து இல்லை என்னும்படி மறைந்தது.

★ அப்போது இராமனின் மேனிநிற அழகை மையோ, மரகதமோ, நீலக்கடலோ, கார்மேகமோ எனப் பல உவமைகளைக் கூறி நிறைவு பெற இயலாததாக இருந்தது.

★ எனினும், இராமனின் அழியா அழகை "ஐயோ" எனக்கூறி வியக்க வைப்பதன் வாயிலாகக் கம்பர் நிறைவுடையதாக்குகிறார்.

---

**4. கும்பகர்ணனின் உறக்கத்தைக் கலைக்கும் காட்சியைக் கம்பர் எவ்வாறு சுவைபடப் புனைந்துரைத்துள்ளார் ?**
**விடை :**

★ ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்ற கும்பகர்ணனைக் கையாலும், தடியாலும், உலக்கையாலும் அடித்தும் இடித்தும் எழுப்புகின்றனர்.

★ இக்காட்சியைக் கம்பர் சந்தநயம்படப் பாடுகிறார்.

★ அதாவது, உறங்குகின்ற கும்பகருணனே! பொய்யான உன் வாழ்வு எல்லாம் அழியத் தொடங்கிவிட்டது. அதனைக் காண எழுந்திரு ! எனவும்

★ "காற்றாடிப் போலச் சுற்றித் திரிகின்ற வில்லைப் பிடித்த எமதூதர்கள் கையில் இனிப் படுத்து உறங்குவாய்" எனவும் கம்பர் சுவைபடப் புனைந்துரைத்துள்ளார்.

---

**5. கம்பர் – ஆசிரியர் குறிப்பு வரைக.**
**விடை :**

| | | |
|---|---|---|
| **ஆசிரியர் பெயர்** | : | கம்பர் |
| **பிறந்த ஊர்** | : | சோழ நாட்டில் உள்ள திருவெழுந்தூர் |
| **காலம்** | : | கி.பி 1180 – 1250 (12 ஆம் நூற்றாண்டு) |
| **ஆதரித்தவர்** | : | திருவெண்ணெய் நல்லூர் சடையப்ப வள்ளல் |
| **புகழ்** | : | இவர் இயற்றிய கம்பராமாயணம் நூலானது மிகவும் புகழ்பெற்றது. |
| **சிறப்புகள்** | : | கல்வியில் பெரியவர் கம்பர், கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர்கம்பன். |
| **இயற்றிய நூல்கள்** | : | சரசுவதி அந்தாதி, சடகோபர் அந்தாதி, ஏரெழுபது, சிலை எழுபது, திருக்கை வழக்கம் |

### பகுதி – IV ( ஐந்து மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.**

**அன்பும் பண்பும் குணச்சித்திரமும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலை நிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி ...... தண்டலை மயில்கள் ஆட.......**

**இவ்வுரையைத் தொடர்க ! (செப் – 20)**

**விடை :**

***தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க,***
***கொண்டல்கள் முழவினேங்க குவளைகண் விழித்து நோக்க,***
***தொண்டிரை யெழினி காட்ட தேம்பிழி மகரயாழின்***
***வண்டுகளி னிதுபட மருதும்வீற்றி ருக்கும்மாதோ,* (35)**

குளிர்ந்த சோலைகளில் மயில்கள் அழகுற ஆட, விரிதாமரை மலர்கள் விளக்குகள் ஏற்றியது போல் தோன்ற, சூழும் மேகங்கள் மத்தள ஒலியால் எழ, மலரும் குவளை மலர்கள் கண்கள் விழித்துப் பார்ப்பது போல் காண, நீர் நிலைகள் எழுப்பும் அலைகள் திரைச்சீலைகளாய் விரிய, மகரயாழின் தேன் ஒத்த இசைபோல் வண்டுகள் ரீங்காரம் பாட மருதம் வீற்றிருக்கிறது.

***வண்மையில்லை யோர்வறுமை யின்மையால்***
***திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்***
***உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்***
***வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்.* (84)**

கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால், கொடைக்கு அங்கேஇடமில்லை; நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால் உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை ; பொய்மொழி இல்லாமையால் மெய்மை தனித்து விளங்கவில்லை ; பலவகைக் கேள்விச் செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை.

***வெய்யோன் ஒளி தன் மேனியில் விரி சோதியில் மறையப்***
***பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான் ;***
***மையோ ? மரகதமோ ? மறிகடலோ ? மழை முகிலோ ?***
***ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.* (1926)**

பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இல்லையெனும்படி மறைந்துவிட இடையே இல்லையெனும்படியான நுண்ணிய இடையாள் சீதையொடும், இளையவன் இலக்குவனொடும் போனான். அவன் நிறம் மையோ? பச்சை நிற மரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ? கார்மேகமோ? ஐயோ! ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன். இராமனுடைய மாநிற மேனியை கம்பர் இவ்வாறு வருணிக்கிறார்.

***ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ ?***
***வேழ நெடும் படை கண்டு விலங்கிடும் வில் ஆளோ ?***
***தோழமை என்றுஅவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ ?***
***"ஏழைமை வேடன் இறந்திலன்" என்று எனை ஏசாரோ ?* (2317)**

ஆழமும் பெரிய அலைகளையும் உடைய சங்கை ஆற்றைக் கடந்து செல்வார்களா ? யானைகள் கொண்ட சேனையைக் கண்டு புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில்வீரனோ நான் ? தோழமை என்று இராமர் சொன்ன சொல், ஒப்பற்ற சொல் அல்லவா ? தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகவிட்டால், அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழி சொல்ல மாட்டார்களா ?

***"உறங்குகின்ற கும்பகன்ன ! உங்கள் மாய வாழ்வெ லாம்***
***இறங்குகின்றது ! இன்று காண் ; எழுந்திராய் ! எழுந்திராய் !***
***கறங்கு போல வில்பிடித்த கால தூதர் கையிலே,***
***உறங்குவாய், உறங்குவாய் ! இனிக் கிடந்து உறங்குவாய் !"***

உறங்குகின்ற கும்பகருணனே ! உம்முடைய பொய்யான வாழ்வு எல்லாம் இன்றிலிருந்து இறங்குவதற்குத் தொடங்கிவிட்டது. அதனைக் காண்பதற்காக எழுந்திடுவாய்! எழுந்திடுவாய்! காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப் படுத்து உறங்குவாயாக!

**மொழிப்பயிற்சி**

**அ) சொல்லும் பொருளும்:**

**விடை:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொண்டல் | – | மேகம் | வண்மை | – | வளமை |
| வெய்யோன் | – | பகலவன் | முகில் | – | மேகம் |

**ஆ) இலக்கணக் குறிப்பு:**

**விடை:**

நெடுந்திரை – பண்புத்தொகை
விழித்து – வினையெச்சம்
விரிசோதி – வினைத்தொகை

**இ) பகுபத உறுப்பிலக்கணம்:**

**விடை:**

விழித்து – விழி+த் +த்+உ
விழி – பகுதி
த் – சந்தி
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

**ஈ) பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

***வெய்யோன் ஒளி தன்மேனியில் விரி சோதியில் மறையப்***
***பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்;***
***மையோ ? மரகதமோ ? மறிகடலோ ? மழை முகிலோ ?***
***ஐயோ இவன் வடிவு என்பது ஓர் அழியா அழகு உடையான்.***

**1) இப்பாடல் இடம்பெற்ற நூல் ?**
**விடை :** கம்பராமாயணம்

**2) இப்பாடலின் ஆசிரியர் யார் ?**
**விடை :** கம்பர்

**3) பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்**
**விடை :** வெய்யோன்– பொய்யோ; மையோ – ஐயோ

**4) வெய்யோன் – இச்சொல்லின் பொருள் தருக.**
**விடை :** பகலவன்

**5) போனான் – இலக்கணக்குறிப்பு தருக.**
**விடை :** வினையாலணையும் பெயர்

## கற்பவை கற்றபின்

**கம்பராமாயணக் கதை மாந்தர்களுள் எவரேனும் ஒருவர் குறித்து வகுப்பில் உரையாற்றுக.**

**விடை :**

★ கம்பராமாயணக் கதை மாந்தர்களுள் எனக்குப் பிடித்த கதாபாத்திரம் **அனுமன்** ஆவார்.

★ சொல்லின் செல்வனாக விளங்கும் அனுமன் இந்து தொன்மவியலின் அடிப்படையில் இறைவன் இராமனின் பக்தனும், இந்துக்களின் கடவுளும் ஆவார்.

★ இராமாயணத்தில் இராமனின் மிக முக்கியமானதொரு பாத்திரமாக வானரப்படையில் இடம்பெறுகிறார்.

★ அனுமனுக்கு மாருதி, ஆஞ்சநேயன் போன்ற பெயர்களும் வழங்கப்படுகின்றன.

★ அனுமனின் தாய் அஞ்சனா தேவி, தந்தையின் நாமம் கேசரீ (வானரத் தலைவர்) இவர்களின் குலதெய்வம் வாயு (பஞ்சபூதங்களில் ஒன்று) ஆவார்.

★ இவரே அனுமனுக்குத் தந்தையாகவும், குருவாகவும் இருந்து வழி நடத்தியதால் அனுமன் வாயு புத்திரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

★ இராமாயணம் தவிர மகாபாரதம் மற்றும் சில புராணங்களிலும் அனுமனைப் பற்றிய குறிப்புகள் உண்டு.

★ அனுமன் இராமன் மீது கொண்ட அளவற்ற பக்தியால் இராமனின் தொண்டனாக விளங்கியவர்.

★ அனுமன் வாழ்நாள் முழுவதும் பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தவர்.

★ பிற்காலத்தில் வடஇந்தியாவில் அனுமனை சிவனின் அவதாரமாகவும் கருதுபவர்கள் உண்டு.

## விரிவானம்

இயல் 6. உ

### பாய்ச்சல்
– சா.கந்தசாமி (துணைப்பாடம்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. தக்கையின்மீது நான்கு கண்கள் என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கதை......**
அ) புயலிலே ஒரு தோணி ஆ) கோபல்லபுரத்து மக்கள்
இ) பாய்ச்சல் ஈ) புதிய நம்பிக்கை **விடை: இ) பாய்ச்சல்**

**2. பாய்ச்சல் என்னும் கதையின் ஆசிரியர்............**
அ) சா. கந்தசாமி ஆ) கி. ராஜநாராயணன்
இ) பா. சிங்காரம் ஈ) கமலாலயன் **விடை: அ) சா. கந்தசாமி**

**3. சா. கந்தசாமியின் பிறந்த ஊர்...............**
அ) எழுமலை மதுரை மாவட்டம் ஆ) மயிலாடுதுறை நாகப்பட்டினம் மாவட்டம்
இ) எடப்பாடி சேலம் மாவட்டம் ஈ) பரமத்தி நாமக்கல் மாவட்டம்
**விடை: ஈ) பரமத்தி நாமக்கல் மாவட்டம்**

**4. சா. கந்தசாமிக்கு எழுத்துலகில் புகழைப்பெற்றுத்தந்த புதினம்...........**
அ) சாந்தகுமாரி ஆ) விசாரணைக் கமிஷன்
இ) சுடுமண் சிலைகள் ஈ) சாயாவனம் **விடை: ஈ) சாயாவனம்**

**5. சா. கந்தசாமிக்கு சாகித்ய அகாதெமி பெற்றுத்தந்த புதினம்..........**
அ) சூர்யவம்சம் ஆ) சாந்தகுமாரி
இ) சுடுமண் சிலைகள் ஈ) விசாரணைக்கமிஷன் **விடை: ஈ) விசாரணைக்கமிஷன்**

**6. சுடுமண் சிலைகள் என்ற புதினத்திற்கு அனைத்துலக விருது பெற்றவர்.............**
அ) சா. கந்தசாமி ஆ) அழகிரிசாமி
இ) கமலாலயன் ஈ) ப. சிங்காரம் **விடை: அ) சா. கந்தசாமி**

**7. "ஓங்கு இரும் பரப்பின்**
**வங்க ஈட்டத்து தொண்டியோர்" – இவ்வடி இடம்பெற்றுள்ள நூல்..............**
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) கம்பராமாயணம் ஈ) திருக்குறள் **விடை: அ) சிலப்பதிகாரம்**

**8. தொண்டி அமைந்துள்ள மாவட்டம்..............**
அ) திருவள்ளூர் ஆ) நாகப்பட்டினம்
இ) கடலூர் ஈ) இராமநாதபுரம் **விடை: ஈ) இராமநாதபுரம்**

### பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (கூடுதல் வினா)**

**1. சா. கந்தசாமி எழுதிய பாய்ச்சல் என்னும் சிறுகதையைச் சுருக்கி எழுதுக.**

**விடை :**

**முன்னுரை :**

உண்மைக் கலைஞன் தன் கலையில் முழு ஈடுபாட்டைக் காட்டுவான். கலை ஈடுபாட்டில் அவனுக்கு வயதோ, உடல்சோர்வோ பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. தன் கலையைப் பின்பற்ற தகுந்த வாரிசு உருவாகிறபோது அவன் கொள்கிற மகிழ்ச்சி அளப்பரியது. தக்கையின் மீது நான்கு கண்கள் என்ற சிறுகதைத் தொகுப்பில் பாய்ச்சல் கதையை எழுதியுள்ளார் ஆசிரியர் சா.கந்தசாமி.

**அனுமார் ஆட்டம் :**

ஆளுயரக் குரங்கு ஒன்று மரத்தில் இருந்து இறங்குவது கண்டு அதிசயித்தான் அழகு. நாதசுரமும் மேளமும் ஒன்றாக இழைந்து ஒலித்தன. வலது, இடது எனக் கால்மாற்றி சதங்கை ஒலியோடு ஆடியது அனுமார் என உணர்ந்தான். கடையில் தொங்கிய வாழைத்தாரில் இருந்து பழங்களைப்

பறித்துக் கூட்டத்தில் உள்ளவர்களுக்குக் கொடுத்தார். கீச் கீச் என்று கத்திக்கொண்டே பந்தல் காலைப் பற்றி மேலேறினார். பெருங்குரல் எழுப்பியபடி கீழே குதித்தபோது வாயில் தீப்பந்தம். கரணமடித்தல், பெரிய சத்தம், பெரிய சிரிப்பு என அனுமார் ஆட்டம் உச்சத்தைத் தொட்டது.

**வாரிசை வாழ்த்தும் கலைஞன் :**

வால்பிடித்து வந்த ஆள் அழகிடம் கைமாற்றிவிட்டான். அனுமாரின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஓடி ஓடி வால் சுமந்தான் அழகு. ஆட்டம் ஓய்ந்தது. கழுத்து மணி அறுந்து விழுந்தது கூடத் தெரியாது அனுமாருக்கு. அவ்வளவு ஈடுபாடுஆட்டத்தில். களைப்பில் எதிரே வந்த கார்காரர் கொடுத்த பணத்தைக் கூட மேளக்காரனை வாங்கச் சொன்னார். வால், வேட்டி, மார்புக்கச்சை, சதங்கைகளைக் கழற்றிப் போட்டபடி சுவரில் சாய்ந்தார். அவரைப் போல ஆட ஆசை எனச் சொன்னான் அழகு. உடனே உற்சாகம் தொற்றியது. காலில் சலங்கை, பின்னர் வாலில் தீப்பந்தம் கட்டி அழகு ஆட இவர் உற்சாகப்படுத்தியபடி ஓட இறுதியில் அழகு மட்டும் ஆடிக்கொண்டிருந்தான்.

**முடிவுரை :**

அனுமார் ஆட்டத்தில் பாய்ச்சல் முக்கியம். என்னாடா எனக்கா பாச்சக் காட்டுற என்று கத்தியபடி அழகைப் பிடிக்க வந்த அனுமாரின் ஆட்டம் முடிந்தது. தனக்கு ஒரு வாரிசு உருவாகி விட்டதைக் காணும்போது உடம்பின் வலியும் வேதனையும் இருமலும் ஒரு பொருட்டல்ல. கற்றுக் கொண்ட கலையைக் கற்றுக் கொள்ளக் கலைஞனுக்குக் கொடுப்பது உயிரானாலும் வலி தெரிவதே இல்லை.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் தெருக்களில் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞர்களைப் போல வேடமிட்டு ஆடல் நிகழ்த்திக் காட்டுக.**

**விடை :**

மாணவர்கள் தாங்களாகவே நிகழ்த்த வேண்டும்.

**2. மேடைக் கலைஞர்களும் பகல் வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகள் குறித்து வகுப்பறையில் விவாதிக்க.**

**விடை :**

**மாணவர்கள் :** வணக்கம் ஐயா!

**தமிழாசிரியர் :** வணக்கம் மாணவர்களே! அமருங்கள். இன்றைய வகுப்பில் நாம் பார்க்கப் போவது நிகழ்கலைக்குச் சொந்தக்காரர்களான மேடைக் கலைஞர்களும், பகல்வேடக் கலைஞர்களும் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்து விவாதிப்போமா !

**மாணவர்கள் :** சரிங்க ஐயா!

**தமிழாசிரியர் :** இந்த விவாதத்தில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் எழுந்து நில்லுங்கள்.

**மாணவர்கள் :** சிலர் எழுந்து நிற்கிறார்கள்.

**தமிழாசிரியர் :** மற்ற மாணவர்களைப் பார்த்து, "எழுந்து நிற்கும் மாணவர்களுக்கு கரவொலி எழுப்புங்கள்"

**தமிழாசிரியர் :** இரவு நேரங்களில் நடைபெறும் நாடகங்கள் மற்றும் மேடை நிகழ்ச்சிகளில் நடித்துக் கொண்டிருக்கும் மேடைக்கலைஞர்களைப் பிடிக்காவிட்டால், கீழே அமர்ந்து வேடிக்கை பார்ப்பவர்கள், சில தகாதப் பொருட்களைக் கொண்டு எறிவார்கள். மேலும் கூச்சலிட்டு இடையூறு செய்வார்கள். இதனால் கலைஞர்கள் மனதளவில் பாதிக்கப்படுவார்கள்.

**மாணவர்கள் :** உண்மைதான் ஐயா! பகல் வேடக் கலைஞர்கள் தெருவில் கூத்துகளை நடித்துக் கொண்டிருக்கும் போது சிலர் ஏளனமாகப் பார்த்து கேலிசெய்வது, சில நேரங்களில் பெண் கலைஞர்களைக் கையைப் பிடித்துத் துன்பப்படுத்துவது இப்போது உண்டுங்க ஐயா.

**தமிழாசிரியர்:** இச் செயல்பாடுகளால் கலைஞர்களின் மனம் புண்படுவதோடு, நடிப்பின் மீது கொண்டுள்ள ஆர்வமும் குறைந்துவிடுகிறது. இதனால் பல கலைகள் அழிந்துவிட்டது என்றே கூறலாம். திரைப்படத் துறையில் ஏற்பட்ட முன்னேற்றமும் மேடைக் கலைஞர்களைப் பெரிதும் பாதித்து விட்டது என்றே கூறலாம்.

கற்கண்டு

இயல் 6. ஊ

## அகப்பொருள் இலக்கணம் (இலக்கணம்)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்............. (பெ.ஆ.க – 3)**

அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்

ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்

இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்

ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**விடை: இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. கருப்பொருளுக்கேற்ப உரிப்பொருளைப் பொருத்துக. (பெ.ஆ.க – 4)**

அ) குறிஞ்சி – 1) உப்பு விளைவித்தல்

ஆ) முல்லை – 2) நெல்லரிதல்

இ) மருதம் – 3) நிரை மேய்த்தல்

ஈ) நெய்தல் – 4) தேனெடுத்தல்

அ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1 ஆ) அ–3, ஆ–2, இ–4, ஈ–1

இ) அ–1, ஆ–3, இ–2, ஈ–4 ஈ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3

**விடை: அ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1**

**3. முல்லைநில மக்களின் உணவுப் பொருள்கள் ............ (பெ.ஆ.க – 6)**

அ) வெண்நெல், வரகு ஆ) மலைநெல், திணை

இ) வரகு, சாமை ஈ) மீன், செந்நெல் **விடை: இ) வரகு, சாமை**

**4. பொருளிலக்கணம் ................. வகைப்படும்**

அ) இரண்டு ஆ) நான்கு

இ) ஆறு ஈ) ஏழு **விடை: அ) இரண்டு**

**5. அகத்தினைகள் ............ வகைப்படும்.**

அ) ஐந்து ஆ) ஆறு

இ) ஏழு ஈ) எட்டு **விடை: அ) ஐந்து**

**6. பொழுது .................வகைப்படும்.**

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து **விடை: அ) இரண்டு**

**7. சித்திரை, வைகாசி ஆகிய இரண்டும் ................ காலத்திற்குரியன.**

அ) பின்பனி ஆ) இளவேனில்

இ) முதுவேனில் ஈ) கார்காலம் **விடை: ஆ) இளவேனில்**

**8. எம்மாதங்கள் முதுவேனிற்காலம் எனப்பிரித்துள்ளனர் ?**

அ) ஆனி, ஆடி ஆ) மாசி, பங்குனி

இ) ஆவணி, புரட்டாசி ஈ) மார்கழி, தை **விடை: அ) ஆனி, ஆடி**

**9. மலையும் மலைசார்ந்த இடமும்..........**

அ) குறிஞ்சி ஆ) முல்லை

இ) மருதம் ஈ) நெய்தல் **விடை: அ) குறிஞ்சி**

**10. பிற்பகல் 2 மணிமுதல் 6 மணிவரை எவ்வாறு அழைக்கப்படுகிறது ?**

அ) எற்பாடு ஆ) மாலை

இ) யாமம் ஈ) வைகறை **விடை: அ) எற்பாடு**

**11. இரவு 10 மணிமுதல் இரவு 2 மணிவரை எவ்வாறு அழைக்கப்படுகிறது ?**

அ) யாமம் ஆ) எற்பாடு

இ) வைகறை ஈ) மாலை **விடை: அ) யாமம்**

**12. இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை எவ்வாறு அழைக்கப்படுகிறது ?**

அ) எற்பாடு ஆ) மாலை

இ) யாமம் ஈ) வைகறை **விடை: ஈ) வைகறை**

**13. முல்லை நிலத்திற்குரிய பெரும்பொழுதினை தேர்ந்தெடுக்க.............**

அ) குளிர்காலம் ஆ) கார்காலம்

இ) இளவேனில் ஈ) முதுவேனில் **விடை: ஆ) கார்காலம்**

**14. குறிஞ்சி நிலத்திற்குரிய விலங்குகள் ................**

அ) முயல், மான், புலி ஆ) எருமை, நீர்நாய்

இ) புலி, கரடி, சிங்கம் ஈ) முதலை, சுறா **விடை: இ) புலி, கரடி, சிங்கம்**

**15. முல்லை நிலத்திற்குரிய தெய்வம்.................**

அ) முருகன் ஆ) திருமால்

இ) வருணன் ஈ) இந்திரன் **விடை: ஆ) திருமால்**

**16. மருதநிலத்திற்குரிய சிறுபொழுது ................**

அ) யாமம் ஆ) மாலை

இ) வைகறை ஈ) நண்பகல் **விடை: இ) வைகறை**

**17. நெய்தல் நிலத்திற்குரிய பறவை ................**

அ) கிளி ஆ) காட்டுக்கோழி

இ) நாரை ஈ) கடற்காகம் **விடை: ஈ) கடற்காகம்**

**18. பாலை நிலத்திற்குரிய பறவைகள் ................**

அ) நாரை, அன்னம் ஆ) மயில், கோழி

இ) புறா, பருந்து ஈ) கிளி, மயில் **விடை: இ) புறா, பருந்து**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக. (பெ.ஆ.க – 2)**

**விடை :**

**முதற்பொருள் :**

நிலம் – காடும் காடு சார்ந்த இடமும் –முல்லை

பெரும்பொழுது – கார்காலம் (மழைக்காலம்)

சிறுபொழுது – மாலைப்பொழுது

**கருப்பொருள் :**

உணவு – வரகு (வரகில் சமைத்த உணவு)

---

**2. கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.**

**உழவர்கள் மலையில் உழுதனர்.**

**முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்**

**விடை :**

★ உழவர்கள் வயலில் உழுதனர்.

★ நெய்தல், தாழை பூவைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**குறுவினா : (கூடுதல் வினா)**

**3. அன்பின் ஐந்திணைகள் யாவை ?**

**விடை :**

★ குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தம், பாலை என்பன அன்பின் ஐந்திணைகளாகும்.

**4. ஐந்திணைகளுக்குரிய பொருள்கள் எவை ?**

**விடை :**

★ முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியன ஐந்திணைகளுக்குரிய பொருள்களாகும்.

**5. முதற்பொருள் என்பது யாது ?**

**விடை :**

★ அகவொழுக்க நிகழ்தற்குக் காரணமான நிலமும் பொழுதும் முதற்பொருளாகும்.

**6. கருப்பொருள் என்றால் என்ன ?**

**விடை :**

★ நிலத்தில் காணப்பெறும் தெய்வம், மக்கள், உணவு, விலங்கு, பூ, மரம், பறவை, ஊர், நீர், பறை, யாழ், பண், தொழில் என்பன கருப்பொருள்களாகும்.

**7. ஐந்திணைகளுக்குரிய நிலங்களைக் குறிப்பிடுக.**

**விடை :**

| | | ஐவகை நிலங்கள் |
|---|---|---|
| குறிஞ்சி | – | மலையும் மலை சார்ந்த இடமும் |
| முல்லை | – | காடும் காடு சார்ந்த இடமும் |
| மருதம் | – | வயலும் வயல் சார்ந்த இடமும் |
| நெய்தல் | – | கடலும் கடல் சார்ந்த இடமும் |
| பாலை | – | சுரமும் சுரம் சார்ந்த இடமும் |

**8. பெரும்பொழுதின் பிரிவுகளைக் கூறுக.**

**விடை :**

**பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)**

1. கார்காலம் – ஆவணி, புரட்டாசி
2. குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை
3. முன்பனிக் காலம் – மார்கழி, தை
4. பின்பனிக் காலம் – மாசி, பங்குனி
5. இளவேனிற் காலம் – சித்திரை, வைகாசி
6. முதுவேனிற் காலம் – ஆனி, ஆடி

**9. சிறுபொழுதின் கூறுகளைக் கூறுக.**

**விடை :**

**சிறுபொழுது (ஒரு நாளின் ஆறு கூறுகள்)**

1. காலை – காலை 6 மணிமுதல் 10 மணிவரை
2. நண்பகல் – காலை 10 மணி முதல் 2 மணிவரை
3. எற்பாடு – பிற்பகல் 2 மணி முதல் 6 மணி வரை
4. மாலை – மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை
5. யாமம் – இரவு 10 மணிமுதல் இரவு 2 மணிவரை
6. வைகறை – இரவு 2 மணிமுதல் காலை 6 மணிவரை

**10. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.**
**விடை :**

1. தெய்வம் – திருமால்
2. மக்கள் – ஆயர், ஆய்ச்சியர்
3. உணவு – வரகு, சாமை
4. தொழில் – ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல்

**11. நெய்தல் திணைக்குரிய தொழில்களை எழுதுக.**
**விடை :**

★ மீன் பிடித்தல், உப்பு விளைத்தல்

பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது ; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப்பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன; – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக. (பெ.ஆ.க–3)**
**விடை :**

★ காலப்போக்கில் பல மாற்றங்கள் ஒவ்வொரு நிலங்களிலும் நிகழ்ந்துள்ளன என்பதை மறுக்க முடியாது.

★ கடற்கரையில் ஓய்வு விடுதிகள் பெருகியுள்ளன. என்றாலும் மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் தொழில்களும் நடைபெறுகின்றன.

★ மலைப்பகுதிகளில் ஓய்வு இல்லங்கள், காப்பி, தேயிலைத் தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனாலும் நம் முன்னோர் செய்த மலைநிலப் பயிர்களும் விளைவிக்கப்பெறுகின்றன.

★ நிலப்பகுதிகளில் வணிகம் தொழிற்சாலைகள் முதலியன பெருகியுள்ளன. எனினும், உழவுத் தொழிலும் செய்யப்பெறுகிறது.

★ காலம் எவ்வளவுதான் மாற்றத்தை உருவாக்கினாலும் தமிழரின் திணைநிலத் தொழில்களும் ஆங்காங்கே இன்றளவும் செய்யப்பட்டே வருகின்றன.

**கருப்பொருள் அட்டவணை :**

| கருப்பொருள் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை |
|---|---|---|---|---|---|
| தெய்வம் | முருகன் | திருமால் | இந்திரன் | வருணன் | கொற்றவை |
| மக்கள் | வெற்பன், குறவர், குறத்தியர் | தோன்றல் ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | சேர்ப்பன், பரதன், பரத்தியர் | எயினர், எயிற்றியர் |
| உணவு | மலைநெல், தினை | வரகு, சாமை | செந்நெல், வெண்ணெல் | மீன், உப்புக் குப் பெற்ற பொருள் | சூறையாடலால் வரும் பொருள் |
| விலங்கு | புலி, கரடி, சிங்கம் | முயல், மான், புலி | எருமை, நீர் நாய் | முதலை, சுறா | வலியிழந்த யானை |
| பூ | குறிஞ்சி, காந்தள் | முல்லை, தோன்றி | செங்கழுநீர், தாமரை | தாழை, நெய்தல் | குரவம், பாதிரி |
| மரம் | அகில், வேங்கை | கொன்றை, காயா | காஞ்சி, மருதம் | புன்னை, ஞாழல் | இலுப்பை, பாலை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பறவை | கிளி, மயில் | காட்டுக் கோழி, மயில் | நாரை, நீர்க்கோழி, அன்னம் | கடற்காகம் | புறா, பருந்து |
| ஊர் | சிறுகுடி | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் | குறும்பு |
| **கருப்பொருள்** | **குறிஞ்சி** | **முல்லை** | **ருதம்** | **நெய்தல்** | **பாலை** |
| நீர் | அருவிநீர், சுனை நீர் | காட்டாறு | மனைக் கிணறு, | மணற் கிணறு, | வற்றிய சுனை, கிணறு |
| பறை | தொண்டகம் | ஏறு | பொய்கை மணமுழா, | உவர்க்கழி மீன் | துடி |
| யாழ் | குறிஞ்சி யாழ் | கோட்பறை முல்லை யாழ் | நெல்லரி– கிணை மருத யாழ் | கோட்பறை விளரி யாழ் | பாலை யாழ் |
| பண் | குறிஞ்சிப்பண் | முல்லைப் பண் | மருதப்பன் | செவ்வழிப் பண் | பஞ்சுரப்பண் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல் | ஏறு தழுவுதல், நிரை மேய்த்தல் | நெல்லரிதல், களை பறித்தல் | மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் | வழிப்பறி, நிரை கவர்தல் |

### கற்பவை கற்றபின்

**பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறையையும் இன்றைய தமிழரின் வாழ்க்கை முறையையும் ஒப்பிட்டு ஒவ்வொருவர் கருத்தையும் பதிவு செய்து பொதுக் கருத்தை அறிக.**

**விடை :**

**பண்டைத் தமிழரின் திணைநிலை வாழ்க்கை முறை:**

பண்டைத் தமிழர்கள் நிலங்களை ஐந்து வகையாகப் பிரித்தனர். அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பிரித்ததோடு மட்டுமல்லாமல் அந்நிலங்களுக்குரிய செயல்பாடுகளை வைத்து ஒவ்வொரு திணைக்கும் நிலம், பொழுது, என்ற முதற்பொருளையும், கருப்பொருள்கள் சிலவற்றையும், உருப்பொருள் எனப் பாகுபாடு செய்து முறையான வாழ்க்கை வாழ்ந்துவந்தனர்.

**மாறன்** : குறிஞ்சித் திணை மக்கள் மலையும் மலைசார்ந்த இடங்களில் வாழ்ந்து வந்தார்கள். குறவர், குறத்தி என அழைக்கப்பட்டார்கள். குறி சொல்லும் தொழிலைப் பெண்களும், தேனெடுத்தல் தொழிலை ஆண்களும் செய்து வந்தனர். தற்காலக் குறவர்கள் பொது இடங்களில் ஊசி, பாசி விற்கின்றனர். அன்று மலை நெல் பயிரிட்டு உணவாக உண்டனர். தற்போது தேயிலை மற்றும் வேறு சில பயிர்களும் பயிரிட்டு வாழ்ந்து வருகின்றனர்.

**பூபதி** : முல்லைத் திணை மக்கள் காடும் காடு சார்ந்த இடமும் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். தற்போது காடுகள் அழிக்கப்பட்டு நகரங்களாக மாறிவிட்டன. காட்டில் வாழும் விலங்குகளும் இன்று அரிதாகிவிட்டது. அன்று முல்லைத்திணை மக்கள் மேற்கொண்ட ஆநிரை மேய்த்தல், ஏறுதழுவுதல் போன்ற தொழில்கள் இன்று மருதநில மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கண்ணன் :** மருத திணை மக்கள் வயலும் வயல் சார்ந்த பகுதிகளில் வாழ்ந்து வந்தார்கள். இன்று வயல்கள் எல்லாம் விலைநிலங்களாக மாறிவிட்டன. காரணம் தொழிற்சாலைகளும், மக்கள் தொகைப் பெருக்கமும், பல்வேறு தொழில்களும் பெருகிவிட்டதால் இன்று உழவுத் தொழில் அரிதாகிவிட்டது.

**முத்து :** நெய்தல் திணை மக்கள் கடலும் கடல்சார்ந்த பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இங்கு வாழ்ந்த மக்களைப் பரதவர், பரத்தியர் என அழைத்தனர். தற்போதும் மீன்பிடிக்கும் தொழிலையே செய்து வருகின்றனர்.

**அருண் :** பாலைத்திணை மக்கள் மணலும் மணல் சார்ந்த பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இந்நிலம் இன்று தமிழகத்தில் இல்லை என்றேகூறலாம்.

ஐவகைத் திணைகளில் வாழ்ந்த அந்தந்த திணைக்குரிய ஒழுக்க நெறிகளை கடைபிடித்ததோடு, பண்டமாற்று முறை மற்றும் கடல் வாணிபம் ஆகியவற்றில் சிறந்தவர்களாக விளங்கினர்.

**இன்றைய வாழ்க்கை முறை :**

இன்றைய மனிதன் உடலை வருத்தி வாழ விரும்புவதில்லை. வியர்வை சிந்தாமல் சொகுசாக வாழும் நாகரிக வாழ்க்கையை மட்டுமே விரும்புகின்றனர். மனிதர்களுக்கும், மனித உயிர்களுக்கும் மதிப்பு இல்லை. செல்வம் உடையவரே மதிக்கப்படுகிறார். அதனால் அன்பு வாழ்க்கை குறைந்து இயந்திர வாழ்க்கையாக மாறிவிட்டது. இன்றைய வாழ்க்கை முறை என்பது பணத்தை மையமாகக் கொண்டே சுழல்கிறது.

**பொதுக்கருத்து :**

பண்டைத் தமிழர்களின் திணைநிலை வாழ்க்கை அன்பை மையமாகவும் , பண்பு, பாசம், உண்மை என்பவற்றை ஆரமாகவும் கொண்டு விளங்கியது. உதவும் மனப்பான்மை உடையவராக விளங்கினர்.

இன்று மனித வாழ்க்கை முறை இயந்திர வாழ்க்கையாக மாறிவிட்டது. அது பணத்தை மையமாகக் கொண்டே சுழல்கிறது. அன்பு, பாசம், உறவு ஆகியவற்றிற்கு ஏங்குகின்ற ஒரு வாழ்க்கை முறையாக இன்றைய சூழல் அமைந்துவிட்டது.

## இயல் 6. எ — மொழியை ஆள்வோம் !

**அ) படித்துச்சுவைக்க :**

| | |
|---|---|
| *சிறு நண்டு மணல்மீது*<br>*பட மொன்று கீறும்*<br>*சிலவேளை அதைவந்து*<br>*அலைகொண்டு போகும்*<br>*கறிசோறு பொதியோடு*<br>*தருகின்ற போதும்*<br>*கடல்மீது இவள் கொண்ட*<br>*பயமொன்று காணும்* | *வெறு வான வெளி மீது*<br>*முகில் வந்து சூழும்*<br>*வெறி கொண்ட புயல் நின்று*<br>*கரகங்கள் ஆடும்*<br>*நெறிமாறு பட நூறு*<br>*சுழிவந்து சூழும்*<br>*நிலையான கரை நீரில்*<br>*அலைபோய் உலைந்தாடும்*<br>– மகாகவி (இலங்கை) |

**ஆ) மொழிபெயர்க்க:**

**Koothu**

Therukoothu is, as its name indicates, a popular form of theatre performed in the streets. It is performed by rural artists. The stories are derived from epics like Ramayana, Mahabharatha and other ancient puranas. There are more songs in the play with dialogues improvised by the artists on the spot. Fifteen to twenty actors with a small orchestra forms a koothu troupe. Though the orchestra has a singer, the artists sing in their own voices. Artists dress themselves with heavy costumes and bright makeup. Koothu is very popular among rural areas.

**விடை:**

தெருக்கூத்து என்பது, தெருவில் நிகழ்த்தப்பெறுகிற பிரபலமான ஒரு மேடை நாடகக் கலையாகும். இது, கிராமியக் கலைஞர்களால் நிகழ்த்தப்படுகின்றது. இதற்குரிய கதைகள், இதிகாசங்களை இராமாயணம், மகாபாரதம், பிற புராணங்களிலிருந்தும் தேர்வு செய்யப்படுகின்றன. இதில் தெருக்கூத்துக் கலைஞர்களால் உருவாக்கப்படுகின்ற பாடல்களும், உரையாடல்களும் நிறைந்திருக்கும். இருபது கலைஞர்களுக்குக் குறையாமல் குழுவாகச் செயல்படுவர். கலைஞர்கள் தங்களுடைய சொந்தக் குரலிலேயே பாடுவார்கள். கூத்துக் கலைஞர்கள் பாரம்பரிய உடைகளோடு பல வண்ண அலங்காரங்களால் தங்களை ஒப்பனை செய்து கொள்கிறார்கள். தெருக்கூத்து கிராமங்களில் மிகவும் பிரபலமாக உள்ளது.

**இ) தொடர்களை அறிவோம், தொடர்ந்து செய்வோம்**

ஒரு தனிச்சொற்றொடரில் ஓர் எழுவாயோ பல எழுவாய்களோ இருந்து ஒரு பயனிலையைக் கொண்டு அமையும்.

**எ.கா :**

**அ) மேரி பேருந்திற்காகக் காத்திருந்தார்**

**ஆ) மேரியும் கனகாவும் பேருந்தில் ஏறினர்**

தொடர் சொற்றொடர், ஒன்றுக்கும் மேற்பட்ட பயனிலைகளைக் கொண்டிருக்கும்.

**எ.கா :**

**அ) இனியநிலா பேச்சுப்போட்டியில் பங்கேற்றார்; வெற்றி பெற்றார்; பரிசைத் தட்டிச் சென்றார்.**

**ஆ) அன்வர் அரங்கத்திற்கு வந்து, நாடகம் பார்த்து, மகிழ்ச்சி அடைந்தார்.**

கலவைச் சொற்றொடரில் கருத்து முழுமை பெற்ற ஒரு முதன்மைத் தொடரும் கருத்து முழுமை பெறாத துணைத்தொடர்களும் கலந்து வரும்.

**எ.கா :**

**அ) மழை கொட்டிக்கொண்டிருந்தாலும் பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான்.**

**பகலவன் பள்ளிக்கு நடந்துவந்தான் – முதன்மைத் தொடர்**

**மழை கொட்டிக்கொண்டிருந்தாலும் – துணைத் தொடர்**

---

**ஈ) தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக.**

**எ.கா :**

**அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார் (பெ.ஆ.க–5)**

**(தனிச்சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடராக மாற்றுக)**

**விடை :**

அழைப்பு மணி ஒலித்ததால், கயல்விழி கதவைத் திறந்தார்.

**1. இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.**

**(தொடர் சொற்றொடராக மாற்றுக)**

**விடை :**

இன்னாசியார், புத்தகங்களை வரிசைப்படுத்தி, புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்து, புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

---

**2. ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொண்டு, காலில் சலங்கை அணிந்துகொண்டு, கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.**

**(தனிச் சொற்றொடர்களாக மாற்றுக)**

**விடை :**

ஒயிலாட்டத்தில் குழுவினர் ஒரே நிறத் துணியை முண்டாசு போலக் கட்டிக்கொள்வர். காலில் சலங்கை அணிந்துகொள்வர். கையில் ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசியும் ஆடுவர்.

---

**3. கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.**

**(கலவைச் சொற்றொடராக மாற்றுக)**

**விடை :**

கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதும், கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

---

**4. ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. (தனிச் சொற்றொடர்களாக மாற்றுக) (பெ.ஆ.க – 5)**

**விடை :**

ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றது. அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது.

---

**உ) பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி எழுதுக. (பெ.ஆ.க – 6)**

**புதிர் :**

**உங்களிடம் ஏழு கோல்டு பிஸ்கட் உள்ளது. அதில் ஒன்று மட்டும் எடை குறைவானது. உங்களிடம் உள்ள தராசை இரு முறைகள் மட்டுமே யூஸ் பண்ணி வெயிட் குறைந்த கோல்டு பிஸ்கட்டைக் கண்டுபிடிக்கவும்.**

**விடை :**

தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை வையுங்கள். இரண்டு தட்டுகளும் ஈக்வலாக இருந்தால், கையில் மிச்சம் உள்ள பிஸ்கட்டே வெயிட் குறைவானது. பட் ஆனால், ஒரு பக்க தராசுத் தட்டு மட்டும் உயர்ந்தால் அதில் உள்ள மூன்று பிஸ்கட்டுகளில் ஒன்று வெயிட் குறைவானது. அந்த மூன்று பிஸ்கட்டுகளை மட்டும் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள். இரண்டு தட்டுகளிலும் ஒரு ஒரு பிஸ்கட்டைப் போட்டு இதே எக்ஸ்பெரிமெண்ட்டை ரிப்பீட் செய்து ஆன்சரைக் கண்டுபிடியுங்கள்! ஆல் தி பெஸ்ட்!

| பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் | பிறமொழிச் சொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| கோல்டு பிஸ்கட் | தங்கக் கட்டி | எக்ஸ்பெரிமெண்ட் | பரிசோதனை |
| ஈக்வலாக | சமமாக | ரிப்பீட் | திரும்பவும் |
| வெயிட் | எடை | ஆன்சரை | விடையை |
| யூஸ் | பயன்படுத்தி | ஆல் தி பெஸ்ட் | வாழ்த்துகள் |

**ஊ) நாட்டுப்புறப் பாடலுக்கேற்ற சூழலை எழுதுக.**

| | |
|---|---|
| **பாடல்** | ஆத்துக்கு அந்தண்டையே அண்ணன் வச்ச தென்னம்புள்ளே !<br>அண்ணன் புள்ள வாடினாலும் யம்மாடி ! யம்மாடி !<br>தென்னம்புள்ள வாடலாமோ ? யம்மாடி ! யம்மாடி !<br>வாய்க்காலுக்கு மேற்குப்புறம் வஞ்சி வெச்ச வாழைமரம்<br>வஞ்சி மனம் வாடினாலும் யம்மாடி ! யம்மாடி !<br>வாழைமரம் வாடலாமோ யம்மாடி ! யம்மாடி ! |
| **பாடல் எழுந்த சூழல்** | அண்ணன் நட்டு வைத்த தென்னம்பிள்ளைக்கு நீர் பாய்ச்ச, தோப்புக்கு வரும் பெண்ணொருத்தி குழந்தையை இடுப்பிலிருந்து இறக்கி விடுகிறாள். தென்னம்பிள்ளைக்கு நீரூற்றுகிறாள்; குழந்தை அழுகிறது; பாடலைப் பாடியவாறே குழந்தையின் அழுகையை நிறுத்தி நீரூற்றுதலைத் தொடர்கிறாள். |

| பாடல் | பாடல் எழுந்த சூழல் |
|---|---|
| பாடறியேன் படிப்பறியேன் – நான்தான்<br>பள்ளிக்கூடம் தானறியேன்<br>ஏடறியேன் எழுத்தறியேன் – நான்தான்<br>எழுத்துவகை தானறியேன்<br>படிக்க நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்<br>பங்காளிய ஏன் தேடுறேன்<br>எழுத நல்லா தெரிஞ்சிருந்தா – நான்தான்<br>எதிராளிய ஏன் தேடுறேன்<br>நாலெழுத்துப் படிச்சிருந்தா – நான்தான்<br>நாலு தேசம் போய்வருவேன்<br>நாலு பக்கம் வரப்புக்குள்ளே – தெனமும்<br>நாம் பாடுறேன் தெம்மாங்குதான் | **வயலில் வேலை செய்யும்<br>விவசாயி ஒருவன்<br>தனக்குக் கல்வியறிவு இல்லாத<br>காரணத்தினால் தான் படும்<br>துன்பத்தை எண்ணி<br>வருத்தத்துடன் பாடிக்கொண்டே<br>தன் வேலையைச் செய்கிறான்** |

**எ) மனிதருக்கும் மலருக்குமான மணம் வீசும் இந்த நயவுரையைத் தொடர்க.**

வண்டுகளை ஈர்க்கும் வாசனையில்
பூக்களிடம் வசப்படுவது மனிதர்களே !
பூச்சியைக் கவரும் வண்ணங்களில்
பூக்களிடம் விழுவது மனிதர்களே !
**<u>இளம் பூவையரை அலங்கரிக்கும்</u>**
**<u>நம்பூசை அறையை புனிதமாக்கும்</u>**

## கட்டுரை எழுதுக

**ஏ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக. (பெ.ஆ.க – 2, 5)**

**விடை :**

**முன்னுரை :**

எங்கள் பகுதியான மதுரையில் அரசுப்பொருட்காட்சி ஆண்டு தோறும் ஏப்ரல் மாதம் சித்திரை திருவிழாவை ஒட்டித் தமுக்கம் மைதானத்தில் தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத் துறைப் பிரிவு சார்பில் நடைபெற்றது. அரசுப் பொருட்காட்சிப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பொருட்காட்சியின் சிறப்பம்சங்கள் :**

உலகில் கண்டு வியக்கத்தக்க பொருட்கள் நாள் தோறும் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அவ்வாறு தோன்றும் புதிய பொருட்களைக் காணவும், வாங்கவும் வேண்டுமென்று மக்கள் விரும்புகின்றனர். பல்வேறு இடங்களில் தயாரிக்கப்படுகின்ற பல்வேறு பொருட்களையும் ஓர் இடத்தில் மக்கள் எளிதில் வந்து பார்க்கத் தகுந்த வகையில் கவர்ச்சிகரமான முறையில் வணிக நிறுவனங்கள் அரங்குகள் அமைத்து மக்கள் காணுமாறு செய்திருந்தனர்.

**அரங்குகள் அமைப்பு :**

இந்தப் பொருட்காட்சியில் 26 மாநில அரசுத்துறை நிறுவனங்கள், 12 தமிழக அரசுத்துறை நிறுவனங்கள், 3 மத்திய அரசு நிறுவனங்கள் என மொத்தம் 42 அரசு அரங்குகள் அரசின் சாதனை நலத்திட்டத்தை மக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் அமைந்திருந்தன.

மேலும் 115 கடைகளும், 26 விற்பனை அரங்குகளும் தனியார் மூலம் அமைக்கப்பட்டிருந்தன. மதுரை திருமலை நாயக்கர் மஹால் வடிவமைப்பு பொருட்காட்சியின் முகப்பாக அமைக்கப்பட்டிருந்தது.

நகர்ப்புற மக்கள், கிராமச் சூழ்நிலையை உணர்ந்து அனுபவிக்கும் வகையில் சிற்றூர் சுற்றுலா எனப்படும் சிறப்பு அரங்கு 25 ஆயிரம் சதுர அடியில் உருவாக்கப்பட்டிருந்தது.

**கலை நிகழ்ச்சிகள் :**

ஒவ்வொரு நாளும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நாங்கள் சென்றிருந்தபோது ஒரிசா, குஜராத், சிக்கிம், மிசோரம், ராஜஸ்தான், இமாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம், ஜார்கண்ட், மணிப்பூர், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் நாகாலாந்து மாநில கலைஞர்களின் கலைநிகழ்ச்சிகள் அம்மாநில மக்களின் கலாச்சாரத்தைப் பறைசாற்றும் வகையில் இருந்தது. இது இந்த ஆண்டுதான் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகக் கூறினார்கள்.

**விளையாட்டு அரங்குகள் :**

இராட்சச ராட்டினம், குவளை இராட்டினம், மின்சாரத் தொடர்வண்டி, மரணக் கிணறு, மேஜிக், குதித்து விளையாடும் மெத்தை எனப் பல்வேறு அரங்குகள் இருந்தன. அந்த அரங்குகளுக்குத் தனித்தனியே கட்டணம் வசூலிக்கப்பட்டது.

**நுழைவுக் கட்டணம் :**

பொருட்காட்சி நடைபெறும் இடத்தின் உள்ளே செல்ல நுழைவுக் கட்டணம் வசூலிக்கப்பட்டது. பொருட்காட்சி அலுவலக நாட்களில் மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரையிலும், விடுமுறை நாட்களில் காலை 11 மணிமுதல் இரவு 10 மணி வரையிலும் நடைபெற்றது. நாங்கள் சென்றபோது இதுவரை ஐந்து இலட்சம் பேர் வருகை புரிந்நதாகக் கூறினார்கள்.

**முடிவுரை :**

பொருட்காட்சிக்கு வருகை புரிந்தது மூலம் நாங்கள் இதுவரை அறிந்திராத அரசுத் திட்டங்கள் பற்றிய தகவல்களை அறிந்துகொள்ள முடிந்தது. பொழுது போக்கிற்காக நாங்கள் சென்று வந்த நிகழ்வு மிகவும் பயனுள்ளதாகவும் அறிவார்ந்த சிந்தனையை தூண்டுவதாகவும் அமைந்தது.

**ஐ) விண்ணப்பப் படிவம்.**

**கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க. (பெ.ஆ.க – 1)**

**<u>தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்</u>**

| | | |
|---|---|---|
| 1. மாணவரின் பெயர் | : | **க. எழிலரசன்** |
| 2. பாலினம் | : | **ஆண்** |
| 3. பிறந்த நாள் | : | ................. |
| 4. தேசிய இனம் | : | **இந்தியன்** |
| 5. இரத்தவகை | : | **O+** |
| 6. உயரம் மற்றும் எடை | : | **120 செ.மீ / 40 கி.கி** |
| 7. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் | : | **நா. கண்ணன்** |
| 8. வீட்டு முகவரி | : | **40, திருப்பரங்குன்றம் ரோடு, பசுமலை, மதுரை – 625016** |
| 9. தொலைபேசி/அலைபேசி எண் | : | **94430 xxxxx** |
| 10. இறுதியாகப்படித்து முடித்த வகுப்பு | : | **10 ஆம் வகுப்பு** |
| 11. பள்ளியின் முகவரி | : | **C.S.I.மேல்நிலைப்பள்ளி, பசுமலை மதுரை–625016** |
| 12. சேரவிரும்பும் விளையாட்டு | : | **கபடி** |
| சேர்க்கை எண் | : | **1632** |
| மாணவரின் கையெழுத்து | | **க. எழிலரசன்** |
| இடம் : **மதுரை** | | |
| நாள் : ................. | | |
| பெற்றோர்/பாதுகாவலரின் கையெழுத்து | : | **நா. கண்ணன்** |

---

**கூடுதல் வினா :**

**1. உங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலை நாள் விழாவிற்கு, நிகழ்கலை வல்லுநர் ஒருவரைச் சிறப்பு விருந்தினராக அழைத்துக் கடிதம் எழுதுக. (பெ.ஆ.க – 1)**

அனுப்புநர் :

க. மணிமாறன்
இலக்கிய மன்றச் செயலாளர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
நாகமலை.

பெறுநர் :

திரு. ஆனந்தக் கண்ணன்,
நிகழ்கலை வல்லுநர்,
சென்னை.

பெருமதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம். எங்கள் பள்ளி இலக்கிய மன்றம் சார்பில் அடுத்த வாரம் புதன்கிழமை மாலையில் விடுதலை நாள் விழா கொண்டாட இருக்கிறோம். விடுதலை உணர்வை ஊட்டக்கூடிய கிராமிய மற்றும் நிகழ்கலைகளின் மீது அளவில்லா ஈடுபாடுடைய நீங்கள் இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருவது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்றே கருதுகிறோம்.

தங்களது ஆசிரியரான நா.முத்துச்சாமி அவர்கள் கலந்து கொண்டு தலைமையேற்க உள்ளார்கள். எங்கள் அழைப்பைத் தட்டமாட்டீர்கள் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இம்மடல் கண்டதும் இசைவு தெரிவித்து எங்களை மகிழ்வித்துத் தங்கள் வரவை உறுதிப்படுத்துமாறு மிகக் கனிவோடும் பணிவோடும் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
க. மணிமாறன்.

மதுரை
தேதி ................

**2. பாய்ச்சல் சிறுகதையில் அழகுவின் கதாப்பாத்திரம் போல், நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல்வேடக் கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டும் அவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்தும் விரிவாக எழுதுக. (பெ.ஆ.க – 1) (செப் – 20)**

**விடை :**

சா. கந்தசாமி எழுதிய "பாய்ச்சல்" கதையில் ஒரு நல்ல கலைஞனின் கலை ஈடுபாட்டைக் காண முடிகிறது. கலைநிகழ்வின் ஊடாகக் கலைஞனின் பெருமிதம், வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். உண்மைக் கலைஞன் தன் கலையில் முழு ஈடுபாட்டைக் காட்டுவான் என்பதற்கு இக்கதையில் வரும் "அழகு" கதாபாத்திரமே சிறந்த உதாரணமாகும்.

**இடர்பாடுகள் :**

மேடைக் கலைஞர்கள், மேடை போட்டு நடிப்பவர்கள், கோவில் திருவிழாக்களில் ஏதாவது பொது நிகழ்வுகளில் ஒப்பனை செய்து பல்வேறு கதாபாத்திரங்கள் ஏற்று நடிப்பவர்கள் மேடைக் கலைஞர்கள். மேடைக் கலைஞர்கள் மற்றும் பகல்வேடக் கலைஞர்கள் ஒப்பனைக்காக பல்வேறு இரசாயனக் கலவைகளை உடலில் பூசிக்கொண்டு நடிப்பது மிகவும் கடினம். அதே வேளையில் உரக்கப்பேசி நடிக்கவேண்டும். ஓய்வில்லாமல் தொடர்ந்து நடிக்க வேண்டும். ஏராளமான பொதுமக்கள் மத்தியில் நடிக்க வேண்டும். வசனங்களை மனப்பாடம் செய்ய வேண்டும். இரசிகர்களைத் தன்பக்கம் கவர கடினமாக உழைக்கவேண்டும். எடுத்த கதாபாத்திரத்தில் நடைமுறை கதாபாத்திரமாக மாறி நடிக்க வேண்டும். குறிப்பாகப் பொதுமக்களின் பல்வேறு விமர்சனங்களுக்கு ஆளாக வேண்டும்.

தெருவில்தான் நின்று காட்டவேண்டும். பொதுமக்கள் ஒரு சிலர் ஆங்காங்கே நின்று கொண்டு வேடத்தைக் கவனிப்பர். வேடக்கலைஞர்களுக்கு ஊதியம்( பணம்) அதிகம் கிடைக்காது. பலமணி நேரம் வேடத்தை அணிந்துகொண்டு இருப்பது உடல் நலத்திற்குப் பெரும் கேடு விளைவிக்கும்.

பொதுமக்கள் மத்தியில் அவர்கள் ஒரு காட்சிப் பொம்மையாக இருப்பார்கள். எல்லா வேடங்களுமே மக்களை கவர்ந்திழுப்பதில்லை. எனவே அதற்கேற்ற வேடப்பொருள்களை பெருந்தொகை கொடுத்து வாங்கவேண்டும்.

மேடைக் கலைஞர்களுக்குத்தான் மதிப்பு அதிகம். அவர்களின் நடிப்புகள் வெளிநாடுகளுக்குத் தெரியும். அதனைக் கொண்டு செல்ல ஊடகங்கள் ஏராளம் உண்டு. மேடைக் கலைஞர்கள் நடித்துக் காட்டப் பல்வேறு காலக் கருத்துகள் கிடைக்கும். ஆனால் பகல்வேடக் கலைஞர்களுக்கு இல்லை.

மக்கள் இரண்டு கலைஞர்களையுமே மனிதனாக மதிக்க வேண்டும். அவர்கள் சொல்லும் செய்திகளை காதுகொடுத்துக் கேட்க வேண்டும். கலைஞர்களை நண்பன் என நினைக்க வேண்டும். வாழ்வில் கலை வளர்க்கும் கலைஞர்களை மதிப்போம்.

## இயல் 6. ஏ — மொழியோடு விளையாடு

**அ) தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.**

1. வானம் <u>**கருக்கத்**</u> தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது. **(பெ.ஆ.க – 3)**
2. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ............... **(பெ.ஆ.க – 3)**

**விடை : சிவந்தது**

3. ............... மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

**விடை : வெள்ளை**

4. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ............... புல் வெளிகளில் கதிரவனின் .............. வெயில் பரவிக்கிடக்கிறது. **(பெ.ஆ.க – 3) (செப் – 20)**

**விடை : (பச்சை) (மஞ்சள்)**

5. வெயிலில் அலையாதே ; உடல் ...............

**விடை : கருத்துவிடும்**

---

**ஆ) பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| |
|---|
| **தங்கும், மரம், வீடு, அவிழும், தயங்கும், மரவீடு, தோற்பாவை, விருது, தோற்பவை, கவிழும், விருந்து** |

1. விரட்டாதீர்கள் – பறவைக்கு மரம் வீடு
   வெட்டாதீர்கள் – மனிதருக்கு அவை தரும் ............. **விடை : மரவீடு**

2. காலை ஒளியினில் மலரிதழ் ................ (பெ.ஆ.க – 4) **விடை : அவிழும்**
   சோலைப் பூவினில் வண்டினம் ................ **விடை : கவிழும்**

3. மலைமுகட்டில் மேகம் ............... அதைப் **விடை : தங்கும்**
   மனங்கள் செல்லத் ............. (பெ.ஆ.க – 4) **விடை : தயங்கும்**

4. வாழ்க்கையில் ................. மீண்டும் வெல்லும் – இதைத் **விடை : தோற்பவை**
   தத்துவமாய்த் ................ கூத்து சொல்லும் (அ.மா.வி) **விடை : தோற்பாவை**

5. தெருக்கூத்தில் நடிகருக்குக் கைதட்டலே ................. அதில் **விடை : விருது**
   வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர்................ (அ.மா.வி) **விடை : விருந்து**

---

**இ) அகராதியில் காண்க.**

**தால், உழுவை, அகவுதல், ஏந்தெழில், அணிமை**

**விடை :**

| | | |
|---|---|---|
| தால் | – | தாலாட்டு, நாக்கு |
| உழுவை | – | புலி, ஒருவகை மீன், தும்பிலி |
| அகவுதல் | – | ஒலித்தல், பாடுதல், குரல் எழுப்புதல் |
| ஏந்தெழில் | – | மிக்க அழகு |
| அணிமை | – | சமீபம், அண்மை, பக்கம் |

**ஈ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**

**விடை :**

1. இசைக்கு அசையும் இனிய கலை
2. இறைவன் காட்டிய எழில்மிகு நடனம்
3. அசைவில் சொல்லும் அபிநய காட்சி
4. ஆடிடும்போது அழகிய வதனம்
5. தமிழர் கூத்தை தந்திடும் புவனம்



**உ) செயல்திட்டம் :**

பல்வேறு நிகழ்கலைகளின் ஒளிப்படங்களைத் தொகுத்து வகுப்பறையில் கண்காட்சி அமைக்க.

## ஊ. நிற்க அதற்குத் தக

**அரசின் பொங்கல் விழாவில் சிற்றூர் கலைகளைக் காட்சியாக்கியிருக்கிறார்கள். ஒருபுறம் திரைகட்டித் தோற்பாவைக்கூத்து நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இன்னொருபுறம் பொம்மலாட்டம் ஆடிக்கொண்டிருந்தனர். சற்று நடந்தால் தாரை தப்பட்டை முழங்க ஒயிலாட்டம் ஆடியவாறு மண்ணின் மக்கள்....... இக்கலைகளை நீங்கள் நண்பர்களுடன் பார்த்தவாறும் சுவைத்தவாறும் செல்கிறீர்கள்.**

**இக்கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேன்மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்துக. (அ.மா.வி)**

1. **பிறந்தநாள் விழாக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன்.**
2. **எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.**

**விடை :**

3. எங்கள் ஊரில் நடைபெறும் கோயில் திருவிழாவிற்குப் பொம்மலாட்டம், கரகாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன்.
4. ஊரில் நடைபெறுகின்ற பொதுக்கூட்டங்களில் வீரமுழக்கங்களை எழுப்பத் தாரை, தப்பட்டை, பறை ஒலிக்கச் செய்வேன்.
5. பள்ளி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு சிலம்பம் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்வேன்.
6. நிகழ்கலை கலைஞர்களை காப்பாற்ற ஆண்டு தோறும் ஊரில் விழாக்களை ஏற்பாடு செய்து உதவுவேன்.

## எ. கலைச்சொல் அறிவோம்

Aesthetics – அழகியல், முருகியல்
Artifacts – கலைப்படைப்புகள் **(செப் – 20)**
Terminology – கலைச்சொல்
Myth – தொன்மம் **(செப் – 20)**

**கூடுதல் வினா : (பெ.ஆ.க – 4)**

அ) Aesthetics – அழகியல், முருகியல்
ஆ) Myth – தொன்மம்

## ஏ. அறிவை விரிவு செய்

1. தேன்மழை – **சுரதா**
2. திருக்குறள் நீதி இலக்கியம் – **க.த. திருநாவுக்கரசு**
3. நாட்டார் கலைகள் – **அ.கா.பெருமாள்**

வாழ்வியல் இலக்கியம்

இயல் 6. ஐ

## திருக்குறள்

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. "இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது" – என்ற குறளில் பயின்று வரும் அணி யாது ?**

அ) பொருள் பின்வரு நிலையணி ஆ) உவமையணி
இ) சொற்பொருள் பின்வரு நிலையணி ஈ) உருவக அணி

**விடை: இ) சொற்பொருள் பின்வரு நிலையணி**

**2. "தேவர் அனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்" – என்ற குறளில் பயின்று வரும் அணி யாது ?**

அ) உவமை அணி ஆ) வஞ்சப்புகழ்ச்சி அணி
இ) வேற்றுமை அணி ஈ) உருவக அணி

**விடை: ஆ) வஞ்சப்புகழ்ச்சி அணி**

---

### பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. கரப்பிடும்பை இல்லார் – இத்தொடரின் பொருள் கூறுக. (பெ.ஆ.க – 4)**

**விடை :**

★ தம்மிடமுள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தராத நல்லாரைக் காணின் வறுமையின் கொடுமை முழுதும் கெடும் என்பதாகும்.

---

**2. தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.**

**விடை :**

| சீர் | | அசை | | வாய்பாடு |
|---|---|---|---|---|
| தஞ் + சம் | = | நேர் + நேர் | = | தேமா |
| எளி + யர் | = | நிரை + நேர் | = | புளிமா |
| பகைக் + கு | = | நிரை + நேர் (நிரைபு) | = | பிறப்பு |

---

**3 . வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக் குறளின் கருத்து யாது ?**

**விடை :**

★ இகழ்ந்து ஏளனம் செய்யாமல் பொருள் கொடுப்பவரைக் கண்டால் இரப்பவரின் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி பொங்கும்.

---

**4. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார் ? ஏன் என்பதை எழுதுக.**

**பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்**

**விடை :**

★ **கூரான ஆயுதம் :** உழைத்ததால் கிடைத்த ஊதியம்

★ **காரணம் :** ஒருவர் உழைத்துப் பொருளை ஈட்ட வேண்டும். அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு இல்லை.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**5. குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச்செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகப் போற்றுவர் என்னும் பொருளைக் கொண்ட திருக்குறளை எழுதுக. (பெ.ஆ.க – 6) (செப் – 20)**

**விடை :**

"குற்றம் இலனாய்க்குடி செய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு"

---

**6. மலைமேல் பாதுகாப்பாக நின்று கொண்டு, யானைப் போரைக் காணும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக. (பெ.ஆ.க – 3)**

**விடை :**

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

---

**7. குன்றேறி யானைப் போர் காண்பதற்குச் சமமானது எது ?**

**விடை :**

★ ஒருவன் தன் கையிலுள்ள பொருளைக் கொண்டு ஒரு செயலைச் செய்வது, பாதுகாப்பாக மலைமேல் ஏறிநின்று யானைகள் போரைக் காண்பதற்குச் சமமாகும்.

---

**8. பகைக்கு எளிதில் ஆட்படக்கூடியவர் யார் ?**

**விடை :**

★ அஞ்சவேண்டாதவற்றிற்கு அஞ்சுபவனும், அறியவேண்டியவற்றை அறியாதவனும், பிறருடன் இணங்கி நடக்காதவனும், பிறருக்கு ஒன்றைக் கொடுத்து உதவாதவனும் பகைக்கு எளிதில் ஆட்படக்கூடியவர் ஆவார்.

---

**9. குடும்பம் எவரின் செயலால் உயர்ந்து விளங்குகிறது ?**

**விடை :**

★ விடா முயற்சியும், சிறந்த அறிவாற்றல் என்னும் இரண்டையும் இடைவிடாமல் கடைப்பிடிப்பவரின் செயலால் குடும்பம் உயரும்.

---

**10. உலகு எவரைச் சுற்றமாகச் சுற்றும் ?**

**விடை :**

★ ஒரு குற்றமும் இல்லாதவராய்,தன் குடிப்பெருமை உயர உழைத்து வாழ்பவரை உலகமே சுற்றமாகக் கொண்டு சுற்றும்.

---

**11. வறுமையில் கொடியது எது ?**

**விடை :**

★ ஒருவனுக்கு "இன்மை" என்னும் வறுமையில் துன்பம் தரும் கொடியது எதுவென்றால், அது அந்த "இன்மையாகிய" வறுமையேயாகும்.

---

**12. "நிரப்பிடும்பை" – என்ற வறுமை கெடும், எப்போது ?**

**விடை :**

★ தம்மிடம் உள்ள பொருளை மறைத்து வைத்தல் என்னும் துன்பம் தரும் கொடிய செயலைச் செய்யாத நல்லவரைக் காணும் போது, "நிரப்பிடும்பை" என்னும் வறுமையின் கொடுமை முழுமையாகக் கெடும்.

---

**13. தேவரும் கயவரும் எதனால் ஒப்பாவர் ?**

**விடை :**

★ தேவரும் கயவரும் ஒரே தன்மையுடையவராவார். எதனால் என்றால், கயவர் தேவரைப் போலவே தாம் விரும்பியதை விரும்பியபடி செய்து வாழ்வர். (தேவர் நன்மையானதைச் செய்வர், கயவர் தீயவற்றைச் செய்வர்)

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா (பாடநூல் வினா):**

**1. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.**

**விடை :**

★ சிறந்த அமைச்சர் என்பவர், ஒரு செயலைச் செய்வதற்குரிய கருவி, செய்வதற்கு ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து அரிய செயலைச் செய்யவேண்டும்.

★ மனவலிமை, குடிமக்களைக் காத்தல், ஆட்சிமுறை குறித்துக் கற்றல், சிறந்த நூல்களைக் கற்றல், விடா முயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைய வேண்டும்.

★ நுண்ணறிவு, நூலறிவு, சூழ்ச்சித் திறமை என்னும் ஆற்றல் பெற்றவரே சிறந்த அமைச்சராக முடியும் என வள்ளுவர் கூறுகிறார்.

★ இக்காலத்தில் நடைமுறை ஆட்சிக்கும் இப்பண்பு இன்றியமையாதனவே. அதனால் விளையும் நன்மை, செய்யும் வழிவகை ஆகியன அறிந்து செயல் திறமும் கொண்டவராக இருக்க வேண்டும்.

★ குடியாட்சியிலும் இப்பண்புடையாரே அமைச்சரானால் சிறப்பாக பணியாற்ற முடியும்.

---

**2. பலரிடம் உதவி பெற்றுக் கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்களையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை ?**

**விடை :**

★ கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர், சுற்றத்தாரிடம் அன்பு இல்லாமலும், ஏற்ற துணை இல்லாமலும் இருந்தால், பகைவரின் வலிமையை எதிர்கொள்ளமுடியாது.

★ பிறருக்குக் கொடுத்து உதவாதவர் பெற்ற செல்வம் பயனற்றுப் போகும்.

★ ஆதலால், என்னதான் கடின உழைப்பால் முன்னேறி இருந்தாலும், வாழ்வில் வெற்றி பெறச் சுற்றத்தையும் துணையையும் போற்றி வாழவேண்டும் என வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

---

**சிறுவினா (கூடுதல் வினா):**

**3. பொருளீட்டுதலால் பெறும் பயன்கள் யாவை ?**

**விடை :**

★ தான் ஈட்டிய பொருளைக் கொண்டு, ஒரு செயலைச் செய்ய முயல்வதானது, குன்றின் மேல் ஏறி நின்று யானைகள் போரிடுவதைக் காண்பதற்குச் சமமாகும்.

★ பகைவரின் செருக்கை அறுத்து அழிக்கும் கூர்மையான படைக்கருவி, பொருள் செல்வத்தை விட வேறெதுவும் இல்லை.

★ இத்தகைய சிறப்பமைந்த பொருள் செல்வத்தை அறநெறியில் மிகுதியாக ஈட்டியவருக்கு, அறமும் இன்பமும் ஒருங்கே எளிதில் கிடைக்கும்.

★ இவையே பொருளீட்டுதலால் பெறும் பயன்களாகும்.

---

## கற்பவை கற்றபின்

**1. புதுக்கவிதையையும் குறளையும் ஒப்பிட்டுப் பேசுக.**

**புதுக்கவிதை :**

தக்காளியையும் வெண்டைக்காயையும்
தள்ளுவண்டிக்காரர் தராசில் நிறுக்கையில்,
தள்ளி நிற்கும் பிள்ளை
அவசியமாகக் கேட்கும் ஆயிரம் ரூபாயை
எப்படிக் கொடுக்க என்றே அவர் மனம் யோசிக்கும்....
"அத்தனைக் காய்களையும் விற்றால்தான்
மீதி ஐந்நூறாவது மிஞ்சும்; என்ன செய்ய....."
காய்கறி வாங்கியவர்
கவனக் குறைவாகக் கொடுத்த

இரண்டாயிரம் ரூபாயைக்
கூப்பிட்டுத் தந்துவிட்டுப்
பிள்ளைக்கு உதவ யாரிடம் கேட்கலாம்
என்பதை அடுத்தபடி யோசிக்கும் அவர் மனம்!

குறள்:

"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்."

**விடை:**

காய்கறி விற்கும் வியாபாரி ஒருவனின் நற்பண்பை மேற்கண்ட கவிதை விளக்குவதாக அமைந்துள்ளது. காய்கறி வியாபாரி திருக்குறளை எல்லாம் படித்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் கேட்டிருக்கலாம். அவர் தெருவில் தள்ளுவண்டி வியாபாரம் பார்த்தாலும் நாணயமாக வாழ வேண்டும் என்ற எண்ணம் உடையவராக இருக்கிறார்.

நாம் பிறரை ஏமாற்றினால் நம்மை மற்றவர் ஏமாற்றுவார் என்ற கருத்துடையவராய் தொழிலில் தூய்மையைக் கையாளுகின்றார். நாம் பிறரை ஏமாற்றாமல் இருந்தால் நமக்கு யாராவது உதவி செய்வார்கள் என்று நினைத்திருக்கலாம். தன் தேவைகளுக்காகப் பிறர் பொருளை ஏமாற்றக்கூடாது எனத் திருப்பிக் கொடுத்திருக்கலாம். ஆனால் பணம் படைத்தவர்களும், கல்வி கற்றவர்களும் வள்ளுவர் கூறிய கருத்தை நடைமுறையில் எந்த அளவிற்குக் கடைபிடிக்கிறார்கள் என்பதை உணர வழிவகுக்கிறது.

மேலும் இப்புதுக்கவிதையும், குறளும் மக்களின் நடைமுறை வாழ்வை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளன.

---

**2. குறிப்புகள் உணர்த்தும் குறளின் கருத்துகள் குறித்துக் கலந்துரையாடுக.**

அ) அவருக்கு அறிவும் அதிகம்; படிப்பும் அதிகம். யாராலும் அவருக்கெதிராகச் செயல்பட முடியாது.

ஆ) எச்சரிக்யைாக இரு. பழகுபவர்களில் யார் நல்லவர், யார் கெட்டவர் என்று கண்டுபிடிப்பது கடினம்.

இ) அவர் குடும்பம் முன்னேறியிருப்பதற்குக் காரணம் தொடர்ந்து முயல்வதும் தொழிலில் அவருக்கிருந்த அறிவும்.

ஈ) வாழ்க்கையில் நன்றாகப் பொருளீட்டு. அதுதான் உன்னைத் தாழ்வாக நினைத்தவர்களின் வாயை அடைக்கும்.

உ) அக்கம்பக்கத்தாரிடம் பழகாமல் ஒதுங்கியே இருந்தார்; துணைக்கும் யாரும் இல்லை. இப்போது உடம்பு சரியில்லாதபோது யாருமின்றித் திண்டாடுகிறார்.

**விடை :**

**மாணவர்கள்:** வணக்கம் ஐயா!

**ஆசிரியர் :** வணக்கம் மாணவர்களே! அமருங்கள். கரும்பலகையில் சில குறிப்புகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. அவற்றைக் குறித்து இன்றைய வகுப்பில் கலந்துரையாடுவோமா!

**மாணவர்கள்:** சரிங்க ஐயா!

**ஆசிரியர் :** உங்களில் ஒரு மாணவன் எழுந்து அந்தக் குறிப்புகளில் ஒன்றை படிக்க வேண்டும். படித்து முடித்த பின் மற்றொருவர் குறிப்புக்குரிய பொருளையும் குறளையும் கூறவேண்டும். சரியா!

**மாணவர்கள்:** சரிங்க ஐயா!

**ஆசிரியர் :** குமரா! நீ முதலில் தொடங்கிவை.

**குமரன் :** ஐயா, நான் எடுத்துள்ள "ஆ" குறிப்பைப் படிக்கிறேன். கவனத்துடன் கேட்டு பதில் கூறுங்கள்.

**ஆசிரியர்** : சரி! கண்ணா, நீ வந்து பதில் கூறு.

**கண்ணன்** : தீயவர் மக்களைப் போலவே இருப்பர். கயவர்க்கும் மக்களுக்கும் உள்ள தோற்ற ஒற்றுமையை வேறு எதிலும் நாம் காண முடியாது என்னும் பொருளுடைய
"மக்களே போல்வர் கயவர் :அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்"
என்ற குறள் சரியானதாக இருக்கும் இல்லையா ஐயா ?

**ஆசிரியர்** : சரி. அடுத்த குறிப்பை யார் படிக்கிறது ?

**கண்ணன்** : நானே எடுத்துப் படிக்கிறேன் ஐயா! " அக்கம் பக்கத்தாரிடம் பழகாமல் ஒதுங்கியே இருந்தார். துணைக்கும் யாரும் இல்லை. இப்போது உடம்பு சரியில்லாது போனது! யாருமின்றித் திண்டாடுகிறார்."

**நிஷாந்த்** : ஐயா, நான் இதற்கு விடை கூறுகிறேன். ஒருவர் தன் சுற்றத்தாரிடம் அன்பு இல்லாமலும், பொருத்தமான துணை இல்லாமலும், வலிமை இல்லாமலும் இருந்தால், அவர் எப்படி எதிரியின் வலிமையை எதிர்கொள்வார் ? என்னும் பொருளமைந்த,
" அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்துவ்வான்
என்பரியும் ஏதிலார் நட்பு" என்ற குறள் ஐயா.

**ஆசிரியர்** : நன்று ! அடுத்த குறிப்பை நீயே படி.

**ஆசிரியர்** : வாழ்க்கையில் நன்றாகப் பொருளீட்டு. அதுதான் உன்னைத் தாழ்வாக நினைத்தவர்களின் வாயை அடைக்கும்.

**விஷ்வா** : ஐயா இதற்கு நான் விடை கூறுகிறேன். "ஒருவர் பொருளை ஈட்டவேண்டும். அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிட வேறு எதுவும் இல்லை" என்னும் பொருளமைந்த,
"செய்கபொருளைச்செறுநர்செருக் கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்" என்னும் குறளாகும்.

**ஆசிரியர்** : சரி, நீயே அடுத்த குறிப்பைப் படி.

**விஷ்வா** : "அவருக்கு அறிவும் அதிகம்! படிப்பும் அதிகம்! யாராலும் அவருக்கு எதிராகச் செயல்பட முடியாது.

**ஆசிரியர்** : வருண், நீ பொருத்தமான குறளைக் கூறு.

**வருண்** : "மதிநுட்பம் நூலோடு டையார்க் கதிநுட்பம்
யாவுள நிற் பவை" அதாவது, "இயற்கையான நுண்ணறிவும், நூலறிவும் உடைய அமைச்சர் முன் எந்த நுட்பமான சூழ்ச்சியும் நிற்க முடியாது" என்பதாகும்.

**ஆசிரியர்** : நன்று! இறுதியாக ராகுல் நீ எழுந்து கடைசிக் குறிப்பைப் படித்து நீயே விடையும் கூறுகிறாயா ?

**ராகுல்** : சரிங்க ஐயா. "அவர் குடும்பம் முன்னேறி இருப்பதற்குக் காரணம், தொடர்ந்து முயல்வதும், தொழிலில் அவருக்கு இருந்த அறிவும்". இந்தக் குறிப்பு, "விடா முயற்சி, சிறந்த அறிவாற்றல் இவையிரண்டையும் இடைவிடாமல் பின்பற்றுபவரின் குடி உயர்ந்து விளங்கும்" என்னும் பொருளமைந்த,
" ஆள்வினையும் ஆன்ற அறிவுமென விரண்டின்
நீள்வினையால் நீளும் குடி" என்ற குறளோடு பொருந்துவதாக உள்ளது ஐயா.

**ஆசிரியர்** : நன்று ! அடுத்த வகுப்பில் இன்னும் வேறு சில குறிப்புகளைப் பார்ப்போம்.

| இயல் ஏழு | இயல் 7. விதை நெல் |
| --- | --- |

உரைநடை உலகம்

| இயல் 7. அ | சிற்றகல் ஒளி (உரைநடை) – ம.பொ. சிவஞானம் |
| --- | --- |

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே................(பெ.ஆ.க – 1)**

அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

**விடை : அ) திருப்பதியும் திருத்தணியும்**

**2. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ................ (பெ.ஆ.க – 3)**

அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

**விடை: ஈ) சிலப்பதிகாரம்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்................. (பெ.ஆ.க – 6)**

அ) திரு. பிரகாசம் ஆ) மார்ஷல் ஏ. நேசமணி
இ) தனிநாயகம் அடிகள் ஈ) ந. முத்துசாமி

**விடை: ஆ) மார்ஷல் ஏ. நேசமணி**

**4. "சத்தியாகிரகம்" என்னும் அறப்போர் முறையை காந்தியடிகள் தொடங்கிய ஆண்டு .............**

அ) 1906 ஆ) 1916
இ) 1926 ஈ) 1936 **விடை: அ) 1906**

**5. சென்னை ஆயிரம்விளக்கு வட்டம் சால்வன் குப்பம் என்னும் பகுதியில் பிறந்தவர்.............**

அ) ம.பொ.சி ஆ) மங்கலங்கிழார்
இ) ரஷீத் ஈ) தியாகராஜன் **விடை: அ) ம.பொ.சி**

**6. ம.பொ.சி. யின்பெற்றோர் .............. ஆவர்**

அ) குமாரசாமி, சின்னம்மை ஆ) குருசாமி, ராமாயி
இ) பொன்னுசாமி, முனியம்மா ஈ) பொன்னுசாமி, சிவகாமி

**விடை: ஈ) பொன்னுசாமி, சிவகாமி**

**7. ம.பொ.சி க்கு பெற்றோர் இட்ட இயற்பெயர்.................**

அ) பொன்னுசாமி ஆ) ஞானம்
இ) ஞானப்பிரகாசம் ஈ) சிவப்பிரகாசம் **விடை: இ) ஞானப்பிரகாசம்**

**8. ம.பொ.சி. யின் இயற்பெயரை மாற்றிய பெரியவர்.............ஆவார்.**

அ) சிவஞானி ஆ) பெரியார்
இ) பொன்னுசாமி ஈ) சரபையர் **விடை: ஈ) சரபையர்**

**9. காந்தி – இர்வின் ஒப்பந்தம் நிகழ்ந்த ஆண்டு ..............**

அ) 1921 ஆ) 1931
இ) 1947 ஈ) 1911 **விடை: ஆ) 1931**

**10."இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற தீர்மானத்தை இந்திய பேராயக் கட்சி நிறைவேற்றிய நாள் .............**
அ) 1942 ஜனவரி 15 ஆ) 1941 ஆகஸ்டு 8
இ) 1942 ஆகஸ்டு 8 ஈ) 1947 ஜனவரி 26 **விடை: இ) 1942 ஆகஸ்டு 8**

**11. மத்திய அரசால் உருவாக்கப்பட்ட மொழிவாரி ஆணையத்தின் தலைவர் ...............**
அ) டாக்டர் நாயர் ஆ) சர்தார் கே.எம். பணிக்கர்
இ) பசல் அலி ஈ) டாக்டர். பாசில் **விடை: ஆ) சர்தார் கே.எம். பணிக்கர்**

**12. "தமிழினத்தின் பொதுச்சொத்து" ............... ஆகும்.**
அ) மகாபாரதம் ஆ) மணிமேகலை
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம் **விடை: ஈ) சிலப்பதிகாரம்**

**13. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என முழக்கமிட்டவர் ...............**
அ) ம.பொ.சி ஆ) பி.எஸ்.மணியன்
இ) ஏ. நேசமணி ஈ) சங்கரலிங்கனார் **விடை: அ) ம.பொ.சி**

**14. ம.பொ.சி முதன் முதலில் ஈடுபட்ட கிளர்ச்சி எது ?**
அ) தெற்கெல்லை ஆ) வடக்கெல்லை
இ) கிழக்கெல்லை ஈ) மேற்கெல்லை **விடை: அ) தெற்கெல்லை**

**15. பசல் அலி ஆணையம் நடுவண் அரசுக்குத் தந்த பரிந்துரை வெளியான ஆண்டு .................**
அ) 1947 ஆ) 1955
இ) 1957 ஈ) 1950 **விடை: ஆ) 1955**

**16. "சிற்றக்கல் ஒளி" இடம்பெற்றுள்ள நூல் எது ?**
அ) எனது பயணம் ஆ) எனது ஆசை
இ) எனது போராட்டம் ஈ) எனது வாழ்க்கை **விடை: இ) எனது போராட்டம்**

**17. சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர்..............**
அ) பி.எஸ்.மணி ஆ) தாணுலிங்கம்
இ) ம.பொ.சிவஞானம் ஈ) மங்கலங்கிழார் **விடை: இ) ம.பொ.சிவஞானம்**

**18. 1966 ஆம் ஆண்டு ம.பொ.சி. க்கு "சாகித்ய அகாதெமி விருது" பெற்றுத் தந்த நூல்..............**
அ) எனது போராட்டம் ஆ) என் விருப்பம்
இ) வானம் வசப்படும் ஈ) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு
**விடை: ஈ) வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு**

**19. ம.பொ.சி. யின் சிலை அமைந்துள்ள இடங்கள்...............**
அ) திருத்தணி, திருச்சி ஆ) திருத்தணி, தியாகராய நகர்
இ) திருத்தணி, திருநெல்வேலி ஈ) திருத்தணி, மதுரை
**விடை: ஆ) திருத்தணி, தியாகராய நகர்**

**20. ம.பொ.சி. தொடங்கிய கழகம்..............**
அ) தமிழ் முரசு ஆ) முத்தரசு
இ) தமிழரசு ஈ) தமிழ்பிறை **விடை: இ) தமிழரசு**

**21. மார்ஷல் ஏ. நேசமணிக்கு சிலையோடு மணிமண்டபமும் அமைந்துள்ள ஊர் எது ?**
அ) மதுரை ஆ) கன்னியாகுமரி
இ) நாகர்கோவில் ஈ) திருச்சி **விடை: இ) நாகர்கோவில்**

**22. முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும், கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம் உள்ள இடம்...........**
அ) வியன்னா ஆ) இராக்
இ) சுவீடன் ஈ) வெனிசுலா **விடை: அ) வியன்னா**

**பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)**

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக. (பெ.ஆ.க – 4)**

**விடை :**

★ நூல் வாங்குவதற்குப் போதிய பணமில்லாத குறையால் பழைய புத்தகங்கள் விற்கும் கடைகளுக்குச் சென்று தனக்கு விருப்பமான புத்தகங்களை மிக மிகக் குறைந்த விலைக்கு வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

★ உணவுக்காக வைத்திருக்கும் பணத்தில் புத்தகங்களை வாங்கிவிட்டு, பலவேளைகளில் பட்டினி கிடந்திருக்கிறார்.

★ இவற்றால் வறுமையிலும் படிப்பின் மீது ம.பொ.சி. கொண்டிருந்த நாட்டத்தை அறியலாம்.

---

**2. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.**

**பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் – ம.பொ.சி.**

**விடை :**

பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி, சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி, சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி, நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி, விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். – ம.பொ.சி.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**3. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டின் சிறப்புமிக்க நிகழ்வுகள் இரண்டினைக் கூறுக.**

**விடை :**

1) 1906 ஆம் ஆண்டு காந்தியடிகள் சத்தியாகிரகம் என்னும் அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கிவைத்தார்.

2) 1906 ஆம் ஆண்டில் வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசிக்கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

---

**4. ம.பொ.சி தமது வாழ்நாளில் சேர்த்த சொத்துகளாக குறிப்பிடுவன யாவை ?**

**விடை :**

★ குறைந்த விலைக்கு நல்ல நூலொன்று கிடைத்துவிட்டால் பேரானந்தம் அடைவேன்.

★ என் வாழ்நாளில் நானாக முயன்று சேர்த்துவைத்துள்ள சொத்துகள் என்னிடமுள்ள பல்லாயிரக்கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என உறுதியாகக் கூறுவேன் என்று குறிப்பிடுகிறார்.

---

**5. ம.பொ.சி ஏன் பிரிட்டிஷாரால் சிறையிலிடப்பட்டார் ?**

**விடை :**

★ 30.09.1932 இல் "தமிழா! துள்ளி எழு" என்னும் தலைப்புடைய துண்டறிக்கை ஒன்றைக் கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியதற்காக சிறையிலிடப்பட்டார்.

★ அதற்காக மூன்று மாதக் கடுங்காவல் தண்டனையும், 300 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

---

**6. இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கப்படவேண்டிய நாள் எது ? ஏன் ?**

**விடை :**

★ 1942 ஆகஸ்டு 8 ஆம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துகளால் பொறிக்கத்தக்க புனித நாளாகும்.

★ அன்றுதான் "இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற தீர்மானத்தைப் பம்பாயில் கூடிய அகில இந்தியப் பேராயக் கட்சி ஒருமனதாக நிறைவேற்றியது.
★ தேசம் முழுவதுமே அன்று புத்துயிர் பெற்றது.

---

**7. சென்னையை மீட்டதில் ம.பொ.சி. யின் பங்கு யாது ?**
**விடை :**
★ ஆந்திர மாநிலம் பிரியும்போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்கவேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர்.
★ மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை அப்போதைய மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி, சென்னை பற்றிய தீர்மானம் ஒன்றை முன்மொழிந்து"தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று முழங்கினார்.
★ தீர்மானம் வெற்றி பெற்றதால் சென்னை தமிழருக்கே என உறுதியானது.

---

**8. தமிழர்கள் கடல்கடந்து வணிகம் செய்தமைக்கான சான்று தருக.**
**விடை :**
★ ஆஸ்டிரியா நாட்டுத் தலைநகரமான வியன்னாவில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் பேபிரஸ் தாளில் எழுதப்பட்ட அரிய கையெழுத்துச்சுவடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.
★ இச்சுவடி சேரநாட்டுத் துறைமுகமான முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகருக்கும் எகிப்து நாட்டின் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் வாழ்ந்த கிரேக்க வணிகருக்கும் இடையிலான வணிக ஒப்பந்தம்.
★ இது கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டது.

---

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**
**1. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக. (பெ.ஆ.க – 6)**
**விடை :**
**இடம் :**
★ "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" – என்னும் இத்தொடர் சென்னை மாநகராட்சி சிறப்புக் கூட்டத்தில் மாநகரத் தந்தை செங்கல்வராயன் முன்னிலையில் ம.பொ.சிவஞானம் முழங்கினார்.
**பொருள் :**
★ அன்றைய மொழிவாரியாய் மாநிலம் பிரிக்கப்பட்டபோது ஆந்திராவின் தலைநகர் சென்னையே இருக்கவேண்டும் என நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையத்தை எதிர்த்து எழுந்த தீர்மான முழக்கம் இதுவாகும்.
**விளக்கம் :**
★ சென்னை மாகாணத்திலிருந்து பிரித்து ஆந்திரம் அமைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த நீதிபதி வாஞ்சு தலைமையிலான ஒரு நபர் ஆணையம், ஆந்திரத்தின் தலைநகராகச் சென்னை இருக்க வேண்டும் என்ற இடைக்கால ஏற்பாட்டினைப் பரிந்துரைத்திருப்பதாக அதிகாரப்பூர்வமற்ற கருத்துகள் நிலவின.

இதையொட்டி மாநகராட்சியின் சிறப்புக் கூட்டமொன்றை அப்போதைய மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூட்டி, சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து, "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்று ம.பொ.சி. முழங்கினார்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**
**2. தமிழகத்தின் "பொதுச்சொத்து" என்று ம.பொ.சி. எதனைக் குறிப்பிடுகிறார் ?**
**விடை :**
★ நான் சிலப்பதிகாரக் காப்பியத்தை மக்களிடம் கொண்டு செல்ல விரும்பியதற்குக் காரணமுண்டு.

★ திருக்குறளையோ, கம்பராமாயணத்தையோ விரும்பாதவனல்லன்.

★ ஆயினும் இந்திய தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கேடில்லாத வகையில், தமிழினத்தை ஒன்றுபடுத்த எடுத்துக்கொண்ட முயற்சிக்குப் பயன்படக்கூடிய ஓர் இலக்கியம் தமிழில் உண்டென்றால், அது சிலப்பதிகாரத்தைத் தவிர வேறில்லையென்று உறுதியாகக் கூறுவேன்.

★ இளங்கோ தந்த சிலம்பு, தமிழினத்தின் பொதுச் சொத்து.

★ எனவேதான் தமிழகத்தின் பட்டி தொட்டியெங்கும் சிலப்பதிகார மாநாடுகள் நடத்தினோம் என்று குறிப்பிடுகிறார்.

**3. ம.பொ.சி. – ஆசிரியர் குறிப்பு வரைக.**

**விடை :**

| | |
|---|---|
| **ஆசிரியர் பெயர்** | : ம.பொ.சிவஞானம் |
| **பெற்றோர்** | : பொன்னுச்சாமி – சிவகாமி |
| **பெற்றோர் இட்ட பெயர்** | : ஞானப்பிரகாசம் |
| **காலம்** | : 1906–1955 |
| **சிறப்பு** | : சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுகிறார் |
| **பதவி** | : 1952 முதல் 1954 வரை சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 1972 முதல் 1978 வரை சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் பதவி. தமிழரசு கழகம் தொடங்கியது. |
| **விருது** | : "வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு" என்னும் இவருடைய நூலுக்காக 1966 ஆம் ஆண்டு "சாகித்ய அகாதெமி விருது" |
| **சிலை** | : தமிழக அரசு திருத்தணியிலும் சென்னை தியாகராய நகரிலும் இவருக்குச் சிலை அமைத்துள்ளது. |

**4. மார்ஷல் ஏ. நேசமணி குறித்து எழுதுக.**

**விடை :**

★ இளம்வயதிலேயே சமூக விடுதலைக்காகப் போராடியவர். வழக்கறிஞர்.

★ நாகர்கோவில் நகர்மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

★ குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்.

★ இதனால் மார்ஷல் நேசமணி என்று அழைக்கப்பட்டார்.

★ 1956 நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்து தமிழகத்தின் தென் எல்லையாக மாறியது.

★ இவருடைய நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு இவருக்கு நாகர்கோவிலில் சிலையோடு மணிமண்டபமும் அமைத்துள்ளது.

## பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒருபக்கஅளவில்"மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்" என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக. (பெ.ஆ.க – 1) (செப் – 20)**

**விடை :**

**முன்னுரை :**

மனிதர்கள் தமக்கென வாழாமல் பொது நலத்திற்கென வாழ்ந்தால் நாடும் வீடும் சிறப்படையும். அதனால் அப்பர் பெருமான் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்றார். சமுதாயம் முன்னேற நாட்டு நலப்பணிகள் மிகமிக அவசியம். நாட்டு நலப் பணிகளின் மாணவர்களின் பங்கு பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**நாட்டு விழாக்கள் :**

இந்திய விடுதலை நாள் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்டு 15 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. 1947 ஆகஸ்டு 15 இல் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்து தனி நாடானதைக் குறிக்கும் இந்த நாளில் நாடு முழுவதும் தேசிய க் கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்படும்.

இந்தியக்குடியரசு நாள் : இந்திய அரசியலமைப்புச்சட்டம் செயலாக்கத்திற்கு வந்த நாள் ஜனவரி **26, 1950** ஆகும். இந்த நாளில் தேசியக்கொடி ஏற்றப்பட்டு மரியாதை செலுத்தப்படும்.

காந்தி ஜெயந்தி : இந்தியாவின் தேசத் தந்தையான மகாத்மா காந்தியின் பிறந்த நாளான அக்டோபர் **2** ஐக் குறிக்கும். இந்தநாள் ஆண்டுதோறும் தேசிய அளவில் மூன்றாவது அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**விடுதலைப் போராட்ட வரலாறு :**

இந்திய விடுதலை போராட்ட வரலாற்றில் **1906** ஆம் ஆண்டு, மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கிவைத்தார்.

தமிழ்நாட்டைத் தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்பிற்குரிய நிகழ்வுகள் பல அவ்வாண்டில் நடைபெற்றன. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக்கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.

**1931** ல் காந்தி – இர்வின் ஒப்பந்தக் காலத்திலே நாடு முழுவதும் இருந்த பேராயக் கட்சிக்காரர்கள் ஆக்கவழிப்பட்ட வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அந்நிய துணிக்கடை மறியல், காந்தி – இர்வின் ஒப்பந்தப்படி அனுமதிக்கப்படவில்லை.

**1942** ஆகஸ்டு **8** ஆம் நாள், இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்க புனித நாளாகும்.

அன்றுதான் "இந்தியாவை விட்டு வெளியேறு" என்ற தீர்மானத்தைப் பம்பாயில் கூடிய அகில இந்திய பேராயக்கட்சி ஒருமனதாக நிறைவேற்றியது. தேசம் முழுவதுமே அன்று புத்துயிர் பெற்றது.

**1947** ஆகஸ்டு **15** ஆம் நாளன்று சென்னை மாநகரில் விடுதலை விழா கொண்டாடி முடிந்தது.

**நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு :**

நமது வாழ்க்கையில் கிடைத்தற்கரிய பருவம் மாணவப் பருவம். இப்பருவத்தில் மாணவர்கள் தங்கள் காலத்தை வீணாக்காமல் செய்தற்குரியசெயல்களில் ஈடுபடவேண்டும். இன்றைய இளைஞர் சமுதாயம் பயனற்ற வழிகளில் காலத்தைச்செலவிடுகின்றனர். இவற்றைப்போக்கிப் புதிய சமுதாயத்திற்கு வித்திடுவது மாணவர்களின் கடமையன்றோ!

கல்வியறிவற்ற மக்களுக்குக் கல்வி கற்பிக்க முன்வரவேண்டும். இன்று நம் நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் எழுத்தறிவின்றி அறியாமை, மூட நம்பிக்கைகளில் மூழ்கியுள்ளனர். இவற்றைப் போக்கிப் புதிய சமுதாயத்திற்கு வித்திடுவது மாணவர்களின் கடமையன்றோ!

பள்ளியில் பயிலுங்கால் மாணவர்கள் சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணித் திட்டம் போன்ற இயக்கங்களில் சேர்ந்து பொது நலத்தொண்டில் ஈடுபட வழிவகுத்துக்கொள்ளவேண்டும்.

சாரண மாணவர்கள் புயல், வெள்ளம், தீ போன்றவற்றில் சிக்கித் தவிப்போர்க்கு உதவலாம். நெரிசல் மிக்க நேரங்களில் காவலர்களுக்குத் துணை நின்று போக்குவரத்தை ஒழுங்குபடுத்தலாம். அந்தந்தப் பகுதிகளில் வாழும் மக்களுக்குச் சுத்தம் சுகாதாரத்தை எடுத்துக் கூறி நல்வாழ்வு வாழ அறிவுறுத்தலாம். நோயாளிகள், ஊனமுற்றவர்களுக்கு உதவலாம். போர்க்காலங்களில் காயமடைந்த வீரர்கள், அகதிகளாக வருபவர்கள், நோயுற்றவர்கள் முதலிய அனைவருக்கும் வேறுபாடு காட்டாமல் உதவி புரியும் இச்சங்கம் உலகம் முழுவதும் இருக்கிறது.

கிராம மக்களுக்குச் சிக்கன வாழ்க்கை, குடிசைத் தொழில்கள் பற்றிக்கூறி அவர்களுடைய பொருளாதார நிலை உயர வகை செய்யலாம். இதுதவிர சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்வதன் இன்றியமையாமையை விளக்கிக் கூறலாம். முதியோர்களுக்கு எழுத்தறிவித்தல், கிராமத்தில் வாழும் மக்களுக்கு அரசின் நலத்திட்டங்களை அறியச் செய்தல், வங்கிகளில் கடனுதவி கிடைக்கச் செய்தல் முதலிய பல்வேறு வழிகளில் மாணவர்கள் தொண்டினைச் செய்யலாம்.

**முடிவுரை :**

இவ்வாறு மாணவர்கள் பொதுநலப்பணியில் ஈடுபட்டால் நாட்டில் அறியாமை நீங்கி வளம் செழிக்கும். தங்களுடைய எதிர்காலம் ஒளிமயமாக விளங்கும். இன்றைய மாணவர்கள் வருங்கால நாட்டை உருவாக்கும் சிற்பிகளாவர். மாணவர்கள் தூண்டுகோலாய் இருந்து நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு உதவுவார்களாக.

"புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு
எழுத்தறிவித்தல்" என்றார் பாரதியார்.

**மொழிப்பயிற்சி**

**அ) விடைக்கேற்ற வினா அமைக்க:**

**1. 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது (அ.மா.வி)**

**விடை :** கன்னியாகுமரி மாவட்டம் எப்பொழுது தமிழ்நாட்டுடன் இணைந்தது ?

**2. ம.பொ.சி. அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார். (செப் – 20)**

**விடை :** ம.பொ.சி. எந்தப் பாடல்களைப்பாடி பிள்ளைப் பருவத்தில் இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார் ?

**3. தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கியவர் ம.பொ.சிவஞானம்.**

**விடை :** தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம் என்று முழங்கியவர் யார் ?

**4. சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர் ம.பொ.சிவஞானம்.**

**விடை :** சிலம்புச் செல்வர் என்று போற்றப்படுபவர் யார் ?

**5. தமிழக அரசு திருத்தணியிலும் சென்னை தியாகராய நகரிலும் ம.பொ.சி. க்கு சிலை அமைத்துள்ளன.**

**விடை :** தமிழக அரசு ம.பொ.சி. க்கு எங்கெங்கு சிலை அமைத்துள்ளன ?

---

**ஆ) நிறுத்தற்குறியிட்டு எழுதுக:**

**1. சரபையர் என்ற முதியவர் ஒருவர் என்னுடைய பெயரை மாற்றி சிவஞானி என்றே அழைத்தார்.**

**விடை :** சரபையர் என்ற முதியவர் ஒருவர், என்னுடைய பெயரை மாற்றி "சிவஞானி" என்றே அழைத்தார்.

**2. மாலவன் குன்றம் போனாலென்ன வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும் என்று முழங்கினோம்**

**விடை :** "மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" என்று முழங்கினோம்.

---

**இ) சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

**1) அன்னையார் இளமையிலே எனக்கு பயிற்றுவித்த பாக்கள் எனது இலக்கிய பயிற்சிகான பாலபாடங்களாக அமைந்தன.**

**விடை :** அன்னையார் இளமையிலே எனக்குப் பயிற்றுவித்த பாக்கள் எனது இலக்கியப் பயிற்சிக்கான பாலபாடங்களாக அமைந்தன.

**2. என் வாழ்நாளில் நானாக முயன்று சேர்த்துவைத்துள்ள சொத்துக்கள் என்னிடமுள்ள பல்லாயிர கணக்கான நூல்களை தவிர வேறில்லை என்று உறுதியாக கூறுவேன்.**

**விடை :** என் வாழ்நாளில் நானாக முயன்று சேர்த்துவைத்துள்ள சொத்துக்கள் என்னிடமுள்ள பல்லாயிரக் கணக்கான நூல்களைத் தவிர வேறில்லை என்று உறுதியாக கூறுவேன்.

---

**ஈ) ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக.**

**1. சிறையில் வேளா வேளைக்கு எப்படியோ எனக்குச் சோறு கிடைத்து வந்தன.**

**விடை :** சிறையில் வேளா வேளைக்கு எப்படியோ எனக்குச் சோறு கிடைத்து வந்தது.

**2. பழனி சிறையிலிருந்த மாணிக்கம் சிறையிலேயே உயிர் துறந்தனர்.**

**விடை :** பழனி சிறையிலிருந்த மாணிக்கம் சிறையிலேயே உயிர் துறந்தார்

---

**உ) 1. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**அம்மானை பாடல்கள், சித்தர் பாடல்கள்,சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்துவைத்துக்கொள்வேன். யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலேயே மிகுந்த**

**ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமை திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே அதிகம் உண்டு என்றெல்லாம் தமது செவிச் செல்வம் பற்றி ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டுள்ளார். (பெ.ஆ.க – 2)**

**வினா விடைகள் :**

**1. ம.பொ.சி அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக யாரிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார் ?**

**விடை :** ம.பொ.சி அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக திருப்பாதிரிப் புலியூர் ஞானியாரடிகளிடம் பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**2. ம.பொ.சி அவர்கள் இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார் ?**

**விடை :** அம்மானைப் பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக ம.பொ.சி அவர்கள் இலக்கிய அறிவினைப் பெற்றார்.

**3. ஏட்டுக்கல்வி பெற இயலாத ம.பொ.சி அதனை எவ்வாறு ஈடு செய்தார் ?**

**விடை :** ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யக் கேள்வி ஞானத்தைப் பெற்றார்.

---

**2. பின்வரும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி :**

**இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் 1906 ஆம் ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாகக் கருதப்படுகிறது. அந்த ஆண்டில்தான் காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கிவைத்தார். தமிழ்நாட்டைத் தனித்து நோக்கினாலும் வரலாற்றுச் சிறப்பிற்குரிய நிகழ்வுகள் பல அவ்வாண்டில் நடைபெற்றன. வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இத்தகைய சிறப்புள்ள ஆண்டில் ஜூன் 26 ஆம் நாள், சென்னை ஆயிரம்விளக்கு வட்டம் சால்வன் குப்பம் என்னும் பகுதியில் நான் பிறந்தேன்.**

**வினா விடைகள் :**

**1. இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் சிறப்புடைய ஆண்டு எது ?**

**விடை :** 1906 ஆம் ஆண்டு

**2. காந்தியடிகள் சத்தியாகிரகத்தை எங்கு தொடங்கிவைத்தார் ?**

**விடை :** காந்தியடிகள் சத்தியாகிரகம் என்னும் அறப்போர் முறையைத் தென்னாப்பிரிக்காவில் தொடங்கிவைத்தார்.

**3. வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்க்கு எதிராகச் சுதேசிக்கப்பல் நிறுவனத்தைத் தொடங்கிய ஆண்டு எது ?**

**விடை :** 1906

**4. ம.பொ.சிவஞானம் பிறந்த ஊர்எது ?**

**விடை :** ம.பொ.சிவஞானம் சென்னை ஆயிரம்விளக்கு வட்டம் சால்வன் குப்பம் என்னும் ஊரில் பிறந்தார்

**5. ம.பொ.சி. எந்த ஆண்டு பிறந்தார் ?**

**விடை :** ம.பொ.சி. 1906 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் நாள் பிறந்தார்.

---

## கற்பவை கற்றபின்

**1. எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் உங்களைக் கவர்ந்த ஒன்றை அவரே சொல்வதைப்போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக. (பெ.ஆ.க – 4)**

**விடை:**

மண்ணில் பிறந்த அனைவருமே மகான்களாக மாறுவதில்லை. சாதாரண குடும்பத்தில் பிறந்த அனைவருமே சரித்திரம் படைப்பதில்லை. இந்தியாவின் கடைக்கோடியில் இராமேசுவரத்தில் மீனவ கிராமத்தில் பிறந்த அப்துல்கலாம் அவர்களே எனக்குப் பிடித்தவர்.

கலாம் "இந்தியாவின் ஏவுகனை நாயகன்" என்றும், "அணுசக்தி நாயகன்" என்றும், "தலைசிறந்த விஞ்ஞானி" என்றும் திருக்குறள் வழி நடந்தவர் என்றும் புகழப்படும் கலாம் அவர்கள் அன்பானவர், எளிமையானவர், நேர்மையானவர், எதற்கும் ஆசைப்படாத மாமேதை ஆவார்.

கலாம் ஒரு நாள் செய்தியாளர்களுக்குப் பேட்டி கொடுத்துக் கொண்டிருந்தபோது ஒரு செய்தியாளர், "உங்கள் கண்டுபிடிப்புகளிலேயே உங்களுக்கு மிகவும் பிடித்தது எது ?" என்றார்.

அதற்கு அவர், "ஊனமுற்றோருக்கு எடை குறைந்த செயற்கைக் கால்களைக் கண்டுபிடித்ததுதான் எனக்கு மனநிறைவைத் தந்தது" என்றார்.

கலாம் அவர்கள் எவ்வளவு பெரிய ஏவுகணைகளை உருவாக்கியிருந்தாலும் மற்றவர்களுக்கு பயன்படுகின்ற மனித நேயத்துடன் கூடிய தயாரிப்பே சிறந்தது என்கிறார்.

அன்றுமுதல் தன்னுடைய வாழ்க்கையிலும் இதுபோன்ற முன்மாதிரியான தயாரிப்புகளையே தயார் செய்ய வேண்டும் என நினைக்கின்றேன்.

"ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் உயர வேண்டும் என்றால் மற்றவர்கள் புகழும்படி பொது நலத்தோடு முன்மாதிரியாக வாழவேண்டும் என்பதே என் ஆசை".

ஒவ்வொருவரும் மனித நேயத்துடன் கூடிய கனவுகளைக் காணுங்கள். அப்பொழுது உங்களது வாழ்க்கையும் நாட்டின் உயர்வும் சிறப்படையும் என்பதில் ஐயமில்லை.

---

**2. நீங்கள் படித்துச் சுவைத்த வரலாற்றுக் கதைகள் பற்றி வகுப்பறையில் உரை நிகழ்த்துக.**

**விடை:**

துரைவாணன் எழுதிய, "தேநீர் வந்த கதை" என்னும் கதையிலிருந்து சில செய்திகளை மட்டும் பகிர்ந்து கொள்கிறேன்.

எங்கள் ஊருக்கு தேநீர் வந்த கதை தெரியுமா உங்களுக்கு ?

எங்க ஊர் என்ன அநேகமா எல்லார் ஊருக்கும் இப்படித்தான் அது வந்திருக்கும் என நெனக்கிறேன்.

நான் என்ன சொல்ல வர்றேன்னா, கிட்டத்தட்ட 1946 களில் ஆரம்ப காலக்கட்டம் எங்க ஊருக்கு அப்பத்தான் தேநீர் என்று ஒன்று அறிமுகம் ஆனது. எப்படின்னு கேளுங்க ?

நானெல்லாம் பொறக்கவே இல்ல அப்ப.

அப்புறம் எப்படித் தெரியும்னு கேளுங்க. எல்லாம் கண்டதும் கேட்டதும் தாங்க.

ஆங்கிலேயர் என்ன பண்ணாங்க தெரியுமா ?

அவங்களுக்குப் புடிச்ச அந்த டீயெ நம்ம எல்லாரையும் குடிக்க வச்சாங்க. எப்படின்னா வீட்டுக்கு ஒரு குவளையிலே தேநீர் தருவாங்களாம். அதுவும் இலவசமா. இப்படி ஒருநாள் ரெண்டு நாள் இல்ல, ஒரு மாசமா குடுத்தாங்களாம்.

எங்க வீட்ல அதக் குடிக்கத் தினமும் ஒரு அடிதடி சண்டையே நடக்குமாம். ஏனென்றால் அது அவ்வளவு சுவையா இருக்குமாங்க. நான் அப்ப குடிச்ச தேநீர் மாதிரி என் வாழ்க்கையில அடுத்து எப்பவுமே அவ்வளவு ருசியா குடிச்சதே இல்லை – அப்படின்னு எங்க பாட்டி சொல்லிக் கேட்டிருக்கேங்க.

நமக்குத்தான் வெளிநாட்டுக்காரன் என்ன அறிமுகப்படுத்தினாலும் ரொம்பப் பிடிக்குமே. அப்பஇருந்து குடிக்க ஆரம்பிச்சவங்கதான், இன்னும் குடிக்கிறோம்... குடிக்கிறோம்... குடிச்சிக்கிட்டே இருக்கோம்.

சொல்லப்போன இங்கிலாந்துல கூட இத்தனை டீக்கடை இருக்காது. அந்நியப்பொருளுக்கும் அந்நியப் பழக்கவழக்கங்களுக்கும் எவ்வளவு அடிமையாயிட்டோம்...

"விழித்திடு தமிழா!" அந்நியப் பழக்கங்களையும் கற்றுக்கொள். ஆனால் சொந்தப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் மறந்துவிடாமல் !.

---

**கூடுதல் வினா :**

**1. நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்களான கல்வெட்டுகள், கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் காணப்படும். அவற்றைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் உங்களால் இயன்ற ஐந்து செயல்களைப் பட்டியலிடுக. (பெ.ஆ.க – 1)**

**விடை :**

1) கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன்.

2) கல்வெட்டுகள் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன்.

3) கல்வெட்டுகள் இருக்கும் இடங்களைச் சுற்றிக் காட்டுவேன். மேலும் அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்க மாட்டேன்.

4) கல்வெட்டின் மீது எதனையும் எழுத அனுமதிக்க மாட்டேன்.

5) கல்வெட்டுகளை உடைக்கவோ, சேதப்படுத்தவோ அனுமதிக்க மாட்டேன்.

இயல் 7. ஆ

## கவிதைப் பேழை

### ஏர் புதிதா ? (செய்யுள்)

(கு.ப.ராஜகோபாலன்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. சரியான அகர வரிசையைத் தேர்ந்தெடுக்க. (பெ.ஆ.க– 4)**

அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

**விடை : இ) உழவு, ஏர், மண், மாடு**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. பொன் ஏர் பூட்டுதல் ............. மாதத்தில் நடைபெறும்**

அ) ஆவணி ஆ) தை
இ) சித்திரை ஈ) வைகாசி

**விடை: இ) சித்திரை**

**3. ஏர் புதிதா ? என்ற கவிதை இடம்பெற்ற நூல் ...............**

அ) கு.ப.ரா. படைப்புகள் ஆ) ஆத்ம சிந்தனை
இ) அகலிகை ஈ) பாரதமணி

**விடை: அ) கு.ப.ரா. படைப்புகள்**

**4. கு.ப. ராஜகோபாலன் பிறந்த ஊர் ...............**

அ) மதுரை ஆ) சேலம்
இ) கரூர் ஈ) கும்பகோணம்

**விடை: ஈ) கும்பகோணம்**

**5. கு.ப.ராஜகோபாலன் பணிபுரிந்த இதழ்களில் ஒன்று...............**

அ) இந்தியா ஆ) நவசக்தி
இ) கிராம ஊழியன் ஈ) நவ இந்தியா

**விடை: இ) கிராம ஊழியன்**

---

### பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (கூடுதல் வினா)**

**1. "பொன் ஏர் பூட்டுதல்" – விளக்குக.**

**விடை :**

முதல் மழைத்துளி விழுந்து மண் பதமாகிவிட்ட நிலையில், விவசாயிகள் விவசாயம் செய்வதற்காகக் காளைகளுக்கும் ஏருக்கும் வழிபாடு செய்து, உழவுப் பணியைத் தொடங்குவதைப், "பொன் ஏர் பூட்டுதல்" என்பர்.

---

**2. "விரைந்து போ நண்பா" என உழவர் எதற்குக் கூறுகிறார் ?**

**விடை :**

"நண்பா" என அழைத்த உழவர், விடியற்காலை நேரம் கிழக்கில் வெள்ளி தோன்றிவிடும். எனவே, பொன் ஏர் பூட்ட விரைந்து காளைகளை ஓட்டிச் செல் என்று கூறுகிறார்.

---

**3. புதிது என்று –ஏர் புதிதா ? என்ற கவிதையில் கு.ப.ரா. எவற்றைக் குறிப்பிடுகிறார் ?**

**விடை :**

நாள்தான் புதிது !, நட்சத்திரம் புதிது !, ஊக்கம் புதிது, உரம் புதிது என்கிறார் கு.ப.ரா.

**4. தமிழர் பண்பாட்டின் மகுடம் எது ?**
**விடை :**

வேளாண்மை செழிக்கவும் மானுடம் தழைக்கவும் சித்திரைத் திங்களில் நடத்தப்படும் பொன் ஏர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. "முதல்மழை விழுந்ததும்" என்னவெல்லாம் நிகழ்வதாக கவிஞர் கு.ப.ரா கவிபாடுகிறார் ? (பெ.ஆ.க – 5)**
**விடை :**

★ முதல் மழை விழுந்ததும் மேல் மண் பதமாகிறது.

★ உழவர், நண்பர்களை அழைத்து, இறைவழிபாடு செய்த பின்பு, பொன் ஏர் பூட்டுதல் நிகழ்வு நடைபெறும்.

★ வெள்ளி முளைக்கும் முன் காளைகளை விரைவாக ஓட்டிச் சென்று பொன் ஏர் பூட்டுவார்கள்.

★ நாளும், நட்சத்திரமும், ஊக்கமும் உரமும் புதியனவாகப் பெற்று வழிபாடு முடிந்தவுடன் ஏரில் மாடுகளைப் பூட்டி ஓட்டுகின்றனர்.

★ மண் புரள நிலம் களிப்படைகிறது. கவலை இல்லை என மகிழ்கின்றனர்.

★ விடியற்காலையில் கதிரவன் தோன்றுவதற்கு முன்பாக நல்ல நேரத்தில் ஏர்பூட்டி உழவுத் தொழிலை தொடங்குகிறார்கள் என கு.ப.ராஜகோபாலன் கவிபாடுகிறார்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. கு.ப.ராஜகோபாலன் – சிறுகுறிப்பு எழுதுக.**
**விடை :**

★ **1902** இல் கும்பகோணத்தில் பிறந்த கு.ப. ராஜகோபாலன் மிகச் சிறந்த சிறுகதை ஆசிரியர். கவிஞர், நாடக ஆசிரியர், மறுமலர்ச்சி எழுத்தாளர் எனப் பன்முகம் கொண்டவர்.

தமிழ்நாடு, பாரதமணி, பாரததேவி, கிராம ஊழியன் எனப் பல இதழ்களில் ஆசிரியராகப் பணிபுரிந்தார்.

இவரின் மறைவுக்குப் பின்னர் இவரது படைப்புகளுள், "அகலிகை", "ஆத்மசிந்தனை" ஆகியன நூல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

---

## பகுதி – IV ( ஐந்து மதிப்பெண்கள்)

**நெடு வினா : (கூடுதல் வினா)**

**1. "முதல்மழை விழுந்ததும்" – தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை ஏர்புதிதா ? கவிதை கொண்டு விவரித்து எழுதி, "பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம்" என்பதையும் விளக்குக. (பெ.ஆ.க – 6)**
**விடை :**

★ முதல் மழை விழுந்ததும் மேல் மண் பதமாகிறது.

★ உழவர், நண்பர்களை அழைத்து, இறைவழிபாடு செய்த பின்பு, பொன் ஏர் பூட்டுதல் நிகழ்வு நடைபெறும்.

★ வெள்ளி முளைக்கும் முன் காளைகளை விரைவாக ஓட்டிச் சென்று பொன் ஏர் பூட்டுவார்கள்.

★ நாளும், நட்சத்திரமும், ஊக்கமும் உரமும் புதியனவாகப் பெற்று வழிபாடு முடிந்தவுடன் ஏரில் மாடுகளைப் பூட்டி ஓட்டுகின்றனர்.

★ மண் புரள நிலம் களிப்படைகிறது. கவலை இல்லை என மகிழ்கின்றனர்.

★ விடியற்காலையில் கதிரவன் தோன்றுவதற்கு முன்பாக நல்ல நேரத்தில் ஏர்பூட்டி உழவுத் தொழிலை தொடங்குகிறார்கள் என கு.ப.ராஜகோபாலன் கவிபாடுகிறார்.

★ சங்கத் தமிழரின் திணைவாழ்வு, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டது.

★ உழுவோர் உலகத்தார்க்கு அச்சாணி எனப் போற்றப்பட்டனர்.

★ உழவே தயையான தொழில் என்றாயிற்று.

★ உழவு, தொழிலாக இல்லாமல் பண்பாடாகவும் திகழ்ந்தது.

★ இன்று உழுவோர் அச்சாணி என்றகருத்தை புதுப்பிக்க வேண்டிய சூழல் எழுந்துள்ளது.

★ உழவுண்டெனில் உயர்வுண்டு என்ற குரல் இன்றும் தொடர்கிறது.

★ தமிழ் மரபின் "பொன் ஏர் பூட்டுதல் " என்ற பண்பாட்டு நிகழ்வு பல்கிப் பெருக முன்னத்தி ஏராக நாம் முன்னிற்க வேண்டும்.

---

**மொழிப்பயிற்சி**

**அ) பின்வரும் பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளி :**

***முதல் மழை விழுந்ததும்***
***மேல் மண் பதமாகிவிட்டது***
***வெள்ளி முளைத்திடுது விரைந்து போ நண்பனே !***
***காளைகளை ஓட்டிக் கடுகிச் செல் முன்பு !***
***பொன்ஏர் தொழுது, புலன் வழிபட்டு***
***மாட்டைப் பூட்டி***
***காட்டைக் கீறுவோம்***
***ஏர்புதிதன்று ஏறும் நுகத்தடி கண்டது.***

**வினா விடைகள் :**

**1. இப்பாடல் இடம்பெறும் கவிதைத் தொகுப்பின் பெயர் யாது ?**

**விடை :**

"கு.ப.ரா படைப்புகள்" என்னும் கவிதைத் தொகுப்பு

**2. இப்பாடலின் ஆசிரியர் யார் ?**

**விடை :**

கு.ப. ராஜகோபாலன்

**3. புதிதன்று – பிரித்து எழுதுக.**

**விடை :**

புதிது + அன்று

**4. "கடுகிச் செல்" என்பதன் பொருள் என்ன ?**

**விடை :**

"விரைந்து செல்".

**5. தொழுது – என்பதன் இலக்கணக்குறிப்பு யாது ?**

**விடை :**

வினையெச்சம்

**6. "நண்பா !" எவ்வகைத் தொடர் ?**

**விடை :**

விளித்தொடர்

**7. இப்பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுதுக.**

**விடை :**

விழுந்ததும் – விரைந்து

---

**கற்பவை கற்றபின்**

**1. முதல் மழை விழுந்தது – தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை ஏர்புதிதா ? கவிதை கொண்டு வரிசைப்படுத்திப் பேசுக.**

**விடை:**

முதல் மழை விழுந்ததும் மேல் மண் பதமாகிவிட்டது. மாட்டைப் பூட்டிக் காட்டைக் கீறுவோம். காடு புதிதன்று கரையும் பிடித்ததுதான். நாள்தான் புதிது, நட்சத்திரம் புதிது, ஊக்கம் புதிது, உரம் புதிது, மாட்டைத் தூண்டி கொழுவை அமுத்து, மண் புரளும், பொழியும், நிலம் சிலிர்க்கும், பிறகு நாற்று நிமிரும். எல்லைத் தெய்வம் எல்லாம் காக்கும். கவலையில்லை. முயற்சி செய் !

---

இயல் 7. இ

## கவிதைப் பேழை

## மெய்க்கீர்த்தி
### இரண்டாம் இராசராச சோழன்

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "தன்நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள் .............**

அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனித நேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்

**விடை : ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. திசாபாலர் எத்தனை பேர் ?**

அ) ஐவர் ஆ) எழுவர்
இ) எண்மர் ஈ) பன்னிருவர்

**விடை: இ) எண்மர்**

**3. சோழ நாட்டில் பிறழ்ந்து ஒழுகுவது...............**

அ) யானைகள் ஆ) மக்கள்
இ) புள்ளிமான்கள் ஈ) கயற்குலம்

**விடை: ஈ) கயற்குலம்**

**4. சோழ நாட்டில் அடைக்கப்படுவன...............**

அ) மலை மூங்கில் ஆ) வண்டுகள்
இ) வருபுனல் ஈ) காடுகள்

**விடை: இ) வருபுனல்**

**5. இராசராசன் ஆட்சியில் தெருவில் ஆடிப்பாடுபவர் ...............**

அ) மக்கள் ஆ) விறலியர்
இ) புலவர்கள் ஈ) இசைப்பாணர்

**விடை: ஈ) இசைப்பாணர்**

**6. இராசராசன் காலத் தமிழ்க் கல்வெட்டு காணப்படும் இடம்...............**

அ) பெரிய கோவில் ஆ) பிள்ளையார்பட்டி
இ) கடற்கரைக் கோவில் ஈ) கைலாசநாதர் கோவில்

**விடை: அ) பெரிய கோவில்**

**7. கோப்பரகேசரி, திருபுவனச்சக்கரவர்த்தி என்று பட்டங்கள் கொண்டவர் ..............**

அ) முதலாம் குலோத்துங்கன் ஆ) இரண்டாம் இராசராச சோழன்
இ) மூன்றாம் இராசராச சோழன் ஈ) முதலாம் இராசராச சோழன்

**விடை: ஆ) இரண்டாம் இராசராச சோழன்**

**6. இரண்டாம் இராசராசனின் மெய்க்கீர்த்தியின் வரிகள்..............**

அ) 71 ஆ) 81
இ) 91 ஈ) 101

**விடை: இ) 91**

**9. புலவர்களால் எழுதப்பட்டு கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை ...............**

அ) பட்டயங்கள் ஆ) ஓவியங்கள்
இ) செப்பேடுகள் ஈ) மெய்க்கீர்த்திகள்

**விடை: ஈ) மெய்க்கீர்த்திகள்**

---

**பகுதி – II (இரண்டு மதிப்பெண்கள்)**

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது ? (பெ.ஆ.க – 2, 3)**

**விடை :**

1) தங்களது வரலாறு பெருமை முதலானவை காலம் கடந்து நின்று நிலைக்க வேண்டும் என்று விரும்பிய அரசர்கள், தங்களைக் குறித்த செய்திகளைச் செய்யுள் வடிவில் செப்பேடுகளிலும், கல்வெட்டுகளிலும் செதுக்கி வைத்தார்கள். இதுவே மெய்க்கீர்த்தி உருவானதன் நோக்கமாகும்.

2) முதலாம் இராசராசன்காலந்தொட்டு மெய்க்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. இரண்டாம் இராசராசசோழன் எவ்வாறு ஆட்சி செய்தான் ?**

**விடை :**

இந்திரன் முதலான திசைப் பாலர்கள் எட்டுப்பேரும் ஓர் உருவம் பெற்று வந்தது போல் இரண்டாம் இராசராசன் ஆட்சி செய்தான்.

---

**3 . சோழ நாட்டில் மக்கள் புலம்புவதும் கலக்கமடைவதும் இல்லை ஏன் ?**

**விடை :**

சோழ மன்னனின் நாட்டில் சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன. நீர் ஓடும் ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன. அதனால் மக்கள் புலம்புவதும் கலக்கமடைவதும் இல்லை.

---

**4. "மாவே வடுப்படுவன மாமலரே கடியவாயின" – இவ்வரியால் உணர்த்தப்படும் குறிப்புப்பொருள் யாது ?**

**விடை :**

சோழ நாட்டில் மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன. மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன என்பது பொருள். இதனால் மக்கள் வடுப்படுவதோ, மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதோ இல்லை என்னும் குறிப்புப் பொருள் உணர்த்தப்படுகிறது.

---

**5. சோழ நாட்டில் சினம் கொள்பவர் யார் ?**

**விடை :**

சோழ நாட்டில் செவிலித் தாயாரே சினம் கொள்வர். வேறு யாரும் அங்கு சினம் கொள்ள மாட்டார்கள்.

---

**6. இராசராச சோழன் உலக மக்களுக்கு எவ்வாறாகத் திகழ்கின்றான் ?**

**விடை :**

உலக மக்களுக்கெல்லாம் உயிராக இருக்கிற சோழன், தந்தையில்லாதவர்க்குத் தந்தையாகவும்,தாயில்லாதவர்க்குத்தாயாகவும்,மகனில்லாதவர்க்கு மகனாகவும் திகழ்கின்றான்.

---

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.**

**பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன்தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.**

**சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும் இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னம் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.**

**விடை :**

மெய்க்கீர்த்திகள் என்பவை தொடக்கத்தில் ஆட்சி, ஆண்டு, வெற்றி, வரலாறு எனக்கூறி அவன் தேவியுடன் வீற்றிருந்ததைக் கூறும் சாசனம் ஆகும். முதல் இராசராசனுடைய எட்டாவது ஆட்சி ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதில் சோழவம்ச பாரம்பரியம் பற்றிய செய்திகள் உள்ளன. பின்னர் வந்த மெய்க்கீர்த்திகள் வம்ச பரம்பரையை விரிவாக விரித்துக் கூறுகின்றன.

---

## பகுதி – IV ( ஐந்து மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக. (அல்லது) இரண்டாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்திப் பாடலின் அழகிய நயத்தைச் சுவைபட விளக்குக. (பெ.ஆ.க– 4)**

**விடை :**

★ இந்திரன் முதலாகத் திசைபாலகர் எட்டுப்பேரும் ஒருருவம் பெற்றதுபோல் ஆட்சி செலுத்தினான் சோழன்

★ அவன் நாட்டில் யானைகள் மட்டுமே பிணிக்கப்படுவன. (மக்கள் பிணிக்கப்படுவதில்லை)

★ சிலம்புகள்மட்டுமே புலம்புகின்றன. (மக்கள் புலம்புவதில்லை)

★ ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன. (மக்கள் கலக்கமடைவதில்லை)

★ புனல் மட்டுமே அடைக்கப்படுகின்றது. (மக்கள் அடைக்கப்படுவதில்லை)

★ மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன. (மக்கள் வடுப்படுவதில்லை)

★ மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன. (மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை)

★ காடுகள் மட்டுமே கொடியனவாய் – அதாவது கொடி உடையவனவாக உள்ளன. (மக்கள் கொடியவராய் இல்லை)

★ வண்டுகள் மட்டுமே கள் – அதாவது தேன் உண்ணுகின்றன (மக்கள் கள் உண்பதில்லை)

★ மலை மூங்கில் மட்டுமே உள்ளீடு இன்றி வெறுமையாய் இருக்கின்றது. (மக்களிடையே வெறுமை இல்லை)

★ வயலில் நெற்கதிர்கள் மட்டுமே போராக எழுகின்றன. (வேறு போர் இல்லை)

★ நீண்ட மலைகளே இருள் சூழ்ந்திருக்கின்றன (நாட்டில் வறுமை இருள் இல்லை)

★ இளமான்களின் கண்களே மருள்கின்றன. (மக்கள் கண்களில் மருட்சி இல்லை)

★ குளந்து மீன்களே பிறழ்ந்து செல்கின்றன (மக்கள் நிலை பிறழ்வதில்லை)

★ செவிலித்தாயாரே சினங் காட்டுவர் (வேறு யாரும் சினம்கொள்வதில்லை)

★ புலவர் பாட்டில் மட்டுமே பொருள் பொதிந்து (மறைந்து) இருக்கின்றது. (யாரும் பொருளை மறைப்பதில்லை)

★ இசைப்பாணரே தெருவில் கூடி ஆடிப்பாடுவர் (தேவையற்று வேறு யாரும் அவ்வாறு செய்வதில்லை)

★ இராசராசன் காக்கும் திருநாட்டின் இயல்பு இது.

★ அவன் நெறியோடு நின்று காவல் காக்கின்றான்.

★ தந்தையில்லாதோருக்குத் தந்தையாயிருக்கின்றான், தாயில்லாதோருக்குத் தாயாய் இருக்கின்றான், மகனில்லாதோருக்கு மகனாயிருக்கின்றான்.

★ உலகில் உயிர்களுக்கு எல்லாம் உயிராய் இருக்கின்றான்.

★ விழிபெற்ற பயனாகவும், மெய் பெற்ற அருளாகவும், மொழிபெற்ற பொருளாகவும், புகழ் பெற்ற நூல் போலவும் திகழ்கின்றான்.

★ புகழ் அனைத்திற்கும் தலைவனாகி யாதும் புரிகின்றான்.

---

**மொழிப்பயிற்சி**

**பின்வரும் பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளி:**

*இந்திரன்முதற் திசாபாலர் எண் மரும்ஒரு வடிவாகி*
*வந்தபடி யென நின்று மனுவாணை தனி நடாத்திய*
*படியானையே பிணிப்புண்பன*
*வடிமணிச்சிலம்பே யரற்றுவன*
*செல்லோடையே கலக்குண்பன*
*வருபுனலே சிறைப்படுவன*

**1. இப்பாடல் இடம்பெறும் நூல் எது ?**

**விடை :** மெய்க்கீர்த்தி

**2. இப்பாடலில் குறிப்பிடப்படும் சோழ மன்னர் யார் ?**

**விடை :** இரண்டாம் இராசராச சோழன்

**3. வருபுனல் – இலக்கணக்குறிப்பு தருக.**

**விடை :** வினைத் தொகை

**4. இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகையை எடுத்தெழுதுக.**

**விடை :**

இந்திரன்
வந்தபடி
படியானையே
வடிமணிச்சிலம்பே

**5. இப்பாடலில் அமைந்திருக்கும் மோனைச்சொற்களை எடுத்தெழுதுக.**

**விடை :**

வடிவாகி – வந்தபடி
வடிமணிச் – வருபுனலே

**6. சோழர் நாட்டில் பிணைக்கப்படுவது எது ?**

**விடை :**

யானைகள்

---

**கற்பவை கற்றபின்**

**உங்கள் ஊரில் உள்ள பண்டைய வரலாற்றுச் சின்னங்களின் ஒளிப்படங்களைத் திரட்டி படத்தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.**



மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை



மதுரை மீனாட்சிஅம்மன் கோவில் புதுமண்டபம்



மதுரை மாரியம்மன் தெப்பக்குளம்



மதுரை மீனாட்சிஅம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபம்

## கவிதைப் பேழை

இயல் 7. ஈ

### சிலப்பதிகாரம்
இளங்கோவடிகள்

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

1. **"கூலம் குவித்த" – இதில் "கூலம்" என்பதன் பொருள்...............**
   அ) குப்பை ஆ) தோல்
   இ) தானியம் ஈ) காய் **விடை: இ) தானியம்**
2. **"துகிர்" – என்னும் சொல்லின் பொருள்............**
   அ) பட்டு ஆ) பவளம்
   இ) நறுமணப்பொடி ஈ) துணி **விடை: ஆ) பவளம்**
3. **"மண்ணீட்டாளர்" எனக் குறிக்கப்பெறுபவர் யார் ?**
   அ) சாலியர் ஆ) சிற்பி
   இ) ஓவியர் ஈ) பரதவர் **விடை: ஆ) சிற்பி**
4. **பொருள் விற்போர்களின் பெயர்களைப் பொருத்துக.**
   அ) சுண்ணம் – 1) வெற்றிலை
   ஆ) கிழி – 2) பட்டு
   இ) தூசு – 3) துணி
   ஈ) பாசவர் – 4) நறுமணப்பொடி
   அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1
   இ) 3, 4, 1, 2 ஈ) 3, 1, 4, 2 **விடை: ஆ) 4, 3, 2, 1**
5. **"சிலப்பதிகாரம் " என்னும் சொல் ............. எனப்பிரியும்.**
   அ) சிலம் + பதிகாரம் ஆ) சிலப் + அதிகாரம்
   இ) சிலப்பு + பதிகாரம் ஈ) சிலம்பு + அதிகாரம் **விடை: ஈ) சிலம்பு + அதிகாரம்**
6. **"வண்ணமும் சுண்ணமும் "– இலக்கணக்குறிப்பு தருக.**
   அ) உம்மைத்தொகை ஆ) உவமைத்தொகை
   இ) பண்புத்தொகை ஈ) எண்ணும்மை **விடை: ஈ) எண்ணும்மை**
7. **"பயில் தொழில் " –இலக்கணக்குறிப்பு தருக.**
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை
   இ) உம்மைத்தொகை ஈ) உவமைத்தொகை **விடை: ஆ) வினைத்தொகை**
8. **மருவூர்ப்பாக்கம் அமைந்துள்ள நகரம்...............**
   அ) மதுரை ஆ) வஞ்சி
   இ) காஞ்சி ஈ) புகார் **விடை: ஈ) புகார்**
9. **"வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும் " இவ்வடிகளில் அமைந்துள்ள நயம் எது ?**
   அ) மோனை ஆ) எதுகை
   இ) இயைபு ஈ) முரண் **விடை: ஆ) எதுகை**
10. **"அருங்கலை வெறுக்கையோடு அளந்து கடை அறியா"– இவ்வடிகளில் "வெறுக்கை" என்பதன் பொருள்...............**
    அ) செல்வம் ஆ) பட்டு
    இ) துணி ஈ) முத்து **விடை: அ) செல்வம்**
11. **மருவூர்ப்பாக்கம் வீதியில் திரிந்து வணிகம் செய்தவர் யார் ?**
    அ) பரதவர் ஆ) கூவியர்
    இ) காழியர் ஈ) பகர்வணர் **விடை: ஈ) பகர்வணர்**

**12. கவுந்தியடிகள் எந்த மதத்தைச் சார்ந்த துறவி ?**
அ) சமணத்துறவி ஆ) பௌத்தத்துறவி
இ) இஸ்லாமியத் துறவி ஈ) சைவத்துறவி **விடை: அ) சமணத்துறவி**

**13.சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ் நடை..............**
அ) வசனநடை ஆ) செய்யுள்நடை
இ) உரைப்பாட்டுநடை ஈ) உரைநடை **விடை: ஈ) உரைநடை**

**14. ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று..............**
அ) சிலப்பதிகாரம் ஆ) நீலகேசி
இ) சூளாமணி ஈ) யசோதர காவியம் **விடை: அ) சிலப்பதிகாரம்**

**15. முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்று சிறப்பிக்கப்படுவது...........**
அ) சிலப்பதிகாரம் ஆ) நீலகேசி
இ) சூளாமணி ஈ) யசோதர காவியம் **விடை: அ) சிலப்பதிகாரம்**

**16. மூவேந்தர்களைப் பற்றிய செய்திகளைக் கூறும் நூல் எது ?**
அ) வளையாபதி ஆ) சீவகசிந்தாமணி
இ) சிலப்பதிகாரம் ஈ) குண்டலகேசி **விடை : இ) சிலப்பதிகாரம்**

**17. இளங்கோவடிகள் எந்த மரபைச் சேர்ந்தவர் ?**
அ) சோழ ஆ) சேர
இ) பல்லவ ஈ) பாண்டிய **விடை: ஆ) சேர**

**16.அ) இரட்டைக் காப்பியங்கள் என்பன ...............**
அ) சிலப்பதிகாரமும், வளையாபதியும் ஆ) மணிமேகலையும், குண்டலகேசியும்
இ) சிலப்பதிகாரமும், மணிமேகலையும் ஈ) மணிமேகலையும், சிந்தாமணியும்
**விடை: இ) சிலப்பதிகாரமும், மணிமேகலையும்**

**19."அடிகள் நீரே அருளுக" என்று இளங்கோவடிகளை வேண்டியவர்.............**
அ) கபிலர் ஆ) சீத்தலைச்சாத்தனார்
இ) கம்பர் ஈ) திருத்தக்கத்தேவர் **விடை: ஆ) சீத்தலைச்சாத்தனார்**

**20. "நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள் " – என்று கூறியவர்............**
அ) சாத்தனார் ஆ) கம்பர்
இ) இளங்கோவடிகள் ஈ) திருத்தக்கத்தேவர் **விடை: இ) இளங்கோவடிகள்**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர் ? (பெ.ஆ.க– 5)**

**விடை :**

| | | |
|---|---|---|
| பாசவர் | – | வெற்றிலை விற்போர் |
| வாசவர் | – | ஏலம் முதலான நறுமணப் பொருள் விற்பவர் |
| பல்நிணவிலைஞர் | – | பல்வகை இறைச்சி விற்பவர் |
| உமணர் | – | உப்பு விற்பவர் |

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. மருவூர்ப்பாக்க வணிக வீதிகளில் எவ்வித மணப்பொருள்களை வணிகம் செய்தனர் ?**

**விடை :**

★ புகார் நகர மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப் புகைப்பொருள்கள், அகில் முதலான மணப்பொருள்கள் விற்பவர்கள் வீதிகளில் வணிகம் செய்தனர்.

---

**3. நெசவாளர் வாழும் பகுதிகளில் விற்கப்பட்ட பொருள்கள் யாவை ?**

**விடை :**

★ பட்டு, உரோமம், பருத்தி ஆகியவற்றைக் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டிய நுண்ணிய தொழில்நுட்பத்தால் நெய்யப்பட்ட ஆடைகள் விற்கப்பட்டன.

**4. வணிக வீதியில் குவிந்து கிடந்த பொருள்கள் எவை ?**
**விடை :**
★ பட்டும், பவளமும், சந்தனமும் அகிலும், முத்தும் மணியும் பொன்னும் அளக்க முடியாத அளவிற்குக் குவிந்து கிடந்தன.

---

**5. குழலிலும் யாழிலும் இசைக்கப்படும் ஏழிசைகளின் பெயர்களைக் கூறுக.**
**விடை :**
★ குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பனவாகும்.

---

**6. உரைப்பாட்டுமடை – விளக்கம் தருக.**
**விடை :**
★ உரைப்பாட்டுமடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. இது உரைநடைப்பாங்கில் அமைந்திருக்கும் பாட்டு.
★ வாய்க்காலில் பாயும் நீரை வயலுக்குத் திருப்பிவிடுவது மடை. உரை என்பது பேசும் மொழியின் ஓட்டம். இதனைச் செய்யுளாகிய வயலில் பாய்ச்சுவது உரைப்பாட்டு மடை.

---

**7. ஐம்பெருங்காப்பியங்கள் எவை ?**
**விடை :**
★ சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன ஐம்பெருங்காப்பியங்கள் ஆகும்.

---

**8. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஏன் இரட்டைக் காப்பியங்கள் என அழைக்கப்படுகின்றன ?**
**விடை :**
★ சிலப்பதிகாரம் மணிமேகலைக் காப்பியத்துடன் கதைத்தொடர்பு கொண்டிருப்பதால், சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

---

**9. சிலப்பதிகாரத்தில் அடங்கியுள்ளவை யாவை ?**
**விடை :**
★ சிலப்பதிகாரத்தில் புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களும், முப்பது காதைகளும் அடங்கியுள்ளன.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

1. ***"பகர்வனர் திரிதிரு நகரவீதியும் ;***
***பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்***
***கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;***
***தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"***

**வினா விடைகள் :**

**அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது ?**
**விடை :**
சிலப்பதிகாரம்

**ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக**
**விடை :**
பகர்வனர், பட்டினும் ; பட்டினும் , பருத்தி;
தூசும், துகிரும் ; கட்டும், காருகர்

**இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.**
**விடை :**
பகர்வனர், நகரவீதி ; பட்டினும், கட்டுநுண்வினை

**ஈ) காருகர் – பொருள் தருக.**

**விடை :**

நெய்பவர்

**உ) இப்பாடலில் காணப்படும் நறுமணப்பொருள்கள் யாவை ?**

**விடை :**

சந்தனம், அகில்

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. மருவூர்ப்பாக்கத் தெருக்களில் வணிகம் செய்தவர்கள் யாவர் ?**

**விடை :**

★ மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில், பிட்டு வணிகம் செய்பவரும், அப்பம் சுடுபவரும், கள் விற்கும் வலைச்சியரும், மீன் விற்கும் பரதவரும் உள்ளனர்.

★ மேலும் வெண்மையான உப்பு விற்கும் உமணரும் வெற்றிலை விற்பவரும் ஏலம் முதலான நறுமணப் பொருள் விற்பவரும் பல வகையான இறைச்சிகள் விற்பவரும் எண்ணெய் வணிகரும் இங்கு வணிகம் செய்கின்றனர்.

---

**3. இளங்கோவடிகள் – ஆசிரியர் குறிப்பு தருக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | இளங்கோவடிகள் |
| **இயற்றிய நூல்** | : | சிலப்பதிகாரம் |
| **பெற்றோர்** | : | தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தாயார் நற்சோனை |
| **தமையன்** | : | சேரன் செங்குட்டுவன் |
| **மரபு** | : | சேர மரபு |
| **சமகாலப்புலவர்** | : | சீத்தலைச் சாத்தனார் |
| **காலம்** | : | கி.பி. இரண்டாம் நூற்றாண்டு |

---

**4. சிலப்பதிகாரம் – நூற்குறிப்பு தருக.**

**விடை :**

★ ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம்.

★ இது முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள் காப்பியம் என்று சிறப்பிக்கப்படுகிறது.

★ மூவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறுகிறது.

★ இது புகார்க்காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களையும் முப்பது காதைகளையும் உடையது.

★ கோவலன், கண்ணகி, மாதவி வாழ்க்கையைப் பாடுவது.

★ சிலப்பதிகாரம் மணிமேகலைக் காப்பியத்துடன் கதைத்தொடர்பு கொண்டிருப்பதால் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் இரட்டைக் காப்பியங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.

---

**பகுதி – IV ( ஐந்து மதிப்பெண்கள்)**

**நெடு வினா : (பாடநூல் வினா)**

**1. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 2)**

**விடை :**

**மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் :**

★ புகார் நகர மருவூர்ப்பாக்கத்தின் வணிக வீதிகளில் வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப் புகைப்பொருட்கள், அகில் முதலான மணப்பொருட்கள் விற்பவர்கள் வீதிகளில் வணிகம் செய்து கொண்டிருக்கின்றனர்.

★ இங்குப் பட்டு, பருத்தி நூல், முடி இவற்றினைக் கொண்ட அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுனரான நெசவாளர் வாழும் வீதிகள் உள்ளன. இங்குப் பட்டும் பவளமும், சந்தனமும் அகிலும், முத்தும் மணியும் பொன்னும் அளக்கமுடியாத அளவிற்குக் குவிந்து கிடக்கும்

வளம் நிறைந்த அகன்ற வணிக வீதிகளும் உள்ளன. மேலும் இவ்வீதிகளில் வேறு பலப்பல பண்டங்களின் விற்பனை நடைபெறுகிறது. எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்களும் உள்ளன.

★ மருவூர்ப்பாக்கத்தின் தெருக்களில், பிட்டு வணிகம் செய்பவரும், அப்பம் சுடுபவரும், கள் விற்கும் வலைச்சியரும், மீன் விற்கும் பரதவரும் உள்ளனர்.

★ மேலும் வெண்மையான உப்பு விற்கும் உமணரும் வெற்றிலை விற்பவரும் ஏலம் முதலான ஐந்து நறுமணப் பொருள் விற்பவரும் பல வகையான இறைச்சிகள் விற்பவரும் எண்ணெய் வணிகரும் இங்கு வணிகம் செய்கின்றனர்.

★ இவற்றுடன் அத்தெருக்களில் பல்வகைப் பொருள்களை விற்கின்ற கடைகளும் உள்ளன. வெண்கலம், செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், இரும்புக் கொல்லர், ஓவியர், மண்பொம்மைகள் செய்பவர், சிற்பிகள் ஆகியோர் உள்ளனர். பொற்கொல்லர், இரத்தினவேலை செய்பவர், தையற்காரர், தோல் பொருள் தைப்பவர், துணியாலும் கட்டைகளாலும் பொம்மைகள் செய்பவர் ஆகியோர் உள்ளனர்.

★ இவ்வாறாக பழுதின்றிக் கைத்தொழில் பல செய்யும் மக்கள் வாழும் பகுதிகள் இங்கு நிறைந்துள்ளன. குழலிலும், யாழிலும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசைகளைக் (ஸ,ரி,க,ம,ப,த,நி என்னும் ஏழு சுரங்களை) குற்றமில்லாமல் இசைத்துச் சிறந்த திறமையைக் காட்டும் பெரும் பாணர்களின் இருப்பிடங்களும் உள்ளன.

★ இவர்களுடன் மருவூர்ப்பாக்கத்தின்தெருக்களில் சிறு சிறு கைத்தொழில் செய்வோர், பிறருக்கு ஏவல் செய்வோர் வாழும் இடங்களும் உள்ளன. இவையனைத்தும் குற்றமின்றிச் சிறப்புடன் அமைந்து விளங்கப் பரந்துகிடந்தன.

**இக்கால வணிக வளாகங்கள், அங்காடிகள் :**

★ தமிழ்நாட்டின் பெரும்பாலான ஊர்களில் பலவகைப் பொருட்கள் ஓரிடத்தில் கிடைக்கும் கடைகள் மற்றும் பல கடைகள் ஓரிடத்தில் அமைந்துள்ளன. வணிக வளாகங்கள் அதிகம் வரத் தொடங்கியுள்ளன.

★ பாரம்பரிய அரிசி வகைகள், சிறுதானியங்கள், பருப்பு வகைகள், சமையலுக்குப் பயன்படுத்தப்படும் எண்ணெய்கள், மசாலாப் பொருட்கள், வெல்லம், மாவு மற்றும் பொடிகள், காய்கறிகள், பழங்கள், ஆடைகள், பாத்திரங்கள், நகைகள் போன்ற மக்கள் பயன்படுத்தும் பெரும்பாலான பொருட்கள் வணிக வளாகங்களில் கிடைக்கின்றன.

★ மக்கள் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு இடத்திற்கும் அலையாமல் இருக்க, அனைத்துப் பொருட்களும் ஒரே இடத்தில் வணிக வளாகங்களில் கிடைக்கின்றன.

**அங்காடிகள் :**

★ இன்று ஒவ்வொரு ஊரிலும் ஏதோவொரு வகையான அங்காடி இயங்குகின்றன. அதில் காய்கறி, பழங்கள், மளிகைப்பொருட்கள், இறைச்சி மற்றும் இதரப் பொருட்கள் விற்கப்படுகின்றன. மலிவு விலையிலும் கிடைக்கின்றன. சில ஊர்களில் தினசரி நடைபெறுகிறது. எது எப்படி இருந்தாலும் வாங்குபவர்களும், விற்பவர்களும் வசதிகள் பெரும்பாலும் குறைவாகவே இருக்கும். மக்கள் தரையில் கடை பரப்பி அமர்ந்திருப்பார்கள். அவர்கள் வெயிலிலும், மழையிலும் அவதிப்படுவர். அந்த இடம் சாலைகளின் ஓரம், சாலைகளின் சந்திப்பு மற்றும் அவை போன்ற பிற இடங்களிலோ அங்காடிகள் நடத்தப்படுகின்றன. சில கிராமங்களில் கால்நடை மற்றும் கோழிகள் விற்கும் காலமுறை அங்காடிகள் நடத்தப்படுகின்றன.

★ பொதுவாக ஒவ்வொரு ஊராட்சியிலும் பலதரப்பட்ட சமூக சார்புடைய விழாக்காட்சிக் கடைகளும், திருவிழாக்களும் நடபெற்று வருகின்றன. ஊராட்சிகள், அடிப்படை வசதிகளாகிய நீர், சுகாதாரம், மின்சாரம் மற்றும் மருத்துவ வசதி ஆகியவற்றைச் செய்துதருவதன் மூலம் திருவிழாக் காட்சிக் கடைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

**மொழிப்பயிற்சி :**

**அ) சொல்லும் பொருளும்.**

| | | | |
|---|---|---|---|
| சுண்ணம் – | நறுமணப்பொடி | பாசவர் – | வெற்றிலை விற்போர் |
| காருகர் – | நெய்பவர் (சாலியர்) | ஓசுநர் – | எண்ணெய் விற்போர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தூசு | – | பட்டு | மண்ணுள் வினைஞர் | – | ஓவியர் |
| துகிர் | – | பவளம் | மண்ணீட்டாளர் | – | சிற்பி |
| வெறுக்கை | – | செல்வம் | நொடை | – | விலை |

**ஆ) இலக்கணக்குறிப்பு.**

1. நன்கலம், அருங்காலம் – பண்புத்தொகைகள்
2. பயில்தொழில், செய்கொல்லன் – வினைத்தொகைகள்
3. அறியா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
4. வண்ணமும், சுண்ணமும், முத்தும், மணியும், பொன்னும் – எண்ணும்மைகள்

**இ) பகுபத உறுப்பிலக்கணம்.**

1. மயங்கிய – மயங்கு + இ(ன்) + ய் + அ
   மயங்கு – பகுதி
   இ(ன்) – இறந்தகால இடைநிலை ; "ன்" புணர்ந்து கெட்டது
   ய் – உடம்படுமெய்
   அ – பெயரெச்ச விகுதி

2. மேவிய – மேவு + இ(ன்) + ய் + அ
   மேவு – பகுதி
   இ(ன்) – இறந்தகால இடைநிலை ; "ன்" புணர்ந்து கெட்டது
   ய் – உடம்படுமெய்
   அ – பெயரெச்ச விகுதி

3. இசைத்து – இசை + த் + த் + உ
   இசை – பகுதி
   த் – சந்தி
   த் – இறந்தகால இடைநிலை
   உ – வினையெச்ச விகுதி

**ஈ) பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**

*பழுதுஇல் செய்வினைப் பால்கெழு மாக்களும்;*
*குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்*
*வழுவின்றி இசைத்து வழித்திறம் காட்டும்*
*அரும்பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்;*
*சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு*
*மறுஇன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்*

**1) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது ?**
**விடை :** சிலப்பதிகாரம்

**2) இப்பாடலின் ஆசிரியர் யார் ?**
**விடை :** இளங்கோவடிகள்

**3) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.**
**விடை :** பழுது – வழுவின்றி ; சிறுகுறுங்கை – மறுஇன்றி

**4) பிரித்து எழுதுக – வழுவின்றி**
**விடை :** வழு + இன்றி

**5) இலக்கணக்குறிப்பு தருக – அரும்பெறல்**
**விடை :** பண்புத்தொகை

**கற்பவை கற்றபின்**

**1. சிலப்பதிகாரக் கதைச் சுருக்கத்தை அறிந்து வந்து வகுப்பறையில் கூறுக.**
**விடை :**

| | | |
|---|---|---|
| கோவலனின் தந்தை | – | மாசாத்துவான் |
| கண்ணகியின் தந்தை | – | மாநாய்க்கன் |
| ஊர் | – | காவிரிப்பூம்பட்டினம் |

★ பதினாறு வயதுடைய கோவலனுக்கும், பன்னிரண்டு வயதுடைய கண்ணகிக்கும் திருமணம் நிகழ்கின்றது. மணமக்கள் தனி வீட்டில் இனிதாகக் குடும்பம் நடத்துகின்றனர்.

★ கோவலன் கலைகளின் காதலன். பூம்புகாரில் ஆடலரசியாகத் திகழும் அழகுப் பாவை மாதவியின் ஆடல் நிகழ்ச்சியைக் கண்டு கோவலன் மனம் மயங்குகின்றான்.

★ கோவலன் மாதவியின் வீட்டில் தங்கித் தன் செல்வங்களை எல்லாம் இழந்து, மாதவியிடம் கருத்து வேறுபாடு கொண்டு மீண்டும் கண்ணகியை வந்தடைந்தான்.

★ கோவலன் இரவில் கண்ணகியை அழைத்துக்கொண்டு இழந்த பொருளை ஈட்டும் கருத்தோடு மதுரை செல்கிறான்.

★ மாதரி என்ற ஆயர்குலப் பெண்ணிடம் கண்ணகியை அடைக்கலமாக்கிக் கண்ணகியின் சிலம்பை விற்கக் கோவலன் நகருக்குள் செல்கிறான்.

★ அங்கு அரண்மனைப் பொற்கொல்லனிடம் சிலம்பைக் காட்டுகிறான். பொற்கொல்லன் சூழ்ச்சியால் கள்வன் எனக் கூறிப் பாண்டிய மன்னன் கோவலனைக் கொல்ல ஆணையிடுகிறான்.

★ கோவலன் கொல்லப்பட்ட செய்தி அறிந்த கண்ணகி பாண்டிய மன்னின் அரசவைக்குச் சென்று வாதாடுகிறாள். பாண்டிமாதேவியின் காற்சிலம்பு முத்துக்கள் நிரம்பியது. என்னுடைய சிலம்போ மாணிக்கக்கற்களால் ஆனது எனக்கூறித் தன்னிடம் உள்ள மற்றொரு சிலம்பை உடைத்து நிரூபணம் செய்கிறாள்.

★ பாண்டிய மன்னன் கோவலன் கள்வன் அல்லல் நானே கள்வன் என்று கூறி அக்கணமே உயிர் விடுகிறான். இதையறிந்த பாண்டிமாதேவியும் கனவனோடு உயிர் துறக்கிறாள்.

★ கண்ணகி மதுரையை எரிக்கும் முன் பார்ப்பனர், அறவோர், குழந்தைகள், முதியோர், பத்தினிப் பெண்கள், பசு ஆகியவற்றைத் தவிர ஏனையோர் மீது தீக்கடவுளை ஏவி மதுரையை அழித்தாள். பின் தீராத சினமுற்றவளாக சேர நாடு நோக்கிப் பயணித்து, வேங்கை மர நிழலில் நிற்கும் போது வான ஊர்தியான பூப்பலக்கில் தேவர்கள் போற்றச் சொர்க்கலோகம் சென்றடைந்தாள்.

---

**2. சிலப்பதிகாரம் காட்டும் மருவூர்ப்பாக்கம் பற்றிய விவரிப்பை இன்றைய கடைத்தெருவுடன் ஒப்பிட்டு உரையாடுக.**
**விடை :**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா !

**ஆசிரியர்** : வணக்கம் மாணவர்களே ! அமருங்கள். சிலப்பதிகாரம் காட்டும் மருவூர்ப்பாக்கம் பற்றிய விவரிப்பை இன்றைய கடைத்தெருவுடன் ஒப்பிட்டு உரையாடுவோமா ?

**மாணவர்கள்** : சரிங்க ஐயா.

**மாலதி** : மருவூர்ப்பாக்கம் கடைத்தெருவானது அனைத்து வகையான பொருட்களும் ஒருங்கே சிறப்பான முறையில் விற்கப்படும் முறையில் அமைந்துள்ளது.

**கண்ணன்** : இன்றைய கடைவீதிகள் சுகாதாரமற்ற முறையில் குறுகிய சாலைகளுடன் போக்குவரத்துக்கு இடையூறு செய்வனவாக உள்ளன.

**விமலா** : மருவூர்ப்பாக்கம் தெருக்களில் பலவகைப் பொருட்களை விற்கின்ற கடைகளும் பல வகையான தொழிலாளர்களும் நிறைந்து இருக்கின்றனர்.

**நிஷாந்த்** : பாத்திரங்கள் செய்வோர், மரச்சாமான்கள் செய்வோர் இன்றும் சிறப்புடன் தன் பணியைச் செய்கின்றனர். ஓவியர், சிற்பிகள், கொல்லர்கள் இன்றைய நவீன அறிவியல் தொழில் நுட்பத்தோடு மிகச் சிறப்பான வேலைப்பாடுகள் அமைந்த பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.

விரிவானம்

இயல் 7. உ

## மங்கையராகப் பிறப்பதற்கே.......

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. 1954 இல் எம்.எஸ்.சுப்புலட்சுமி பெற்றவிருது..............**

அ) தாமரையணி விருது ஆ) பெண் ஆற்றல் விருது

இ) தாமரைத்திருவிருது ஈ) ஔவை விருது **விடை : அ) தாமரையணி விருது**

**2. வேருக்கு நீர் என்னும் புதினத்திற்காக சாகித்ய அகாதெமி விருது பெற்ற முதல் பெண் எழுத்தாளர்..............**

அ) வளர்மதி (ராஜம் கிருஷ்ணன்)

ஆ) மாதவி (சின்னப்பிள்ளை)

இ) அன்பரசி (கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்)

ஈ) மோகனா (பாலசரஸ்வதி) **விடை : ஈ) மோகனா (பாலசரஸ்வதி)**

**3. வளர்மதி (ராஜம் கிருஷ்ணன்) பெண் குழந்தைக் கொலைக்காக எழுதியது..............**

அ) கரிப்பு மணிகள் ஆ) சேற்றில் மனிதர்கள்

இ) வேருக்கு நீர் ஈ) மண்ணகத்துப்பூந்துளிகள்

**விடை : ஈ) மண்ணகத்துப் பூந்துளிகள்**

**4. உழுபவருக்கே நில உரிமை இயக்கத்தைத் தொடங்கியவர்.............**

அ) மோகனா (பாலசரஸ்வதி)

ஆ) வளர்மதி (ராஜம் கிருஷ்ணன்)

இ) அன்பரசி (கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்)

ஈ) மாதவி (சின்னப்பிள்ளை) **விடை : இ) அன்பரசி (கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன்)**

**5. மாதவி (சின்னப்பிள்ளை) மாண்புமிகு வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெற்ற விருது.......**

அ) பெண் ஆற்றல் விருது ஆ) ஔவை விருது

இ) பொதிகை விருது ஈ) தாமரைத்திருவிருது **விடை : அ) பெண் ஆற்றல் விருது**

---

பகுதி –V. (எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக. (பெ.ஆ.க – 5)**

**மகளிர் நாள் விழா**

இடம் : பள்ளிக் கலையரங்கம் நாள் : 08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமையாசிரியரின் வரவேற்பு – இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை.

**விடை :**

**மகளிர் நாள் விழா :**

மகளிர் நாள் விழா 08.03.2019 அன்று பள்ளிக் கலையரங்கத்தில் நடைபெற்றது. அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் வருகைபுரிந்து சிறப்பித்தனர்.

**தலைமை ஆசிரியரின் வரவேற்பு:**

ஆசிரியர்கள், மாணவர்கள், விழாவிற்கு வருகை புரிந்த உள்ளூர்ப் பிரமுகர்கள், சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட இதழாளர் கலையரசி மற்றும் அனைவரையும் வருக, வருக என வரவேற்று இதழாளர் கலையரசியை அனைவருக்கும் அறிமுகம் செய்து மகளிர் நாள் விழா பற்றிக் கலையரசி சிறப்புரை நிகழ்த்துவார் எனக் கூறி அமர்ந்தார்.

**இதழாளர் கலையரசியின் சிறப்புரை:**

இந்த விழாவிற்கு வருகை புரிந்து உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்ச்சி அடைகிறேன் எனக் கூறி, மகளிர் நாள் சிறப்புகளை விளக்கினார். உடலுறுதிக் கொண்ட ஆண்களை விட மனஉறுதிக் கொண்ட சிறப்பு மிக்கவள், தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக என்று நம் உறவில் அனைத்துப் பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருப்பாள் என்று கூறப்படுகிறது. இதனால்தான் தோல்விகளைக் கண்டு துவண்டுவிடாது அதனை எதிர்கொண்டு வெற்றிகொண்ட பல பெண்கள் நம் மத்தியில் வாழ்கின்றனர் எனக்கூறி தமிழரின் பெருமையைப் பறைசாற்றிய பெண்களான எம்.எஸ்.சுப்புலெட்சுமி, பாலசரஸ்வதி, ராஜம் கிருஷ்ணன், கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், சின்னப்பிள்ளை ஆகியோரின்சாதனைகளை நினைவு படுத்தினார்.

எம்.எஸ். சுப்புலெட்சுமி பற்றிப் பேசுகையில் தமிழரின் பெருமையை உலக அரங்கான ஐ.நா. அவையில் பரப்பும் வகையில் அங்குத் தமிழ்நாட்டின் செவ்வியல் இசையைப் பாடியவர். "காற்றினிலே வரும் கீதமாய்" மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றவர். இசைப் பேரரசி என்று நேரு பெருமகனாரால் அழைக்கப்பட்டவர். அவர் காந்தியடிகளை டில்லியில் சந்தித்தபொழுது, "இரகுபதி இராகவ இராஜாராம்" என்ற பாடலை அவர் முன் பாடினார். காந்தியடிகள் எம்.எஸ்.சுப்புலெட்சுமியை மனதாரப் பாராட்டினார். 1963 இல் ஐ.நா. சபையில் பாடிய "குறையொன்றும் இல்லை மறைமூர்த்தி கண்ணா" என்ற பாடல் அவர் குரலில் பதிவு செய்த வெங்கடேச சுப்ரபாதம், தமிழ், தெலுங்கு, கன்னடம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி, மராத்தி, குஜராத்தி ஆகிய இந்திய மொழிகளில் பாடிய பாடல்கள் நம்மால் மறக்க முடியாது என எம்.எஸ்.சுப்புலெட்சுமியின் சாதனைகளை நினைவு படுத்திப் பேசினார்.

பரதநாட்டியக் கவிஞர் பாலசரஸ்வதியைப் பற்றிக் கூறும்போது கல்கத்தாவிலும், காசியிலும் நடந்த அனைத்திந்திய இசை மாநாட்டிலும், சென்னையில் நடந்த தேசிய காங்கிரஸ் கண்காட்சியிலும், "ஜணகணமண" நாட்டுப்பண்ணுக்கு நடனமாடிய சாதனைகளை நினைவுகூர்ந்தார்.

எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணனைப்பற்றிக் கூறும்போது பெண்கள் என்றால் குடும்பக் கதை எழுத வேண்டும் என்ற படிமத்தை உடைத்துச் சமூகச் சிக்கல்களைக் கதைகளாக எழுதியவர். தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் உவர்ப்பு வாழ்க்கையைக் "கரிப்பு மணிகள்" புதினமாக ஆக்கியவர். நீலகிரி, படுகர் இன மக்களின் வாழ்வியல் மாற்றங்களைக் குறித்துப் பதிவு செய்த "குறிஞ்சித் தேன்" புதினம், கடலோர மீனவர் வாழ்வின் சிக்கல்களை பேசுவதே"அலைவாய்க் கரையில்" புதினம், அமைப்பு சாரா வேளாண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டப்படுவதைச் சுட்டிக்காட்டிய "சேற்றில் மனிதர்கள்", "வேருக்கு நீர்" ஆகிய புதினங்கள், குழந்தைகளைத் தீப்பெட்டித் தொழிலில், முடக்கி தீக்குச்சிகளை அந்தப் பெட்டியில் அடைப்பதைப் போன்று குழந்தைகளின் உடலையும் மனதையும் நொறுக்கும் அவல உலகைக் "கூட்டுக் குஞ்சுகள்" என ராஜம் கிருஷ்ணனின் கதைகளைப் பாராட்டினார்.

காந்தியச் சிந்தனையில் கவரப்பட்டு சர்வோதய இயக்கத்தில் களப்பணியாற்றி, சட்டமறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு இயக்கம் ஆகியவற்றில் பங்கு பெற்ற கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் பற்றிப் பேசினார். கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் நாட்டின் விடுதலைக்குப் பின் கணவருடன் இணைந்து வேளாண்மை இல்லாத காலத்திலும் உழவருக்கு வேறுபணிகள் மூலம் வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்ததை குறிப்பிட்டு அவர் சொன்ன வாசகத்தை நினைவு படுத்தினார்.

"உங்களுடைய ஆற்றலை நீங்கள் உணருங்கள், உங்களால் எதையும் சாதிக்க இயலும்" என்பதுதான்.

காசு சேர்த்து குழு ஒன்று ஆரம்பித்து, "களஞ்சியம்" அமைப்பை ஆரம்பித்த சின்னப்பிள்ளை

பற்றிப் பேசினார். டெல்லியில் நம் இந்திய நாட்டு நடுவண் அமைச்சராக இருந்த மாண்புமிகு வாஜ்பாய் அவர்களின் கைகளால் பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்) பெற்றதோடு, தமிழக அரசின் "ஔவை விருதை" யும் தூர்தர்ஷனின் "பொதிகை " விருதையும் பெற்றவர் சின்னப்பிள்ளை என்றும் அண்மையில் "தாமரைத் திருவிருதை" யும் பெற்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர் என சமுதாயத்திற்கு உழைத்த மகளிர் பற்றி அற்புதமாக நினைவு கூர்ந்து உரையை நிறைவு செய்தார்.

**ஆசிரியர்களின் வாழ்த்துரை :**

ஐக்கிய நாடு சபையால் அறிவிக்கப்பட்ட இந்த நாளில் சர்வதேச மகளிர் தினமாகக் கொண்டாடப் படுகிறது. நாமும் கொண்டாடி வருகிறோம். ஆணாதிக்கச் சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் இது என்றே குறிப்பிடவேண்டும். பெண்களுக்கான சமத்துவம், உரிமைகளை வலியுறுத்துவதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது.

*தோள் கொடுக்கும் தோழியாய்,*
*வளம் சேர்க்கும் மனைவியாய்,*
*அறிவுரைக்கும் அன்னையாய்,*
*பரிந்துரைக்கும் மருமகளாய்,*
*குடும்பத் தலைவியாய்,*
*இடர் வருகையில் மதியூகியாய்,*
*வலம்வரும் நீ,*
*வயது பலவானாலும்,*
*வலது கரமாய்த் திகழும் உன்னை*
*தினம் தினம் வாழ்த்த வேண்டுமே*

என ஆசிரியர்கள் கவிதை வாசித்து வாழ்த்துரையை நிறைவு செய்தனர்.

**மாணவத் தலைவரின் நன்றியுரை:**

இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்த தலைமை ஆசிரியருக்கும், வருகைபுரிந்த ஆசிரியர்களுக்கும், சாதனை செய்த பெண்களைப் பற்றி எங்களைப் போன்ற இளைய சமுதாயத்தினருக்குத் தெரிந்து கொள்ளும் வகையில் உரையாற்றிய இதழாளர் கலையரசி அவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

இறுதியாக தேசிய கீதம் பாட நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

---

## கற்பவை கற்றபின்

**உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் – சிறப்புமிக்கவர் – போற்றத்தக்கவர் – என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து வழங்குக. (குறிப்பு : பூ விற்பவர், சாலையோர உணவகம் நடத்துபவர்...........)**

**விடை :**

**பூ விற்பவர் :**

பெயர் – திருமதி. வசந்தா
ஊர் – நாகமலை
வயது – 45

★ இவர் பெயருக்கு ஏற்றார் போல் அன்பானவர்.

★ இனிமையாகப் பேசுபவர்.

★ அதிகம் ஆசைப்படாதவர்

★ தன் குடும்பத்தை மிகவும் நேசிப்பவர்

★ தன் பிள்ளைகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற எண்ணத்தால் தன் கஷ்டத்தைப் பெரிதும் நினைக்காதவர்.

★ தனது மூன்று பிள்ளைகளையும் நன்கு படிக்கவைத்து, பிள்ளைகளின் வாழ்க்கையில் அறிவொளி ஏற்றியவர்.

★ பிள்ளைகள் உயர்ந்த வாழ்வை அடைந்திருந்தாலும், தான் எப்போதும் தெருவில் பூ விற்கும் பணியைத் தெய்வமாகக் கருதிச் செய்து வருகிறார்.

★ அவரது பணி சிறக்க வாழ்த்துவோமாக.

**சாலையோர உணவகம் நடத்துபவர் :**

பெயர் – திருமதி. மா. சிவகாமி அம்மாள்
ஊர் – நாகமலை
வயது – 58

★ இவர் எங்கள் ஊர் சாலையோரத் தள்ளுவண்டியில் உணவகம் நடத்துபவர்

★ அந்தக் காலத்தில் எட்டாம் வகுப்பு வரை படித்திருக்கின்றார்

★ கல்வியின் சிறப்புகளை அறிந்து, கல்வியால் உலகத்தையே வெற்றி காணமுடியும் என்ற உயர்ந்த எண்ணமுடையவர்.

★ தனது கடைக்கு வரும் வாடிக்கையாளரிடமும், புதியவரிடமும் அன்பாகப் பேசி உபசரிக்கக் கூடியவர்.

★ பணத்தைப் பெரிதும் நேசிக்காமல் குறைந்த விலையில் தரமான பொருட்களை தயாரித்து விற்பதால் அவரது கடைக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகமாகும்.

★ அவரிடம் வருவோருக்குத் தரமான உணவை அளித்து வளமான வாழ்விற்கு கல்வி அவசியம் என்ற கருத்தைப் பரப்புவது அவரது முக்கியப் பணியாகும்.

★ ஏழைச் சிறுமிகளுக்கு இலவசமாக உணவளித்தும், வளமான வாழ்க்கை தரும் கல்வியின் சிறப்பினைக் கூறி வழிகாட்டுவது போற்றுதலுக்குரியது.

## கற்கண்டு

**இயல் 7. ஊ**

**புறப்பொருள் இலக்கணம்**
**(இலக்கணம்)**

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் (பெ.ஆ.க – 2) (செப் – 20)**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**விடை : இ) வலிமையை நிலைநாட்டல்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. புறத்திணைகள்............. வகைப்படும்.**
அ) பத்து ஆ) பன்னிரண்டு
இ) பதிமூன்று ஈ) பதினான்கு **விடை: ஆ) பன்னிரண்டு**

**3. இருநாட்டு அரசர்கள் வெட்சிப்பூவைச் சூடிக்கொண்டு போரிடக் காரணம்.............**
அ) கோட்டையைக் கைப்பற்ற ஆ) கோட்டையைக் காக்க
இ) ஆநிரைகளைக் கவர ஈ) ஆநிரைகளை மீட்க **விடை: இ) ஆநிரைகளைக் கவர**

**4. வெட்சிப் பூவின் இன்றைய பெயர் .............**
அ) இட்லிப்பூ ஆ) முல்லைப்பூ
இ)செவ்வந்திப்பூ ஈ) சங்குப்பூ **விடை: அ) இட்லிப்பூ**

**5. கவர்ந்து செல்லப்பட்ட ஆநிரைகளை மீட்பது எத்திணை ஆகும் ?**
அ) வஞ்சி ஆ) காஞ்சி
இ) கரந்தை ஈ) வெட்சி **விடை: இ) கரந்தை**

**6. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது .............. திணையாகும்**
அ) காஞ்சி ஆ) வஞ்சி
இ) தும்பை ஈ) நொச்சி **விடை: ஆ) வஞ்சி**

**7. தன்நாட்டைக் கைப்பற்றவந்த மாற்றரசனோடு போரிடுவது...........**
அ) பெருந்திணை ஆ) வெட்சித்திணை
இ) நொச்சித்திணை ஈ) காஞ்சித்திணை **விடை: ஈ) காஞ்சித்திணை**

**8. நொச்சிப்பூவைச் சூடிப்போரிடக் காரணம்...........**
அ) கோட்டையைக் காத்தல் ஆ) கோட்டையைக் கைப்பற்றுதல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) எதிர்த்துப் போரிடல் **விடை:அ)கோட்டையைக் காத்தல்**

**9. அரசர் தன் வீரர்களுடன் மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்றச் சூடும் பூ...........**
அ) வாகைப்பூ ஆ) உழிஞைப்பூ
இ) வஞ்சிப்பூ ஈ) தும்பைப்பூ **விடை: ஆ) உழிஞைப்பூ**

**10. பகைவேந்தர்கள் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்டுவது...........**
அ) நொச்சித்திணை ஆ) உழிஞைத்திணை
இ) தும்பைத்திணை ஈ) வாகைத்திணை **விடை:இ) தும்பைத்திணை**

**11. போரிலே வெற்றி பெற்ற மன்னர் சூடுவது...........**
அ) கரந்தைப்பூ ஆ) வஞ்சிப்பூ
இ) தும்பைப்பூ ஈ) வாகைப்பூ **விடை: ஈ) வாகைப்பூ**

12. பாடாண்திணை பிரித்து எழுதுக.
அ) பாடாண்+திணை ஆ) பாடாண் + ஆண்திணை
இ) பாடு + ஆண் + திணை ஈ) பாட + ஆண் + திணை **விடை: இ) பாடு + ஆண் + திணை**

13. பூக்கள் இடம்பெறாத புறத்திணைகள் எத்தனை ?
அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: இ) நான்கு**

14. வெட்சி முதல் பாடாண் வரை புறத்திணைகளில் பொதுவானவற்றைக் கூறுவது...............
அ) வஞ்சித்திணை ஆ) காஞ்சித்திணை
இ) பொதுவியல்திணை ஈ) கைக்கிளைத்திணை **விடை: இ) பொதுவியல்திணை**

15. ஒருதலைக் காமம் என்பது ...............
அ) கைக்கிளைத்திணை ஆ) பெருந்திணை
இ) பாடாண்திணை ஈ) பொதுவியல்திணை **விடை: அ) கைக்கிளைத்திணை**

16. பொருந்தாக் காமம் என்பது ...............
அ) கைக்கிளைத்திணை ஆ) பாடாண்திணை
இ) பெருந்திணை ஈ) பொதுவியல்திணை **விடை: இ) பெருந்திணை**

17. பூக்களை அதன் இயல்போடு பொருத்துக.

| | | |
|---|---|---|
| **அ) வெட்சிப்பூ** | – | **1) முட்டை வடிவம்** |
| **ஆ) கரந்தைப்பூ** | – | **2) முடக்கத்தான்** |
| **இ) காஞ்சிப்பூ** | – | **3) சிவப்பு** |
| **ஈ) உழிஞைப்பூ** | – | **4) குறுமரம்** |

அ) அ–4, ஆ–2, இ–3, ஈ–1 ஆ) அ–3, ஆ–1, இ–4, ஈ–2
இ) அ–2, ஆ–3, இ–4, ஈ–1 ஈ) அ–1, ஆ–3, இ–4, ஈ–2

**விடை: ஆ) அ–3, ஆ–1, இ–4, ஈ–2**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. புறத்திணைகளில் எதிரெதிர் திணைகளை அட்டவணைப்படுத்துக. (பெ.ஆ.க – 1)**

**விடை :**

| | | |
|---|---|---|
| வெட்சி (ஆநிரை கவர்தல்) | x | கரந்தை (ஆநிரை மீட்டல்) |
| வஞ்சி (பகைவர் நாட்டைக் கைப்பற்றுதல்) | x | காஞ்சி (தன்நாட்டைக் காப்பாற்றுதல்) |
| உழிஞை (கோட்டையைச் சுற்றி வளைத்தல் | x | நொச்சி (கோட்டையைக் காத்தல்) |

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, போரிடும் திணை குறித்து எழுதுக. (பெ.ஆ.க–4)**

**விடை :**

★ பகை வேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, தம் வீரர்களுடன்தும்பைப் பூவைச் சூடிப் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் போரிடுவது தும்பைத் திணை.

★ போரிடுகின்ற அரசர்கள் இருவரும் தும்பைப்பூ மாலையையே சூடியிருப்பார்கள்.

---

**3. புறத்திணைகள் எத்தனை ? அவை யாவை ?**

**விடை :**

★ புறத்திணைகள் பன்னிரண்டு. அவை,

★ வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பனவாகும்.

---

**4. வெட்சித்திணை என்றால் என்ன ?**

**விடை :**

பகை நாட்டின் மீது போர் தொடுக்கக் கருதிய மன்னனின் போர் வீரர்கள் அந்நாட்டிலுள்ள பசுக்கூட்டங்களைக் கவர்ந்துவர வெட்சிப் பூவைச் சூடிச் செல்வர். அதற்கு வெட்சித் திணை என்று பெயர். இதனை ஆநிரை கவர்தல் என்றும் கூறுவர்.

---

**5. கரந்தைத்திணை என்றால் என்ன ?**

**விடை :**

பகைமன்னனால் கவர்ந்து செல்லப்பட்ட தம் ஆநிரைகளை மீட்கச் செல்வர். அப்போது கரந்தைப் பூவைச் சூடிக்கொள்வர். அதனால் கரந்தைத் திணை என்று பெயர் பெற்றது.

---

**6. காஞ்சித்திணை விளக்குக.**

**விடை :**

தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனோடு, காஞ்சிப் பூவைச் சூடி எதிர்த்துப் போரிடல் காஞ்சித் திணை ஆகும்.

---

**7. நொச்சித்திணை என்றால் என்ன ?**

**விடை :**

மண்ணைக் காக்கக் கோட்டைகள் கட்டப்பட்டன. கோட்டையைக் காத்தல் வேண்டி, உள்ளிருந்தே, முற்றுகையிட்ட பகையரசனோடு நொச்சிப் பூவைச் சூடி உள்ளிருந்தே போரிடுவது நொசித் திணை.

---

**8. உழிஞைத்திணையை விளக்குக.**

**விடை :**

மாற்றரசனின் கோட்டையைக் கைப்பற்ற உழிஞைப் பூவைச் சூடிய தன் வீரர்களுடன் அதனைச் சுற்றி வளைத்தல் உழிஞைத் திணை எனப்படும்.

---

**9. வாகைத்திணை என்றால் என்ன ?**

**விடை :**

போரிலே வெற்றி பெற்ற மன்னன் வாகைப் பூவைச் சூடி மகிழ்வது, வாகைத் திணை. வாகை என்றாலே வெற்றிதானே !

---

**10. பாடாண்திணை விளக்குக.**

**விடை :**

பாடுவதற்குத் தகுதியுடைய ஓர் ஆளுமையாளரின் கல்வி, வீரம், செல்வம், புகழ், கருணை முதலியவற்றைப் போற்றிப் பாடுவது, பாடாண்திணை ஆகும்.

(பாடு + ஆண் + திணை = பாடாண் திணை)

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான். அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக. (பெ.ஆ.க – 5)**

**விடை :**

★ அவந்திநாட்டு மன்னன் மண்ணாசை காரணமாக மருதநாட்டைக் கைப்பற்றக் கருதி வஞ்சிப் பூவைச் சூடிப் போருக்குச் செல்கிறான். இவ்வாறு செல்வது வஞ்சித் திணை ஆகும்.

தன் நாட்டைக் கைப்பற்ற வந்த அவந்தி நாட்டு மன்னனோடு காஞ்சிப் பூவைச் சூடி எதிர்த்துப் போரிட்டான் மருத நாட்டு மன்னன். இது காஞ்சித் திணையாகும்.

---

## இயல் 7. எ

## மொழியை ஆள்வோம்
(மொழிப்பயிற்சி)



**அ) படித்தும் பார்த்தும் சுவைக்க:**

*ஏர்பிடிக்கும் கைகளுக்கே*
*வாழ்த்துக் கூறுவோம் – வறுமை*
*ஏகும்வரை செய்பவர்க்கே*
*வாழ்த்துக் கூறுவோம் ! – என்றும்*
*ஊர் செழிக்கத் தொழில் செய்யும்*
*உழைப்பாளிகள் – வாழ்வு*
*உயரும்வகை செய்பவர்க்கே*
*வாழ்த்துக் கூறுவோம் ! –* கவி.கா.மு.ஷெரீப்

---

**ஆ) மொழிபெயர்க்க :**

***Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils*** **(பெ.ஆ.க – 4) (செப் – 20)**

**விடை :**

தமிழகத்தின் சங்க இலக்கியங்களில் புவியின் அமைப்பையொட்டி ஐந்து பிரிவுகளைக் காண முடிகிறது. அவற்றுள் மருதநிலமே வேளாண்மைக்கு ஏற்ற வளமான நன்செய் நிலப்பகுதியாகும். வேளாண்மை செய்யும் உழவர்கள் சூரிய ஒளி, பருவ மழை, பூமியின் வளம் முதலியவற்றையே பெரிதும் நம்பினர். சங்ககால மக்களின் கணக்குப்படி மேலே கூறிய இயற்கைக் கூறுகளில் மிகவும் இன்றியமையாதது சூரிய ஒளியே என அதற்கு முக்கியத்துவமும் தமிழர்கள் அளித்தனர்.

---

**இ) பின்வரும் தொடர்களைக் கொண்டு பொருத்தமான தொடர் அமைக்க.**

**வரப்போகிறேன்,இல்லாமல் இருக்கிறது, கொஞ்சம் அதிகம், முன்னுக்குப் பின், மறக்க நினைக்கிறேன்.**

**எ.கா :**

**அ) வரப்போகிறேன் :**

**விடை :**

இன்னும் சிறிது நேரத்தில் வரப்போகிறேன்

**ஆ ) இல்லாமல் இருக்கிறது**

**விடை :**

கடந்த இரண்டு ஆண்டுகளாகவே ஏரி, குளம், கண்மாய்களில் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது.

**இ) கொஞ்சம் அதிகம்**

**விடை :**

இன்று வெயில் நேற்றைவிடக் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது.

**ஈ) முன்னுக்குப் பின்**

**விடை :**

கையும் களவுமாக மாட்டிக்கொண்ட திருடன் முன்னுக்குப்பின் முரணாகப் பேசினான்.

உ) மறக்க நினைக்கிறேன்.
**விடை :**
கடந்த ஆண்டு எனக்கு ஏற்பட்ட கசப்பான, துன்பமான அனுபவங்களை மறக்க நினைக்கிறேன்.

---

**ஈ) தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.**
**மூவேந்தர்களால் நாற்றிசையும் போற்றி வளர்க்கப்பட்ட முத்தமிழே, உலக மொழிகளில் உயர்ந்ததென்ற செம்மாந்த கூற்றிற்கு, தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள இருதிணை அமைப்பே காரணமாகும். முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள். நானிலத்தில் பசித்தவர்க்கு அறுசுவை உணவு போல் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் படிப்பவர்க்கு மனதிற்கினிமை ஈந்து தமிழ்ப்பெருமை சாற்றுகிறது. (பெ.ஆ.க – 6)**
**விடை :**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. மூவேந்தர் | = | மூன்று + வேந்தர் | = | மூன்று | = | ங |
| 2. நாற்றிசை | = | நான்கு + திசை | = | நான்கு | = | ச |
| 3. முத்தமிழ் | = | மூன்று + தமிழ் | = | மூன்று | = | ங |
| 4. இருதிணை | = | இரண்டு + திணை | = | இரண்டு | = | உ |
| 5. முப்பால் | = | மூன்று + பால் | = | மூன்று | = | ங |
| 6. ஐந்திணை | = | ஐந்து + திணை | = | ஐந்து | = | ரு |
| 7. நானிலம் | = | நான்கு + நிலம் | = | நான்கு | = | ச |
| 8. அறுசுவை | = | ஆறு + சுவை | = | ஆறு | = | சா |
| 9. பத்துப்பாட்டு | = | பத்து + பாட்டு | = | பத்து | = | ௰ |
| 10. எட்டுத்தொகை | = | எட்டு + தொகை | = | எட்டு | = | அ |

---

**உ) கடிதம் எழுதுக.**
**நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக. (பெ.ஆ.க – 3)**
**விடை :**
அனுப்புநர் :
த. மதிவாணன்
92, பாரதியார் தெரு,
நாகமலை, மதுரை – 625019
பெறுநர் :
ஆசிரியர்,
தமிழ் நாளிதழ்,
சென்னை – 600005
பொருள் : தமிழ் நாளிதழ் பொங்கல் மலரில் கட்டுரையை வெளியிட வேண்டுதல்......
மதிப்பிற்குரிய ஐயா,
வணக்கம். "உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்னும் தலைப்பில் பொதுக் கட்டுரை எழுதி அனுப்பியுள்ளேன். விளைநிலங்கள் எல்லாம் வீட்டு மனைகளாக மாறுகின்ற இக்காலத்தில் உழவுத் தொழிலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இக்கட்டுரை

அனுப்பியுள்ளோம். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் இவை அனைத்தும் உழவுத் தொழில் அடிப்படையில் பெற வேண்டும். உணவு இல்லையென்றால் மனிதன் உயிர் வாழ முடியாது.

"விவசாயி சேற்றில் கால் வைத்தால்தான் நாம் சோற்றில் கைவைக்க முடியும்"

"தாளாற்றி தந்தபொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு" என விவசாயத்தின் மகத்துவத்தை வள்ளுவர் கூறுகிறார். இன்றைய உழவுத்தொழிலின் நிலை பற்றி விரிவாகக் கட்டுரை எழுதியிருக்கிறேன்.

தமிழகம் முழுவதும் அதிகமாக வாசகர் படிக்கும் தங்கள் நாளிதழில் இந்தக் கட்டுரை இடம்பெற்றால், உழவுத் தொழிலின் இன்றைய முக்கியத்துவம் எதிர்காலத் தலைமுறைக்குச் சென்றடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தங்கள் நாளிதழில் பொங்கல் மலரில் வெளியிட வேண்டுகிறேன்.

நன்றி

இங்ஙனம்
த. மதிவாணன்

இணைப்பு : " உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் "
– நான்குபக்க கட்டுரை

உறைமேல் முகவரி:
ஆசிரியர்,
தமிழ் நாளிதழ், சென்னை – 600005

---

**ஊ) கவிதையை உரையாடலாக மாற்றுக. (பெ.ஆ.க – 6)**

**மகள் சொல்லுகிறாள் :–**

அம்மா என் காதுக்கொரு தோடு – நீ
அவசியம் வாங்கி வந்து போடு !
சும்மா இருக்க முடியாது – நான்
சொல்லிவிட்டேன் உனக்கு இப்போது !

**தாய் சொல்லுகிறாள் :–**

காதுக்குக் கம்மல் அழகன்று – நான்
கழறுவதைக் கவனி நன்று
நீதர் மொழியை வெகுபணிவாய் – நிதம்
நீ கேட்டு வந்து காதில் அணிவாய் !

**மகள் மேலும் சொல்லுகிறாள் :–**

கைக்கிரண்டு வளையல் வீதம் – நீ
கடன்பட்டுப் போட்டிடினும் போதும் !
பக்கியென் றென்னை யெல்லோரும் – என்
பாடசாலையிற் சொல்ல நேரும் !

**தாய் சொல்லும் சமாதானம் :–**

வாரா விருந்து வந்த களையில் – அவர்
மகிழ உபசரித்தால் வளையல் !
ஆராவமுதே மதி துலங்கு – பெண்ணே
அவர் சொல்வ துன்கைகட்கு விலங்கு !

**பின்னும் மகள் :–**

ஆபர ணங்கள் இல்லை யானால் – என்னை
யார் மதிப்பார் தெருவில் போனால் ?
கோபமோ அம்மா இதைச் சொன்னால் – என்
குறை தவிர்க்க முடியும்

**அதற்குத் தாய் :**

கற்பது பெண்களுக்கா பரணம் – கெம்புக்
கல்வைத்த, நகைதீராத ரணம் !
கற்ற பெண்களை இந்த நாடு – தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளுமன் போடு !

– பாரதிதாசன்

**விடை :**

**உரையாடல் :**

**மகள் :** அம்மா ! என் காதுக்கு தோடு வாங்கி வந்து போட்டுவிடு, நான் காதில் தோடு இன்றி சும்மா இருப்பது அழகல்ல.

**அம்மா :** நான் சொல்வதை நீ கேள். காதுக்கு கம்மல் அழகல்ல. சான்றோர் கூறும் நல்ல அறிவுரையைக் காதில் போட்டுக்கொள் அதுவே நன்று.

**மகள் :** அம்மா ! கடன்பட்டாவது என் கைகளுக்கு வளையல் போட்டிடுவாய். நான் பள்ளிக்கு வளையல் இல்லாது போனால் எல்லோரும் என்னைப் பற்றி என்ன கூறுவார்கள் ?

**அம்மா :** வராத விருந்தினர் வந்தால், அவரை வளையல் போட்டு உபசரிக்க வேண்டும் என்பதில்லை. அவர் சொல்லே உனக்கு விலங்கு. அவர்கள் உன்னைப் புகழும் சொல்லே விலங்கு.

**மகள் :** அம்மா ! நான் சொல்வது உனக்கு கோபமாக இருக்கலாம். ஆபரணங்கள் இல்லாமல் நான் தெருவில் போனால் எவர் என்னை மதிப்பார்கள். என் குறையைத் தீருங்கள் அம்மா.

**அம்மா :** மகளே! ஆபரணங்களா ஒரு பெண்ணுக்கு அழகு! கல்வி கற்பது மட்டுமே பெண்ணுக்கு மிகுந்த அழகான ஆபரணமாகும். கெம்புக்கல் நகையும் நமக்குத் தீராத ரணமாகும். ஆனால் கற்ற பெண்களை இந்த நாடு தன் கண்களில் அன்போடு ஒற்றிக் கொள்ளும்.

---

**கூடுதல் வினா: (எட்டு மதிப்பெண்)**

**2. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.**

**முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர் – நாட்டுப்பற்று – மொழிப்பற்று – பொது வாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.**

**(பெ.ஆ.க – 1)**

**தலைப்பு: தமிழ்த்தென்றல் திரு.வி.க**

**முன்னுரை :**

இலக்கிய உலகில் பெரும் புலவராக, சமய உலகில் சான்றோராக, அரசியல் உலகில் தலைவராக, பத்திரிகை உலகில் வழிகாட்டியாக, தொழிலாளர் உலகில் தனியரசராகக் கோலோச்சியவர் திரு.வி.கலியாணசுந்தரனார். அவரைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**தமிழகம் தந்த தவப்புதல்வர் :**

தமிழ்த்தாயின் தவப்புதல்வராய்த் தோன்றிய திரு.வி.கலியாணசுந்தரனார் தமிழ் மக்களால் திரு.வி.க எனச்சுருக்கமாய் அழைக்கப்பட்டார். தமிழ்த்தென்றலாய் விளங்கிய திரு.வி.க. "என் கடன் பணிசெய்து கிடப்பதே" என வாழ்ந்தவர். திரு.வி.க. விருத்தாசலனார் – சின்னம்மை இணையர்க்கு 26.8.1883 அன்று பிறந்தார். துள்ளம் என்னும் சிற்றூரில் விருத்தாசலனாருக்குப் போதிய வருவாய் இல்லாததால் அவர் சென்னை இராயப்பேட்டையில் குடியேறினார். அங்குத் திரு.வி.க. யாழ்ப்பாணம் நா.கதிரைவேல் பிள்ளையிடம் தமிழ் பயின்றார்.

திரு.வி.க. முதலில் ஸ்பென்சர் நிறுவனத்தில் பணியாற்றினார். பிறகு வெஸ்லியன் மிஷன் பள்ளியில் ஆசிரியர் பணி ஏற்றார். 1916 இல் வெஸ்லி கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராய் உயர்ந்தார்.

**நாட்டுப்பற்று:**

திரு.வி.க. சமரச சன்மார்க்கச் சான்றோர், மனிதனை ஒன்றுபடுத்தும் மதமே அவர் மதம். மதங்களுக்கிடையே சமரசம் தோன்றவேண்டுமென அவர் எண்ணினார். எல்லாச் சமயங்களிலும் அவர் பொது அம்சத்தைப் பார்த்தார். சமரச சன்மார்க்கம் உலககெங்கும் பரவவேண்டுமென விரும்பினார்.

**மொழிப்பற்று:**

செய்தி இதழ்களில் இனிய எளிய தமிழ் நடையில் எழுதித் தமிழ் ஆர்வத்தை வளர்த்தார். இளமை விருந்து, முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் முதலான நூல்களை எழுதித் தமிழுக்குத் தொண்டு செய்தார்.

**பொது வாழ்வில் தூய்மை:**

திரு.வி.க. ஆசிரியர் பணியை விடுத்து, "தேசபக்தன்" என்னும் நாளிதழின் ஆசிரியரானார். திலகர், காந்தியடிகள் போன்ற விடுதலை வீரர்களைப் போற்றித் தம் தேசபக்தனில் எழுதினார். "நவசக்தி" என்னும் இதழையும் தொடங்கினார். சாது அச்சுக்கூடத்தையும் நிறுவினார். இந்தியாவிலேயே முதன் முதலாய்த் தொழிலாளர்க்கென 1918 இல் சென்னைத் தொழிலாளர் சங்கத்தை நிறுவினார். 1920 இல் மத்திய தொழிற்சங்கத்தைத் தோற்றுவித்துத் தொழிலாளர் நலனுக்காய்ப் பாடுபட்டார்.

**எளிமை:**

திரு.வி.க. எளிமையே உருவானவர். சமரச நோக்குடையவர். பொருளாசை அற்றவர் என்பதால், "தமிழ் முனிவர்" எனப் போற்றப்பட்டார்.

**மக்கள் பணியே மகத்தான பணி:**

திரு.வி.க. சொன்னதைச் செய்தார்; செய்வதைச் சொன்னார்; அப்பழுக்கற்ற வாழ்வு வாழ்ந்தார்; பலர் வாழத் தாம் வாழ்ந்தார். அவர் தன்நலங்கருதாத தகைமையாளர். மனச்சான்றுக்கு மதிப்பளிப்பவர்; அஞ்சாமையும் துணிவும் மிக்கவர்.

**முடிவுரை:**

நாட்டுக்காகவும், மொழிக்காகவும் தொண்டு செய்த பெருமகனார் திரு.வி.க. 1953 இல் இயற்கை எய்தினார். அவர் விட்டுச் சென்ற உயர்பண்புகளைத் தொட்டுச்சென்றால் உலகம் உய்யும் என்பதில் ஐயமில்லை.

---

**ஆ) முன்னுரை – உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் – உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் – சுழன்றும் ஏர்ப்பினது உலகம் – முடிவுரை.**

**இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி, பொருத்தமான தலைப்பிடுக.**

**(பெ.ஆ.க – 4)**

**முன்னுரை :**

"ஏர் முனைக்கு நேர் இங்குஎதுவுமே இல்லை", "உழுவார் உலகத்தார்க்கு ஆணி", "உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை", "சீரைத் தேடின் ஏரைத் தேடு" என்பன உழவின் சிறப்பை உணர்த்துவனவாகும்.

**உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம்:**

உழவுத் தொழிலில் உயர்வு பெறாத நாடு, பிற தொழில்களைப் பெற்றிருந்தாலும் உயர்வு பெற இயலாது. "வரப்புயர நீர் உயரும் ; நீர் உயர நெல் உயரும் ; நெல் உயரக் குடி உயரும் ; குடி உயரக் கோல் உயரும் ; கோல் உயரக் கோன் உயர்வான்" என்னும் அவ்வையார் பாடல் இவ்வுண்மையை உணர்த்துகிறது.

**உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்:**

உழவுத் தொழிலினை "வேளாண்மைத் தொழில்" என்றும் கூறுவர். நம் இந்திய நாடு வெகு காலத்திற்கு முன்னரே உழவுத் தொழிலில் முன்னேறி இருந்தது. தமிழ் வேந்தர்கள் உழவுத் தொழிலுக்காய் ஏரிகளையும் குளங்களையும் ஏற்படுத்தினார்கள். களர் நிலத்தையும் பண்படுத்தி கரும்பும் நெல்லும் விளையும் கழனியாக்கினார்கள். நெற்பயிர்கள் யானையை மறைக்கும் அளவிற்கு வளர்ந்தன. மக்கள் செந்நெல்லை மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என யானை கட்டிப் போரடித்தார்கள்.

**சுழன்றும் ஏர்ப்பினது உலகம்:**

காலத்திற்கேற்ப நீர்வளத்தைப் பெருக்கவும், பயிர் விளைவை பன்மடங்காக்கவும் பூச்சிகளால் பயிரழியாமல் காக்கவும் பல புதிய முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வேளாண்மைக்காக ஆராய்ச்சி நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நல்ல விளைச்சலுக்கு வீரியமுள்ள விதை இன்றியமையாதது. வேளாண் துறையினர் குறைந்த காலத்தில் நிறைந்த விளைச்சல் தரக்கூடிய ஆடுதுறை 27, கருணா, பொன்னி, கண்ணகி, செம்மை நெல் முதலிய புதுவகை நெல்விதைகளை இப்போது கண்டுபிடித்துள்ளனர்.

புதிய நெல்வகைகளைக் கண்டுபிடித்தமையால் விளைச்சல் பெருகுகிறது. வேளாண்மையில் ஈடுபட்டவர்கள் நல்ல பலன் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர்.

**முடிவுரை.:**

உழவுத் தொழில் சிறக்க வேண்டுமானால் உழவர்கள் சிறப்பிக்கப்பட வேண்டும். உழவர்களுக்கு உரிய மதிப்புத் தரவேண்டும். படித்தவர்களும் உழவுத் தொழிலில் ஈடுபடவேண்டும். "மேழிச் செல்வம் கோழைப் படாது" என்ற ஆன்றோர் மொழி, அன்றும் உண்மை ; இன்றும் உண்மை; என்றும் உண்மையாகவே இருக்கம்.

---

## இயல் 7. ஏ

## மொழியோடு விளையாடு

**அ) ஊர்ப்பெயர்களின் மரூஉவை எழுதுக.**
**புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, உதகமண்டலம், கோயம்புத்தூர், நாகப்பட்டினம், புதுச்சேரி, கும்பகோணம், திருநெல்வேலி, மன்னார்குடி, மயிலாப்பூர், சைதாப்பேட்டை.**
**எ.கா : தஞ்சாவூர் – தஞ்சை**
**விடை :**

| | | |
|---|---|---|
| புதுக்கோட்டை | – | புதுகை |
| திருச்சிராப்பள்ளி | – | திருச்சி |
| உதகமண்டலம் | – | உதகை |
| கோயம்புத்தூர் | – | கோவை |
| நாகப்பட்டினம் | – | நாகை |
| புதுச்சேரி | – | புதுவை |
| கும்பகோணம் | – | குடந்தை |
| திருநெல்வேலி | – | நெல்லை |
| மன்னார்குடி | – | மன்னை |
| மயிலாப்பூர் | – | மயிலை |
| சைதாப்பேட்டை | – | சைதை |

**ஆ) படம் தரும் செய்தியைப் பத்தியாகத் தருக.**
**விடை :**


வீறுகொண்டு முன்னேறும் காலாட்படை, குதிரைப்படை , யானைப்படை
17ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், திருப்புடைமருதூர், திருநெல்வேலி.

இப்படம் திருநெல்வேலி மாவட்டம் திருப்புடைமருதூரில் கண்டுபிடிக்கப்பட்ட 17 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுவர் ஓவியமாகும். அக்காலத்தில் தமிழகத்தில் காலாட்படை, குதிரைப் படை, யானைப்படை என்னும் முப்படைகளே இருந்தன. அக்காலங்களில் அரசன் பகைவரை அழிக்கப் படைகொண்டு செல்வது வழக்கம். அவ்வாறு செல்லும்போது பாதுகாப்புக்காகக் குதிரைப்படை முன்னேயும், அதனைத் தொடர்ந்து காலாட்படை வீரர்களும் தத்தம் போர்க்கருவிகளைக் கையில் ஏந்திச் செல்வர். அதனைத் தொடர்ந்து அரசன் யானைமேல் அமர்ந்து செல்வான். இதனையே அன்றைய கலைஞன் ஓவியமாக வரைந்துள்ளான்.

**இ) அகராதியில் காண்க:**
**மிரியல், வருத்தனை, அதசி, துரிஞ்சில்**
**விடை :**

| | | |
|---|---|---|
| மிரியல் | – | மிளகு |
| வருத்தனை | – | பெருக்குதல், தொழில், சீவனம் |
| அதசி | – | சணல் |
| துரிஞ்சில் | – | வௌவால், சீக்கிரி மரம் |

**ஈ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**
**விடை :**



<u>ஏர் ஓட்டுன வயலினிலே</u>
<u>தார் ஓட்டும் காலமடா........</u>
<u>நஞ்சைக் காட்டின் நெஞ்சினிலே</u>
<u>நஞ்சு விதைக்கும் உலகமடா....</u>
<u>உனக்கும் எனக்கும் ஓய்வுண்டு</u>
<u>எல்லாப் பணிக்கும் ஓய்வுண்டு</u>
<u>கிழவன் ஆன போதிலும்</u>
<u>உழவன் பணிக்கு</u>
<u>ஓய்வில்லையோ............</u>

**உ) கலைச்சொல் அறிவோம் :**

| | | | |
|---|---|---|---|
| Consulate | – துணைத்தூதரகம் | Guild | – வணிகக் குழு |
| Patent | – காப்புரிமை | Irrigation | – பாசனம் |
| Document | – ஆவணம் | Territory | – நிலப்பகுதி |

### ஊ) நிற்க அதற்குத் தக

அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகளும் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை நமது இன்றைய வரலாற்றைப் புலப்படுத்துபவை.

அதுபோலவே கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் கட்டியவர்கள் பெயர்களும் வரலாறும் இடம்பெற்றிருக்கும். அவை நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்கள் என்று அறிவீர்கள்தானே ? இவற்றைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்கள்..... **(செப் – 20)**

| | | |
|---|---|---|
| 1. | கல்வெட்டுகளின் வழி அறியலாகும் செய்திகளை என் நண்பர்களுக்குக் கூறுவேன் | அவற்றின் மதிப்பைக் குறைக்கும்படி எதுவும் கூற அனுமதிக்கமாட்டேன் |
| 2. | கல்வெட்டுகளைக் குறித்து அவர்களைப் பெருமிதம் அடையச் செய்வேன் | நமது முன்னோர்களின் பண்பாட்டைக் குறித்து அறிய உதவும் கல்வெட்டு எழுத்துகளை எவரும் சிதைக்காமல் பாதுகாப்பேன். |
| 3. | பழந்தமிழர் வரலாற்று ஆவணங்களை பாதுகாக்க உதவுவதோடு, மற்றவர்கள் அவற்றை அறியவும் உதவி செய்வேன். | வரலாற்று ஆவணங்களைப் படியெடுத்து, அழியாமல் பாதுகாக்க உதவுவேன். |

### ஏ) அறிவை விரிவு செய்

| | | |
|---|---|---|
| என் கதை | – | நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் |
| வேருக்கு நீர் | – | ராஜம் கிருஷ்ணன் |
| நாற்காலிக்காரர் | – | நா. முத்துசாமி |

இயல் எட்டு

## இயல் 8. பெருவழி

### உரைநடை உலகம்

இயல் 8. அ

## சங்கஇலக்கியத்தில் அறம் (உரைநடை)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. மேன்மை தரும் அறம் என்பது................(பெ.ஆ.க – 4)**

அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

**விடை : அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது**

**2. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் ................ (பெ.ஆ.க – 6) (செப் – 20)**

அ) உதியன் ; சேரலாதன் ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
இ) பேகம் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

**விடை: ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம்.............**

அ) சங்ககாலம் ஆ) பக்தி இலக்கிய காலம்
இ) சங்கமருவிய காலம் ஈ) இடைக்காலம் **விடை: அ) சங்ககாலம்**

**4. சங்ககாலத்திற்குப் பிந்தைய காலத்தை................. எனலாம்.**

அ) பக்திக்காலம் ஆ) சங்கமருவிய காலம்
இ) அறநெறிக்காலம் ஈ) இடைக்காலம் **விடை: இ) அறநெறிக்காலம்**

**5. சங்க இலக்கியத்தைப் பற்றி "கவிதை, வாழ்க்கையின் திறனாய்வு" என்று கூறியவர்...........**

அ) வீரமாமுனிவர் ஆ) கால்டுவெல்
இ) ஆர்னால்டு ஈ) ஜி.யு.போப் **விடை: இ) ஆர்னால்டு**

**6. சங்ககால வள்ளலான ஆய் அறம் பற்றிக் குறிப்பிட்டவர்................**

அ) ஏணிச்சேரி முடமோசியார் ஆ) ஆவூர் மூலங்கிழார்
இ) பிடவூர்க்கிழான் ஈ) நல்லந்துவனார் **விடை: அ) ஏணிச்சேரி முடமோசியார்**

**7. "இம்மை செய்தது மறுமைக்கு ஆம்எனும் அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" எனக் கூறும் நூல் எது ?**

அ) கம்பராமாயணம் ஆ) அகநானூறு
இ) புறநானூறு ஈ) பரிபாடல் **விடை: இ) புறநானூறு**

**8. சங்கப்பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் யாரை முதன்மைப்படுத்திப் பாடப்பட்டுள்ளது ?**

அ) அமைச்சர்களை ஆ) மன்னர்களை
இ) மக்களை ஈ) போர்வீரர்களை **விடை: ஆ) மன்னர்களை**

**9. உதவி செய்தலை "உதவியாண்மை" என்று கூறியவர் .............**
அ) நக்கீரனார் ஆ) கபிலர்
இ) நல்வேட்டார் ஈ) பூதன் தேவனார் **விடை: ஈ) பூதன் தேவனார்**

**10. நன்றும் தீதும் ஆய்தலும் அன்பும் அறனும் காத்தலும் அமைச்சர் கடமை எனக்கூறிய நூல் ..............**
அ) பதிற்றுப்பத்து ஆ) நற்றிணை
இ) புறநானூறு ஈ) மதுரைக் காஞ்சி **விடை: ஈ) மதுரைக் காஞ்சி**

**11. அமைச்சர்களை "செம்மை சான்ற காவிதி மாக்கள்" என்று பாராட்டியவர்................**
அ) கபிலர் ஆ) முடமோசியார்
இ) நக்கீரானார் ஈ) மாங்குடி மருதனார் **விடை: ஈ) மாங்குடி மருதனார்**

**12. "அறம் அறக் கண்ட நெறிமான் அவையம்" என்று கூறிய நூல் எது ?**
அ) அகநானூறு ஆ) பரிபாடல்
இ) புறநானூறு ஈ) கலித்தொகை **விடை: இ) புறநானூறு**

**13. மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என கூறியது........**
அ) மணிமேகலை ஆ) கலித்தொகை
இ) மதுரைக் காஞ்சி ஈ) பரிபாடல் **விடை: இ) மதுரைக்காஞ்சி**

**14. "தம்மைவிட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது" எனக்கூறிய புலவர்........**
அ) நல்லந்துவனார் ஆ) கபிலர்
இ) ஆவூர் மூலங்கிழார் ஈ) மாங்குடி மருதனார் **விடை: இ) ஆவூர் மூலங்கிழார்**

**15. "செல்வத்தின் பயனே ஈதல் துய்ப்பேம் எனினே தப்புந பலவே" எனக்கூறியவர்.........**
அ) நல்வேட்டனார் ஆ) நல்லந்துவனார்
இ) நக்கீரனார் ஈ) நச்செள்ளையார் **விடை: இ) நக்கீரனார்**

**16. "இரப்போர்க்கு ஈயாது வாழ்வதை விட உயிர் துறப்பதே மேலானது" எனக் கூறும் நூல் ...............**
அ) அகநானூறு ஆ) கலித்தொகை
இ) மதுரைக்காஞ்சி ஈ) பரிபாடல் **விடை: ஆ) கலித்தொகை**

**17. வழங்குவதற்குப் பொருள் உள்ளதா ? என்றுகூடப்பார்க்காமல் கொடுக்கும் பெருஞ்சாத்தனாரைப் பற்றிப் பாராட்டியர்.........**
அ) பூதந்தேவனார் ஆ) நல்வேட்டனார்
இ) நக்கீரர் ஈ) பரணர் **விடை: இ) நக்கீரர்**

**18. "வள்ளலின் பொருள் இரவலனின் பொருள்" என்று கூறியவர் .............**
அ) கபிலர் ஆ) முடமோசியார்
இ) நக்கீரர் ஈ) பெரும்பதுமனார் **விடை: ஈ) பெரும்பதுமனார்**

**19. "உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பன் அதியன்" என்று கூறிய புலவர் ................**
அ) கபிலர் ஆ) காக்கைப்பாடினியார்
இ) ஔவையார் ஈ) நச்செள்ளையார் **விடை: இ) ஔவையார்**

**20. இரவலர் வராவிட்டாலும் தேடி வரவழைத்துக் கொடுக்கும் மன்னன் யார் ?**
அ) பாரி ஆ) பேகன்
இ) பெருஞ்சாத்தன் ஈ) ஆடுகோட்பாட்டு சேரலாதன்
**விடை: ஈ) ஆடுகோட்பாட்டு சேரலாதன்**

**21. பேகனை, "மறுமை நோக்கிக் கொடுக்காதவர்" என்று பாராட்டிய புலவர் ................**
அ) ஔவையார் ஆ) நக்கீரன்
இ) பரணர் ஈ) கபிலர் **விடை: இ) பரணர்**

**22. திருமுடிக்காரியை "எல்லாவற்றையும் கொடுப்பவன்" என்று பாடிய புலவர் .............**
அ) ஔவையார் ஆ) கபிலர்
இ) மாங்குடி மருதனார் ஈ) நல்லந்துவனார் **விடை: ஆ) கபிலர்**

**23. மனிதனிடமுள்ள "அதிசயத் திறவுகோல்" எது ?**
அ) கை ஆ) மூக்கு
இ) நாக்கு ஈ) மூளை **விடை: இ) நாக்கு**

**24. "நிறைவடைகிறவனே செல்வன்" என்று கூறும் நூல்.............**

அ) பெரியபுராணம் ஆ) காந்தியியம்
இ) சைவ சித்தாந்தம் ஈ) தாவோயியம் **விடை: ஈ) தாவோயியம்**

**25. வாய்மையை "பிழையா நன்மொழி" என்று கூறிய நூல்..............**

அ) அகநானூறு ஆ) நற்றிணை
இ) பரிபாடல் ஈ) குறுந்தொகை **விடை: ஆ) நற்றிணை**

**26. போதிதர்மர் எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவர் ?**

அ) கி.பி.மூன்றாம் ஆ) கி.பி. எட்டாம்
இ) கி.பி.ஆறாம் ஈ) கி.பி.இரண்டாம் **விடை: இ) கி.பி.ஆறாம்**

**27. போதிதர்மர் எம்மாநகரத்துச் சிற்றரசர் ?**

அ) மதுரை ஆ) காஞ்சி
இ) உறையூர் ஈ) புகார் **விடை: ஆ) காஞ்சி**

**28. போதிதர்மர் போதித்த எந்த சமயத்திலிருந்து உருவானது ஜென் தத்துவம் ?**

அ) சமண ஆ) சைவ
இ) வைணவ ஈ) பௌத்த **விடை: ஈ) பௌத்த**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. குறிப்பு வரைக – அவையம் (பெ.ஆ.க – 5)**

**விடை :**

★ அறம்கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன.

★ அறம்கூறு அவையம் பற்றி "அறம் அறக்கண்ட நெறிமோன் அவையம்" என்கிறது புறநானூறு.

★ உறையூரிலிருந்த அற அவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

★ மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக் காஞ்சி துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. கொடை என்பதும் ஓர் அறம் என்பதனை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார் ? (பெ.ஆ.க –2)**

**விடை :**

★ நாள்தோறும் அரியன என்று கருதாதும் தயங்காதும் கொடுத்தலும் கொடைப்பெருமைகளாகப் பேசப்படுகின்றன. "உலகமே வறுமையுற்றாலும், கொடுப்பான் அறியன்" என்கிறார் ஔவையார்.

---

**3. சங்ககால மக்களின் அறம் குறித்த கருத்து யாது ?**

**விடை :**

★ அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக் கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது.

★ இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்குக் கூடாது எனக்கூறப்பட்டது

★ நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

---

**4. அரசன் எத்தகைய ஆட்சியை மேற்கொள்ளவேண்டும் ?**

**விடை :**

★ சங்கப்பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

"அறநெறி முதற்றே அரசின்கொற்றம்",
"அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்"

★ மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன.

★ அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ளவேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

---

**5. அரசனின் கடமைகள் பற்றி ஊன்பொதிப்பசுங்குடையார் கூறுவன யாது ?**

**விடை :**

★ நீர்நிலை பெருக்கி நிலவளம் கண்டு உணவுப் பெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச்செய்வதும் அரசனின் கடமையாகச் சொல்லப்பட்டது.

★ குற்றங்களை அறத்தின் அடிப்படையில் ஆராய்ந்து தண்டனை வழங்கவேண்டும் என்கிறார் ஊன் பொதிப் பசுங்குடையார்.

---

**6. போர் அறம் பற்றி ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுவது யாது ?**

**விடை :**

★ தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர்.

★ போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

★ போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர்புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது.

★ தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் புறநானூற்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

---

**7. உண்மையான மகிழ்ச்சி எது ?**

**விடை :**

★ வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.

★ ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி ஆகும்.

---

**8. சங்க இலக்கியங்கள் காட்டும் கொடையின் சிறப்பை விளக்குக.**

**விடை :**

★ கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது.

★ எழுவரின் கொடைப்பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டிருப்பதுகுறிப்பிடத்தக்கது.

★ ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன.

★ பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப்பதிவாகவே உள்ளது.

★ புறநானூற்றின் கொடைப்பதிவும் குறிப்பிடத்தக்கது.

---

**9. கொடைப்பெருமைகளாகப் பேசப்படுவனவற்றைக் குறிப்பிடுக.**

**விடை :**

★ அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும், ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப்பெருமைகளாகப் பேசப்படுகின்றன.

★ வள்ளல்கள், "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டனர்.

---

**10. கொடை குறித்த புலவர் பெருமக்களின் கருத்துகள் யாவை ?**

**விடை :**

★ வழங்குவதற்குப் பொருள் உள்ளதா ? என்றுகூடப் பார்க்காமல் கொடுக்கும் பிடவூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தனை நக்கீரர் பாராட்டுகிறார்.

★ வள்ளலின் பொருள் இரவலனின் பொருள் ; வள்ளலின் வறுமை இரவலனின் வறுமை என்று பெரும்பதுமனார் குறிப்பிடுகிறார்.

---

**11. அக இலக்கியங்களிலும் அறச்செயல் பற்றி கூறப்பட்டுள்ளது என்பதற்குச் சான்று தருக.**
**விடை :**

★ புற இலக்கியங்கள் மட்டுமின்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

★ ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாமல் வாழ்தலைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.

---

**12. உதவி செய்தலால் மனிதன் உணர்வது யாது ?**
**விடை :**

★ பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

★ உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் "உதவியாண்மை" என்று குறிப்பிடுகிறார்.

★ தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்கவேண்டிய நிலை எது என்பதை மனிதன்உணர்கிறான் எனலாம்.

---

**13. நல்வேட்டனார், "உண்மையான செல்வம்" எது என்கிறார் ?**
**விடை :**

★ உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான் என்கிறார் நல்வேட்டனார்.

---

**14. வாய்மை குறித்து இலக்கியங்கள் கூறுவன யாவை ?**
**விடை :**

★ வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.

★ வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

---

**15. சங்க இலக்கிய அறங்கள் முதல்தரமானவை – விளக்குக.**
**விடை :**

★ தாம் சிந்திக்காமல் பிறர் சொல்ல அறியும் அறம் மூன்றாம் தரமானது.

★ சிந்தித்து அறிந்துகொள்ளும் அறம் இரண்டாம் தரமானது.

★ இயல்பாக அறியும் அறம் முதல் தரமானது.

★ சங்க இலக்கிய அறங்கள் இயல்பான முதல்தரமான அறங்கள் எனலாம்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**
**1. சங்கஇலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக. (அ.மா.வி) (பெ.ஆ.க 1, 5, 6)**
**விடை :**

★ சங்ககாலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர்.

★ சமயக்கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம்.

★ உலகமே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்த காலம் சங்ககாலம்.

★ சங்கஇலக்கியம் காட்டும் அறங்கள் இன்றைய சமுதாயத்திற்குத் தேவை

**1) வணிக அறம்:**

★ அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது.

★ நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

**2) அரசியல் அறம் :**

★ நீர்நிலை பெருக்கி, நிலவளம் கண்டு உணவுபெருக்கம் காண்பதும் அதனை அனைவருக்கும் கிடைக்கச்செய்வதும் அரசனின் அறம். இவ்வறம் இன்றைய சூழலில் காணப்படுகிறது.

**3)கொடை :**

★ வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.

★ ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதுதான் உண்மையான மகிழ்ச்சி

**4) உதவியாண்மை :**

★ பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

★ உதவிசெய்தலை ஈழத்துப் பூதன் தேவனார், "உதவியாண்மை" என்று குறிப்பிடுகிறார்.

★ உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான் என்கிறார் நல்வேட்டனார்.

**5) போர் :**

★ போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

**6) வாய்மை :**

★ வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் போற்றுகின்றன.

---

**2. "சுற்றுச் சூழலைப் பேணுவதே இன்றைய அறம்" என்ற தலைப்பில் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.**

**(குறிப்பு : சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும்)**

**விடை :**

★ வாழுமிடத்தைத் தூய்மையாக வைத்திருத்தல், சுத்தம் சுகம் தரும் – சுத்தம் சோறுபோடும் என்பதை உணர்த்தல்.

★ வீட்டில் – தெருவில் – சுத்தம் பேணல் – கழிவுநீர்க் கால்வாயில் – குப்பைக் கொட்டுதல் – கழிவு நீரைக் கலக்கச் செய்தலைத் தவிர்த்தல்.

★ மழைநீர்ச் சேகரிப்பை முறைப்படுத்தல் – நீர்நிலைகளைப் பாதுகாத்தல் – நீர்நிலைகளை அசுத்தம் செய்யாமை – குப்பைகளை எரிக்காமை – நெகிழிப்பொருள்களை பயன்படுத்தாமை – அதுபற்றிய விழிப்புணர்வை அதிகரித்தல்.

★ ஒவ்வொரு தெருவின் – கூட்டம் – பயன்படுத்துவதன் அவசியம் பற்றிக் கூறுதல் – மாதம் ஒருநாள் நமக்குநாமே – சுத்தம் என்பதை உணர்ந்து – குழுவாகத் தெருவைச் சுத்தம் செய்தல் – கிராம – நகர – தூய்மை குழுவினர்களுக்கு உதவுதல் – சுத்தமே சுகாதாரம் என்பதை உணர்த்துதல்.

---

**சிறுவினா: (கூடுதல் வினா)**

**3. போதிதர்மர் குறித்து எழுதுக.**

**விடை :**

★ கி.பி. (பொ.ஆ) ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காஞ்சி மாநகரத்தின்சிற்றரசர் ஒருவர் போதி தர்மர் என்னும் சமயப்பெயர் பூண்டு சீனாவுக்குச் சென்றார்.

★ பௌத்த சமயத் தத்துவத்தின்ஒரு பிரிவைப் போதித்தார்.

★ அதிலிருந்து உருவானதே "ஜென் தத்துவம்"

★ இது பின்னர் ஜப்பான் முதலிய நாடுகளுக்கும் பரவிச் செழித்து விளங்கியது.

★ போதி தர்மருக்குச் சீனர்கள் கோவில் கட்டிச் சிலை வைத்து இன்றளவும் வணங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

---

**4. வாய்மை குறித்துச் சங்க இலக்கியங்கள் கூறுவன யாவை ?**

**விடை :**

★ வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்கஇலக்கியங்கள் பேசுகின்றன.

★ வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

★ நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான், துன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான்.

★ மெய்பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனை தாழ்த்துகிறது.

★ "பிழையா நன்மொழி" என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது.

★ இதற்கு மாறாகப் "பொய் மொழிக் கொடுஞ்சொல்" என்று பொய்யைக் குறிப்பிடுகிறது.

★ நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

---

## பகுதி – V ( எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக. (பெ.ஆ.க – 6)**

**விடை :**

நாள் : ..................

தேனி.

அன்புள்ள மாமாவிற்கு,

வணக்கம், நான், அப்பா, அம்மா, தங்கை அனைவரும் நலமாக இருக்கிறோம். அதுபோல உங்களின் நலத்தையும், அத்தை, தாத்தா, பாட்டி ஆகியோரின் நலத்தையும் அறிய ஆவல்.

இதற்கு முன் பல தகவல்களையும் கடிதம் மூலம் பகிர்ந்துள்ளோம். கடந்த ஆண்டு பள்ளி விடுமுறையின்போது நான் அங்கு வந்தபோது, தமிழர்கள் சங்ககால அறவாழ்க்கையைப் பற்றிக் கூறிய கருத்துகள் என் நினைவில் நீங்கா இடம் பெற்றுள்ளது. அதிலும் குறிப்பாக உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர் சங்ககாலத் தமிழர்கள்.

சங்ககாலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான். உடல் உறுப்புகள் ஒன்றுக்கொன்று உதவுவதுபோலச் சமூக உறுப்புகளுமான மனிதர்களும் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்ள வேண்டும். இதயம் இரத்தத்தை எல்லாம் தனக்கே வைத்துக்கொண்டால் என்ன ஆவது ? இரைப்பை உணவை அப்படியே தானே வைத்துக்கொண்டால் என்ன ஆவது ? பிறருக்கு உதவாமல், மனிதருக்குக் கொடும்பாவி கட்டுவது சங்ககாலத்தில் இல்லை.

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும், சமூக உறுப்பினனாகவும் இயங்குவதற்கும் அவனது பண்புநலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள் எனக்கூறியது என்னைச் சிந்திக்க வைத்துச் செயல்படத் தூண்டியது.

இரண்டு தினங்களுக்கு முன்பள்ளித்திடலில் பணப்பை ஒன்றை கண்டெடுத்தேன். அதை அப்படியே தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்தேன். உடனே தலைமை ஆசிரியர் பாராட்டினார். அந்த நேரத்தில் அந்தப் பள்ளியில் பயிலும் மாணவரின் தந்தை பள்ளிக் கல்விக்கட்டணம் செலுத்தப் பணப்பையுடன் வந்ததாகவும், அதைத் தவறவிட்டதாகவும், அதன் அடையாளங்களையும் வகுப்பாசிரியரிடம் தெரியப்படுத்திக் கொண்டிருந்தார். உடனே வகுப்பாசிரியர் அவரைத் தலைமையாசிரியரிடம் அழைத்து வந்தார்.

அவர் தொலைத்த பணம் தலைமை ஆசிரியரிடம் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். உடனே தலைமை ஆசிரியர் அந்த பணப்பையைத் தொலைத்தவரிடம் ஒப்படைத்து மேலும் இந்த பணப்பையை பள்ளித்திடலில் இருந்து தன்னிடம் எடுத்துக் கொடுத்தது இந்த மாணவன்தான் என என்னை அவரிடம் அறிமுகப்படுத்தினார். அவரும் என்னைப் பாராட்டியதோடு தலைமை ஆசிரியர் ஒப்புதலோடு எனக்கு சிறு தொகையை அன்பளிப்பாக வழங்கினார்.

இந்த நிகழ்வை பற்றி இறைவணக்கத்தின்போது எனது செயலைக் குறிப்பிட்டு மேடையில் ஏற்றி அனைவரின் முன்னிலையில் தலைமை ஆசிரியர் பாராட்டினார். ஆசிரியர்களும் பாராட்டினர். ஆசிரியர்களும், மாணவர்களும் என் செயலைப் பாராட்டியதோடு கைதட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இந்த மகிழ்ச்சியான நிகழ்வை உங்களுடன் பகிர்வதில் மகிழ்வடைகிறேன்.

அன்புடன்

அ. கதிரவன்

உறைமேல் முகவரி :

க. கதிர்வேல்

15, பாரதியார் தெரு,

திருச்சி – 42.

---

**மொழிப்பயிற்சி**

**அ) விடைகளுக்கேற்ற வினா அமைக்க:**

**1. சங்ககாலத்திற்குப் பிந்தைய அறஇலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர்.**

**விடை :**

எக்காலத்தை அறநெறிக்காலம் என்பர் ?

**2. வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.**

**விடை :**

வீரத்தைப் போலவே தமிழர்களால் விரும்பப்பட்டது எது ?

---

**ஆ) நிறுத்தற்குறியிட்டு எழுதுக:**

**1. வள்ளல்கள் இல்லோர் ஒக்கல் தலைவன் பசிப்பிணி மருத்துவன் என்றெல்லாம் போற்றப்பட்டனர்.**

**விடை :**

வள்ளல்கள், "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டனர்.

**2. உதவி செய்தலை ஈழத்துப் பூதன்தேவனார் உதவியாண்மை என்று குறிப்பிடுகிறார்.**

**விடை :**

உதவி செய்தலை ஈழத்துப் பூதன்தேவனார், "உதவியாண்மை" என்று குறிப்பிடுகிறார்.

---

**இ) சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

**1. பதிற்றுபத்து சேர அரசர்களின் கொடை பதிவாகவே உள்ளது.**

**விடை :**

பதிற்று<u>ப்</u>பத்து சேர அரசர்களின் கொடை<u>ப்</u> பதிவாகவே உள்ளது.

**2. வாய்மையை சிறந்த அறமாக சங்கஇலக்கியங்கள் போற்றுகின்றன**

**விடை :**

வாய்மையை<u>ச்</u>சிறந்த அறமாக<u>ச்</u> சங்கஇலக்கியங்கள் போற்றுகின்றன

---

**ஈ) ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக.**

**1. பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றது.**

**விடை :**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்ற<u>ன</u>.

**2. "பிழையா நன்மொழி" என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றன.**

**விடை :**

"பிழையா நன்மொழி" என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்ற<u>து</u>.

---

**உ) 1. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர்புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் புறநானூற்றில் குறிப்பிட்டிருக்கிறார். (பெ.ஆ.க – 3, 6) (செப் – 20)**

**வினா விடைகள் :**

**1. ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்துக் குறிப்பிடுவது யாது ?**

**விடை :** தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

**2. போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது ?**
**விடை :**
போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

**3. போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர்புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன ?**
**விடை :**
போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரியவேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

---

**2) உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்கஇலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான், துன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான். மெய்பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனை தாழ்த்துகிறது."பிழையா நன்மொழி" என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் "பொய் மொழிக் கொடுஞ்சொல்" என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது என்பது பல இலக்கியங்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது. (பெ.ஆ.க– 3)**

**வினா விடைகள் :**

**1) வாய்மையை நற்றிணை எவ்வாறு குறிப்பிடுகின்றது ?**
**விடை :** "பிழையா நன்மொழி" என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது.

**2) வாய்மை பேசும் நா உண்மையான நா என்ற கருத்தை இலக்கியங்கள் எவ்விதம் கூறுகின்றன ?**
**விடை :** "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

**3) மனிதனைத் தாழ்த்துவது எது ?**
**விடை :** மனிதனைத் தாழ்த்துவது பொய் பேசும் நாக்கு.

**4) நிலம் புடைபெயர்ந்தாலும் செய்யக்கூடாதது எது ?**
**விடை :** நிலம்புடை பெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது

**5) நாக்கு எதனால் அதிசயத் திறவுகோலாகிறது ?**
**விடை :** இன்பம் மற்றும் துன்பத்தின் கதவைத் திறப்பதால் நாக்கு அதிசயத் திறவு கோலாகிறது.

---

**3) உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

**பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் "உதவியாண்மை" என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்கவேண்டிய நிலை எது என்பதை மனிதன்உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம் தானே எண்ணெயாக இருக்க முடியும்? பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் சான்றோருக்குக் கடன் என்கிறார் நல்லந்துவனார். அவ்வாறே, உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்" என்கிறார் நல்வேட்டனார். (பெ.ஆ.க– 4)**

**வினா விடைகள் :**

**1) அன்பு என்னும் சுடருக்கு எண்ணெய்யாக இருப்பது எது ?**
**விடை :** அன்பு என்னும் சுடருக்கு எண்ணெய்யாக இருப்பது தியாகம் ஆகும்.

**2) சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எதைக் காட்டுகின்றன ?**
**விடை :** பிறருக்கு உதவுதலைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

**3) உண்மையான செல்வம் என்று நல்வேட்டனார் குறிப்பிடுவது எதனை ?**
**விடை :** உண்மையான செல்வம் என்பது "பிறர் துன்பம் தீர்ப்பதுதான்" என்கிறார் நல்வேட்டனார்.

**4) உதவி செய்தலை "உதவியாண்மை" என்று குறிப்பிடுபவர் யார் ?**

**விடை :** உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் "உதவியாண்மை" என்று குறிப்பிடுகிறார்.

**5) சான்றோர்க் கடனாக நல்லந்துவனார் குறிப்பிடுவது யாது ?**

**விடை :** பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் சான்றோர்க்குக் கடனாக நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

---

**ஊ) படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக. (அ.மா.வி)**

**விடை :**

1) தமிழர் பொருள் ஈட்டி அறம் செய்து இன்புற்றனர்.
2) சங்ககாலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர்.
3) வீரத்தைப் போலவே கொடையும் தமிழர்களால் விரும்பப்பட்டது.
4) கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது.
5) வள்ளல்கள் மட்டுமின்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.



---

**கற்பவை கற்றபின்**

**1. பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள அறக்கருத்துகளை வலியுறுத்தும் சங்க இலக்கியப் பாடலடிகள் ஐந்திணைத் தொகுத்து அவை கூறும் அறச்செய்திகளை எழுதுக.**

**விடை:**

1. "இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" – புறம்

இப்பிறப்பில் அறம் செய்தால், அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்னும் வணிக நோக்கு அடிப்படையில் அறத்தைச் செய்யக்கூடாது. நோக்கமின்றி, பயன்கருதாமல் அறம் செய்வதே உயர்வைத் தரும் என்ற கருத்து இப்பாடலில் உணர்த்தப்பட்டுள்ளது.

2. "எறியார் எறிதல் யாவணது எறிந்தார்
எதிர்சென்று எறிதலும் செல்லான்" – புறம்

தமிழர்கள், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். தம்மை எதிர்த்தவரையன்றி, தம்மைவிட வலிமை குறைந்தவரிடம் போர் செய்வதைத் தவிர்த்தனர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

3. "செல்வத்தின் பயனே ஈதல்
துய்ப்பேம் எனினே தப்புந பலவே" – (புறம் 189:7–8)

செல்வம் பெற்றதன் பயன், மற்றவர்களுக்குக் கொடுத்து உதவுவதே ஆகும் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

4. "சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே" – (நற். 210)

பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி உதவுதல்வேண்டும். உண்மையான செல்வம் என்பது பிறருடைய துன்பம் தீர்ப்பதுதான்.

5. "அறநெறி முதற்றே அரசின் கொற்றம்".
"அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்".
மன்னர்களுடைய செங்கோலும், வெண்கொற்றக் குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன என்பதை இப்பாடல் வரி உணர்த்துகின்றது.

**2. கொன்றை வேந்தன் முதலான பிற்கால அறநூல்களின் பெயர்களை அறிந்து, அவற்றுள் ஏதேனும் ஒரு நூலின் அறக்கருத்துகளை எடுத்துக்கொண்டு அவை இன்றும் பொருந்தி நிற்பது குறித்துக் கலந்துரையாடுக.**

**விடை :**

பிற்கால அறநூல்கள் : ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, வெற்றி வேற்கை, உலகநீதி, நீதிநெறி விளக்கம், நன்னெறி, நீதி வெண்பா, அறநெறிச்சாரம்.

**ஆத்திச்சூடி**

**மணிமாறன் :** ஔவையாரால் இயற்றப்பட்ட பழமையான நீதிநூல்களுள் இதுவும் ஒன்று. இந்நூலில் உள்ள ஒவ்வோர் அறிவுரையும் இன்றைக்கும் நம் வாழ்க்கையில் கடைபிடிக்க ஏற்றதாகவே உள்ளது.

**கார்த்திக் :** ஆமாம் நண்பா. குறிப்பாக எல்லா மனிதர்களும் ஒன்றைத் தவிர்க்க வேண்டும். "ஆறுவது சினம்" என்ற தொடர் "கோபம் தணிக்கப்படவேண்டிய ஒன்று" எனக் குறிப்பிடுவதிலிருந்து அதன் தீமை நமக்குப் புலப்படுகிறது.

**பாரதி :** நன்று. கோபம் ஏற்படும்போது நமது சிந்தனை ஆற்றல் தடைப்படுகிறது. அதனால், அச்சமயத்தில் நாம் எடுக்கும் முடிவுகள் தீராத துன்பத்தைக் கொடுப்பதாகவே அமைந்துவிடுகின்றன. அதனால்தான் ஔவை பிராட்டி, "கோபத்தைத் தணி" என்கிறார்.

**மணிமாறன் :** இன்றும் கோபத்தால் பலர் தவறு செய்துவிட்டு சிறையில் தண்டனை அனுபவித்து வருகிறார்கள். எனவே, எச்சூழலிலும் கோபத்தைத் தவிர்த்து மகிழ்ச்சியாக வாழ ஔவையாரின், "ஆறுவது சினம்" என்ற தொடரை நம் வாழ்வில் கடைப்பிடிப்போம். நன்றி !

இயல் 8. ஆ

## கவிதைப் பேழை

### ஞானம் (செய்யுள்)
(தி.சொ.வேணுகோபாலன்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா) (அ.மா.வி) (பெ.ஆ.க – 5)**

**1. "வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்" இவ்வடி குறிப்பிடுவது ..................**

அ) காலம் மாறுவதை
ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை
ஈ) வண்ணம் பூசுவதை

**விடை : இ) இடையறாது அறப்பணி செய்தலை**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. காலக் கழுதை – இலக்கணக்குறிப்பு தருக**

அ) உவமைத்தொகை ஆ) வினைத்தொகை
இ) வேற்றுமைத்தொகை ஈ) உருவகம்

**விடை: ஈ) உருவகம்**

**3. "ஞானம்" என்னும் கவிதையை எழுதியவர் .............**

அ) பாரதியார் ஆ) திரு.வி.க.
இ) கு.ப. ராஜகோபால் ஈ) தி.சொ. வேணுகோபாலன்

**விடை: ஈ) தி.சொ. வேணுகோபாலன்**

**4. தி.சொ.வேணுகோபாலனின் "ஞானம்" என்னும்கவிதை இடம்பெற்றுள்ள தொகுப்பு ..........**

அ) ஏர்புதிதா ? ஆ) பூத்தொடுத்தல்
இ) காற்றே வா ! ஈ) கோடை வயல்

**விடை: ஈ) கோடை வயல்**

**5. தி.சொ. வேணுகோபாலன் பிறந்த ஊர் எது ?**

அ) திருவாதவூர் ஆ) திருவையாறு
இ) தஞ்சாவூர் ஈ) கோயம்புத்தூர்

**விடை: ஆ) திருவையாறு**

**6. தி.சொ.வேணுகோபாலனின் மற்றொரு கவிதைத் தொகுப்பு ..........**

அ) மீட்சி விண்ணப்பம் ஆ) பூத்தொடுத்தல்
இ) காற்றே வா ! ஈ) ஏர்புதிதா ?

**விடை: அ) மீட்சி விண்ணப்பம்**

---

### பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது ? (பெ.ஆ.க – 6)**

**விடை :**

சாளரத்தை அன்று தூய்மை செய்த கவிஞர், இன்று காலக்கழுதை கட்டெறும்பான வேளையிலும், வாளித் தண்ணீர், சாயக்குவளை, கிழிந்த துணி கொண்டு துடைக்கும் அறப்பணியைத் தொடர்ந்து செய்கிறார்.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. சாளரத்தின் கதவுகள் இல்லையெனில் என்ன நிகழும் ?**

**விடை :**

சாளரத்தின் கதவுகள் இல்லையெனில், காற்றுடைக்கும். தெருப்புழுதி வந்து சேரும், கரையான் மண்வீடு கட்டும்.

பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தை துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க. (பெ.ஆ.க – 2)**

**விடை :**

★ வீட்டின் சுவர், சன்னல் போன்றவற்றில் அழுக்குப் படிந்தும், சன்னல்களில் கரையான் படிவதைத் தடுக்க, வாளித்தண்ணீரைக் கொண்டு சுவரையும் சன்னலையும் நன்கு சுத்தம் செய்யவேண்டும்.

★ பிறகு கந்தைத் துணியால் நன்கு துடைத்துவிடவேண்டும்.

★ மூன்றாவதாக, சாயக் குவளையில் உள்ள சாயத்தைக் கட்டைத் தூரிகைக் கொண்டு சாயம் பூசி புதுப்பிக்க வேண்டும்.

---

**கற்பவை கற்றபின்**

**1. துளிப்பா ஒன்றினைத் தேர்ந்தெடுத்து அதில் வெளிப்படும் கருத்தினைப் பற்றி வகுப்பறையில் இரண்டு நிமிடம் உரை நிகழ்த்துக.**

**விடை:**

அனைவருக்கும் இனிய வணக்கம்.

குறுங்கவிதையைத் துளிப்பா (ஐக்கூ) நகைத் துளிப்பா ( சென்ரியு) இயைபுத் துளிப்பா (லிமரைக்கூ) என மூவகைப்படுத்துவர்.

இன்றைய வகுப்பில் துளிப்பா (ஐக்கூ) பற்றி உங்கள் முன் சிறு உரையாற்ற விரும்பி என்னுரையைத் தொடர்கிறேன்.

**துளிப்பா (ஐக்கூ) :**

ஜப்பானிய மொழியில் தோன்றிய ஐக்கூ 5–7–5 என்னும் அசையமைப்பை உடையதாக ஜென் (ZEN) தத்துவத்தை விளக்குவதற்கும், இயற்கையைப் பேணுவதற்கும் பயன்பட்டது. தமிழிலக்கியத்தில் இவ்வடிவத்தில் அமைந்த கவிதைகள் சமூக விமர்சனத்திற்கும், சமூகக் கேடுகளைச் சாடுவதற்கும் பயன்பட்டது.

துளிப்பாவானது படிமம், குறியீடு, தொன்மம், முரண், அங்கதம், விடுகதை, பழமொழி, வினாவிடை, உவமை, உருவகம் எனப் பல்வேறு உத்திமுறைகளில் அமைகின்றது.

**படிமம் :**

துளிப்பாவில் பெரிதும் கையாளப்பெறுவது படிமம் உத்தியேயாகும். சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புல உணர்வுகளையும் அனுபவித்தவாறே வெளிப்படுகின்ற உணர்ச்சி வெளிப்பாடே படிமம் எனப்படும் வருணனைத் திறன் மிக்கது இதுவாகும்.

**எ.கா :**

**1. கட்புலப்படிமம் :**

சாரல் அடிக்கிறது
ஜன்னலைச் சாத்தும்போது மரக்கிளையில்
நனைந்தபடி குருவி – (பரிமளமுத்து)

**2. விளையாட்டுப்படிமம் :**

நல்ல கயிறு
எறும்பின் பாதை
பம்பரம் சுற்ற – (மித்ரா)

**3. அச்சு வடிவக் காட்சிப் படிமம் :**

அதிக சுமையா ?
மெ....ல்....ல நகரும்
நத்தை – (மு.முருகேஷ்)

துளிப்பா குறித்து உரையாற்றஅனுமதியளித்ததற்கு மனமார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2. திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் தலைப்பினை எழுதி, அகர வரிசைப்படுத்தி அதன் பொருளினை எழுதுக.**

**விடை : அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்கள் (1 – 38)**

1. அடக்கம் உடைமை – அடக்கமாக இருத்தல்
2. அருள் உடைமை – தெய்வ பக்தியுடன் இருத்தல்
3. அவா அறுத்தல் – பேராசை இல்லாதிருத்தல்
4. அழுக்காறாமை – தூய்மையாக இருத்தல்
5. அறன் வலியுறுத்தல் – நற்குணங்களை வலியுறுத்தல்
6. அன்புடைமை – அன்புடன் இருத்தல்
7. இல்வாழ்க்கை – குடும்ப வாழ்க்கை
8. இனியவை கூறல் – நல்லது கூறல்
9. இன்னா செய்யாமை – தீங்கு செய்யாமை
10. ஈகை – தானம்
11. ஊழ் – கர்மவினைப்பயன்
12. ஒப்புரவு அறிதல் – ஒற்றுமை அறிதல்
13. ஒழுக்கமுடைமை – ஒழுக்கத்துடன் இருத்தல்
14. கடவுள் வாழ்த்து – தெய்வத் துதிப்பாடல்
15. கள்ளாமை – கல்வியறிவு பெறாமை
16. கூடா ஒழுக்கம் – தீய ஒழுக்கம்
17. கொல்லாமை – கொலை செய்யாமை
18. செய்நன்றி யறிதல் – பிறர் செய்த நன்மையை நினைத்தல்
19. தவம் – துன்பத்தைப் பொறுத்தல்
20. துறவு – உலகப் பற்றை நீக்குதல்
21. தீவினை அச்சம் – தீச்செயல் செய்ய அஞ்சுதல்
22. நடுவுநிலைமை – பாரபட்சம் பாராதிருத்தல்
23. நிலையாமை – எதுவும் நிலையன்று
24. நீர்த்தார் பெருமை – துறவு மேற்கொள்பவர் சிறப்பு
25. பயனில சொல்லாமை – பயனற்றச் சொற்களைத் தவிர்த்தல்
26. பிறன் இல் விழையாமை – பிறர் மனைவி, பொருளை விரும்பாமை
27. புகழ் – சிறப்பு
28. புலால் மறுத்தல் – ஊன் உண்ணாதிருத்தல்
29. புறங்கூறாமை – ஒருவர் இலாதிடத்து அவரைப் பற்றிப் பேசுதல்
30. பொறை உடைமை – பொறுமை
31. மக்கட்பேறு – பிள்ளைச் செல்வம்
32. மெய் உணர்தல் – பொய் மயக்கத்திலிருந்து விடுபடுதல்
33. வாய்மை – நன்மனையாள் பெருமை
34. வாழ்க்கைத் துணைநலம் – உண்மையின்மேன்மை
35. வான் சிறப்பு – மழையின் சிறப்பு
36. விருந்தோம்பல் – விருந்தினரை உபசரித்தல்
37. வெஃகாமை – சினம் கொள்ளாமை
38. வெகுளாமை – பிறர் பொருளை விரும்பாமை

## கவிதைப் பேழை

இயல் 8. இ

**காலக்கணிதம் (செய்யுள்)**
**(கண்ணதாசன்)**

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் .................. (பெ.ஆ.க – 6)**
அ) இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம்
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
**விடை : அ) இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. காலத்தை வெல்பவன் யார் ?**
அ) கொல்லன் ஆ) தச்சன்
இ) ஓவியன் ஈ) கவிஞன் **விடை: ஈ) கவிஞன்**

**3. "கவிஞன் யானோர் காலக்கணிதம்" என்று பாடியவர் ...............**
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) வாணிதாசன் **விடை: இ) கண்ணதாசன்**

**4. "ஆக்கல், அளித்தல், அழித்தல் இம்மூன்றும் அவனும் யானுமே அறிந்தவை" இத்தொடரில் அவனும் யானும் என்பவர் யார் யார் ?**
அ) சிவனும் பிரம்மாவும் ஆ) கடவுளும் கந்தசாமியும்
இ) கண்ணதாசனும் கந்தசாமியும் ஈ) கடவுளும் கண்ணதாசனும்
**விடை: ஈ) கடவுளும் கண்ணதாசனும்**

**5. "மாற்றம் எனது மானிடத் தத்துவம்" எனப் பாடியவர் ...............**
அ) திரு.வி.க ஆ) பாரதிதாசன்
இ) காளிதாசன் ஈ) கண்ணதாசன் **விடை: ஈ) கண்ணதாசன்**

**6. கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள கவிதை ...............**
அ) ஏர் புதிதா ? ஆ) காலக்கணிதம்
இ) ஞானம் ஈ) மீட்சி விண்ணப்பம் **விடை: ஆ) காலக்கணிதம்**

**7. கண்ணதாசனின் இயற்பெயர் ..............**
அ) முத்துச்சாமி ஆ) முத்துப்பிள்ளை
இ) முத்தரசன் ஈ) முத்தையா **விடை: அ) முத்துச்சாமி**

**8. கண்ணதாசன் பிறந்த ஊர் எது ?**
அ) கூடல்நகர் ஆ) கூடல்புதூர்
இ) சிறுகூடல்பட்டி ஈ) முக்கூடல் **விடை: இ) சிறுகூடல்பட்டி**

**9. எந்த ஆண்டு கண்ணதாசன்"கலங்காதிரு மனமே" என்ற பாடலை எழுதித் திரைப்படப் பாடலாசிரியர் ஆனார் ?**
அ) 1947 ஆ) 1948
இ) 1949 ஈ) 1950 **விடை: ஈ) 1949**

**10. கண்ணதாசனுக்கு "சாகித்திய அகாதெமி" விருது பெற்றுத்தந்த நூல் ...............**
அ) கொய்யாக்கனி ஆ) சேரமான் காதலி
இ) இயேசு காவியம் ஈ) மாங்கனி **விடை: ஆ) சேரமான் காதலி**

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. *"கொள்வோர் கொள்க ; குரைப்போர் குரைக்க !***
***உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது"***

**அ) அடியெதுகையை எடுத்தெழுதுக.**

**ஆ) இலக்கணக்குறிப்பு எழுதுக. – கொள்க, குரைக்க**

**விடை :**

அ) கொள்வோர், உள்வாய்

ஆ) கொள்க, குரைக்க – வியங்கோள் வினைமுற்றுகள்

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. முத்தொழிலைச் செய்பவர் எவரெவர் ?**

**விடை :**

★ ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் இம்முத்தொழிலைச் செய்பவர் இறைவன், கவிஞன் ஆவார்.

---

**3. கவிஞன் எப்படி இருக்கக்கூடாது ?**

**விடை :**

★ கவிஞன் செல்வர்கள் கையில் சிறைப்படக் கூடாது.

★ பதவிக்கும் வாளுக்கும் பயப்படக்கூடாது.

---

**4. கண்ணதாசன் எவ்வெவற்றைத் தருவேன் என்று கூறுகிறார் ?**

**விடை :**

★ என்னிடம் உள்ள பொருளைப் பிறர் உண்ணத்தருவேன்.

★ இல்லையானால் எமக்கு வேண்டியவர் இல்லக் கதவைத் தட்டுவேன்.

★ மலர்களில் அமர்ந்து வண்டுகள் தேனை எடுத்துவந்து தருவது போல மக்களுக்குத் தேவையான கருத்துகளைக் கவிதையாகத் தருவேன் என்று கூறுகிறார்.

---

**5. புகழ்ச்சி, இகழ்ச்சி பற்றிக் கண்ணதாசன் கூறுவது யாது ?**

**விடை :**

★ என்னை யாரேனும் புகழ்ந்து பேசினால் என்னுடல் சிலிர்ந்து நிற்காது.

★ யாரேனும் இகழ்ந்து பேசினாலும் என்மனம் ஒருபோதும் வருத்தமடையாது என்றும்,

★ புகழ்ச்சியும், இகழ்ச்சியும் தன்னை ஒருபோதும் பாதிக்காது என்றும் கண்ணதாசன் கூறுகிறார்.

---

**6. மாற்றம் குறித்துக் கண்ணதாசன் கூறுவது யாது ?**

**விடை :**

★ "மாற்றம் என்பது மானிடத் தத்துவம்" என்று பாடிய கண்ணதாசன், தமது வாழ்வில் திரைப்படம், அரசியல், ஆன்மிகம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் மாற்றங்களைக் கண்டவர்.

★ ஆதலால் "மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்" என்று கூறுகிறார்.

---

**7. "தொடக்கமும் முடிவும் நானே" எனக் கவிஞர் கூறும் கருத்தை விளக்குக.**

**விடை :**

★ நானே தொடக்கம், நானே முடிவு, அதனால் நான் உரைப்பதுதான் நாட்டின் சட்டம் எனத் தீர்க்கதரிசியாய்க் கூறுவது கவிஞர்கண்ணதாசனின் தனிச் சிறப்பாகும்.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**1. கண்ணதாசன் – சிறுகுறிப்பு தருக.**

**விடை :**

★ முத்தையா என்னும் இயற்பெயரைக் கொண்ட கண்ணதாசன் இன்றைய சிவகங்கை மாவட்டத்தின் சிற்றூரான சிறுகூடல்பட்டியில் பிறந்தவர்.

★ இவரது பெற்றோர் சாத்தப்பன் – விசாலாட்சி ஆவர்.

★ 1949 ஆம் ஆண்டு "கலங்காதிரு மனமே" என்ற பாடலை எழுதி, திரைப்படப் பாடலாசிரியர் ஆனார்.

★ திரையுலகிலும் இலக்கிய உலகிலும் சிறந்து விளங்கியவர் கண்ணதாசன்.

★ சிறந்த கவியரங்கக் கவிஞராகவும் பேச்சாளராகவும் இவர் திகழ்ந்தவர்.

★ தன் திரைப்படப் பாடல்கள் வழியாக எளிய முறையில் மெய்யியலை மக்களிடையே கொண்டு சேர்த்தவர்.

★ சேரமான் காதலி என்னும் புதினத்திற்காக சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.

★ இவர் தமிழக அரசின் அரசவைக் கவிஞராகவும் சிறப்பிக்கப்பட்டிருந்தார்.

---

**2. "உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக. (அ.மா.வி)**

**விடை :**

**இடம்** : இப்பாடல் வரிகள் கண்ணதாசன் கவிதைத் தொகுப்பில் காலக்கணிதம் என்னும் தலைப்பில் கவிஞர் கூறுவதாக அமைந்துள்ளது.

**பொருள் விளக்கம்** : ஒருவன் தன் வாயால் புகழ்வதும், இகழ்வதும் நம் உடம்பின் மீது வந்து சேராது என்கிறார்.

---

## பகுதி – IV ( ஐந்து மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.(பெ.ஆ.க–4, 5)**

*கவிஞன் யானோர் காலக்கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம் !*
*இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்*
*இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை !*
*ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்*
*அவனும் யானுமே அறிந்தவை ; அறிக !* – கண்ணதாசன்

**விடை :**

**முன்னுரை :**

கண்ணதாசன், சிவகங்கை மாவட்டம் சிறுகூடல்பட்டியில் பிறந்தவர். கண்ணதாசன் கவிதையில் இடம்பெற்றுள்ள "காலக்கணிதம்" என்னும் இக்கவிதையின் நயங்களை இங்கு காண்போம்.

**திரண்ட கருத்து :**

கவிஞன் நானே காலத்தை கணிப்பவன். உள்ளத்தில் உதிக்கும் பொருளை வார்த்தை வடிவம் கொடுத்து ஒரு உருவமாய் அவற்றை நான் படைப்பதால் இப்பூமியில் நானும் புகழ்பெற்ற தெய்வம். பொன்னைவிட விலை உயர்ந்த செல்வம் என் கருத்துகள். சரியானவற்றை எடுத்துச் சொல்வதும், தவறானவற்றை எதிர்ப்பதும் என் பணி. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று பணிகளும் நானும், கடவுளும் அறிந்தவை எனக் கவிஞர் கண்ணதாசன் கூறுகிறார்.

**மோனை நயம் :**

செய்யுளில் அடியிலோ, சீரிலோ முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.

கவிஞன்....
கருப்படு....
இவை சரி....
இவை தவறாயின்.... மோனை நயம் பெற்று வந்துள்ளது.

**எதுகை நயம் :**

செய்யுளில் முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

கருப்படு – பொருளை – உருப்பட

**முரண் :**

செய்யுளின் அடியிலோ சீரிலோ எதிரெதிர் பொருள் தரும் வகையில் தொடுக்கப்படுவது முரண்.
**ஆக்கல் x அழித்தல்** என்று முரண்பட்ட சொற்கள் அமைத்து தொடுத்திருப்பதால் முரண்நயம் உள்ளது.

**இயைபு நயம் :**

அடிதோறும் இறுதி எழுத்தோ, சொல்லோ இயைந்து வரத் தொடுப்பது இயைபு ஆகும்.

......... புகழுடைத் தெய்வம்
............ பொருளென் செல்வம் – இயைபு நயம் உள்ளது.

**அணி நயம் :**

கவிஞர் தன்னை உருவகப்படுத்திக் கூறுவது

*யானோர் காலக் கணிதம்*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*

என உருவகப்படுத்தி உள்ளதால் இப்பாடலில் உருவக அணி பயின்று வந்துள்ளது.

**முடிவுரை :**

ஒவ்வொரு வரியிலும் நான்கு வார்த்தைகள் கொண்டு பாடலை கவிஞர் அமைத்துள்ளார். கவிஞர் கண்ணதாசனின் இக்கவிதை அனைத்து இலக்கிய நயங்களுடன் அமைந்த ஓர் அழியாக் காவியம் ஆகும்.

**மொழிப்பயிற்சி**

| | |
|---|---|
| **கொள்வோர், குரைப்போர்** | – வினையாலணையும் பெயர்கள் |
| **பற்றுவேன், அறிவேன், முனைவேன், தருவேன்** | – தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்றுகள் |
| **ஆக்கல், அளித்தல், அழித்தல்** | – தொழிற்பெயர்கள் |
| **எழுதுக, கொள்க, குரைக்க** | – வியங்கோள் வினைமுற்றுகள் |
| **பதவிவாள்** | – உருவகம் |

**பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி:**

***மாற்றம் எனது மானிடத் தத்துவம்;***
***மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!***
***எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை***
***என்பதறிந்து ஏகுமென் சாலை!***
***தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்;***
***தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!***

1. **இப்பாடல் வரிகளின் ஆசிரியர் யார் ?**
   **விடை:** கண்ணதாசன்
2. **இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?**
   **விடை:** காலக்கணிதம்

**3. என்பதறிந்து – பிரித்து எழுதுக.**
**விடை:** என்பது + அறிந்து
**4. மானிடத்தத்துவம் என்று எதனை ஆசிரியர் குறிப்பிடுகிறார் ?**
**விடை :** மாற்றம்
**5. அட்சய பாத்திரம் என்பது யாது ?**
**விடை :** தத்துவம்.
**6. பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்களை எழுதுக.**
**விடை:** மாற்றம் – மாறும் – மாறுவர்

---

**கற்பவை கற்றபின்**

**கவிதைகளை ஒப்பிட்டுக் கருத்துரைக்க........ (பெ.ஆ.க – 1)**

**கவிச்சக்கரவர்த்தியும் கவியரசும்**

*நதியின் பிழையன்று*
*நறும்புனலின்மை அன்றே*
*பதியின் பிழையன்று*
*பயந்த நம்மைப் புரந்தான்*
*மதியின் பிழையன்று*
*மகன் பிழையன்று மைந்த*
*விதியின் பிழை நீ*
*இதற்கென்னை வெகுண்ட தென்றன்*

*– கம்பன்*

*நதிவெள்ளம் காய்ந்து விட்டால்*
*நதிசெய்த குற்றம் இல்லை*
*விதி செய்த குற்றம் இன்றி*
*வேறு – யாரம்மா*

*– கண்ணதாசன்*

**விடை:**

இராமன் அயோத்தியை விட்டு கானகம் செல்ல வேண்டும் என்றவுடன் இலக்குவன் கோபம் கொண்டு ஆவேசப்பட்டான். இதைக்கண்ட இராமன் இலக்குவனிடம், கானகம் செல்ல வேண்டும் என்பது விதியின் பயனாகும். அது கைகேயியின் பிழையன்று. பரதன் பிழையும் இல்லை. இதற்காக நீ ஏன் கோபப்படுகிறாய் எனக் கூறுகிறார். இதைப்போலவே நதி என்றால் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடவேண்டும். நீர் பெருக்குக் குறைவதற்கு யார் காரணம் ? யார் மேல் குற்றம் கூற முடியும் ? அனைத்திற்கும் அடிப்படைக் கோணத்தை ஆராய்ந்து பார்த்தால், அது விதிப்படி நடக்கிறது என்றுதான் கூறவேண்டும். எனவே, குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட வேண்டியது உலகில் உள்ள எவரும் இல்லை. அனைத்தையும் படைத்து இயக்கும் விதியே முதல் குற்றவாளியாகும். விதி விதித்தபடி வினை (செயல்) நடைபெறுகிறது. அதுவே உலகியல் நியதி.

## விரிவானம்

**இயல் 8. ஈ**

## இராமானுசர்

**(துணைப்பாடம்)**

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. நாளுக்கு ஒருமுறை மலர்வது..........**
அ) சண்பகம் ஆ) பிரம்ம கமலம்
இ) குறிஞ்சி ஈ) மூங்கில் **விடை : அ) சண்பகம்**

**2. ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது..........**
அ) மல்லிகை ஆ) தாமரை
இ) முல்லை ஈ) பிரம்ம கமலம் **விடை : ஈ) பிரம்ம கமலம்**

**3. பன்னிரண்டு ஆண்டுக்கு ஒருமுறை மலர்வது..........**
அ) பிரம்ம கமலம் ஆ) சண்பகம்
இ) குறிஞ்சி ஈ) மூங்கில் **விடை : இ) குறிஞ்சி**

**4. தலைமுறைக்கு ஒருமுறை மட்டுமே மலர்வது..........**
அ) அல்லி ஆ) சாமந்தி
இ) காஞ்சி ஈ) மூங்கில் **விடை : ஈ) மூங்கில்**

**5. பரம ஆச்சாரியார் என்று அழைக்கப்பட்டவர்..........**
அ) பெரிய நம்பிகள் ஆ) ஆளவந்தார்
இ) கூரேசர் ஈ) திருகச்சி நம்பி **விடை : ஆ) ஆளவந்தார்**

**6. இராமானுசருக்கு திருமந்திர திருவருளை உபதேசித்தவர்..........**
அ) ஆளவந்தார் ஆ) முதலியாண்டான்
இ) பூரணர் ஈ) கூரேசர் **விடை : இ) பூரணர்**

**7. நான் மட்டுமே தண்டனை பெற்று நரகம் செல்வேன். மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டட்டும் எனக்கூறியவர்..........**
அ) பூரணர் ஆ) ஆளவந்தார்
இ) கூரேசர் ஈ) இராமானுசர் **விடை : ஈ) இராமானுசர்**

**8. இராமானுசருக்கு "எம்பெருமான்" என்னும் திருநாமத்தைச் சூட்டியவர்..........**
அ) பூரணர் ஆ) பரமாச்சாரியார்
இ) முதலியாண்டான் ஈ) கூரேசர் **விடை : அ) பூரணர்**

**9. "கூர்வேல் குவைஇய மொய்ம்பின்**
**தேர்வண் பாரிதண் பறம்பு நாடே !" இவ்வடி இடம்பெற்ற நூல்..............**
அ) அகநானூறு ஆ) புறநானூறு
இ) மணிமேகலை ஈ) குண்டலகேசி **விடை : ஆ) புறநானூறு**

**10. பிரான்மலை (பறம்புமலை) அமைந்துள்ள மாவட்டம்..........**
அ) மதுரை ஆ) திருச்சி
இ) சென்னை ஈ) சிவகங்கை **விடை : ஈ) சிவகங்கை**

**பகுதி – V (எட்டு மதிப்பெண்கள்)**
**நெடுவினா : (பாடநூல் வினா)**
**1. குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் நாடகம் எழுதுக.**

**மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி– கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி. (பெ.ஆ.க – 6)**
**விடை:**

**இடம்** – பள்ளி வகுப்பறை
**பாத்திரங்கள்** – தமிழ் ஆசிரியர், மாணவர்கள் (கார்த்தி, ஹரி, வருண்)

**தமிழாசிரியர்** : மாணவர்களே! நீங்கள் வருங்காலத்தில் கொக்கைப் போல், கோழியைப் போல், உப்புபோல வாழப் பழகிக் கொள்ளுங்கள்.

**மாணவன் கார்த்தி** : ஐயா! எங்களுக்குப் புரியும் விதத்தில் விளக்கமாகக் கூறமுடியுமா ?

**தமிழாசிரியர்** : அதற்கென்ன, விளக்கமாகக் கூறுகிறேன். கொக்கு நீர் நிலையில் அசையாது நிற்கும். தனக்குரிய உணவாகிய பெரிய மீன் வர, உடனே கொத்தித் திண்ணும். அது போல் நல்ல வாய்ப்பு வரும்வரை நீங்கள் காத்திருந்து செயலாற்றினால் வாழ்வில் வெற்றி பெறுவீர்கள்.

**ஹரி** : இதற்கு ஏதாவது சான்று கூறமுடியுமா ?

**தமிழாசிரியர்** : "கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்து இடத்து" – எனத் திருவள்ளுவர் திருக்குறளில் கூறுகிறார். பொறுத்திருக்கும் காலத்தில் கொக்கைப் போல் அமைதியாக இருக்கவேண்டும். காலம் வாய்க்கும்போது அதன் குத்துப்போல் தவறாமல் செய்து முடிக்கவேண்டும்.

**வருண்** : நன்றி ஐயா !. மேலும் கோழியைப் பற்றிக் கூறமுடியுமா ?

**தமிழாசிரியர்** : கோழியை நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். அது வீட்டிலும் இருக்கும் குப்பை மேட்டிலும் இருக்கும். குப்பையைக் கொத்தி அதிலுள்ள புழுக்களை மட்டுமே எடுத்து உண்ணும். வேறு எதையும் உண்ணாது. ஆனால் கிளறும். அதுபோல நீங்களும் தேவையில்லாதவற்றை நீக்கி, தேவையானவற்றை மட்டுமே வாழ்வில் மேற்கொள்ள வேண்டும்.

**ஹரி** : இதற்கு ஏதாவது சான்று கூறமுடியுமா ?

**தமிழாசிரியர்** : புகழ் பெற்ற மகிழுந்து உற்பத்தியாளர் ஹென்றி போர்டைப் பார்த்து, "உங்களுக்கு சட்டம் தெரியுமா ? இலக்கியம் தெரியுமா ?" என ஒருவர் கேட்டு அவருடைய கல்வித் தகுதியைக் குறைத்துப் பேசினார். அதற்கு ஹென்றி போர்டு, "எனக்குத் தேவையானவற்றை கற்றுள்ளேன். மகிழுந்து உற்பத்தி தொழில் நுட்பத்தைப் பற்றிய போதுமான அறிவு எனக்கு உள்ளது. எல்லாவற்றையும் தெரிந்து கொண்டு முறையாகச் செயல்படுத்தாமல் குப்பைத் தொட்டி போல் இருக்க விரும்பவில்லை. ஒவ்வொரு துறைக்கும் அதைச்சார்ந்த வல்லுனர்களை முறையாகப் பயன்படுத்திக் கொள்வேன். இந்த ஞானமே என் தொழிலில் என்னை உயர்வான நிலைக்குக் கொண்டுவந்துள்ளது" என்றார்.

**கார்த்தி** : உப்பைப் பற்றிக் கூறமுடியுமா ?

**ஆசிரியர்** : சொல்கிறேன். உப்பு உணவுடன் சேர்ப்பது. உணவில் உப்புக் குறைவானால், உணவு சுவைக்காது. அதிகமானால் உண்ணவும் முடியாது. உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பது பழமொழி. உப்பு உணவுடன் அளவுடன் இருக்க, உணவு சுவைப்பது போல எல்லாவற்றிலும் நம்மை அளவுடன் இணைத்துக் கொள்ளவேண்டும்.

கொக்கு போல காத்திருப்பதும், கோழி போல அல்லவை நீக்கி நல்லவை கொள்வதும் உப்பு போல அளவாகப் பயன்படுத்துவதும் எல்லோராலும் முடியும் புரிந்ததா ?

**மாணவர்கள்** : ஆமாம் ஐயா ! தெளிவாக உதாரணங்களுடன் விளக்கியமைக்கு நன்றி !.

## கற்பவை கற்றபின்

**1. கருத்துகளை உரைநடையாகப் படிப்பதிலும் நாடகமாகப் படிப்பதிலும் நீங்கள் உணரும் வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடுக.**

**விடை :**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா !.

**தமிழாசிரியர்** : வணக்கம் மாணவர்களே ! அமருங்கள். இன்றைய வகுப்பில் கருத்துகளை உரைநடையாகப் படிப்பதிலும் நாடகமாகப் படிப்பதிலும் நீங்கள் உணரும் வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடுக.

**மாணவர்கள்** : சரிங்க ஐயா !

**தமிழாசிரியர்** : ஆரம்பிக்கலாம்.

**வல்லவன்** : உரைநடையை நிறுத்தற்குறிகள் உணர்ந்து படிக்கவேண்டும். அப்போதுதான் எளிமையாகப் பொருள் உணர முடியும்.

**குமரன்** : ஆமாம். உரைநடையைப் படிப்பதற்கு எனக்கு மிகவும் கடினமாக இருக்கும்.

**முத்து** : நண்பா ! எனக்குக் கருத்துகளை நாடகமாகப் படிக்கும் போது எளிமையாக இருப்பதோடு மனதிலும் நன்கு பதியும்.

**சஞ்சய்** : உரைநடையை விட நாடகத்தில் காட்சிகள் பல இடம்பெறுவதால் படிப்பதற்கு எளிதாக இருப்பதோடு நாம் கதாபாத்திரங்களாகவே மாறிவிடுவதால் எளிமையாக மனதில் பதிகிறது.

**வல்லவன்** : உண்மைதான் நண்பா ! நாடகத்தில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் படிக்கும் போது நம் கண்முன் வந்து செல்வது போன்று தோன்றும். அதனால் எளிதாக உள்ளத்தில் பதிந்து விடுகிறது.

**குமரன்** : உரைநடையைத் தொடர்ந்து முழுமையாகப் படித்தால் மட்டுமே பொருள் புரிந்துகொள்ள முடியும். அதனால்தான் அது நமக்குக் கடினமாகத் தோன்றுகிறது.

**முத்து** : படிப்பதற்கும், எளிமையாகக் கருத்துகளை புரிந்துகொள்வதற்கும் நாடகமே மிகச் சிறந்தது என்பது என்னுடைய கருத்து.

**தமிழாசிரியர்** : அருமை ! அருமை ! மாணவர்களே.
நன்றி !

**2. இந்நாடகம் வெளிப்படுத்துவது போன்று ராமானுசர் வாழ்க்கை நிகழ்வுகள் சிலவற்றைத் தொகுத்து அவை குறித்த உங்களின் கருத்துகளை எடுத்துரைக்க.**

**விடை :**

ஈரோட்டில் பிறந்து இங்கிலாந்தில் கணிதத்துறையில் உச்சம் தொட்டவர் இராமானுசர்.

கணிதம் சம்பந்தப்பட்ட நூலினை 13 வயதில் இரவல் வாங்கிப் படித்தது முதல் அவரது மனம் கணிதத்தில் லயித்தது.

இளமைப்பருவத்தில் சென்னைத் துறைமுகத்தில் குமாஸ்தா வேலை பார்த்தார்.

லண்டனில் பிரபலக் கணித அறிஞர் ஹார்டிக்குத் தன்னுடைய கணித ஆர்வம் பற்றியும், மாணவராகச் சேர்ந்து பயில்வதற்கான விருப்பத்தையும் கடிதம் மூலம் எழுதினார்.

இந்திய மாணவர் சேர்க்கை அலுவலகம் மூலம் சென்னையில் வேலை பார்த்த ராமானுசத்தின் அலுவலகத்திற்கு ஹார்டியின் இசைவுக் கடிதமும் அனுப்பப்பட்டது.

ஆனால் ராமானுசத்தின் குடும்பச் சூழல் பற்றி நன்கு அறிந்த மற்றும் உடன் பணிபுரிந்த நாராயண அய்யர் கடல்கடந்து செல்ல அக்கால பிராமணர்களுக்குப் பழக்கம் இல்லை என்பதை மனதில் வைத்து நுழைவு இசைவு கிடைக்கவில்லை என்று ராமானுசத்திடமும் சென்னையில் இருந்த இங்கிலாந்து மாணவர்கள் சேர்க்கை அலுவலகத்திற்கும் கடிதமும் எழுதிவிட, ராமானுசத்தின் வறுமையும் வளர அவரின் வெளிநாடு செல்லும் கனவு தகர்ந்தது.

சம்பளம் ரூபாய் 75 க்கு சென்னைத் துறைமுகத்தில் பணியில் இருந்தபோதோ ராமானுசம் தன்னுடைய கணிதப்பயிற்சிக்கும், சிந்தனைக்கும் அதிக கவனம் செலுத்தியதால் வறுமையில் வாடினார்.

தாமஸ் வாக்கர் என்ற பிரிட்டிஷ் அதிகாரி சென்னை வந்தபோது துறைமுக அதிகாரி ராமானுசத்தைப் பற்றி எடுத்துக் கூறியதால் சென்னைப் பல்கலைக் கழகம் மாதந்தோறும் 75 ரூபாய் ஊக்கத்தொகையோடு கணித ஆராய்ச்சி செய்ய வாய்ப்பும் வழங்கியது.

ராமானுசத்தின் கணித அறிவு "குன்றிலிட்ட விளக்காய்" சுடர்விட்டு பிரகாசிக்க, இந்தியா மட்டுமல்லாது வெளிநாடுகளில் உள்ள அறிஞர்களும் இவரது தொடர்பை விரும்பினர்.

சென்னையிலிருந்து ராமானுசர் லண்டன் செல்லும் ஏற்பாடுகளையும் அறிஞர் ஹார்டி செய்தார்.

லண்டனில் பல ஆராய்ச்சிகள் மேற்கொண்டு, எஃப். ஆர். எஸ் பட்டம், பி, ஏ பட்டம், எஃப்.டி.சி பட்டம் ஆகியவற்றைப் பெற்று உலகக் கணித அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு வித்திட்ட இளம் கணித மேதை என்று புகழப்பட்டார்.

"உழைப்பும், முயற்சியும் வாழ்க்கையை உயரச்செய்யும்"

# இயல் 8. உ

## கற்கண்டு

## பா–வகை, அலகிடுதல் (இலக்கணம்)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் .................. (பெ.ஆ.க.–2)**

அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**விடை : அ) அகவற்பா**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல்............. (பெ.ஆ.க.–1)**

அ) எள் கசடு ஆ) பிண்ணாக்கு
இ) ஆமணக்கு ஈ) எள்கட்டி **விடை: ஆ) பிண்ணாக்கு**

**3. கொடுக்கப்பட்ட அனைத்துச்சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரை தேர்ந்தெடுக்க. (மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)(பெ.ஆ.க.–1)**

அ) மலைமீது மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின் வழியே பெருக்கெடுத்து ஓடியது.
ஆ) கருத்த மேகம் மலை மீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின
இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.
ஈ) மலை மீது மழை பொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.

**விடை: ஆ) கருத்த மேகம் மலை மீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின**

**4. செய்யுளில் இடையிடையே உயர்ந்து வரும் ஓசை**

அ) செப்பல் ஆ) அகவல்
இ) துள்ளல் ஈ) தூங்கல் **விடை: இ) துள்ளல்**

**5. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| **அ) இருவர் உரையாடுவது போன்றது** | – | **1) அகவலோசை** |
| **ஆ) சொற்பொழிவாற்றுவது போன்றது** | – | **2) செப்பலோசை** |
| **இ) தாழ்ந்து உயர்ந்து வருவது** | – | **3) தூங்கலோசை** |
| **ஈ) தாழ்ந்தே வருவது** | – | **4) துள்ளலோசை** |

அ) அ–2, ஆ –1, இ– 4, ஈ –3 ஆ) அ–3, ஆ –2, இ– 4, ஈ –1
இ) அ–1, ஆ –3, இ– 2, ஈ –4 ஈ) அ–4, ஆ –3, இ– 2, ஈ –4

**விடை: அ) அ–2, ஆ –1, இ– 4, ஈ –3**

**6. வெண்பா............. வகைப்படும்**

அ) நான்கு ஆ) ஐந்து
இ) ஆறு ஈ) எட்டு **விடை: ஆ) ஐந்து**

**7. ஈற்றடி முச்சீராகவும் ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும் பா எது ?**

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா
இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா **விடை: அ) வெண்பா**

**8. வெண்பாவில் பாடப்பட்ட நூல்கள்.............**

அ) குறள், சிலம்பு ஆ) குறள், நாலடியார்
இ) குறள், பழமொழி நானூறு ஈ) நாலடியார், சிந்தாமணி **விடை: ஆ) குறள், நாலடியார்**

**9. ஆசிரியப்பா............. வகைப்படும்**

அ) மூன்று ஆ) நான்கு
இ) ஐந்து ஈ) ஆறு **விடை: ஆ) நான்கு**

**10. ஆசிரியப்பாவின் ஈற்றுச் சீர்............. முடிவது சிறப்பு**

அ) ஆகாரத்தில் ஆ) ஏகாரத்தில்
இ) ஒகாரத்தில் ஈ) ஐகாரத்தில் **விடை: ஆ) ஏகாரத்தில்**

**11. "நல்லவை" இச்சொல்லை அலகிட்டால் ............. எனப்பிரியும்**

அ) நேர் நிரை ஆ) நேர் நேர்
இ) நிரை நேர் ஈ) நிரை நிரை **விடை: அ) நேர் நிரை**

**12. "உலகு" என்னும் ஈற்றுச்சீரின் வாய்ப்பாடு.............**

அ) மலர் ஆ) நாள்
இ) காசு ஈ) பிறப்பு **விடை: ஈ) பிறப்பு**

**13. புலவர் குழந்தை இயற்றியயாப்பு நூல்**

அ) நன்னூல் ஆ) யாப்பதிகாரம்
இ) யாப்பருங்கலம் ஈ) யாப்பருங்கலங்காரிகை
**விடை: ஆ) யாப்பதிகாரம்**

---

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக. (பெ.ஆ.க – 1)**

**விடை :**

★ குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும்.

★ முதலடி நான்கு சீராகவும் (அளவடி) இரண்டாம் அடி மூன்று சீராகவும் (சிந்தடி) வரும்

(எ.கா)

உலகத்தோ டொட்ட வொழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலா தார்.

---

**2. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.**

**விடை :**

★ வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசையும், கலிப்பாவிற்குத் துள்ளல் ஓசையும் உரியன.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**3. யாப்பின் உறுப்புகள் யாவை ?**

**விடை :**

★ எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறும் யாப்பின் உறுப்புகள் ஆகும்.

---

**4. நால்வகைப் பாக்கள் யாவை ?**

**விடை :**

★ வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகியவை நால்வகைப் பாக்களாகும்.

---

**5. வெண்பாவின் வகைகளைக் கூறு ?**

**விடை :**

★ வெண்பா ஐந்து வகைப்படும். அவை,

★ குறள்வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என்பனவாகும்.

**6. ஆசிரியப்பாவின் வகைகளைக் கூறு ?**

**விடை :**

★ ஆசிரியப்பா நான்கு வகைப்படும். அவை,
நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா என்பனவாகும்.

---

**7. ஓரசைச்சீர் என்றால் என்ன ?**

**விடை :**

★ நேரசையோ நிரையசையோ தனியாக நின்று ஒரு சீராக வருவது ஓரசைச்சீர் எனப்படும்.

நேர் – நாள்
நிரை – மலர்

---

**8. ஈரசைச்சீர் எவ்வாறு அமையும் ?**

**விடை :**

★ இரண்டு அசைகள் சேர்ந்து ஒரே சீராக அமைவது ஈரசைச்சீர் எனப்படும். நேரில் முடிவது மாச்சீர் எனப்படும். நிரையில் முடிவது விளச்சீர் எனப்படும்.

| | | |
|---|---|---|
| நேர் நேர் | – தேமா | மாச்சீர் |
| நிரை நேர் | – புளிமா | மாச்சீர் |
| நேர் நிரை | – கூவிளம் | விளச்சீர் |
| நிரை நிரை | – கருவிளம் | விளச்சீர் |

---

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக. (செப் – 20)**

**விடை :**

| பொது இலக்கணம் | ஆசிரியப்பா (அகவற்பா) |
|---|---|
| ஓசை | அகவல் ஓசை பெற்றுவரும் |
| சீர் | ஈரசைச்சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்றுவரும் |
| தளை | ஆசிரியத் தளை மிகுதியாகவும், வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும். |
| அடி | மூன்று அடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும். |
| முடிப்பு | ஏகாரத்தில் முடித்தல் சிறப்பு. |

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக. (பெ.ஆ.க – 6)**

**விடை :**

| பொது இலக்கணம் | வெண்பா |
|---|---|
| ஓசை | செப்பல் ஓசை பெற்றுவரும் |
| சீர் | ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும். இயற்சீர், வெண்சீர் மட்டுமே பயின்று வரும். |
| தளை | இயற்சீர்வெண்டளை மற்றும் வெண்சீர் வெண்டளைமட்டும் பயின்று வரும். |
| அடி | இரண்டடி முதல் பன்னிரண்டடி வரை அமையும்.(கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்) |
| முடிப்பு | ஈற்றுச் சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டில் முடியும். |

**3. மூவசைச் சீர் எவ்வாறு அமையும் ?**

**விடை :**

மூன்று அசைகள் சேர்ந்து ஒரு சீராக அமைவது மூவசைச்சீர் எனப்படும்.

அவற்றுள் நேரில் முடியும் நான்கும் காய்ச்சீர் எனப்படும்.

நிரையில் முடியும் நான்கும் கனிச்சீர் எனப்படும்.

| மூவசைச்சீர் – காய்ச்சீர் | | மூவசைச்சீர் – கனிச்சீர் | |
|---|---|---|---|
| நேர் நேர் நேர் | – தேமாங்காய் | நேர் நேர் நிரை | – தேமாங்கனி |
| நிரை நேர் நேர் | – புளிமாங்காய் | நிரை நேர் நிரை | – புளிமாங்கனி |
| நிரை நிரை நேர் | – கருவிளங்காய் | நிரை நிரை நிரை | – கருவிளங்கனி |
| நேர் நிரை நேர் | – கூவிளங்காய் | நேர் நிரை நிரை | – கருவிளங்கனி |

**4. "அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்**

**பேணித் தமராக் கொளல்" . – அலகிட்டு வாய்ப்பாடு தருக. (பெ.ஆ.க – 1)**

**விடை :**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| அரி / யவற் / றுள் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| எல் / லாம் | நேர் நேர் | தேமா |
| அரி / தே | நிரை நேர் | புளிமா |
| பெரி / யா / ரைப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பே / ணித் | நேர் நேர் | தேமா |
| தம / ராக் | நிரை நேர் | புளிமா |
| கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பா "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

**5. "தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்.**

**அழுத கண்ணீரும் அனைத்து" . – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க. (பெ.ஆ.க – 3) (செப் – 20)**

**விடை :**

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| தொழு / தகை | நிரை நிரை | கருவிளம் |
| யுள் / ளும் | நேர் நேர் | தேமா |
| படை / யொடுங் / கும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| ஒன் / னார் | நேர் நேர் | தேமா |
| அழுத / கண் | நிரை நிரை | கருவிளம் |
| ணீ / ரும் | நேர் நேர் | தேமா |
| அனைத்து | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா "பிறப்பு" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

6. "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்" –இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க. (பெ.ஆ.க– 5)

விடை :

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| உல / கத் / தோ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| டொட் /ட | நேர் நேர் | தேமா |
| வொழு /கல் | நிரை நேர் | புளிமா |
| பல / கற் / றும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கல் /லார் | நேர் நேர் | தேமா |
| அறி /விலா | நிரை நிரை | கருவிளம் |
| தார் | நேர் | நாள் |

இக்குறட்பா "நாள்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

7. "பண்என்னாம் பாடற்கியை பின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்" . – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க. (பெ.ஆ.க – 6)

விடை :

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| பண் / என் / னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| பா /டற் | நேர் நேர் | தேமா |
| கியை / பின் / றேல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கண் / என் / னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கண் / ணோட் / டம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| இல் /லாத | நேர் நேர் | தேமா |
| கண் | நேர் | நாள் |

இக்குறட்பா "நாள்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

8. "வன்கண் குடிகாத்தல் கற்றிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு" . – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க. (பெ.ஆ.க – 2)

விடை :

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| வன் / கண் | நேர் நேர் | தேமா |
| குடி / காத் / தல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கற் / றி / தல் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| ஆள் / வினை / யோ | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| டைந் /துடன் | நேர் நிரை | கூவிளம் |
| மாண் /ட | நேர் நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா "பிறப்பு" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

9. "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" . – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக. (அ.மா.வி)

விடை :

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| பொரு/ளல் | நிரை நேர் | புளிமா |
| லவ / ரைப் | நிரை நேர் | புளிமா |
| பொரு / ளா / கச் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| செய் / யும் | நேர் நேர் | தேமா |
| பொரு / லள் / ல | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தில் / லை | நேர் நேர் | தேமா |
| பொருள் | நிரை | மலர் |

இக்குறட்பா "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

10. "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்" . – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு காண்க. (பெ.ஆ.க – 4)

விடை :

| சீர் | அசை | வாய்ப்பாடு |
|---|---|---|
| ஊ / ழை / யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| உப் /பக் / கம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| காண் / பர் | நேர் நேர் | தேமா |
| உலை / வின் / றித் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தா / ழா | நேர் நேர் | தேமா |
| துஞற் / று | நிரை நேர் | புளிமா |
| பவர் | நிரை | மலர் |

இக்குறட்பா "மலர்" என்னும் வாய்ப்பாட்டில் முடிந்துள்ளது.

11. அலகிடப் பின்பற்ற வேண்டிய எளிய வழிகளைப் பட்டியலிடுக.

விடை : அலகிடப் பின்பற்ற வேண்டிய எளிய வழிகள் :

1) மெய் எழுத்தின் பக்கத்தில் / இக்குறி இடுக
எ.கா : ஒழுக் / கம் /

2) நெடில் எழுத்தின் பக்கத்தில் / இக்குறி இடுக
எ.கா : மா / லை /

3) இரு குறில் அடுத்து / இக்குறி இடுக
எ.கா : மல / ரும் /

4) இரண்டு எழுத்து இருப்பின் இரண்டாவது எழுத்து மெய் எழுத்தோ அல்லது ஆய்த எழுத்தாகவோ இருந்தால் நேர் எனக் கொள்க.
எ.கா : எல் / லா / ரும் – நேர்+நேர்+நேர்

5) இரண்டு எழுத்து இருப்பின் இரண்டும் குறிலாக இருந்தால் நிரை எனக் கொள்க.
எ.கா : பல / ரும் – நிரை + நேர்

6) மூன்று எழுத்து இருப்பின் – நிரை எனக் கொள்க.
எ.கா : எள் / ளுவர் – நேர் + நிரை

## கற்பவை கற்றபின்

**1. பாடநூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளையும் அவற்றின் பாவகைகளையும் வகைப்படுத்திப் பட்டியல் இடுக.**

**விடை :**

| | | |
|---|---|---|
| 1) | குறள்வெண்பா | திருக்குறள் |
| 2) | வெண்பா | நீதிவெண்பா, திருவிளையாடற்புராணம், தேம்பாவணி |
| 3) | கலிவெண்பா | முல்லைப்பாட்டு, பரிபாடல் |
| 4) | ஆசிரியப்பா | அன்னைமொழியே, மலைபடுகடாம், திருமால் திருமொழி, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், மெய்க்கீர்த்தி, சிலப்பதிகாரம், ஞானம், காலக்கணிதம், ஏர்புதிதா ? |
| 5) | இணைக்குறள் ஆசிரியப்பா | காற்றேவா, பூத்தொடுத்தல், சித்தாளு |
| 6) | கலப்பா | கம்பராமாயணம். |

**2. வெண்பாவில் அமைந்த நூல்கள், ஆசிரியப்பாவில் அமைந்த இலக்கியங்கள் பற்றி வகுப்பில் கலந்துரையாடுக.**

**விடை :**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா!.

**தமிழாசிரியர்** : வணக்கம் மாணவர்களே! அமருங்கள். இவ்வகுப்பில் வெண்பாவில் அமைந்த நூல்கள், ஆசிரியப்பாவில் அமைந்த இலக்கியங்கள் பற்றிக் கலந்துரையாடுவோமா!

**மாணவர்கள்** : சரிங்க ஐயா!

**மீனா** : திருக்குறள், நாலடியார், நீதி வெண்பா போன்ற நூல்கள் வெண்பாவால் அமைந்த நூல்களாகும்.

**சுரேஷ்** : அப்படியா !

**உமா** : நளவெண்பா என்ற நூலும் வெண்பாவால் ஆனதுதானே !

**மலர்** : ஆமாம். ஆசிரியப்பாவால் அமைந்த நூல்கள் சிலவற்றைக் கூறுங்களேன் ?

**அருண்** : புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, பரிபாடல், முல்லைப்பாட்டு போன்றவை ஆசிரியப்பாவால் அமைந்தவை ஆகும்.

**தமிழாசிரியர்** : நன்று! நன்று!

**மீனா** : ஆசிரியப்பாவில் அமைந்த வேறு சில நூல்கள் உண்டா ?

**உமா** : உண்டே! நற்றிணை, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்ற இலக்கியங்களும் ஆசிரியப்பாவில் அமைந்த நூல்களே !

**தமிழாசிரியர்** : மிக நன்று! மாணவர்களே!.

**மாணவர்கள்** : நன்றி! ஐயா.

இயல்

8. ஊ

## மொழியை ஆள்வோம்!

(மொழிப்பயிற்சி)

அ) படித்துச்சுவைக்க:

*மரம் தேடிய களைப்பு*
*மின்கம்பியில்*
*இளைப்பாறும் குருவி.*
– நாணற்காடன்

*விற்பனையில்*
*காற்றுப் பொட்டலம்*
*சிக்கனமாய் மூச்சு விடவும்.......*
–புதுவைத் தமிழ் நெஞ்சன்

---

**ஆ) மொழிபெயர்க்க:**

***Once upon a time there were two beggars in Rome. The first beggar used to cry in the streets of the city, "He is helped whom God helps". The Second beggar used to cry, "He is helped who the king helps". This was repeated by them everyday. The Emperor of Rome heard it so often that he decided to help the beggar who popularized him in the streets of Rome. He ordered a loaf of bread to be baked and filled with pieces of gold. When the beggar felt the heavy weight of the bread, he sold it to his friend as soon as he met him. The latter carried it home. When he cut the loaf of bread he found sparkling pieces of gold. Thanking God, he stopped begging from that day. But the other continued to beg through the city. Puzzled by the beggar's behaviour, the Emperor summoned him to his presence and asked him, "What have you done with the loaf of bread that I had sent you lately?" The man replied, "I sold it to my friend, because it was heavy and did not seem well baked" Then the Emperor said, "Truly he whom God helps is helped indeed," and turned the beggar out of his palace.***

**விடை :**

முன்னொரு காலத்தில் உரோம் நகரில் இரண்டு பிச்சைக்காரர்கள் இருந்தனர். அதில் ஒருவன், "இறைவன் யாருக்கு உதவவேண்டும் என்று எண்ணுகிறானோ அவனே உதவியைப் பெறுவான்" என்று கூறிக்கொண்டு செல்வான். இரண்டாவது , "அரசன் யாருக்கு உதவ வேண்டுமென எண்ணுகிறானோ அவனே உதவி பெறுகிறான்" என்று கூறிக்கொண்டே நடப்பான். இதனைக் கேள்வியுற்ற உரோமப் பேரரசன் இரண்டாவது பிச்சைக்காரனுக்கு உதவி செய்ய தீர்மானித்தார். ஒரு ரொட்டித் துண்டின் உள்ளே தங்கக் கட்டியினை வைத்துத் தயாரித்துப் பிச்சைக்காரனுக்குக் கொடுத்தார். ரொட்டித் துண்டு எடை அதிகமாக இருந்ததால் பிச்சைக்காரன் அதனை தன் நண்பனிடம் விற்று விட்டான். ரொட்டியை வாங்கிய பிச்சைக்காரன் ரொட்டியை வெட்டிச் சாப்பிட முற்பட்டபோது உள்ளே தங்கக்கட்டி இருப்பதைக்கண்டு மகிழ்ந்து கடவுளுக்கு நன்றிகூறி, பிச்சை எடுப்பதையும் நிறுத்திவிட்டான். மற்றவனோ பிச்சை எடுப்பதைத் தொடர்ந்தான். பிச்சைக்காரனின் நிலையை அறிந்த மன்னன், அவனை அழைத்து உனக்கு நான் கொடுத்த ரொட்டியை என்ன செய்தாய் ?எனக் கேட்டான் . நான் அதன் எடை அதிகமாக இருந்ததால் வேகவில்லை என்று நண்பனுக்கு விற்றுவிட்டேன் என்றான். அவன் கூறியதைக் கேட்ட அரசன் இறைவன் யாருக்கு உதவவேண்டும் என விரும்புகிறானோ அவனே உதவியைப் பெறுவான் என்று கூறி பிச்சைக்காரனை அரண்மனையிலிருந்து வெளியேற்றிவிட்டான்.

**இ) மரபுத்தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.**
**மரபுத் தொடர் :**

| | |
|---|---|
| **மனக்கோட்டை** | **கண்ணும் கருத்தும்** |
| **அள்ளி இறைத்தல்** | **ஆறப்போடுதல்** |

**மனக்கோட்டை : (பெ.ஆ.க – 3)**
**விடை :** சில மாணவர்கள் பாடங்களை முழுமையாகப் படிக்காமல் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறலாம் என **மனக்கோட்டை**க் கட்டிக்கொண்டு இருக்கிறார்கள்.
**கண்ணும் கருத்தும் : (பெ.ஆ.க – 3, 4)**
**விடை :** விவசாயிகள் நன்கு விளைந்த பயிர்களை, கால்நடைகளிடமிருந்து **கண்ணும் கருத்துமாகக்** காத்தனர்.
**அள்ளி இறைத்தல் :**
**விடை :** காரைக்கால் மாங்கனித் திருவிழாவில் பொதுமக்கள் மாங்கனிகளை **அள்ளி இறைத்தனர்.**
**ஆறப்போடுதல் :**
**விடை :** மனிதன் உணர்ச்சிவயப்பட்ட நிலையில் முக்கிய முடிவுகளை எடுக்காமல் **ஆறப்போடுதல்** நன்மையே தரும்.

---

**கூடுதல் வினா :**
**கயிறு திரித்தல் : (பெ.ஆ.க – 4)**
**விடை :** சிலர் அரசு வேலை வாங்கித் தருவதாகக் **கயிறு திரித்தலை** நம்பிப் பலர் அவர்களிடம் ஏமாறுகின்றனர்.

---

**ஈ) பின்வரும் உரையாடலில் உள்ள பேச்சுவழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.**
**"தம்பீ ? எங்க நிக்கிறே ?"**
**"நீங்க சொன்ன எடத்துலதாண்ணே ! எதிர்த்தாப்புல ஒரு டீஸ்டால் இருக்குது" (செப் – 20)**
**" அங்னனக்குள்ளயே டீ சாப்புட்டு, பேப்பரப் படிச்சிகிட்டு இரு... நா வெரசா வந்துருவேன்"**
**"அண்ணே ! சம்முவத்தையும் கூட்டிக்கிட்டு வாங்கண்ணே ! அவனெப் பாத்தே ரொம்ப நாளாச்சு !"**
**"அவம்பாட்டியோட வெளியூர் போயிருக்கான். உங்கூருக்கே அவனெக் கூட்டிக்கிட்டு வர்றேன்"**
**"ரொம்பச் சின்ன வயசுல பார்த்ததுண்ணே ! அப்பம் அவனுக்கு மூணு வயசு இருக்கும் !"**
**"இப்ப ஒசரமா வளந்துட்டான் ! ஒனக்கு அடையாளமே தெரியாது ! ஊருக்கு எங்கூட வருவாம் பாரேன் ! சரி, போனை வையி, நாங் கௌம்பிட்டேன்....."**
**"சரிங்கண்ணே" (பெ.ஆ.க – 5)**
**விடை :**
"தம்பி ? எங்கே நிற்கிறாய் ?"
"நீங்கள் சொன்ன இடத்தில்தான் அண்ணா ! எதிர்ப்புறத்தில் ஒருதேநீர்க்கடை இருக்கிறது".
" அங்கேயே ஒரு தேநீர் அருந்திவிட்டு நாளேடுகளைப் பார்த்துக்கொண்டிரு... நான் வேகமாக வந்துவிடுவேன்"
" அண்ணா ! சண்முகத்தையும் கூட்டிகொண்டு வாருங்கள் அண்ணா ! அவனைப் பார்த்து வெகு நாளாயிற்று !"
"அவன் பாட்டியுடன் வெளியூர் சென்றிருக்கிறான். உங்கள் ஊருக்கே அவனை அழைத்துக்கொண்டு வருகிறேன்"
"மிகவும் சிறிய வயதில் பார்த்தது அண்ணா ! அப்போது அவனுக்கு மூன்று வயது இருக்கும் !"
"இப்போது உயரமாக வளர்ந்துவிட்டான் ! உனக்கு அடையாளமே தெரியாது ! ஊருக்கு எங்கள்கூட வருவான் பாரு ! சரி, தொலைபேசியை வைத்துவிடு, நான் புறப்பட்டுவிட்டேன்....."
"சரி அண்ணா"

**உ) கடிதம் எழுதுக.**

**உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்துசெல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 2)**

**விடை :**

செல்லூர்
தேதி.............

அனுப்புநர்:
ர. கார்த்திகேயன்,
40, அய்யனார் கோவில் ரோடு,
செல்லூர்,
மதுரை – 625002

பெறுநர்:
ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி அலுவலகம்,
மதுரை – 625002

பொருள்: மின்விளக்கு பழுதடைந்துள்ளதை சீர்செய்தல் தொடர்பாக...

ஐயா,

வணக்கம். எங்கள் தெருவில் கடந்த பதினைந்து நாட்களாக மின் விளக்குகள் பழுதடைந்துள்ளது. எங்கள் தெருவில் வசிக்கும் மக்கள் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளதால் மிகவும் சிரமப்படுகிறோம். நகர எல்லையின் கடைசியில் எங்கள் தெருவானது அமைந்துள்ளதால், பேருந்து நிறுத்தத்திற்குச் செல்லவேண்டுமானால்கூட இருளில்தான் நடந்து செல்ல வேண்டி இருக்கிறது. மேலும் இங்கு அடிக்கடி திருட்டுகள் நடைபெறுகின்றன. அதுவும் சாலையில் வழிப்பறிகள் மிகுதியாக உள்ளன. விளக்குகள் பழுதடைந்ததே இதற்குக் காரணம். எனவே எங்கள் துன்பம் தீரும் வகையில் மின்விளக்குகளை சரி செய்ய ஆவன செய்யுமாறு மிக்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள
ர. கார்த்திகேயன்

உறைமேல் முகவரி:
பெறுநர்:
ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி அலுவலகம்,
மதுரை – 625002

---

**ஊ) நயம் பாராட்டுக.**

***கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த***
***குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே***
***ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே***
***உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே***
***மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே***
***மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே***
***ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்***
***ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.***

**– வள்ளலார்**

**விடை :**

**பாடலின்கருத்து :** கோடைக்காலத்தில் நான் ஓய்வெடுக்கக் குளிர்ந்த நிழலையும், சுவைமிக்கக் கனிகளையும் தரும் மரங்களே. நான் பருக ஊரும் சுவைமிக்க நீரைத்தந்திடும் ஓடையே, அந்த

நீரிடையே மலர்ந்து மணம் வீசும் மலரே. உயர்ந்த பகுதியில் வீசும் மென்மையான காற்றே. அம்மென் காற்று வீசுவதால் மணம் பரவி அதனால் ஏற்படும் இன்பமே. இன்பத்தால் கிடைக்கும் பயனே. விளையாடும் பருவத்திலேயே என்னை மணந்து கொண்டு தலைவனாகியவனும் பொதுவில் நடனம் ஆடும் நடராசப் பெருமானே என்னுடைய பூமாலையை அணிந்து அருள்வீராக.

**சீர்மோனை :** செய்யுளில் அடியிலோ சீரிலோ முதல் எழுத்து ஒன்றுவரத் தொடுப்பது சீர்மோனை.

| சீர்மோனை | | அடிமோனை | |
|---|---|---|---|
| கோடையிலே | கொள்ளும் | கோடையிலே | குளிர் |
| மேடையில் | மெல்லிய | மேடையிலே | மென்காற்றில் |
| ஆடுகின்ற | அரசே – அலங்கல் | ஆடையிலே | ஆடுகின்ற |

**அடிஎதுகை :**

செய்யுளில் முதல் எழுத்து அளவொத்திருக்க இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

கோடையில் – ஓடையிலே

மேடையிலே – ஆடையிலே

இயைபு நயம்:

பாடலில் இறுதி சீர் ஒன்றிவருவது இயைபு நயமாகும்.

கனியே : தண்ணீரே – மலரே – காற்றே

பயனே : அணிந்தருளே

அணிநயம்:

பாடலில் இயற்கையின் இயல்புகளான மரம் நிழல் தருவது, கனி தருவது, ஓடையிலே குளிர்ந்த நீர், நீரில் மலரும் மலர். மலரின் வீசும் மணம் என இயற்கையின் இயல்புகளைக் கூறுவதால் இது இயல்பு நவிற்சியாக அமைகிறது.

பாடலின் ஒவ்வொரு வரியிலும் சொல்நயத்தைக் காணலாம். வள்ளலாரின் இப்பாடலைப் படித்துப் பாடி இன்புற்றத்தக்கதாகும்.

---

**கூடுதல் வினா :**

**1. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி தலைப்பு ஒன்று தருக.**

**குறிப்புகள் : முன்னுரை – மனித வாழ்வு அறம் சார்ந்தது – இலக்கியம் காட்டும் அறம் – அறத்தான் வருவதே இன்பம் – முடிவுரை (பெ.ஆ.க – 2, 6)**

**விடை :**

**முன்னுரை :**

தமிழர் பொருள் ஈட்டி அறம் செய்து இன்புற்றனர்; இல்வாழ்க்கையை அறவாழ்க்கையாகக் கொண்டனர்; உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்தனர்; சங்ககாலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர் ; சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம், சங்ககாலம்.

**மனித வாழ்வு அறம் சார்ந்தது :**

மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒரு துளி. அவனுக்குள்ளே சமூகம் – சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கவேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன்ஏற்க வேண்டும்.

**இலக்கியம் காட்டும் அறம்:**

அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக்கூடாது என்பது சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது. இப்பிறப்பில் அறம் செய்தால் அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்ற வணிக நோக்குக் கூடாது எனக் கூறப்பட்டது.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன்; ஆஅய் அல்லன்" – புறம்

எனச் சங்ககால வள்ளல்களில் ஒருவரான ஆய் பற்றி ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிட்டுள்ளார். நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தருவது என்பது இதில் உணர்த்தப்பட்டுள்ளது. சங்கப்

பாக்களில் அறம் பற்றிய அறிவுரைகள் பெரும்பாலும் அரசர்களை முதன்மைப்படுத்தியே கூறப்பட்டுள்ளன.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்",
"அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்"

மன்னர்களுடைய செங்கோலும் வெண்கொற்றக்குடையும் அறத்தின் குறியீடுகளாகப் போற்றப்பட்டன. அரசன் செங்கோல் போன்று நேரிய ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்பது பல பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**அறத்தான் வருவதே இன்பம் :**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் "உதவியாண்மை" என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்கவேண்டிய நிலை எது என்பதை மனிதன் உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம் தானே எண்ணெய்யாக இருக்கமுடியும் ?

பிறர் நோயும் தம் நோய்போல் போற்றி அறன் அறிதல்
சான்றவர்க்கு எல்லாம் கடன் (கலி. 139)

என்று பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் பற்றி நல்லந்துவனார் குறிப்பிடுகிறார்.

"உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்" என்கிறார் நல்வேட்டனார்.

சான்றோர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே (நற்.210)

**முடிவுரை:**

சங்ககாலத்தில் அறத்தை மனித உறவின் மையமாகக் கொண்டிருந்தனர். சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம், உலகே பரிசாகக் கிடைத்தாலும் பழிதரும் செயல்களைச் செய்ய மறுத்த காலம் சங்ககாலம். சங்க இலக்கியம் காட்டும் அறங்கள் இன்றைய சமுதாயத்திற்குத் தேவை.

---

**2. "என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும். எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்" என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்ப தன்னலமற்ற பண்புகளைக் கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும் என்பதனை நீங்கள் அறிந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.(பெ.ஆ.க – 4)**

**விடை :**

**இராமானுசர் (நாடகம்)**

**கதை மாந்தர் – கவியரசு கண்ணதாசன்**

வாழ்க்கையில் ஜெயிக்க வேண்டும் என்கிற வெறி எனக்கு எப்போதும் உண்டு. அதுவும் இப்போது அந்த வெறி உச்சத்தில் இருக்கிறது. சரியான பாதை, சரியான நண்பர்கள், நல்லோர் அறிமுகம் அதன் மூலம் நமக்குள் ஏற்படும் சிந்தனை மாற்றம். தன்னலமற்ற நல்ல உள்ளங்களின் நட்பு விதியைப் புரட்டிப்போட்டு வாழ்க்கையில் வெற்றிக் கொடி நாட்டிய சாதனையாளர்களின் சந்திப்பு என்னுடைய நிகழ்காலம் இதுதான். என்னுடைய பேச்சு,செயல், சிந்தனை, சந்திப்பு எல்லாம் தற்போது இதுதான்.

வில்வித்தைப் போட்டியில் கௌரவர்களும் பாண்டவர்களும் பங்கேற்றபோது, துரோணர் அர்ஜுனனிடம் "குறிவைக்கப்படும் பறவையின்உருவம் தெரிகிறதா ? " என்று கேட்டபோது, "இல்லை.... அதன் கண்கள் மட்டுமே தெரிகிறது" என்றான் அர்ஜுனன். அதுபோல எட்டவேண்டிய இலக்குதான் என் கண்களுக்குத் தெரிகிறதே தவிர இடையில் சந்திக்கும் தடங்கல்கள், பிரச்சனைகள், சறுக்கல்கள், துரோகங்கள் இதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டே அல்ல.

சரி...சரி... விஷயத்திற்கு வருகிறேன். ஒருநாள் நான் பார்வையற்ற மாற்றுத் திறனாளி நண்பர் திரு.இளங்கோவிடம் பேசிக்கொண்டிருக்கும் போது, கண்ணதாசன் அவர்களைப் பற்றி எங்கள் பேச்சு திரும்பியது.

"வாழ்க்கையில் ஜெயிக்கிற வழியைப்பற்றிக் கண்ணதாசன் ஒரு பாட்டில் ரொம்ப அருமையாக சொல்லியிருப்பார் தெரியுமா சுந்தர் ?" என்றார் அவர்.

"வாழ்க்கையில் ஜெயிப்பது பற்றி ஒரு பாட்டல்ல பலநூறு பாட்டுக்கள் கண்ணதாசன் எழுதியிருக்கிறாரே...... நீங்க எந்தப் பாட்டைச் சொல்றீங்க ?" என்றேன் நான்.

"வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்" கடவுளுக்கும் உண்மைக்கும் முக்கியத்துவம் தராமல் மனம் போன போக்கில் வாழ்ந்தால் வாழ்வில் வீழ்ச்சியடையப் போகிறாய் என்பது பொருள்.

உலகம் ஒரு போர்க்களம். அதனால் விளைவு குறித்து வருந்தாதே. இன்ப துன்பம், லாப நஷ்டம், வெற்றி தோல்வி என அனைத்தையும் சமமாகக் கருது. மனம் வெளிப்புறமாகச் சென்றால் அது தீமையின் பக்கம் அழைத்துச் செல்லும். கடவுளிடம் நம்பிக்கைக் கொண்டால் நிம்மதியுடன் வாழலாம்.

தெய்வ நிலைக்கு உயர்த்துவது பக்தி. இதைவிடச் சிறந்தது எளிதாகப் பின்பற்றக்கூடியது வேறில்லை. தன்னலமற்ற இறைத்தொண்டே வாழ்வின் லட்சியம். சமயச் சடங்குகள், வழிபாட்டு முறைகளை விட கடவுளை அடைவதற்கு தன்னலமற்ற தொண்டே சிறந்த வழியாகும்.

நியாயம், தர்மம், ஒழுக்கமுடன் வாழ சிறந்த மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படி. அதன் வழிமுறைகளைப் பின்பற்று.

"உன் மதிப்பு குறித்து உன்னை அறிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள். உன்னை நீயே பெரியவனாக எண்ணினால் அது வெறும் கற்பனையே" என்கிறார் ராமகிருஷ்ணானந்தர்.

## இயல் 8. எ

## மொழியோடு விளையாடு (மொழிப்பயிற்சி)

அ) கண்டுபிடித்து எழுதுக.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, பத்து ஆகியஎண்ணுப் பெயர்கள் இடம் பெறும் திருக்குறளைக் கண்டுபிடித்து எழுதுக.

விடை :

**ஒன்று :** கொன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுஉள்ளக் கெடும்.

**இரண்டு :** தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா துஎனின்.

**மூன்று :** காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

**நான்கு :** பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இவ்லிறப்பான் கண்.

**ஐந்து :** பொறிவாயல் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடு வாழ்வார்.

**ஆறு :** படைகுடிகூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு.

**ஏழு :** ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

**எட்டு :** கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

**பத்து :** நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்.

---

ஆ) சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.

1. கானடை 2. வருந்தாமரை 3. பிண்ணாக்கு 4. பலகையொலி

எ.கா : கானடை என்பதை

கான் அடை – காட்டைச் சேர்
கான் நடை – காட்டுக்கு நடத்தல்
கால் நடை – காலால் நடத்தல்

இவ்வாறு மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் கூறலாம்.

**விடை :**

**2. வருந்தாமரை :**

| | | |
|---|---|---|
| வரும்+தாமரை | – | வருகின்ற தாமரை |
| வருந்தா+மரை | – | வருந்தாத மான் |
| வரும்+தா+மரை | – | வரும் தாவுகின்ற மான் |

**3. பிண்ணக்கு :**

| | | |
|---|---|---|
| பிண்ணாக்கு | – | எண்ணெய் எடுத்த கழிவு |
| பிள்+நாக்கு | – | பிளவுபட்ட நாக்கு |

**4. பலகையொலி :**

| | | |
|---|---|---|
| பலகை+ஒலி | – | பலகையின் சத்தம் |
| பல+கையொலி | – | பலருடைய கையொலி |
| பல+கை+ஒலி | – | பல்வேறு சிறு ஒலிகள் |

**கூடுதல் வினா :**

**"கானடை" என்னும் சொல்லைப் பிரித்தால் பொருந்தாத பொருளைக் குறிப்பிடுக. (பெ.ஆ.க – 3)**

அ) கான் அடை – காட்டைச் சேர்  ஆ) கால் உடை – காலால் உடைத்தல்
இ) கான் நடை – காட்டுக்கு நடத்தல்  ஈ) கால் நடை – காலால் நடத்தல்

**விடை : ஆ) கால் உடை – காலால் உடைத்தல்**

**இ) செயல்திட்டம் :**

**ஔவையாரின் ஆத்திசூடி, பாரதியாரின் ஆத்திசூடி ஆகிய இரண்டின் முதல் பத்துத் தொடர்களை ஒப்பிட்டு, நாள்தோறும் ஒரு தொடர் என்னும் அடிப்படையில் கருத்துகளைக் காலை வழிபாட்டு நிகழ்வில் வழங்குக.**

**ஈ) அகராதியில் காண்க :**

**ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி**

**விடை :**

| | | |
|---|---|---|
| **ஆசுகவி** | – | பாடவேண்டிய பொருளைக் கொடுத்த உடனேயே செய்யுள் இயற்றும் புலமை பெற்ற புலவர். |
| **மதுரகவி** | – | இலக்கணமுறைப்படி செய்யுள் இயற்றுபவர். நான்குவகையான கவிஞருள் இனிமைபெருகப் பாடுபவர். |
| **சித்திரகவி** | – | இறைகவி. பலவகைப் பாக்களுடன் புதிய வகைகளில் பாக்கள் அமைத்துச் செய்யுளுக்குரிய வண்ணங்கள் அமைத்து தொன்று தொட்டுவரும் மரபை மீறாமல் பாடுபவர். (எழுத்தைச்சித்திரமாக வடித்து நிறுத்துவது) |
| **வித்தாரகவி** | – | எதையும் விரிவாகப் பாடுவது. |

**உ) கலைச் சொல் அறிவோம் :**

Belief – நம்பிக்கை (பெ.ஆ.க – 3)

Renaissance – மறுமலர்ச்சி (பெ.ஆ.க – 3)

Philosopher – மெய்யியலாளர்

Revivalism – மீட்டுருவாக்கம்

**ஊ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக :**



பிறருக்குக் கொடுத்து
உதவும் அளவிற்கு
உனது ஆற்றலை
வளர்த்திடு...........
ஆனால்
பிறருக்குக் கொடுப்பதை
ஒருபோதும் தடுக்காதே
அது உன்னை
தரித்திரனாக்கிவிடும்.

## எ) நிற்க அதற்குத் தக

**நாம் எப்போதும் ஒரே மனநிலையில் இருப்பதில்லை. நம்மைச் சுற்றி நிகழும் செயல்களால் நாம் அலைக்கழிக்கப்படுகிறோம். உடன் பயில்பவருடனோ, உடன் பிறந்தவருடனோ எதிர்பாராமல் சச்சரவு ஏற்படுகிறது....... இந்தச் சமயத்தில் சினம் கொள்ளத் தக்க சொற்களைப் பேசுகிறோம்; கேட்கிறோம்; கைகலப்பில் ஈடுபடுகிறோம்; இதுகாறும் கற்ற அறங்கள் நமக்குக் கைகொடுக்க வேண்டாமா ? மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளும்........ (பெ.ஆ.க – 2)**

| நாம் செய்ய வேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| நல்ல சொற்களையே தேர்ந்தெடுத்துப் பேசுதல் | நல்ல நண்பர்களைப் பெறலாம் ; எதிரிகளையும் நண்பராக்கலாம். |
| ஒருவரைப்பற்றி இன்னொருவரிடம் மாற்றிப் பேசாதிருத்தல். | மன அமைதி பெறலாம் |
| பழிவாங்கும் எண்ணத்தைக் கைவிடல். | எதையும் தாங்கும் வலிமை பெறலாம். |
| எப்போதும் மற்றவர்களுக்கு உதவத் தயாராக இருத்தல். | விரைந்து முடிக்கும் ஆற்றல் பெறலாம். |

## ஏ) அறிவை விரிவு செய்

அறமும் அரசியலும் – மு.வரதராசனார்
அபி கவிதைகள் – அபி
எண்ணங்கள் எம்.எஸ்.உதயமூர்த்தி

## இயல் 8. ஏ — விதிகளை அறிவோம் ! விழிப்புணர்வு தருவோம்

அ) சிறுவினா :

**1. ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கையில் கட்டாயம் வைத்திருக்க வேண்டியவை யாவை ?**

**விடை :**

- ✶ ஓட்டுநர் உரிமம்
- ✶ ஊர்தியின் பதிவுச் சான்றிதழ்
- ✶ ஊர்திக்குச் செலுத்திய வரிச் சான்றிதழ்
- ✶ ஊர்திக் காப்பீட்டுச் சான்றிதழ்
- ✶ மகிழுந்து, சரக்குந்து போன்ற வண்டிகள், அப்பகுதிகளில் ஓட்டுவதற்கான இசைவுச் சான்றிதழ்.

---

**2. திறன் பேசியில் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டியது யாது ?**

**விடை :**

✶ அடுத்தவரின் வலியையும் வேதனையையும் திறன்பேசியில் படமெடுத்து சமூக வலைதளங்களில் போடுதல் போன்ற பொறுப்பற்றச் செயல்களைக் கட்டாயமாகத் தவிர்க்க வேண்டும்.

---

ஆ) நெடுவினா :

**ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகளை விவரி.**

**விடை :**

✶ சாலைகளில் இடப்பக்கம் வண்டிகள் செல்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்! அதுதான் முதல் விதி.

✶ சாலையின் ஓரங்களில் இருக்கும் அடையாளப் பலகைகளைப் புரிந்து ஊர்திகளை இயக்கவேண்டும்.

✶ மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கைப்பட்டை அணியவேண்டும். அதுவே உயிர்ப்பாதுகாப்பு !

✶ காதுகளை அடைத்தவாறு காதணி பேசிகளை அணிந்துகொண்டு பாடல் கேட்க வேண்டுமானால் பின்னிருக்கையில் அமர்ந்து செல்லுங்கள் – ஊர்தியை இயக்கியவாறு அல்ல !

✶ சாலையில் இடப்பக்கம் திரும்ப, முடிந்த அளவு இடப்பக்கம் வந்தபிறகு, வண்டியின் இடப்புறச் சைகை விளக்கை ஒளிரவிட்டவாறு, கண்ணாடியில் கண்காணித்துக்கொண்டே இடப்பக்கமாகத் திரும்பவேண்டும்.

✶ அதேபோல வலப்பக்கமாகத் திரும்புவதற்கு, முதலில் அதிகக் கவனத்துடன் சாலையின் நடுவில் வரவேண்டும், பிறகு எச்சரிக்கையுடன் வலப்புறச் சைகை விளக்கை ஒளிர விட்டவாறு கண்ணாடியில் கண்காணித்துக்கொண்டே திரும்பவேண்டும்.

✶ சிலர் பந்தயங்களில் ஓட்டுவதைப்போல சாலையில் செல்லும் வண்டிகளை இடமாகவும், வலமாகவும் கடந்து, பின்னால் வருபவர்களுக்குக் கடும் அச்சத்தைக் கிளப்பியவாறு ஓட்டுவார்கள்! அதைப் பார்த்து நாமும் கிளர்ச்சி அடைந்து வேகமாக ஓட்ட முயலக்கூடாது. மித வேகம் – மிகுந்த பாதுகாப்பு !

✶ சாலையைப் பயன்படுத்தும் அனைவரும் தீயணைப்பு ஊர்திக்கும் பிணியாளர் ஊர்திக்கும் முன்னுரிமை தந்து வழிவிடவேண்டும்.

✶ சாலையில் இருபுறமும் நடந்துவருபவர்கள் அவர்களுக்குரிய சாலையைக் கடக்கும் இடங்களில் கடப்பதற்கு வழிவிடவேண்டும்.

✶ ஊர்திகளை அடுத்தவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தாதவாறு நிறுத்த வேண்டும்.

✶ சிவப்பு விளக்கைக் கண்டவுடன் சாலையில் நிறுத்தக் கோட்டுக்கு முன்பாக ஊர்தியை நிறுத்த வேண்டும்.

✶ நமக்கும் சாலையில் பயணிக்கும் பிறருக்கும் விபத்து ஏற்படாவண்ணம் பாதுகாப்பாக ஊர்திகளை இயக்கவேண்டும்.

✶ விபத்துகளைக் கண்ணுற்றால் முதலுதவி, பிணியாளர் ஊர்தியை அழைத்தல் போன்ற நம்மால் இயன்ற உதவிகளைச் செய்யவேண்டும்.

---

**இ) விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க :**

**அ) சாலைகளில் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலை விதிகளில் முதன்மையான விதி. (பெ.ஆ.க – 5)**

**விடை :** சாலை விதிகளில் முதன்மையானது எது ?

**ஆ) ஓட்டுநர் உரிமம், ஊர்தியின் பதிவுச் சான்றிதழ், ஊர்தியின் வழி மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் போன்றவற்றை ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கையில் வைத்திருக்க வேண்டும். (பெ.ஆ.க – 5)**

**விடை :**

ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கையில் வைத்திருக்க வேண்டிய சான்றிதழ்கள் யாவை ?

---

**குறுவினா (கூடுதல் வினா)**

**1. ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் இரண்டினை எழுதுக. (செப் – 20)**

**விடை :**

✶ சாலையின் ஓரங்களில் இருக்கும் அடையாளப் பலகைகளைப் புரிந்து ஊர்திகளை இயக்க வேண்டும்.

✶ மகிழுந்தில் செல்பவர்கள் கட்டாயம் இருக்கைப் பட்டை அணிய வேண்டும்.

---

**கூடுதல் வினா : (எட்டு மதிப்பெண்கள்)**

**குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று படைக்க.**

**குறிப்புகள் : முன்னுரை – இலக்கியங்கள் காட்டும் அறம் – அறத்தான் வருவதே இன்பம் – அறவாழ்வே பண்பாட்டின் உச்சம் – அறம் என்பதே மனிதம் – முடிவுரை**

**விடை :**

**முன்னுரை :**

சங்ககாலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால், சங்க இலக்கிய அறங்கள் இயல்பானவை. "கவிதை வாழ்க்கையின் திறனாய்வு" என்று திறனாய்வாளர் ஆர்னால்டு கூறுகிறார். அந்த வகையில் சங்ககால வாழ்க்கையில் இருந்து உருவான அறங்களே சங்க இலக்கியத்தில் பதிவு பெற்றுள்ளன.

**இலக்கியங்கள் காட்டும் அறம்:**

வாய்மையை சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யா செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான், துன்பத்தின் கதவைத் திறப்பதுவும் அதுதான். மெய்பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனைத தாழ்த்துகிறது.

"பிழையா நன்மொழி" என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது; இதற்கு மாறாகப் "பொய் மொழிக்கொடுஞ்சொல்" என்று பொய்யைக்குறிப்பிடுகிறது. நிலம் புடை பெயர்ந்தாலும் பொய்சொல்லக்கூடாது என்பது பல பாடல்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

**அறத்தான் வருவதே இன்பம் :**

கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்பட்டனர்.

எழுவரின் கொடைப் பெருமை சிறுபாணாற்றுப்படையிலும் பெருஞ்சித்திரனார் பாடலிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆற்றுப்படை இலக்கியங்கள், கொடை இலக்கியங்களாகவே உள்ளன.

பதிற்றுப்பத்து சேர அரசர்களின் கொடைப்பதிவாகவே உள்ளது.

அரியன என்று கருதாது, தயங்காது கொடுத்தலும் ஈதலால் வரும் இழப்புக்கு வருந்தாமையும் நாள்தோறும் கொடுத்தலும் கொடைப் பெருமைகளாகப் பேசப்பட்டன.

வள்ளல்கள் "இல்லோர் ஒக்கல் தலைவன்", "பசிப்பிணி மருத்துவன்" என்றெல்லாம் போற்றப்பட்டனர்.

புற இலக்கியங்களில் மட்டுமன்றி அக இலக்கியங்களிலும் ஈதல் பற்றியச்செய்திகள் இடம் பெற்றுள்ளன.

ஈயாமை இழிவு, இரப்போர்க்கு ஈயாது வாழ்வதைவிட உயிரை விட்டுவிடுதல் மேலானது என்றெல்லாம் கலித்தொகையில் கூறப்பட்டுள்ளது.

வள்ளல்கள் மட்டுமின்றிப் புலவர்களும் ஈந்து மகிழ்ந்ததை இலக்கியம் பதிவு செய்துள்ளது.

தான்பெற்றதைப் பிறருக்கு வழங்கும் பெருஞ்சித்திரனாரின் பேருள்ளம் புறநானூற்றில் புலப்படுத்தப்பட்டுள்ளது.

**அறவாழ்வே பண்பாட்டின் உச்சம் :**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர்.

போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.

போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது.

**அறம் என்பதே மனிதம் :**

மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒரு துளி. அவனுக்குள்ளே சமூகம் – சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கவேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொதுவிதியான அறத்தை மனிதன்ஏற்க வேண்டும்.

**முடிவுரை:**

சங்கஇலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும் சமூக உறுப்பினனாகவும் இயங்குவதற்கும் அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகள் எனலாம்.

| இயல் ஒன்பது | இயல் 9. அன்பின் மொழி |
|---|---|

உரைநடை உலகம்

| இயல் 9. அ | ஜெயகாந்தம்– நினைவு இதழ் (உரைநடை) |
|---|---|

**பகுதி – I ( ஒரு மதிப்பெண்)**

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. சுதந்திர இந்தியாவின்மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது............**
**(பெ.ஆ.க – 5)**

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்
ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம்
ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

**விடை : ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்**

**2. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின்புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது : (பெ.ஆ.க – 2)**

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூகப்பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

**விடை: ஆ) சமூகப்பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**3. மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர்.................ஆவார்.**

அ) புதுமைப்பித்தன் ஆ) திரு.வி.க
இ) ஜெயகாந்தன் ஈ) சுரதா **விடை: இ) ஜெயகாந்தன்**

**4. எந்தத் திரைப்படத்திற்கு ஜெயகாந்தன் குடியரசுத்தலைவர் விருது பெற்றார் ?**

அ) சிலநேரங்களில் சில மனிதர்கள் ஆ) ஊருக்கு நூறுபேர்
இ) யாருக்காக அழுதான் ஈ) உன்னைப்போல் ஒருவன்

**விடை: ஈ) உன்னைப்போல் ஒருவன்**

**5. சாகித்ய அகாதெமி விருதுபெற்ற ஜெயகாந்தனின் நூல்.............**

அ) சிலநேரங்களில் சில மனிதர்கள் ஆ) புதிய வார்ப்புகள்
இ) உன்னைப்போல் ஒருவன் ஈ) இமயத்துக்கு அப்பால்

**விடை: ஈ) சிலநேரங்களில் சில மனிதர்கள்**

**6. ஜெயகாந்தன்சாகித்ய அகாதெமி விருது பெற்ற ஆண்டு எது ?**

அ) 1962 ஆ) 1972
இ) 1973 ஈ) 1975 **விடை: ஆ) 1972**

**7. சோவியத் நாட்டின் விருது பெற்ற ஜெயகாந்தனின் நூல் எது ?**

அ) புதிய வார்ப்புகள் ஆ) ஒருபிடிச் சோறு
இ) இமயத்துக்கு அப்பால் ஈ) ரிஷிமூலம் **விடை: இ) இமயத்துக்கு அப்பால்**

8. "துவேஷத்தைப் பரப்புவது ஜெயகாந்தனின் இயல்புக்குச் சற்றும் ஒவ்வாதது" எனக் கூறியவர் ...............
அ) கண்ணதாசன் ஆ) அசோகமித்திரன்
இ) தாராபாரதி ஈ) சந்தானபாரதி **விடை: ஆ) அசோகமித்திரன்**

9. கா. செல்லப்பன் குறிப்பிடும் படிக்காத மேதை யார் ?
அ) கல்கி ஆ) அகிலன்
இ) ஜெயகாந்தன் ஈ) கண்ணதாசன் **விடை: இ) ஜெயகாந்தன்**

10. ஜெயகாந்தன் எழுதிய நூல்களை தகுந்த இணையோடு பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) தேவன் வருவாரா | – | 1) குறும்புதினம் |
| ஆ) சினிமாவுக்குப் போன சித்தாளு | – | 2) சிறுகதைத் தொகுப்பு |
| இ) சுந்தர காண்டம் | – | 3) மொழிபெயர்ப்பு |
| ஈ) வாழ்விக்க வந்த காந்தி | – | 4) புதினம் |

அ) அ–3, ஆ–2, இ–1, ஈ–4 ஆ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1
இ) அ–2, ஆ–1, இ–4, ஈ–3 ஈ) அ–1, ஆ–3, இ–4, ஈ–2
**விடை: இ) அ–2, ஆ–1, இ–4, ஈ–3**

11. "சிலநேரங்களில் சில மனிதர்கள்" – என்னும் திரைப்படமான படைப்பை எழுதியவர்.......
அ) கண்ணதாசன் ஆ) அசோகமித்திரன்
இ) தாராபாரதி ஈ) ஜெயகாந்தன் **விடை: ஈ) ஜெயகாந்தன்ஹ**

12. முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு என்பதை ஜெயகாந்தன் பின்வருமாறு மொழி பெயர்த்தார் .............
அ) ஒருமனிதன் ஒருவீடு ஒருஉலகம் ஆ) சுந்தரகாண்டம்
இ) பாரீசுக்குப் போ ஈ) ஒரு கதாசிரியரின் கதை
**விடை: ஈ) ஒரு கதாசிரியரின் கதை**

13. ஜெயகாந்தனின் மொழிபெயர்ப்புகளில் ஒன்று ................
அ) வாழ்விக்க வந்த காந்தி ஆ) பிரளயம்
இ) கைவிலங்கு ஈ) ஒருபிடி சோறு
**விடை: அ) வாழ்விக்க வந்த காந்தி**

14. ஜெயகாந்தன் எழுதித் திரைப்படமான குறும்புதினம் எது ?
அ) புதிய வார்ப்புகள் ஆ) யாருக்காக அழுதான்
இ) உண்மை சுடும் ஈ) கங்கை எங்கே போகிறாள்
**விடை: ஆ) யாருக்காக அழுதான்**

15. ஜெயகாந்தன் எழுதி திரைப்படம் ஆகாத படைப்பு எது ?
அ) ஒருபிடிச் சோறு ஆ) ஊருக்கு நூறுபேர்
இ) உன்னைப் போல் ஒருவன் ஈ) யாருக்காக அழுதான் **விடை: அ) ஒருபிடிச் சோறு**

16. ஜெயகாந்தன் யாரைப்பற்றிக் கவிதை எழுதியுள்ளார் ?
அ) புதுமைப்பித்தன் ஆ) தாராபாரதி
இ) அசோகமித்திரன் ஈ) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
**விடை: ஈ) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

17. சிறுகதை மன்னன் என்று அழைக்கப்படுபவர் ................
அ) புதுமைப்பித்தன் ஆ) அசோகமித்திரன்
இ) ஜெயகாந்தன் ஈ) கல்கி **விடை: இ) ஜெயகாந்தன்**

18. தர்மார்த்தங்களை உபதேசிக்கவே பாரதத்தை எழுதியவர்...............
அ) கம்பர் ஆ) கபிலர்
இ) வியாசர் ஈ) ஔவையார் **விடை: இ) வியாசர்**

19. "தர்க்கத்திற்கு அப்பால்" சிறுகதை அமைந்த தொகுப்பு எது ?
அ) குருபீடம் ஆ) ரிஷிமூலம்
இ) யுகசந்தி ஈ) பிரம்ம உபதேசம் **விடை: இ) யுகசந்தி**

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.**

**விடை :**

1. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் உண்டு.
2. நான் எழுதுவதற்கு அதற்குரிய காரணமும் உண்டு.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. எதற்காக எழுதுகிறேன் ? என்று ஜெயகாந்தன் கூறிய காரணம் ஒன்றினைக் குறிப்பிடுக. (பெ.ஆ.க – 3)**

**விடை :**

★ சமூகப் பணியோடு கலைப்பணி புரியவே நான் எழுதுக்றேன்.

★ கலைப்பணி என்றாலே அதனுள்சமூகப் பார்வை அடக்கம்.

★ பிரித்துப் பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்துச் சொல்கிறேன். அது சேர்ந்துதான் இருக்கிறது.

---

**3. ஜெயகாந்தன் குறித்து நீவீர் அறிந்தவற்றை எழுதுக.**

**விடை :**

★ கருத்தாழமும் வாசகச்சுவையும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன்.

★ சமகாலக் கருத்துகளையும் நிகழ்வுகளையும சமகால மொழியில் சமகால உணர்வில் தந்தவர் அவர்.

★ சிறுகதை, புதினம், திரைப்படம், முன்னுரை, பேட்டி என எதைத்தொட்டாலும் தனிமுத்திரை பதித்தவர்.

★ இலக்கியத்திற்கான பெரும் விருதுகளை வென்றவர்.

★ மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர்.

---

**4. ஜெயகாந்தன் பெற்ற விருதுகள் யாவை ?**

**விடை :**

★ குடியரசுத் தலைவர் விருது (உன்னைப் போல் ஒருவன் – திரைப்படம்)

★ சாகித்ய அகாதெமி விருது–சிலநேரங்களில் சில மனிதர்கள் (புதினம்)

★ சோவியத் நாட்டு விருது (இமயத்துக்கு அப்பால்)

★ ஞானபீட விருது

★ தாமரைத் திரு விருது போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

---

**5. ஜெயகாந்தனின் படைப்பு இயல்பு குறித்து அசோகமித்திரன் கூறுவது யாது ?**

**விடை :**

★ ஜெயகாந்தன் எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும், அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை.

★ துவேஷத்தைப் பரப்புவது அவருடைய இயல்புக்குச் சற்றும் ஒவ்வாதது.

★ அவர் அரசியலில் தொடர்ந்து பங்குபெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம் என்பது அசோகமித்திரனின் கருத்தாகும்.

---

**6. ஜெயகாந்தன் குறித்த தீபம் இதழ் வாசகர்களின் கருத்துகளை எழுதுக.**

**விடை :**

★ கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம், வலுவான நடை, புதுக்கருத்துகள், புதுவிளக்கங்கள், ஆழம், கனம் இந்த அம்சங்களை இவருடைய சிறுகதைகளில் பூரணமாகக் காணலாம்.

★ அதுமட்டுமின்றிப் பலதரப்பட்ட சூழ்நிலைகளையும் வெற்றிகரமாகச் சித்தரிப்பது இவருடைய அரிய சாதனை.

---

**7. ஜெயகாந்தன்எழுதிய சிறுகதைத் தொகுப்புகள் எவை ?**

**விடை :**

★ குருபீடம்

★ யுகசந்தி

★ ஒருபிடி சோறு

★ உண்மை சுடும்

★ இனிப்பும் கரிப்பும்

★ தேவன் வருவாரா

★ புதிய வார்ப்புகள் ஆகியன ஜெயகாந்தன் எழுதிய சிறுகதைத் தொகுப்புகள் ஆகும்.

---

**8. ஜெயகாந்தனின் குறும் புதினங்கள் யாவை ?**

**விடை :**

★ பிரளயம்

★ கைவிலங்கு

★ ரிஷிமூலம்

★ பிரம்ம உபதேசம்

★ யாருக்காக அழுதான் ?

★ கருணையினால் அல்ல

★ சினிமாவுக்குப் போன சித்தாளு ஆகியன ஜெயகாந்தனின் குறும்புதினங்கள் ஆகும்.

---

**9. ஜெயகாந்தன் எழுதிய புதினங்கள் யாவை ?**

**விடை :**

★ பாரீசுக்குப் போ !

★ சுந்தரகாண்டம்

★ உன்னைப் போல் ஒருவன்

★ கங்கை எங்கே போகிறாள்

★ ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்

★ இன்னும் ஒரு பெண்ணின் கதை

★ ஒருமனிதன் ஒரு வீடு ஒரு உலகம் ஆகியன ஜெயகாந்தனின் புதினங்கள் ஆகும்.

---

**10. ஜெயகாந்தனின் மொழிபெயர்ப்பு நூல்கள் எவை ?**

**விடை :**

★ வாழ்விக்க வந்த காந்தி (பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம்)

★ ஒரு கதாசிரியரின் கதை (முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு).

---

**11. ஜெயகாந்தன் "சிறுகதை மன்னன்" என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது ?**

**விடை :**

★ ஜெயகாந்தன் தான் வாழ்ந்த காலத்தில் சிக்கல்கள் பலவற்றை ஆராய, எடுத்துச் சொல்ல, தன் பார்வைக்கு உட்பட்ட தீர்ப்பைச் சொல்ல அவர் மேற்கொண்ட நடவடிக்கையே படைப்பு.

★ அவருடைய படைப்புகள் உணர்ச்சி சார்ந்த எதிர்வினைகளாக இருக்கின்றன.

★ இதுவே அவருக்குச் "சிறுகதை மன்னன்" என்ற பட்டத்தைத் தேடித்தந்தது.

---

## பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. ஜெயகாந்தன் தன் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் "தர்க்கத்திற்கு அப்பால்" கதை மாந்தர் வாயிலாக விளக்குக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 4)**

**விடை :**

★ ஜெயகாந்தன் தனக்கு ஏற்பட்ட தோல்வியைக் கொண்டாட எண்ணினார்.

★ பையில் இருக்கும் ஒரு வெள்ளி ரூபாய் நாணயத்தில் பன்னிரண்டனாவை ஊருக்கும் போகும் இரயில் கட்டணத்திற்கு ஒதுக்கிவிட்டு, இரண்டணாவைக் கொடுத்து சங்கரய்யர் கடையில் காபி குடித்தார்.

★ மீதமுள்ள இரண்டணாவை என்ன செய்யலாம் என்று யோசிக்கையில், தொடர்வண்டி நிலைய வாசலில் உட்கார்ந்திருந்த கண் பார்வையற்ற பிச்சைக்காரனுக்கு அவன் எதிரே வைத்திருந்த தட்டில் போட்டார்.

★ இரண்டணா பிச்சை பாத்திரத்தில் விழுந்ததை தடவி அறிந்த பிச்சைக்காரன் சாமி நீங்க போற வழியெல்லாம் புண்ணியமுண்டு என வாழ்த்துகிறான்.

★ டிக்கெட் எடுக்கக் கவுண்டரில் தன் ஊருக்கு டிக்கெட் கேட்க, அவர் செல்லவேண்டிய ஊருக்கு பதின்மூன்றணா என்பதை அறிந்தபோது சிந்திக்கிறார்.

★ பிச்சைக்காரனுக்குப் போட்ட இரண்டணாவில் ஓரணாவை எடுத்துவிடலாமா என எண்ணித் தயங்கி தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, ஓரணாவைப் போட்டு இரண்டணாவை எடுக்க முயன்றபோது பிச்சைக்காரன், சாமி இதுதான் தர்மமா ? யாரோ ஒரு புண்ணியவான் போட்ட இரண்டணாவை எடுத்துக்கிட்டு ஓரணாவைப் போடறியே! குருடனை ஏமாத்தாதே எனக் கூற ஓரணாவைப் போட்டுத் தர்மக் கணக்கில் மூன்றணா என எண்ணிக்கொண்டே அடுத்த ஸ்டேஷன் சென்று போகலாம் என நடக்கத் தொடங்கினார்.

★ முன்னால் சென்ற தான் போகவேண்டிய வண்டி விபத்துக்குள்ளானதை அறிகிறார்.

★ நான் எப்படித் தப்பித்தேன் ? தர்மம் என்னைக் காத்ததா ? என கதைமாந்தரின் மனப்போராட்டத்தை மிகவும் நுணுக்கமாக செயல் மூலம் காட்டியுள்ளார்.

★ சிக்கலை நம்மிடமே விட்டு யோசிக்கவைக்கவும் செய்கிறார்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன் குறித்து எழுதுக. (பெ.ஆ.க – 5)**

**விடை :**

★ எழுத்தாளர் ஒருவருடைய படைப்பு நோக்கத்தையும் படைப்பு பாங்கையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை.

★ தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.

---

**3. ஜெயகாந்தன் குறித்து கா. செல்லப்பனின் கருத்து யாது ?**

**விடை :**

★ நேர்கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை.

★ நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், நிமிர்ந்த ஞானச் செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள்– இவைகள்தாம் ஜெயகாந்தம் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள்.

★ "படிக்காத மேதை" என்று குறிப்பிடப்படும் அவர், முறையாகக் கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமின்றி, சோவியத் பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது மட்டுமின்றி, வாழ்க்கையையும் ஆழமாகப் படித்தவர், பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுறப் படைத்தவர் என்று ஜெயகாந்தனைக் குறித்து கா. செல்லப்பன் தன் கருத்தை முன்வைத்துள்ளார்.

---

**4. "இலக்கியம் படைப்பது தவம்" என்பதை ஜெயகாந்தன் மொழி கொண்டு விளக்குக.**
**விடை :**

★ பாரீசுக்குப் போ என்ற புதினத்தின் முன்னுரையில் ஜெயகாந்தன்,

"ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம்..... ஓர் எழுத்தாளன் ஆத்ம சுக்தியோடு எழுதுகிறானே அது கேவலம் பிழைப்போ அல்லது ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம். நீங்கள் கதை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம்" (1966) என்று எழுத்தாளர் இதில், "இலக்கியம் படைப்பது தவம்" என வலியுறுத்தியுள்ளார்.

---

**பகுதி – V ( ஐந்து மதிப்பெண்கள்)**

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. ஜெயகாந்தனின் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க. (பெ.ஆ.க – 2)**
**விடை :**

**சிறுகதை மன்னன்**

**ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழ்**

**தீபம் தமிழ் வார இதழ் சிறப்பு வெளியீடு**

**★ பிரபல எழுத்தாளர்கள் பார்வையில் ஜெயகாந்தன்**

**★ மலரில் ஜெயகாந்தனின் சிறப்புச் சிறுகதைகள்**

**★ புதினங்கள், பேட்டிகள் வண்ணப்புகைப்படங்களுடன் வெளிவருகிறது.**

**நாள் : 10 – 11– 2019 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.30 மணி**
**இடம் : பள்ளி அரங்கம், அரசு மேல்நிலைப்பள்ளி, கோவை**
**அனைவரும் வருக! தமிழ் அமுதம் பெறுக!**

---

**2. எழுத்தாளர் ஜெயகாந்தனின் "இன்னொரு முகம்" குறித்தும் அவரிடம் தொடுத்த கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதில்களுமாக, ஜெயகாந்தன் பற்றி நீங்கள் அறிந்தவற்றை விளக்குக. (பெ.ஆ.க – 6)**

**விடை :** எழுத்தாளர் ஜெயகாந்தனின் "இன்னொரு முகம்" குறித்து அவரிடம் தொடுத்த கேள்விகளும் அவர் கொடுத்த பதில்களும்:

உடனுக்குடன் அறிவார்ந்த எதிர்வினையாக ஜெயகாந்தன் அளிக்கும் பதில்களுக்கு முன்னால், கேள்விக்கணைகள் மழுங்கிவிடும்.

**சிறுகதைகளைப் படைப்பதில் தங்களுடைய தனித்தன்மை வாய்ந்த திறமையை வாசகர்கள் கொண்டாடுகிறார்களே, இத்துறையில் தாங்கள் கடைப்பிடிக்கும் நுணுக்கங்கள் யாவை ? (பேட்டி – திரு. கிருஷ்ணமணி, 1966)**

நுணுக்கமா ? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப்பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சனைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சனைகளே.

**உங்கள் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது ? மிகப்பெரிய சவால் எது ?**

மகத்தான சாதனை – பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தது. மிகப்பெரிய சவாலும் அதுவே.

**இந்தவயதில், தேசம் செல்லும் பாதை, எழுத்துலகத்தின் போக்கு இவற்றை எல்லாம் பார்க்கும் போது எப்படி இருக்கிறது ?**

காலந்தோறும் மாற்றங்களை நாம் பார்க்கிறோம். நாமும் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

**மொழிப்பயிற்சி**

**அ) விடைகளுக்கேற்ற வினா அமைக்க:**

**1. ஜெயகாந்தன் மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர்.**

**விடை :**

ஜெயகாந்தன் வாசக நெஞ்சங்களில் எவற்றை விதைத்தார் ?

**2. கலைப்பணி என்றாலே அதனுள் சமூகப்பார்வை அடக்கம்.**

**விடை :**

கலைப்பணியில் எவை அடக்கமாகும் ?

**ஆ) சந்திப்பிழை நீக்கி எழுதுக.**

**1. சமூக பார்வையோடு கலைபணி புரியவே நான் எழுதுகிறேன்.**

**விடை :** சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன்.

**2. பிரித்து பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்து சொல்கிறேன். அது சேர்ந்துதான் இருக்கிறது.**

**விடை :** பிரித்துப் பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்துச் சொல்கிறேன். அது சேர்ந்துதான் இருக்கிறது.

**இ) நிறுத்தற்குறியிட்டு எழுதுக:**

**1. சாமி நீங்க போறவழிக்கெல்லாம் புண்ணியமுண்டு என்று வாழ்த்தினான்.**

**விடை :**

"சாமி, போற வழிக்கெல்லாம் புண்ணியமுண்டு" என்று வாழ்த்தினான்.

**2. அது எப்படி உன்னுடையதாகும் நீ கொடுத்துவிட்டாய் அவன் வாழ்த்திவிட்டான்**

**விடை :**

"அது எப்படி உன்னுடையதாகும் ? நீ கொடுத்துவிட்டாய்; அவன் வாழ்த்திவிட்டான் !"

**ஈ) ஒருமைப் பன்மை பிழை நீக்கி எழுதுக.**

**1. ஜெயகாந்தனுக்கு வெற்றிகள் வாழ்க்கையில் நிறையவே சம்பவித்தது.**

**விடை :**

ஜெயகாந்தனுக்கு வெற்றிகள் வாழ்க்கையில் நிறையவே சம்பவித்தன.

**2. ஜெயகாந்தனின் கதைகள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.**

**விடை :**

ஜெயகாந்தனின் கதைகள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்

**1. வகுப்பு மாணவர்களின் படைப்புகளைத் திரட்டிக் குழுவாக இணைத்து கையெழுத்து இதழ் ஒன்றை உருவாக்குக.**

**விடை:**

### கையெழுத்து இதழ்

| | | |
|---|---|---|
| இதழின் பெயர் | : | **வசந்தம்** |
| இதழின் ஆசிரியர் | : | **லெட்சுமணன்,** தமிழாசிரியர் |
| துணை ஆசிரியர் | : | **பாலசுப்பிரமணி,** 10 ஆம் வகுப்பு மாணவன் |
| பிழை திருத்துபவர் | : | **மணிமாறன்,** 10 ஆம் வகுப்பு மாணவன் |

**கவிதை**

கவிதை என்பது
அழகான வரிகளை
சொல்வது அல்ல
ஆழமான வலிகளை
சொல்வது ஆகும்

**க.முத்து – 10.**அ

**பார்வை**

உளிகொண்டு
பார்வையில்
செதுக்குகின்றாய்
சிலையாகின்றேன்
நானும்..

**ஹரி – 10** இ

**முரண்**

கிள்ளிய பிறகும்
சிரித்தது முல்லை

**பாரதி – 10** உ

**நட்பு**

மனம்வெறுக்கும்
உறவுகள் மத்தியில்
மெய் சிலிர்க்க
வைக்கும் நட்பின்
அன்பு .............

**ரஞ்சிதா – 10** ஆ

**நம்பிக்கை**

நம்பிக்கை இழந்தவன்
வெல்வது கடினம்
நம்பிக்கையோடு
இருப்பவன் வீழ்வது
கடினம்....

**கவிதா – 10** எ

இயல் 9. ஆ

## கவிதைப் பேழை

### சித்தாளு (செய்யுள்)

(நாகூர் ரூமி)

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. "இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும்... ". – இவ்வடிகளில் கற்காலம் என்பது (பெ.ஆ.க – 2)**

அ) தலைவிதி ஆ) பழைய காலம்
இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

**விடை : ஈ) தலையில் கல் சுமப்பது**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. "சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது" எனக் கூறிய கவிஞர் .............**

அ) ஜெயகாந்தன் ஆ) அசோகமித்திரன்
இ) நாகூர்ரூமி ஈ) கா. செல்லப்பன்

**விடை: இ) நாகூர் ரூமி**

**3. "சித்தாளு" என்னும் கவிதையை எழுதியவர் ..............**

அ) திரு.வி.க ஆ) அசோகமித்திரன்
இ) ஜெயகாந்தன் ஈ) நாகூர்ரூமி

**விடை: ஈ) நாகூர்ரூமி**

**4. நாகூர்ரூமி யின் இயற்பெயர் ..............**

அ) முகம்மது மீரான் ஆ) முகம்மது இஸ்மாயில்
இ) முகம்மது ரஃபி ஈ) முகம்மது சலீம்

**விடை: இ) முகம்மது ரஃபி**

**5. "கப்பலுக்குப் போன மச்சான்" என்னும் நாவலை எழுதியவர் .............**

அ) கண்ணதாசன் ஆ) கா. செல்லப்பன்
இ) ஜெயகாந்தன் ஈ) நாகூர் ரூமி

**விடை: ஈ) நாகூர் ரூமி**

---

### பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "வாழ்வில் தலைக்கனம்", "தலைக்கனமே வாழ்வு" என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்.**

**விடை :**

★ உலகில் மனிதர்கள் பணம், பதவி, பட்டம் என்ற வகையில் ஆணவம் கொண்டு தலைக்கனம் பிடித்து வாழ்கின்றனர்.

★ சித்தாளு போன்ற பாரம் சுமப்போர் தலையில் சுமையைச் சுமந்து, தங்கள் வயிற்றுச் சோறுக்குப் பாடுபடுகின்றனர்.

★ இவர்களின் தலைக்கனமே வாழ்வாகிறது.

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. எவருடைய தலையெழுத்து கற்காலமானது ?**

**விடை :**

★ சித்தாள் பணி செய்பவர், பொற்காலமாக இருந்தாலும் தங்கள் தலையில் செங்கற்களைச் சுமக்க வேண்டியிருப்பதால், அவர் தலையில் எழுதியதோ கற்காலம்தான்.

---

**3. நாகூர் ரூமியின் இலக்கியப் பணியைக் கூறுக.**

**விடை :**

★ கவிதை, குறுநாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பலதளங்களில் இவர் தொடர்ந்து இயங்கி வருபவர்.

---

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. "சித்தாளின் மனச்சுமைகள்**
**செங்கற்கள் அறியாது" – இடஞ்சுட்டிப் பொருள் தருக. (பெ.ஆ.க – 6)**

**விடை :**

**இடம் :** "சித்தாளு" என்னும் கவிதை "நாகூர்ரூமி" அவர்கள் எழுதிய கவிதையில் இடம்பெற்றுள்ளது.

**பொருள் :**

★ நகர்ப்புறங்களில் அடுக்குமாடிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு கல், மண், ஆகியவற்றை படிக்கட்டுகள் வழியாக மேலே சுமந்து செல்பவர் சித்தாளு எனப்படுவர்.

★ எத்தனை உயரமான தளங்களுக்கும் கீழுள்ள பொருள்களைத் தலையில் சுமந்து செல்பவர்கள் இவர்களே.

★ இவர்கள் மனதில் ஆயிரம் சுமைகள் இருக்கும்.

★ பாரம் சுமக்கும் இவர்களின் உடல் வியர்வையில் நனையும்.

★ பல சமயங்களில் உடலில் அடிபட்டு இரத்தம் வரும். சோர்வு அடைவர்.

★ மனச்சுமையுடன் உடல் உபாதைகளும் உண்டு.

★ ஆனால் இவர்கள் சுமக்கும் செங்கல்லும் இவர்களின் மனச்சுமையை அறியப்போவதில்லை என விளக்குகின்றார்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. நாகூர் ரூமி – சிறுகுறிப்பு எழுதுக.**

**விடை :**

★ முகம்மது ரஃபி என்னும் இயற்பெயரைக் கொண்ட நாகூர்ரூமி தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்.

★ இவர் எண்பதுகளில் கணையாழி இதழில் எழுதத் தொடங்கியவர்.

★ கவிதை, குறுநாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பலதளங்களில் இவர் தொடர்ந்து இயங்கி வருபவர்.

★ மீட்சி, சுபமங்களா, புதிய பார்வை, குங்குமம், கொல்லிப்பாவை, இலக்கிய வெளிவட்டம், குமுதம் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன.

★ இதுவரை நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன.

★ மொழிபெயர்ப்புக் கவிதைகள், சிறுகதைத்தொகுதிகள் ஆகியவற்றுடன் "கப்பலுக்குப் போன மச்சான்" என்னும் நாவலையும் படைத்துள்ளார்.

---

## மொழிப்பயிற்சி

**அ) இலக்கணக்குறிப்பு :**

| | | |
|---|---|---|
| பொற்காலம் கற்காலம் | – | உவமைத்தொகைகள் |
| மனச்சுமை | – | ஏழாம் வேற்மைத்தொகை |
| தலைக்கனம் | – | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |

**ஆ) பகுபத உறுப்பிலக்கணம் :**

1. புலம்புவார் = புலம்பு + வ் + ஆர்
   - புலம்பு = பகுதி
   - வ் = எதிர்கால இடைநிலை
   - ஆர் = பலர்பால் வினைமுற்று விகுதி

2. அறியாது = அறி + ய் + ஆ + து
   - அறி = பகுதி
   - ய் = உடன்படுமெய்
   - ஆ = எதிர்மறை இடைநிலை
   - து = ஒன்றன்பால் வினைமுற்று விகுதி

---

## கற்பவை கற்றபின்

**1. மனிதநேயத்தை வெளிப்படுத்தும் புதுக்கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக்காட்டுக.**

**விடை:**

கற்சிலையென
அறியாது கைகள்
சிவந்திட காக்கையின்
எச்சில்களைத் துடைத்து
விடும் மழலையின்
மாளிகை குணத்தில்
மலர்கிறது மனித நேயம் !

தான் வாழும் வாழ்க்கை
நிரந்(தரம்) அற்றது
என உணர்ந்த பிறகும்
(தரம்) பிரித்து பழகும்
மனிதர்களுக்கு இடையில்
மரணித்து போகிறது
மனித நேயம்.........

பரண்மேல்
சரணடைந்த பழைய
புத்தகத்தைத் தூசு
தட்டலாம், மண்ணுக்குள்
புதைந்துவிட்ட
மனித நேயத்தை மீண்டும்
தட்டி எழுப்ப முடியுமா ?

# கவிதைப் பேழை

இயல் 9. இ

## தேம்பாவணி (செய்யுள்)

— வீரமாமுனிவர்

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. பூக்கையைக் குவித்துப்பூவே புரிவொடு காக்க என்று ..........., ............... வேண்டினார்.**

அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத் தமக்காக
இ) கருணையன் பூக்களுக்காக ஈ) எலிசபெத் பூமிக்காக (பெ.ஆ.க – 3)

**விடை : அ) கருணையன் எலிசபெத்துக்காக**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. கருணையன் என்பவர் ........... (பெ.ஆ.க – 1)**

அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு
இ) அருளப்பன் ஈ) சாந்தாசாகிப் **விடை : இ) அருளப்பன்**

**3. சொல்லுக்கேற்ற பொருளைப் பொருத்துக.**

**அ) கொம்பு – 1) கிளை**
**ஆ) புழை – 2) துளை**
**இ) கான் – 3) வாட**
**ஈ) தேம்ப – 4) காடு**

அ) 4, 1, 3, 2 ஆ) 1, 2, 4, 3
இ) 3, 1, 2, 4 ஈ) 2, 1, 3, 4 **விடை : ஆ) 1, 2, 4, 3**

**4. உய்முறை என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு...........**

அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை **விடை : அ) வினைத்தொகை**

**5. கிறிஸ்துவுக்கு முன் தோன்றியவர் யார் ?**

அ) ஆபிரகாம் ஆ) சூசையப்பர்
இ) சீமோன் பேதுரு ஈ) திருமுழுக்கு யோவான்

**விடை: ஈ) திருமுழுக்கு யோவான்**

**6. கருணையின் தாயார் யார் ?**

அ) மரியாள் ஆ) சாராள்
இ) எலிசபெத் ஈ) மகதலோனா **விடை: இ) எலிசபெத்**

**7. வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப்பை சந்தித்து உரையாட இரண்டே மாதங்களில் கற்ற மொழி**

அ) அரபி ஆ) இந்து
இ) உருது ஈ) பாரசீகம் **விடை: ஈ) பாரசீகம்**

**8. இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்தை அளித்த மன்னர் ...........**

அ) அலாவுதீன் ஆ) சந்தாசாகிப்
இ) ஆற்காடு நவாப் ஈ) சாகுல் ஹமீது **விடை: ஆ) சந்தாசாகிப்**

**9. இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்துக்கு உரியவர் ...........**

அ) சூசையப்பர் ஆ) வீரமாமுனிவர்
இ) யோவான் ஈ) சூசை அந்தோணி **விடை: ஆ) வீரமாமுனிவர்**

**10. தேம்பா + அணி என்பதன் பொருள்..........**

அ) தேன்மாலை ஆ) வாடாத மாலை
இ) சூடாத மாலை ஈ) வாடிய மாலை **விடை: ஆ) வாடாத மாலை**

**11. சூசையப்பர் என்னும் யோசேப்பினைப் (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல்..........**

அ) ஞானஉலா ஆ) இரட்சண்ய யாத்ரீகம்
இ) சீறாப்புராணம் ஈ) தேம்பாவணி

**விடை: ஈ) தேம்பாவணி**

**பின்வரும் பாடலைப்படித்து வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடையளி**

***விரிந்தன கொம்பில் கொய்த***
***வீயென உள்ளம் வாட***
***எரிந்தன நுதிநச்சு அம்புண்டு***
***இரும்புழைப் புண்போல் நோகப்***
***பிரிந்தன புள்ளின் கானில்***
***பெரிதழுது இரங்கித் தேம்பச்***
***சரிந்தன அசும்பில் செல்லும்***
***தடவிலா தனித்தேன் அந்தோ!***

**12. இப்பாடல் இடம்பெற்ற நூல்............**

அ) இரட்சணிய யாத்திரிகம் ஆ) சிலப்பதிகாரம்
இ) தேம்பாவணி ஈ) சீறாப்புராணம் **விடை: இ) தேம்பாவணி**

**13. இப்பாடலில் இடம்பெறும் அடியெதுகைகள் ...........**

அ) விரிந்தன, எரிந்தன, பிரிந்தன, சரிந்தன ஆ) விரிந்தன, வீயென
இ) பிரிந்தன, பெரிதழுது ஈ) பிரிந்தன, புள்ளின்

**விடை: அ) விரிந்தன, எரிந்தன, பிரிந்தன, சரிந்தன**

**14. இப்பாடலின் ஆசிரியர் யார் ?**

அ) பாரதியார் ஆ) வீரமாமுனிவர்
இ) பாரதிதாசன் ஈ) நக்கீரனார் **விடை: ஆ) வீரமாமுனிவர்**

**15. அசும்பு என்பதன் பொருள்**

அ) அசைந்து ஆ) விலக்கி
இ) மாலை ஈ) நிலம் **விடை: ஈ) நிலம்**

**16. கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தை யார் ?**

அ) தாவீது ஆ) ஈசாக்கு
இ) ஆபிரகாம் ஈ) சூசையப்பர் **விடை: ஈ) சூசையப்பர்**

**17. தேம்பாவணியின் பாட்டுடைத் தலைவர் யார் ?**

அ) அன்னை மரியாள் ஆ) சூசையப்பர்
இ) இயேசுபிரான் ஈ) ஆபிரகாம் **விடை: ஆ) சூசையப்பர்**

**18. தேம்பாவணி நூலில் ............ காண்டங்கள் உள்ளன.**

அ) இரண்டு ஆ) மூன்று
இ) நான்கு ஈ) ஐந்து **விடை: ஆ) மூன்று**

**19. தேம்பாவணி நூலில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை............**

அ) 3610 ஆ) 3617
இ) 3615 ஈ) 3613 **விடை: இ) 3615**

**20. தேம்பாவணி ............ படலங்களைக் கொண்டது**

அ) 30 ஆ) 38
இ) 35 ஈ) 36 **விடை: ஈ) 36**

**21. தேம்பாவணி படைக்கப்பட்ட நூற்றாண்டு**

அ) 15 ஆ) 16
இ) 17 ஈ) 18 **விடை: இ) 17**

**22. தேம்பாவணி நூலை இயற்றியவர்............**

அ) கால்டுவெல் ஆ) ஜி.யு. போப்
இ) வீரமாமுனிவர் ஈ) கபிலர் **விடை: இ) வீரமாமுனிவர்**

**23. தமிழின்............ அகராதி சதுரகிரி ஆகும்.**

அ) மூன்றாம் ஆ) நான்காம்
இ) முதல் ஈ) இரண்டாம் **விடை: இ) முதல்**

## பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது ? (பெ.ஆ.க – 1)**

**விடை :**

★ "இளம்பயிர் வளர்ந்து நெல்மணியாய் முதிர்வதற்கு முன் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்தது போல்" என்பது உவமையின் பொருள்.

★ அதுபோல் கருணையன் வளர்ந்து ஆளாகும் முன்னரே, தாயை இழந்து வாடுகிறான் என்பதை உணர்த்த இவ்வுவமை கூறப்பட்டுள்ளது.

---

**குறுவினா : (கூடுதல் வினா)**

**2. கருணையன் பூமித்தாயிடம் வேண்டியது என்ன ?**

**விடை :**

★ தன் மலர்போன்ற கைகளைக் குவித்துக் கருணையன், "பூமித்தாயே ! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக " என்று வேண்டினான்.

---

**3. கருணையன் தன் அன்னையை எவ்வாறு அடக்கம் செய்தான் ?**

**விடை :**

★ கருணையன் குழியுனுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினான்.

★ இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன் மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒருசேரப் பொழிந்தான் கருணையன்.

---

**4. கருணையன் தன் அன்னையோடு எவ்வாறு வாழ்ந்ததாகக் கூறுகிறான் ?**

**விடை :**

★ "என் தாய், தன் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழை நீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலையென அசைந்து, அழகுற வாழ்ந்தேன்" எனக் கருணையன் கூறுகிறான்.

---

**5. அன்னையை இழந்த கருணையன் எவ்வாறு வாடுவதாகக் கூறுகிறான் ?**

**விடை :**

★ "என் மனம் பரந்துநின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறது " என்று கூறுகிறான்.

---

**6. தன் துயரம் எத்தகையது எனக் கருணையன் கூறுகிறான் ?**

**விடை :**

★ "தீயையும், நஞ்சையும் முனையில்கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம்" எனக் கருணையன் கூறுகிறான்.

---

**7. கருணையன் மார்பில் அணிந்த மாலையின் சிறப்பு யாது ?**

**விடை :**

★ நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்தது போன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன் என அவன் அணிந்த மாலையின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

---

**8. கருணையன் புலம்பலைக் கேட்டுக் காட்டில் கூச்சலிட்டவை எவை ?**

**விடை :**

★ தேன் மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள மணம்வீசும் மலர்களும் மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

---

**9. இஸ்மத் சன்னியாசி – விளக்கம் தருக.**

**விடை :**

★ வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக்கொண்டார்.

★ இவருடைய எளிமையையும், துறவையும் கண்டு வியந்த சந்தாசாகிப் இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தார்.

★ இந்தப் பாரசீகச் சொல்லுக்கு தூய துறவி என்று பொருள்.

---

**10. தேம்பாவணி – பொருள் கூறுக.**

**விடை :**

★ தேம்பாவணி = தேம்பா + அணி எனப்பிரித்தால் வாடாத மாலை எனப்பொருள் படும்.

★ தேம்பாவணி = தேன் + பா + அணி எனப்பிரித்தால் தேன்போன்ற இனிய பாக்களால் ஆனமாலை எனப் பொருள் படும்.

---

**11. வீரமாமுனிவர் – குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ 17 ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது தேம்பாவணி.

★ இக்காப்பியத்தை இயற்றியவர் வீரமாமுனிவர்.

★ இவரது இயற்பெயர் கான்சுடான்சு சோசப் பெசுகி.

★ தமிழின் முதல் அகராதியான சதுரகராதி, தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்), சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள் , பரமார்த்தக்குரு கதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றை இவர் படைத்துள்ளார்.

---

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?**

**விடை :**

★ நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன்.

★ நினைத்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்.

★ உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக்கொணரும் வழிவகைகளை அறியேன்.

★ காட்டில் செல்வதற்கான வழிவகைகளையும் அறியேன்.

★ என்னைத் தவிக்க விட்டுவிட்டு என் தாய் தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே ! என்று கருணையன் கூறுகிறார்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. தேம்பாவணி – நூல்குறிப்பு எழுதுக.**

**விடை :**

★ தேம்பாவணி = தேம்பா + அணி எனப்பிரித்து வாடாத மாலை என்றும்,
தேம்பாவணி = தேன் + பா + அணி எனப்பிரித்துத் தேன்போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் இந்நூலுக்குப் பொருள்கொள்ளப்படுகின்றது.

★ கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினைப் (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் இது.

★ இப்பெருங்காப்பியம் **3** காண்டங்களையும் **36** படலங்களையும் உள்ளடக்கி, **3615** பாடல்களைக் கொண்டுள்ளது.

## பகுதி – IV( ஐந்து மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள்போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க. (பெ.ஆ.க – 3)**

**விடை :**

1. கருணையன், தன் மலர்போன்ற கையைக் குவித்து, "பூமித்தாயே ! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக" என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினான். இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்துவைத்து, பயனுள்ள வாழ்க்கை நடத்திய அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன் மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒரு சேரப்பொழிந்தான்.

2. "என் தாய், தன் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலையென அசைந்து, அழகுற வாழ்ந்தேன். ஐயோ ! இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணி போன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்துவிட்டதைப் போல நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே !"

3. என் மனம் பரந்துநின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப் போல வாடுகிறது. தீயையும், நஞ்சையும் முனையில்கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப் பிரிந்த ஒரு பறவையைப் போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன். சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன் .

4. நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன். நினைத்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன். உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக்கொணரும் வழிவகைகளையும் அறியேன். காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன். என் தாய் தன்கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்க விட்டுவிட்டு என் தாய் தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே !

5. நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்தது போன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன் இவ்வாறு புலம்பிக் கூறினான். அதுகேட்டுப்பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள மணம்வீசும் மலர்களும் மலர்ந்த சுனை தோறும் உள்ள பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

---

### மொழிப்பயிற்சி

**அ) சொல்லும் பொருளும் :**

| | | | |
|---|---|---|---|
| சேக்கை | படுக்கை | இளங்கூழ் | இளம்பயிர் |
| யாக்கை | உடல் | தயங்கி | அசைந்து |
| பிணித்து | கட்டி | காய்ந்தேன் | வருந்தினேன் |
| வாய்ந்த | பயனுள்ள | கொம்பு | கிளை |
| புழை | துளை | கான் | காடு |
| தேம்ப | வாட | அசும்பு | நிலம் |
| உய்முறை | வாழும் வழி | ஓர்ந்து | நினைத்து |
| கடிந்து | விலக்கி | உவமணி | மணமலர் |
| படலை | மாலை | துணர் | மலர்கள் |

**ஆ) இலக்கணக்குறிப்பு :**

| | |
|---|---|
| காக்கென்று | காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம் |
| கணீர் | கண்ணீர் என்பதன் இடைக்குறை |
| காய்மணி, உய்முறை, செய்முறை | வினைத்தொகைகள் |
| மெய்முறை | வேற்றுமைத்தொகை |
| கைமுறை | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை |

**இ) பகுபத உறுப்பிலக்கணம் :**

1. அறியேன் = அறி + ய் + ஆ + ஏன் **(அ.மா.வி) (பெ.ஆ.க – 5)**
   - அறி = பகுதி
   - ய் = சந்தி
   - ஆ = எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது
   - ஏன் = தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

2. ஒலித்து = ஒலி + த் + த் + உ **(பெ.ஆ.க – 6)**
   - ஒலி = பகுதி
   - த் = சந்தி
   - த் = இறந்தகால இடைநிலை
   - உ = வினையெச்ச விகுதி

---

**ஈ) பாடலைப்படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளி**

***நவமணி வடக்க யில்போல்***
***நல்லறப் படலைப் பூட்டும்***
***தவமணி மார்பன் சொன்ன***
***தன்னிசைக்கு இசைகள் பாடத்***
***துவமணி மரங்கள் தோறும்***
***துணர் அணிச் சுனைகள் தோறும்***
***உவமணி கானம்கொல் என்று***
***ஒலித்து அழுவ போன்றே***

**1) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?**
**விடை :** தேம்பாவணி

**2) இப்பாடலின் ஆசிரியர் யார் ?**
**விடை :** வீரமாமுனிவர்

**3) இப்பாடலில் பயின்றுவந்துள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.**
**விடை :** நவமணி – தவமணி – துவமணி – உவமணி

**4) உவமணி, படலை, துணர் – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே.........**
**விடை :** மணமலர், மாலை, மலர்கள்

**5) நல்லற – இலக்கணக்குறிப்பு தருக**
**விடை :** பண்புத்தொகை

**6) இப்பாடலில் பயின்றுவந்துள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.**
**விடை :** தவமணி – துவமணி

---

**கற்பவை கற்றபின்**

**1. வீரமாமுனிவர் தமிழகத்தில் தங்கிப் பணிசெய்த இடங்களைப்பற்றியும் அங்கு அவர் ஆற்றிய தமிழ்ப் பணிகளைப்பற்றியும் நூலகத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டுக.**

**விடை:**

**வீரமாமுனிவர் :**

வீரமாமுனிவர் இத்தாலியில் பிறந்தார். அவர் இயற்பெயர் கான்சுடான்சு சோசப் பெசுகி ஆகும். இவர் ஆங்கிலம், எபிரேயம், கிரேக்கம் ஆகிய மொழிகளை அறிந்திருந்தார். தமிழ், தெலுங்கு, வடமொழி ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.

அம்பலக்காடு, மதுரை, காமநாயக்கன்பட்டி மற்றும் திருநெல்வேலி போன்ற இடங்களில் தங்கி இறைப்பணியோடு தமிழ்ப்பணியும் செய்தார்.

**தமிழ்த் தொண்டுகள் :**

வீரமாமுனிவர் தமிழில் முதன்முதலாக, "சதுரகராதி" என்னும் "அகரமுதலியை" வெளியிட்டார். தேம்பாவணி என்னும் கிறித்துவக் காப்பியத்தை இயற்றியுள்ளார். தமிழ் எழுத்து சீர்திருத்தத்தை மேற்கொண்டார். தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலைப் படைத்துள்ளார். கலம்பகம்,

அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களை இயற்றியுள்ளார்."பரமார்த்த குரு கதை" என்னும் நகைச்சுவை நூலை எழுதியுள்ளார்.

**2. கண்ணதாசனின் இயேசு காவியத்தில் மலைப்பொழிவுப் பகுதியைப் படித்து அதில் வரும் அறக்கருத்துகளை எழுதுக.**

**விடை:**

1. இரக்கம் உடையவர்களுக்கே இரக்கம் கிடைக்கும்.
2. அமைதி என்னும் சாந்தம் உடையவர்கள் விண்ணக வாழ்வை அடைவார்கள்.
3. இரக்கம் உடையோரே பேறுபெற்றவர்கள்.
4. பொய் சத்தியத்தை நீக்கி தீமைகள் செய்வதை விட்டு விலக வேண்டும்.
5. மன்னித்துவிட்டால், மன்னிக்கப்படுவீர்கள்.
6. கொடுங்கள் ; அதுபோல் உங்களுக்குக் கொடுக்கப்படும்.
7. பொறுமை மண்ணையும், விண்ணையும் ஆட்சி செய்யும்.

## விரிவானம்

**இயல் 9. ஈ**

**ஒருவன் இருக்கிறான் – கு. அழகிரிசாமி (துணைப்பாடம்)**

### பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**1. ஒருவன் இருக்கிறான் கதையின் ஆசிரியர் யார் ?**

அ) ப. சிங்காரம் ஆ) நாகூர் ரூபி
இ) கமலாலயன் ஈ) கு. அழகிரிசாமி **விடை : ஈ) கு. அழகிரிசாமி**

**2. கரிசல் எழுத்தாளர்களின் வரிசையில் மூத்தவர்**

அ) கு. அழகிரிசாமி ஆ) ப. சிங்காரம்
இ) கு.ப.ராஜகோபாலன் ஈ) சோ. தர்மன் **விடை : அ) கு. அழகிரிசாமி**

**3. "ஆழங்கானத்து அஞ்சுவர இறுத்து அரசு படஅமர் உழக்கி" –இவ்வடி இடம்பெற்ற நூல்**

அ) சீவகசிந்தாமணி ஆ) நாலடியார்
இ) நீதிவெண்பா ஈ) மதுரைக்காஞ்சி **விடை : ஈ) மதுரைக் காஞ்சி**

**4. ஆலங்கானம் அமைந்துள்ள மாவட்டம்......**

அ) திருவாரூர் ஆ) காஞ்சிபுரம்
இ) நாமக்கல் ஈ) தர்மபுரி **விடை : அ) திருவாரூர்**

---

### பகுதி –V (எட்டு மதிப்பெண்கள்)

**நெடுவினா : (பாடநூல் வினா)**

**1. கு. அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக. (அ.மா.வி) (பெ.ஆ.க – 3)**

**விடை:**

**மனிதநேயம் கொண்ட கதைமாந்தர் – வீரப்பன் :**

குப்புசாமி என்பவன் காஞ்சிபுரத்தில் மாமா வீட்டில் தங்கி ஒரு சைக்கிள் ரிப்பேர் கடையில் தினக்கூலிக்கு வேலை பார்த்து வருகிறான். இவனது உற்ற நண்பன் தான் விறகுக்கடையில் வேலை பார்க்கும் வீரப்பன். காஞ்சிபுரத்தில் இரண்டு கடைகளும் நேர் எதிரே இருந்தன. குப்புசாமிக்குத் தாய் தந்தை கிடையாது. உறவு என்று சொல்லிக் கொள்வதற்கு இருவர் இருந்தனர். ஒருவர் காஞ்சிபுரத்தில் உள்ள மாமா, இன்னொருவர் சென்னையில் உள்ள சித்தி மட்டுமே. குப்புசாமிக்கு வயிற்றில் வலி வந்து ஆறேழு மாதங்களாக வேலைக்குப் போகவில்லை. வேலையும் இல்லை. சம்பாத்தியமும் இல்லை. நோயும் இருந்ததால் தாய்மாமன் வீட்டிலிருந்தே விரட்டப்படுகிறான்.

குப்புசாமி நோய்வாய்ப்பட்டு விரட்டப்பட்டபோது வீரப்பன் தன் வீட்டிற்கு அழைத்து வந்து சாப்பாடு போடுவான். தான் ஏழையாக இருந்தாலும், தன் நண்பனுக்கு கடன் வாங்கி உதவி செய்வான்.

குப்புசாமி அங்கிருந்து சித்தியை நம்பிச் சென்னைக்கு வைத்தியம் பார்ப்பதற்கு வருகிறான். அங்கு ஒருவரும் மனமுவந்து அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. அவன் வீட்டை விட்டுத் தொலைந்தால் நல்லது என்று கருதி அவனது சித்தப்பா தங்கவேலு மருத்துவமனையில் சேர்த்துவிடுகிறார்.

இதற்கிடையில் வீரப்பன் ஆறுமுகம் என்பவனிடம் ஒரு கடிதமும், மூன்று ரூபாயும் கொடுத்து அனுப்புகிறான்.

**அந்தக் கடிதத்தில் :**

"என் உயிர் நண்பன் குப்புசாமிக்கு எழுதிக்கொண்டது. நீ இங்கிருந்து போனதிலிருந்து என் உயிர் இங்கே இல்லை. சதா உன் ஞாபகமாகத்தான் இருக்கிறேன். கடவுள் அருளால் நீ உடம்பு சௌக்கியமாகி வரவேண்டும் என்று தினமும் ஒருதடவை கோவிலுக்குப் போய் கும்பிடுகிறேன். எனக்கு இப்போது வேலை இல்லை. கொஞ்ச நாட்களாக வருமானம் இல்லாமல் இருக்கிறேன். நேற்று கட்டைதொட்டி ஆறுமுகம் பட்டணம் போவதாகச் சொன்னான். உடனே, ஓடி ஒருவரிடம் மூன்று ரூபாய் கடன் வாங்கி அவனிடம் கொடுத்தனுப்பியிருக்கிறேன். நானே வரலாம் என்று பார்த்தேன். வந்தால் இந்த மூன்று ரூபாயும் பஸ்ஸீக்குச் செலவாகிவிடும். உனக்குச் சமயத்தில் உதவியாக இருக்கும் என நினைத்து, நான் ரூபாயைச் செலவழித்துக்கொண்டு வராமல் ஆறுமுகத்திடம் கொடுத்தனுப்பியிருக்கிறேன். இன்னோர் இடத்திலும் பணம் கேட்டிருக்கிறேன். கிடைத்தால் நான் சீக்கிரம் பார்க்க வருவேன். உன்னைப் பார்த்தால்தான் எனக்கு சோறு சோறாக இருக்கும்.

உன் நண்பன்<br>
க. வீரப்பன்<br>
காஞ்சிபுரம்

**முடிவுரை :**

உலகமே வெறுத்து ஒதுக்கிய குப்புசாமியிடம் உயிரையே வைத்து ஏழ்மையிலும் உதவும் மனப்பான்மை , சம்பளமே இல்லாத பொழுதும் கடன் வாங்கி உதவும் கருணை, உறவினரால் ஒதுக்கப்பட்ட பொழுதும் உற்ற நண்பனாக விளங்கிய வீரப்பனை அழகிரிசாமி சிறந்த மனிதநேயம் கொண்ட கதை மாந்தராகப் படைத்துள்ளார்.

## கற்பவை கற்றபின்

**1. சமூகத்தொண்டு செய்து உயர்ந்த விருதுகளைப் பெற்ற ஆளுமைகளைப் பட்டியலிட்டு அவர்கள் செய்த சமூகப்பணி குறித்து கலந்துரையாடுக.**

**விடை:**

| | | |
|---|---|---|
| 1. அன்னை தெரசா | 2. அப்துல்கலாம் | 3. மகாத்மா காந்தி |
| 4. ஜவஹர்லால் நேரு | 5. வல்லபாய் படேல் | 6. லால்பகதூர் சாஸ்திரி |
| 7. இந்திரா காந்தி | 8. பாரத ரத்னா எம்.ஜி.ஆர். | 9. காமராசர் |

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா !

**தமிழாசிரியர்** : வணக்கம் மாணவர்களே ! அமருங்கள். இன்று சமூகத் தொண்டு செய்தவர்கள் பற்றிக் கலந்துரையாடல் நிகழ்த்தலாமா ?

**மாணவர்கள்** : சரிங்க ஐயா ! நாங்கள் தயார்.

**தமிழாசிரியர்** : புனிதர் பட்டம் பெற்ற அன்னை தெரசா அவர்கள் ஏழை எளியோர்க்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், அனாதைகளுக்கும் தொண்டாற்றிப் பெருமை பெற்றவர். 1980 ஆம் ஆண்டு இந்தியாவின் உயர்ந்த விருதான பாரத ரத்னா விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

**கவிதா** : அப்துல் கலாம் அவர்கள் தமிழகத்தின் கடைக்கோடியில் பிறந்து இன்று கோடிக்கணக்கான இளைஞர்கள் மற்றும் மக்களின் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஏவுகணை நாயகன், நாடு வல்லரசாகக் கனவு காணத் தூண்டியவராவார்.

**தமிழாசிரியர்** : மகாத்மா காந்தி அவர்கள் அகிம்சை வழியில் சுதந்திரம் பெற்றுத்தந்தார். நாட்டின் ஒற்றுமைக்குப் பாடுபட்டவர்.

**சந்தியா** : தமிழகத்தில் "கல்விக்கண் திறந்த காமராசர்" அவர்கள் சாதி மத வேறுபாடின்றி அனைவரும் கல்வி கற்க பல பள்ளிக்கூடங்களைத் திறந்தார். பாரத ரத்னா விருதையும் பெற்றவர். பெருந்தலைவர் என அன்போடு அழைக்கப்பட்டார்.

**தமிழாசிரியர்** : வல்லபாய் படேல் அவர்கள் ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்கப் பாடுபட்டவர்.

**2. "அகநக நட்பதே நட்பு" – என்ற தலைப்பில் நண்பர்களுக்கு உதவிய சூழல்களைச் சுவைபட எழுதுக.**

**விடை :**

பரந்த உலகில் பெற்றோர், உறவினர் ஏன் கல்வியறிவும் செல்வமும் இல்லாமல்கூட வாழ முடியும். ஆனால் உயிர்காக்கும் "தோழன்"(நண்பன்) இல்லாமல் எவரும் (வாழ முடியாது) இருக்கவும் முடியாது.

உள்ளம் மகிழும்படி அன்புகொண்டு நட்பு செய்வதே தூய நட்பாகும்.

நானும் என் நண்பனும் ஒரே பொறியியல் கல்லூரியில் படித்து வந்தோம். அச்சமயத்தில்தான் நாங்கள் புதியதாக வீடு ஒன்று கட்டினோம். புதிய வீடு கட்டியதால் பணத்திற்குக் கொஞ்சம் சிரமமாக இருந்தது. அச்சமயம் கல்லூரியில் தேர்வுக்கட்டணம் கட்ட ரூ. 2000 தேவைப்பட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருக்கும் போது என் அம்மா, கையில் இருந்த வளையலை அடகுவைத்து தேர்வுக் கட்டணம் கட்டுமாறு கூறினார். என் நிலைமையை விட என் நண்பனின் நிலை மிகவும் பரிதாபமானது. அவனுக்கும் சேர்த்து ரூ.4000 க்கு நகையை அடகு வைத்துத் தேர்வுக் கட்டணம் கட்டினோம். அவ்வாண்டு எழுதிய தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் அதிக மதிப்பெண்களுடன் நானும் என் உயிர் நண்பனும் தேர்ச்சி பெற்றோம். உண்மையான நட்பிற்கு எல்லையே கிடையாது.

இயல்
9. உ

கற்கண்டு

## அணிகள்
(இலக்கணம்)

பகுதி – I ( ஒரு மதிப்பெண்)

**கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**பலவுள் தெரிக : (பாடநூல் வினா)**

**1. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி ..................**
**(அ.மா.வி)(பெ.ஆ.க–4)**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
இ) உருவகம் ஈ) தீவகம் **விடை : இ) உருவகம்**

---

**பலவுள் தெரிக : (கூடுதல் வினா)**

**2. தீவகம் என்ற சொல்லின் பொருள்..............**
அ) விளக்கு ஆ) பொன்
இ) வெளிச்சம் ஈ) விளக்கம் **விடை: அ) விளக்கு**

**4. சொல்லோடு பொருளைப் பொருத்துக.**
**அ) தெவ் – 1) வில்**
**ஆ) சிலை – 2) பறவை**
**இ) சேந்தன – 3) பகைமை**
**ஈ) புள் – 4) சிவந்தன**
அ) 1, 3, 4, 2 ஆ) 2, 4, 3, 1
இ) 4, 2, 1, 3 ஈ) 3, 1, 4, 2 **விடை: ஈ) 3, 1, 4, 2**

**5. இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன்குறிப்பை ஏற்றிக் கூறுவது**
அ) தீவக அணி ஆ) நிரல்நிறை அணி
இ) தன்மையணி ஈ) தற்குறிப்பேற்ற அணி **விடை: ஈ) தற்குறிப்பேற்ற அணி**

**6. ஒரு சொல் அச்செய்யுளில் உள்ளபல இடங்களிலும் உள்ள சொற்களோடு பொருந்துவது**
அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) தீவக அணி
இ) நிரல்நிறை அணி ஈ) தன்மையணி **விடை: ஆ) தீவக அணி**

**7. தீவக அணியின் வகைகள் .............. ஆகும்.**
அ) இரண்டு ஆ) நான்கு
இ) மூன்று ஈ) ஐந்து **விடை: இ) மூன்று**

**8. சொல்லையும் பொருளையும் அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள்கொள்வது**
அ) நிரல்நிறை அணி ஆ) தன்மைநவிற்சி அணி
இ) தீவக அணி ஈ) தற்குறிப்பேற்ற அணி **விடை: அ) நிரல்நிறை அணி**

**9. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணி..............**
அ) தீவக அணி ஆ) நிரல்நிரை அணி
இ) தற்குறிப்பேற்ற அணி ஈ) தன்மை அணி **விடை: ஆ) நிரல்நிரை அணி**

**10. இயல்பு நவிற்சி அணி என்பதன் மற்றொரு பெயர்..............**
அ) நிரல்நிரையணி ஆ) உவமையணி
இ) தீவக அணி ஈ) தன்மையணி **விடை: ஈ) தன்மையணி**

**11. இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத்தன்மையினை உரிய சொற்களை அமைத்துப்பாடுவது**
அ) தன்மையணி ஆ) நிரல்நிரையணி
இ) தீவக அணி ஈ) தற்குறிப்பேற்ற அணி **விடை: அ) தன்மையணி**

12. " எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்
சொன்முறைதொடுப்பது தன்மையாகும்"–இவ்வடியில் பயின்று வந்துள்ள அணி
அ) தன்மைநவிற்றி அணி ஆ) நிரல்நிரையணி
இ) தீவக அணி ஈ) தற்குறிப்பேற்ற அணி **விடை: அ) தன்மைநவிற்சி அணி**

**பகுதி – II ( இரண்டு மதிப்பெண்கள்)**

**குறுவினா : (பாடநூல் வினா)**

**1. தீவக அணியின் வகைகள் யாவை ? (பெ.ஆ.க–5)**

**விடை :**

★ முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் எனத் தீவக அணி மூன்று வகைப்படும்.

**2. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது ? (பெ.ஆ.க–3)**

**விடை :**

★ இக்குறளில் சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி, அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்ளுமாறு கூறியுள்ளதால், நிரல்நிரை அணி அமைந்துள்ளது.

★ இல்வாழ்க்கையில் அன்பே பண்பு, அறமே பயன்என நிரல்பட வைத்துக் கூறியுள்ளார் வள்ளுவர்.

**குறுவினா : (கூடுதல் வினா)**

**3. அணிகள் என்றால் என்ன ?**

**விடை :**

★ மக்களுக்கு அழகு சேர்ப்பன அணிகலன்கள்.

★ அதுபோன்று செய்யுள்களுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவன அணிகள்.

**4. தன்மையணியின் வகைகள் யாவை ?**

**விடை :**

★ தன்மையணி நான்கு வகைப்படும். அவை,

★ பொருள் தன்மையணி, குணத் தன்மையணி, சாதித் தன்மையணி, தொழிற் தன்மையணி என்பதாகும்.

**பகுதி – III ( மூன்று மதிப்பெண்கள்)**

**சிறுவினா : (பாடநூல் வினா)**

**1. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக. (பெ.ஆ.க–2)**

**விடை :**

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

**எ.கா :**

*"போருழந் தெடுத்த ஆ ரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட "*

**பாடலின் பொருள் :**

கோட்டை மதில்மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல கை காட்டியது என்பது பொருள்.

**அணிப்பொருத்தம் :**

கோவலுனும் கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால், இளங்கோவடிகள் கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக்கருதி அக்கொடிகள் கையை அசைத்து, "இம் மதுரைக்குள் வரவேண்டா"

என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும்.

---

**சிறுவினா : (கூடுதல் வினா)**

**2. தீவக அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (பெ.ஆ.க–1, 6)**

**விடை : தீவக அணி :**

தீவகம் என்னும் சொல்லுக்கு "விளக்கு" என்று பொருள்.

ஓர் அறையில் ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.

**வகைகள் :**

இது முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என்னும் மூன்று வகையாக வரும்.

**எ.கா :**

*சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்*
*ஏந்து தடந்தோள், இழிகுருதி – பாய்ந்து*
*திசை அனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்,*
*மிசை அனைத்தும் புள்குலமும் வீழ்ந்து*

(சேந்தன – சிவந்தன ; தெவ் – பகைமை ; சிலை – வில் ; மிசை – மேலே ; புள் – பறவை;)

**பாடலின் பொருள் :**

அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன; அவை சிவந்த அளவில் பகை மன்னர்களுடைய பெரிய தோள்கள் சிவந்தன ; குருதி பாய்ந்து திசைகள் அனைத்தும் சிவந்தன ; வலிய வில்லால் எய்யப்பட்ட அம்புகளும் சிவந்தன ; குருதி மேலே வீழ்தலால் பறவைக்கூட்டங்கள் யாவும் சிவந்தன.

**அணிப்பொருத்தம் :**

வேந்தன் கண் சேந்தன
தெவ்வேந்தர் தோள் சேந்தன
குருதி பாய்ந்து திசை அனைத்தும் சேந்தன
அம்பும் சேந்தன
புள் குலம் வீழ்ந்து
மிசை அனைத்தும் சேந்தன

இவ்வாறாக முதலில் நிற்கும் "சேந்தன" (சிவந்தன) என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப்பொருள் தருகிறது. அதனால் இது தீவக அணியாயிற்று.

---

**3. நிரல்நிறை அணியை எடுத்துக் காட்டுடன் விளக்குக. (பெ.ஆ.க – 4)**

**விடை :**

நிரல் = வரிசை ; நிறை = நிறுத்துதல்.

சொல்லையும், பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள்கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

**எ.கா :**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. – குறள்: 45

**பாடலின் பொருள் :**

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

**அணிப்பொருத்தம் :**

இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணி ஆகும்.

**4. தன்மையணியை குறித்து எழுதுக. (அ.மா.வி) (பெ.ஆ.க–3)**

**விடை : தன்மையணி :**

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும். இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர்.இவ்வணி நான்கு வகைப்படும். பொருள் தன்மையணி, குணத் தன்மையணி, சாதித் தன்மையணி, தொழிற் தன்மையணி என்பதாகும்.

**எ.கா :**

*மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்*
*கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக் கோன்*
*கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்*
*உண்டளவே தோற்றான் உயிர்.*

**பொருள் :**

உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை நதி பாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான். அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிரை நீத்தான்.

**அணிப்பொருத்தம் :**

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மை நவிற்சியணி எனப்படும்.

## கற்பவை கற்றபின்

**1. முன்வகுப்புகளில் கற்ற அணிகளை எடுத்துக்காட்டுகளுடன் தொகுத்து ஒப்படைவு ஒன்றை உருவாக்குக.**

**விடை :**

**அ) உவமையணி :**

உவமை ஒரு வாக்கியமாகவும், உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமைந்து போல என்ற உவம உருபு பெற்றுவருவது உவமையணி ஆகும்.

எ.கா : நச்சப்படாதவன் செல்வம் நடுஊருள் நச்சுமரம் பழுத்தற்று.

**ஆ) சொற்பொருள் பின்வருநிலையணி :**

செய்யுளில் முன்வந்த சொல்லே பின்னும் பலமுறை வந்து ஒரே பொருளை உணர்த்துவது சொற்பொருள் பின்வரு நிலையணியாகும்.

**எ.கா :**

*எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு.*

**இ) இயல்பு நவிற்சி அணி :**

இயல்பாக உள்ளதை உள்ளவாறே கூறுவது இயல்பு நவிற்சி அணி எனப்படும்.

**எ.கா :** "இமயமலை உயரமானது"

**ஈ) உயர்வு நவிற்சி அணி :**

உள்ளதை உள்ளவாறு கூறாமல் பன்மடங்கு உயர்வாகப் பெருக்கிக் கூறுவது உயர்வு நவிற்சி அணி எனப்படும்.

**எ.கா :** "கரையேறி மீன் விளையாடும் காவிரி நாடு"

**உ) வஞ்சப்புகழ்ச்சி அணி :**

புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் வஞ்சப்புகழ்ச்சி அணி ஆகும்.

**எ.கா :** தேவரனையர் கயவர் அவரும்தாம்
மேவன செய்தொழுக லான்.

**2. பாடப்பகுதியில் உள்ள திருக்குறளில் பயின்றுவரும் அணிகளைக் கண்டறிந்து வகுப்பறையில் விளக்குக.**

**விடை :**

**1. எடுத்துக்காட்டு உவமையணி :**

ஒருபொருளை அதன் தன்மை கொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக்கூறும் பொழுது இடையே உவம உருபு இல்லாமல் ஒப்பிட்டுக் கூறுவது எடுத்துக்காட்டு உவமையணி ஆகும்.

**எ.கா :** *பண்என்னாம் பாடற்கு இயைபுஇன்றேல்; கண்என்னாம்*
*கண்ணோட்டம் இல்லாத கண் ?*

**2. ஏகதேச உருவக அணி:**

செய்யுளில் ஒரு பொருளை உருவகம் செய்து அதற்குத் தொடர்புடைய மற்றப் பொருட்களை அதற்கேற்ப உருவகம் செய்யாமல் விடுவது ஏகதேச உருவக அணி ஆகும்.

**எ.கா :** *தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே*
*வேளாண்மை என்னும் செருக்கு*

**3. உவமையணி :**

உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் அமைந்து போல என்ற உவம உருபு வெளிப்படையாக வருவது உவமை அணி ஆகும்.

**எ.கா 1 :** *வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்*
*கோலொடு நின்றான் இரவு*

**பொருள் :** ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன்னதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.

**எ.கா 2 :** *நச்சப் படாதவன் செல்வம் நடுஊருள்*
*நச்சு மரம்பழுத் தற்று.*

**பொருள் :** பிறருக்கு உதவி செய்யாததால் ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற செல்வம், ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றதாகும்.

இயல் 9. ஊ

## மொழியை ஆள்வோம்
(மொழிப்பயிற்சி)

**அ) படித்துச்சுவைக்க:**

"எழுத்தால், பேச்சால், ஆற்றால், அறிவால், தொண்டால், பண்பால், பணியால், கனிவால், தமிழக வரலாற்றில் குறிக்கப்படும்படியான அந்த அறிஞர் பெருமகனாரின் அருமைத் திருமுகத்தைக் கடைசியாகத் தரிசிக்க வழியெல்லாம், விழியெல்லாம் நீர் தேக்கி ஊர்வலத்தைப் பார்க்கக் காத்திருந்த மக்கள் எத்தனை லட்சம் பேர்! அண்ணாவின் பொன்னுடலை நன்றாகத் தாங்கி வந்த பீரங்கி வண்டி தூரத்தில் வந்தபோதே பொங்கிப் பொறுமித் துடித்த உள்ளங்கள் எத்தனை எத்தனை லட்சம்! தமது வாழ்வுக் காலத்தையே ஒரு சகாப்தமாக்கி முடித்துவிட்டுச் சென்ற அந்தப் பேரறிஞர் திருமுகத்தைக் கண்டதும் குவிந்த கரங்கள் எத்தனை எத்தனை லட்சம் ! கண்ணீரை அருவியாய்க் கொட்டிய கண்கள் எத்தனை எத்தனை லட்சம்! கண்ணுக்கு ஒளியாய்த் தமிழுக்குச் சுவையாய் மக்களுக்கு வாழ்வாய் அமைந்துவிட்ட அந்தத் தலைவரின் இறுதிப்பயணம் சென்ற வழியெல்லாம் மலர் தூவி மாலைகளை வீசிய கரங்கள் எத்தனை எத்தனை லட்சம் ! அந்த அறிவுக் களஞ்சியத்தைத் தாங்கிய வண்டி தங்களை விட்டு முன்னோக்கி நகர்ந்தபோது இதயத்தையே, உயிர்மூச்சையே இழந்துவிட்டதுபோலக் கதறித் துடித்துத் தரையில் புரண்டு புரண்டு புழுவாய்த் துடித்தவர்கள் எத்தனை எத்தனை லட்சம் பேர்கள்!"

---

**ஆ) மொழிபெயர்க்க :**

*1. Education is what remains after one has forgotten what one has learned in School – Albert Einstein*

*2. Tomorrow is often the busiest day of the week – Spanish Proverb*

*3. It is during our darkest moments that we must focus to see the light – Aristotle*

*4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts – Winston Churchill.*

**விடை :**

1. பள்ளியில் கல்வி கற்றபின் எது நமது நினைவில் நிற்கிறதோ அதுவே கல்வியாகும். – ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்
2. நாளையே இந்த வாரத்தின் மிகவும் மகிழ்ச்சியான நாள். – ஸ்பானிஷ் பழமொழி
3. நம்முடைய வாழ்க்கையில் கடினமான இருளடைந்த பகுதியில் நாம் நம் அகத்தின் ஒளியைக் காணவேண்டும். – அரிஸ்டாட்டில்
4. வெற்றி என்பது இறுதியல்ல. தோல்வி என்பது இறப்பல்ல. அவைகளைத் தொடர்ந்து முன்னேறும் துணிவே நாம் கணக்கில் கொள்ளவேண்டும். – வின்செண்ட் சர்ச்சில்

---

**இ) உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.**

**1. தாமரை இலை நீர்போல :**

**விடை :** வாழ்க்கை **<u>தாமரை இலைத்தண்ணீர் போல</u>** நிலையாமை உடையது.

**2. மழைமுகம் காணாப் பயிர்போல:**

**விடை :** வெளி நாட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் தாயைப் பிரிந்திருக்கும் மகள் **<u>மழைமுகம் காணாப் பயிர்போல</u>** வருந்திக்கொண்டிருந்தாள்.

**3. கண்ணினைக் காக்கும் இமைபோல**

**விடை :** **<u>கண்ணினைக் காக்கும் இமைபோல</u>**த் தாய்ப்பறவை தன் இளம் குஞ்சுகளைப் பாதுகாத்தது.

**4. சிலை மேல் எழுத்துபோல**

**விடை :** கல்வி என்பது **<u>சிலைமேல் எழுத்து போல</u>** என்றும் அழியாது நிலைத்திருக்கும்

---

**கூடுதல் வினா :**

**1. வெளி நாட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் தாயைப் பிரிந்திருக்கும் மகள் ................ வருந்திக்கொண்டிருந்தாள்.**

**விடுபட்ட இடத்தில் பொருத்தமான உவமையைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க. (பெ.ஆ.க – 6)**

அ) தாமரை இலைநீர் போல ஆ) வாழையடி வாழையாக

இ) கண்ணினைக் காக்கும் இமை போல ஈ) மழைமுகம் காணாப் பயிர் போல

**விடை : ஈ) மழைமுகம் காணாப் பயிர் போல**

---

**ஈ) பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.**

**சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன. (அ.மா.வி)(பெ.ஆ.க – 2)**

**விடை :**

சேரர்களின் பட்டப்பெயர்களில் "கொல்லி வெற்பன்", "மலையமான்" போன்றவை குறிப்பிடத்தக்கவை. கொல்லி மலையை வென்றவன், "கொல்லி வெற்பன்" எனவும், பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள், "மலையமான்" எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

---

**உ) வாழ்த்துரை எழுதுக.**

**உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.**

**விடை :**

நாட்டுநலப்பணித்திட்ட மாணவர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள், வணக்கம்.

**நாட்டுநலப்பணித் திட்ட வரலாறு :**

இந்திய விடுதலைக்குப் பிறகு, சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் தலைமையில் இருந்து வந்த பல்கலைக்கழக மானியக்குழு தன்னார்வ அடிப்படையில் கல்வி நிறுவனங்களில் தேசிய சேவை அறிமுகப்படுத்தப்படவேண்டும் என்று பரிந்துரைத்தது. 1950 ஆம் ஆண்டில் நடந்த மத்திய கல்வி ஆலோசனை வாரியத்தின் கூட்டத்தில் தன்னார்வ அடிப்படையில் மாணவர்கள் தங்களது நேரத்தின் ஒரு பகுதியைச் செலவிட வேண்டும் என்றும், அதற்கு ஆசிரியர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. இந்திய மாணவர்களுக்கு சமூக மற்றும் தொழிலாளர் சேவையின் தேவை வலியுறுத்தப்பட்டது.

இதன் விளைவாக 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாள் டாக்டர். வீ.கே.ஆர்.வீரால் அனைத்து மாநிலங்களில் அமைந்துள்ள 37 பல்கலைக்கழகங்களில் நாட்டுநலப் பணித் திட்டத்தைத் தொடங்கிவைத்தார். இத்திட்டம் அனைத்து மாநில பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**குறிக்கோள் :**

நாட்டு நலப்பணித்திட்டம் "நான் அல்ல, நீ" என்பதைக் கோட்பாடாகக் கொண்டது. இது ஜனநாயக வாழ்க்கை முறையின் சாராம்சத்தை வெளிப்படுத்துவதோடு மட்டும் அல்லாமல் தன்னலமற்ற சேவையின் தேவையை வலியுறுத்துகிறது. இது ஒரு தனிப்பட்ட மனிதனின் நலன், முழு சமூகத்தின் பொதுநலத்தையே சார்ந்து இருப்பதையே காட்டுகிறது.

**நோக்கம் :**

நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கிய நோக்கம் சமூக சேவை மூலம் ஆளுமையை வளர்ப்பதே ஆகும். இந்தத் திட்டம் மாணவர்களுக்கு சமூக நல எண்ணங்களைக் கற்பிக்கவும், எந்தவித பாரபட்சமும் இல்லாமல் சமூகத்திற்குச் சேவை செய்வதற்கும் அமைக்கப்பட்டது. உதவி தேவைப்படுபவர்களுக்கு தக்கநேரத்தில் உதவி புரிந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி

இச்சமூகத்தில் ஒரு கௌரவமான வாழ்க்கை வாழ இத்திட்டத்தில் பணிபுரியும் தொண்டர்கள் இரவு பகல் பாராமல் உழைக்கின்றனர். இதன் மூலம் தொண்டர்கள், கிடைக்கக்கூடிய பழக்கவழக்கங்களைச் சிறப்பாகக் கையாண்டு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழக் கற்றுக் கொள்கின்றனர்.

**ஊ) குறுக்கெழுத்துப்போட்டி.**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கா | லை | | 2 தே | மா | | ள் | | | ணி |
| ர் | | தி | வ | | டு | ற | | 3 கு | வ |
| கா | ரை | த் | நே | 4 மூ | ட் | கு | | று | பா |
| ல | கீ | ர் | ய | ங் | 5 எ | க் | ழ் | ந் | ம் |
| ம் | ங் | கீ | ப் | கி | 7 தி | ரு | மி | தொ | 6 தே |
| | 8 செ | க் | பா | ல் | ங் | 9 தி | த | கை | |
| 10 சி | | ய் | வா | | 11 க | லி | த் | தொ | 12 கை |
| ங் | | 13 மெ | ண | | ள் | | ளை | த் | க் |
| 14 க | ய | வ | ர் | யா | வை | 15 ஔ | ள் | னை | கி |
| ம் | க | வ | ரு | 16 உ | | | 17 பி | 18 வி | ளை |

**இடமிருந்து வலம் :**

1. சிறுபொழுதின் வகைகளுள் ஒன்று (2)
2. நேர் நேர் – வாய்பாடு (2)
11. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று (5)
14. மக்களே போல்வர் .................. (4)

**மேலிருந்து கீழ் :**

1. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது (5)
2. மொழி ஞாயிறு (9)
3. நல்ல என்னும் அடைமொழி கொண்ட தொகை நூல் ............(5)
4. கழை என்பதன் பொருள் (4)
7. மதியின் மறுபெயர், இது நிலவையும் குறிக்கும் (4)
10. குறிஞ்சித்திணைக்குரிய விலங்கு .... (4)
12. .......... என்பது புறத்திணைகளுள் ஒன்று (4)

**வலமிருந்து இடம் :**

15. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் – ஆசிரியர் (4)
16. மதிமுகம் உவமை எனில் முகமதி ..... (5)

**கீழிருந்து மேல்:**

5. விடையின் வகைகள் (3)
6. வீரமாமுனிவர் இயற்றிய நூல் (5)
8. பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவம்.... (4)
9. முப்பால் பகுப்பு கொண்ட நூல்களுள் ஒன்று (6)
13. மன்னனது உண்மையான புகழை எடுத்துக் கூறுவது (7)
17. 96 வகை சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று (7)
18. செய்தவம் – இலக்கணக்குறிப்பு (5)

ஏ) பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

*கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்*
*கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை*
*காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை*
*செய்குத்தம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ* (பெ.ஆ.க – 4)

**விடை :**

கம்பன்
உமறுப்புலவர்
ஜவ்வாது புலவர்
காசிம்புலவர்
குணங்குடி மஸ்தான் சாகிப்
சேகனாப் புலவர்
செய்குத்தம்பிப் பாவலர்

---

ஏ) விண்ணப்பப் படிவத்தை நிரப்புக. (பெ.ஆ.க – 2, 6)

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண் : **16829** தேதி: ............ வகுப்பும் பிரிவும் : **10 "ஆ"**

1. மாணவ / மாணவியின் பெயர் : **ந. தாமரை செல்வி**
2. பிறந்த தேதி : ..................
3. தேசிய இனம் : **இந்தியன்**
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : **நல்லுசாமி / மீனா**
5. வீட்டு முகவரி : **2, பொன்னகரம் 1 வது தெரு, மதுரை – 16**
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : **பத்தாம் வகுப்பு**
7. பயின்ற மொழி : **தமிழ்**
8. பெற்ற மதிப்பெண்கள் : **489 / 500**
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : **ஹேப்ரன்ஹால் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புட்டுத்தோப்பு மெயின்ரோடு, மதுரை–16**

| தேர்வின் பெயர் | பதிவுஎண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| **பத்தாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு** | **149050/ 2020** | தமிழ் | **95** |
| | | ஆங்கிலம் | **94** |
| | | கணிதம் | **100** |
| | | அறிவியல் | **100** |
| | | சமூக அறிவியல் | **100** |
| | | மொத்தம் | **489** |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப் பட்டுள்ளதா ? : **ஆம்**
11. தாய்மொழி : **தமிழ்**
12. சேரவிரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : **அறிவியல் / தமிழ்**

**ந. தாமரை செல்வி**
மாணவ / மாணவியரின் கையெழுத்து

**ஐ) நன்றியுரை எழுதுக.**

**பள்ளி வளாகத்தில் நடைபெற்ற "மரம்நடு விழாவுக்கு" வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் "பசுமைப் பாதுகாப்புப் படை" சார்பாக நன்றியுரை எழுதுக.**

**விடை :**

**நன்றியுரை :**

தமிழ்நாடு சுற்றுச் சூழல் துறை சார்பில் தேசியப் பசுமைப் பாதுகாப்புப் படை மாணவர்கள் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தகதகக்கும் புவியின் வெப்பத்தை குறைக்கும் எப்பணியும் எதிர்காலச் சந்ததியினருக்குச் செய்யும் மகத்தான கடமை என்பதைக் கருத்தில் கொண்டு, இதற்காக மரக்கன்றுகளை நட்டு வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இதைப்போல் இந்த ஆண்டும் பசுமைப்பாதுகாப்புப் படை சார்பாக மரம் நடுவிழாவைக் கொண்டாடி வருகிறோம்.

மரம் நடுவிழாவிற்கு வருகை தந்திருக்கும் மாணவர்களின் பெற்றோர்களுக்கும், சிறப்பு விருந்தினராக வருகை புரிந்து நம்மிடையே சிறப்புரை நிகழ்த்தி மரம் வளர்த்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்திப் பேசிய சிறப்பு விருந்தினர்களுக்கும், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த தலைமை ஆசிரியருக்கும், நிகழ்ச்சியை சிறப்பித்த ஆசிரியர்களுக்கும் மிக்க நன்றி !. அதுமட்டுமின்றி இந்த விழாவிற்கு, மரம் நடுவதற்குத் தேவையான மரக்கன்றுகளைக் கொடுத்து உதவியவர்களுக்குப் பசுமைப் பாதுகாப்புப் படை சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## இயல் 9. எ

## மொழியோடு விளையாடு (மொழிப்பயிற்சி)

**அ) விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.**




**விடை :**

**தினத்தந்தி**
**மதுரை மாவட்டச் செய்திகள்**
**சாலைவிதிகளை மதிப்போம்**

மதுரை மாநகரில் சாலைப் பாதுகாப்பு வார விழா ஜனவரி 08 இல் நடைபெற்றது. இப்போது சாலை விதிமீறல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வாகனங்கள் வேகக்கட்டுப்பாடு இல்லாமல் செல்கின்றன. சாலைவிதிகள் – விபத்தைத் தடுக்கவே உருவாக்கப்பட்டன. நான்குவழிச் சாலையைக் கடக்கும் பாதசாரிகளும் வாகனங்கள் வருவதைக் கவனிக்காமல் விபத்துகளில் சிக்கித் துயர் அடைகின்றனர். காவலர்கள் எவ்வளவோ விழிப்புணர்வு ஏற்படுத்தினாலும் கண்டுகொள்வதே இல்லை. வாகன ஓட்டிகளும் வேக வரம்பைக்கடந்து ஓட்டுகின்றனர். சாலை விதிகளை மதித்து நடப்போம் உயிரைக் காப்போம்.

**தமிழெண்கள்**

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரபு எண் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| தமிழ் எண் | 0 | க | உ | ங | ச | ரு | சா | எ | அ | கூ | ய |
| அரபு எண் | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| தமிழ் எண் | யக | யஉ | யங | யச | யரு | யசா | யஎ | யஅ | யகூ | உய | உக |
| அரபு எண் | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 |
| தமிழ் எண் | உஉ | உங | உச | உரு | உசா | உஎ | உஅ | உகூ | ஙய | ஙக | ஙஉ |
| அரபு எண் | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 | | | |
| தமிழ் எண் | ஙங | ஙச | ஙரு | ஙசா | ஙஎ | ஙஅ | ஙகூ | சய | | | |

ஆ) கீழ்க்காணும் நாள்காட்டியில் புதன்கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக.

விடை :

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | க | உ | ங | ச |
| ரு | சா | எ | அ | கூ | ய | யக |
| யஉ | யங | யச | யரு | யசா | யஎ | யஅ |
| யகூ | உய | உக | உஉ | உங | உச | உரு |
| உசா | உஎ | உஅ | உகூ | ஙய | ஙக | |

கூடுதல் வினா :

நாள்காட்டியில் ஞாயிற்றுக்கிழமை இருபதாம் நாள் எனில் அந்த வாரத்தில் புதன்கிழமையும் சனிக்கிழமையும் எந்த நாள்களில் வரும் என்பதனைத் தமிழெண்களில் எழுதுக. (பெ.ஆ.க – 1)

விடை :

ஞாயிற்றுக்கிழமை – உ0 (20)
புதன்கிழமை – உங
சனிக்கிழமை – உசா

இ) அகராதியில் காண்க :

குணதரன், செவ்வை, நகல், பூட்கை

விடை :

**குணதரன்** – நற்குணமுள்ளவன், முனிவன்
**செவ்வை** – நேர்மை, மிகுதி, செப்பம்
**நகல்** – மகிழ்ச்சி, நட்பு, ஏளனம், படி
**பூட்கை** – கொள்கை, மனஉறுதி, வலிமை, சிங்கம்

ஈ) செயல்திட்டம் :

விளையாட்டு உலகில் உங்களுக்குப் பிடித்த ஆளுமைத்திறன் மிக்க விளையாட்டு வீரர் பற்றிய செய்திகளைப் படத்துடன் தொகுப்பேடாக உருவாக்குக.

உ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

விடை :



வலது கை தருவதை
இடது கை அறிய
கூடாது என்பர்
ஆனால் அதை சுயப்படம் எடுத்து
ஊர் அறியத் தெறியப்படுத்துவது
தர்மம் அல்ல....
அது ஒரு
சுய விளம்பரம்........

**ஊ) நிற்க அதற்குத் தக**

ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம்; சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம் ; தொடர் வண்டியில் பாட்டுப்பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி, வேண்டா வெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்!

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை.......

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவியபோது | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு; அவருக்கு மகிழ்ச்சி! |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவியபோது | கல்லூரிப்படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு! |
| தாகத்தில் தவித்தவருக்கு தண்ணீர் கொடுத்து உதவியபோது | என்னாலும் உதவமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. |

**எ) கலைச்சொல் அறிவோம்**

Humanism – மனிதநேயம்
Cultural Boundaries – பண்பாட்டு எல்லை
Cabinet – அமைச்சரவை
Cultural values – பண்பாட்டு விழுமியங்கள்

**ஏ) அறிவை விரிவு செய்**

யானை சவாரி – பாவண்ணன்
கல்மரம் – திலகவதி
அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில் – ந.முருகேசபாண்டியன்

# செலக்சன்

## 10

## பத்தாம் வகுப்பு
## தமிழ்

**அரசு மாதிரி வினாத்தாள்**
**மற்றும்**
**பெற்றோர் ஆசிரியர் கழக**
**மாதிரி வினாத்தாள்கள்**


✆ 94430 43338
✆ 94430 46662

வெளியிடுபவர்

**அன்பு நிலையம்**

**15, புதுமண்டபம், மதுரை – 625001**

# 10 ஆம் வகுப்பு
# அரசு மாதிரி வினாத்தாள்
# பொதுத்தமிழ்

**பகுதி – I (மதிப்பெண்கள் : 15)**

**(i) அனைத்து வினாக்களுக்கும் விடைதருக 15 x 1 = 15**

**(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

**1. பரிபாடல் அடியில் "விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?**
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

**2. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்னும் தொடர் இடம்பெற்ற நூல்............**
அ) கொன்றைவேந்தன் ஆ) குறுந்தொகை
இ) திருக்குறள் ஈ) நற்றிணை

**3. "இங்கு நகரப்பேருந்து நிற்குமா ?" என்று வழிப்போக்கர் கேட்டது................ வினா.**
**"அதோ அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ............. விடை.**
அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியாவினா, சுட்டுவிடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

**4. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி.............**
அ) ஜால்ரா ஆ) பறை
இ) உறுமி ஈ) நாகசுரம்

**5. "வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்" –இவ்வடி குறிப்பிடுவது...............**
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

**6. காற்றின் மெல்லிய .................. பூக்களைத் தலையாட்ட வைக்கிறது. கைகளின் நேர்த்தியான .......... பூக்களை மாலையாக்குகிறது.**
**தொழிற்பெயர்களைப் பொருத்தித் தொடர்களை முழுமை செய்க.**
அ) தொடுத்தல், எடுத்தல் ஆ) தொடுதல், தொடுத்தல்
இ) எடுத்தல், தொடுதல் ஈ) தொடுத்தல், தொடுதல்

**7. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி**
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
இ) உருவகம் ஈ) தீவகம்

**8. "சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இருதிணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன" – இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக.**
அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை– நல்வினை, தீவினை
ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை– உயர்திணை, அஃறிணை
இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம்– அறம், பொருள், இன்பம்
ஈ) குறிஞ்சி, மலை, முல்லை, காடு, மருதம், வயல், நெய்தல், கடல்– பனைதிணை

**9. "கேள்வியினான்" என்னும் சொல்லின் இலக்கணக்குறிப்பு**
அ) வினையாலணையும் பெயர் ஆ) தொழிற்பெயர்
இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

**10. கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் – இத்தொடர்**
அ) வினாத்தொடர் ஆ) தனித்தொடர்
இ) செய்தித்தொடர் ஈ) கலவைத் தொடர்

**11. "<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u>" நிலத்துக்கு நல்ல உரங்கள் – இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.**
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் ஓலையும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மா அல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

**12. இப்பாடலின் ஆசிரியர்**

அ) ஔவையார் ஆ) நப்பூதனார்
இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்

**13. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்**

அ) மலைபடுகடாம் ஆ) பரிபாடல்
இ) முல்லைப்பாட்டு ஈ) நற்றிணை

**14. "நனந்தலை உலகம்" – இத்தொடரின் பொருள் ?**

அ) சிறிய உலகம் ஆ) நனைந்த உலகம்
இ) சுற்றும் உலகம் ஈ) அகன்ற உலகம்

**15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.**

அ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஆ) கோடுகெண்டு, பெரும்புயல்
இ) நனந்தலை, வலம்புரி ஈ) பொறித்த, பொழிந்த

## பகுதி – II ( மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4 x 2 = 8**

**16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்களும் அமைந்திருக்கும்.

ஆ. 1956 ஆம் ஆண்டு நவம்பர் 1 ஆம் நாள் கன்னியாகுமரி மாவட்டம் தமிழ்நாட்டுடன் இணைந்தது.

**17. யாருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும் எனத் திருக்குறள் குறிப்பிடுகிறது ?**

**18. "நமக்கு உயிர் காற்று, காற்றுக்கு வரம் மரம் – மரங்களை வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்" – இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.**

**19. "மன்னும் சிலம்பே ! மணிமே கலைவடிவே !
முன்னும் நினைவால்முடிதாழ வாழ்த்துவமே !"
– ஐம்பெருங்காப்பியங்களுள் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள இருகாப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

**20. மொழிபெயர்ப்புக் குறித்து மணவை முஸ்தபா குறிப்பிடுவது யாது ?**

**21. "கண்" என முடியும் திருக்குறளை எழுதுக.**

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5x 2 = 10**

**22. அண்ணன் நேற்று வீட்டிற்கு வந்தது. அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)**

**23. பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக.**

| தோற்பாவை, விருது, தோற்பவை, விருந்து |
|---|

அ) வாழ்க்கையில் ............... மீண்டும் வெல்லும் – இதைத் தத்துவமாய்த்............... க்கூத்து சொல்லும்.

ஆ) தெருக்கூத்தில் நடிகருக்குக் கைத்தட்டலே .......... அதில் வரும் காசு குறைந்தாலும் அதுவேயவர் ...............

**24. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

சிறு – சீறு

**25. கலைச்சொற்கள் தருக.**

அ) Modern Literature

ஆ) Epic Literature

(குறிப்பு : செவிமாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா : கல், பழம் – இச்சொற்களுக்கான கூட்டப்பெயர்களை எழுதுக)

**26. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் வேறுபாடுகள் இரண்டினை எழுதுக.**

**27. பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.**

சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவர்கள் கொல்லிவெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**28. "அறியேன்" – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

பகுதி – III ( மதிப்பெண்கள் : 18)

பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**29. நீவீர் அறிந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மூன்றினை எழுதுக.**

**30. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் கூறு ஒன்றைத் "தர்க்கத்திற்கு அப்பால்" கதை மாந்தர் வாயிலாகக் குறிப்பிடுக.**

**31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.**

தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். அதனால்தான் "விருந்தே புதுமை" என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

**அ) விருந்தினர் என்போர் யாவர் ?**

**ஆ) விருந்து குறித்துத் தொல்காப்பியர் கூறியது யாது ?**

**இ) இவ்வுரைப்பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

**32. "உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**33. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.**

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**"நவமணி வடக்க யில்போல்" எனத்தொடங்கும் தேம்பாவணிப் பாடல்**

**(அல்லது)**

**"வாளால் அறுத்துச் சுடினும்" எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல்.**

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**35.** *"கண்ணே கண்ணுறங்கு !*
*காலையில் நீயெழும்பு !*
*மாமழை பெய்கையிலே !*
*மாம்பூவே கண்ணுறங்கு !*
*பாடினேன் தாலாட்டு !*
*ஆடி ஆடி ஓய்ந்துறங்கு !* **– இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொகாநிலைத் தொடர்வகைகளை எழுதுக.**

**36.** *பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்ல தில்லை பொருள்* **– இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.**

**37. தன்மை அணி குறித்து எழுதுக.**

**பகுதி – IV ( மதிப்பெண்கள்:25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25**

**38. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிகவீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. இன்றைய நிலையில் ஆற்றுப்படுத்துதல் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.**

**39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கும் வாகன ஓட்டிகளுக்கும் ஏற்படும் இடையூறுகளைக் குறிப்பிட்டு, புதிய மின்விளக்குகளைப் பொருத்தும்படி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) "மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பில், மாநில அளவில் நடத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் முதல்பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

**40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.**



**41. தட்டச்சர் பணிவாய்ப்பு வேண்டித் தன்விவரப் பட்டியல் ஒன்றை நிரப்புக.**

**42. அ) தமிழகப் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மேலும் பரவலாக்கவும் நீங்கள் செய்யவிருப்பனவற்றை வரிசைப்படுத்தி எழுதுக.**

| |
|---|
| பிறந்த நாள் விழக்களில் மயிலாட்டம் முதலான கலைகளை நிகழ்த்த முனைவேன் |
| எங்கள் குடும்ப விழாக்களில் பொம்மலாட்டம் நிகழ்த்த ஏற்பாடு செய்வேன். |
| 1. |
| 2. |
| 3. |
| 4. |
| 5. |

(அல்லது)

**ஆ) மொழிபெயர்க்க.**

*The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark, The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.*

**குறிப்பு: செவி மாற்றுத்திறனாளிகளுக்கானமாற்று வினா.**

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு மொழி பொது மக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொது மக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க Leaf (லீஃப்) என ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது என்பதை அறிகிறோம்.

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும், சில்வகைப்பட்டனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ, பலவாகவும் கழிபலவகைப் பட்டனவாகவும் இருக்கின்றன.

**(i) ஒரு மொழியின் இலக்கியம் யாரால் அமையப்பெறும் ?**

**(ii) தமிழில் இலையைக் குறிக்கும் பல சொற்கள் யாவை ?**

**(iii) தமிழ்நாட்டின் பொருள்வளத்தினை எவ்வாறு அறிவீர்கள் ?**

**(iv) தமிழ்நாட்டில் கூலங்கள் எத்தனை வகைப்பட்டனவாக விளங்குகின்றன ?**

**(v) ஆங்கில மொழியில் இலையைக் குறிக்கும் சொல் எது ?**

## பகுதி – V ( மதிப்பெண்கள்:24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாகவிடையளிக்க. 3 x 8 = 24**

**43. அ) சங்க இலக்கியங்களில் போற்றப்பட்ட அறங்களில் உம்மைக் கவர்ந்த இரண்டு அறங்களைக் குறிப்பிட்டு, அவை நடைமுறை வாழ்வில் பொருந்துவதை விளக்குக.**

(அல்லது)

**ஆ)** *மலர்ந்தும் மலராத பாதிமலர் போல*
*வளரும் விழி வண்ணமே – வந்து*
*விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக*
*விளைந்த கலை அன்னமே*
*நதியில் விளையாடி கொடியில் தலைசீவி*
*நடந்தஇளந் தென்றலே – வளர்*

*பொதிகை மலைதோன்றி மதுரைநகர் கண்டு*
*பொலிந்த தமிழ் மன்றமே* – கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரை செய்க.

**44. அ)** "கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) கு. அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து விவரித்து எழுதுக.

**45. அ)** குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய்த் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா தந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து இவற்றையெல்லாம் அணியாகப் பூட்டி, அழகினைக் கூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். – இக்கருத்துகளைக் கருவாகக் கொண்டு "சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.
முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு– கல்பனா சாவ்லா – விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ளவேண்டியவை – முடிவுரை.

---

## விடைகுறிப்புகள்

### பகுதி – I

1. ஈ) வானத்தையும் பேரொலியையும்
2. அ) கொன்றை வேந்தன்
3. இ) அறியாவினா, சுட்டுவிடை
4. ஆ) பறை
5. இ) இடையறாது அறப்பணிச் செய்தலை
6. ஆ) தொடுதல், தொடுத்தல்
7. இ) உருவகம்
8. ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை
9. அ) வினையாலணையும் பெயர்
10. ஈ) கலவைத் தொடர்
11. ஈ) சருகும் சண்டும்
12. ஆ) நப்பூதனார்
13. இ) முல்லைப்பாட்டு
14. ஈ) அகன்ற உலகம்
15. இ) பாடு இமிழ், கோடுகொண்டு

### பகுதி – II

#### பிரிவு – 1

16. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 22 ) ஆ) (246)
17. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 117 )
18. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 50 )
19. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 11 )
20. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 155 )
21. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 8 )

#### பிரிவு – 2

22. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (144 )
23. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (233 ) ஆ) (233 )
24. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (146 )

25. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 114 ) ஆ) (114) 25. மாற்றுவினா (41)
26. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 36 )
27. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (346)
28. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (335 )

பகுதி – III

பிரிவு – 1

29. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (124 )
30. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (323 )
31. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 89 )

பிரிவு – 2

32. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (293 )
33. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (210)
34. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (i) ( 7 ) (ii) ( 5 )

பிரிவு – 3

35. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (107 )
36. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (305)
37. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (343 )

பகுதி – IV

38. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (259 ) ஆ) (98)
39. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (309 ) ஆ) (77)
40. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (286)
41. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 43 )
42. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (234 ) ஆ) (75) 42. மாற்றுவினா (24)

பகுதி – V

43. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (281 ) ஆ) (60)
44. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (174 ) ஆ) (337)
45. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 42 ) ஆ) (147)

---

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மாதிரி வினாத்தாள் – 1

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 x 1 = 15

1. "மருந்தே ஆயினும் விருந்தொடு உண்" என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்............
   அ) குறுந்தொகை ஆ) கொன்றைவேந்தன்
   இ) திருக்குறள் ஈ) நற்றிணை
2. "மலர்கள் தரையில் நழுவும்" எப்போது ?
   அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
   இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
3. "காலம் கரந்த பெயரெச்சம்" என்பது–
   அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை
   இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித் தொகை

**4. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல்**
அ) எள்கசடு ஆ) பிண்ணாக்கு
இ) ஆமணக்கு ஈ) எள்கட்டி

**5. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது**
அ) தொழிற்பெயர் ஆ) முதனிலைத்திரிந்த தொழிற்பெயர்
இ) முதனிலைத்தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

**6. "மாலவன் குன்றம் போனாலென்ன ? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்" – மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே –**
அ) திருத்தணியும் திருப்பதியும் ஆ) திருப்பரங்குன்றமும் பழனியும்
இ) திருப்பதியும் திருத்தணியும் ஈ) திருப்பதியும் திருச்செந்தூரும்

**7. கொடுக்கப்பட்ட அனைத்துச் சொற்களும் அமைந்த பொருத்தமான தொடரைத் தேர்க. (மலை, மழை, மேகம், ஆறு, ஏரி, குளம்)**
அ) மலைமீது மழை பெய்து ஆற்று வெள்ளம் ஊரின்வழியே பெருக்கெடுத்து ஓடியது.
ஆ) கருத்த மேகம் மலை மீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின.
இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன.
ஈ) மலைமீது மழைபொழிய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது.

**8. கருணையன் என்பவர் –**
அ) வீரமாமுனிவர் ஆ) யோசேப்பு
இ) அருளப்பன் ஈ) சாந்தாசாகிப்

**9. "எய்துவர் எய்தாப் பழி" – இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு யாது ?**
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

**10. ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது ?**
அ) குலா ஆ) இலா
இ) சீலா ஈ) துலா

**11.** <u>சோலையில்</u> **பூத்த மண மலர்களில்** <u>கரும்புகள்</u> **மொய்த்துப் பண்பாடி** <u>மது</u>**வுண்டன. – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான வேறு சொற்களை எழுதுக.**
அ) பூஞ்சோலை – அரும்புகள் ஆ) மலை – எறும்புகள் – தேன்
இ) பூஞ்சோலையில் – வண்டுகள் – தேன் ஈ) கானகம் – வண்டுகள் – நீர்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல, நிமிர்ந்த மா அல் போல,
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை"

**12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்**
அ) முல்லைப்பாட்டு ஆ) மலைபடுகடாம்
இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

**13. "நனந்தலை உலகம்" – இத்தொடரின் பொருள்**
அ) சிறிய உலகம் ஆ) தலையாய உலகம்
இ) நனைந்த உலகம் ஈ) அகன்ற உலகம்

**14. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்**
அ) பெரும் பெயல், பொழிந்த ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்
இ) பாடுஇமிழ், கோடுகொண்டு ஈ) நீர்செல, நிமிர்ந்த

**15. பாடலில் இடம்பெற்றுள்ள அளபெடை –**
அ) தடக்கை ஆ) வளைஇ
இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

**பகுதி – II ( மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4 x 2 = 8**

**16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ. தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளை கொண்டுள்ளது.

ஆ. ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**17. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது ?**

**18. தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.**

**19. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.**

**20. " நமக்கு உயிர் காற்று**
**காற்றுக்கு வரம் மரம் – மரங்களை**
**வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்" – இதுபோன்ற "உலகக் காற்று நாள்" விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத் தொடர்களை எழுதுக.**

**21. "செயற்கை" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.**

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5 x 2 = 10**

**22. குறள்பெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.**

**23. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அ) தொடு – தோடு

ஆ) மலை – மாலை

**24. தணிந்தது – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**25. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.**

**26. குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக:–**

குறிப்பு : எதிர்மறையான சொற்கள்

அ) அருகில் அமர்க ஆ) மீளாத் துயர்

**27. கலைச்சொல் தருக.**

**Homograph, Vowel**

**குறிப்பு : செவிமாற்றுத்திறனாளிகளுக்கான மாற்றுவினா :**

**சொற்களை இணைத்துப் புதிய இரு சொற்களை உருவாக்குக.**

**தேன், மணி, மழை, மேகலை**

**28. நாள்காட்டியில் ஞாயிற்றுக்கிழமை இருபதாம் நாள் எனில் அந்த வாரத்தில் புதன் கிழமையும் சனிக்கிழமையும் எந்த நாள்களில் வரும் என்பதனைத் தமிழெண்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| ஞாயிற்றுக் கிழமை | – | 20 (உ0) |
| புதன்கிழமை | – | ............. |
| சனிக்கிழமை | – | ............. |

**பகுதி – III ( மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**29.உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச் சொல்லும் கைரேகையும் கொண்டு திறன் பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு, படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.

**அ. திறன்பேசியைத் திறக்கும் பழைய முறைகள் யாவை ?**

**ஆ. திறன்பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது ?**

**இ. உயர்வகைத் திறன்பேசியில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது ?**

**30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.**

**31. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள் ?**

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 x 3 = 6**

**32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலை கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது ?**

**33. வைத்தியநாதபுரி முருகன், அணிந்திருக்கும் அணிகலன்களுடன் குழந்தையாகச் செங்கீரை ஆடிய நயத்தினை விளக்குக.**

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**" தென்னவ மகளே !" எனத்தொடங்கும் "அன்னை மொழியே" பாடல்**

**(அல்லது)**

**"தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.**

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**35.** தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
**– இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.**

**36.** *அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்*
*பேணித் தமராக் கொளல்* **– அலகிட்டு வாய்பாடு தருக.**

**37. தீவக அணியை விளக்கி, மூவகை தீவக அணிகளையும் குறிப்பிடுக.**

**பகுதி – IV ( மதிப்பெண்கள்:25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25**

**38. அ) இறைவன், புலவர் இடைக்காடனார் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.**

**(அல்லது)**

**ஆ)** *நதியின் பிழையன்று*
*நறும்புனலின்மை அன்றே*
*பதியின் பிழையன்று*
*பயந்த நம்மைப் புரந்தான்*
*மதியின் பிழையன்று*
*மகன் பிழையன்று மைந்த*
*விதியின் பிழை நீ*
*இதற்கென்னை வெகுண்டதென்றன்*
*– கம்பன்*

*நதிவெள்ளம் காய்ந்து விட்டால்*
*நதிசெய்த குற்றம் இல்லை*
*விதி செய்த குற்றம் இன்றி*
*வேறு – யாரம்மா* *– கண்ணதாசன்*

**கவிச்சக்கரவர்த்தியின் கவிதையையும் கவியரசின் கவிதையையும் ஒப்பிட்டுக் கருத்துகளை எழுதுக.**

**39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்ததைக் குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) உங்கள் பள்ளியில் நடைபெறும் விடுதலைநாள் விழாவிற்கு நிகழ்கலை வல்லுநர் ஒருவரைச் சிறப்பு விருந்தினராக அழைத்துக் கடிதம் எழுதுக.**

**40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்று எழுதுக.**



**41. கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க.**
**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

1. மாணவரின் பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் :
4. தேசிய இனம் :
5. பெற்றோர்/பாதுகாவலர் பெயர் :
6. இரத்தவகை :
7. உயரம் மற்றும் எடை :
8. வீட்டு முகவரி :
9. தொலைபேசி/அலைபேசி எண் :
10. இறுதியாகப்படித்து முடித்த வகுப்பு :
11. பள்ளியின் முகவரி :
12. சேரவிரும்பும் விளையாட்டு :

சேர்க்கை எண் :
மாணவரின் கையெழுத்து
இடம் :
நாள் :

பெற்றோர்/பாதுகாவலரின் கையெழுத்து :

**42. அ) நம் பழம்பெருமையையும் வரலாற்றையும் அறியச் செய்யும் அரிய ஆவணங்களான கல்வெட்டுகள், கோவில்களிலும் பழமையான நினைவுச் சின்னங்களிலும் காணப்படும். அவற்றைப் பராமரிக்கவும் பாதுகாக்கவும் உங்களால் இயன்ற ஐந்து செயல்களைப் பட்டியலிடுக.**

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க.**

***The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.***

**குறிப்பு : செவி மாற்றுத்திறனாளிகளுக்கானமாற்று வினா.**

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை அறியமுடிகிறது. அதிலிருந்து நல்லனவற்றை நாம் பெற்றுக்கொள்ள முடிகிறது. பிறமொழி இலக்கிய அறிவு கிடைக்கிறது. அதன்மூலம் நம் இலக்கியத்தை வளப்படுத்த முடிகிறது. உலகப்புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கியப் படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. கருத்துப் பகிர்வைத் தருவதால் மொழிப்பெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவார்கள். மொழிபெயர்ப்பு மூலம் ஒரு நாட்டின் வரலாற்றிலும் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் வலிமையான தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

**(i) மொழிபெயர்ப்பினால் மொழிவளம் எவ்வாறு பயன்பெறுகிறது ?**

**(ii) மொழிபெயர்ப்பைப் பயன்கலை என்று குறிப்பிடுவதன் காரணம் யாது ?**

**(iii) மொழிபெயர்ப்பு ஏற்படுத்தும் முக்கியத் தாக்கம் எவை ?**

**(iv) பிறமொழி இலக்கிய அறிவு மூலம் எவற்றை வளப்படுத்தலாம் ?**

**v) பிற இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கம் போன்றவற்றை எதன் மூலம் அறியலாம் ?**

## பகுதி – V ( மதிப்பெண்கள்:24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3 x 8 = 24**

**43. அ) வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை – பசித்தவருக்கு உணவிடல் – இவைபோன்ற செயல்கள் அன்றும் இன்றும் தொடர்ந்து கொண்டிருப்பதை அழகுற விவரித்து எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு. குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் "மாணவப்பருவமும் நாட்டுப் பற்றும்" என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.**

**44. அ) "புயலிலே ஒரு தோணி" கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன என்பதைக் கதைவழிச் சுவைபட விவரிக்க.**

**(அல்லது)**

**ஆ) "பாய்ச்சல்" சிறுகதையில் அழகுவின் கதாப்பாத்திரம் போல், நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல்வேடக் கலைஞர் குறித்த நிகழ்வுகளை ஒப்பிட்டும் அவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் குறித்தும் விரிவாக எழுதுக.**

**45. அ) குமரிக் கடல்முனையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட**

தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து அணியாகப் பூட்டி, அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். – இக்கருத்தைக் கருவாகக் கொண்டு"சான்றோர் வளர்த்த தமிழ்" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.

முன்னுரை – தமிழகம் தந்த தவப்புதல்வர்– நாட்டுப்பற்று – மொழிப்பற்று – பொதுவாழ்வில் தூய்மை – எளிமை – மக்கள் பணியே மகத்தான பணி – முடிவுரை.

---

**விடைகுறிப்புகள்**

**பகுதி – I**

1. ஆ) கொன்றைவேந்தன்
2. ஆ) தளரப்பிணைத்தால்
3. அ) வினைத்தொகை
4. ஆ) பிண்ணாக்கு
5. ஈ) வினையாலணையும் பெயர்
6. இ) திருப்பதியும் திருத்தணியும்
7. ஆ) கருத்த மேகம் மலை மீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின.
8. இ) அருளப்பன்
9. அ) கூவிளம் தேமா மலர்
10. ஆ) இலா
11. இ) பூஞ்சோலையில் – வண்டுகள் – தேன்
12. அ) முல்லைப் பாட்டு
13. ஈ) அகன்ற உலகம்
14. இ) பாடு இமிழ், கோடுகொண்டு
15. ஆ) வளைஇ

**பகுதி – II**

**பிரிவு – 1**

16.அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (201 ) (ஆ) ( 201)
17. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (332)
18. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 19 )
19. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (133 )
20. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 50 )
21. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 8 )

**பிரிவு – 2**

22. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (301)
23. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (113 )
24. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (173)
25. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (268 )
26. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (151 ) (ஆ) ( 151 )
27. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 47 ) 27. மாற்றுவினா ( 45 )
28. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 351 )

**பகுதி – III**

**பிரிவு – 1**

29. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 126 )
30. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 281)
31. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 167 )

பிரிவு – 2

32. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 98 )
33. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (210 )
34. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 5 ) ஆ) ( 7 )

பிரிவு – 3

35. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 74 )
36. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (303 )
37. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (342 )

பகுதி – IV

38. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (172 ) ஆ) (295 )
39. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 111 ) ஆ) (231 )
40. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 46 )
41. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (231 )
42. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (248 ) ஆ) ( 75) 42. மாற்றுவினா (162)

பகுதி – V

43. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 88 ) ஆ) (244)
44. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 69 ) ஆ) (232 )
45. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 42 ) ஆ) (273 )

---

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மாதிரி வினாத்தாள் – 2

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 x 1 = 15

1. "இவள் தலையில் எழுதியதோ
கற்காலம் எப்போதும்.........." இவ்வடிகளில் கற்காலம் என்பது
அ) தலைவிதி ஆ) பழைய காலம்
இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது
2. எழுகதிர், முத்துப்பல் – இச்சொற்களில் மறைந்துள்ள தொகைகள் முறையே–
அ) வினைத்தொகை, பண்புத்தொகை
ஆ) உவமைத்தொகை, வினைத்தொகை
இ) உவமைத்தொகை, வினைத்தொகை
ஈ) வினைத்தொகை, உவமைத்தொகை
3. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி –
அ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஆ) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
இ) சங்கம்மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
ஈ) பக்திஇலக்கியக்காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
4. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் –
அ) அகவற்பா ஆ) வெண்பா
இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

**5. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்**
அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்
இ) தேவநேயப்பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார்

**6. கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். – இத்தொடர்களின் சரியான கலவைத் தொடர்–**
அ) கூத்துக்கலைஞர் பாடவில்லை என்றால் கூடியிருந்த மக்கள் அமைதியாயிரார்.
ஆ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
இ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கினார் என்பதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
ஈ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கி கூட்டத்திலிருந்தவர்களை அமைதிப்படுத்திவைத்தார்.

**7. பரிபாடல் அடியில் "விசும்பும் இசையும்" என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?**
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

**8. இருநாட்டு அரசர்களும் தும்பைப்பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் –**
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**9. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – ஜெயகாந்தனின் இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது –**
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
ஆ) சமூக வாழ்க்கையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

**10. "<u>சிவப்புச் சட்டை பேசினார்</u>" அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை எது ?**
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

**11. ஆலும் வேலும் பல்லுக்குறுதி,**
**நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி – இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.**
அ) ஆலமரம், வேப்பமரம் – **ரு, க** ஆ) ஆலமரம், வேலமரம் – ச ,உ
இ) அரசமரம், வேங்கைமரம் – **க, உ** ஈ) வேப்பமரம், ஆலமரம் – ச, சா

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

" செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடுமொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டோடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்"

**12. இப்பாடலின் ஆசிரியர்.........**
அ) கீரந்தையார் ஆ) குமரகுருபரர்
இ) நம்பூதனார் ஈ) செய்குத்தம்பி பாவலர்

**13. இப்பாடலில் இடம்பெற்றுள்ள பிள்ளைத் தமிழ் பருவம்...........**
அ) அம்மானை ஆ) சப்பாணி
இ) சிறுதேர் ஈ) செங்கீரை

**14. "குண்டலமும் குழைகாதும்" –இலக்கணக்குறிப்பு தருக.**
அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை
இ) பண்புத்தொகை ஈ) அடுக்குத் தொடர்

**15. கிண்கிணி, அரைநாண், சுட்டி என்பன முறையே............**
அ) காலில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
ஆ) நெற்றியில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது
ஈ) இடையில் அணிவது, காதில் அணிவது, தலையில் அணிவது

**பகுதி – II ( மதிப்பெண்கள் : 18)**
**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4 x 2 = 8**

**16.** "கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப்புலவன் தென் சொல்"

**– இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?**

**17. காற்றின் ஆற்றல், வேகம் இலக்கியங்களில் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றன.**

**18. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ) நாயக்கர், மராட்டியர் ஆட்சிக்காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோர்க்காகக் கட்டப்பட்டன.

ஆ) அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் "வாழை இலை விருந்து விழாவை" ஆண்டு தோறும் கொண்டாடி வருகிறது.

**19. மெய்க்கீர்த்திக் குறித்துத் தாங்கள் அறிந்த இரண்டு கருத்துகளை எழுதுக.**

**20. கொடை என்பதும் ஓர் அறம் என்பதனை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார்.**

**21. பாடலோடு பொருந்தாத இசையால் பயனில்லை என்னும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக.**

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5x 2 = 10**

**22. அ) இலுப்பைப்பூக்கள் இனிப்பானவை, கரடிகள் மரத்தின் மீதேறி அவற்றைப் பரித்து உண்ணும். பாதிரிப்பூ குடிநீருக்கு தன் மணத்தை ஏற்றும். – தொடரில் பொருந்தாப் பொருள் தரும் மயங்கொலி எழுத்துகளைத் திருத்தி எழுதுக.**

**ஆ) மலர் உண்டு ; பெயரும் உண்டு – இரண்டு தொடர்களையும் ஒரே தொடராக்குக.**

**23. "வேங்கை" என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

**24. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும் – இத்தொடரில் அமைந்துள்ள முதல்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.**

**25. கலைச்சொல் தருக.**

அ) Ultraviolet Rays ஆ) Space Technology

**(குறிப்பு : செவிமாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா)**

**எதிர்மறையான சொற்களை எழுதுக :** அ) மீளாத்துயர் ஆ) புயலுக்குப்பின்

**26. பொருத்தமான நிறுத்தக்குறியிடுக.**

சேரர்களின் பட்டப்பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லிவெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர். இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

**27. "வருக" – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**28. தொழிற்பெயர்களின் பொருளிற்கேற்பத் தொடர்களை முழுமை செய்க.**

அ) பசுமையான .............. ஐக் .............. கண்ணுக்கு நல்லது (காணுதல், காட்சி)

ஆ) காட்டு விலங்குகளைச் ............ தடை செய்யப்பட்டுள்ளது. செய்த தவறுகளைச் .............. திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)

பகுதி – III ( மதிப்பெண்கள் : 18)

பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**29. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து மூன்று குறிப்புகளை எழுதுக.**



**30. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஒரு சிறு உரையாடலை அமைக்க.**

**31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

அம்மானை பாடல்கள், சித்தர் பாடல்கள், சொற்பொழிவுகள் போன்றவற்றின் மூலமாக நான் இலக்கிய அறிவு பெற்றேன். அப்போது அவர்கள் வெளியிடும் சிறந்த கருத்துகளை ஏடுகளில் குறித்து வைத்துக்கொள்வேன். யான் முறையாக ஏட்டுக்கல்வி பெற இயலாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை ஈடு செய்யக் கேள்வி ஞானத்தைப் பெறுவதிலேயே மிகுந்த ஆர்வம் காட்டினேன். எனது கேள்வி ஞானத்தைப் பெருக்கிய பெருமை திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகளுக்கே அதிகம் உண்டு என்றெல்லாம் தமது செவிச்செல்வம் பற்றி ம.பொ.சிவஞானம் குறிப்பிட்டுள்ளார்.

**அ) ம.பொ.சி அவர்கள் கேள்வி ஞானத்தை அதிகமாக யாரிடம் பெற்றதாகக் குறிப்பிடுகிறார் ?**

**ஆ) ம.பொ.சி அவர்கள் இலக்கிய அறிவினை எவ்வாறு பெற்றார் ?**

**இ) ஏட்டுக்கல்வி பெற இயலாத ம.பொ.சி அதனை எவ்வாறு ஈடு செய்தார் ?**

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 x 3 = 6**

**32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவனவற்றைச் சுருக்கமாக எழுதுக.**

**33. வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை – இச்சொற்களைத் தொடர்புபடுத்திச் சிறுபத்தி ஒன்று அமைக்க.**

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**அ) " விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின் " எனத் தொடங்கும் காசிக்காண்டப் பாடல்**

**(அல்லது)**

**ஆ) "ஒலித்து அழுவ போன்றே" என முடியும் தேம்பாவணிப் பாடல்.**

பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**35. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எழுதுக.**

**36.** " கண்ணே கண்ணுறங்கு !
காலையில் நீயெழும்பு !
மாமழை பெய்கையிலே !
மாம்பூவே கண்ணுறங்கு !
பாடினேன்தாலாட்டு !
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு !" – **இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.**

**37.** *"வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ*
*டைந்துடன் மாண்ட தமைச்சு"* – **இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.**

**பகுதி – IV ( மதிப்பெண்கள்:25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25**

**38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை அழகுற விவரிக்க.**

**(அல்லது)**

**ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.**

**39. அ) உங்கள் தெருவில் பழுதடைந்துள்ள மின்விளக்குகளை மாற்றிப் புதிய மின்விளக்குகளைப் பொருத்துமாறு மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் தங்கைக்கு, திறன்பேசிப் பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.**

**40. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் எழுதுக.**



**41. கொடுக்கப்பட்டுள்ள மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க.**

**மேல்நிலை வகுப்பு– சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :

6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு:
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவுஎண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப் பட்டுள்ளதா ? :
11. தாய்மொழி :
12. சேரவிரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவரின் கையெழுத்து

**42. அ) இதுகாறும் கற்ற அறங்கள் நமக்கு கைகொடுக்கும் நிலையில், நாம் பின்பற்ற வேண்டிய அறங்களும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் பட்டியலிடுக.**

| நாம் செய்ய வேண்டிய அறங்கள் | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க.**

**1.** If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - **Nelson Mandela**

**2.** Language is the road map to a culture. It tells you where its people come from and where they are going - **Rita Mae Brown**

**குறிப்பு : செவி மாற்றுத்திறனாளிகளுக்கானமாற்று வினா.**

**பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும் ; பல அறிவுத் துறைகளுக்கும் தொழில்துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும் ; மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும் ; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும் ; நாடு விடுதலை பெற்ற பிறகு, பலநாட்டுத் தூதரகங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**(i) அனைத்துலக அறிவை நாம் எவ்வாறு பெறலாம் ?**

**(ii) பலநாட்டுத் தூதரகங்கள் மொழிபெயர்ப்பு மூலம் எவ்வெவற்றைக் கற்றுத் தருகின்றன ?**

**(iii) மொழிபெயர்ப்பைக் கல்வியாகக் கற்பதன் பயன்கள் இரண்டினை எழுதுக ?**

**(iv) பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் குறித்து எழுதுக ?**

**v) மொழிபெயர்ப்புக் கல்வி இன்றைய காலகட்டத்திற்குத் தேவையா ?**

## பகுதி – V ( மதிப்பெண்கள்:24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க. 3 x 8 = 24**

**43. அ) ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான சிறுகட்டுரை ஒன்றினை எழுதி, கட்டுரையின் சுருக்கத்தினைச் சுவரொட்டியாக வடிவமைத்துத் தருக.**

**(அல்லது)**

**ஆ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டி"செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்" பற்றி விவரித்து எழுதுக.**

**44. அ) சூழலுக்கேற்ற உரையாடல் ஒன்றினை எழுதுக.**

**சூழல் : வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ்மொழியைப்பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.**

(அல்லது)

ஆ) "கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.
குறிப்புகள் : முன்னுரை – மனித வாழ்வு அறம் சார்ந்தது – இலக்கியம் காட்டும் அறம் – அறத்தான் வருவதே இன்பம் – முடிவுரை.

(அல்லது)

ஆ) நீங்கள்சென்றுவந்த அரசுப்பொருட்காட்சியில் அறிவிப்பு, அமைப்பு, சிறு அங்காடிகள், நிகழ்த்தப்பட்ட கலைகள், பேச்சரங்கம், அரசின் நலத்திட்டங்கள் குறித்த விளக்க அரங்குகள் போன்றவற்றைக் குறிப்புகளாகக் கொண்டு கட்டுரை ஒன்றை எழுதுக.

---

## விடைகுறிப்புகள்

### பகுதி – I

1. ஈ) தலையில் கல் சுமப்பது
2. ஈ) வினைத்தொகை, உவமைத் தொகை
3. ஆ) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
4. அ) அகவற்பா
5. ஈ) இரா. இளங்குமரனார்
6. ஆ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
7. ஈ) வானத்தையும் பேரொலியையும்
8. இ) வலிமையை நிலைநாட்டல்
9. ஆ) சமூகப்பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
10. இ) அன்மொழித்தொகை
11. ஆ) ஆலமரம், வேலமரம் – ௪ ,உ
12. ஆ) குமரகுருபரர்
13. ஈ) செங்கீரை
14. அ) எண்ணும்மை
15. இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது

### பகுதி – II

பிரிவு – 1

16. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 170 )
17. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 50 )
18. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 88 ) ஆ) ( 88 )
19. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 253 )
20. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 279 )
21. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 117 )

பிரிவு – 2

22. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 77 ) ஆ) ( 77 )
23. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 36 )
24. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 222 )
25. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 152) ஆ) (152)
25. மாற்றுவினா அ) (151) ஆ) ( 151 )
26. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 346 )
27. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 94 )
28. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 188 ) ஆ) (188 )

### பகுதி – III

பிரிவு – 1

29. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 196 )
30. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 59 )
31. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 246 )

பிரிவு – 2

32. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 12 )
33. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 289 )
34.அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 5 ) ஆ) ( 7 )

பிரிவு – 3

35. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 341 )
36. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 107 )
37. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 304 )

பகுதி – IV

38. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 66 ) ஆ) ( 259)
39. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 309 ) ஆ) (149 )
40. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (99 )
41. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (348 )
42.அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 315 ) ஆ) (40 )42.மாற்றுவினா (162 )

பகுதி – V

43. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 324) ஆ) (124 )
44. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 31 ) ஆ) (174 )
45. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 310 ) ஆ) (230 )

---

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மாதிரி வினாத்தாள் – 3

**பகுதி – I (மதிப்பெண்கள் : 15)**

**(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 x 1 = 15**

**1. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்ட தொடரைத் தேர்க.**

அ) திருவள்ளுவர், ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று “அறுதியிட்டுக்” கூறுகிறார்.
ஆ) திருவள்ளுவர், ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று “அறுதியிட்டுக்” கூறுகிறார்.
இ) திருவள்ளுவர், “அறிவுடையார், எல்லாம் உடையார்” என்று, அறுதியிட்டுக் கூறுகிறார்.
ஈ) "திருவள்ளுவர்", ‘அறிவுடையார் எல்லாம் உடையார்’ என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

**2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க**

| | | |
|---|---|---|
| அ. கொண்டல் | – | 1. மேற்கு |
| ஆ. கோடை | – | 2. தெற்கு |
| இ. வாடை | – | 3. கிழக்கு |
| ஈ. தென்றல் | – | 4. வடக்கு |

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 3, 4, 1, 2

**3. புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க**

தவழும்போது ஒரு பெயர்
விழும்போது ஒரு பெயர்
உருளும்போது ஒரு பெயர்
திரண்டோடும்போது ஒரு பெயர் – அவை என்ன ?

அ) நீர், மழை, ஆறு, ஓடை ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்
இ) மாரி, கார், நீர், புனல் ஈ) மழை, புனல், மேகம், நீர்

**4. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்............**
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

**5. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று .........., ................ வேண்டினார்.**
அ) கருணையன் எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக
இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

**6. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது–**
அ) திருக்குறள் ஆ) புறநானூறு
இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

**7. தென்னை மரங்கள் நிறைந்த பகுதியைக் குறிப்பிடும் வழா நிலை–**
அ) தென்னந்தோட்டம் ஆ) தென்னஞ்சோலை
இ) தென்னந்தோப்பு ஈ) தென்னங்காடு

**8. "அறிவைப் பெருக்கி அறிவைத் திருத்தி**
**மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது ?**
அ) தமிழ் ஆ) அறிவியல்
இ) கல்வி ஈ) இலக்கியம்

**9. "கானடை" என்னும் சொல்லைப் பிரித்தால் பொருந்தாத பொருளைக் குறிப்பிடுக.**
அ) கான் அடை – காட்டைச் சேர் ஆ) கால் உடை – காலால் உடைத்தல்
இ) கான் நடை – காட்டுக்கு நடத்தல் ஈ) கால் நடை – காலால் நடத்தல்

**10. " கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே –**
அ) பாடிய : கேட்டவர் ஆ) பாடல் : பாடிய
இ) கேட்டவர் : பாடிய ஈ) பாடல் : கேட்டவர்

**11. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**
**தலைப்பு : செயற்கை நுண்ணறிவு**
**குறிப்புகள்: 1) கண்காணிப்பு கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. 2) திறன் பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.**
அ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.
ஆ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*"அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி,*
*கன்று ஏரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து*
*சேர்ந்த செயலைச் செப்பம் போகி,*
*அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்*
*சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி*
*நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்*
*மான விறல்வேள் வயிரியம் எனினே,"*

**12. "அசைஇ"– இச்சொல்லின் இலக்கணக்குறிப்பு ...........**
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை
இ) சொல்லிசை அளபெடை ஈ)செய்யுளிசை அளபெடை

**13. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" – இவ்வடியில் "பாக்கம்" என்னும் சொல்லின் பொருள் ...........**
அ) சிற்றூர் ஆ) பேரூர்
இ) கடற்கரை ஈ) மூதூர்

**14. பாடல் இடம்பெற்ற நூல் ...........**
அ) சிலப்பதிகாரம் ஆ) மலைபடுகடாம்
இ) முல்லைப்பாட்டு ஈ) காசிக்காண்டம்

**15. பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்கள்........**

அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு
ஆ) அன்று, அவண், அசைஇ, அல்கி
இ) சேந்த, செயலை, செப்பம், சிலம்பு
ஈ) அல்கி, எய்தி, போகி, எனினே

பகுதி – II ( மதிப்பெண்கள் : 18)

பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4 x 2 = 8**

**16. எதற்காக எழுதுகிறேன் ? என்று ஜெயகாந்தன் கூறிய காரணம் ஒன்றினைக் குறிப்பிடுக.**

**17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ) ஒரு நாட்டு வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் அமைந்திருக்கும்.

ஆ) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த தமிழ்ப் பெருமகனார் தமிழ்த்திரு இரா.இளங்குமரனார்

**18. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது ?**

**19. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து இரண்டு குறிப்புகளை எழுதுக.**

**20. முல்லை நிலத்திலிருந்தும் மருதநிலத்திலிருந்தும் கிடைத்த உணவுப்பொருள்கள் யாவை ?**

**21. மலைமேல் பாதுகாப்பாக நின்றுகொண்டு யானைப்போரைக் காணும் உவமையைக் கொண்ட திருக்குறளை எழுதுக.**

பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5 x 2 = 10**

**22. "பொறித்த" – பகுபத உறுப்பிலக்கணம் காண்க**

**23.தொடரில்விடுபட்டவண்ணச்சொற்களைஉங்கள்எண்ணங்களால் பொருத்தமுற நிரப்புக**

அ. வானம்......... தொடங்கியது. மழைவரும் போலிருக்கிறது.

ஆ. கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ............... புல் வெளிகளில் கதிரவனின் .............. வெயில் பரவிக்கிடக்கிறது.

இ. அனைவரின் பாராட்டுகளால், வெட்கத்தில் பாடகரின் முகம் ...............

**24.** இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது ? இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா ?

**மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.**

**25. உணவு, விருந்து சார்ந்த பழமொழி ஒன்றினையும், விழிப்புணர்வுத் தொடர் ஒன்றினையும் எழுதுக.**

**26. "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது" – இக்குறளில் பயின்றுவந்துள்ள அணியின் இலக்கணம் யாது ?**

**27. கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**

அ) இயற்கை – செயற்கை ஆ) தான் – தாம்

**28. கலைச்சொற்கள் தருக.**

அ) Belief ஆ) Renaissance

**(குறிப்பு : செவிமாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா)**

**மரபுத் தொடர்களைப் பொருளறிந்து தொடரில் அமைக்க :**

அ) கண்ணும் கருத்தும் ஆ) மனக்கோட்டை

## பகுதி – III ( மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**29. "புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது" – இதுபோல் இளம் பயிர்வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைத்து எழுதுக.**

**30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர்புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

**அ) போர் அறம் என்பது எவற்கைக் குறிக்கிறது ?**

**ஆ) ஆவூர் மூலங்கிழார் போர் அறம் குறித்துக் குறிப்பிடுவது யாது ?**

**இ) போரில் யாருக்கெல்லாம் தீங்கு வராமல் போர்புரிய வேண்டும் என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன ?**

**31. காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த உங்கள் கருத்துகள் மூன்றினை எழுதுக.**

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 x 3 = 6**

**32. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார் ? ஏன் என்பதை எழுதுக.**

பெரிய கத்தி, இரும்பு ஈட்டி, உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்

**33. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன் ?**

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**அ) "சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின் "எனத் தொடங்கி" நன்னர் நன்மொழி கேட்டனம்" என முடியும் முல்லைப் பாட்டு.**

**(அல்லது)**

**ஆ) "மாற்றம் எனது மானிடத் தத்துவம்" எனத் தொடங்கி "தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம் !" என முடியும் காலக்கணிதப் பாடல்.**

### பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**35. "தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.**

**36. தன்மையணி என்பதனை விளக்கி, அதன் வகைகளைக் குறிப்பிடுக.**

**37. கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது ; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப்பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன; – காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.**

பகுதி – IV ( மதிப்பெண்கள்:25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25

38. அ) ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

(அல்லது)

ஆ) கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர்தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

39. அ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் கூறி, உங்கள் நண்பரையும் அந்நூலினைப் படிக்குமாறுப் பரிந்துரைத்து நண்பருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் குறுங்கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு எட்டுவரிகளில் கவினுற கவிதை ஒன்று எழுதுக.



41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

நூலக உறுப்பினர் படிவம்

.................... மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ..........................................

உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் :........................... உறுப்பினர் எண் :..................

1. பெயர் ..........................................
2. தந்தை பெயர் ..........................................
3. பிறந்த நாள் ........................................
4. வயது ..........................................
5. படிப்பு ..........................................
6. தொலைபேசி எண் / அலைபேசி எண் ..........................................
7. முகவரி ..........................................
   (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ..........................................

நான் ................................. நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத் தொகை ரூ. ......... சந்தா தொகை ரூ, ............... ஆக மொத்தம் ரூ. ............... செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன் ........... அவர்களை எனக்கு நன்குதெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணையாளர் கையொப்பம்

அலுவல முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

**42. அ) தூய்மையான காற்றைப் பெறுவதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றை ஐந்து தொடர்களில் பட்டியலிடுக.**

**(அல்லது)**

**ஆ) ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.**

| | |
|---|---|
| *யாழிசை* | *It's like new lute music* |
| *அறைக்குள்யாழிசை* | *Wondering at the lute music* |
| *ஏதென்று சென்று* | *Coming from the chamber* |
| *எட்டிப்பார்த்தேன்;* | *Entered I to took up to instill* |
| *பேத்தி,* | *My grand-daughter* |
| *நெட்டுருப் பண்ணினாள்* | *Learning by rote the verses* |
| *நீதிநூல் திரட்டையே,* | *Of a didactic compilation.* |
| *பாரதிதாசன்* | *Translated by* **Kavignar Desini** |

அ) Lute music – ஆ) Grand-daughter - இ) To look up –

ஈ) Rote – உ) Didactic compilation –

**(குறிப்பு) செவி மாற்றுத்திறனாளர்களுக்கானமாற்று வினா.**

**உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்கஇலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான், துன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான். மெய்பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய்பேசும் நா மனிதனை தாழ்த்துகிறது."பிழையா நன்மொழி" என்று வாய்மையை நற்றிணை குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாகப் "பொய் மொழிக் கொடுஞ்சொல்" என்று பொய்யைக் குறிப்பிடுகிறது. நிலம் புடைபெயர்ந்தாலும் பொய் சொல்லக்கூடாது என்பது பல இலக்கியங்களில் வற்புறுத்தப்பட்டுள்ளது.

**(i) வாய்மையை நற்றிணை எவ்வாறு குறிப்பிடுகின்றது ?**

**(ii) வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை இலக்கியங்கள் எவ்விதம் கூறுகின்றன ?**

**(iii) மனிதனைத் தாழ்த்துவது எது ?**

**(iv) நிலம் புடைபெயர்ந்தாலும் செய்யக்கூடாதது எது ?**

**v) நாக்கு எதனால் அதிசயத் திறவுகோலாகிறது ?**

## பகுதி – V ( மதிப்பெண்கள்:24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 x 8 = 24**

**43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைகுறிப்புகளை விரிவா க எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழமையும் – இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள்– அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இவை குறித்த உங்கள் கருத்துகளை நாளிதழ் ஒன்றிற்கான தலையங்கமாக எழுதுக.**

**44. அ) "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் ஒரு விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்றினை எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.**

45. அ) "விசும்பின் துளியும் பசும்புல் தலையும்" என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக.

குறிப்புகள் :முன்னுரை – இயற்கையோடு இயைந்து வாழ்வோம் – வானத்து மழைநீரைப் பூமியில் காப்போம் – மழைக்கு ஆதாரமான மரங்களை வளர்ப்போம் – முடிவுரை.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்றை எழுதித் தலைப்பிடுக.

குறிப்புகள் :முன்னுரை – சாலைப்பாதுகாப்பு உயிர்ப்பாதுகாப்பு – சாலை விதிகள் – ஊர்தி ஒட்டுநருக்கான நெறிகள் – விபத்துகளைத் தவிர்ப்போம் விழிப்புணர்வு தருவோம் – முடிவுரை.

---

## விடைகுறிப்புகள்

### பகுதி – I

1. ஆ) திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று "அறுதியிட்டுக்" கூறுகிறார்.
2. ஆ) 3, 1, 4, 2
3. ஆ) மேகம், மழை, நீர், வெள்ளம்
4. இ) குறிஞ்சி, மருதம், நெய்தல், நிலங்கள்
5. அ) கருணையன், எலிசபெத்துக்காக
6. ஈ) சிலப்பதிகாரம்
7. இ) தென்னந்தோப்பு
8. இ) கல்வி
9. ஆ) கால் உடை – காலால் உடைத்தல்
10. ஈ) பாடல் : கேட்டவர்
11. ஆ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.
12. இ) சொல்லிசை அளபெடை
13. அ) சிற்றூர்
14. ஆ) மலைபடுகடாம்
15. அ) அன்று, கன்று, அலங்கு, சிலம்பு

### பகுதி – II

#### பிரிவு – 1

16. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (321 )
17. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 22 ) ஆ) ( 22 )
18. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (253 )
19. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (123 )
20. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 86 )
21. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (236 )

#### பிரிவு – 2

22. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 67 )
23. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (233 )
24. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (179 )
25. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (100 )
26. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (341 )
27. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (146 ) ஆ) (146 )
28. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (314 ) ஆ) (314 )

28. மாற்றுவினா அ) (308) ஆ) (308)

### பகுதி – III

#### பிரிவு – 1

29. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 21 )
30. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (284 )
31. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 86 )

#### பிரிவு – 2

32. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (235 )
33. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (171 )
34. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 5 ) ஆ) ( 7 )

பிரிவு – 3

35. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 303)
36. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 343)
37. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (224)

பகுதி – IV

38. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 98 ) ஆ) ( 334 )
39. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (187 ) ஆ) ( 273 )
40. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 152 )
41. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 186 )
42. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண்( 52 ) ஆ) (185) 42.மாற்றுவினா ( 285)

பகுதி – V

43. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 22 ) ஆ) (198 )
44. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (138 ) ஆ) (337)
45. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 52 ) ஆ) (150 )

---

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மாதிரி வினாத்தாள் – 4

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

**(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** **15 x 1 = 15**

**1. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக.**
**பச்சரிசியைக் கொண்டு......... செய்து பாசிப்பருப்பினை............. வறுத்து ............. பிடித்து கேரட்டைத் துருவி நெய்யிட்டு............ செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக்கிழங்கைச் சீவி ............செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.**
அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா ஆ) சீவல், உருண்டை, அல்வா, சீவல்
இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல் ஈ) உருண்டை, சீவல், அல்வா, பொங்கல்

**2. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க**
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) ஏர், உழவு, மாடு, மண் ஈ) உழவு, ஏர், மண், மாடு

**3. பாரதியார் காற்றை "மயலுறுத்து" அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர் –**
அ) மணம் வீசும் காற்றாய் நீ வா ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீவா
இ) மயிலாடும் காற்றாய் நீ வா ஈ) மகரந்தம் சுமந்துகொண்டு நீ வா

**4. மேன்மை தரும் அறம் என்பது.............**
அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன்பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

**5. இலையுதிர்காலம் ................ சருகாயின!**
**மழைக்காலம் ................ தழைத்தன!**
**சருகுகளோ செழுமையான உரங்களாயின! – புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக.**
அ) மரங்களெல்லாம், கிளை பரப்பின ஆ) காடெல்லாம், வளர்ந்தன
இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம் ஈ) மலையெல்லாம், முளைத்தன

**6. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன ?**
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்குவறுமை இல்லாததால்

**7. பின்வருவனவற்றுள் முறையான தொடர்**

அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு
ஆ) தமிழர் வாழை இலைக்கு பண்பாட்டில் தனித்த இடமுண்டு
இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்கு தனித்த இடமுண்டு
ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு

**8. கருப்பொருளுக்கேற்ற உரிப்பொருளைப் பொருத்துக.**

| | | |
|---|---|---|
| அ. குறிஞ்சி | – | 1. உப்பு விளைவித்தல் |
| ஆ. முல்லை | – | 2. நெல்லரிதல் |
| இ. மருதம் | – | 3. நிரைமேய்த்தல் |
| ஈ. நெய்தல் | – | 4. தேனெடுத்தல் |

அ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1 ஆ) அ–3, ஆ–2, இ–4, ஈ–1
இ) அ–1, ஆ–3, இ–2, ஈ–4 ஈ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3

**9. குலசேகர ஆழ்வார் "வித்துவக்கோட்டம்மா" என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.**

**பூனையார் பால்சோற்றைக் கண்டதும் விரைந்து வருகிறார்.**

**– ஆகியதொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதிகள் முறையே –**

அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

**10. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை–**

அ) குலை வகை ஆ) மணி வகை
இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

**11. வாய்மையே மழைநீராகி – இத்தொடரில் வெளிப்படும் அணி.**

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம்
இ) தீவகம் ஈ) உருவகம்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*"அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி*
*மருளை அகற்றி மதிக்கும் தெருளை*
*அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்*
*பொருத்துவதும் கல்வியென்றே போற்று"*

**12. பாடல் இடம்பெற்ற நூல்..............**

அ) நீதிவெண்பா ஆ) புறநானூறு
இ) வெற்றி வேற்கை ஈ) கொன்றை வேந்தன்

**13. பாடலின் சீர் மோனைச் சொற்கள் ..............**

அ) அருளை, அருத்துவதும் ஆ) அருளை, அறிவை
இ) அகற்றி, அருந்துணையாய் ஈ) அறிவை, அகற்றி

**14. அருந்துணையாய் – இச்சொல்லைப் பிரித்தால் ..................**

அ) அருந்துணை + யாய் ஆ) அருந்து + துணையாய்
இ) அருமை + துணையாய் ஈ) அரு + துணையாய்

**15. உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது..............**

அ) அன்பு ஆ) கல்வி
இ) மயக்கம் ஈ) செல்வம்

## பகுதி – II ( மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4 x 2 = 8**

**16. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.**

**17. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**

18. "கரப்பிடும்பை இல்லார்" – இத்தொடரின் பொருளை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

19. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) செயற்கை நுண்ணறிவுக்கருவியான வாட்சன், சில நிமிடங்களில் நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

ஆ) வேர்ட்டுஸ்மித் என்ற எழுத்தாளி, தகவல்களைக் கொண்டு சில நொடிகளில் அழகான கட்டுரையை உருவாக்கிவிடும்.

20. வறுமையிலும் படிப்பின் மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.

21. "விடல்" என முடியும் திருக்குறளை எழுதுக.

## பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5x2=10

22. கலைச்சொல் தருக.

அ) Aesthetics ஆ) Myth

(குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா)

பொருத்தமானவற்றைச் சொற்பெட்டியில் கண்டு எழுதுக

| கவிழும், அவிழும், தயங்கும், தங்கும் |
|---|

காலை ஒளியினில் மலரிதழ் ................

சோலைப் பூவினில் வண்டினம் ................

மலைமுகட்டில் மேகம் ...............

அதைப் பார்க்கும் மனங்கள் செல்லத் .............

23. தண்ணீர்குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதி, தொடர்களில் அமைக்க.

24.
*கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்*
*கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை*
*காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை*
*செய்குத்தம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ*

பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களில் எவரேனும் நான்கு புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.

25. பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்ட, போரிடும் திணை குறித்து எழுதுக.

26. "உரைத்த" – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. கல், ஆடு, கீரை, மக்கள் – இச்சொற்களின் கூட்டப்பெயர்களை எழுதுக.

28. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

அ) கண்ணும் கருத்தும் ஆ) கயிறு திரித்தல்

## பகுதி – III ( மதிப்பெண்கள் : 18)

## பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6

29. ஜெயகாந்தனின் "தர்க்கத்திற்கு அப்பால்" சிறுகதையின் கதை மாந்தர் ஒருவரின் சிறப்புக் கூறு ஒன்றினைக் குறிப்பிட்டு எழுதுக.

30. "பொய்க்கால் குதிரையாட்டம்" என்னும் நிகழ்கலை குறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடைதருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழி காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழைப்பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி

வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

**அ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ?**

**ஆ) பெய்த மழை – இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.**

**இ) உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை ?**

## பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 x 3 = 6**

**32. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.**

**33. "கவிஞன் யானோர் காலக்கணிதம்" – எனத்தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களைக் கவர்ந்த மூன்று தொடர்களை எழுதி காரணத்தைக் குறிப்பிடுக.**

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**அ) "அன்னை மொழியே "எனத் தொடங்கி"பேரரசே" என முடியும் "அன்னை மொழியே" பாடல்.**

**(அல்லது)**

**ஆ) "செம்பொ னடிச்சிறு கிண்கிணியோடு" எனத் தொடங்கி "சுட்டி பதிந்தாட" என முடியும் "முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்" பாடல்.**

## பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**35. "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழா துஞற்று பவர்" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.**

**36. நிரல் நிரை அணியை விளக்குக.**

**37. கொண்டு கூட்டுப் பொருள் கோளினை விளக்கி, எடுத்துக்காட்டு ஒன்று தருக.**

## பகுதி – IV ( மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25**

**38. அ) முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலையும் நிகழ்கால வாழ்க்கைச் சூழலையும் ஒப்பிட்டு எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) இரண்டாம் இராசராச சோழனது மெய்க்கீர்த்திப் பாடலின் அழகிய நயத்தைச் சுவைபட விளக்குக.**

**39. அ) " மரம் இயற்கையின் வரம்" என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் , முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) "பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்" – குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி, அதனைச் செயல்படுத்தத் தலைமை ஆசிரியரின் ஒப்புதல் வேண்டி, தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.**

**40. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் விளக்கி எழுதுக.**



**41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினைப் பூர்த்தி செய்க.**

**நூலக உறுப்பினர் படிவம்**

**.................... மாவட்ட நூலக ஆணைக்குழு**

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் .........................................

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் :........................... உறுப்பினர் எண் : ...................

1. பெயர் ..........................................
2. தந்தை பெயர் ..........................................
3. பிறந்த நாள் .........................................
4. வயது ..........................................
5. படிப்பு ..........................................
6. தொலைபேசி / அலைபேசி எண் .........................................
7. முகவரி ..........................................
   (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ..........................................

நான் ................................. நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத் தொகை ரூ. ......... சந்தா தொகை ரூ, ............... ஆக மொத்தம் ரூ. ............... செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :

நாள் : தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன் ........... அவர்களை எனக்கு நன்குதெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணையாளர் கையொப்பம்

அலுவல முத்திரை (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

**42. அ) பள்ளியில் நான், வீட்டில் நான் – என்னும் தலைப்புகளில் நீங்கள், பள்ளியிலும் வீட்டிலும் நடந்துகொள்ளும் முறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.**

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க :**

***Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was the fit for cultivation, as it had the most fertile lands. The properity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensible by the ancient Tamils***

**(குறிப்பு) செவி மாற்றுத்திறனாளிகளுக்கானமாற்று வினா.**

**உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பிறருக்கு உதவுதல் என்பதைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் "உதவியாண்மை" என்று குறிப்பிடுகிறார். தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்கவேண்டிய நிலை எது என்பதை மனிதன்உணர்கிறான் எனலாம். அன்பு என்ற சுடருக்குத் தியாகம் தானே எண்ணெயாக இருக்க முடியும் ? பிறர் துன்பத்தைத் தம் துன்பமாகக் கருதி, உதவுதல் சான்றோர்க்குக் கடன் என்கிறார் நல்லந்துவனார். அவ்வாறே, உண்மையான செல்வம் என்பது பிறர் துன்பம் தீர்ப்பதுதான்" என்கிறார் நல்வேட்டனார்.

**(i) அன்பு என்னும் சுடருக்கு எண்ணெய்யாக இருப்பது எது ?**

(ii) சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் எதைக் காட்டுகின்றன ?
(iii) உண்மையான செல்வம் என்று நல்வேட்டனார் குறிப்பிடுவது எதனை ?
(iv) உதவி செய்தலை "உதவியாண்மை" என்று குறிப்பிடுபவர் யார் ?
v) சான்றோர்க் கடனாக நல்லந்துவனார் குறிப்பிடுவது யாது ?

பகுதி – V ( மதிப்பெண்கள்:24)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 x 8 = 24

43. அ) தமிழின் இலக்கிய வளம் – கல்விமொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழக்குச் செழுமை.
மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு "செம்மொழி தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை" என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு "நடுப்பக்கக் கட்டுரை" ஒன்றிற்கான செய்திகளை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்களைக் கவர்ந்த எவரேனும் ஓர் அறிஞர் அல்லது அரசியல் தலைவர், தம் வாழ்வில் நடந்த நிகழ்வுகளைத் தாமே சொல்வதைப் போன்று தன்வரலாறாக மாற்றி எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் "கோபல்லபுரத்து மக்கள்" கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

ஆ) "என்மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும். எல்லோரும் நலமுடன் வாழ்வார்கள்" என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்ப தன்னலமற்ற பண்புகளைக் கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும் என்பதனை நீங்கள் அறிந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

45. அ) குறிப்புகளைப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.
குறிப்புகள் :முன்னுரை – தமிழன் அறிவியலின் முன்னோடி – விண்வெளியும் கல்பனாச் சாவ்லாவும் – விண்ணியில் அறிவில் நமது கடமை – முடிவுரை.

(அல்லது)

ஆ) முன்னுரை – உழவே தமிழர்ப்பண்பாட்டின் மகுடம் – உழவுத்தொழிலுக்கு வந்தனை செய்வோம் – சுழன்றும் ஏர்ப்பினது உலகம் – முடிவுரை.
இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி, பொருத்தமான தலைப்பிடுக.

---

## விடைகுறிப்புகள்

### பகுதி – I

1. இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்
2. ஈ) உழவு, ஏர், மண், மாடு
3. ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா
4. அ) கைம்மாறு கருதாமல் அறம் செய்வது
5. இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்
6. ஈ) அங்கு வறுமை இல்லாததால்
7. இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு
8. அ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1
9. இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி
10. ஆ) மணிவகை
11. ஈ) உருவகம்
12. அ) நீதிவெண்பா
13. ஆ) அருளை, அறிவை
14. இ) அருமை + துணையாய்
15. ஆ) கல்வி

## பகுதி – II

### பிரிவு – 1

16. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 130 )
17. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 64 )
18. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 235 )
19.அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 125 ) ஆ) ( 125 )
20. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 242 )
21. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 8 )

### பிரிவு – 2

22.அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 234 ) ஆ) ( 233 ) 22. மாற்றுவினா (233 )
23. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 73 )
24. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 348 )
25. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 268 )
26. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 94 )
27. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 41 )
28.அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 308 )

## பகுதி – III

### பிரிவு – 1

29. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (323 )
30. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (196 )
31. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (146 )

### பிரிவு – 2

32. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 65 )
33. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 293 )
34.அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 5 ) ஆ) ( 6 )

### பிரிவு – 3

35. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 305 )
36. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 342 )
37. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 181 )

## பகுதி – IV

38. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 66 ) ஆ) ( 254 )
39. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 77 ) ஆ) ( 189 )
40. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (152 )
41. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (186 )
42. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (190) ஆ)(270 ) 42. மாற்றுவினா ( 285 )

## பகுதி – V

43. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 158 ) ஆ) ( 247 )
44. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 102 ) ஆ) ( 311 )
45. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 147 ) ஆ) ( 274 )

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மாதிரி வினாத்தாள் – 5

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 x 1 = 15

**1. செய்தி 1 : ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15 ஆம் நாளை உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.**

**செய்தி 2 : காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே என்கிறது காற்று**

**செய்தி 3 : காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல் கடந்து வணிகம் செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள் !**

அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி

இ) செய்தி 3 மட்டும் சரி ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி

**2. "சங்க இலக்கியங்கள், ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன" – இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான விரியைக் கண்டறிக**

அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை – நல்வினை, தீவினை

ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை

இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் – அறம், பொருள், இன்பம்

ஈ) குறிஞ்சி, முல்லை, மலை, காடு, வயல் – பனை, திணை

**3. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர் – இத் தொடருக்கான வினா எது ?**

அ) கரகாட்டம் என்றால் என்ன ?

ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?

இ) கரகாட்டத்தின் வெவ்வேறு வடிவங்கள் யாவை ?

ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?

**4. "வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்" இவ்வடி குறிப்பிடுவது............**

அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை

இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

**5. "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்– கலைச்**
**செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்" – பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து –**

அ) பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்

ஆ) பலகலைகள் தமிழில் புதிதாகத் தோன்றவேண்டும்

இ) உலகெங்கும் காணப்படும் செல்வங்கள் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்.

ஈ) கலைச்செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து கண்டுகளிக்கவேண்டும்.

**6. பழமொழிகளைப் பொருத்துக.**

அ. ஆறில்லா ஊருக்கு – 1. சோற்றுக்கு ஒரு சோறு பதம்

ஆ. உப்பில்லாப் பண்டம் – 2. நூறு வயது

இ. நொறுங்கத் தின்றால் – 3. குப்பையிலே

ஈ. ஒரு பானை – 4. அழகு பாழ்

அ) அ–4, ஆ–1, இ–3, ஈ–2 ஆ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1

இ) அ–2, ஆ–4, இ–1, ஈ–3 ஈ) அ–3, ஆ–1, இ–4, ஈ–2

**7. திணைவழுவமைதி**

அ) "இந்தப் பாப்பா தூங்கமாட்டாள்" என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது.

ஆ) இரவெல்லாம் நாய் கத்திக்கொண்டே இருந்தது.

இ) "வாடாச் செல்லம்" என்று தாய் மகளை அழைப்பது.

ஈ) "என் தங்கை வந்தாள்" என்று பசுவைக் குறிப்பிடுவது.

**8. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது.**
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

**9. தமிழ்த்தொண்டு என்னும் தொடர் –**
அ) இருபெயரொட்டுப் பண்புத் தொகை ஆ) அன்மொழித்தொகை
இ) உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை ஈ) வேற்றுமைத் தொகை

**10. "உனதருளே பார்ப்பன் அடியேனே" யாரிடம் யார் கூறியது ?**
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

**11. மரபுத்தொடருக்கான பொருளைத் தேர்க.**
**ஆறப்போடுதல் –**
அ) தாமதப்படுத்துதல் ஆ) ஆற்றில் போடுதல்
இ) ஆறவைத்தல் ஈ) ஆற்றில் இறங்குதல்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*"முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்*
*மெத்த வணிகலமும் மேவலால் – நித்தம்*
*அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு*
*இணைகிடந்த தேதமிழ் ஈண்டு."*

**12. இப்பாடல் இடம்பெற்ற நூல்..........**
அ) நற்றிணை ஆ) முல்லைப்பாட்டு
இ) குறுந்தொகை ஈ) தனிப்பாடல் திரட்டு

**13. பாடலில் இடம்பெற்றுள்ள பொருத்தமான அணி............**
அ) இரட்டுற மொழிதல் அணி ஆ) தீவக அணி
இ) வஞ்சப் புகழ்ச்சி அணி ஈ) நிரல் நிறை அணி

**14. தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது..........**
அ) சங்கப் பலகை ஆ) கடல்
இ) அணிகலன் ஈ) புலவர்கள்

**15. தொழிற்பெயர் அல்லாத சொல்.............**
அ) துய்ப்பதால் ஆ) மேவலால்
இ) அணிகலன் ஈ) கண்டதால்

## பகுதி – II ( மதிப்பெண்கள் : 18)
### பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4 x 2 = 8**

**16. ஹிப்பாலஸ் பருவக்காற்று குறித்து எழுதுக.**

**17. "சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச் சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்" – இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.**

**18. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**
அ) சாலைகளின் இடப்பக்கம் வண்டிகள் செல்வதே சாலைவிதிகளில் முதன்மையான விதி.
ஆ) ஓட்டுநர் உரிமம், ஊர்தியின் பதிவுச் சான்றிதழ், ஊர்தியின் வழி மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் போன்றவற்றை ஊர்தி ஓட்டுபவர் ஒவ்வொருவரும் கட்டாயமாகக் கையில் வைத்திருக்க வேண்டும்.

**19. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர் ?**

**20. குறிப்பு வரைக – "அவையம்"**

**21. "விடல்" எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.**

பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5x2=10**

22. "அறியேன்"– பகுபத உறுப்பிலக்கணம் காண்க.

23. "தம்பீ ? எங்க நிக்கிறே ?", "நீங்க சொன்ன எடத்துலதாண்ணே ! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது" – இவ்வுரையாடலில் உள்ள பேச்சுவழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.

24. கலைச்சொல் தருக.

அ) Epic Literature ஆ) Folk Literature

(குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா)

இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

அ) சிலை, சீலை ஆ) விடு, வீடு

25. தீவக அணியின் வகைகள் யாவை ?

26. அ) ஓடிக்கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது. இத்தொடரைத் தனிச் சொற்றொடர்களாக மாற்றுக.

ஆ) அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார் – தனிச்சொற்றொடர்களை கலவைச் சொற்றொடர்களாக மாற்றுக.

27. "கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்" – இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.

28. சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்தி எழுதுக.

*"தேனிலே ஊரிய செந்தமிளின் – சுவை*
*தேரும் சிலப்பதி காறமதை*
*ஊனிலே உம்முயிற் உல்லலவும் – நிதம்*
*ஓதி யுனர்ந்திண் புருவோமே"*

பகுதி – III ( மதிப்பெண்கள் : 18)

பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2x3=6**

29. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்நிலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன. சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன.

அ) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன ?

ஆ) நிகழ்கலையின் பயன்கள் இரண்டினை எழுதுக,

இ) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாகத் திகழ்கின்றன ?

30. முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன் குறித்து எழுதுக.

31. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2x3=6**

32. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.பா.ரா "ஏர் புதிதா ?" கவிதையில் கவிபாடுகிறார் ?

**33. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுவதை ஒப்பிட்டு எழுதுக.**

| | |
|---|---|
| இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்,<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்.<br>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான் – நவீன கவிதை | கையாலே வெடுத்தா – மாரிக்குக்<br>காம்பழுகிப் போகுமின்னு<br>விரலாலே வெடுத்தா – மாரிக்கு<br>வெம்பி விடுமென்று சொல்லி<br>தங்கத் துரட்டி கொண்டு – மாரிக்குத்<br>தாங்கி மலரெடுத்தார்<br><br>– நாட்டுப்புறப் பாடல் |

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**அ) "இவ்வொன்பான் ஒழுக்கமும் வழிபடும் பண்பே" என முடியும் காசிக்காண்டப் பாடல்.**

**(அல்லது)**

**ஆ) "புண்ணியப் புலவீர் யான்" –எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடல்.**

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**35.** நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது. தந்தை என்னிடம்,"இலச்சுமி கூப்பிடுகிறாள், போய் பார்" என்றார். "இதோ சென்றுவிட்டேன்" என்றவாறு அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாட வேண்டுமா ?" என்று கேட்டு அவனை அவிழ்த்துவிட்டேன். என் தங்கை அங்கே வந்தாள். அவளிடம் "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்து நீரைக் குடித்தாள் – **இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிடுக.**

**36. "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.**

**37. அவந்தி நாட்டு மன்னன் மருதநாட்டு மன்னனுடன் போர்புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி சுருக்கமாக எழுதுக.**

**பகுதி – IV ( மதிப்பெண்கள்:25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25**

**38. அ) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.**

*கவிஞன் யானோர் காலக்கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம் !*
*இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்*
*இவைதவ றாயின் உரைப்பதென் வேலை !*
*ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்*
*அவனும் யானுமே அறிந்தவை; அறிக !*

**(அல்லது)**

**ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.**

**39. அ) "பள்ளித் தூய்மை– செயல்திட்டம்" – ஒன்றை உருவாக்கி, மாணவர்களின் சார்பாக மாணவர் தலைவரான நீங்கள், உங்கள் பள்ளியின் தலைமை ஆசிரியருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும்புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்தும் , பழுதடைந்த மின்கம்பங்களைச் சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.**

**40. காட்சியைக் கண்டு கவினுற கவிதை ஒன்றை எட்டு வரிகளில் எழுதுக.**



**41. எழுத்தர் பணியினை வேண்டி வேலைவாய்ப்பிற்காக, கொடுக்கப்பட்ட தன்விவரப்பட்டியலைப் பூர்த்தி செய்க.**

**<u>பணிவாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல்</u>**

1. பெயர் :
2. பாலினம் :
3. பிறந்த நாள் மற்றும் வயது :
4. தேசிய இனம் :
5. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
6. வீட்டு முகவரி :
7. தொலைபேசி / அலைபேசி எண் :
8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :
9. தாய்மொழி :
10. பயின்ற மொழிகள் :
11. தட்டச்சு :
12. கணினி :

மேற்கண்ட விபரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் .......................பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : இப்படிக்கு,

நாள் : தங்கள் உண்மையுள்ள

**42. அ) நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றிற்கான மதிப்புரையினைக் குறிப்புகளைப் யன்படுத்தி எழுதுக.**

**<u>குறிப்புகள்</u> : நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் – மொழிநடை – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்**

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க :**

*Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.*

**(குறிப்பு) செவி மாற்றுத்திறனாளர்களுக்கானமாற்று வினா.**

**உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

ஒரு மொழி பொது மக்களாலும் அதன் இலக்கியம், புல மக்களாலும் அமையப்பெறும். தமிழ்ப் பொது மக்கள் உயர்ந்த பகுத்தறிவுடையர். எத்துணையோ ஆராய்ச்சி நடந்துவரும் இக்காலத்திலும் எத்துணையோ மொழிகளினின்று கடன்கொண்ட ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக்

குறிக்க Leaf (லீஃப்) என ஒரே சொல் உள்ளது. ஆங்கில நூல்களிலும் வேறு பல வகைகளில் இலைகளைப் பாகுபாடு செய்தனரேயன்றி, தமிழ்ப் பொதுமக்களைப் போல வன்மை மென்மை பற்றித் தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்தாரில்லை. இத்தகைய பாகுபாடு ஏனைய உறுப்புகளுக்குள்ளும் செய்யப்பட்டது.

தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.

**(i) ஒரு மொழியும், அதன் இலக்கியமும் எவ்வாறு அமையும் ?**

**(ii) தமிழ் மக்கள் இலைகளை எவ்வாறு பாகுபாடு செய்தனர் ?**

**(iii) தமிழ்நாட்டின் பொருள்வளத்தினை எவ்விதம் விளங்கிக்கொள்ளலாம் ?**

**(iv) மொழி ஆராய்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.**

**(v) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.**

**பகுதி – V ( மதிப்பெண்கள்:24)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 x 8 = 24**

**43. அ) சங்க இலக்கியங்களில் காணப்படும் ஐந்து அறக்கருத்துகளைத் தொகுத்து, அவை இன்றும் தேவையே என்பதனை நிறுவுக.**

**(அல்லது)**

**ஆ) காற்று பேசியதைப்போல நிலம், நீர், வானம் பேசுவதாகவும் அவை இன்றைய சுற்றுச்சூழல் பாதுகாப்பினை வலியுறுத்துவதாகவும் ஓர் உரையாடல் அமைக்க.**

**44. அ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.**

| மகளிர் நாள் விழா |
|---|
| இடம் : பள்ளிக் கலையரங்கம்      நாள் : 08.03.2019 |
| கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் – தலைமை ஆசிரியரின் வரவேற்பு – சிறப்பு விருந்தினர் இதழாளர் கலையரசியின் சிறப்புரை – ஆசிரியர்களின் வாழ்த்துரை – மாணவத் தலைவரின் நன்றியுரை. |

**(அல்லது)**

**ஆ) பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயல், "அன்னமய்யா" புதிதாக வந்தவருக்கு உணவிட்ட செயலோடு ஒத்திருத்தலை "கோபல்லபுரத்து மக்கள்" கதை வழி விளக்கி எழுதுக.**

**45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதி, தலைப்பு ஒன்று தருக.**

**<u>குறிப்புகள்</u> :முன்னுரை – மொழிபெயர்ப்பு நூல்கள் – எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் – மொழிபெயர்ப்பும் கல்வியே – முடிவுரை.**

**(அல்லது)**

**ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப்பொருள்காட்சிக்குச்சென்று வந்த நிகழ்வைக் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரையாக்குக.**

**குறிப்புகள் : முன்னுரை – பொருள்காட்சி நடைபெறும் இடம் – பல்வேறு விளையாட்டு அமைப்புகள் – பலவிதமான வணிகம் – அரசின் நலத்திட்ட அரங்குகள் – மகிழ்வூட்டும் மக்கள் கூட்டம் – பாரம்பரிய நிகழ்கலைகள் – முடிவுரை.**

---

## விடைகுறிப்புகள்

**பகுதி – I**

1. ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி
2. ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை – உயர்திணை, அஃறிணை
3. ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?
4. இ) இடையறாது அறப்பணி செய்தலை
5. அ) பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும்.
6. ஆ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1

7. ஈ)" என்தங்கை வந்தாள்" என்று பசுவைக் குறிப்பிடுவது
8. ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்
9. இ) உறுபும் பயனும் உடன்தொக்கத் தொகை
10. ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
11. ஆ) தாமதப்படுத்துதல்
12. ஈ) தனிப்பாடல் திரட்டு
13. அ) இரட்டுற மொழிதல் அணி
14. ஆ) கடல்
15. இ) அணிகலன்

பகுதி – II

பிரிவு – 1

16. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 50 )
17. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 205 )
18. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 317 )
19. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 257 )
20. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 279 )
21. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 8 )

பிரிவு – 2

22. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 335 )
23. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 308 )
24.(அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 114 ) ஆ) ( 114 ) 24. மாற்றுவினா (113)
25. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 341 )
26. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 228 )
27. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 117 )
28. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 41 )

பகுதி – III

பிரிவு – 1

29. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 202 )
30. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 323 )
31. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 86 )

பிரிவு – 2

32. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 250 )
33. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 206 )
34. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 5 ) ஆ) ( 6 )

பிரிவு – 3

35. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 143 )
36. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 304 )
37. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 269 )

பகுதி – IV

38. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 293 ) ஆ) ( 13 )
39. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 189 ) ஆ) ( 78 )
40. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 81 )
41. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 78 )
42.அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 187 ) ஆ) (109 ) 42. மாற்றுவினா ( 24 )

பகுதி – V

43. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 281 ) ஆ) ( 53 )
44. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 263 ) ஆ) (102 )
45. அ)விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 159 ) ஆ) (230 )

## பெற்றோர் ஆசிரியர் கழகம் மாதிரி வினாத்தாள் – 6

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

**(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 x 1 = 15**

**1. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி.**

அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல்நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல்நீர் ஒலித்தல் ஈ) கடல்நீர் கொந்தளித்தல்

**2. வெளிநாட்டில் வேலைசெய்துகொண்டிருக்கும் தாயைப் பிரிந்திருக்கும் மகள் ........... வருந்திக்கொண்டிருந்தாள். –விடுபட்ட இடத்தில் பொருத்தமான உவமையைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க.**

அ) தாமரை இலை நீர்போல் ஆ) வாழையடி வாழையாக
இ) கண்ணினைக் காக்கும் இமைபோல ஈ) மழைமுகம் காணாப் பயிர்போல

**3. "காலின் ஏழடிப் பின்சென்று"–என்னும் பொருநராற்றுப்படை உணர்த்தும் செய்தி–**

அ) விருந்தினரின் காலைத்தொட்டு வணங்கினர்.
ஆ) விருந்தினரை ஏழு அடிவரை நடந்து சென்று வழியனுப்பினர்.
இ) எழுவர் விருந்தினரின் பின்சென்று வழியனுப்பினர்.
ஈ) ஏழுநாள்கள் விருந்தளித்துப்பின் விருந்தினரை வழியனுப்புவர்.

**4. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர்–இத்தொடரின் செயப்பாட்டு வினைத்தொடர் எது ?**

அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர்
ஆ) ஒயிலாட்டத்தில் ஒருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
இ) ஒயிலாட்டம் ஒருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றது.

**5. அன்பால் கட்டினார், அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது–**

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்
இ) உவமஉருபு ஈ) உரிச்சொல்

**6. குமரிமாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர்–**

அ) திரு. பிரகாசம் ஆ) மார்ஷல் ஏ. நேசமணி
இ) தனிநாயகம் அடிகள் ஈ) ந. முத்துசாமி

**7. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்................**

அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

**8. முல்லை நிலமக்களின் உணவுப் பொருள்கள்**

அ) வெண்நெல், வரகு ஆ) மலைநெல், திணை
இ) வரகு, சாமை ஈ) மீன், செந்நெல்

**9. வெஃகுவார்க்கில்லை, உரனசைஇ – இச்சொற்களில் உள்ள அளபெடைகள்**

அ)ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

**10. "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்"– இப்பழமொழி உணர்த்தும் சரியான பொருள்**

அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்.
ஆ) உரியகாலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.
இ) உரியகாலத்தில் காற்றைவிட வேகமாகச் செயல்பட வேண்டும்.
ஈ) உரியகாலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேட வேண்டும்.

**11. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் –**

அ) உதியன் ; சேரலாதன் ஆ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி
இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) அதியன் ; பெருஞ்சாத்தன்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்*
*கரு வளர் வானத்து இசையில் தோன்றி,*
*உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்;*
*உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"*

**12. ஊழ்ஊழ் – இலக்கணக்குறிப்பு............**

அ) இரட்டைக்கிளவி ஆ) பண்புத்தொகை இ) அடுக்குத்தொடர் ஈ) வினைத்தொகை

**13.பாடலின் ஆசிரியர்..........**

அ) கீரந்தையார் ஆ) பூதஞ்சேந்தனார் இ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார்

**14. பாடலில் உணர்த்தப்படும் கருத்து.........**

அ) தத்துவக் கருத்து ஆ) அறிவியல் செய்தி இ) நிலையாமை ஈ) அரசியல் அறம்

**15. விசும்பு, இசை, ஊழி – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே**

அ) காற்று, ஓசை, கடல் ஆ) மேகம், இடி, ஆழம்
இ) வானம், பேரொலி, யுகம் ஈ) வானம், காற்று, காலம்

**பகுதி – II ( மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 4 x 2 = 8**

**16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.**

அ)மொழிபெயர்ப்பு, மொழியில் புதுக்கூறுகளை உருவாக்கி மொழிவளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

ஆ) தமிழ்நூல்கள், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், வடமொழி, ரஷ்யமொழி, வங்கமொழி, மராத்திமொழி போன்ற பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**17. "காலக்கழுதை கட்டெறும்பானதும்" – கவிஞர் செய்தது யாது ?**

**18. வருங்காலத்தில் தேவையெனக்கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**

**19. உறங்குகின்ற கும்பகன்ன"எழுந்திராய் எழுந்திராய்" காலதூதர் கையிலே "உறங்குவாய் உறங்குவாய்"–கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள் ? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள் ?**

**20. ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கியஇயந்திரமனிதன் பெப்பர் குறித்து எழுதுக.**

**21. குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச்செய்து வாழ்பவரை உலகத்தார் உறவாகப் போற்றுவர் என்னும் பொருளைக்கொண்ட திருக்குறளை எழுதுக.**

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க. 5 x 2 = 10**

**22. தொகைச்சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.**

**முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளங்குபவை சங்க இலக்கியங்கள்.**

**23. கலைச்சொல் தருக.**

அ) Tornado ஆ) Tempest

**(குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா)**

**சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க (காடு, காற்று, நறுமணம்)**

அ) முதல் இரண்டை நீக்கினாலும் வாசனைதரும்; நீக்காவிட்டாலும் வாசனை தரும்.

ஆ) ஒரெழுத்தில் சோலை – இரண்டெழுத்தில் வனம்

**24. பத்தியிலுள்ள பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி எழுதுக.**

உங்களிடம் செவன் கோல்டு பிஸ்கட் உள்ளது. தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டை வைத்தால் தராசு ஈக்வலாக இருக்கும். பேலன்ஸாக ஒரு கோல்டு பிஸ்கட் உங்கள் கையில் இருக்கும்.

**25. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண் வற்றாகும் கீழ்" –இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.**

**26. "ஒலித்து"– பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**27. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**

அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

ஆ) வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

**28. வருகின்ற கோடைவிடுமுறையில் காற்றாலை மின்உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன். – இத்தொடர், காலவழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு ?**

**பகுதி – III ( மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**29. "நீர்" தன்னைப்பற்றிப் பேசினால்......... உங்கள் கற்பனையில் ஆறு தலைப்புகள் தருக.**

**30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர்புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

1. ஆவூர் மூலங்கிழாரின் போர் அறம் யாது ?
2. போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது ?
3. யாருக்கெல்லாம் தீங்கு வராத வண்ணம் போர்புரிய வேண்டும் ?

**31."தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்"– இடம் சுட்டிப் பொருள்விளக்குக.**

**பிரிவு – 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 x 3 = 6**

**32. "சித்தாளின் மனச்சுமைகள்**
**செங்கற்கள் அறியாது" – நாகூர்ரூமி வெளிப்படுத்தும் மனிதத்தை அவரது கவிதை வழியாகக் குறிப்பிடுக.**

**33. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**அ) "தூசும் துகிரும் ஆரமும் அகிலும்" – எனத்தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.**

**(அல்லது)**

**ஆ) "அன்னைமொழியே" எனத் தொடங்கும் பெருஞ்சித்திரனாரின் பாடல்.**

**பிரிவு – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6**

**35. " பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்**
**கண்ணோட்டம் இல்லாத கண்" – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு காண்க.**

**36. தீவக அணியினை விளக்கி, அதன் வகைகளை எழுதுக.**

**37. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.**

**பகுதி – IV ( மதிப்பெண்கள்:25)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25**

**38. அ) "முதல் மழை விழுந்ததும்"–தொடர்ந்து நிகழும் உழவுச் செயல்களை "ஏர் புதிதா ?" கவிதை கொண்டு விவரித்து எழுதி, "பொன்னேர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம்" என்பதையும் விளக்குக.**

**(அல்லது)**

**ஆ) தமிழையும் கடலையும் ஒப்பிட்டு இரட்டுற மொழியும் பாங்கிசை சந்தக்கவிமணி தமிழழகனார் வழி நின்று விளக்குக.**

**39. அ) ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உறவினருக்கு, முக்கியச் சாலைவிதிகளை விளக்கி அவற்றைக் கடைபிடிக்க வலியுறுத்திக் கடிதம் ஒன்று எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்காகப் பராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

**40. படம் உணர்த்தும் கருத்தை ஐந்து தொடர்களில் வெளிப்படுத்துக.**



**41. கொடுக்கப்பட்ட மேல்நிலை வகுப்பு சேர்க்கை விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்க.**

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு:
7. பயின்ற மொழி :
8. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :
9. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் :

| தேர்வின் பெயர் | பதிவுஎண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப் பட்டுள்ளதா ? :
11. தாய்மொழி :
12. சேரவிரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியரின் கையெழுத்து

**42. அ) கவிதையை உரையாடலாக மாற்றுக.**

**மகள் சொல்லுகிறாள் :–**

அம்மா என் காதுக்கொரு தோடு – நீ
அவசியம் வாங்கி வந்து போடு !
சும்மா இருக்க முடியாது – நான்
சொல்லிவிட்டேன் உனக்கு இப்போது !

**தாய் சொல்லுகிறாள் :–**

காதுக்குக் கம்மல் அழகன்று – நான்
கழறுவதைக் கவனி நன்று
நீதர் மொழியை வெகுபணிவாய் – நிதம்
நீ கேட்டு வந்து காதில் அணிவாய் !

**பின்னும் மகள் :–**

ஆபர ணங்கள் இல்லை யானால் – என்னை
யார் மதிப்பார் தெருவில் போனால் ?
கோபமோ அம்மா இதைச் சொன்னால் – என்
குறை தவிர்க்க முடியும்

**அதற்குத் தாய் :**

கற்பது பெண்களுக்கு ஆ பரணம் – கெம்புக்
கல்வைத்த, நகைதீராத ரணம் !
கற்ற பெண்களை இந்த நாடு – தன்
கண்ணில் ஒற்றிக் கொள்ளும் அன் போடு !

– பாரதிதாசன்

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க :**

**Malar** : Devi, switch off the lights when you leave the room.
**Devi** : Yeah. We have to save electricity.
**Malar** : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night.
**Devi** : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!

**Malar** : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
**Devi** : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lost power!

**(குறிப்பு) செவி மாற்றுத்திறனாளர்களுக்கானமாற்று வினா.**
**உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் எனப் பெயர் "விருந்தே புதுமை" என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். தனித்து உண்ணாமை என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை. அமிழ்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லோர். அத்தகையோரால்தான் உலகம் நிலைத்திருக்கிறது. விருந்தோம்பல் என்பது பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. வீட்டிற்கு வந்தவருக்கு, வறிய நிலையிலும் எவ்வழியிலேனும் முயன்று விருந்தளித்து மகிழ்ந்தனர் நம் முன்னோர். நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர் என்கிறது சிறுபாணாற்றுப்படை. விதைத்துவிட்டு வந்த நெல்லை அரிந்துவந்து, பின் சமைத்து விருந்து படைத்த திறம் பெரியபுராணத்தில் காட்டப்படுகிறது.

**(i) விருந்து குறித்து தொல்காப்பியம் குறிப்பிடுவது யாது ?**
**(ii) விருந்தோம்பல் குறித்து சிறுபாணாற்றுப்படை கூறுவது யாது ?**
**(iii) நம் முன்னோர்களின் மகிழ்ச்சி எதில் இருக்கிறது ?**
**(iv) பெரியபுராணத்தில் குறிப்பிடப்படும் விருந்தோம்பல் குறித்த செய்தியை எழுதுக.**
**(v) பெண்களின் சிறந்த பண்புகளில் ஒன்று யாது ?.**

பகுதி – V ( மதிப்பெண்கள்:24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 x 8 = 24**

**43. அ) மூன்று நிகழ்கலை கலைஞர்களை நேர்முகம் கண்டு அவர்களது கருத்துகளையும் அவர்களது மறுவாழ்விற்கான வழிமுறைகளாக நீங்கள் கருதுவனவற்றையும் குறிப்பிட்டு எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) எழுத்தாளர் "ஜெயகாந்தனின் இன்னொருமுகம்" குறித்தும் அவரிடம்,"தொடுத்த கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதில்களுமாக", ஜெயகாந்தன் பற்றி நீங்கள் அறிந்தவற்றை விளக்குக.**

**44. அ) உங்களைக் கவர்ந்த அறிவியல் அறிஞர்களின் கூற்றுகளை ஒப்பிட்டு, அவை ஸ்டீபன் ஹாக்கின் கருத்துகளோடு ஒத்திருப்பதைச் சுவைபட விளக்குக.**

**(அல்லது)**

**ஆ) குறிப்புகளைக் கொண்டு நாடகம் ஒன்றை எழுதுக.**
**மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி– கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி.**

**45. அ) முன்னுரை – விசும்பின் துளியும் பசும்புல் தலையும் – காற்று மாசு – பசுமையைக் காப்போம் – மரம் நமக்கு வரம்– மழைநீர் உயிர் நீர் – முடிவுரை. – இக்குறிப்புகளைப் பயன்படுத்தி "இயற்கையைக் காப்போம்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று படைக்க.**
**<u>குறிப்புகள்</u> : முன்னுரை – இலக்கியம் காட்டும் அறம் – அறத்தான் வருவதே இன்பம் – அறவாழ்வே பண்பாட்டின் உச்சம் – அறம் என்பதே மனிதம் – முடிவுரை.**

---

## விடைகுறிப்புகள்

பகுதி – I

1. அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல்
2. ஈ) மழைமுகம் காணாப் பயிரைப் போல
3. ஆ) விருந்தினரை ஏழு அடிவரை நடந்து சென்று வழியனுப்பினர்.

4. ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
5. அ) வேற்றுமை உருபு
6. ஆ) மார்ஷல் ஏ. நேசமணி
7. அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது.
8. இ) வரகு, சாமை
9. அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை
10. ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.
11. ஈ) அதியன், பெருஞ்சாத்தன்
12. இ) அடுக்குத் தொடர்
13. அ) கீரந்தையார்
14. ஆ) அறிவியல் செய்தி
15. இ) வானம், பேரொலி, யுகம்

பகுதி – II

பிரிவு – 1

16. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 160 )
17. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 288 )
18. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 122 )
19. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 214 )
20. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 122 )
21. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 236 )

பிரிவு – 2

22. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 273 )
23. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 82 ) 23. மாற்றுவினா ( 80 )
24. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 228 )
25. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 36 )
26. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 335 )
27. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 184 )
28. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 142 )

பகுதி – III

பிரிவு – 1

29. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 52 )
30. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (284 )
31. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (243 )

பிரிவு – 2

32. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 328 )
33. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 130 )
34. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 7 ) ஆ) ( 5 )

பிரிவு – 3

35. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (304 )
36. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (342 )
37. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (302 )

பகுதி – IV

38. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (250 ) ஆ) ( 28 )
39. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (149 ) ஆ) ( 283 )
40. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (203 )
41. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (348 )
42. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (272 ) ஆ) ( 145 ) 42. மாற்றுவினா ( 90 )

பகுதி – V

43. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 200 ) ஆ) (324 )
44. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 139 ) ஆ) (297 )
45. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 52 ) ஆ) (310 )

**பகுதி – I (மதிப்பெண்கள் : 15)**

**குறிப்பு : (i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15 x 1 = 15**

**1. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் :**

அ) உதியன்; சேரலாதன் ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்

இ) பேகன் ; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் ; திருமுடிக்காரி

**2. "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி :**

அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

**3. "பெரிய மீசை சிரித்தார்"–இதில் அமைந்துள்ள தொகையின் வகை எது ?**

அ) பண்புத் தொகை ஆ) உவமைத் தொகை

இ) அன்மொழித் தொகை ஈ) உம்மைத் தொகை

**4. "உனதருளே பார்ப்பன் அடியேனே"– யாரிடம் யார் கூறியது ?**

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

**5. திருவள்ளுவர் அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். இத்தொடருக்குப் பொருத்தமான நிறுத்தக் குறியிட்ட தொடரைத் தேர்க.**

அ) திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று "அறுதியிட்டுக்" கூறுகிறார் !

ஆ) திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

இ) திருவள்ளுவர், அறிவுடையார் எல்லாம் உடையார் என்று அறுதியிட்டுக் கூறுகிறார் !

ஈ) "திருவள்ளுவர்", "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

**6. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்**
**உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்"**

**– பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை ?**

அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை

இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

**7. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்.**

**– இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது :**

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

**8. குயில்களின் கூவலிசை, புள்ளினங்களின் மேய்ச்சலும் பாய்ச்சலும், இலைகளின் அசைவுகள், சூறைக்காற்றின் ஆலோலம் :**

அ) மொட்டின் வருகை ஆ) வனத்தின் நடனம்

இ) உயிர்ப்பின் ஏக்கம் ஈ) நீரின் சிலிர்ப்பு

**9. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.**

| | |
|---|---|
| (1) வினைமுற்று | (i) கெடு |
| (2) தொழிற்பெயர் | (ii) கட்டு |
| (3) முதனிலைத் தொழிற்பெயர் | (iii) எய்தல் |
| (4) வினையடி | (iv) வந்தான் |

அ) (1)–(iv), (2)–(iii), (3)–(ii), (4)–(i) ஆ) (1)–(iii), (2)–(i), (3)–(iv), (4)–(ii)

இ) (1)–(iv), (2)–(iii), (3)–(i), (4)–(ii) ஈ) (1)–(i), (2)–(iii), (3)–(ii), (4)–(iv)

**10. பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களைத் தேர்க.**
**தராசின் இரண்டு தட்டுகளிலும் மூன்று மூன்று கோல்டு பிஸ்கட்டுகளை ஈக்வலாக வையுங்கள்.**

அ) தங்க பிஸ்கட்டுகளைச் சரியாக ஆ) தங்கக் கட்டிகளை ஈக்வலாக
இ) தங்கக் கட்டிகளை ஈடாக ஈ) தங்கக் கட்டிகளை முறையாக

**11. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்.................**

அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
இ) வலிமையை நிலைநாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

*செம்பொ னடிச்சிறுகிங் கிணியொடு சிலம்பு கலந்தாடத்*
*திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்*
*பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்*
*பட்ட நுதற்பொலி பொட் டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்*
*கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்*

**12. பாடலின் இலக்கிய வகை :**

அ) பத்துப்பாட்டு ஆ) சிற்றிலக்கியம்
இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

**13. "கிண்கிணி" என்னும் அணிகலன் :**

அ) இடையில் அணிவது ஆ) தலையில் அணிவது
இ) காலில் அணிவது ஈ) நெற்றியில் அணிவது

**14. குண்டலமும் குழைக்காதும் – இலக்கணக் குறிப்பு தருக :**

அ) எண்ணும்மை ஆ) உம்மைத் தொகை
இ) உவமைத் தொகை ஈ) வினைத் தொகை

**15. சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக :**

அ) பட்ட, பொட்டொடு ஆ) செம்பொன், பைம்பொன்
இ) சரிந்தாட, பதிந்தாட ஈ) பண்டி, குண்டலம்

**பகுதி – II ( மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

**குறிப்பு : எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 21 – க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4 x 2 = 8**

**16. நஞ்சைக் கொடுத்தாலும் உண்ணும் பண்பாளர் எவர் என வள்ளுவர் வாய்மொழி கூறும் செய்தி யாது ?**

**17. விடைகளுக்கு ஏற்ற வினாக்கள் அமைக்க.**
**அ) ம.பொ.சி. அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப் பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்.**
**ஆ) நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.**

**18. உறங்குகின்ற கும்பகன்ன "எழுந்திராய் எழுந்திராய்"**
**காலதூதர் கையிலே "உறங்குவாய் உறங்குவாய்"**
**கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள் ?**
**எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள் ?**

**19. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.**

**20. ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் இரண்டினை எழுதுக.**

**21. குற்றம் இல்லாமல் தன் குடிப்பெருமையை உயரச்செய்யும் கருத்தினைக்கொண்ட திருக்குறளை எழுதுக.**

**பிரிவு – 2**

**குறிப்பு : எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 5x 2 = 10**

**22. கலைச் சொற்கள்தருக.**

அ) Artifacts ஆ) Myth

**(குறிப்பு : செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா)**

**தொடரில் விடுபட்ட சொற்கள் குறிக்கும் வண்ணங்களின் பெயர்களை எழுதுக.**

கண்ணுக்குக் குளுமையாக இருக்கும் ........... புல்வெளிகளில் கதிரவனின்.............. வெயில் பரவிக் கிடக்கிறது.

**23. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி**
**– இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும், தமிழெண்களையும் குறிப்பிடுக.**

**24. பாலகுமாரன் புதினங்கள் இருக்கிறதா ? என்று நூலகரிடம் வினவுவது எவ்வகை வினா ?**
**பிரபஞ்சன் புதினங்கள் இருக்கிறது என்று நூலகர் கூறுவது எவ்வகை விடை ?**

**25. "தம்பீ ! எங்க நிக்கிறே ?"**
**"நீங்க சொன்ன எடத்துலதாண்ணே ! எதிர்த்தாப்புல ஒரு டீ ஸ்டால் இருக்குது"**
**உரையாடலில் உள்ள பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக.**

**26. "மலைந்து" – பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

**27. "காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை**
**செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ"**
**– இப்பாடல் அடிகளில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களை எடுத்தெழுதுக.**

**28. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதி, தொடரில் அமைக்க.**

**பகுதி – III ( மதிப்பெண்கள் : 18)**

**பிரிவு – 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். 2 x 3 = 6**

**29. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து மூன்று தொடர்களை எழுதுக.**



**30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர்புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

**அ) போர் அறம் என்பது எதைக் குறிக்கிறது ?**

**ஆ) யாரோடு போர் செய்வது கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார் ?**

**31. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசைகளிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்..... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. "இன்றைய சூழலில் நான்" என்று நீர் தன்னைப் பற்றிப் பேசுவதாக உன்னுடைய கற்பனையில் மூன்று கருத்துக்களை எழுதுக.**

**பிரிவு – 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண் 34 –க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். 2 x 3 = 6**

**32. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்திகளை விளக்குக.**

**33. "சித்தாளின் மனச்சுமைகள்**
**செங்கற்கள் அறியாது" – இடஞ்சுட்டிப் பொருள் எழுதுக.**

**34. அடிபிறழாமல் எழுதுக.**

**அ) "புண்ணியப் புலவீர்" – எனத்தொடங்கும் திருவிளையாடற் புராணப் பாடல்.**

**(அல்லது)**

**ஆ) "நவமணி வடக்க யில்" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.**

**பிரிவு – 3**

**குறிப்பு : எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.**
**2 x 3 = 6**

**35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.**

**36. தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்**
**அழுதகண் ணீரும் அனைத்து**
**– இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.**

**37. நிரல்நிறை அணியை விளக்குக.**

**பகுதி – IV ( மதிப்பெண்கள்:25)**

**குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**
**5 x 5 = 25**

**38. அ) காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களில் எவையேனும் ஐந்தினை எழுதி, உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினரை எதிர்கொண்டு, நீங்கள் விருந்தளித்த நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) "சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்" என்ற தலைப்பில் கீழ்க்காணும் குறிப்பினைக் கொண்டு உங்கள் இலக்கிய உரையைத் தொடர்க.**

**குறிப்பு :**

**அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே ! வணக்கம். இயற்கைக் காட்சியைப் பெரிய கலை நிகழ்வாகவே காட்டும் கம்பனின் கவி நயம்........**

**39. அ) நீங்கள் படித்த நூல் ஒன்றின் சிறப்புகளைக் குறிப்பிட்டு அந்நூலைப் படிக்குமாறு பரிந்துரை செய்து உங்கள் நண்பருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.**

**(அல்லது)**

**ஆ) "பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்"– குறித்த செயல்திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி, அதற்குத் தலைமை ஆசிரியரின் ஒப்புதல் பெறக் கடிதம் ஒன்று எழுதுக.**

**40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.**



**41. எண்–6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தமிழரசுவின் மகள் பூங்கொடி, கணினிப் பயிற்றுநர் பணி வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னைப் பூங்காடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப்பட்டியலை நிரப்புக.**

**42. அ) அரசால் நிறுவப்படும் கட்டடங்களிலும் சிலைகளிலும் நிறுவியவர் பெயர், நிறுவப்பட்ட காலம், நோக்கம் சார்ந்த பிற செய்திகள் தாங்கிய கல்வெட்டுகளைப் பார்த்திருப்பீர்கள். இவை போன்று நீவிர் கண்ட பல்வேறு பழமையான நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்துப் பராமரித்துக் காக்கும் வழிமுறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக.**

**(அல்லது)**

**ஆ) மொழிபெயர்க்க :**

**Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutham region was the one fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.**

**(குறிப்பு) செவி மாற்றுத்திறனாளர்களுக்கானமாற்று வினா.**

**உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் நாம் எளிதாகப் பெறமுடியும் ; பல அறிவுத் துறைகளுக்கும் தொழில்துறைகளுக்கும் வெளிநாட்டாரை எதிர்பார்க்காமல் நாமே நமக்கு வேண்டிய அனைத்தையும் உருவாக்கிக் கொள்ள முடியும் ; மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும் ; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும் ; நாடு, இன, மொழி, எல்லைகள் கடந்து ஒருலகத் தன்மையைப் பெற முடியும். நாடு விடுதலை பெற்ற பிறகு, பலநாட்டுத் தூதரகங்கள் நம் நாட்டில் நிறுவப்பட்டன. அவை தங்களுடைய இலக்கியம், பண்பாடு, தொழில்வளர்ச்சி, கலை போன்றவற்றை அறிமுகப்படுத்தும் நோக்கில் தத்தம் மொழிகளைக் கற்றுக்கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன. இதனைச் சார்ந்து பிற மொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன. பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**(i) ஒருலகத் தன்மையைப் பெறுவதற்கான முக்கிய வழிமுறையாக எதனைக் கொள்ளலாம் ?**

**(ii) பிற மொழிகளைக் கற்பதற்கான வாய்ப்புகளைத் தருவன எவை ?**

**(iii) தூதரகங்களின் முதன்மையான பணிகளில் ஒன்று எது ?**

**(iv) மொழிபெயர்ப்புக் கல்வியின் பயன்களைஎழுதுக.**

**(v) இப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.**

பகுதி – V ( மதிப்பெண்கள்:24)

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 3 x 8 = 24

43. அ) விருந்தினர் பேணுதல், பசித்தவருக்கு உணவிடல் போன்ற தமிழர் பண்பாடு, இன்றைய சூழலில் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலையும், பசித்து வந்த ஒருவருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் அழகுற விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு –நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் "மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்" என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) "புயலிலே ஒரு தோணி"கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன ?

(அல்லது)

ஆ) "பாய்ச்சல் " கதையில் அழகு தன்னை மறந்து ஆடியதைப் போன்று உங்கள் தெருக்களில் நீங்கள் கண்டு மகிழ்ந்த பகல் வேடக் கலைஞரைக் குறித்து அழகுற விளக்கி எழுதுக.

45. அ) மனித நேயமிக்க ஆளுமை ஒருவருக்கு குறிப்புகளைப் பயன்படுத்தி நினைவிதழ் ஒன்று உருவாக்குக.

முன்னுரை – என் இளமைப் பருவம் – விடுதலைப் போராட்டத்தில் நான் – பொது நலமே தன்னலம் – எளிமையே அறம் – நாட்டின் முன்னேற்றமே நோக்கம் – எளியோரின் அன்பே சொத்து – முடிவுரை.

(அல்லது)

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா – விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை – முடிவுரை.

---

## விடைக் குறிப்புகள்

### பகுதி – I

1. ஆ) அதியன் ; பெருஞ்சாத்தன்
2. அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
3. இ) அன்மொழித் தொகை
4. ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
5. ஆ) திருவள்ளுவர், "அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.
6. ஆ) மோனை, எதுகை
7. ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்
8. ஆ) வனத்தின் நடனம்
9. இ) (1)–(iv), (2)–(iii),(3)–(i),(4)–(ii)
10. இ) தங்கக் கட்டிகளை ஈடாக
11. இ) வலிமையை நிலைநாட்டல்
12. ஆ) சிற்றிலக்கியம்
13. இ) காலில் அணிவது
14. அ) எண்ணும்மை
15. அ) பட்ட, பொட்டொடு

### பகுதி – II

### பிரிவு – 1

16. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 118 )

17. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 246 ) ஆ) ( 89 )

18. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 214 )

19. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 122 )
20. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 317 )
21. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 236 )

பிரிவு – 2

22. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 234 )
22. (செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்றுவினா) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (233)
23. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 46 )
24. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 179 )
25. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 308 )
26. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 99 )
27. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 348 )
28. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 73 )

பகுதி – III

பிரிவு – 1

29. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 196 )
30. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 284 )
31. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 52 )

பிரிவு – 2

32. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 130 )
33. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 328 )
34. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 6 ) ஆ) ( 7 )

பிரிவு – 3

35. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (302 )
36. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (303 )
37. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (342 )

பகுதி – IV

38. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 94 ) ஆ) ( 216 )
39. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 187 ) ஆ) ( 189 )
40. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 127 )
41. விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 79 )
42. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (276 ) ஆ) ( 270 )
42. (செவி மாற்றுத்திறனாளர்களுக்கான மாற்றுவினா) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் (162)

பகுதி – V

43. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 87 ) ஆ) (244 )
44. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 69 ) ஆ) (232 )
45. அ) விடை : செலக்சன் துணைவன் பக்க எண் ( 349 ) ஆ) (147 )

# செலக்சன்

**எங்கள் வெளியீடுகள் :**

## 3 முதல் 10 வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு ( TM & EM )

அறிவியல் ( TM & EM )

சமூக அறிவியல் ( TM & EM )

**அன்பு நிலையம்**
மதுரை – 625001

CONTACT : 94430 43338
94430 46662